வெள்ளை ரோஜா

எண்டமூரி விரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17

முதற் பதிப்பு : ஜூலை, 1994

விலை: ரூ. 48-00

18589

3513168

அச்சிட்டோர் :
ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ்
49, காரணீஸ்வரர் கோயில் தெரு
மயிலாப்பூர், சென்னை-600 004

பதிப்புரை

இன்றைய இளைஞர்களில் குறிப்பாக மாணவர்களில் சிலர் திசை தவறிப்போவதை, சில மாணவக் கதாபாத்திரங்களின் வாயிலாக நூலாசிரியர் இந்த நாவலின் மூலம் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார். அந்த ஒருசிலரும் குற்றவாளிகளாக மாறாமலிருக்கச் செய்ய நம் சமூக அமைப்பிலுள்ள பெரிய பெரிய தலைவர்களும், பெற்றோரும், கல்வி நிறுவனங்களும் முன்வர வேண்டும் என்பதற்கான சூழலை இந்நாவல் உருவாக்குகின்றது.

பாத்திரப் படைப்பு, கதை நிகழ் சூழல், இயற்கை வருணனைகள், கதையோடு ஒட்டியோடும் சுருத்தோட்டங்கள்— இவை அனைத்திலும் ஆசிரியர் தமது முத்திரையைப் பதித்துள்ளதை இந்நாவலைப் படிக்கும் வாசகர்கள் நன்கு உணரலாம்.

வெள்ளை ரோஜா எனும் வெற்றி ரோஜாவை தமிழ் மக்களுக்கு வழங்குவதை கங்கைப் புத்தக நிலையம் பெருமையாகக் கருதுகிறது

ஆசிரியர் எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், ஆசிரியை திருமதி சுசிலா கனகதுர்கா அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— கங்கை புத்தக நிலையத்தார்

18589
3513168

முன்னுரை

கல்லூரிப் பருவத்தில் மாணவ மாணவிகள் பக்குவம் அடையாத நிலையில் இருக்கிறார்கள். வளரும் அவர்களுடைய இளம் மனம் பக்கத்துக் கொம்பைத் தழுவிக்கொள்ளும் கொடியைப்போல தமக்கு நெருக்கமாக வருகிற எதையும் பற்றிக் கொண்டு விடுகிற இயல்புடையது. இந்தச் சமயத்தில் மாணவர்களுக்கு ஏற்படுகிற சிநேகந் தான் அவர்களை உருவாக்குகிறது என்றே சொல்லலாம். நல்ல சிநேகிதம் ஏற்பட்டால் நல்ல பண்புகளுடன் ஓங்கி வளருகிறான். நீய சிநேகம் ஏற்பட்டால் கயவனாகி விடுகிறான். அதனால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்தப் பருவத்தில் நல்ல குணமுடைய மாணவர்கள், கெட்டுப்போய் விடாதபடி விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். கெட்டுப் போக முயல்பவனை தம் அன்பாலும் அறிவுரைகளாலும் தடுத்து நிறுத்தக்கூடிய வாய்ப்பு சிறந்த ஆசிரியர் களிடம் இருக்கிறது. இதைத்தான் இந்நாவல் அறிவுறுத்துகிறது.

ஐதராபாத்
29-6-94

சுசீலா கணகதுர்கா

வெள்ளை ரோஜா

1

குதிரை வண்டி விர்ரென்று போய்க் கொண்டிருந்தது. புதிதாய் போடப்பட்டிருந்த அந்த நார் ரோடில் மேடு பள்ளங்கள் அதிகமாய் இல்லாததால் குலுங்காமல் அனாயாசமாய் போய்க் கொண்டிருந்தது வண்டி. குதிரை வண்டிக்குள் நீல நிறத்தில் ஷிஃபான் புடவை கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த மிதிலா சுற்றிலும் தென்பட்டச் சூழ்நிலைகளைப் பரிசிலித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பொன்னிற உடம்பிற்கு அந்த நீல நிறப் புடவை மிக எடுப்பாய் தெரிந்தன. ஜாகாகப் போட்டுக் கொண்டிருந்த ஜடை கீழே பாரமாய் தொங்கிக் கொண்டிருந்தது. வலது கையில் தங்க வளையல்கள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. இடது கையிலிருந்த சின்ன வாட்ச் அவள் வாழ்க்கையில் தான் ஒரு முக்கிய பாகம் என்பது போல காட்டிக் கொண்டிருந்தது. மிதிலாவின் இடது தோளில் தொங்கிக் கொண்டிருந்த பை அவளுக்குத் தான் எப்பொழுதும் துணையாய் இருப்பேன் என்பது போல காட்டிக் கொண்டிருந்தது. அகலமாய் இருந்த அவள் கண்கள் இந்த உலகத்தை நாங்கள் பார்க்கத் தொடங்கி இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன என்பது போல கம்பீரமாய் இருந்தன.

குதிரை வண்டிக்குள் பெட்டியின் மேல் ஒரு கையை ஊன்றிக்கொண்டு உட்கார்ந்திருந்த மிதிலாவின் மனம் தனியாய் இப்படி எதிர்காலத்தைத் தேடிக்கொண்டு புறப் பட்டது. அவிழ்த்துவிட்டக் காளையாய், சுயேட்சையை யும் சுதந்திரத்தையும் அனுபவித்தபடி போகத் தொடங்கி னாற்போல இருந்தது. மிதிலா விவரம் தெரிந்த பிறகு தாயையும் அண்ணனையும் அண்ணியையும் விட்டுத் தனியாய் வருவது இதுதான் முதல் தடவை. சிறு வயதி லிருந்தே பழக்கப்பட்டுப் போயிருந்த வீட்டையும், நெருக்கமானவர்களையும், சூழ்நிலைகளையும், சிநேகிதர் களையும் விட்டுவிட்டு வெகு தொலைவிற்கு— புதிய இடத்திற்கு வருகிறாள். அவள் மனம் சுயேட்சையை விரும்பிற்று. அதற்காகத் தாயை ஒப்புக் கொள்ளச் செய்வதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அண்ணனின் பக்கபலம் இல்லாமலிருந்திருந்தால் மிதிலா இப்படித் தனியாய் பயணம் பண்ணிக் கொண்டிருந்திருக்க மாட்டாள்.

"இன்னும் அரை மைல் தூரந்தான்! அதோ! அந்த திருப்பத்தில் திரும்பிட்டால் பார்வதிபுரம் வந்துடும்மா!" குதிரைகளை வேகமாய் ஓட்டிக்கொண்டே சொன்னான் வண்டிக்காரன். அவன் பார்ப்பதற்கு முஸ்லிம்மைப் போல இருந்தான். ஆனால் தமிழ் நன்றாகப் பேசினான். மிதிலா ஸ்டேஷனில் ரயிலை விட்டு இறங்கியதுமே வந்து சூழ்ந்து கொண்ட குதிரை வண்டிக்காரர்களுள் இவன்தான் மித மரியாதையாய் பேசினான். கூலியை ஒரே வார்த்தையில் சொன்னான். மிதிலா பேரமாடவில்லை. அவனே மிதிலாவின் கையிலிருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டு, வண்டியை உள்ளே கொண்டு வந்து நிறுத்தினான். மிதிலாவுக்கு அப்புதிய இடத்தை நெருங்க நெருங்க மனம் ஆனந்தமாய் இருந்தது. குழப்பமாகவும் இருந்தது அவள் விரும்பிய தனிமை கிடைத்துவிட்டது. ஆனால் புதிய இடம். தனியாய் இருக்க வேண்டும். இந்த யோசனை ஆனந்தத்தோடு போட்டியிட்டுக் கொண்டிருந்தது.

சாலையின் இருமருங்கிலும் வேப்ப மரங்கள் அடர்த்தி யாய் வளர்ந்திருந்தன. உயரமாய் வளர்ந்திருந்த அம்மரக் கிளைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஸ்கௌட்ஸ் கைகளை கோர்த்துக் கொண்டு நின்றபடி, கௌரவ விருந்தாளியை வரவேற்றுக் கொண்டிருந்தாற்போல இருந்தன. அம்மரங் களுக்குக் கீழே வேகமாய் விர்ரென்று பறந்து கொண் டிருந்தது குதிரை வண்டி. தொலைவில் வயல்கள் தென் பட்டன. அவற்றில் களை பிடுங்கிக் கொண்டிருந்த கூலியாட்கள் பச்சைக் கம்பளத்தின் மேல் தூவிய பலதிறப் பூக்களைப் போல தோற்றமளித்தார்கள். அங்கங்கே வாழைத் தோட்டங்கள் இருந்தன. தென்னை மரங்களோ கேட்கவே வேண்டாம். சாலையின் இறக்கத்தில்— வயல் பரப்பின் ஓரத்தில்— எங்கே பார்த்தாலும் பாரமாய் காய் களோடு தொங்கிக் கொண்டிருந்த தென்னை மரங்கள் தாம்! எதிரே சாலையில் வாழைக்காய்களையும், தேங்காய் களையும் ஸ்டேஷனுக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்த வண்டிகள் எதிர்ப்பட்டுக் கொண்டிருந்தன.

முதல் நாள் இரவு நன்றாய் மழை பெய்திருக்கும் போலிருந்தது. சாலையோரத்தில் இருந்த சின்னச் சின்ன குழிகளில் நீர் தேங்கியிருந்தன. சாலைக்கு இறக்கத்தில் இருந்த செம்மண் தணைந்து, முதிர்ந்த ஆரஞ்சு வண்ணத் தில் பளிச்சென்று தென்பட்டன. ஆகாயத்தில் கும்பலாய்ஷம் பெய்த பிறகு கூடியிருக்கும் வெண் மேகங்களின் ஓட்டத் தோடு புகைகள் மிதந்து கொண்டிருந்தன. குளிர்ந்த காற்று வேகமாய் வீசியபோது நேற்றிரவெல்லாம் ரயிலில் தூக்கமில்லாமல் கழித்த சோர்வு துடைத்தெறிந்து விட்டாற்போல சுகமாய் இருந்தது.

மிதிலா கண்களை மூடிக் கொண்டாள். காற்றில் தன் உடம்பு மிதந்து கொண்டிருந்தாற் போல தோன் றிற்று. குளிர்ந்த அக்காற்றின் ஸ்பரிசம் நெற்றியையும், கண்களையும், கன்னங்களையும், கழுத்தையும் தாக்கிய போது இதமாய் இருந்தது. பட்டினவாசத்து இக்கட்டில்

இருந்துப் பழக்கப்பட்டு ஃபேன் காற்றைத் தவிர வேறு காற்றை அனுபவித்திராதவர்களுக்கு. இந்தப் பயிர்களிலிருந்து வந்து மோதிக் கொண்டிருக்கும் குளிர்ந்த காற்று அமிர்தமாக இருக்கும் என ரம்யா சொன்னது உண்மைதான் என்று புரிந்தது மிதிலாவுக்கு.

"வேண்டாம் என்றாலும் கேட்டுக் கொள்ளாமல் தனியாய் அவ்வளவு தூரம் போகிறாய். அந்தக் காற்றும் நீரும் உனக்கு ஒத்துக் கொள்ளுமோ ஒத்துக் கொள்ளாதோ?"— என்று தாய் சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. தாய்க்கு அவள் இப்படித் தனியாய் பார்வதிபுரத்திற்குப் புறப்பட்டது கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனாலும் வாயைத் திறந்து கண்டிப்பாய் சொல்லவும் முடியவில்லை.

அதற்குள் காதைப் பிளக்கும்படியாய் 'பாம்' என்ற ஹாரன் சப்தம் பெரிதாய் கேட்டது. அடுத்த நிமிஷம் வண்டி பெரிதாய் குலுங்கியபடி ஒரு பக்கமாய் ஒதுங்கிக் கொள்ளப் போய் சாலை இறக்கத்திலிருந்த சேற்றுக் குட்டைக்குள் இறங்கிவிட்டது. மிதிலா கண்களைத் திறந்து பார்த்தபொழுது கருப்பு ஃபியட் கார் ஒன்று வண்டியோடு உரசிக் கொள்ளப்போய் கண் மூடித் திறப்பதற்குள் அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டு அம்பாய் விர்ரென்று பறந்து போய்விட்டது. கார் போய்க் கொண்டிருந்தபொழுது அதிலிருந்து பெரிதாய் ஆங்கிலப் பாட்டு கேட்டது. சிரிப்புக்களும், கூச்சல்களும் கேட்டுக் கொண்டிருந்தன. கார் முழுவதும் இளைஞர்களின் கூட்டம். அதற்குள் கருப்பான தெற்றுப்பல்லுடன் இருந்த ஒருத்தன் தலையை வெளியே நீட்டி குடை சாய்ந்தாற் போல நின்றிருந்த வண்டியைப் பார்த்து கேலியாய் சிரித்து விட்டு கையைக் காற்றில் தூக்கி "டாட்டா"— சொன்னான்.

வண்டிக்காரன் கீழே இறங்கி சாலை இறக்கத்தில் இறங்கி விட்டிருந்த குதிரையைக் கடிவாளத்தைப் பிடித்து

இழுத்துத் திரும்பவும் சாலையை நோக்கி இழுத்து வந்து— "சைத்தானுங்க! காரில் ஏறிட்டாங்கன்னால் கொழுப்புப் பிடிச்சுடும். அவங்களைச் சொல்லி என்ன பிரயோசனம்? இந்தப் பெரிய இடத்து மனுஷங்களின் பணத் திமிர்தான் இது"— என்று முணுமுணுத்துக் கொண்டே வண்டியை சாலை மார்க்கத்திற்குக் கொண்டு வந்தான். வண்டியின் குலுங்கலுக்கு பெட்டி நழுவி வந்து மிதிலாவின் மேல் விழுந்தது. மிதிலா வண்டியின் கோடிக்கு வந்து விழத் தெரிந்தவள் கம்பியைப் பிடித்துக்கொண்டு விழாமல் சமாளித்துக் கொண்டாள். நிமிஷத்தில் பெரிய விபத்து நேர்ந்திருக்கும்! "ஆக்ஸிடென்ட் ஆயிருந்தால் காரில் இருக்கிறவங்களுக்குதான் அதிக ஆபத்து ஏற்பட்டிருக்கும்"— என்றாள் மிதிலா. "அவங்களுக்கா! அவங்க செத்தால் ஒழிஞ்சது சனியன்னு நிம்மதியாய் இருக்கலாம்" என்றான் வண்டிக்காரன் ஆத்திரத்தோடு.

மிதிலா தோளில் இருந்த பையை சரியாய் வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

குதிரை வண்டி ஊருக்குள் நுழைந்தது. மிதிலா வீதியிலும் கடைகளிலும் இருந்த ஜனங்களை கவனித்தாள். நடுத்தரக் குடும்பத்தினர்தான் அதிகமாய் தென்பட்டார்கள். துணிக் கடைகளும், செருப்புக் கடைகளும் நிறையவே இருந்தன. காபி ஓட்டல்கள் இருந்தன. இரண்டு மூன்று சினிமா தியேட்டர்கள் தென்பட்டன. கடைவீதியைப் போலிருந்தது அது. வண்டிகளில் வாழைக் காய்களும் பழங்களும் இருந்தன. தேங்காய்கள் கடைகளில் மலையாய் குவித்திருந்தன. கீழேயெல்லாம் வாழை சருகுகள் செத்தையாய் பரவிக் கிடந்தன. வண்டி அவற்றின் மீதே போயிற்று. அங்கே அண்மையில் ஏதோ கோவில் இருந்தது போலும்! கோவில் பூஜைக்கு வேண்டிய அகர்பத்திகளும், பூக்களும், மாலைகளும் விற்கும் கடைகள் வரிசையாய் இருந்தன.

அங்கங்கே நவீன பாணியில் வீடுகள் இருந்தாலும் பெரும்பாலும் பழங்காலத்து ஓட்டு வீடுகள்தான் இருந்தன. கடைவீதியைத் தாண்டியதும் அந்த செத்தை யும் சேதாரமும் போய் விட்டன. கடைத்தெரு கொஞ்சம் சுத்தமாகவே இருந்தது.

இரண்டு வீதிகளைக் கடந்து சென்ற பிறகு வண்டி ஓரிடத்தில் நின்றது. மிதிலா வண்டியை விட்டு இறங் கினாள்.

எதிரே தென்பட்ட பெரிய கேட்டின்மீது— வளைந்த கமான் உருவில் "ராஜா ராமப்பன் ஜூனியர் கலாசாலை" என்று பெரிய எழுத்துக்களில் எழுதியிருந்தது.

"ஆமாம். இதேதான்" என்றாள் மிதிலா.

வண்டிக்காரன் வண்டியிலிருந்த பெட்டியை எடுத்துத் தந்தான். மிதிலா கைப்பையைத் திறந்து அதிலிருந்து பணத்தை எடுத்துத் தந்தாள். குதிரை வண்டி போய் விட்டது.

மிதிலா ஒரு நிமிஷம் எதிரே பெரிய கேட்டிற்குள்ளே விருந்து தென்பட்ட அந்தச் சூழ்நிலைகளைப் பார்த்தாள். மிகப் பெரிய கட்டிடம். அது காலேஜிற்காக கட்டப்பட்ட கட்டிடமாய் இல்லை. ஏதோ ராஜாவின் அரண்மனையை காலேஜாய் மாற்றியிருப்பார்கள் போலிருந்தது எதிரே பெரிய போர்ட்டிகோ தென்பட்டது. கட்டிடம் கல்லால் கட்டப்பட்ட உறுதியான கட்டிடமாய் தோன்றிற்று. காலேஜ் டயம் ஆகிவிட்டது போலிருந்தது. மாணவ மாணவிகள் கும்பல் கும்பலாய் உள்ளே போய்க் கொண் டிருந்தார்கள். இருபாலரும் படிக்கும் கல்லூரி. ஆண்களின் எண்ணிக்கைக்குச் சமமாய் பெண்களும் இருந்தார்கள். மிதிலா பெட்டியை எடுத்துக்கொண்டு கேட்டைத் தாண்டி உள்ளே வந்தாள். காலேஜைச் சுற்றிலும் விசாலமான இடம் இருந்தது. மாமரம், சப்போட்டா போன்ற மரங்க

னோடு கூட மல்லிகை, குரோட்டன்ஸ், போகன்வில்லா போன்ற பூஞ்செடிகளும் கண்ட இடங்களில் எல்லாம் தென்பட்டன. தோட்டத்தை ரத்தைவாய் பாதுகாத்து வந்தாற் போல துப்புரவாய் இருந்தது.

பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்த மிதிலாவை ஓரிருவர் விநோதமாய் திரும்பித் திரும்பி மேலடிக்கைப் பார்த்தார்கள். மிதிலா அவர்கள் யாரையுமே கவனிக்கவில்லை. நேராய் போர்ட்டிகோவிற்கு வந்தாள். ஒரு வயதானவர் அந்தப் பக்கமாய் போய்க் கொண் டிருந்ததைப் பார்த்தான். மிதிலா அவரை நிறுத்தி— "எக்ஸ்யூஸ்மீ, லெக்சரர் அர்ஜூனன் எங்கேயிருக்கார்னு தெரியுமா?" என்றான். அவர் மறுத்துத் தலையசைத்த படி— "தெரியாதும்மா! நான் என் பெண்ணுக்கு ஃபீசு கட்ட வந்தேன்" என்றார். மிதிலா படியேறி வராந்தா விற்குள் நுழைந்தாள். இரு பெண்கள் எதிரே வந்து கொண்டிருந்தார்கள். பஞ்சாபி உடை அணிந்து இரட்டை ஜடை போட்டுக் கொண்டிருந்த பெண் பாவாடை தாவணி உடுத்திக் கொண்டிருந்த பெண்ணின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு ஏதோ பேசிக்கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தாள்.

மிதிலா அவர்களை நிறுத்தினாள். "பிரின்ஸிபால் ரூம் எங்கே?"

"அதோ அந்த பக்கமாய் திரும்பி இடது பக்கம் போகணும்."

"தாங்க்யூ" மிதிலா போகத் தொடங்கியபோது, பஞ்சாபி உடை அணிந்து கொண்டிருந்த பெண்— "நாங்கள் காட்டுகிறோம்" என்றாள். மிதிலா தலையாட் டினாள்.

அவர்கள் மிதிலாவைத் தொடர்ந்தே அந்த காரிடார் வரைக்கும் வந்து பிரின்ஸிபாலின் அறையைக் காட்டி விட்டுப் போய் விட்டார்கள்.

"தாங்க்யூ"— முறுவலுடன் மற்றொரு முறை சொல்லிவிட்டு பிரின்ஸிபாலின் அறைக்கருகில் வந்து நின்றாள். அறைக்குள்ளிருந்து பேச்சுக் குரல்கள் கேட்டன. அதற்குள் பியூன் அறைக்குள்ளிருந்து வெளியே வந்தான். பரபரக்கப் போய்க் கொண்டிருந்த அவனைத் தடுத்து நிறுத்தினாள் மிதிலா.

"பிரின்ஸிபால் இருக்காரா?"

"இருக்காரு."

மிதிலா கைப் பையிலிருந்து காகிதத்தை எடுத்து அதில் எதையோ எழுதி அவள் கையில் தந்து அவரிடம் தரச் சொன்னாள். அவன் உள்ளே போய் விட்டுத் திரும்பி வந்து— "வரச் சொன்னாரு" என்றான்.

மிதிலா உள்ளே போனாள். எதிரே நாற்காலியில் இரட்டை நாடி ஆள் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் பெட்டியோடு உள்ளே வந்த மிதிலாவை மூக்குக்கண்ணாடி வழியாய் கூர்ந்து பார்த்துவிட்டு— "உட்காருங்கள்" என்றார். அவருக்கெதிரே இருவர் உட்கார்ந்திருந்தார்கள்.

ஒருத்தர் குள்ளமாய் பருமனாய் வெள்ளையாய் தெளி தெளியான தேசங்களுடன் இருந்தார். அவர் சில்க் சட்டையும் வேட்டியும் அணிந்து கழுத்தில் பட்டையாய் விரித்திருந்த ஜரிகை அங்கவஸ்திரம் போட்டுக் கொண்டிருந்தார். கைகளில் மோதிரங்கள் பளபளத்தன. உட்கார்ந்திருந்த விதத்திலும், அவர் வேஷத்தையும், பார்த்தபொழுது மிடுக்குத் தென்பட்டது. அவருக்கு ஒரு நாற்காலியை விட்டு அப்பால் உட்கார்ந்திருந்த பெண் கருப்பாய் உயரமாய் இருந்தாள். ஷிபான் புடவைக் கட்டிக் கொண்டிருந்தாள். கழுத்திலும் கைகளிலும் நகைகள் இருந்தன. அவர்களின் முகங்களைப் பார்த்தால் ஏதோ தீவிரமானப் பிரச்னையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்ததாய் தோன்றிற்று. பிரின்ஸிபால் மிதிலாவை உட்காரச் சொல்லிவிட்டுத் திரும்பவும் அவர்களோடு சம்பாஷணையைத் தொடர்ந்தார்.

"ராஜேஷை வழிக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் எல்லா வழிகளையும் கையாண்டு கொண்டுதான் இருக்கோம் சார். ஆனால் அவன் காலேஜுக்கே வர மாட்டேங்கிறான். வந்தால் கண்டிப்பாய் படிப்பான் என்கிற நம்பிக்கை இருக்கு எனக்கு. அவங்க கும்பலில் வாசு என்று ஒருத்தன் இருக்கிறான். அவன்தான் எல்லா— சிக்கலையும் வரவழைக்கிறவன். அவனைக் கண்டாலே எனக்கு ஆத்திரம். அந்த வாசுவிடமிருந்து உங்கள் ராஜேஷைப் பிரித்தாலொழிய இவன் திருந்தமாட்டான்னு நம்புகிறேன் நான்... மொதல்ல நீங்க அந்த காரியத்தைப் பண்ணுங்க."

"லாபமில்லை. அந்தக் காரியத்தைப் பண்ணப் போய் நான் நிறைய தடவை தோல்வியடைந்துட்டேன். வாசுவை வீட்டுக்குள் வரவிட வேண்டாம்னு நான் சொன்னதற்காக ராஜேஷ் இப்ப வீட்டில் தங்குவதையே விட்டுவிட்டு, வேறு அறையில் தங்கிட்டிருக்கான்" என்றார் அவர் வருத்தத்தோடு.

"வாசு பெரியவனானால் பெரிய குண்டர் தலைவனாகத்தான் ஆவான். அந்த லட்சணங்கள் எல்லாம் இப்பொழுதே அவனிடம் தெரிகின்றன" என்றாள் அந்தப் பெண்.

"ஒரே பையன்! இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்கிறதுன்னுதான் தெரியலை" என்றார் அவர்.

"ஹாஸ்டலில் விட்டு வையுங்களேன்" என்றார் பிரின்ஸிபால்.

"அதுதான் நான் பண்ணிய தப்பு! சிறு வயதில் அவனுக்குப் படிப்பு நன்றாய் வருகிறதேன்னு, வீட்டில் பார்த்துக்கப் பெண்கள் இல்லாததால் ஏழாங்கிளாசிலேயே

ஹாஸ்டலில் சேர்த்தேன். அங்கேயிருந்துதான் தொடங்கிற்று இந்தத் தொல்லையெல்லாம். அவனுக்கு ரொம்பவும் சுதந்திரம் கிடைத்துவிட்டது. எப்பப் பார்த்தாலும் ஃபிரெண்ட்ஸ்! ஃபிரெண்ட்ஸ்! அவனை அந்த ஹாஸ்டலிலிருந்து இழுத்துட்டு வந்ததே பெரும்பாடாயிடுத்து அங்கே இருந்தபோது பத்தாம் கிளாஸில் ரெண்டு தடவை ஃபெயில் ஆனான் இப்ப லீட்டுக்குத் திரும்பி வந்துட்ட பிறகு கூண்டுக்குள் பறவையைப் போல துடிதுடிச்சிட்டிருக்கான்.''

''இந்த காலத்துப் பசங்கள் எல்லோரும் அப்படித்தான் இருக்காங்க'' என்றார் பிரின்ஸிபால். பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து ''ரங்கநாயகி! நீங்கள் ராஜேஷ் விஷயத்தில் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்குங்க'' என்றார்

''சரிங்க சார்! என்னால் முடிந்த உதவியைக் கண்டிப்பாய் பண்றேன்'' என்றாள் ரங்கநாயகி

பிரின்ஸிபால் பெரியவரைப் பார்த்து— ''நீங்கள் அவனைக் காலேஜிற்குக் கண்டிப்பாய் வரும்படிப் பண்ணுங்க'' என்றார்.

''சொல்றேன். கொஞ்சம் மிரட்டியும் பார்க்கிறேன். எப்படியாவது ஒரு வழியாய் காலேஜ் படிப்பை முடிச்சுட்டானானால் நன்றாயிருக்குமேன்னு ஆசைப்படுகிறேன். சரி, வரேன்'' என்றார் அவர் எழுந்து கொண்டே.

அவரை வழியனுப்புவதற்காக பிரின்ஸிபாலும் ரங்கநாயகியும் எழுந்தார்கள். அவர்களைப் பார்த்து மிதிலாவும் எழுந்து நின்றாள் மிதிலாவைக் காட்டி பிரின்ஸிபால் அவருக்குப் பரிச்சியம் பண்ணினார் — ''மிஸ் மிதிலா! நம் காலேஜுக்கு ஹிஸ்டரி லெக்சரராய் வந்திருக்கிறார்'' என்று சொல்லிவிட்டு மிதிலாவிடம்— ''இவர் கணபதி! இந்த ஊர் பிரமுகர்! சில்க் ஃபேக்டரி இருக்கு. இவர் பையன் ராஜேஷ் இந்தக் காலேஜில்தான்

படிக்கிறான்'' என்று பரிச்சியம் செய்தார். மிதிலா வணங்கினாள். அவர் தலையாட்டி விட்டுப் போய் விட்டார்.

ரங்கநாயகியும் பிரின்ஸிபாலும் அவரை வழியனுப்பி வைத்துவிட்டுத் திரும்பி வந்தார்கள். திரும்பி வரும்போது ரங்கநாயகி தலையிலடித்துக் கொண்டு— ''சார்! நீங்கள் முதலிலேயே எச்சரிக்கை பண்ணி தான் வாயைத் திறக்க முடியாதபடி பண்ணிட்டீங்க. இல்லாவிட்டால் நான் அவர் மூஞ்சிக்கு முன்னாடியே நாலு வார்த்தைகள் உலுக்கி எடுத்திருப்பேன். அந்த ராஜேஷும் அவங்க கும்பலும் சேர்ந்து பண்ற ரகளை கொஞ்சம் நஞ்சம் இல்லை. அந்தப் பையனைக் காலேஜை விட்டுத் தூக்கிட்டால்தான் நமக்கு நிம்மதி! ஓ காட்! தட் பாஸ்ட்....''

''நோ! நோ! இதப்பார்! இந்த ஆவேசத்தான் கூடாதுங்கிறேன்.''

''நீங்க என்னை ஆவேசப்படாதேன்னு சொல்லிட்டீங்க! எப்படி முடியும் சார்? நேற்றைக்கு நான் லீட்டுக்குப் போயிட்டிருந்தபோது வழியில் தென்பட்டாங்க ஒரு கிழவியை எப்படி அழ வெச்சிட்டிருந்தாங்க தெரியுமா? அவங்களுக்கு இரக்கம் என்பதே கிடையாது. அவங்க பசங்களே அல்ல. பிசாசுங்க. எனக்கு அந்தச் சமயத்தில் போய் அவங்க கன்னத்தில் நாலு அறை அறையலும் போல இருந்தது.''

''அடித்தால் அவங்களுக்கு புத்தி வந்துடப் போறதா? வராது. நம்ப உத்யோகத்துக்குதான் மேலிடத்திலிருந்து கேடு வந்து சேரும். இந்த ப்ரைவேட் காலேஜுங்களின் லட்சணம் இதுதான். என் ரெண்டு பொண்ணுங்களுக்கும் கல்யாணம் பண்ணி அனுப்பி வைக்கிற வரைக்கும் நான் இந்த ஊரில்தான் இருந்து தீரணும். அதனால் நான் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கு''— அவருக்கு திடீரென்று அங்கே மிதிலா நின்று கொண்டிருந்தது அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

"மிஸ் மிதிலா! நீங்கள் இன்றைக்கே ஜாயின் ஆகிறீங்களா?" கேட்டார்.

"ஆமாம் சார்" என்றாள்.

பிறகு கையெழுத்துப் போட்டு முடிக்கும் வேலைகள் எல்லாம் முடிவடைந்தது.

மிதிலாவைச் சுட்டிக்காட்டி ரங்கநாயகியிடம்— "ரங்க நாயகி! இவங்களை நீங்க ஸ்டாஃப் எல்லோருக்கும் பரிச்சியம் பண்ணி வையுங்க," என்று உத்தரவிட்டு விட்டு கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே எழுந்திருந்தார்.

"இன்றைக்கு டாக்டரிடம் அப்பாயிண்ட்மெண்ட் இருக்கு. நான் அர்ஜெண்டாய் போகணும்" என்றார். ரங்க நாயகியும் மிதிலாவும் எழுந்தார்கள்.

"நீங்க நேராய் காலேஜுக்கே வந்துட்டீங்க போலிருக்கு?" என்றாள் ரங்கநாயகி மிதிலாவின் பெட்டியைப் பார்த்துவிட்டு.

ஆம் என்று தலையாட்டினாள் மிதிலா. பெட்டியைத் தூக்கிக்கொண்டு அறையைத் தாண்டி வந்து கொண்டே, "இந்தக் காலேஜில் அர்ஜுனன் என்று ஒரு லெக்சரர் இருக்காரே, உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"அர்ஜுனனா? ஓ தெரியும். இங்கிலீஷ் லெக்சரர். அவர் ஊரில் இல்லை. லீவில் இருக்கார். கல்யாணத்துக்குப் போகப் போவதாய் சனிக்கிழமையன்று சொன்னார். ஊரிலிருந்து வந்திருப்பாரோ இல்லையோ, தெரியாது."

"அவர் வீடு தெரியுமா உங்களுக்கு?" கேட்டாள் மிதிலா.

"தெரியும். கோவிலுக்குப் பக்கத்து சத்தில் இருக்கார்."

இருவரும் நீண்ட அந்த வராந்தாவில் நடந்து கொண்டே லைப்ரெரி, லாப், மீட்டிங்ஹால் எல்லாவற்றை யும் தாண்டி ஸ்டாஃப் ரூமிற்கருகில் வந்தார்கள்.

"வாங்க" என்று மிதிலாவை ஸ்டாஃப் ரூமிற்குள் அழைத்துச் சென்றாள் ரங்கநாயகி.

அங்கே பருமனாய் இருந்த ஒருத்தி தலையில் பூ வைத்துக் கொண்டிருந்தாள். "இவள் ரமா. சமஸ்கிருத லெக்சரர்," என்று அவளுக்கு மிதிலாவைப் பரிச்சியம் பண்ணினாள்.

"இந்தப் பெண் ஃபிரெஞ்சு டீச் பண்ணுகிறாள். பெயர் மீனா" என்றாள்.

"அப்புறமாய் சந்திக்கிறேன்" என்று சொல்லி விட்டு ரமா பரபரப்புடன் போய் விட்டாள்.

"நைஸ் டு மீட் யூ"— என்று சொல்லிக் கொண்டே மீனாவும் போய் விட்டாள்.

"இந்த ஊரில் உங்களுக்கு வேறு யாருமே தெரியாதா?" என்று கேட்டாள் ரங்கநாயகி.

"தெரியாது"— என்று சொல்லி விட்டுச் சுருக்கமாய் தன் சொந்தக்காரனான அர்ஜுனன் மூலமாய் தனக்கு இங்கே லெக்சரர் வேலை கிடைத்த விஷயத்தைப் பற்றிச் சொன்னாள். அவள் வரப் போவதாய் அவனுக்கு டெலிகிராம் கூட தந்தாள். ஸ்டேஷனுக்கு வருவான் என்று கூட நம்பியிருந்தாள். பார்க்கப் போனால் அவனை அண்ணன்தான் அவளை இங்கே அழைத்து வந்து விட்டு விட்டுப் போயிருக்க வேண்டும். ஆனால் ஆபீசரோடு சேர்ந்து அலசரமாய் கேம்ப்பிற்குப் போக வேண்டியிருந்த தால் முடியவில்லை. ஸ்டேஷனுக்கு அர்ஜுனன் வரவில்லை. அதனால்தான் நேராய் காலேஜிற்கே வந்து விட்டாள். "அர்ஜுனன் வீட்டை யாராவது காட்டினால் அவங்க வீட்டுக்குப் போகிறேன்" என்றாள்.

"ப்யூனுக்கு அவர் வீடு தெரியும். நான் சொல்றேன். அவனைக் கூட்டிட்டுப் போங்க" என்றாள் ரங்கநாயகி.

மிதிலாவுக்கு அவன் குடும்பத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனாலும் வேறு வழியில்லை.

ரங்கநாயகி ப்யூனைக் கூப்பிட்டு "யாதய்யா! இந்த அம்மாளை இங்கிலீஷ் லெக்சரர் அர்ஜுனன் சார் வீட்டுக்கு அழைச்சுட்டுப் போ. கோவிலுக்குப் பக்கத்தில் இருக்கு அவர் வீடு" என்றாள்.

"எனக்குத் தெரியும்மா" என்றான் யாதய்யன்.

மிதிலா யாதய்யன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வர, அர்ஜுனன் வீட்டிற்கு வந்தாள்.

திறிய கேட். அதைத் திறந்து கொண்டு உள்ளே போனான் யாதய்யன். மிதிலா அவனைப் பின்தொடர்ந்தாள்.

வராந்தாவில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

தொட்டியில் மணிபிளாணட் வைக்கப்பட்டிருந்தது.

எதிரே கதவிற்கு அழகாய் பூவேலைகள் பண்ணப் பட்டிருந்த திரைச்சீலை தொங்கிக் கொண்டிருந்தது.

யாதய்யன் உள்ளே போனான்.

உள்ளிருந்து பேச்சுக் குரல்கள் அவள் காதிலும் விழுந்தன.

"அம்மா! ஐயா இருக்காரா?"

"இல்லை. எதுக்கு?" கொஞ்சம் கட்டையாய் இருந்த குரல் கேட்டது

"யாரோ சந்திக்கணும்னு வந்திருக்காங்க."

"பேர் என்னன்னு கேளு"

யாதய்யன் வெளியே வந்து கேட்டான்.

"பேர் என்னங்கம்மா?"

"மிதிலா"

அவன் போய் உள்ளே சொன்னான்.

"மிதிலாவாம் அம்மா"

"என்ன வேலைன்னு கேளு"

"ஐயாவைச் சந்திக்கணுமாம். மெட்ராசிலிருந்து வந்திருக்காங்களாம்."

"அவர் ஊரில் இல்லைன்னு சொல்லு" திரைச் சீலையை விலக்கிக் கொண்டு உள்ளே அடியெடுத்து வைத்து அவளோடு நேரிடையாகவே தான் யார் என்று சொல்லி விடலாம் என்றெண்ணி, திரைச்சீலையின் மேல் கையை வைத்த மிதிலா உதாசினமாய் கேட்ட இந்த வார்த்தைகளைக் கேட்டு நின்று விட்டாள்.

யாதய்யன் வெளியே வந்தான்.

"ஒரு நிமிஷம் இங்கே வந்துட்டுப் போகச் சொல்லு. ஒரு வார்த்தை கேட்டுட்டுப் போகச் சொல்லு" என்றாள் மிதிலா.

யாதய்யன் திரும்பவும் உள்ளே போனான்.

"யார் வார்த்தையையும் கேட்க எனக்கு நேரமில்லை. நான் கைக்காரியமாய் இருக்கேன்"— எரிந்து விழுந்தாள் அவள்.

யாதய்யன் வெளியே வந்தான். அவன் சொல்லுவ தற்குள்ளாகவே மிதிலாவுக்கு எல்லாம் கேட்டு விட்டது.

மிதிலாவின் கன்னங்கள் சிவந்து விட்டன.

லெக்சரரின் மனைவி பேசிய வார்த்தைகள் அந்தப் பெண்ணின் மனதை எவ்வளவு புண்படுத்தி விட்டது என்று நன்றாகவே புரிந்தது யாதய்யனுக்கு.

அவன் என்ன செய்வதென்று புரியாமல் நின்று கொண் டிருந்தான்.

"வா யாதய்யா! நான் காலேஜுக்கு வரேன்" என்றான் மிதிலா.

யாதவ்யன் கீழே வைத்திருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். மிதிலா அவனைப் பின் தொடர்ந்தாள். காலேஜ் கேட்டிற்கருகில் வெளியே வந்து கொண்டிருந்த ரங்கநாயகி பெட்டியுடன் திரும்பி வந்து கொண்டிருந்த மிதிலாவைப் பார்த்து ஆச்சரிய மடைந்தவளாய்— ''இதென்ன? வந்துட்டீங்களே?'' என்றாள்.

மிதிலா அர்ஜுனன் ஊரில் இல்லாத விஷயத்தைச் சொன்னாள். அவன் மனைவி வெளியே வந்து பேசாத விஷயத்தையும் சொன்னாள்.

''அடடா'' என்றாள் ரங்கநாயகி நொந்து கொண்டே.

''இங்கே எங்கேயாவது எந்த ஓட்டலிலாவது ரூம் எதாவது கிடைத்தால்...''—மென்று விழுங்கிக் கொண்டே கேட்டாள் மிதிலா.

''இந்த ஊரில் ஓட்டலிலா? நீங்களா?'' வேறு வினை வேண்டாம்!'' என்று ரங்கநாயகி மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டு சிநேகபூர்வமான குரலில்— ''என்னோடு வாங்க. எங்க வீட்டுக்குப் போகலாம். நானும் மொதல் மொதல்ல இந்த ஊருக்கு வந்தபோது இப்படித் தான் கஷ்டப்பட்டேன். அப்ப பிரின்ஸிபாலாய் ஒரு மேடம் இருந்தாங்க. அவங்கதான் எனக்கு உதவி பண்ணினாங்க. உத்யோகத்துக்காக வீட்டை விட்டுவிட்டு வேற்று ஊருக்குப் போகிற பெண்களுக்கு எதிர்ப்படுகிற முதல் பிரச்னை இதுதான். நாம் பெண்கள். எங்கேயோ எந்த ஓட்டலிலோ ஆண்களைப் போல காலம் கழிக்க முடியாது நம்மால். வாங்க, கிட்டேதான் இருக்கு எங்க வீடு'' என்று கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போனாள்.

மிதிலாவுக்குச் சங்கோஜமாய் இருந்தது. ஆனாலும் வேறு வழியில்லை, போய்த் தீர வேண்டும்.

இருவரும் சேர்ந்து நடந்து, இரு வீதிகளைக் கடந்து ரங்கநாயகியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

ரங்கநாயகி வீட்டின் பூட்டைத் திறந்து கொண்டே ''வீட்டுக்காரர் வீடு அந்த பக்கமாய் இருக்கிறது. அவங்களுக்கு வாசல்கூட வேறு. வீட்டுக்காரரின் பெண்ணும் மருமகனும் வட இந்தியாவில் எங்கேயோ இருக்காங்க. பேத்தியோடு தனியாய் இருக்காங்க. அந்தப் பெண்ணின் பெயர் ஜெயந்தி. நம்ப காலேஜில்தான் ஃபஸ்ட் இயர் சேர்ந்திருக்கிறாள். அவங்க ரொம்ப நல்ல மனுஷங்க. ரொம்ப கலகலப்பாய் இருப்பாங்க. அந்த பாட்டிக்கு எப்பப் பார்த்தாலும் மகளைப் பற்றியும் மருமகனைப் பற்றியுந்தான் பேச்சு! அந்தப் பேச்சுக்களை நாம்ப அலுத்துக் கொள்ளாமல் கேட்க முடிந்தால் நமக்கு நிறைய உதவி செய்வாங்க சின்ன வீடுதான். ஆனாலும் என் மனதுக்கு இது கப்பல் போன்ற வீடாய் தோணுது'' என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தாள்.

மிதிலா பெட்டியைக் கீழே வைத்துவிட்டு வீட்டைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். சின்ன வராந்தா! அதை யொட்டி யாராவது வந்தால் உட்காருவதற்காக நாற்காலிகள் போடப்பட்டிருந்த அறை. அதிலிருந்து வலது பக்கமாய் படுக்கையறைக்கு கதவு இருந்தது. எதிர்ப்ர சமையலறைக்குப் போகும் வாசல் இருந்தது.

''அதோ பாத்ரூம்! குளித்துவிட்டு வாங்க. சாப்பிடலாம்'' என்றாள் ரங்கநாயகி.

மிதிலா குளித்துவிட்டு வருவதற்குள் ரங்கநாயகி மேஜை மேல் பிளேட்டுகளை வைத்து சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள். நிஜத்தில் இன்னொரு ஆள் சாப்பிடக்கூடிய அளவுக்கு சாதம் அதிகமாகவே இருந்தது. ''காலேஜ் கிட்டே இருக்கிறதல்லவா? என்னோடுகூட யாராவது ஒருத்தர் சாப்பிட வந்துட்டேயிருப்பாங்க. சில சமயம் ரெண்டு மூணு பேர் வந்துட்டால் உடனுக்குடன்

சமையல் பண்ணி சாப்பிடுவோம். தாலு நாள் பழகிப் போய் விட்டால் நீங்களே கூட வருவீங்களே!'' என்றாள் சிரித்துக் கொண்டே.

இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

''இந்த வீடு பேருக்கு என்னோடதே தவிர, இதை மெஸ் என்றே நினைச்சுக்குங்க'' என்றாள் ரங்கநாயகி. அதற்குள் ''மேடம்'' என்ற குரல் கேட்டது.

''தமின் ஜையா''— திரும்பிப் பார்க்காமலேயே அந்தக் குரலுக்குரியவளை அடையாளம் புரிந்து கொண்டு விட்டாள்.

மிதிலா திரும்பிப் பார்த்தாள்.

உள்ளே இரண்டு பெண்கள் வந்தார்கள். அப்விரு வரும் காலையில் மிதிலாவுக்குக் காலேஜில் பிரின்ஸிபாலின் அறையைக் காட்டிய பெண்கள்தான். பஞ்சாபி உடை யணிந்து கொண்டிருந்த பெண்ணின் கையில் ஒரு மூடி போட்ட கிண்ணம் இருந்தது. அவர்கள் ஒரு விநாடி மிதிலாவைப் பார்த்து ஆச்சரியமடைந்தவர்களாய் நின்று விட்டார்கள். ''கமான் ஜையா. இவங்க யார் தெரியுமா? உங்க ஹிஸ்டரி லெக்சரர். இன்றைக்குதான் வந்தாங்க. எங்கேயும் அறை கிடைக்காததால் என்னிடம் வந்து இறங்கியிருக்காங்க! வாங்க, உங்களிருவரையும் பரிச்சயம் பண்றேன்'' என்று சொல்லிவிட்டு— பஞ்சாபி உடை உடுத்திக் கொண்டிருந்த பெண்ணைக் காட்டி, ''இந்தப் பெண்தான் ஜெயந்தி! நான் சொன்னேனே வீட்டுக்காரப் பாட்டியின் பேத்தி என்று, அது இவள்தான்! இந்தப் பெண்ணின் பெயர் சாந்தி. இவங்க ரெண்டு பேரும் சிநேகிதிகள்... ரெண்டு பேருமே ஹிஸ்டரி மாணவிகள் தான். பாவம், நான் கணக்கு லெக்சரராய் இருப்பதால் என்னால் டியூஷன் சொல்லித்தர முடியலையேன்னு பாட்டிக்குக் குறை. எனக்கென்ன தெரியும், இப்படி ஒரு

பாட்டி இருப்பாங்க என்றும், அவங்க எனக்கு வீடு வாடகைக்குத் தருவாங்கன்னும் தெரிஞ்சிருந்தால் நான் ஹிஸ்டரி எடுத்தே படிச்சிருப்பேன் எம்.ஏ.யில். இதைத் தான் பாட்டியிடம் அடிக்கடி சொல்லிட்டிருப்பேன். அது சரி, ஜையா, என்ன கொண்டு வந்திருக்கிறாய் கிண்ணத்தில்?'' என்று கேட்டாள்.

''கூட்டு. பாட்டி தந்தாங்க.''

அதைக் கேட்டதுமே ரங்கநாயகி ஒரே பாய்ச்சலாய் தாவிப் போய் ஜெயந்தியின் கையிலிருந்த கிண்ணத்தை வாங்கிக் கொண்டு முகர்ந்து பார்த்துக் கொண்டே— ''கூட்டுன்னால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்றாள்.

''வரோம் மேடம்'' என்றாள் ஜெயந்தி.

''சரி'' என்றாள் ரங்கநாயகி.

இருவரும் மிதிலாவையும் வணங்கி விட்டு அங்கிருந்து அகன்றார்கள்.

ஜெயந்தி ஒல்லியாய், குட்டையான கூந்தல்களுடன் ஃபேஷனாய் இருந்தாள். சாந்தி நீண்ட கூந்தல்களுடனும், கூந்தலில் பூவுடனும் பாவாடை தாவணியுடனும் ஆரோக் கியமாய் இருந்தாள்.

''அவங்க ரெண்டு பேரும் இணை பிரியாத தோழிகள். எப்போதும் சேர்ந்தே இருப்பாங்க. பாவம், அந்த சாந்திக்குத் தாய் தந்தையர் இல்லை. அண்ணன் இருக்கிறான். வாங்க, வாங்க, உங்களுக்கு இன்றைக்கு எல் விருந்தோம்பல் பாட்டியின் கூட்டோடு தொடங்குகிறது'' என்றாள் சிரித்துக் கொண்டே.

ரங்கநாயகி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டாள். ரங்க நாயகிக்குத் தாய் தந்தையர் கிடையாது. சிற்றப்பாவிடம் வளர்ந்தாள். அவர் அவளுக்குத் திருமணம் பண்ணை

வேண்டும் என்று சம்பந்தங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறாராம்.

சாப்பாடு ஆயிற்று.

மிதிலா காலேஜுக்கு வந்தாள். சரித்திர வகுப்பு இருந்தது. மிதிலா வகுப்பை நோக்கி நடந்தாள். வகுப்பிற்குள் அடியெடுத்து வைத்ததுமே எல்லோரும் ''குட் ஆஃப்டர்நூன் மேடம்'' என்றார்கள்.

மிதிலா வணங்கினாள்.

நேராய் போய் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தரைத் திறந்தாள்.

''ராஜேஷ்'' கூப்பிட்டாள்.

யாருமே பதில் கொடுக்கவில்லை.

''வாசுதேவன்''

அதற்கும் யாருமே பதில் கொடுக்கவில்லை.

''ஸீனிவாசன்''

பதில் வரவில்லை.

''ரங்கன்''

பதில் இல்லை.

மிதிலா நிமிர்ந்தாள்.

ஒரு மாணவன் எழுந்து தன் பக்கத்திலிருந்த நான்கு காலியான நாற்காலிகளைக் காட்டிக்கொண்டே— ''இந்த நான்கு பேரும் எப்போதுமே ஆப்ஸென்ட்தான் மேடம்! நாங்கள் கூப்பிடத் தேவையில்லை'' என்றான்.

மிதிலா தொடர்ந்து பெயர்களைக் கூப்பிட்டாள்.

எல்லோரும் பதில் கொடுத்தார்கள்.

''ஜெயந்தி'' கூப்பிட்டாள்.

''எஸ். மேடம்'' ஜெயந்தி ஆர்வத்துடன் எழுந்து பதிலளித்தாள்.

''சாந்தி''

''ப்ரெசன்ட் மேடம்'' சாந்தி எழுந்து வினயமாய் சொன்னாள்.

மிதிலா நிமிர்ந்து பார்த்தாள்.

அவ்விருவரும் மிக சந்தோஷமாய் இருந்தாற் போலவும், மிதிலாவை மிக நன்றாய் தெரிந்தவர்களைப் போல சிரித்தார்கள்.

''ப்ளீஸ் சிட்டௌன்'' புன்முறுவலுடன் சொன்னாள் மிதிலா.

மிதிலாவுக்கு அவ்விருவரும் தெரிந்த முகங்களாய் இருந்ததால் அந்த வகுப்பு அதிகமாய் புதிதாய் தோன்றவில்லை.

2

மறுநாள் மாலை. மிதிலா ரங்கநாயகியின் வீட்டில் மேஜைக்கு முன்னால் அமர்ந்து தாய்க்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

''அன்புள்ள அம்மாவுக்கு,

உன் மிதிலா எழுதிக் கொண்டது. நான் இங்கே க்ஷேமமாய் வந்து சேர்ந்தேன். ஸ்டேஷனுக்கு அர்ஜுனன் வரவில்லை. அவர் ஊரில் இல்லையாம். நான் நேராய் காலேஜுக்கு வந்து விட்டேன். இங்கே ரங்கநாயகி என்று ஒரு லெக்சரரைச் சந்தித்தேன். அவள் தனியாய் இருந்து வருகிறாள். நான் தற்சமயம் அவளிடந்தான் இருக்கிறேன்.

அவள் மிக நல்லவள். வீட்டுக்காரர்கள் கூட நல்லவர்கள் தான். அவர்கள் வீட்டுப் பெண் ஜெயந்தி நான் பாடம் சொல்லித் தரும் காலேஜில்தான் படிக்கிறாள். இங்கே பிரின்ஸிபாலும் சக லெக்சரர்களும் கூட நல்லவர்களாய்தான் இருக்கிறார்கள். நான் இங்கே எந்த கவலையும் இல்லாமல் சந்தோஷமாய்தான் இருக்கிறேன். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

அண்ணனிடம் நான் எங்கேயோ தூரத்தில் இருக்கிறேன் என்றும், எனக்கு ஏதாவது ஆகிவிடப் போகிறதே என்றும் சொல்லி அவர்களை பயமுறுத்தி ரகளை பண்ண வேண்டாம். நீ என்னிடம் சொன்ன எல்லா ஜாக்கிரதை களையும் அப்படியே பின்பற்றி வருகிறேன். எனக்கு இங்கே ஏதாவது சௌகரியப்படாமல் போனால் உடனே அடுத்த ரயிலிலேயே புறப்பட்டு வந்து விடுவேன். அதனால் நீ பயப்படாதே. அண்ணன் கேம்ப்பிலிருந்து திரும்பி வந்து விட்டானா? அண்ணியைக் கேட்டதாய் சொல்லு. கண்ணன் எப்படியிருக்கிறான்? அவன் அழாமல் ஸ்கூலுக்குப் போனால் நான் நிறைய பட்டங்களையும் துணிகளையும் வாங்கிக் கொண்டு வருவேன் என்று சொல்லு. நீ என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று எழுதிய கடிதத்தைப் பார்க்கும் வரை எனக்கு நிம்மதியாய் இருக்காது. அண்ணனையும் அண்ணியையும் கேட்டதாய் சொல்லு. உடனே பதில் போடு.

இப்படிக்கு
உன் மிதிலா.''

அதற்குள் கதவைத் தட்டிய ஓசை கேட்டது. கடிதத்தை மடித்து கவருக்குள் வைத்துக் கொண்டிருந்த மிதிலா திரும்பி வாசல் பக்கம் பார்த்தாள். வராந்தா கம்பி ஜன்னலுக்கப்பால் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தது தென்பட்டது.

''மிதிலா''— சந்தோஷமாய் கூப்பிட்டான் அவன்.

ஒரு வினாடி அவனை யாரோ தெரியாதவனைப் போல பார்த்தாள் மிதிலா. உடனே ஞாபகத்திற்கு வந்து விடவே எழுந்து போய்க் கதவைத் திறந்தாள்.

சிவப்பாய் பருமனாய் இருந்த அவன் அர்ஜுனன். மிதிலா கதவைத் திறந்ததுமே அவன் கைகளைக் கூப்பி மன்னிப்பு வேண்டும் குரலில்— ''மிதிலா! ஐயாம் சாரி! வெரி வெரி சாரி'' என்றான்.

''உள்ளே வாங்க'' என்றாள் மிதிலா.

அவன் உள்ளே வந்தான்.

''நீங்கள் வரதாய் எனக்குத் தெரியாது. நான் ஊருக்குப் போன பிறகு டெலிகிராம் வந்ததாம். ஸ்டேஷனுக்கு வர முடியாமல் போய் விட்டது என்னால் உங்களுக்கு ரொம்பக் கஷ்டம் ஏற்பட்டு விட்டது. ஐயாம் ரியலி சாரி'' என்றான்.

''பரவாயில்லை'' என்றாள் மிதிலா.

''என்னால் உங்களுக்குத் தொல்லை ஏற்பட்டு விட்டது.''

''எனக்கு எந்த தொல்லையும் ஏற்படலை. பாருங்கள். இங்கே சுகமாய் இருந்துட்டிருக்கேன்''— அந்த வீட்டைக் காட்டி முறுவலுடன் சொன்னாள்.

அதற்குள் ரங்கநாயகி வந்தாள்.

''ஹலோ'' என்றாள் அவன்.

''ஹலோ'' என்றாள் ரங்கநாயகி.

அர்ஜுனன் மிதிலாவை நோக்கித் திரும்பி— ''பாருங்கள். நீங்கள் சுகமாய் மகாராணியைப் போல நேராய் எங்கள் வீட்டிற்கு வந்து ஒய்வெடுத்துக் கொண்டு விட்டுப் பிறகு காலேஜிற்கு வந்திருக்க வேண்டியவங்க. பெட்டியைத் தூக்கிக் கொண்டு தேடிக் கொண்டே

அலைந்தது... மை காட்!''— அவனால் அதை ஊகித்துப் பார்க்க முடியவில்லை. தலையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் சரிந்தான். ''ப்ளூன் என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிட்டான். நீங்கள் என் வீட்டிற்கு வந்தீங்களாம். என் மனைவிக்கு உங்களைப் பற்றித் தெரியாது. நான் இல்லாத சமயத்தில் யார் யாரோ வந்து தொந்தரவு பண்ணிட்டிருப்பாங்க. அதுவும் இது கோஎஜுகேஷன் காலேஜ் ஆச்சே! இந்த மாணவிகளுக்கு சாதாரண லெக்சரர்கள் என்றால் பெரிய ஃபாலிவேஷன். என் மனைவி வந்தது நீங்கன்னு தெரிந்ததும் அதிர்ந்து விட்டாள். 'அடடா! எவ்வளவு தப்பு நேர்ந்துடுத்து!' என்று வருந்தினாள். 'அந்தப் பெண்ணை நீங்கள் உடனே வீட்டிற்குக் கூட்டி வாங்க. அந்தப் பெண்ணோடு பேசினாலேயொழிய என் மனம் நிம்மதியடையாது'— என்றான். என்னையும் விட அவள்தான் அதிகமாய் வருந்திக் கொண்டிருக்கிறாள்.''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே நின்றிருந்த ரங்கநாயகி அர்ஜுனனை ஒரு முறை ஏறயிறங்க பார்த்துத் தோள்களைக் குலுக்கி விட்டு, உள்ளே போய் விட்டாள்.

''வாங்க, இனம்புங்க. எங்கே உங்கள் பெட்டி? உங்கள் சாமான்கள் இன்னும் என்னென்ன இருக்கு?'' என்றான்.

மிதிலா தர்மசங்கடத்துடன் பார்த்தாள்.

''நான் அப்புறமாய் வரேன். கொஞ்சம் வேலை இருக்கு'' என்றாள்.

''நோ, நோ! நீங்கள் இன்னும் ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்கக்கூடாது. என்னோடு வந்து தீரவேண்டியதுதான்! ஐயோ! உங்க அண்ணனுக்குத் தெரிந்தால் வேறு வினை இல்லை. என் தோலை உரித்து விடுவானே!'' என்றான்.

''நான் இங்கே இருக்கிறேன்னு அவங்களுக்கு எழுதி விட்டேன்.''

''எழுதிட்டீங்களா? ஆனாலும் பரவாயில்லை. நான் திரும்பி இன்னொரு லெட்டர் எழுதி விடுகிறேன். இனம் புங்கள். போகலாம்'' என்று பலவந்தம் செய்தான்.

அதற்கு மேல் மிதிலாவால் போகாமலிருக்க முடியவில்லை.

''ஒரு நிமிஷம்'' என்று உள்ளே போனாள்.

உள் அறையில் ரங்கநாயகி தலைப் பின்னிக் கொண்டிருந்தாள்.

''நான் இதோ அரை மணியில் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு செருப்பை மாட்டிக் கொண்டாள் மிதிலா.

''அவர், பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்துவிடு என்கிறாரே, இதென்ன?'' கேட்டாள் ரங்கநாயகி.

''ஊஹூம், நான் இங்கேயேதான் இருக்கப் போறேன். வேறெங்கேயுமே போக மாட்டேன்'' என்றாள் மிதிலா.

வெறும் கையோடு வெளியே வந்த மிதிலாவைப் பார்த்துவிட்டு அவன் ''பெட்டி எங்கே?'' என்றான்.

''உள்ளே இருக்கு. நான் எங்கே இருக்கிறதுன்னு யோசித்து நாளைக்குச் சொல்றேன். வாங்க, போகலாம்'' என்றாள். அக்குரலில் உறுதிகூட தென்பட்டது. வேறு வழியில்லாதவனாய்— ''சரி, வாங்க'' என்றான் அர்ஜுனன்.

அர்ஜுனன் வெளியே வந்ததுமே ரிக்ஷாவைக் கூப்பிடப் போனான்.

''வேண்டாம். கிட்டேதானே? நடந்தே போயிடலாம்'' என்றாள் மிதிலா. இருவரும் கால்நடையாய் புறப்பட்டார்கள்.

அர்ஜுனன் வீட்டிற்குள் நுழைந்ததுமே— "மது! மது!" என்று கூப்பிட்டான்.

"வரேன்" உள்ளேயிருந்து கொஞ்சம் கட்டையான குரல் கேட்டது.

"உட்காருங்கள்" என்றான்.

மிதிலா உட்கார்ந்தாள்.

அர்ஜுனன் வீட்டைப் பெருமையாய் கையால் சுட்டிக் காட்டி— "இதுதான் எங்கள் வீடு என்ற சாம்ராஜியம். அந்தச் சுவரிலிருக்கிற பெயிண்டிங்கைப் பார்த்திங்களா? மதுவோட சித்தப்பாவோட வீட்டிற்குப் போயிருந்த போது அவர் ஒரு ஆர்ட் எக்ஸிபிஷனில் வாங்கியிருந்ததைக் கொண்டு வந்தாள். ரொம்ப நன்றாய் இருக்கோனோ? அந்த சோபாவின் திண்டுகளில் உள்ள பூ வேலைப்பாடு களைக் கூட அவளேதான் சுயமாய் பண்ணினாள். இந்த வீடு இவ்வளவு அழகாய் இருக்குன்னால் அதற்கு காரணம் அவள் கைத்திறன்தான். மது, வருகிறாயா?" உள்ளே எட்டிப் பார்த்து இரைந்து கூப்பிட்டான்

"வரேங்க" இம்முறை பதிலளித்த அக்குரலில் கொஞ்சம் அலுப்பும், அதிகாரமும் தெளிவாய் தென் பட்டன. அர்ஜுனன் மிதிலாவுக்கெதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"நாங்கள் இந்த ஊருக்கு வந்து ஆறு வருஷம் ஆகிறது. இந்த ஊரிலிருக்கிற பெரிய மனுஷங்க எல்லோரையுமே எனக்குத் தெரியும். இங்கே அர்ஜுனனின் பெயரைக் கேட்டாலே எல்லோருக்கும் உதறல். எனக்கு நீங்கள் நெருங்கியவங்கன்னு தெரிந்தால் போதும். அங்கே காலேஜிலும் சரி, இங்கே வெளியேயும் சரி உங்களை யாருமே நிமிர்ந்தும் பார்க்க பயப்படுவாங்க. நான் என் வாய் வார்த்தையைக் கொண்டே இந்த ஊரில் ஒரு பத்து நிமிஷத்திற்குள் லட்சம் ரூபாய்களைப் புரட்டி விடுவேன்."

அவன் கொஞ்சம் பொறுத்து— "மது! ஏன் வரலை இன்னும்" என்று திரும்பவும் கத்தினான்.

இம்முறை பதில் கேட்கவில்லை.

"வருவாள்! ஏதோ வேலையாய் இருக்கிறாள் போலிருக்கு. பாவம். வீட்டு வேலைகளையெல்லாம் அவள் ஒருத்தியாய்தான் சமாளிச்சுக்கணும். வீட்டில் பெரியவங்க யாரும் இல்லை. வேலைக்காரங்களை மேய்த்துக்கட்ட அவளுக்குப் பிடிக்காது. அவளுக்கு சுத்தம் வேண்டும். வீடும் மனிதர்களும் நீட்டாய் இருக்கணும் என்பாள். எனக்கு அம்மா இருக்காங்க. ஆனால் அவங்க எங்களோடு இருக்க மாட்டாங்க. எப்பொழுது பார்த் தாலும் சின்னப் பையன் மேல்தான் அவங்களுக்கு அன்பு ஜாஸ்தி. தம்பி மதுரையில் இருக்கான்"— அவன் மனைவி வருகிறாளோ என்று உள்பக்கமாய் பார்த்தான். அவள் வரும் ஜாடையைக் காணோம்.

அர்ஜுனன் எழுந்து போய் அலமாரியிலிருந்த ஆல்பம் ஒன்றை எடுத்து வந்து மிதிலாவிடம் தந்து— "எங்கள் கல்யாண போட்டோக்கள் பாருங்கள்"— என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டான். மிதிலா போட்டோக் களைப் பார்த்தாள். திருமணத்தன்று பிடித்த போட் டோக்கள், பளிச்சென்று அழகாய் இருந்தன.

உள்ளேயிருந்து அர்ஜுனனின் குரலோ, அவள் குரலோ, சம்பாஷணைகளோ கேட்கவில்லை.

அர்ஜுனன் திரும்பி வந்தான்.

"வந்து விடுவாள். முகம் கழுவிக்கொண்டு பொட்டு வைத்துக் கொண்டிருக்கிறாள்" என்றான்.

மிதிலாவுக்குச் சிரிப்பு வந்தது. 'அந்தப் பெரிய மனுஷி தானே அவளை உடனே அழைத்துக்கொண்டு வாருங்கள் அவளோடு பேசினாலேயொழிய, என் மனம் நிம்மதி யடையாது' என்று சொன்னது!

"நீங்க காபி குடிக்கிறீங்களா? தேநீரா?"

"ரெண்டுமே வேண்டாம். இப்பத்தான் குடிச்சேன்" என்றாள்.

"இதென்னது? முதல் முதலாய் எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. கொஞ்சம் காபி குடித்துத்தான் தீரணும்"— என்று உள்ளே எழுந்து போனான்.

மிதிலா அந்த வீட்டின் அலங்காரங்களையும், பீரோவில் இருந்த புத்தகங்களையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

ஐந்து நிமிஷம் கழித்து அர்ஜுனன் தானே சுயமாய் இரண்டு கோப்பைகளில் காபியைக் கொண்டு வந்தான்.

"எங்க மதுவின் கைமணத்தை ருசி பார்த்துட்டால் அப்புறமாய் உங்களுக்கு வேறெங்கேயுமே காபி சாப்பிடப் பிடிக்காது" என்றான் தந்து கொண்டே.

"வேண்டாம்" மறுக்கப் போனாள்.

"குடித்துத் தீரணும்."

மிதிலா காபியை வாங்கிக் கொண்டாள்.

"காலேஜ் எப்படி இருக்கு?" என்று கேட்டான்.

"நன்றாய்தான் இருக்கு."

"எந்த ப்ராப்ளமும் இல்லையே?"

"ஊஹூம்"

பிரின்ஸிபால் நமக்கு நன்றாய் தெரிஞ்சவர்தான். ரொம்ப எப்படிச் சொல்றோமோ அப்படிக் கேட்பார். நீங்க காலேஜில் எனக்கு வேண்டிய நபர் என்று தெரிந்தால் போதும் எல்லோருமே ஜாக்கிரதையாய் இருப்பாங்க."

அதற்குள் வாசலில் கார் வந்து நின்றது.

அதிலிருந்து ஒரு பெண்ணும் நாலைந்து இளைஞர்களும் இறங்கி வேக வேகமாய் உள்ளே வந்தார்கள்.

"நோ! ஐவான்ட் சினிமா, சினிமா, சினிமா! நோ செகண்ட் ப்ரபோசல்" என்றாள் அந்தப் பெண் வாதாடுவது போல. அவள் பேன்ட்டும் ஷர்ட்டும் போட்டுக் கொண்டிருந்தாள். குட்டையாய் கத்திரித்து விட்டுக் கொண்டிருந்த கூந்தலை ரப்பரால் கட்டிக்கொண்டிருந்தாள். பேசும்பொழுது தலையை அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டிருந்ததால் அக்கூந்தல் கூட அப்படியும் இப்படியும் அசைந்து கொண்டிருந்தது.

"ஆங்! நாம்ப பார்க்காத சினிமா என்ன இருக்கு?" என்றான் ஒரு பையன்.

ஒருவரை அடுத்து இன்னொருவராய் உள்ளே வந்தார்கள். அர்ஜுனன் அவர்களைப் பார்த்துமே— "கமான் மை பாய்! கமான்! வெல்கம் டு யுவர் ஹோம்!" என்றான் ஆடம்பரமாய்.

மிதிலா அவர்களை ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தாள்.

வாசலில் வந்து கும்பலாய் நின்ற அவர்கள் அல்விடத்திலேயே சொல்லி விட்டார்கள்—

"அர்ஜுனன் சார்! நீங்கதான் எங்களுக்கு நியாயம் சொல்லணும்" என்றான் ஒருத்தன்.

"என் வாயிலிருந்து மறந்தும் அநியாயமான வார்த்தைகள் வராது. சொல்லுங்கள். உங்களுடைய ப்ராப்ளம் என்ன?"

"நாளைக்கு நம்ப ராஜேஷோட பர்த் டே! மஞ்சு சினிமா என்கிறாள். நாங்க மூன்றைட் டின்னர் என்கிறோம். சினிமா என்றால் மூணு மணி நேரம் நம்மை மறந்து போய் ஊமையாய் உட்கார்ந்திருக்கணும். டின்னர் என்றால் சுத்தலாம், கூச்சலிடலாம், டான்ஸ் ஆடலாம். எவ்வளவு நன்றாயிருக்கும்! நீங்களே சொல்லுங்கள், எது நன்றாயிருக்கும்னு!" என்றான் ஒரு பையன். அந்தப்

பையன் கருப்பாய் குள்ளமாய் இருந்தான். பற்கள் கொஞ்சம் தூக்கலாய், உதடுகள் முரட்டுத்தனமாய் இருந்தன. கன்னத்தில் பெரிய மச்சம் இருந்தது.

"அண்ணா! சினிமா என்று சொல்லு அண்ணா!" மஞ்சு அர்ஜுனனின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

அர்ஜுனன் ஒரு வினாடி அவர்களையெல்லாம் கூர்ந்து பார்த்தான் பிறகு சீரியஸாய் சொன்னான் — "நோ மஞ்சு! வாசுவுக்கு டின்னர் வேணுமனு இருக்கு. ராஜேஷ்! நீ என்ன சொல்கிறாய்?" என்றான்.

"எனக்கு எதாய் இருந்தாலும் பிடிக்கும்" வெள்ளையாய் உயரமாய் இருந்த பையன் சொன்னான். அவன் கன்னங்கள் ஆரோக்கியத்தோடு பளபளத்துக் கொண்டிருந்தன. கேசங்கள் முகத்தின்மீது வந்து தவழ்ந்து கொண்டிருந்தன. விலையுயர்ந்த உடைகள். கழுத்தில் பளபளத்துக் கொண்டிருந்த சங்கிலி பட்டன் போடாத சட்டைக்குள்ளிருந்து நன்றாய் தென்பட்டுக் கொண்டிருந்தது.

"சீனு, ரங்கா, நீங்கள்?" கேட்டான் அர்ஜுனன்.

"எனக்கு சினிமா இஷ்டம்" என்றான் ரங்கன்.

"ஊஹூம். எனக்கு டின்னர்தான் பிடிக்கும்" என்றான் சீனு.

"ஓ கே. ஓ.கே. இருங்கள், இது பெரிய ப்ராப்ளமாய் இருக்கு எல்லோரும் தலைக்கு ஒன்று சொல்றாங்க. அதனால் என்னோட நியாயம் பயன்படாது. எதைச் சொன்னாலும் யாரையோ ஒருத்தரை சைட் பண்ணினாற் போல ஆகும். ஒரு காரியம் பண்றேன். டாஸ் போட்டு பார்க்கலாம். சினிமான்னு சொன்னால் தலை. டின்னர்னு சொன்னால் பூ. என்ன சொல்றீங்க?" என்று ஜேபியிலிருந்து எட்டணாவை வெளியே எடுத்தான்.

"ஓ.கே." எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

அர்ஜுனன் அந்த நாணயத்தை மேலே தூக்கிப் போட்டு பிடித்துக் கொள்ளப் போனான். அது குறித்தவறி கைக்கெட்டாமல் நழுவி உருண்டு கொண்டே போய் மிதிலாவின் பாதத்திற்கருகில் நின்றது ராஜேஷ் சரேலென்று ஓடிப் போய் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு அதை எடுத்து "பூ" என்றான்.

"பூவாளால் டின்னர்" என்றான் அர்ஜுனன்.

வாசுவும் சீனுவும் கைக்குலுக்கிக் கொண்டார்கள்.

அங்கிருந்து எழுந்திருக்கப் போன ராஜேஷ் மென்மையான கருப்பு செருப்புகளுக்கிடையே மிக அழகாய் தென்பட்ட வெண்மையான பாதங்களைப் பார்த்தவன் அப்படியே நின்று விட்டான் அவன் பார்வை பாதத்திலிருந்து வெண்மையான புடவைக்குள் தெளிந்து தென்பட்ட முழங்கால்களையும், வயிற்றின் மடிப்புக்களையும், அதைத் தாண்டி மேலே போய் அங்கே தென்பட்ட சங்கிலியையும், அதை அலங்கரித்துக் கொண்டிருந்த கழுத்தையும், வழவழுப்பான கன்னங்களையும், அதற்கு மேல் அகலமான கண்களையும் பார்த்தன.

மிதிலா முறுவலுடன் பார்த்தாள்!

அவன் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவனைப் போல மிதிலாவை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் சோபாவில் பின்னுக்குச் சாய்ந்தபடி, கம்பீரமாய் சலனமில்லாமல் உட்கார்ந்து கொண்டிருந்த மிதிலாவைப் பார்த்தபோது அவன் மனதில் சந்தோஷமும் அளவில்லாத வியப்பும் அலையாய் பொங்கத் தொடங்கின. மிதிலாவின் உதடுகளில் தெளிந்த மந்தகாசம் அவனை ஒரு வித்தமான ட்ரான்ஸிற்குக் கொண்டு போய் விட்டு விட்டது.

காயினுக்காகக் கிட்டே வந்த அர்ஜுனனுக்குச் சட்டென்று மிதிலா அவ்விடத்தில் இருந்தது ஞாபகத்திற்கு

வந்தது. திரும்பி சீனு, ரங்கன் முதலியவர்களைக் கூப்பிட்டான். "கமான் பாய்ஸ்! இங்கே இருக்கிற விருந்தாளியை உங்களுக்கு பரிச்சியம் பண்ணி வைக்கிறேன். இவங்க மிதிலா. நம்ப காலேஜுக்கு ஹிஸ்டரி லெக்சரராய் வந்திருக்காங்க."— என்று ராஜேஷின் தோளில் தட்டிவிட்டு— "ராஜேஷ்! கமான்! கெட் அப்! சீட் ஹெர்!" என்றான்.

ராஜேஷ் எழுந்து வணங்கினான்.

மிதிலாவும் பதில் வணக்கம் செய்தாள்.

ராஜேஷின் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு கிட்டே இழுத்துக் கொண்டே அர்ஜுனன் தடபுடலாய்— "மிதிலா! இந்த ராஜேஷின் அப்பா பெயர் கணபதி. அவர் இந்த ஊரில் இருக்கிற லட்சுமி சில்க் ஸ்டோர்ஸின் முதலாளி. அவரை எனக்கு நன்றாய் தெரியும். ராஜேஷ் அவரோட ஒரே மகன். இதோ இந்தப் பெண் மஞ்சு! என் தங்கை. இவங்க நீங்கள் பாடம் எடுக்கிற வகுப்பில்தான் படிச்சிட்டிருக்காங்க." என்று சொல்லிக் கொண்டே மஞ்சுவை இன்னொரு கையால் கிட்டே இழுத்துக் கொண்டான். ராஜேஷையும் மஞ்சுவையும் பெருமையோடு சுட்டிக் காட்டிக் கொண்டே— "இவங்க ரெண்டு பேரும் எனக்கு ரெண்டு கண்களை போன்றவங்க. ராஜேஷுக்கு எங்கள் வீட்டில் எவ்வளவு சுதந்திரம் உண்டோ அதே அளவுக்கு மஞ்சுவுக்கும் அவனிடம் உண்டு" என்றான்.

மஞ்சு மிதிலாவை வணங்கினாள்.

மிதிலாவுக்கு 'ராஜேஷ்', 'கணபதியின் மகன்' என்ற வார்த்தைகளை கேட்டதுமே பிரின்சிபாலின் அறையில் அவர்களைப் பற்றிய சம்பாஷணையைக் கேட்டது நினைவிற்கு வந்தது.

அர்ஜுனன் எஞ்சியவர்களை விட கருப்பாய் இருந்த பையனைக் காட்டி— "இவன் வாசு. இவனுக்குத் தாய் தந்தையர் கிடையாது. இவன் ரங்கன். இவன் சீனு" என்று பரிச்சியம் பண்ணினான். "இந்த ஐந்து பேரும் உயிர்த் தோழர்கள். இவங்கள்ள யாருக்காவது கொஞ்சம் காலில் முள் குத்திட்டால் கூட போதும் அடுத்தவங்க துடிக்கத் தொடங்கிடுவாங்க" என்றான். மிதிலா அந்த ஐவரையும் பார்த்தாள். ஐவரும் ஏறக்குறைய சம வயதினர்.

அதற்குள் அவர்களுக்குப் பின்னாலிருந்து— "ராஜேஷ் வந்து எவ்வளவு நேரமாகிறது?" என்ற குரல் கேட்டது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

சுதவிற்கருகில் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். ஜரிகை போட்ட புடவை கட்டிக் கொண்டிருந்தாள். முகத்திற்குப் பெரிய பொட்டு. வெள்ளையாய் இருந்தாள். ஆனால் குரல் மட்டும் கட்டைத் தொண்டையுடன். முரட்டுக் குரலாய் இருந்தது. அவளுக்கும் அந்தக் குரலுக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லாதது போல தோன்றிற்று.

அவளைப் பார்த்ததுமே அர்ஜுனன் சரேலென்று ராஜேஷையும் மஞ்சுவையும் விட்டு அவளிடம் நெருங்கி— "மது! இதோ மிதிலா" என்று காட்டினான்.

மிதிலாவிடம் "எங்க மது! முழுப் பெயர் மதுமதி! இந்த வீட்டு மகாராணி. என் வாழ்க்கைக்கு எஜமானி" என்று பரிச்சியம் செய்தான். மிதிலா எழுந்து நின்று வணங்கினாள். மதுமதி பதில் வணக்கம் பண்ணிவிட்டு ஒரு நிமிஷம் மிதிலாவைக் கண்கொட்டாமல் ஏறயிறங்கப் பார்த்தாள். அவள் பார்வை விசாரிப்பது போலவோ சிநேகபூர்வமாகவோ இல்லை.

"நீங்கதானா மெட்றாசிலிருந்து வந்தவங்க?"

மிதிலா ஆமாம் என்று தலையாட்டினாள்.

மதுமதி சட்டென்று ராஜேஷை நோக்கித் திரும்பினாள்.

"ராஜேஷ்! நேற்றைக்கு நீ ஏன் சாப்பிட வரவில்லை?"

"சாரி! வீட்டில் எங்கப்பாவோட விருந்தாளி வந்திருந்தாங்க. அங்கிருந்து வர முடியாமல் போய்விட்டது."

மன்னிப்பு வேண்டுவது போல பார்த்தான்.

"உனக்காக பாயசம் பண்ணியிருந்தேன். எவ்வளவு நன்றாய் இருந்தது தெரியுமா? ஆனால் நீ வரலை. எனக்கு உயிரே போயிட்டாற் போல ஆயிடுத்து"— அவள் ராஜேஷை எவ்வளவு அன்பாய் நடத்தி வருகிறாள் என்பது அவள் பேசிய விதத்தைக் கொண்டே தெரிந்தது. அர்ஜுனன் குறுக்கிட்டான்— "ராஜேஷ்! உனக்கு பதில் அந்தப் பாயசத்தை நான் காலி பண்ணிட்டேன். நாது தம்ளர் குடித்து விட்டேன். அது எவ்வளவு நன்றாய் இருந்ததுன்னால்—" அர்ஜுனன் ஏதோ சொல்ல வருவதற்குள் மதுமதி கணவனைப் பார்த்தாள் அப்பார்வை சுருக்கென்று குத்தினார் போல கூர்மையாய் இருந்தது. 'போதும், நிறுத்துங்கள்'— என்றாற்போல இருந்தது. அர்ஜுனன் வார்த்தைகளை விழுங்கி விட்டான்.

"ராஜேஷ், வாசு, வாருங்கள் உள்ளே. அங்கே வராந்தாவில் உட்கார்ந்து கொள்ளலாம்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டாள் மதுமதி.

அவள் உத்தரவைப் பின்பற்றியவர்களாய் எல்லோரும் உள்ளே போனார்கள்.

கடைசியாய் உள்ளே போய்க் கொண்டிருந்த ராஜேஷ் ஏனோ தன்னையறியாமல் திரும்பி மிதிலாவைப் பார்த்தான்.

மிதிலா அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

அர்ஜுனன்— "இதப்பார் மது"— என்று கூப்பிட்டுக் கொண்டே அவள் பின்னாடியே போனான். மதுமதிக்குக் கணவன் கூப்பிட்டது காதில் விழுந்தது. ஆனாலும் விழாதது போலவே போய்க் கொண்டிருந்தாள். மிதிலாவை உட்காரும்படிச் சொல்லவில்லை. விசாரிக்கவும் இல்லை. எல்லோரும் உள்ளே போய் விட்டார்கள்.

மிதிலா அங்கே தனியாய் நின்று கொண்டிருந்தாள். ஒரு வினாடி என்ன பண்ணுவதென்றே தெரியவில்லை. மதுமதியின் உதாசீனம் மிதிலாவின் மனதைப் புண் படுத்தினாற் போலிருந்தது. அது அவள் சுபாவமாய் இருக்கலாம்! அதற்குத் தான் ஏன் வருந்த வேண்டும்? இந்த உலகத்தில் எல்லோருமே நமக்குப் பிடித்தாற்போல இருந்து விடுவார்களா? என்றெண்ணிப் பேசாமலிருந்தாள்.

அர்ஜுனன் திரும்பி வந்தான். மிதிலா நின்று கொண்டே அங்கிருந்த மேகலினைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

அர்ஜுனனின் முகம் கனையிழந்திருந்தது. ஜீவனற்றப் புன்னகையொன்றை உதிர்த்துக் கொண்டே— "உட்காருங்கள்" என்றான்.

"நான் இனி போயிட்டு வரேன். இருட்டி விட்டது" என்றாள்.

"போறீங்களா? இருங்க, நான் கொண்டு வந்து விடுகிறேன்" என்றான்.

மிதிலா புறப்பட்டாள்.

அர்ஜுனன் வீடு வரைக்கும் கொண்டு வந்து விட்டான்.

"நீங்கள் நாளைக்கு வாங்க எங்க வீட்டுக்கு. மது இன்றைக்கு நல்ல நாள் இல்லை என்றாள்"— கடைசி வார்த்தைகளை முணுமுணுத்தாற் போல சொன்னான்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மிதிலா திரும்பி பார்த்து முறுவலுடன் சொன்னாள்— "என்னைப்

பற்றி நீங்கள் கவலைப்படாதீங்க. எனக்கு இந்த வீட்டில் நன்றாய்தான் இருக்கிறது. நானும் ரங்கநாயகியும் சேர்ந்து தங்கியிருக்கத் தீர்மானித்துக்கொண்டு விட்டோம். நான் அந்த விஷயத்தை எங்கம்மா, அண்ணனுக்கு லெட்டரில் எழுதி விட்டேன்'' என்றாள்.

''அப்படியா? சரி, அப்படீன்னால் உங்களிஷ்டம்''— என்றான் அவன்— அங்கிருந்து கிளம்பியபடி.

அவனை அனுப்பி விட்டுக் கேட்டைச் சாத்திவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த அவளை வராந்தா படிக் கட்டிற்கருகில் எதிர்பட்டாள் ரங்கநாயகி.

''அம்மாடா! வந்துட்டீங்க! நீங்க வரமாட்டீங்களோன்னு பயந்துட்டிருந்தேன்!'' என்றாள்.

''அதான் வந்து விடுவேன்னு சொல்லியிருந்தேனே'' என்றாள் மிதிலா.

''சொன்னீங்கதான். ஆனால் அவர் அவ்வளவு தூரம் சொல்லும்போது... ஆமாம் அவள் எப்படி இருக்கிறாள்? ரொம்ப அழகாய் இருப்பாளாமே! நம்ம கெமிஸ்ட்ரி லெக்சரர் சாரதா சொன்னாள்.''

''நன்றாய் இருக்கிறாள்.''

''அவளைப்பற்றி என்னென்னவோ சொல்றாங்க''

''என்னவென்று?''

''கணவன் மேல் ரொம்பச் சந்தேகமாம். யாரோடும் பேசவிட மாட்டானாம்.'' மிதிலா பதில் பேசவில்லை.

இப்பொழுது மதுமதியின் நடத்தை மிதிலாவுக்குப் புரிபட்டது.

ரங்கநாயகி சாப்பாட்டைப் பரிமாறிக் கொண்டே— ''உன்னை தேடிட்டு வீட்டுக்காரப் பாட்டி வந்துட்டுப் போனாங்க'' என்றாள்.

''எதுக்காக?''

''அவங்க ஜெயந்திக்கு டியூஷன் சொல்லித்தரணுமாம்.''

''அப்படியா? சாயந்திர வேளைகளில் எனக்கு மட்டும் வேறு வேலை என்ன இருக்கு? பொழுது போக்காகவும் இருக்கும்'' என்றாள் மிதிலா.

3

மறுநாள் மாலையில் ஜெயந்தி டியூஷனுக்கு வந்தாள். அவளோடுகூட சாந்தியும் வந்தாள். ஜெயந்தி சாந்தியைக் காட்டி— ''மேடம்!'' சாந்திகூட என்னோடு டியூஷனுக்கு வருகிறாள்'' என்றாள்.

''பரவாயில்லை, உட்காருங்கள்'' என்றாள் மிதிலா.

இருவரும் அங்கிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து புத்தகங்களைத் திறந்தார்கள். மிதிலா அவர்களுக்கெதிரே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். சரித்திரப் புத்தகத்தை திறந்து கொண்டே ''ஜெயந்தி! உங்கப்பாவும் அம்மாவும் எங்கே இருக்காங்க?''— என்று கேட்டாள்.

''மகாராஷ்ட்ராவில். அப்பாவுக்கு அடிக்கடி ட்ரான்ஸ்பர் ஆயிட்டேயிருக்கும். என் படிப்பு கெட்டுப் போயிடும்னு அம்மாவுக்கு பயம். அதோடுகூட பாட்டி தனியாய் இருக்காங்க. துணை கூட வேண்டும். அதனால்...'' என்றாள்.

''சாந்தி, உங்கப்பா என்ன பண்றார்?''

சாந்தி தலை குனிந்தாள்.

சாந்தியைக் கேட்ட கேள்விக்கு ஜெயந்தியே பதில் சொன்னாள்.

''சாந்திக்கு அம்மா அப்பா இல்லை மேடம்.''

மிதிலா அப்படியா என்று தலையாட்டினாள். ''ஒரு வயதிலேயே போய் விட்டாங்களா?''

''இல்லை. பத்து வருஷமாயிடுத்தாம். திருப்பதிக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது பஸ் ஆக்ஸிடென்ட்டில் செத்துட்டாங்க. சாந்திகூட அப்ப அந்த பஸ்லிலேயே தான் இருந்தாள். ஆனால் அவளுக்கு லேசாய் அடிமட்டுந் தான் பட்டது.''

''அடடா, பாவம்'' இரக்கத்தோடு பார்த்தாள் மிதிலா.

''பின்னே இப்ப யாரிடம் இருக்கிறாள்?''

''அவங்க அண்ணாவிடம் இருக்கிறாள். அவங்களுக்கு கோழிப்பண்ணை இருக்கிறது. முட்டைகளை வெளி நாட்டிற்கு அனுப்புவாங்க.''

மிதிலா பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினாள். ஜெயந்திக்கும் சாந்திக்கும் சரித்திர பாடம் என்றால் போர். இதற்கு முன்னாலிருந்த லெக்சரர் பாடம் சொல்லித் தந்தால் தூக்கம் வந்துவிடும். இப்பொழுது மிதிலா கதையைப் போல ஆர்வந் ததும்ப எடுத்துச் சொல்லத் தொடங்கியபோது கேட்க கேட்க உற்சாகம் ஏற்படத் தொடங்கிற்று. ஒன்றரை மணி நேரம் கழிந்ததே தெரியவில்லை.

மிதிலா நேரத்தைப் பார்த்துவிட்டு— ''இன்றைக்கு இதோடு போதும். இனி நாளைக்கு'' என்றாள்.

ஜெயந்தியும் சாந்தியும் திடீரென்று இந்த உலகத்திற்கு திரும்பி வந்தார்கள். இவ்வளவு நேரமாய் வேறு ஏதோ உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாற் போல இருந்தது அவர்களுக்கு.

மிதிலா உள்ளே போனாள். ஜெயந்தி சாந்தியை நோக்கித் திரும்பி— ''எவ்வளவு நன்றாய் சொல்லித்

தராங்க மேடம்! இப்படி இருந்தால் நாம்ப சரித்திரத்தில் நல்ல மார்க் எடுக்கலாம்'' என்றாள்.

சாந்தியும்— ''ஆமாம் ஜெயந்தி, நேரம் போனதே தெரியவில்லை'' என்றாள்.

மிதிலா உள்ளே போய் அலுமினியத்தில் தேநீர் போட்டு எடுத்து வந்து தந்தாள்.

''வேண்டாம் மேடம்''— இருவரும் சங்கோஜப் பட்டார்கள்.

''பரவாயில்லை. குடியுங்கள்'' என்றாள் மிதிலா.

இருவரும் குடித்தார்கள்.

மிதிலா தேநீரைக் குடித்துக் கொண்டே— ''நான் சொல்லித் தந்தது உங்களுக்குப் புரிந்ததா?'' என்றாள்.

''ரொம்ப நன்றாய் புரிந்தது மேடம்'' இருவரும் ஏககாலத்தில் சொன்னார்கள்.

''நிறைய பேர் சரித்திரம் என்றால் யுத்தத்தைப் பற்றியும், ஆண்டுகளைப் பற்றியும் ஞாபகத்தில் வைத்துக்கணும் ரொம்ப போர் என்றெண்ணிப்பாங்க. அப்படி நினைக்காமல் இது நம்ப முன்னோர்களின் சரித்திரம், நமக்குச் சம்பந்தப்பட்டதுதான் என்றெண்ணிக் கொண்டு படித்தால் உற்சாகமாய் இருக்கும்'' என்றாள் மிதிலா.

சாந்தி -ஆம் என்பது போல பார்த்தாள்.

சாந்தியின் கண்களைப் பார்க்கப் பார்க்க மேலும் பார்க்க வேண்டும் போலிருந்தது மிதிலாவுக்கு. அக்கண்கள் நிர்மலமான குளத்தைப் போல இருப்பதாய் தோன்றிற்று மிதிலாவுக்கு. சாந்தி மிகவும் சங்கோஜப்படுபவளாய் இருந்தாள். மிகக் குறைவாய் பேசினாள். ஜெயந்திதான் கலகலப்பாய் பேசிக் கொண்டிருந்தாள். சாந்தியின் கண்களில் தென்பட்ட அப்பாவித்தனமும், நல்ல குணமும் எதிராளியை எளிதில் கவர்ந்துவிடக் கூடியவை.

ஜெயந்தியும் சாந்தியும் புத்தகங்களை அடுக்கி எடுத்துக் கொண்டு புறப்பட எத்தனித்த பொழுது வீட்டுக் காரப் பாட்டி சுப்புலட்சுமி வந்தாள்.

"வாங்க பாட்டி" என்றாள் மிதிலா.

"என்னம்மா, இந்தப் பெண்களுக்குப் படிப்பு ஏதாவது வருமா?" கேட்டாள் ஜெயந்தியையும் சாந்தியையும் காட்டி.

"ஏன் வராது?" என்றாள் மிதிலா.

"என்னவோம்மா! எப்பப் பார்த்தாலும் விளையாட்டு தான். பலவந்தமாய் இழுத்து உட்கார வைத்துப் புத்தகங்களை எடுத்து முன்னால் போட்டால், அவைகளை எடுத்து படிக்க மாட்டாள். அவற்றின் மேலே விழுந்து தூங்கி விடுகிறாள்— இவளுக்குப் படிப்பு எப்படி வருமோன்னு பயப்படுகிறேன் நான்" என்றாள் ஜெயந்தியைக் காட்டி.

"நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க. ஜெயந்தி ஒன்றும் முட்டாளோ அல்லது சோம்பேறியோ அல்ல! அவளைப் படிக்க வைக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. போதுமா?" என்றாள் மிதிலா சிரித்துக் கொண்டே.

"என் கண்ணே! நூறு வருஷம் மகாராணியாய் வாழணும் நீ! அவங்க அம்மாவும் அப்பாவும் எங்கோ தூர தேசத்தில் இருக்காங்க. இவளைப் படிப்பிற்காகவே இங்கே என்னிடம் விட்டு வைத்திருக்காங்க. இல்லாவிட்டால் அவங்க பெண்ணை இங்கே விட்டு வைத்திருப்பாங்களா? என் மகளுக்கும் மருமகனுக்கும் என் மேல் நம்பிக்கை! இந்தப் பொண்ணு மட்டும் பரீட்சையில் பெயிலாகி உட்கார்ந்து விட்டதென்றால் என்னால் அவங்களுக்கு முன்னால் தலை நிமிர்ந்து நிற்க முடியுமா?"

"உங்கள் மானத்தைக் காப்பாற்றி விடுவாள் ஜெயந்தி."

சுப்புலட்சுமி மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"இதப்பாரு பொண்ணு! நீ எங்க ஜெயந்திக்கு நன்றாய் பாடம் சொல்லித்தா. இங்கே உனக்கு எத்தக் குறையும் இல்லாமல் பார்த்துக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. போதுமா?" அவள் கையில் தன் கையை வைத்து வாக்குறுதி தந்தாள்.

"சரி" என்றாள் மிதிலா. படிப்புச் சொல்லித் தரத் தான் அவளால் முடியுமே தவிர அவளைப் படிக்க வைக்க முடியாதே அவளால்! அந்தப் பொறுப்பை அவளால் எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? அதை சொன்னாலும் அவளுக்குப் புரியும் என்று தோன்றவில்லை.

அதற்குள் ரங்கநாயகி வெளியேயிருந்து வந்தாள். "என்ன பாட்டி! புது லெக்சரருக்கு வாக்குறுதி தந்துட்டிருக்கிங்களா, அல்லது வாங்கிட்டிருக்கீங்களா?"

"ரெண்டுத்தாம்மா" என்றாள் அவள்.

"போயிட்டு வரோம் மேடம்" ஜெயந்தியும் சாந்தியும் எழுந்தார்கள். நாளைக்கு இதே டயத்திற்கு வரோம்"— உற்சாகத்தோடு சொன்னார்கள்.

மிதிலா அவர்களை அனுப்பி விட்டு கேட்டைச் சாத்தி விட்டு வந்தாள்.

ரங்கநாயகி அங்கிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டே— "உம்! நேற்று வந்த நீங்கள் என்னைவிட பாட்டியின் மனதை நன்றாய் அபகரித்துக் கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது" என்றாள்.

"ரங்கநாயகி! என்னை 'நீங்கள்' என்று சொல்ல வேண்டாம். 'நீ' என்றே சொல்லுங்கள்.

"அப்படீன்னால் ஒரு ஒப்பந்தம். என்னை நீங்க கூட 'ரங்கம்' என்றே கூப்பிடணும். சரியா?"

"சரி" என்றான் மிதிலா.

4

மிதிலா வகுப்பிற்குப் போய் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு அட்டெண்டென்ஸைத் திறந்தாள்.

"ராஜேஷ்"— அவர்கள் நால்வரும் வகுப்பிற்கு வர மாட்டார்கள் என்று தெரிந்தாலும் அவள் மட்டும் வழக்கம் போல பெயரைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"ப்ரெஸன்ட் மேடம்"

அடுத்த பெயரைக் கூப்பிட போன மிதிலா கொஞ்சம் நிறுத்தி விட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

எதிரே கடைசி வரிசையில் வலது பக்கமாய் ராஜேஷ் எழுந்து நின்று கொண்டிருந்ததைப் பார்த்தாள். அவள் மிதிலாவை நோக்கி முறுவலுடன் விருப்பத்தோடு பார்த்தான்.

"வாசுதேவன்" இரண்டாவது பெயரைக் கூப்பிட்டாள்.

"ப்ரெசன்ட் மேடம்" வாசு எழுந்துவிட்டு உட்கார்ந்து கொண்டான். உட்காரும்போது நின்று கொண்டிருந்த ராஜேஷின் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தான்.

"சீனிவாசன்"

"எஸ். மேடம்" தடபுடலாய் பதிலளித்தான்.

"ரங்கநாதன்"

"ப்ரெசன்ட் மேடம்" ரங்கன் எழுந்து நின்றான்.

மிதிலாவுக்கு அந்நால்வரையும் பார்த்ததும் சந்தோஷம் ஏற்பட்டது. என்றுமே வகுப்பிற்கு வராதவர்கள் வந்திருக்கிறார்கள்.

மிதிலா பாடம் சொல்லித் தரத் தொடங்கினாள். நடுவில் நாற்காலியை விட்டு எழுந்திருந்து அப்படியும் இப்படியுமாய் சுற்றிக்கொண்டே மிக விவரமாய் சொல்லத் தொடங்கினாள். எல்லோரும் எந்த ரகளையும் பண்ணாமல் நிசப்தமாய் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மிதிலா பாடம் சொல்லித் தந்து கொண்டே ராஜேஷ் முதலியவர்களைப் பார்த்தாள்.

அவர்களுள் வாசுவும் ரங்கனும் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜேஷ் மட்டும் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவனைப் போல கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு மிதிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ஏனோ தெரியவில்லை, அந்த நிமிஷத்தில் மிதிலாவைப் பார்த்துக் கொண்டிருந்தால் மிக சந்தோஷமாய் இருந்தது. இடையிடையே வாசு அவன் கவனத்தைச் சிதறடிக்க விரும்பி அவன் தொடையில் கிள்ளிக் கொண்டிருந்தான். ஆனாலும் ராஜேஷ் அதைப் பொருட்படுத்தவில்லை.

வகுப்பு முடிந்தது. மிதிலா வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள்.

ஸ்டாப் ரூமிற்குள் வந்ததுமே ரங்கநாயகியிடம் "இன்றைக்கு என்ன விசேஷம் நடந்தது தெரியுமா?" என்றாள்.

"என்ன?"

"ராஜேஷும் அவன் சிநேகிதர்களும் கிளாஸுக்கு அடெண்ட் ஆனார்கள்!"

''என்னது? நிஜமாகவா?''

''நிஜமாய்''

''அப்படீன்னால் உன் கையில் மந்திரக்கோல் இருக்குன்னு சொல்லு.''

''ரொம்ப அழகுதான். அவங்களுக்கு வெளியே சுற்றுலது அலுத்துப் போயிருக்கும். பொழுதுபோக்குக்காக வந்திருக்கலாம்'' என்றாள் மிதிலா.

''பார்ப்போம்'' என்றாள் ரங்கநாயகி.

மிதிலா போக முற்பட்டபொழுது ரங்கநாயகி கூப்பிட்டாள்.

''மிதிலா! மறந்து போயிட்டேன் இந்தா, உனக்குக் கடிதம் வந்தது'' என்று கைப் பையிலிருந்து எடுத்துத் தந்தாள்.

மிதிலா அதைப் பிரித்துப் படித்தாள். தாய் எழுதியிருந்த கடிதம் அது:

''அன்புள்ள மிதிலாவுக்கு,

அம்மா ஆசீர்வதித்து எழுதுவது. உன் கடிதம் கிடைத்தது. அதோடுகூட அர்ஜுனன் உன் அண்ணனுக்கு எழுதியிருந்த கடிதமும் கிடைத்தது. நீ போன அன்றைக்கு அர்ஜுனன் தான் அங்கே இல்லாமல் போனதற்கு வருந்துவதாய் எழுதியிருந்தான். நாம் தந்த டெலிகிராம் தாமதமாகி விட்டதாம்.

நீ ரங்கநாயகி என்ற லெக்சரருடன் சேர்ந்து இருப்பதாய் எழுதியிருந்தாய். அர்ஜுனனுக்கு அது மிகவும் வருத்தமாய் இருக்கிறதாம். வெளி ஊர்களில் இருக்கும் போது பெண்கள் எவ்வளவு விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்பதைப்பற்றி உனக்கு நான் எவ்வளவோ நடனைகள் சொல்லியிருக்கிறேன். நீ இந்தக் கடிதம் கிடைத்ததுமே போய் அர்ஜுனன் வீட்டில் தங்கிக்கொள்.

அவன் அங்கே இருக்கிறான் என்ற தைரியத்தில் தானே உன்னைத் தனியாய் அனுப்பியதே.

உன் கடிதத்தில் வீட்டுக்காரியும், இதர லெக்சரர்களும், பிரின்சிபாலும் நல்லவர்களாய் இருப்பதாய் எழுதியிருந்தாய். அதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் உன் வீட்டில் வேலை பண்ணும் வேலைக்காரியைப் பற்றி எழுதவில்லை. நீ உன் சாமான்கள் விஷயத்தில் ரொம்பவும் அஜாக்கிரதையாய் இருப்பாய். குளிக்கும் போது கழுத்திலுள்ள சங்கிலியைக் கழற்றி மாடப் பிறையில் வைத்துவிடும் கெட்ட பழக்கம் உனக்கு உண்டு. வேலைக்காரர்கள் அதைத் திருடி விடுவார்கள். அப்படிப் பட்ட அசிரத்தையால் வேலைக்காரர்களுக்கு நாம் இல்லாத திருட்டுத்தனத்தை கற்றுக் கொடுத்தாற் போல ஆகிவிடும். அதனால் நீ உடனே அர்ஜுனன் வீட்டிற்குப் போய் இருக்க வேண்டியது. அவன் மனைவிகூட உன்னை அவர்கள் வீட்டிலேயே வந்து இருக்கச் சொன்னதாய் அர்ஜுனன் எழுதியிருக்கிறான். நீ அடுத்த கடிதம் எழுதும் போது அர்ஜுனன் வீட்டிலிருந்தே எழுத வேண்டும். அண்ணனின் அபிப்பிராயம் கூட இதேதான். இதை அலட்சியப்படுத்தாதே. இங்கே நாங்கள் எல்லோரும் சௌக்கியம். உன் சௌக்கியத்தைப் பற்றி வாரத்திற்கு இரண்டு கடிதங்கள் மூலம் தெரியப்படுத்து.

இங்கே வரலட்சுமி அத்தை ஒரு சம்பந்தத்தைப் பற்றி சொன்னாள். பையன் அமெரிக்காவில் இருக்கிறானாம். ஏதோ நல்ல உத்யோகம் பண்ணுகிறானாம். உன் போட்டோவை வாங்கிக் கொண்டு போனாள். அவனுக்குப் பிடித்து விட்டால் இந்த கல்யாணத்தை செட்டில் பண்ணி விடலாம். உனக்கு கல்யாணமாகி விட்டால் எனக்கு நிம்மதியாய் இருக்கும்.

உனக்குக் கொஞ்சம் ஏதாவது அங்கே பிடிக்காமல் போனாலும் உடனே வேலையை விட்டுவிட்டு வந்துவிடு.

ஏதோ பொழுதுபோக்குக்காகத்தான் உன்னை அனுப்பி யிருக்கிறோமே தவிர வயிற்றுப் பிழைப்பிற்கில்லை என்று தெரிந்துகொள். நான் அர்ஜுனனுக்குக்கூட இப்பொழுதே கடிதம் எழுதுகிறேன்.

இப்படிக்கு
உன் அம்மா."

கடிதத்தைப் படித்துவிட்டுப் பெருமூச்சு விட்டாள் மிதிலா. கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த பொழுது "மிதிலா" என்ற குரல் கேட்டது.

மிதிலா திரும்பிப் பார்த்தாள். அர்ஜுனன் அங்கே வந்தான். "இந்தா! உங்கம்மா கூட எனக்கு லெட்டர் போட்டிருக்காங்க"—என்று கடிதத்தை நீட்டினான். அவன் முகத்தில் சந்தோஷம் பொங்கிக் கொண்டிருந்தது. மிதிலா அக்கடிதத்தை வாங்கிக் கொள்ளவில்லை.

"அதில் என்ன இருக்கும்னு எனக்குத் தெரியும்" என்றாள்.

"அப்படீன்னால் என்னோடு எங்க வீட்டுக்கு வருகிறாயா?" என்றான்.

"ஊஹூம். வரவில்லை. எனக்கு ரங்கநாயகியிடமே குன்றாய் இருக்கு. எனக்கு சிறு வயதிலிருந்தே எனக்குப் பிடித்தக் காரியத்தைதான் பண்றது வழக்கம். அது எங்கம்மாவுக்கும் அண்ணனுக்கும் நன்றாய் தெரியும். நீங்கள் மிதிலாவை 'வா' என்று கூப்பிட்ட போதிலும் வர மாட்டேன் என்று சொல்லி விட்டாள் என்று பதில் எழுதுங்கள்" என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

அர்ஜுனன் ஒரு நிமிஷம் அவ்விடத்திலேயே சிலையாய் நின்று விட்டான். மிதிலா சாந்தமாய், சிரித்துக் கொண்டே சொன்ன போதிலும், அந்த பதில் அவன் முகத்தின் மீது சாட்டையால் அடித்தாற் போல இருந்தது.

மிதிலா நடந்து போய் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டே அப்படியே நின்றிருந்தான் அவன்.

5

இரவு எட்டு மணி ஆயிற்று.

ஜெயந்திக்கும் சாந்திக்கும் டியூஷன் முடிந்தது. ஜெயந்தி போய் விட்டாள்.

"அண்ணா வந்து அழைச்சுட்டுப் போறதாய் சொன்னான்— மேடம்! அண்ணா வீட்டில் இல்லை. பக்கத்து ஊருக்குப் போயிருக்கிறான். வரும் வரை உட்கார்ந்திருக்கேன்" என்றாள் சாந்தி.

"உட்காரு" என்றாள் மிதிலா.

"எனக்குத் தூக்கம் வரது" என்று ரங்கநாயகி எழுந்து போய் தன் அறையில் படுத்துக் கொண்டாள்.

மிதிலா மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து அந்த வாரத்து டெஸ்ட் பேப்பரைத் திருத்திக் கொண்டிருந்தாள். சாந்தி நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

மிதிலா ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டே பேப்பர்களை ஒவ்வொன்றாய் எடுத்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

மிதிலாவின் வாயிலிருந்து பாட்டைக் கேட்டதுமே சாந்தி மிதிலாவை நோக்கித் திரும்பி— "மேடம்! நீங்க ரொம்ப நன்றாய் பாடறீங்க" என்றாள்.

"சின்ன வயதில் எங்கம்மாவின் தொந்தரவு தாங்காமல் வீணை கற்றுக் கொண்டேன்" என்றாள்.

''நிஜமாகவா? நான் கூட வீணை வாசிப்பேன். எங்கம்மா நன்றாய் வீணை வாசிப்பாங்க.''— சட்டென்று சாந்தியின் கண்களில் துக்கத் திரைகள் வந்து சூழ்ந்து கொண்டுவிட்டன. ''நான் வீணை நன்றாய் கற்றுக்கிட்டு, பாட்டுக் கச்சேரி பண்ணனும்னு எங்கம்மா எப்பொழுதும் சொல்லிட்டிருப்பாங்க.''

மிதிலா இரக்கம் ததும்பப் பார்த்தாள்.

சாந்தி பரிச்சியமான இந்த ஒரு மாத காலத்திற்குள் மிதிலா நன்றாய் கவனித்து விட்டாள். சாந்தியின் பேச்சில் எந்த வித்தத்திலாவது தாயைப்பற்றி அடிபடாமல் இருக்காது. உடனே அந்த அழகிய கண்கள் கிர்ரென்று கண்ணீர் குளமாகிவிடும்.

சாந்தி கண்ணீரை துடைத்துக்கொண்டே— ''மேடம்! நீங்கள் கண்டிப்பாய் எங்கள் வீட்டிற்கு வரணும என் வீணையைக் காட்டுகிறேன்'' என்றாள்.

''வீணை மட்டுமேயில்லை. உன் பாட்டைக்கூட கேட்கிறேன்'' என்றாள் மிதிலா.

''ஓ! கண்டிப்பாய்'' உற்சாகமாய் சொன்னாள் சாந்தி. அதற்குள் வராந்தாவில் சந்தடி கேட்டது. சாந்தி அந்த பக்கமாய் பார்த்து விட்டு— ''அண்ணா வந்து விட்டான்'' என்று எழுந்து போனாள்.

''சாந்தி! தாமதமாயிடுத்தா?'' கையிலிருந்த புத்தகங்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்த மிதிலாவின் செவிகளில் அக்குரல் கேட்டது. அக்குரலில் சிங்கம் தூக்கத்தில் புரண்டு கர்ஜித்தாற் போல மந்திரஸ்தாயி கம்பீர்யம் இருந்தது.

''பரவாயில்லை அண்ணா. அதான் மேடம் ஒண்ணும நினைச்சுக்க மாட்டாங்கன்னு சொன்னேனே! உள்ளே வா அண்ணா.''

மிதிலா மேஜையை விட்டு அப்பால் வந்தாள்.

அதற்குள் சாந்தியைத் தொடர்ந்து அவனே உள்ளே வந்து விட்டான். மாநிறத்தில் உயரமாய் இருந்தான் அவன். வெள்ளை பேண்ட்டும் ஷர்ட்டும் போட்டுக் கொண்டிருந்தான். முகத்தில் சாந்தியின் ஜாடை நன்றாய் தெரிந்தது.

''மேடம்! எங்கண்ணா. டெயர் சூர்யரெண்'' சாந்தி பரிச்சயம் பண்ணினாள்.

மிதிலா அவனை வணங்கினாள்.

பதிலுக்கு அவனும் வணங்கிவிட்டு, ''சாந்தி எப்பொழுதும் உங்களைப் பற்றியே சொல்லிட்டிருப்பாள். ஸ்டூடெண்ட்ஸுக்கு எப்பொழுது லெக்சரர் மேல் விருப்பம் ஏற்படுகிறதோ அப்பொழுது படிப்பில் நல்ல கவனம் உண்டாகும். உங்களுக்கு நான் தாங்க்ஸ் சொல்லணும்.''

''எனக்கா? எதுக்கு?''

''சாந்திக்கு உங்கள் மூலமாய் படிப்பில் ஆர்வம் தோன்றியிருக்கு. அவள் வாங்கும் மார்க்குகளே சொல்லுகின்றன'' என்றான் அவன்.

சாந்தி அண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டே— ''அண்ணா! மேடம் பாட்டு நன்றாய் பாடுகிறாங்க. நான் இப்பத்தான் கேட்டேன்'' என்றாள்.

அவன் நிஜமாகவா என்பது போல பார்த்தான்.

''உட்காருங்கள்'' என்றாள் மிதிலா.

''இல்லை. போகிறோம். இப்பவே உங்களைத் தூங்க முடியாமல் தொந்தரவு படுத்திட்டோம்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. சீக்கிரமாய் தூங்கும் பழக்கம் இல்லை எனக்கு''

''போயிட்டு வரோம் மேடம்'' என்றாள் சாந்தி.

''குட்நைட்'' என்றாள் மிதிலா.

சூரியகிரண் போக முற்பட்டவன், ஏதோ நினைவுக்கு வந்தவனாய் நின்றான். ஜேபியில் கையை விட்டுப் பணத்தை எடுத்து அங்கிருந்த மேஜை மேல் வைத்தான்.

''இதென்ன?'' என்றாள் மிதிலா.

''சாந்திக்கு நீங்கள் டியூஷன் சொல்லித்தர ஆரம்பித்து ஒரு மாதத்திற்கு மேலேயே ஆகிறது.''

''அதற்கு ஃபீசா இது?''

அவன் முறுவலுடன் ''எங்க சந்தோஷத்துக்காகத் தரோம்'' என்றான்.

''திருப்பி எடுத்துக்குங்க அதை. நீங்கள் டியூஷன் என்று விலை பேசினால் சாந்திக்கு நான் டியூஷனே சொல்லித் தரமாட்டேன் அப்புறம். சாயந்திர வேளைகளில் நான் தனியாக இருப்பதால் துணைக்குத் துணையாகவும் இருக்கிறது பொழுதும் போகிறது. எனக்குத் தெரிந்த பசங்கள்தானே, இவங்களுக்குப் படிப்பில் உதவி செய்கிறேன் அவ்வளவுதான் எடுத்துக்குங்க'' என்றாள்.

சூரியகிரணால் பதில் பேச முடியவில்லை.

''சாந்திக்கு நான் படிப்புச் சொல்லித் தரணும்னு உண்மையாகவே உங்களுக்கு விருப்பம் இருந்தால் நீங்கள் திரும்பவும் என்னிடம் ஒருநாளும் பணத்தைப் பற்றிப் பேச்செடுக்காதீங்க'' என்றாள்.

சூர்யகிரணின் வாழ்க்கையில் எதிராளி தன் பேச்சால் பதில் சொல்ல முடியாதவாறு வாயடைக்கச் செய்து விட்டது இதுதான் முதல் தடவை!

மிதிலா சாந்தியைப் பார்த்து சொன்னாள்— ''சாந்தி! நான் நாளைக்கு உனக்கு ஹிஸ்டரி நோட்ஸ் தயார் பண்ணித் தரேன் ஒரு அரைமணி நேரத்துக்கு முன்னால் வந்து அதை எழுதிக் கொள்.''

''சரி மேடம்'' என்றாள் சாந்தி.

18589
3513168

''வரோம்'' என்றான் சூர்யகிரண்.

''குட்நைட்'' என்றாள் மிதிலா.

அவன் வாசலைத் தாண்ட போனவன் நின்று, திரும்பி— ''உங்களுக்கு எப்பொழுதாவது ஓய்வு கிடைத்தால் சொல்லுங்கள், சாந்தி உங்களை அழைத்துட்டுப் போய் எங்கள் கோழிப் பண்ணையை சுற்றி காட்டுவாள். அங்கே கார்டன் இருக்கிறது. உங்களுக்கு விருப்பமான போது பொழுது போக்காய் கழிக்கலாம். புறாக்கள் கூட உள்ளன''— என்றான்.

மிதிலா தலையாட்டினாள்.

அண்ணனும் தங்கையும் போய் விட்டார்கள். மிதிலா வராந்தா வரைக்கும் வந்து வழியனுப்பினாள்.

அவர்கள் போன பிறகு மிதிலா கதவைச் சாத்திவிட்டு வந்து மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு பேப்பர்களைத் திருத்தத் தொடங்கினாள்.

மிதிலாவுக்கு சூர்யகிரணின் குரலைப் போன்ற கம்பீரமான குரலை இதுவரை எந்த ஆணிடமும் கேட்டதில்லை என்று தோன்றிற்று.

அல்விடமெல்லாம் நிசப்தமாயிருந்தது. ரங்கநாயகி தூங்கிவிட்டாள். அந்த நிசப்தத்திலிருந்து— அந்த தனிமையிலிருந்து இதயத்தில் ஏதோ வேதனை தொடங்கிற்று அவளுக்கு. அது கொஞ்சங் கொஞ்சமாய் பெருகி, அவள் மனம் முழுவதிலும் வியாபித்துக் கொண்டு விட்டாற் போலிருந்தது.

மிதிலா ஏதோ நினைவிற்கு வந்து விட்டவளாய், மேஜை மீது முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு சட்டென்று தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். கொஞ்ச நேரங் கழித்து ரங்கநாயகி எழுந்து வந்து கதவிற்கருகில் நின்றாள். மேஜை மேல் முகத்தை கவிழ்த்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த மிதிலாவைப்

பார்த்து கலக்கமடைந்து விட்டாள். ஒரே பாய்ச்சலாய் வந்து மிதிலாவின் தோளைப் பிடித்துக்கொண்டு உலுக்கி னாள்—"மிதிலா! என்னவாச்சு? என்னவாச்சு?" என்றாள்.

"ஒன்றுமில்லை" என்றாள் கண்களைத் துடைத்துக் கொண்டே.

"ஒன்றுமில்லையா? ஒன்றுமில்லாமல்தான் இவ்வளவு வருத்தப்பட்டு அழுகிறாயா? சொல்லு, என்னவாச்சு?"

"ஒன்றும் ஆகலை ரங்கம்"

"என்னிடம் சொல்லக்கூடாதா?"

"எனக்கு எந்த வருத்தமும் இல்லை."

"ஆமாம். வருத்தம் இல்லாமல்தான் இப்படி அழுதாய் போலிருக்கு."

"ரங்கம்! ப்ளீஸ்! என்னை தப்பு சொல்லிடாதே."

"சரி விடு! உன்னை ஒன்றும் கேட்கலை. எழுந்து உள்ளே வா! தூக்கத்தில் தாகம் எடுத்ததால் எழுந்து வந்தவளுக்கு உன் அழுகுரல் இதயத்தை பிளக்கும்படியாய் கேட்டது. எனக்கு பகீர் என்றது. ஒரு நிமிஷம் காலு ஓடலை கையும் ஓடலை. நிஜத்தைச் சொல்லு மிதிலா காலேஜில் ஏதாவது ஆச்சா?"

"ஒன்றுமில்லை."

"பின்னே ஏன் இந்த வருத்தம்?"

"ஒன்றும் ஆகலை"

ரங்கநாயகி மிதிலாவை உற்றுப் பார்த்தாள்.

"அவ்வளவு ரகசியம் என்ன?"

"ரகசியம் எதுவும் இல்லை."

"பின்னே?" ரங்கநாயகி உலுக்கி எடுப்பதுபோல் கேட்டாள்.

"தனிமை! பயங்கரமான தனிமை!" மிதிலாவுக்கு அழுகை வந்துவிட்டது.

ரங்கநாயகி மிதிலாவை ஆச்சரியத்தோடு பார்த்தாள். கொஞ்ச நேரங் கழித்து ரங்கநாயகியின் ஆறுதல் வார்த்தை களாலும், சிநேக பூர்வமான மொழிகளாலும் தேறிக் கொண்ட மிதிலா அறைக்கு வந்து படுத்துக் கொண்டாள்.

ரங்கநாயகி கொஞ்ச நேரத்தில் தூங்கிவிட்டாள். மிதிலா யோசித்துக்கொண்டே யிருந்தாள். விடியற்காலை நான்கு மணி அடித்தது மிதிலாவின் செவிகளில் விழுந்து கொண்டேதானிருந்தது.

6

மிதிலா வகுப்பிற்கு வந்தாள். வகுப்பில் அதுவரை ஏக சந்தடியாய் இருந்து வந்தது. மிதிலா வகுப்பறைக்குள் நுழைந்ததுமே சட்டென்று சந்தடி அடங்கிவிட்டது.

எல்லோரும் எழுந்து நின்று, மிதிலா உட்கார்ந்ததும் நிசப்தமாய் உட்கார்ந்து கொண்டார்கள்.

மிதிலா மேஜைக்கருகில் வந்தாள். மேஜை மீது நறுமணங் கமழும் புத்தம் புதிய வெள்ளை நிறத்தில் ஒற்றை ரோஜா தென்பட்டது அதைக் கையிலெடுத்து ஒரு நிமிஷம் பார்த்துவிட்டுக் கீழே வைத்தாள்.

மிதிலா சரித்திரப் புத்தகத்தைத் திறந்து பாடம் சொல்லித் தருவதற்கு முன்னால் ஒருமுறை வகுப்பைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். முன் வரிசையில் ராஜேஷும் அவன் சிநேகிதர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

பின்வரிசையில் இருந்த ஒரு மாணவன் எழுந்து புகார் செய்யத் தொடங்கினான்:

"மேடம்! நாங்க வழக்கமாய் உட்கார்ந்து கொள்கிற இடம் அது. அவங்க பிடிச்சுக்கொண்டு விட்டாங்க.

அலக்ஸ பாடத்தைக் கேட்க மாட்டாங்க. இங்கே வந்து உட்காரச் சொல்லுங்க.''

மிதிலா ராஜேஷைப் பார்த்தாள். அவன் நிமிரவில்லை. அடுத்தவன் தன்னைப் புகார் சொல்லிக் கொண்டிருந்த போது அது தன்னையில்லை என்பது போல உட்கார்ந் திருந்தான்.

லாசு எழுந்து ஆர்பாட்டமாய் பதிலளித்தான்— ''மேடம்! இங்கே யார் முன்னாடி வராங்களோ, அவங்க தமக்குப் பிடிச்ச இடத்தைப் பிடிச்சுக்கலாம். இந்த இடம் என்னோடதுன்னு சொல்றதுக்கு ரூல் இல்லை'' என்றான்.

''நீங்க எப்போதும் பின்னாடிதானே உட்காருவீங்க?'' அடுத்தவன் கோபமாய் கேட்டான்.

''இப்ப முன்னாடி உட்கார்ந்துக்கணும்னு தோணுது. உட்கார்ந்துட்டோம்!'' சீனு குறுக்கிட்டு அலட்சியமாய் பதிலளித்தான்.

''நீங்கள் பாடத்தைக் கேட்க மாட்டீங்க. உங்களுக்கு வேண்டியது ரகளைதானே!''

''ஷட் அப்!'' லாசு எழுந்து பின்பக்கமாய் திரும்பி உள்ளங்கையை மடக்கிக் கொண்டான்.

''யூ ஷட் அப்'' அந்த மாணவனும் எழுந்து வர போனான்.

''சைலன்ஸ்'' மிதிலா டஸ்ட்டரால் மேஜை மே அடித்து சப்தமிட்டாள். ''கிளாஸில் எங்கே உட்கார் நாதும் பாடத்தைக் கேட்கணுங்கிற கவனம் இருந்தா போதும். அதுவே காதில் விழும். நீங்கள் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. நீங்கள் அவ்வளவு தூர நிற்கு இந்த விஷயத்தைப் பற்றி முடிவெடுத்துக் கொள் வேண்டும் என்றிருந்தால் வெளியே போங்க'' என்றா உத்தரவிடுவது போல. அக்குரலில் இருந்த தீவிரத்தி அடித்த மாணவன் தணிந்தான். தலை குனிந்த

உடகார்ந்து கொண்டான். லாசு வெற்றிப் பெருமிதத் தோடு பார்த்துவிட்டு, காலரை தூக்கிவிட்டு கொண்டான்.

மிதிலா பாடம் சொல்லித்தர தொடங்கினாள்.

''இன்றைக்கு உங்களுக்கு அலெக்ஸாண்டரின் படை யெடுப்பை பற்றி சொல்கிறேன்'' என்று தொடங்கினாள். அலெக்ஸாண்டர் நம் நாட்டை பத்தொன்பது ஆண்டுகள் மட்டுமே பரிபாலித்தாலும் அவர் படையெடுப்பு இந்திய சரித்திரத்தில் எவ்வளவு முக்கிய இடத்தைப் பெற்று விட்டது என்பதைப்பற்றி விவரித்து சொன்னாள். அவர் பாலியத்தைப் பற்றி சொல்லிவிட்டு, ''அவர் குருவான அரிஸ்டாட்டில் சுற்றுத் தந்த வேதாந்தம் அவர் மனதைக் கவரவில்லை. அவர் இதயம் எப்பொழுதும் செல்யூகஸ் போன்ற வீரர்களின் மீதே நிலைத்திருந்தது. அவர் தந்தை ஃபிலிப் பி.சி. 335ல் இறந்தபொழுது அலெக்ஸாண்டர் பட்டத்திற்கு வந்தார். அப்பொழுது அவர் வயது இருபது தான். அவர் அரியணை ஏறிய மிகக் குறுகிய காலத்திற் குள்ளாகவே, ஆசியா, சிரியா, எகிப்து முதலிய நாடுகளை வென்று, ஆப்கானிஸ்தான் வரைக்கும் வந்தார். அப்பொழுதே அவருக்கு 'ராஜாதிராஜா' என்ற பட்டம் கிடைத்தது,'' என்று மிதிலா அலெக்ஸாண்டரைப் பற்றி சொல்லிக்கொண்டே போனாள். மிதிலா பாடம் சொல்லிக் கொடுத்தபொழுது அக்குரலில் மென்மை மட்டுமேயில்லை, உணர்ச்சியும் ததும்பி நிற்கும். வரலாற்று பாடத்தை போர் அடிக்கும்படிச் சொல்லாமல், கதையைப் போல சொல்லுவாள்.

மிதிலா பாடம் சொல்லி தந்து கொண்டிருக்கையில் அவள் நெற்றியில் வியர்த்து கொட்டிற்று. மழை வருவது போல இருந்ததால் புழுக்கம் அதிகமாய் இருந்தது. மிதிலாவின் நெற்றியில் படிந்த வியர்வையைப் பார்த் ததுமே ராஜேஷ் சரேலென்று ஓடிப்போய் ஃபேனை போட்டான். அவன் திடீரென்று எழுந்ததையும், மனம் வென்று போனதையும் பார்த்த மிதிலா பாடம் சொல்

வதை நிறுத்திவிட்டு பொருள் பொதியப் பார்த்தான். ராஜேஷ் மீதேன் போட்டுவிட்டு வந்து உட்கார்ந்த பொழுது, "தாங்க்யூ" என்று சொல்லிவிட்டு திரும்பவும் பாடத்தில் மூழ்கிவிட்டாள்.

மிதிலா அலெக்ஸாண்டர் சரித்திரத்தை சொல்லி முடித்து விட்டு நேரத்தை பார்த்துக் கொண்டான். இன்னும் பத்து நிமிஷம் இருந்தது.

"யாராலது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்"— என்றான்.

அதற்குள் வாசு டக்கென்று எழுந்தான். "மேடம்! எப்பொழுதும் ஆண்கள் ராஜியமாண்ட சரித்திரத்தையே சொல்றீங்க நீங்க. பெண்களின் சாகஸச் செயலைப்பற்றி என் சொல்லலே மாட்டேங்கிறீங்க?" என்று கேட்டான். அவன் குரலில்— அப்பாவு கேட்டதில் ஆர்வத்தைக் காட்டிலும் குறும்புத்தனந்தான் அதிகமாய் தென்பட்டது.

மிதிலா அவனை ஒரு வினாடி கூர்ந்து பார்த்தாள்.

"பெண்களின் சாகஸக் கதைகள் ஏன் இல்லை? போகப் போக உங்களுக்குப் பாடத்தில் வரும். ரஜியா சுல்தானா இருக்கிறாள். ராணி சம்யுக்தை இருக்கிறாள். நூர்ஜஹான் இருக்கிறாள்."

"மேடம்! ராணி சம்யுக்தையைப் பற்றிச் சொல்லுங்கள்"— கேட்டாள் ஒரு மாணவி.

"வேண்டாம், வேண்டாம். சம்யுக்தையைப் பற்றி தெரியும். ரஜியா சுல்தானாவைப் பற்றிச் சொல்லுங்கள்"— இன்னொருத்தன் கேட்டான்.

"ஊஹூம், ராணி சம்யுக்தை"

"நோ! ரஜியா சுல்தானா வேண்டும்"

"இல்லை, இல்லை"

"ஒ.கே. ஒ.கே. ரஜியா சுல்தானா வேணுங்கிறவங்க கையைத் தூக்குங்க" என்றான் மிதிலா.

வகுப்பில் முக்கால்வாசிப் பேருக்கு மேல் கையைத் தூக்கினார்கள்.

"சரி. மேலோட்டமாய் சொல்றேன், கேளுங்கள்"— மிதிலா ரஜியா சுல்தானாவைப் பற்றிச் சொல்ல தொடங்கினாள்:

"பதிமூன்றாம் நூற்றாண்டில் ஸ்லிவ் சாம்ராஜியத்தை ஸ்தாபித்த குதுபுத்தீன் ஐபக்கின் மருமகனான இல்டமிஷ் பெரிய ராஜா. அவருக்கு புத்தி சாதுரியமும், முன் யோசனையும் அதிகம் உண்டு. அவர் காலத்திற்குப் பிறகு மகன்கள் எல்லோரும் சாபர்த்தியமில்லாதவர்களாய் இருந்ததால் ராஜிய பரிபாலனத்திற்கு தன் மகளான ரஜியாவை தன் வாரிசாக நியமித்திருந்தார். இது மந்திரி களுக்கு கஷ்டத்தை உண்டாக்கிற்று. ஒரு பெண் ராஜியத்தை ஆளுவதை அவர்கள் விரும்பவில்லை. அதனால் மகனான ருக்நுத்தீன்ஷாவை சிம்மாசனத்தில் ஏற்றி வைத்தார்கள். ஆனால் ருக்நுத்தீன்ஷா உல்லாசப் பிரியன். கேட்ட பழக்கங்களுக்கு அடிமையானவன். அவன் ராஜிய நிர்வாகத்தை தன் தாயிடம் ஒப்படைத்து விட்டு தன் உல்லாசக் கேளிக்கைகளில் தான் ஆழ்ந்திருப் பான். அந்த தாய் ஒரு அசடு. அது மட்டுமில்லை, மிதவும் பொறாமைக்காரி. ராஜிய பரிபாலனம் மிதவும் தப்பும் தவறுமாய் மாறிக் கொண்டிருந்தது. அதனால் நாட்டில் அங்கங்கே எதிர்ப்புகள் தொடங்கிவிட்டன. அவர்கள் கையில் தாயும் மகனும் மரணமடைந்து விட்டார்கள்.

தந்தையின் உத்தரவு பிரகாரம் ரஜியா சிம்மாசனம் ஏறினாள். ரஜியா குறுகிய காலத்திற்குள்ளாகவே தந்தை யின் நம்பிக்கையை குசுவாக்கி மிக சாமர்த்தியமாய் ராஜிய பரிபாலனத்தை நடத்தி வந்தாள். ரஜியா ராஜிய பரிபாலன விஷயத்தில் தான் ஒரு பெண் என்ற விஷயத் தையே மறந்து போய், ஆணைப் போலவே தைரியம், சாகஸம் முதலியவற்றோடு இருந்து வந்தாள்! நாட்டில்

எங்கேயாவது ஏதாவது கலகம் நேர்ந்தால் தானாகவே அங்கே போவாள். ஆணைப் போல உடை அணிந்து, யார் என்ன விமரிசனம் செய்தாலும் பொருட்படுத்தாமல் தான் நினைத்த விதத்தில் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

ரஜியா எவ்வளவு நன்றாய் நாட்டை ஆண்டு வந்தாலும் அவள் ஒரு பெண் என்றும், பெண் ஒருத்தியின் ஆளுகையில் தாம் இருக்க முடியாது என்றும் அது அவமானம் என்றும் லாகூர், ஹம்சி, மூல்டான், பதேஹ் பிரபுக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்த அதிருப்தியைத் தெரிவித்து மூல்டான், ஹம்சி, லாகூர் அதிபதிகள் எதிர்க்கத் தொடங்கினார்கள் ஆனால் ரஜியா தன் சாதுரியத்தால் அவர்களைத் தன் வசப்படுத்திக் கொண்டாள்.

ரஜியாவின் சேவகர்களுள் ஜமாலுதீன் யாகூத் என்ற அடிமை ஒருத்தன் இருந்தான். அவனுக்கு ரஜியாவைக் கண்டால் மிகவும் பிடித்திருந்தது. ரஜியாவும் அவன் மீது மிக அன்பைக் காட்டி வந்தாள். அவன் எப்பொழுதும் ரஜியா குதிரை ஏறும்போது தானே கைகளால் பிடித்து அவளைத் தூக்கி குதிரை மேல் உட்கார வைப்பான். ரஜியா ஒரு அடிமைக்கு இவ்வளவு உரிமை தந்தது எல்லோருக்கும் வெறுப்பாய் இருந்தது. சிற்றரசர்களுக்கு யாகூதைப் பார்த்தாலே வயிற்றெரிச்சல் ஏற்படத் தொடங்கிற்று. அல்விருவரையும் பற்றி பலவிதமாய் வதந்திகளைப் பரப்பி குசுகுசுத்துக் கொள்வார்கள். ரஜியாவுக்கெதிரே மட்டும் யாரும் வாயைத் திறந்து எதுவும் பேசிவிட மாட்டார்கள். அதற்குள் லாகூர் கவர்னர் எதிர்த்து நின்றான். ரஜியா அதை வெற்றி கரமாய் அடக்கிவிட்டுத் தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டாள். யாகூத் அவளுக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாய் இருந்து வந்தான். எல்லோருக்கும் இது மேலும் கண்ணை உறுத்திற்று.

பிறகு கொஞ்ச நாட்களில், பதந்தி ராஜாவான மௌலிக் இக்தியாருத்தீன் எதிர்த்து நின்று அவனை ராணியாய் அங்கீகரிக்க முடியாது என்று மறுத்தான்.

ரஜியா யாகூத் உதவியோடு அவன் மீது படையெடுத்தாள். ஆனால் வழியிலேயே மௌலிக்கின் ஆட்களான சிப்பாய்கள் சிலர் யாகூதைக் கொன்று விட்டு ரஜியாவைச் சிறைப்படுத்தினார்கள். ரஜியாவைக் கைதியாய் பிடித்துக் கொண்டு போய் மௌலிக்கிடம் ஒப்படைத்தார்கள்.

இதற்குள் ரஜியாவின் அண்ணனான பஹ்ராம் டில்லிக்கு ராஜாவாய் பிரகடனம் பண்ணப்பட்டான்.

ரஜியா மௌலிக்கிடம் கைதியாய் இருந்து கொண்டிருந்தாள். அவளுக்கு சுதந்திரம் வேண்டுமென்றால் ஒரே ஒரு வழிதான் இருந்தது. அது மௌலிக்கை மணந்து கொண்டு பஹ்ராம் மீது படையெடுத்துத் திரும்பவும் தன் ராஜ்யத்தைத் தான் ஜெயித்துக் கொள்வதுதான்!

ரஜியா மௌலிக்கை மணந்து கொண்டாள். பிறகு தம்பதிகள் இருவரும் சைனியத்தோடு சேர்ந்து டில்லிக்குப் புறப்பட்டார்கள். ஆனால் பாதி வழியிலேயே சேனைகள் அவர்களை விட்டுவிட்டு ஓடிப் போய் விட்டார்கள்.

ரஜியா 1240-ம் வருடம் அக்டோபர் 13-ம் தே அண்ணனான பஹ்ராமின் கையில் தோற்றுப் போனா

அவர்கள் மறுநாளே ரஜியாவையும் அவள் கணவ யும் கொன்று விட்டார்கள்.

இந்த விதமாய் மூன்றரை வருஷ காலத்திற்குள்ளே ரஜியா சுல்தானாவின் ஆட்சி முடிவடைந்து விட்டது.

அவள் ஆண்டது மிகச் சொற்ப காலமேயானா அதற்குச் சிறப்பு உண்டு. ஒரு பெண், எல்லோரை எதிர்த்து நின்று, ராஜ்ய நிர்வாகத்தைக் கைப்பிடி ஜனங்கள் பாராட்டும்படியாய் ஆள வேண்டுமானால் எளிதான காரியமில்லை. அப்படிப்பட்ட தைரிய சா

கனைக் கொண்ட பெண்களுள் ரஜியா சுல்தானா ஒருத்தி"— மிதிலா சொல்லி முடித்ததும் டங்கென்று மணியடித்தது.

"நேரமாகி விட்டது" என்று எழுந்திருந்தாள் மிதிலா.

போக முயன்றவள் ஒரு நிமிஷம் நின்று, மேஜை மேல் இருந்த ரோஜாப்பூவைக் கையிலெடுத்துக் கொண்டாள். கூடையிலிருந்த ஸ்லேட்டை எடுத்து அதில் பூவைக் குத்தி நூற்தலில் ஒரு பக்கமாய் வைத்துக் கொண்டு போனாள்.

ராஜேஷ் மந்திரத்தால் மயங்கிப் போனவனைப் போல அவளையே பார்த்தபடி இன்னும் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வாசு வந்து ராஜேஷின் கண்களுக்கு முன்னால் கையை நீட்டினான்.

"ஏய்! எந்த லோகத்தில் இருக்கிறாய்?"

ராஜேஷ் திடுக்கிட்டுப் பார்த்தான். வகுப்பில் எல்லோரும் போய் விட்டிருந்தார்கள்.

ராஜேஷ் எழுந்திருந்து— "பாவம் ரஜியா சுல்தானா? ராகூதைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, அந்த ராஜியத்தை விட்டுவிட்டு எங்கேயாவது போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும்" என்றான்.

வாசு வெறுப்போடு பார்த்தான்— "இதப்பாரு! நான் ஸ்கூலுக்கே வரமாட்டேன்னபோது— என்னை இழுத்துக் கொண்டு வந்தாய். அந்த சரித்திரக் கதைகளைப் பற்றியே பேசிப் பேசி என்னை இன்னும் போரடிக்காதே! அந்த மிதிலா லெக்சரர் இந்த ஊரை விட்டு எப்பப் போய் தொலைவானோ?" என்றான்.

ராஜேஷ் சட்டென்று நின்று வாசுவைக் கோபமாய் பார்த்து "வாசு" என்றான்.

"ஆமாண்டா! அவள் இங்கே இருக்கிற வரைக்கும் நீ க்ளாஸ்டரி வகுப்புக்கு வரச் சொல்லி உயிரை எடுத்துட்

டிருப்பாய். ஏதோ பரீட்சை வந்தால் புத்தகங்களைப் பார்த்து காப்பியடிச்சுப் பாஸாயிடலாமே தவிர, இனிமும் காலேஜுக்கு வான்னால் எப்படி? சரி போகட்டும், வந்தால் ஏதோ பின் வரிசையில் எங்கேயோ உட்கார்ந்துட்டுப் போகலாம்னு உண்டா? அப்படிச் செய்தால் குறைந்த பட்சம் தூங்கலாலது தூங்கலாம். ஆனால் அவருக் கெதிரே உட்கார்ந்திருக்கணும் என்கிறாய். இனி அதிக நாள் என்னால் வரமுடியாதுடா. அந்த சரித்திரப் பாடத் தையும், யுத்தங்களையும் பற்றிக் கேட்டு கேட்டு எனக்கு உயிரே போகுது. ராத்திரி வேளைகளில் கனவில் குதிரை களும், சேனை வீரர்களுந்தான் வராங்க. அந்தப் பெரிய மனுஷிக்கு இந்த வருஷங்களின் கணக்கெல்லாம் எப்படித் தான் ஞாபகத்தில் இருக்கோப்பா!"

"வாசு" சுத்தினான் ராஜேஷ்.

"என்னடா?"

"மிதிலா லெக்சரரைப் பற்றி நீ ஒன்றும் சொல்லாதே ஆமாம்" என்று ஏதோ தினைவிற்கு வந்தவனாய் விருட்டென்று திரும்பி வகுப்பறையை நோக்கி ஓடினான்!

"ராஜேஷ்! என்ன? என்னவாச்சு?"— வாசு, ரவிகள், சேஷு கூட கலங்கிப் போய் பின்தொடர்ந்து ஓடத் தொடங்கினார்கள்.

ராஜேஷ் மேஜை மேலும் கீழேயும் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

"என்னடா?" கேட்டான் சேஷு.

"ரோஜாப்பூ! நான் இங்கே வைத்தேனே, அது என்ன வாச்சு?"— கண்களால் சுற்றுமுற்றும் துழாவிக்கொண்டே கேட்டான்.

"அதுவா? அதைத்தான் மேடம் எடுத்துக்கிட்டாங்க டா!" என்றான் வாசு.

"என்ன? மேடம் எடுத்துக்கிட்டாங்களா?" சொல்ல முடியாத ஆச்சரியத்தோடு ராஜேஷ் வாசுவை நோக்கி

திரும்பினான் அளவுக்கு மீறிய சந்தோஷத்துடன் அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டே "நிஜமாகவா?" என்று கேட்டான்.

"ஆமாம். எடுத்துக்கொண்டது மட்டுமில்லை, காதோரத்தில் கூந்தலில் வெச்சுக்கிட்டாங்ககூட. நீ எதிரே இருந்துமா பார்க்கலில்லை?" என்றான் ரங்கன்.

"ஊஹூம். நான் பார்க்கவில்லை" என்றான் ராஜேஷ்.

"அவன் எங்கே பார்த்திருக்க முடியும்? அவன்தான் ரஜியா சுல்தானாவைப் பற்றி கனவு கண்டு கொண்டிருந்தானே!" என்றான் வாசு தமாஷாய்.

"சட்! போங்கடா" என்றான் ராஜேஷ்.

எல்லோரும் கேண்டீனை நோக்கி நடந்தார்கள்.

7

ஸ்டாஃப் ரூமிற்குள் வந்ததுமே ரங்கநாயகி எதிர்ப்பட்டாள் மிதிலாவின் தலையிலிருந்த வெள்ளை ரோஜாவைப் பார்த்துவிட்டு— "ஹாய்! ரோஜாப்பூ ஏது?" என்று கேட்டாள்.

"ஹிஸ்டரி கிளாஸுக்குப் போனபோது மேஜை மேல் வைத்திருந்தது."

"யாரடா அது காதலியை ஆராதிக்கிறவன்?"— குறுகுறுவிக் கேட்டாள்.

"என்னவோ! எனக்கென்ன தெரியும்?" மிதிலா முணுமுத்தாள்.

"உன் பாராட்டைப் பெறணும்னு விரும்புகிறவங்க உன் வகுப்பில் நிறைய பேர் இருக்காங்க போலிருக்கே? அதோ பார்" — என்று மேஜை மேல் காட்டினாள்.

அங்கே அரைகுறையாய் பழுத்த கொய்யாப்பழங்கள் இருந்தன. "ப்ளூன் சொன்னான். யாரோ பெயரைச் சொல்லலையாம். மிதிலா டீச்சரிடம் தரச் சொல்லி தந்தானாம்."

"யாராயிருக்கும்!" என்றாள் மிதிலா போய் கொய்யாப் பழங்களை எடுத்துக் கொண்டே. மிதிலாவுக்கு இவ்வாறு அரைகுறையாய் பழுத்த கொய்யாப்பழங்கள் என்றால் மிகவும் பிடிக்கும்.

ரங்கநாயகி கூட ஒரு பழத்தை எடுத்துக் கொண்டாள்.

அதற்குள் அங்கே ரமா டீச்சர் வந்தாள் அவள் நடுத்தர வயதைத் தாண்டியவள். மாணவர்களைப் பற்றிய பேச்சு வந்தாலே— "இந்தப் பசங்களோட என்னால் மாரடிக்க முடியலைப்பா! இவங்க விஷயம் எனக்குத்தானே தெரியும்!"— என்பாள். அவள் குள்ளமாய் மிகப் பருமனாய் இருப்பாள். அதோடுகூட கொண்டை வேறு போட்டுக் கொண்டிருப்பாள். அதனால் அவள் இன்னும் பருமனாய் தோன்றினாள். அவளுக்கு நிறைய குழந்தைகள். வீட்டில் எப்பொழுதும் சொந்தக்காரர்கள் இருப்பார்கள். இது போதாதென்று பூனைகள் வேறு அதிகம். ஒரு சமயம் காலேஜுக்கு இஸ்திரி போடாத தோய்த்த நூல் புடவை களைக் கூட கட்டிக்கொண்டு வந்து விடுவாள். முகத்தில் மஞ்சள் பூச்சு ஒரு இஞ்சுக்கு இருக்கும். அவள் செருப்பு எப்பொழுதும் தேய்ந்து போயிருக்கும் அவள் கணவன் தாலுகா ஆபீசில் வேலை பண்ணிக் கொண்டிருந்தான். இருவர் சம்பளமும் தாராளமாகவே இருந்தன. ஆனால் குழந்தைகள் அதிகம் சொந்தக்காரர்களின் வரவு அதிகம். அதனால் அவளுக்கு எப்பொழுதும் ஓய்வே கிடைக்காது. பணமும் பற்றாது. அவளைப் பார்த்ததுமே ரங்கநாயகி—

"ரமா! கொய்யாக்காய் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டான்.

"கொய்யாக்காயா?" அவள் ஆசையாய் பார்த்தான். அதற்குள் சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு— "ஊஹூம். நான் சாப்பிட மாட்டேன். டாக்டர் டயட் கன்ட்ரோல் பண்ணச் சொல்லியிருக்கார். இந்த உடம்பு நான் சொன்றபடி கேட்டதை விட்டு ரொம்ப நாளா யிடுத்து. டாக்டர் சொல்றபடியாவது கேட்டு ஆக வேண்டாமா? ஆனாலும் நான் சின்ன வயதில் கொய்யாக் காய்கள் எவ்வளவோ சாப்பிட்டிருக்கேன். நான் கொய்யா மரத்தில் ஏறிக் கிளைக் கிளையாய் தாவி காய்களைப் பறித்துத் தின்பேன். இப்பத்தான் இப்படி ஆயிட்டேனே தவிர..." அவள் எதைப் பற்றிய பேச்சு வந்தாலும் தன் சிறு வயது விஷயத்தைச் சொல்லத் தொடங்கி விடுவாள்.

"எனக்கு இனி கிளாஸ் இல்லை. நான் வீட்டுக்குப் போறேன் மிதிலா" என்றாள் ரங்கநாயகி.

ரமா— "போம்மா! போ! உனக்கென்ன? வீட்டுக்குப் போய் ஹாய்யாய் காபி குடித்துவிட்டு, கட்டிலில் படுத்துக் கிட்டு புத்தகங்களைப் படிச்சிட்டிருப்பாய். உன்னைப் போன்றவங்க எப்ப வீட்டுக்குப் போகலாம்னு பார்த்துட் டிருப்பாங்க. என்னைப் போன்றவங்க வீட்டுக்குப் போனால் அவ்வளவுதான்! போதும் போதும்னு ஆயிடும். போனதுமே பசங்கள், சொந்தக்காரங்க, மாமனார், ஒரே சந்தடிதான், பெரிய சந்தைக்கடை!" என்றாள்.

"என்ன பண்றது ரமா? கல்யாணம் பண்ணிக் கொண்டால் அப்புறம் கணவன், குடும்பம் பிரச்னைகள் என்று தானே இருக்கும்? நீங்களேதான் சொல்லுவீங்களே, புத்திக்கெட்டுப் போய் நிறைய பசங்களைப் பெற்று விட்டேன் என்று?" என்றாள் ரங்கநாயகி.

"நாங்கள்ளாம் அந்த காலத்து மனுஷங்கம்மா. இந்த காலத்துப் பெண்கள்தான் எவ்வளவு புத்திசாலியாய்

இருக்காங்க! அவங்களுக்குக் குடும்பம் நடத்துவது என்றால் ராஜியம் ஆளுவது போல! குழந்தைங்க பிறக்கணும் என்றால் அவங்க இஷ்டம்! புடவைகள் வேணும் என்றால் அவங்க இஷ்டம்! சொந்தக்காரங்க எல்லை தலையெழுத்து, கணவனுக்கே பயப்பட மாட்டார் களே! என்னவோ, புத்தியில்லாத அசடுகள் நாங்கள்"— அவள் எப்பொழுதும் கொஞ்சம் சந்தர்ப்பம் கிடைத்து விட்டாலும் போதும், மனதில் இருக்கும் குறைகளை யெல்லாம் வெளியே கக்கி விடுவாள். ரங்கநாயகிக்கு அலை களையெல்லாம் கேட்க எரிச்சலாயிருக்கும். மிதிலா அவ்வாறு இல்லை. இரக்கத்தோடு கேட்பாள். அதனால் தான் அவளுக்கு மிதிலாவைக் கண்டால் பிடிக்கும்.

ரமாகூட மிதிலாவை ரோஜாப்பூவைப் பற்றி விசாரித் தாள். அவளுக்குப் பூக்கள் என்றால் பைத்தியம். நிலமும் ஏதாவது ஒரு பூவாவது தலையில் இருந்து நீரவேண்டும்.

"ஸ்டுடென்ட்ஸ் யாரோ தந்தாங்க" என்றாள் மிதிலா.

"ஆஹா!" அவள் தலையாட்டினாள். ஸ்டுடென்ட்ஸ் தந்தார்கள் என்றதுமே அவள் கண்களில் பொறாமை நிழலாடிற்று.

ஸ்டுடென்ட்ஸ் அவளை நடத்தும் விதமே வேறு விதமாய் இருக்கும். அவள் வகுப்பிற்குப் போகும்பொழுது மேஜை மேல் பொட்டலத்தில் பல்வியையோ தவளையையோ வைத்துவிட்டு, அவள் ஆர்வத்துடன் அதைப் பிரித்துப் பார்த்துவிட்டு வீலென்று அலறுவதை பார்த்து சந்தோஷப்படுவார்கள். அவள் லேசுமாய் நடக்க மாட்டாள் என்று தெரிந்து அவள் எம்பி குதிக்கும் படியாய் ஏதோ ஒன்று மேஜையடியிலிருந்து ஊர்ந்து வரும்படி போட்டு விடுவார்கள்.

அவள் பருமனாய் இருந்ததால் அவள் வகுப்பிற்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளும்பொழுது

பின் பெஞ்சியிலிருக்கும் மரத்துண்டை எடுத்து படபட வென்று சப்தம் பண்ணி, நாற்காலிதான் உடைந்து விட்டதோ என்று அவள் காபரா அடைந்து பார்க்கும் படியாய் பண்ணிவிட்டு கொல்லென்று சிரிப்பார்கள்.

அவள் தேறிக்கொண்டு "நான் நிஜமாய் உடைந்து விட்டதென்று பயந்து போனதாய் நினைச்சிங்களா? உங்களைச் சிரிக்க வைக்கணும்னுதான் அப்படி நடித்தேன்"— என்று விளையாட்டாய் எடுத்துக் கொள்வாள். தன் பருமனை அவர்கள் கேலி பண்ணாம விருக்க வேண்டும் என்று தன்மீது தானே ஜோக் எடுத்து சொல்லி சிரிக்க வைத்துக் கொண்டிருப்பாள். "எல்லோரும் நான் நன்றாய் பாடம் சொல்லித் தருவதாய் புகழ் றார்கள். அந்தப் புகழ்ச்சியைக் கேட்டு சந்தோஷ மடைந்து, லயிறு புடைக்க தின்று இப்படி பருமனாயி விட்டேன்" என்பாள்.

ரங்கநாயகி போன பிறகு மிதிலா ஸ்டாப் ரூம் ஜன்னலுக்கருகில் வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தாள். கரிய மேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. மழை வரும் போலிருந்தது.

அவள் நினைத்தாற் போலவே மாலையில் கடைசி வகுப்பு முடிவடைந்து பெல் அடித்ததுமே திடீரென்று மழை கும்பலர்ஷமாய் பெய்யத் தொடங்கிவிட்டது. மாவும் போய்விட்டாள். சரஸ்வதி வரவில்லை ரங்க நாயகியும் போய்விட்டாள். சாரதா லீவில் இருந்தாள். மிதிலா மட்டுமே எஞ்சி நின்றாள். ஸ்டாஃப் ரூமிலேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்து புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்து விட்டு, மழை விட்டு விட்டதா என்று எழுந்து ஜன்னல் வழியாய் பார்த்தாள். மழை நிற்கும் போல் தோன்றவில்லை. இன்னும் வலுத்துக் கொண் டிருந்தது. இருட்டப் போகிறது வேறு!

மிதிலா அந்த மழையிலேயே புறப்பட்டு விட்டாள். ஸ்டூடென்ட்ஸ்களும், லெக்சரர்களும் பஸ் ஸ்டாண்டிற்கு

அருகிலும், மரத்தடியிலும், கடைகளிலும் அங்கங்கே கும்பலாய் மழை நிற்பதற்காக காத்துக்கொண்டு நின்றிருந் தார்கள்.

மிதிலா காலேஜ் காம்பவுண்டுச் சுவரையொட்டி நடந்து கொண்டிருந்தாள். காம்பவுண்டு சுவரின் இரும்பு கம்பிகளின் மேல் படர்ந்திருந்த பூங்கொடிகள் சாலையிலிருந்த மரங்களோடு உராய்ந்து கொண்டிருந்தன. மிதிலா அவற்றின் கீழே நடந்து போய் கொண்டிருந்தாள்.

அங்கே காலேஜ் கேட்டிற்கு வெளியே ராஜேஷின் கார் நின்று போய் விட்டிருந்தது. வாசு அதனடியில் நுழைந்து ரிப்பேர் பண்ணிக் கொண்டிருந்தான். காரின் முன் சீட்டில் ராஜேஷிற்குப் பக்கத்தில் மஞ்சுவும், பின் சீட்டில் சீனுவும், ரங்கனும் உட்கார்ந்து கொண்டிருந் தார்கள்.

காருக்குள் டேப்பை போட்டுவிட்டு பாட்டை கேட்டுக் கொண்டே தாளம் போட்டுக் கொண்டிருந்த ராஜேஷிற்கு தொலைவில் காம்பவுண்டு சுவர் பக்கமாய் நடந்து வந்து கொண்டிருந்த மிதிலா தென்பட்டாள். மிதிலா மழையில் நனைந்தபடி போய்க் கொண்டிருந்தாள். தாளம் போட்டு கொண்டிருந்த அவன் கைகள் சட்டென்று நின்று விட்டன.

மிதிலா சாலையில் இருந்த குட்டைக்குள் காலை வைத்து விட்டு, தடுக்கி விழப் போனவள் தன்னை சமாளித்துக் கொண்டு தொடர்ந்து போய் கொண்டிருந் தாள் நனைந்து கொண்டே போய்க் கொண்டிருந்த மிதிலாவைப் பார்த்ததுமே அவன் இதயத்தையே கசக்கிப் பிழிந்தாற் போலிருந்தது. ராஜேஷ் சரேலென்று காரின் கதவை திறந்து கொண்டு மழையில் இறங்கினான்.

"ராஜேஷ்! எதுக்கு இறங்குகிறாய்? நனைந்து போய் விடுவாய்" என்றாள் மஞ்சு பதறி போய். பின்சீட்டி லிருந்த சீனுவும் ரங்கனும்கூட ஏன் இறங்கினான் என்று புரியாமல் விழி பிதுங்க பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் ராஜேஷின் கார் பக்கமாய் ஒரு வயதானவர் குடையைப் பிடித்துக் கொண்டு, கையில் காய்கறி பையோடு நடந்து போய்க் கொண்டிருந்தார்.

ராஜேஷ் அந்தக் குடையைப் பார்த்தான். தொலைவில் மழையில் போய்க் கொண்டிருந்த மிதிலாவையும் பார்த்தான். அவ்வளவுதான்! ஒரே பாய்ச்சலாய் அக்கிழவரின் கையிலிருந்த குடையை பிடுங்கி கொண்டு, அதை எடுத்துக் கொண்டு ஓடினான். கிழவர் ஒரு வினாடி இந்த அக்கிரமத்தை பொறுக்க மாட்டாதவராய் வாயடைத்துப் போய் விட்டார். உடனே— "ஐயோ! ஐயோ! என் குடை! என் குடை" என்று கத்தினார்.

ராஜேஷ் திரும்பி— "சார்! பயப்படாதீங்க. உங்கள் குடையை நான் ஒன்றும் திருடிக் கொண்டு போய் விடவில்லை. கொஞ்ச நேரம் கடனாய் எடுத்துக்கறேன். நான் வரும் வரை என் காரில் உட்கார்ந்திருங்க"— என்று சொல்லிவிட்டு ஓடினான்.

கிழவர் வாய் வார்த்தை புரள முடியாமல் சிலையாய் நின்று விட்டார்.

ராஜேஷ் சாலைக்குக் குறுக்காய் ஓடி, விர்ரென்று வந்த காரில் மோதிக் கொள்ள போய் துள்ளி விழத் தெரிந்து நப்பித்துக் கொண்டு, சாலையின் மறு பக்கத்தில் தலை குனிந்தபடி நடந்து போய் கொண்டிருந்த மிதிலாவிடம் வந்து— "மேடம்! நனைந்து போறீங்களே" என்று குடையை நீட்டினான்.

மிதிலா திரும்பி பார்த்தாள். ராஜேஷ் சிரித்தான். அந்த சிரிப்பில் மிக சந்தோஷம் தென்பட்டது.

"வேண்டாம் ராஜேஷ்! பரவாயில்லை" என்றாள் மிதிலா.

"ஊஹூம்! குடை இல்லாவிட்டால் நீங்கள் நனைந்து போய் விடுவீங்க. நனைந்தால் ஜலதோஷம் வந்துவிடும். ஜுரம் வந்துவிடும்."

"வந்தால் என்னவாயிடும்? மருந்து சாப்பிட்டுக் கறேன்."

"ஊஹூம்! உங்களுக்கு ஜுரம் வந்தால் எங்களுக்குப் பாடம் யார் சொல்லித் தருவாங்க?"

"பாடத்தின் மேல் அவ்வளவு சிரத்தையா உனக்கு?" சிரித்துக் கொண்டே கேட்டாள்.

இருவரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

வீதியில் பஸ் ஸ்டாண்டிற்கருகிலும், கடைகளுக்கருகிலும் நின்று கொண்டிருந்த ஜனங்கள் எல்லோரும் இவர்களையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

ரீனு பெரியவரை பார்த்து "வாங்க சார்! காரில் வந்து உட்கார்ந்துக்குங்க. அவன் வரும் வரை உங்களுக்கு வேறு வழியில்லை" என்றான்.

"பெரிய சாகஸ இளைஞனாய் இருக்கிறானே!" அவர் முணுமுணுத்தாலும், காரில் உட்கார்ந்து கொள்ளும்படி சொல்லைதைக் கேட்டு அவர் முகம் மலர்ந்தது.

மிதிலாவும் ராஜேஷும் நடந்து கொண்டிருந்தார்கள்.

"உன் கார் என்னவாச்சு?" என்று கேட்டாள் மிதிலா.

"கெட்டுப் போயிடுத்து. டப்பா கார். சமயத்துக்குக் காலை வாரி விட்டுவிடும்."

"சரி, நான் போறேன்" என்றாள் மிதிலா திரும்பவும்.

"ஊஹூம்! நான் உங்களை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுப் போறேன்"— என்றான் பிடிவாதமாய்.

அவன் மிதிலாவுக்கு குடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, தான் நனைந்து கொண்டிருந்தான்.

"நீயும் குடைக்குள் வா" என்றாள் மிதிலா.

"பரவாயில்லைங்க."

"அப்படிச் சொல்லாதே" மிதிலா அவன் கையிலிருந்
குடையைத் தான் வாங்கிக்கொள்ள போனாள். ராஜே
தர்வில்லை.

அவள் உத்தரவு பிரகாரம் தானும் குடைக்குள் வந்
நடக்கத் தொடங்கினான்.

"நீங்கள் சொன்ன ரஜியா சுல்தானாவின் கதை எனக்
ரொம்பப் பிடிச்சு விட்டது மேடம்" என்றான்.

"அப்படியா?"

"பாவம் அவள்! யாகூதைக் கல்யாணம் பண்ணி
கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!
என்றான்.

மிதிலா சிரித்தான். "அப்ப நாம்ப ரஜியா சுல்தான
வின் கதையை சரித்திரத்தில் படிக்க முடிந்திருக்காது."

"அதனால் என்ன நஷ்டம் வந்திருக்கப் போகுது?"

படிக்காவிட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்
நேர்ந்துவிட்ட அநியாயத்தை மட்டும் பொறுத்து
கொள்ள முடியவில்லை என்பது போலிருந்தது அவ
குரல். இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு நிமிஷம் நின்று— 'மேடம்' என்றான்.

"உம்" என்றான் மிதிலா.

"மொதல்ல அந்த ரஜியா சுல்தானாவுக்கு யாகூ
பரிச்சியமாகாமலிருந்திருந்தால் அவளுக்கு இந்தக் கஷ்ட
எதுவுமே வந்திருக்காது இல்லையா? நிம்மதியா
ராஜியத்தை ஆண்டு கொண்டு வெகு நாட்கள் வாழ்
திருப்பாள்"— அவன் குரல் மிகவும் வருத்தத்தில் தோய்
திருந்தது. தொலைவில் மழையில் நனைந்து பாரமா
இருப்பது போல தென்பட்டுக் கொண்டிருந்த மரங்களை
பார்த்துக் கொண்டிருந்த மிதிலா, அதை விட்டுவிட்
ராஜேஷ் பக்கமாய் திரும்பினாள். அவன் கண்களில் தெ

பட்ட வருத்தத்தைப் பார்த்த மிதிலாவின் மனம்
தெகிழ்ந்தது. ராஜேஷ் பாடம் நடந்து இவ்வளவு நேர
மாகிய பிறகு கூட அதைப் பற்றியே யோசித்துக் கொண்
டிருந்தான் என்றால் அவன் மனதில் ரஜியா— யாகூத்தின்
கதை எவ்வளவு தூரம் பதிந்து போய் இருக்க வேண்டும்
என்று தோன்றிற்று. மிதிலாவுக்கு அந்த நேரத்தில்
ஆரோகியத்தோடும், சிவந்த உதடுகளோடும், அகலமான
கண்களோடும், அப்பொழுதுதான் நன்றாய் வளரத்
தொடங்கியிருந்த மீசையோடும், மழைக்கு நனைந்து
நெற்றியில் வந்து தவழ்ந்து கொண்டிருந்த கேசங்களோடும்
சிறு பிள்ளைத் தனத்தோடு பால்மணம் மாறாமல் தென்
பட்ட ராஜேஷைப் பார்த்ததும் தன் சிறு வயது
பிராயங்கள் நினைவிற்கு வந்தன. அந்த வயதே இப்படிப்
பட்டது போலும்! ஏதாவது வேதனையான கதையைக்
கேட்டு விட்டால் மனம் தெகிழ்ந்து விடும். சிறு வயதில்
அவள் 'தேவதாஸ்' நாவலைப் படித்துவிட்டுத் தலையணை
யில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுத சம்பவம் நினை
விற்கு வந்தது. பொறுப்புக்கள் இல்லாத— கவலைகளோ
ஏமாற்றங்களோ இல்லாத இந்த வயதில் மனம் ஒவ்வொரு
சின்ன விஷயத்திற்கும் உருகிப் போவது சகஜந்தான்.

"சொல்லுங்கள் மேடம். நான் சொன்னதை நீங்கள்
ஒப்புக்கிறீங்களோனோ?" என்றான் ராஜேஷ். அவனுக்கு
மிதிலா தன் அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டால் நன்றா
யிருக்கும் என்று தோன்றிற்று.

"ராஜேஷ்! நம்மால் என்ன சொல்ல முடியும்? சில
சமயம் வாழ்க்கையில் சிலர் நுழைந்த விசேஷத்தால்
அவ்வாறு இருக்கலாமோ? என்னவோ? சிலபேர் வரவால்
நல்லது நடக்கிறது. சிலர் வரவால் வேதனை ஏற்படு
கிறது."

"ஆமாம் மேடம்" என்றான் அவன்.

அதற்குள் மிதிலாவின் வீடு வந்தே விட்டது. ரங்
நாயகி வராந்தாவில் நின்றபடி பார்த்துக் கொண்டிரு

தாள். வீடு நெருங்கிய பிறகு மழை கொஞ்சம் குறைந்து விட்டது. கேட்டை திறந்து கொண்டு உள்ளே வந்த ராஜேஷ் வராந்தா படிக்கட்டிற்கருகில் நின்று— ''நான் வரேன் மேடம்'' என்றான்.

''உள்ளே வா. காபி குடித்துவிட்டு போகலாம்'' என்றாள் மிதிலா.

''ஊஹூம். வேண்டாம். என் ஃபிரெண்ட்ஸ் எதிர் பார்த்துட்டிருப்பாங்க'' என்றான் சங்கோஜத்தோடு.

''சரி! இன்னொரு தடவை எப்பொழுதாவது வந்து கண்டிப்பாய் காபி குடித்துவிட்டுப் போகணும்'' என்றாள்.

சரி என்று தலையாட்டினான். அந்த வரவேற்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

''சரி, தாங்க்யூ!'' என்றாள் மிதிலா.

வராந்தாவின் மேல்படி மேல் மிதிலா நின்று கொண்டிருந்தாள். கீழே குடையை பிடித்துக்கொண்டு அதன் பிடியை திருப்பிக் கொண்டே நின்றிருந்தான் ராஜேஷ். அவன் ஒரு வினாடி மிதிலாவின் முகத்தை— காதோரத்தில் வாடிப்போய் தொங்கிக்கொண்டிருந்த வெள்ளை ரோஜாப் பூவைக் கூர்ந்து பார்த்தான். அவன் முகத்திலிருந்த ரத்தம் பொங்கிற்று.

''நான்தான் உங்களுக்கு தாங்க்ஸ் சொல்லணும்''

''நீயா? எதுக்கு?''

''நீங்கள்... நீங்கள்...'' காதோரத்திலிருந்த ரோஜாப் பூவை கையால் சுட்டிக்காட்டி— ''இதை வெச்சுகிட்டதுக்கு'' அந்த வார்த்தைகளை மளமளவென்று யாரோ துரத்திக்கொண்டு வருவதுபோல வேகமாய் சொல்லிவிட்டு திருட்டென்று திரும்பி ஓடிப் போய் விட்டான்.

மிதிலா ஒரு வினாடி அப்படியே நின்றுவிட்டாள். தொலைவில் தூறலுக்கிடையே ராஜேஷ் வேகமாய் ஓடிக்

கொண்டிருந்தான். அவன் பிடித்துக் கொண்டிருந்த அந்த குடை ஒரு கரிய வண்டு பறந்து போய் கொண்டிருந்தாற் போல தோன்றிற்று. மிதிலா ஒருமுறை தன்னையறியாமல் கையால் ரோஜாப்பூவை தடவி பார்த்துக் கொண்டாள். திரும்பவும் தொலைவில் ஓடிப் போய்க் கொண்டிருந்த ராஜேஷைப் பார்த்தாள். அவள் உதட்டில் சந்தோஷத் தோடு கூடிய மந்தகாசம் தெளிந்தது.

மழையில் நனைந்து ஈரமாகியிருந்த தார் ரோடும்— மழையால் பாரமாய் தாழ்ந்து கொண்டிருந்த பச்சைப் பசேரென்ற மரங்களும்— தொலைவில் மழையில் நனைந்து உடம்பை குறுக்கிக்கொண்டு மரத்தடியில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த ஆட்டுக் குட்டிகளும்— மிதிலாவுக்கு அந்தச் சமயத்தில் மிக மனோகரமான கண்களுக்குத் தெவிட்டாத காட்சியாய் தென்பட்டன. அதற்குள் பின்னாலிருந்து— ''பேஷ்! பெரிய பக்தனை சம்பாதித்துக் கொண்டு விட்டாயே'' என்ற ரங்கநாயகியின் குரல் கேட்டது.

மிதிலா திரும்பிப் பார்த்தாள்.

''இந்தப் பையன் உனக்கு சேவை பண்றதைப் பார்த்தால் ரொம்ப விநோதமாய் இருக்கே'' என்றாள் ரங்க நாயகி.

மிதிலா பதில் பேசவில்லை. உள்ளே வந்தாள். உடை மாற்றிக் கொண்டிருந்த மிதிலாவுக்கு அடுத்த அறையிலிருந்து ரங்கநாயகி சொல்லிக் கொண்டேயிருந்தது காதில் விழுந்தது. ''அவங்க பெரிய குரங்கு கும்பலுங்க. இந்த ஊரில் அவங்களைக் கண்டு பயப்படாதவங்களே கிடையாது. என்ன பண்ணினாலும் சரி, யாருமே எதுவும் சொல்ல மாட்டாங்க. ஏன்னால் அந்த கணபதிக்கு ஏகப் பட்ட செல்வாக்கு இருக்கு. தந்தையின் செல்வாக்கை பயன்படுத்திக் கொண்டுதான் இந்தப் பையன் அவ்வளவு ரகளைப் பண்ணிட்டிருக்கான். அவங்களுக்கு ஒரு எல்லை கில்லை எதுவும் கிடையாது. நல்ல புத்தி சொல்லித்

தரவங்களும் கிடையாது. நீ இந்த ஊருக்கு புதுசு ஜாக்கிரதை''— என்று எச்சரித்தாள்.

மிதிலா ஜடையை அவிழ்த்துக்கொண்டே வந்தாள் ''ரகளைப் பண்ற பசங்களும், ரௌடி மாணவர்களும் எனக்குப் பழக்கப்பட்டவங்கதான் ரங்கம். நான் இதற்கு முன்னால் வேலைப் பண்ணிட்டிருந்த அந்த ஊரில் பெரிய ரௌடின்னு பெயரெடுத்திருந்த ஒரு மாணவனையே டேக்கில் பண்ணியிருக்கேன்'' என்றாள். கூந்தலை அவிழ்த்துக் கொண்டிருந்தபொழுது ரோஜாப்பூ நழுவிக் கீழே விழுந்தது. மிதிலா குனிந்து அதைக் கையிலெடுத்துக் கொண்டு ஒரு வினாடி பார்த்தாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ தெரியாது— அதை எறிந்து விடாமல் மேஜை மேல் வைத்தாள். அதைப் பார்த்த பொழுது அப்பாவியாய் தோற்றமளித்த ராஜேஷின் முகமே நினைவிற்கு வந்து கொண்டிருந்தது! ராஜேஷின் கண்களில் தென்பட்ட அன்பு போன்ற அந்த உணர்ச்சி மிதிலாவுக்கு பரிச்சியமானதுதான்! எந்த லெக்சரரை யாவது பிடித்து விட்டால் மாணவர்கள் தம் மனதிற்குள் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். எந்த விதத்திலாவது அதை வெளிக்காட்டிக் கொள்ள வேண்டுமென்று தவிப்பார்கள். அது சகஜம். எந்த மாணவனாவது தன்னை மதிக்கிறான் அல்லது தன்மீது அன்பு பாராட்டுகிறான் என்று தெரிந்தால் அந்த லெக்சருக்கு சந்தோஷந்தால் ஏற்படும். மிதிலாவுக்குக்கூட இப்பொழுது அப்படிப் பட்ட சந்தோஷந்தான் ஏற்பட்டது.

8

''ராஜேஷ்! உண்மையைச் சொல்லு. காலேஜில் எல்லோரும் உன்னைப் பார்த்துச் சிரிக்கும்போது உனக்கு

வெட்கமாய் இல்லையா?'' மஞ்சு உலுக்கி எடுப்பது போல கேட்டாள்.

ராஜேஷ் நாற்காலியில் உட்கார்ந்து பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தான். வாசு ஜன்னலுக்கருகில் நின்றபடி வெளியே பார்த்துக்கொண்டே இச்சம்பாஷணை காதில் விழாதது போல நடித்தாலும் அவன் காதுகள் கவனமாய் இந்த வாக்குவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தன.

ரங்கன் தொலைவில் கினாகுகளில் சர்பத்தை கலந்து கொண்டிருந்தான். சீனு கைகளை கட்டிக்கொண்டு மேஜை மேல் சாய்ந்தபடி ராஜேஷை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்த மஞ்சுவையும், அவளுக்கு பதில் சொல்ல முடியாமல் சங்கடத்துடன் முகம் சிவக்க உட்கார்ந்து கொண்டிருந்த ராஜேஷையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தான். அது ராஜேஷின் அறை. அறைச் சுவர்களில் பலவிதமான போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. மேஜை மேல் டேப் ரிகார்டர் கிடந்தது. கேமிரா இருந்தது. நாற்காலிகளின் மீதும், ஜன்னல் கதவுகளின் மீதும் ராஜேஷின் விதவிதமான உயர்ந்த ஆடைகள் தாறுமாறாய் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு நிமிஷம் அந்த அறையைப் பார்த்தால் ராஜேஷின் மனதைப் போலவே ஒரே கசாமுசா என்று இருந்தாற் போல தோன்றிற்று.

மஞ்சுவையும் அவனையும் பார்த்தபோது வெகு நேரமாய் அவ்விருவருக்குமிடையே வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது புரிந்தது. நேற்று மிதிலாவை குன்னூரோடு கொண்டு போய் விட்டுவிட்டு அவன் திரும்பி வந்த போது, அவன் முகம் என்றுமில்லாத ஆனந்தத்துடன் மின்னிக் கொண்டிருந்ததைக் கண்டான் மஞ்சு. வந்ததும் ஜேபியிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டைடையும் கிழவரிடம் தந்துவிட்டு— ''தாங்க் பெரியவரே! உங்களுக்கு நன்றி'' என்றான். ஐம்பது ரூபா

தாளைப் பார்த்த அவர் ஆச்சரியமடைந்தவராய்— ''என்ன இது?'' என்றார்.

''உங்கள் குடைக்கு வாடகை! எவ்வளவு கொடுத்தாலும் போதாதுன்னே வையுங்கள்'' என்றான். அதுவரை காரில் உட்காரவைத்ததற்குச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த அவர் இந்த ஐம்பது ரூபாயையும் பார்த்துவிட்டு மேலும் குழப்பமடைந்தார். அவர் போகத் தொடங்கியபோது ராஜேஷ் பின்னாலிருந்து அவரைப் பார்த்து காற்றில் கையைத் தூக்கி முத்தமிட்டான்.

காரை ரிப்பேர் பண்ணி விட்டு வெளியே வந்து கையை துடைத்துக் கொண்டிருந்த வாசுவைப் பார்த்து— ''வாசு! கார்ட்டி லேணும்னு கேட்டாயோனோ? டபுள் பார்ட்டி. தந்து விடுகிறேன். என்னவானாலும் சரி கிராண்டாய்! யாம் ஹாப்பி! வெரி வெரி ஹாப்பி!''

''என்னடா? என்ன அவ்வளவு சந்தோஷம்?'' வாசுக்குத் தெரிந்தாலும் தெரியாதது போல குழப்பத்துடன் பார்த்தபடி கேட்டான்.

''மேடத்தைக் குடையோடு கொண்டு போய் விட்டுட்டு வந்தான் இல்லையா? அதுக்காக''— கண்ணைக் காட்டினான் ரங்கன்.

''பாவம்! ஒரே குடையில் போனீங்களோனே! ண்டா? தோள்பட்டதா?''

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ராஜேஷின் முகம் ண்டினால் ரத்தம் வரும் போல செக்கச்செவேரென்று றிப் போய் விட்டது. அதற்குள் அக்கண்களில் கோபம் — வெள்ளமாய் பொங்கி வந்தது.

''அடேய்! அவனை யாரென்று நினைச்சிட்டிருக் றாய்? மேடம்!'' வாசு கண்களை அகல விரித்துக் காண்டு, பெரிய ரகசியத்தை போதிக்கும் குருவைப் போல கத்தை வைத்துக் கொண்டே சொன்னான்.

மஞ்சு மட்டும் எதுவும் சொல்லவில்லை. ராஜேஷையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னொரு பெண் காரணமாய் ராஜேஷ் முகத்தில் சந்தோஷமும் பரவசமும் ஏற்பட்டதை மஞ்சுவால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. பொறாமையால் அவள் மனம் பற்றி யெரிந்து கொண்டிருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் ராஜேஷை அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அன்றிரவெல்லாம் யோசித்த மஞ்சு மறுநாள் வாசுவிடம் தன் வருத்தத்தை இன்னொரு விதமாய் எடுத்துச் சொன்னாள்.

''ராஜேஷ் மிதிலா லெக்சரர் மீது அளவுக்கு மீறி அன்பு காட்டுவதாய் காலேஜில் எல்லோரும் நினைச்சுட்டிருக்காங்க, இல்லையா?'' என்றாள்.

''ஆமாம். அப்படி நினைச்சுக்கிறதில் என்ன தப்பு இருக்கு? ராஜேஷ் தோரணை அப்படித்தானே இருக்கு?'' என்றான் வாசு.

''நாம்ப நெநேகிதர்களாய் இருந்துக்கிட்டும் பார்த்துட்டே சும்மாயிருந்து விடலாமா? ராஜேஷிடம் நயமாய் எடுத்துச் சொல்லணும்'' என்றாள்.

''நீதான் பண்ணணும் அந்த காரியத்தை'' என்றான் வாசு. வாசுவுக்கு மஞ்சுவைக் கண்டால் உள்ளூர மிகவும் இஷ்டம். ஆனால் மஞ்சுவுக்கு ராஜேஷ் மேல் அன்பு இருந்ததை அறிவான். ஒரு பைசாகூட இல்லாத அவனை ஏதோ ராஜேஷின் நண்பனாயிற்றே என்று மதித்துப் பேசுகிறான். இல்லாவிட்டால் அவன் நிழல் நம்மீது படுவதைக்கூட அவளால் பொறுத்துக்கொள்ள முடியாது என்றறிவான் அவன். தன்னிடம் பணம் இருந்தால் தன் தூக்கலான பற்களைப் பற்றியோ கருப்பான நிறத்தைப் பற்றியோ கூட மஞ்சு பொருட்படுத்த மாட்டாள் என்று தெரியும்.

ராஜேஷிற்குப் பணம் இருந்ததாலும் அவன் சிவப்பாய் பார்க்க நன்றாய் இருந்ததாலும் மஞ்சுவுக்கு அவன்மீது விருப்பம். அதனால் வாசுவுக்கு மஞ்சுவின் மீது ஆத்திரத் தோடு கூடிய விருப்பம் இருந்தது. மஞ்சுவின்மீது விருப்பம் இருந்தாலும் தன்னை மனிதனாய் மதிக்க மாட்டாள் என்ற வெறுப்பு! இவ்விரண்டும் அவன் மனதில் சம பாகமாய் இடம் பெற்றிருந்தன. இப்படிப்பட்ட வெறுப் போடு கூடிய விருப்பம் அவனுக்குச் சிறு வயதிலிருந்தே ழக்கப்பட்டதுதான். அவனுக்குத் தாய் இல்லை. சிறு வயதிலேயே இறந்து விட்டாள். விவரம் தெரிந்த வயதில் ீட்டில் சிற்றன்னை இருந்தாள். அவள் சிவப்பாய் அழகாய் இருப்பாள். வாசுவுக்குத் தான் கருப்பாய் இருந்த ாலோ என்னவோ, சிவப்பு உடம்புக்காரர்களைக் ண்டால் மிகவும் பிடிக்கும். சிற்றன்னைக்கு நெருக்கமாய் ருக்க வேண்டும் என்று முயற்சி பண்ணுவான். ஆனால் அவள் அவனை 'கரிக்கட்டை', 'அட்டைக்கரி'— என்று ிட்டுவாள். வாசுவுக்கு அவள் மேல் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அதைத் தீர்த்துக் கொள்வதற்குத் தந்தையிடம் அவளைப்பற்றி பலவிதமான பொய்களைச் சொல்லி அவளை அடிக்கும்படிச் செய்வான். தந்தை அவளைக் ட்டையை எடுத்துக் கொண்டுச் செம்மையாய் அடித்தால் வாசுவுக்கு மிகச் சந்தோஷமாய் இருக்கும். மிகச் சிறு யதிலேயே அவன் வீட்டை விட்டு ஓடிப் போய் தனியாய் ருக்கப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டான். அவனுக்கு யம் என்பதே கிடையாது. தனக்கு வேண்டியதற்காக தை வேண்டுமானாலும் பண்ணத் தயங்க மாட்டான். ன் எண்ணங்களையும், வெறுப்பையும், கோபத்தையும் னதிற்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு மேலுக்கு நல்லவனைப் போல நடப்பதில் கைத் தேர்ந்தவன். ன்றுமில்லாதவாறு மஞ்சு தானாகவே வந்து தன்னோடு பேசியது அவனுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது ஆனால் மஞ்சு வந்தது ராஜேஷ் விஷயத்தைச் சொல்வதற் காகத்தான் என்று தெரிந்ததுமே அவன் மனதில் வெறுப்பு

ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் மஞ்சுவைத் திருப்திபடுத்து வதற்காக 'ராஜேஷிடமே கேள்'— என்றான்.

அதன்படி மஞ்சு இந்த விஷயத்தை வெளிப்படையாய் எடுத்து உலுக்கி எடுக்கத் தொடங்கி விடவே ராஜேஷ் பதில் பேச முடியாதவனானான். உடனே வாசுவைப் பார்த்து, "வாசு! நான் பண்ணியது உனக்குத் தப்பாய் தோணுதா?" என்று கேட்டான்.

"தப்பாய் தோணலை. ஆனால் எல்லோருக்கும் வினோதமாய்தான் இருக்கு." என்றான் வாசு சாமர்த்திய மாய் அவன் பதில், மதில் மேல் பூனையைப் போல இருந்தது. அவனுக்கு சார்பாய் பேசுவது போலவே பேசி அவனை விமரிசித்துக் கொண்டிருந்தான்.

"ஏன் விநோதம்?" கேட்டான் ராஜேஷ்.

"ஏன் விநோதம் இல்லை? காலேஜுக்கே போகாதவன் அவள் வகுப்பிற்குக் கண்டிப்பாய் போகிறாயே, அது விநோதம் இல்லையா?"

"காலேஜுக்குப் போகாமல் எப்படி முடியும்? நீ காலேஜுக்குப் போகாவிட்டாலும் படித்து விடுவாய் எப்படியாவது ஆனால் என்னால் முடியாதே!"

"உனக்குப் படிப்பின் மேல் சிரத்தையா? படிப்பின் மேல் சிரத்தை இருந்திருந்தால் டெஸ்ட்டில் அவ்வளவு தடவை ஃபெயிலாவாயா? உனக்கு சிரத்தை இருந்திருந் தால் இதற்குள் பி.ஏ.வை படித்து முடித்திருப்பாயே!" என்றான் வாசு.

ராஜேஷ் தலை குனிந்தான். வாசு சொன்னது உண்மை தான். அவன் படிக்கவே மாட்டான். அவன் படிப்ப தற்காக தந்தை என்னென்னவோ லஞ்சங்களைத் தருவார். கேட்டதையெல்லாம் வரவழைத்துக் கொடுப்பார். அவைகளையெல்லாம் வாங்கிக்கொண்டு அவன் படிப்பதை

விட்டு விடுவான். தந்தை திட்டித் தீர்த்து விட்டு, இவ
லாபம் இல்லை என்றெண்ணி வாயை மூடிக் கொண்டு
விட்டார். அவன் காலேஜில் சேர்ந்தது பொழுது போக
திற்காக! ஸ்டூடென்ட்ஸ் யூனியன் எலெக்ஷனில்
செக்ரட்டரி ஆவதற்காக! அவன் எண்ணியதெல்லாம்
நடந்து விட்டது. எலெக்ஷனில் ஜெயித்து செக்ரட்டரி
யாகி விட்டான்.

ராஜேஷின் தந்தை கணபதியை அந்த ஊரில் மட்டு
மில்லை, அச்சுற்று வட்டாரத்திலுள்ள ஊர்களில் எல்லாரு
கூட எல்லோருக்கும் நன்றாய் தெரியும். அவர் மிக
நல்லவர். அவர் முகத்தைப் பார்த்து ராஜேஷ் கும்பல்
பண்ணும் சேஷ்டைகளை யாரும் எதிர்க்காமல் இருந்து
விடுவார்கள். அந்த விஷயம் ராஜேஷை விட அவன்
நண்பர்களுக்கு மிக நன்றாய் தெரியும்.

"நான் இனிமேல் படிக்கணும்னு தீர்மானித்துக்
கொண்டிருக்கிறேன்" என்றான் ராஜேஷ்.

"தாங்க்ஸ் டு மிதிலா லெக்சரர்" என்றான் வாசு.

வாசுவின் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வந்ததுமே
ராஜேஷ் உள்ளங் கைகளை மடக்கிக்கொண்டு விர்ரென்று
அவன் பக்கமாய் திரும்பினான்.

வாசு உடனே கும்பிடு போட்டான். "நில்லுடா! நில்
அவளை நான் ஒன்றும் கெட்டதாய் சொல்லலையே? ஏன
சொல்லப் போறேன்? உனக்குப் பிடிச்சவங்களை நான்
எப்பொழுதாவது ஏதாவது சொல்லியிருக்கேனா?"
என்றான் வாசு. இவ்வாறு சொல்லிக்கொண்டே அவன்
ஓரக்கண்ணால் மஞ்சுவைப் பார்த்தான். அவன் வேண்டு
மென்றே எடுத்துப் போட்ட இந்த ஷெமித்துக்கள் புள்
ளென்று நன்றாக பற்றிக்கொண்டு விட்டன.

"சரி! உங்களிஷ்டப்படி என்ன வேணும்னாலும்
பண்ணிக்குங்க, எனக்கென்ன வந்தது?" மஞ்சு கை

பையை எடுத்துக்கொண்டு ஹீல்ஸ் ஷூ டக்டக்கென்று
சப்தமிட அங்கிருந்து போய் விட்டாள்.

மஞ்சு போன பிறகு வாசு ராஜேஷை நோக்கித்
திரும்பி— "ராஜேஷ்! நான் நிஜமாய் உன் நடத்தையைப்
பார்த்து வெறுத்துப் போய் இப்படி காமண்ட் பண்ணி
னேன்னு நினைச்சுட்டாயா? ஒன்றுமில்லை. நான் உன்
சிநேகிதன் அல்லவா? உன்னைப்பற்றி யாராவது
கெட்டதாய் நினைத்துக்கிட்டால் எனக்கு ரொம்ப
வருத்தமாய் இருக்கும். மிதிலா லெக்சரருக்கு என்ன வந்தது?
ரொம்ப நல்லவள்! அவள் பாடம் சொல்லித் தரத் தொடங்
கிட்டால் வகுப்பு அப்படியே மெய்மறந்து போய்விடு
கிறது! அவள் நின்று கொண்டு பாடம் சொல்லித் தந்தால்,
மெல்லிய அவள் இடை, வெள்ளையாய்..."

"கொன்று விடுவேன்! மேடத்தை வர்ணித்தாயானால்
பார்" ராஜேஷ் வாசுவின் வாயை அழுத்தமாய் பொத்தி
மூடினான். வாசு அவன் கையை விடுவித்துக் கொண்டு
ராஜேஷைப் பார்த்தான். ராஜேஷின் கண்கள் சிவந்
திருந்தன. ஆவேசத்தால் மூக்கு அதிர்ந்து கொண்
டிருந்தது.

9

அன்று மாலையில் மிதிலா மேஜைமீது புடவையைப்
பரப்பி இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தாள். சனிக்கிழமை
மாலை வந்துவிட்டால் போதும் மிதிலா புடவைகளை
யெல்லாம் ஒரு வாரத்திற்கு வேண்டியவைகளை எடுத்து
வைத்துக்கொண்டு இஸ்திரி போடுவதில் மூழ்கிப் போய்
விடுவாள். இன்று ரங்கநாயகி வீட்டில் இல்லை. மீனா
லெக்சரர் தன் வீட்டிற்குத் தேநீருக்கு அழைத்திருந்ததால்

போய்விட்டான். மீனாவுக்கு வம்புகள் என்றால் மிகவும் பிடிக்கும். சினிமா பத்திரிகைகளில் படித்தவை, அரசியல் சங்கதிகள், ஊரில் கேட்டது, ஒன்றல்ல இரண்டல்ல, அநேகம் விஷயங்களைப் பற்றிப் பேசுவாள். ரங்க நாயகிக்கும் அவைகளைக் கேட்பதென்றால் மிக உற்சாகம். மிதிலாவுக்கு இந்தச் சம்பாஷணைகள் எல்லாம் அலுப்புத் தட்டிவிடும். அதனால் தலைவலி என்ற சாக்கில் ரங்கநாயகியோடு போகாமல் இருந்து கொண்டாள்.

மிதிலா இஸ்திரி போட்டுக் கொண்டிருக்கையில் ஜெயந்தியும் சாந்தியும் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

"உட்காருங்கள், உட்காருங்கள், இதோ வந்து விட்டேன்"— என்றாள் மிதிலா.

சாந்தியும் ஜெயந்தியும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"நான் இதோ ஒரு நிமிஷத்தில் முகம் கழுவிக்கொண்டு தலைப் பின்னிக்கொண்டு வந்து விடுகிறேன்"—இஸ்திரி பெட்டியின் ப்ளக்கை எடுத்துப் பக்கத்தில் வைத்துவிட்டு உள்ளே போனாள் மிதிலா. அவள் இன்று வேற்றுச் சிந்தனையில் ஆழ்ந்து போய் நேரத்தையே கவனிக்க வில்லை. அவர்கள் வந்ததுமே பாடத்தைச் சொல்லித் தராமல் உட்கார வைத்து விட்டுத் தன் காரியத்தைப் பார்ப்பது மிதிலாவுக்குப் பிடிக்காது.

மிதிலா உள்ளே போய் புடவை மாற்றிக்கொண்டு, முகம் கழுவிக்கொண்டு திரும்பி வந்தபோது சாந்தி இஸ்திரி பெட்டியின் ப்ளக்கை வைத்துவிட்டு, மிதிலாவின் புடவையை இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தாள்.

ஜெயந்தி அறையைப் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

"அடடா! பசங்களே! இதென்ன காரியம்?" மிதிலா வந்து ஜெயந்தியின் கையிலிருந்த துடைப்பத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

"ரொம்ப அழகுதான்! எனக்கு இதெல்லாம் பிடிக்காது" என்றாள் மிதிலா.

"உங்களுக்கு உதவி பண்ணச் சொல்லி எங்க பாட்டி கூட சொன்னாங்க மேடம். வேண்டுமென்றால் நீங்களே கேளுங்க" என்றாள் ஜெயந்தி.

"அவங்க தெரியாமல் ஏதோ சொல்லியிருப்பாங்க."

"ஊஹூம். நாங்களேதான் பொழுது போக்காய் உங்களுக்கு உதவி பண்றோம். இதில் தப்பில்லை. எங்களுக்குப் பாடம் சொல்லித் தராவிட்டால் நீங்கள் உங்கள் வேலைகளைச் சீக்கிரமாய் பண்ணியிருக்க மாட்டீங்களா?" என்றாள் ஜெயந்தி.

மிதிலாவால் பதில் பேச முடியவில்லை.

சாந்தி சிரித்துக்கொண்டே சொன்னாள். "மேடம்! உங்களைக் கண்டால் எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். உங்களுக்கும் எங்களைப் பிடிக்கும். உங்களுக்கு இந்த வேலைகள் இல்லைன்னு வையுங்கள். அப்ப நீங்க உட்கார்ந்து எங்களோடு நன்றாய் பேச முடியும் இல்லையா? அதனால் மறுக்காதீங்க."

மிதிலா செய்வதறியாது பார்த்தாள்.

சாந்தி புடவைகளை மளமளவென்று இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தாள். ஜெயந்தி அவ்விடத்தைத் துப்புறவாய் பெருக்கினாள்!

மிதிலா உள்ளே போய் தேநீர் கலந்து கொண்டு ட்ரேயில் பிஸ்கெட்டுகளையும் தேநீர் கோப்பைகளையும் வைத்து எடுத்து வந்தாள்.

சாந்தி இஸ்திரி போட்டு முடித்துவிட்டு— "இவைகளை எங்கே வைக்கணும் மேடம்?" என்று கேட்டாள்.

"அதோ! அந்த பீரோவில்" என்று காட்டினாள்.

சாந்தி புடலைகளை எடுத்துச் சென்று பீரோவில் அடுக்கி வைத்தான்.

ஜெயந்தியும் சாந்தியும் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

மூவரும் தேநீர் குடித்ததும் மிதிலா பாடம் சொல்லித் தருவதற்காக வந்து உட்கார்ந்து கொண்டாள்.

சாந்தி புத்தகத்தைத் திறந்து கொண்டே— ''மேடம்! நீங்கள் நாளைக்குக் கண்டிப்பாய், எங்க வீட்டுக்கு வரணும். இதுவரை ரெண்டு தடவை கூப்பிட்டபோது வராமல் தப்பித்துக்கிட்டீங்க. இந்த தடவை முடியாது'' என்றாள்.

''எதுக்கு?''

''போன ஞாயிற்றுக்கிழமை ஜெயந்தியின் வீட்டில் சாப்பிட்டோம் இல்லையா? அதனால் இந்த வாரம் எங்க வீட்டில்! நான் அண்ணாவிடம் சொல்லிட்டேன். சரி என்றான். நாளைக்கு நீங்க வரணும். நான் நாளைக்கு ஒன்பது மணிக்கு வந்து உங்களையும் ரங்கநாயகியையும் கூட்டிட்டுப் போறேன். ஜெயந்திகூட வருவாள்.''

''சரி! ரங்கநாயகி வரட்டும் பார்க்கலாம்'' என்றாள் மிதிலா. அவளுக்கு யார் வீட்டிற்காவது போக வேண்டும் என்றாலே பெரிய தலைவலியாகி விடும். ரங்கநாயகியோ லீவு வந்து விட்டால் யார் கூப்பிடுவார்கள் என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள்.

லீவு நாட்களில் கூட வீட்டில் இருக்க வேண்டும் என்றால் ரங்கநாயகிக்கு போர். மிதிலாவுக்கோ அந்த ஏகாந்தம் பிடிக்கும். ரேடியோ கேட்டுக் கொண்டும் டி.வி. பார்த்துக் கொண்டும், புத்தகங்களைப் படித்துக் கொண்டும் இருக்கத்தான் அவள் விரும்புவாள்.

பாடம் சொல்லிக் கொடுத்த பிறகு ஜெயந்தி போய் விட்டாள்.

''அண்ணா வந்து என்னைக் கூட்டிட்டுப் போறேன்னான் மேடம்'' என்றாள் சாந்தி.

''உட்கார்'' என்றாள் மிதிலா.

மிதிலா எழுந்து சமையலறைக்கு வந்து சமையல் செய்ய முயற்சி பண்ணிக் கொண்டிருந்த பொழுது சாந்தியும் அங்கே வந்தாள்.

''மேடம்! நான் காய் நறுக்கித் தரேன்'' என்று வெண்டைக்காயை எடுத்துக் கொண்டாள். மிதிலா அரிசியைக் கழுவி வைத்தாள்.

''எங்க வீட்டில் நான்தான் சமைப்பேன். எனக்கு அண்ணா கற்றுக் கொடுத்தான் சமைக்க. மொதல்ல காய் நறுக்கக்கூட எங்கண்ணாதான் எனக்குக் கற்றுத் தந்தான்'' என்றாள் பெருமையாய்.

''உங்கண்ணாவுக்குச் சமைக்கத் தெரியுமா?'' என்றாள் மிதிலா.

''தெரியும்? என்று சொன்ன போதே சாந்தியின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தன.

''அம்மா போயிட்டாங்க இல்லையா? அம்மா இருந்த போது அண்ணா காபி குடித்த தம்ளரைக் கூட கழுவிய தில்லை. அம்மா போனபிறகு நான் அண்ணாவிடமிருந்து தான் எல்லா வேலைகளையும் கற்றுக்கிட்டேன். அம்மா அப்பா போன புதிதில் எங்க அத்தை வந்து எங்களோடு இருந்தாங்க. அவங்க பிடுங்கலைத் தாங்க முடியாமல் போய் தனியாய் இருப்பதே மேல் என்று எண்ணி அத்தையை அனுப்பி வைச்சுட்டான் அண்ணா. அப்புறமாய் அண்ணா ஒரு சமையல்காரியை வைத்தான். அவள் வீட்டிலிருந்த எல்லா சாமான்களையும் தன் மகனுக்கு ரகசியமாய் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஒரு முறை அண்ணா அவள் திருட்டுத் தனத்தை கண்டுபிடித்துட்டான். என் தங்கச் சங்கிலியைத் திரு

விட்டான். அவளை நிறுத்தி விட்டோம். அப்போதிலிருந்து எங்க வீட்டில் வேலைகளை நாங்களே செய்துக்கணும்னு முடிவு பண்ணிட்டோம். அண்ணா புத்தகத்தைப் பார்த்து சமையல் கற்றுக் கொண்டான். அண்ணாவுக்கு நான் ஒத்தாசைப் பண்ணிட்டிருப்பேன். முதல் நடவை காய் நறுக்கியபோது என் விரலில் கத்திப்பட்டு விட்டது. அண்ணா அதற்குக் கட்டுக் கட்டிவிட்டு— "யார் எந்தக் கலையைக் கற்றுக் கொள்ளணும்னு இருந்தாலும் முதல் முதலில் கஷ்டப்பட்டுதான் தீரணும்"— என்று இன்னும் ஏதேதோ பேசி என்னைச் சிரிக்க வைத்து விட்டான். அப்புறமாய் போகப் போக நானே சமைக்கத் தொடங்கி அண்ணா உதவி பண்ற நிலைமைக்கு வந்துட்டோம். இப்ப வீட்டில் ஒரு பையன் இருக்கிறான். அவனும் நானுமாய் சேர்ந்து இருபத்தைந்து பேருக்குக் கூட சமையல் பண்ணி விடுவோம்" என்றாள்.

சாந்தி ஒரு வினாடி நிறுத்திவிட்டு— "எங்கம்மா மட்டும் இருந்தால் உங்களைப் பார்த்து எவ்வளவு சந்தோஷப்படுவாங்க தெரியுமா?" என்றாள்.

"உங்கண்ணாவைக் கண்டால் உனக்கு ரொம்பப் பிடிக்கும் இல்லையா?" என்றாள் மிதிலா பேச்சை மாற்ற விரும்பி.

"ஆமாம். எங்கப்பா அம்மா போனபிறகு எங்கண்ணன் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் நான் நிஜமாய் செத்தே போயிருப்பேன் மேடம்" என்றாள் சாந்தி.

மிதிலாவுக்கு அந்த விஷயம் புரிந்து கொண்டுதான் இருந்தது. சாந்திக்கு நினைவு தெரியும் பிராயத்தில் தாய் தந்தையர் திடீரென்று போய் விட்டார்கள்.

அண்ணனின் அன்பு தந்த மனோபலத்தால் சாந்தி அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள். சமையல் அறையில் பாத்திரங்களை அடுக்கி வைத்துக்

கொண்டிருந்த பொழுது வாசலிலிருந்து "சாந்தி அம்மா" என்ற அழைப்பு கேட்டது.

சாந்தி போனாள். வாசலில் வேலைக்காரப் பையன் நின்று கொண்டிருந்தான். "அண்ணன் வீட்டுக்கு வந்துட்டாருங்க. நீங்க இங்கேயிருந்து வந்திருப்பீங்கன்னு நினைச்சுட்டாராம்" என்றான்.

"இதோ வரேன், வா" என்றாள் சாந்தி புத்தகங்களை எடுத்துக் கொண்டே. சாந்தி போன பொழுது ரங்கநாயகி உள்ளே வந்தாள். சாந்தியைப் பார்த்துவிட்டு "பரவாயில்லை. நீ இருந்திருக்கிறாயே! மிதிலா தனியாய் உட்கார்ந்து போரடித்து என்னைத் திட்டிக் கொண்டிருந்திருப்பாளோன்னு பயந்துட்டே வந்தேன்" என்றாள்.

சாந்தி போய் விட்டாள்.

ரங்கநாயகி உள்ளே வந்து கொண்டே— "அப்பப்பா! ஒரே பசி!" என்றாள்.

மிதிலா ஆச்சரியத்தோடு— "இதென்னது? டீ பார்ட்டிக்குப் போய் விட்டு வந்திருக்கிறாய் நீ. உனக்குப் பசி இருக்காதோன்னு நினைச்சு சமையல் பண்ணவே யில்லை நானும்" என்றாள்.

அதைக் கேட்டதும் ரங்கநாயகியின் முகம் வெலவெலத்துப் போய் விட்டது.

"கொன்னுட்டாய் போ! மீனா பெரிய 'டீ' பார்ட்டின்னு கூப்பிட்டாள். மூன்று மணிநேரம் மூச்சு விடாமல் உலகத்திலுள்ள வம்புகளையெல்லாம் பேசித் தீர்த்து விட்டாள்."

"சாப்பிட என்ன கொடுத்தாள்?"

"என் தலையைக் கொடுத்தாள்! ரெண்டு பிஸ்கெட்டும் அரை கப் டீயும்! அங்கே எப்படியும் ஏதாவது டிபன் சாப்பிடப் போறோமேன்னு நான் வீட்டில் எதையும்

சாப்பிடாமல் போனேன். அந்த பிஸ்கெட்டையும் டையையும் பார்த்ததுமே எனக்குச் சோர்வு வந்து சேர்ந்து விட்டது. மொதல்ல அந்த லம்புகளைக் கேட்கிற உற்சாகத்தில் பசி தெரியலை. அப்புறமாய் வயிற்றைக் குடையத் தொடங்கிடுத்து. போகணும்னு மூணு முறை எழுந்திருந்தேன்.

'போகலாம் உட்காரு'ன்னுட்டான். எப்படியோ உதறிக்கொண்டு வந்துச் சேருவதற்குள் இவ்வளவு நேரமாயிடுத்து.''— ரங்கநாயகி உள்ளே போய் காராபூந்தி டப்பாலைக் கொண்டு வந்து மடியில் போட்டுக்கொண்டு சாப்பிடத் தொடங்கினாள்.

''அப்பப்பா! இந்த மீனாலைப் போன்றவங்க வீட்டுக்கு நேநீருக்தோ சாப்பிடவோ வருந்தி வருந்தி அழைத்தாலும் சரி, செத்தாலும் போகக்கூடாது. இந்த எட்சணத்துக்கு நாளைக்குக் காலேஜில் எல்லோரிடமும் நேற்று ரங்கநாயகியை நான் தேநீருக்கு எங்க விட்டுக்குக் கூப்பிட்டேன்' என்று பெருமையாய் சொல்லிக் கொள்வாள். நான் ஒன்றுமே திங்கலை என்று சொன்னாலும் யாரும் நம்ப மாட்டாங்க'' என்றாள்.

மிதிலா புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டே அவள் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''ஆமாம், சொல்ல மறந்துட்டேன். உனக்குக் காலேஜில் பெரிய பேர் வந்திருக்கு'' என்றாள்.

''எனக்கா? எதுக்கு?''

''அந்த ரௌடி ராஜேஷின் கும்பல் உன் பேரில் ரொம்ப சிரத்தை காட்டுகிறாங்களாம். உன் வகுப்புக்குக் கண்டிப்பாய் வராங்களாம். அதைப் பெரிய விசேஷமாய் சொல்லிக் கொள்கிறாங்களாம். அவங்க மூலமாய் இவ்வளவு தாளாய் இருந்து கொண்டிருக்கிற எங்களைவிட நேற்று வந்த நீ பெயரைத் தட்டிக் கொண்டு போட்டாயாம்.''

''அழகாயிருக்கு'' என்றாள் மிதிலா.

''அதுகூட ஒரு அதிர்ஷ்டந்தான்னு வை.''

''சாந்தி நாளைக்கு அவங்க விட்டுக்கு நம்மிருவரையும் வரச் சொல்லி கூப்பிட்டாள்.''

''தம்மா வரச் சொன்னாளா அல்லது...''

''சாப்பிடு!''

''ஞாயிற்றுக்கிழமை தானே! எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை...'' என்றாள் ரங்கநாயகி.

''மறந்துட்டேனே! உனக்குக் கடிதம் வந்தது'' என்று எழுந்து போய் கொண்டு வந்து தந்தாள் மிதிலா.

ரங்கநாயகி அதைப் பார்த்துவிட்டு— ''எங்க சித்தப்பா எழுதியிருக்கிறார். அவரிடமிருந்து கடிதம் வந்தது என்றால் ஏதாவது வழக்கு இருக்குன்னு அர்த்தம். வெறுமே எழுத மாட்டார் அவர். இதைப் படிச்சுட்டு ரெண்டு நாள் எனக்குத் தூக்கம் வரப் போறதில்லை. ஆனாலும், என்ன பண்றது, படிச்சுதானே ஆகணும்'' என்று கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

கொஞ்ச நேரங் கழித்து கடிதத்தைப் படித்துவிட்டு ஒரு பக்கமாய் வைத்தவள், நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்துக்கொண்டு— ''இந்த முறை பெரிய பிரச்னை தான்'' என்றாள்.

''என்ன?'' என்றாள் மிதிலா.

''ஒரு சம்பந்தம் இருக்காம். அந்தப் பையனை நான் பண்ணிக் கொண்டால், அவள் தங்கையை சித்தப்பாவின் மகன் ஹரிக்குத் தருவாங்களாம். நன்றாய் பசையுள்ள இடமாம். நாங்களிருவரும் அவங்க ரெண்டு பேரையும் பண்ணிக் கொண்டால் சொத்து வெளியே போகாதாம். இதென்னவோ கல்யாணமாய் தோணலை. சொத்து பாதுகாப்பாய் தோணுது.''

மிதிலா மௌனமாய் இருந்தாள்.

ரங்கநாயகிக்கு முப்பது வயது நடந்து கொண்டிருந்தது. ரங்கநாயகி எழுந்து தொண்டே சொன்னாள்— "என்னமோ, சில சமயம் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கு! சில சமயமோ கல்யாணம் பண்ணிக் கொண்டால் இந்தச் சுதந்திரம் போய் விடுமோ, இந்த சுயேட்சைக்குப் பழக்கப்பட்டுப் போன பிறகு ஒருத்தருக்குத் தலை குனிந்து வாழ என்னால் முடியுமா என்று தோணுகிறது. என்னமோப்பா! என்னைக் கேட்டால் இந்தக் கல்யாணம் என்பதே இன்னொரு கஷ்டமான விஷயம் என்பேன்!" என்றாள்.

மிதிலா பதில் பேசவில்லை. மௌனமாய் உட்கார்ந்திருந்தாள்.

10

"வாங்க மேடம்! வீட்டை யெல்லாம் சுற்றிக்காட்டுகிறேன்"— என்று உள்ளே நடந்தாள் சாந்தி. மிதிலாவும் ரங்கநாயகியும் சாந்தியைப் பின் தொடர்ந்து உள்ளே போனார்கள்.

வீட்டில் சாமான்கள் எல்லாம் அங்கங்கே சிராய் போடப்பட்டிருந்தன. வீட்டிற்கு மூன்று பக்கங்களிலும் வராந்தா இருந்தது. அந்த வராந்தாக்களில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அங்கங்கே தூண்களைச் சுற்றிப் படர்ந்திருந்த மல்லிகை, முல்லை, ஜாதி மல்லிக் கொடிகளில் பூக்கள் இதழ் விரித்து நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. அங்கே பட்டினவாசத்தின் பயிற்சியோ கலையோ இல்லை. கிராமப்புறத்தின் சுயேட்சை தென்

பட்டது. மிதிலாவும் ரங்கநாயகியும் வந்ததுமே சாந்தியும் ஜெயந்தியும் எதிர்ப்பட்டு அவர்களைக் கோழிப் பண்ணையைச் சுற்றிக் காட்டுவதற்காக அழைத்துச் சென்றார்கள். பண்ணை வீட்டையொட்டியே இருந்தது. அதற்கும் வீட்டிற்குமிடையே காம்பவுண்டு சுவர் இருந்தது. நடுவில் ஒரு கதவு இருந்தது. அக்கதவைத் திறந்தால் கோழிகளின் சப்தம் கேட்டுக் கொண்டிருக்கும். பண்ணையெல்லாம் துப்புரவாய் இருந்தது. கோழிகளுக்கு ஆகாரமும், ஆரோக்கியத்திற்கு இஞ்ஜெக்ஷனும் தந்தார்கள். முட்டைகளை சென்னைக்கு அனுப்ப எப்படிப்பட்ட ஏற்பாடுகள் உள்ளன என்பதை சாந்தி காட்டினாள். அங்கிருந்து பினோனில் கல்லீப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி பண்ணி வந்தார்கள்.

தாய் தந்தையர் போன பிறகு சூர்யகிரண் படிப்பை விட்டு விட்டான். சாந்திக்காக வீட்டோடு இருந்து கொண்டு ஏதாவது வியாபாரம் பண்ண விரும்பினான். அரசாங்கக் கடன் உதவியோடு கோழிப் பண்ணையைத் தொடங்கினான். முதலிரு ஆண்டுகள் மிகத் தொந்தரவிற்கு உள்ளானான். மூன்றாவது ஆண்டில் வியாபாரம் நிலைத்து நின்றது. அவன் கைக்கு லாபம் வந்தது. நாலாம் ஆண்டிலிருந்து லாபம் பெருகிப் போய் கடன்கள் தீர்ந்து விட்டன. பணம் மிஞ்சிற்று. அதன் மூலம் திரும்பவும் மாடுகளையும் கன்றுகளையும் வாங்கினான் பால் பண்ணைக்குப் பாலை அனுப்ப ஏற்பாடு செய்தான். அதுவும் நிலைத்து நின்றது இப்பொழுது காய்கறித் தோட்டத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறானாம். அதிலேயே மூழ்கிப் போய்விட்ட அவனுக்கு ஒரு நிமிஷம் கூட ஓய்வு என்பதே இல்லையாம். காய்கறித் தோட்டம் அடுத்த ஆண்டில் குத்தகைக்கு வந்துவிடும். அவற்றைக்கூட முட்டைகளோடு சேர்த்து கல்லீப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி பண்ண முயற்சி பண்ணிக் கொண்டிருந்தான்.

"அடேயப்பா! ஒரு மனிதனால் சுயமாய் இவ்வளவு பண்ண முடியுமா?" என்று வியப்படைந்து போனாள் ரங்கநாயகி.

சூர்யகிரண் எவ்வளவு வேலை மும்முரத்தில் இருந்தாலும் சரி, சாப்பிடும் சமயத்தில் மட்டும் வீட்டிற்கு வந்துத் தீர வேண்டியதுதான்! சாந்தியோடு சேர்ந்து சாப்பிட வேண்டியதுதான். எப்பொழுதாவது தாமதமானால் சாந்தி சாப்பிடாமல் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பான். இல சமயம் ராத்திரி வேளைகளில் அப்படியே எதிர்பார்த்துத் தூங்கி விட்டால் அவன் வந்து எழுப்பி சாப்பிடச் செய்வான்.

சாந்தியும் ஜெயந்தியும் வேலைக்காரப் பையனின் உதவியோடு சாப்பாட்டு மேஜை மேல் எல்லாவற்றையும் எடுத்து ரெடியாய் வைத்தார்கள். சூர்யகிரண் வரக் கொஞ்சம் தாமதமாகும் போலிருந்ததால் அதற்குள் சாந்தி மிதிலாவையும் ரங்கநாயகியையும் கோழிப் பண்ணைக்கும் காய்கறித் தோட்டத்திற்கும் அழைத்துச் சென்று காட்டி விட்டு வந்தாள்.

சாந்தி மிதிலாவைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று வீணையைக் காட்டினாள். அவ்வீணையைப் பார்த்ததுமே மிக விலையுயர்ந்த நல்ல வீணை என்று தெரிந்தது. வீணையைப் பிடித்து அதன் கம்பிகளை மீட்டினாள். நாதம் அபாரமாய் இருந்தது.

"ஒரு தடவை பாடு, கேட்கலாம்" என்றாள் ரங்கநாயகி.

சாந்தி பாயைப் பரப்பினாள். வீணையை வைத்துக் கொண்டு வாசிக்கத் தொடங்கினாள். "வாதாபி கணபதிம் பஜே"— நன்றாகவே வாசித்தாள்.

"நீங்களும் வாசியுங்கள் மேடம்" என்றாள்.

மிதிலா வீணையை எடுத்துத் தன் குரலுக்கேற்றபடி சுருதி வைத்துக் கொண்டு பாடத் தொடங்கினாள். மிதிலா

பாடிக் கொண்டும் இருந்தாள். அவள் குரல் கம்பீயாய் இழைந்து வந்தது. காவேரி அலைகளைப் போல மிதந்து கொண்டிருந்தது.

பாட்டு முடிந்தது. தம்மை மறந்து போனவர்களாய் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த ரங்கநாயகி, சாந்தி, ஜெயந்தி மூவரும் பாட்டு நின்றதுமே இந்த உலகத்திற்குத் திரும்பி வந்தார்கள். மூவரும் கைத்தட்டி ஆரவாரம் செய்தார்கள். ரங்கநாயகி— "கங்ராட்ஸ்! நீ இவ்வளவு அபாரமாய் பாடுவாய்னு எனக்குத் தெரியவே தெரியாதே" என்றாள் அசந்து போய்.

சாந்தி வியப்படைந்தவளாய் ஓட்டமாய் வந்து— "மேடம்! நீங்க இவ்வளவு நன்றாய் பாடுவீங்கன்னு நான் நினைத்திருக்கவே இல்லை. உங்களோடு என்னை ஒப்பிட்டால் எனக்கு வாசிக்கவே வராதுன்னே சொல்லலாம்" என்றாள்.

ஜெயந்தி வந்து மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டாள். "மேடம்! எனக்கு இனி டியூஷன் வேண்டாம். சாயந்திர வேளையில் உங்களிடம் வீணை கற்றுக்கறேன்" என்றாள். மிதிலா முறுவலுடன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் புகழ்ச்சிகளைக் கேட்டபோது கண்களில் சந்தோஷத்தோடு கூட வேதனைக் தோடுகளும் கண்ணாமூச்சி ஆடத்தொடங்கின. ஒரு நிமிஷம் மிதிலாவின் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று.

சாந்தி எதற்கோ திரும்பினாள். உடனே கதவு பக்கமாய் பார்த்து ஆச்சரியமும் ஆனந்தமுமாய்— "அட! நீயா அண்ணா? எப்ப வந்தாய்?" என்றாள். அதைக் கேட்டதும் திடுக்கிட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கதவில் தோளைச் சாய்த்துக் கொண்டு கைகளைக் கட்டி நின்று கொண்டிருந்த சூர்யகிரண் தென்பட்டான்.

அவன் நின்றிருந்த தோரணையைப் பார்த்தால் அவன் அங்கே வந்து வெகு நேரமாயிருக்கும் என்று புரிந்தது. அவன் முகம் மிதிலா பாடிய பாட்டைக் கேட்டு பரவசமடைந்து, மெய் மறந்து போய் விட்டதாய் தோன்றிற்று.

சாந்தி அவனிடம் ஓடி வந்தாள்.

"அண்ணா! நீ வர ரொம்ப நேரமாயிடுமோன்னு நினைச்சேன்," என்று கையைப் பிடித்துக் கொண்டு அவனை உள்ளே அழைத்து வந்தாள்.

"இதோ, ரங்கநாயகி லெக்சரர்" என்று காட்டினாள்.

"நைஸ் டுமீட்யூ" என்றான் வணங்கியபடி.

"தாங்க்யூ" என்றாள் ரங்கநாயகி.

"மிதிலா லெக்சரர். அன்றைக்கு ராத்திரி பேசினாயே?" என்று காட்டினாள். சூர்யகிரண் மிதிலாவைப் பார்த்தான். அன்று ராத்திரி வேளையில் பார்த்தான். அன்றைக் காட்டிலும் இன்று மிதிலாவின் முகமும், தோற்றமும் ஏனோ அவன் மனதில் ஆழமாய் படிந்து போய் விட்டது! அன்றைக்கு சாந்திக்குப் பாடம் சொல்லித் தரும் லெக்சரராய் மட்டுமே பார்த்தான். இன்றைக்கு அவனுக்கு மிகப் பிரியமான இனிய சங்கீதத்தை வழங்கிய ஒரு அற்புதமானவளாய் பார்க்கிறான்.

மிதிலாவைப் பார்த்துச் சொன்னான்:

"நான் உங்கள் பாட்டைக் கேட்டேன். நிறைய பேர் பாட்டுப் பாடுகிறார்கள். ஆனால் அது கற்றுக்கொண்ட பாடத்தை அப்படியே ஒப்பிப்பது போல இருக்கும். ஆனால் சிலர் பாடினால் நம் மனம் தன்மயத்தில் மிதக்கத் தொடங்கிவிடும். நீங்கள் அந்த மாதிரி பாடுகிறீர்கள். இது கடவுள் தந்த பரிசு! உங்கள் அதிர்ஷ்டத்திற்கு என் பாராட்டுக்கள்."

மிதிலா அவனைப் பார்த்தாள். அக்கண்களில் வியப்பும், பரபரப்பும் தென்பட்டன. அவன் பேச்சில் சங்கோஜமில்லாத உணர்ச்சி ஏதோ தென்பட்டது. முகஸ்துதிக்காகவோ, உபசாரத்திற்காகவோ சொல்லாமல் உண்மையை எந்த தடபுடலும் இல்லாமல் எடுத்துச் சொன்னாற் போல இருந்தது. ஒரு வினாடி இருவர் பார்வையும் கலந்தன. இருவரும் பார்வையை விலக்கிக் கொள்ள முடியாதவர்களாய் நின்று விட்டார்கள்.

"தாங்க்யூ" என்றாள் மிதிலா மெதுவாய்.

"அண்ணா சாப்பாட்டுக்கு எல்லாம் ரெடியாயிடுத்து நீதான் தாமதம்" என்றாள் சாந்தி.

அவன் மிதிலாவிடமிருந்து தன் பார்வையை அகற்றிக் கொண்டு ரங்கநாயகியைப் பார்த்து— "மன்னிக்கனும். உங்கள் சாப்பாட்டிற்குத் தாமதமாயிடுத்து போலிருக்கு! நண்பர்கள் மெட்ராஸிலிருந்து வந்தாங்க. அவங்களை அனுப்பிவிட்டு வருவதற்குள் தாமதமாயிடுத்து" என்றான்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் காலேஜ் வம்புகள், ஊரிலுள்ள விசேஷங்கள், அவள் வியாபார விஷயங்கள், சினிமா, சங்கீதம் பற்றிய விஷயங்கள் அடிபட்டன. பேச்சிற்கிடையே அவன் ரங்கநாயகிக்கும், மிதிலாவுக்கும் 'இன்னும் கொஞ்சம் போடு', 'அதைப் பரிமாறு', 'இதைப் போடு' என்று பையனை உத்தரவிட்டுக் கொண்டிருந்தான். அவனும் ஐயாவின் வார்த்தைகளை மீற மாட்டாதவனாய் அப்படியே பரிமாறி விட்டான்.

"ஐயோ! பேச்சில் ஈடுபட்டு அதிகமாய் சாப்பிட்டு விட்டோம்!" என்றாள் ரங்கநாயகி.

சாப்பிட்ட பிறகு தட்டில் வெற்றிலைகளையும் பாக்குப் பொடி, சுண்ணாம்பையும் கொண்டு வந்து தந்தாள் சாந்தி.

"நான் பீடா கட்டித் தரேன்" என்றாள் மிதிலா.

மிதிலா வெற்றிலையில் சுண்ணாம்புத் தடவி, அழகாய் பீடாவைப் போல கட்டி ஒவ்வொருவருக்கும் தந்தாள்.

சாந்தி ஒன்றை எடுத்துக்கொண்டு அடுத்த அறையிலிருந்த அண்ணனிடம் கொண்டு போய் தந்துவிட்டுத் திரும்பி வந்து— ''அண்ணாவுக்கு ரொம்ப நன்றாய் இருக்காம். இன்னொன்று வேணும்னு கேட்கிறான்'' என்றாள்.

மிதிலா தந்தாள்.

ரங்கநாயகி— ''உம்! உங்க மேடத்திற்குப் பாட்டுப் பாடுவது மட்டுமில்லை, பீடா கட்டக் கூடத் தெரியும் போலிருக்கு'' என்றாள்.

சூர்யகிரண் வெளியே போய் விட்டான். வீட்டில் திரும்பவும் அவர்களே எஞ்சி நின்றார்கள்.

சாந்தி மல்லிகைப் பூக்களைப் பறித்து வந்தாள். மிதிலா அவற்றைத் தொடுத்துத் தந்தாள்.

''என்னவோப்பா! நாலும் பெண்தானே? இந்த மாதிரி மென்மையான வேலைகள் எதுவுமே எனக்கு வராது. சிறு வயதிலிருந்தே ஆம்பிள்ளையைப் போலச் சுறுறிப் பழகிட்டேன்'' என்றாள் ரங்கநாயகி.

மாலையில் மிதிலாவும் நாயகியும் புறப்பட்ட பொழுது— ''நாளைக்குக் காலேஜில் இனாகரல் ஃபங்ஷன் இருக்கு மேடம்'' என்று ஞாபகமூட்டினாள் சாந்தி.

11

மறுநாள் காலேஜில் இனாகரல் ஃபங்ஷன் நடந்து கொண்டிருந்தது.

ரிஸெப்ஷன் கமிட்டியில் ரங்கநாயகி இருந்தாள். டிஸிப்ளின் கமிட்டியில் ரமாவை நியமித்தார்கள். அட்

ஹோம் கமிட்டி மெம்பராய் இருக்க மிதிலா சம்மதித்தாள்.

விசாலமான ஹாலில் விருந்தினர்களுக்கெல்லாம் 'டீ' பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மிதிலா, ராஜேஷ், வாசு, ஜெயந்தி, சாந்தியின் உதவியோடு அவ்விடத்தையெல்லாம் மிக அழகாய் அலங்கரித்தாள். மேஜைகளைப் போட்டு அவற்றின்மீது வெள்ளைத் துணிகளைப் பரப்பினார்கள். அவற்றின்மீது அங்கங்கே கோணிகல் ஃபிளாஸ்க்குகளை வைத்து அவற்றில் ஒன்றில் காப்பர் சல்பேட் க்ரிஸ்டல்ஸைட் போட்டு நீல நிறமாகவும், இன்னொன்றில் ஃபெர்ரஸ் சால்ட்டைப் போட்டு ஆரஞ்சு நிறமாகவும், சாஃபரின் போட்டு சிலப்பாகவும், கலர் கலர் நீர்கள் இருப்பது போல பண்ணி, அவற்றில் பூங்கொத்துக்களை வைத்து அரேஞ்சு பண்ணினார்கள். மேலே கலர் காகிதத் தோரணங்கள், பலூன்களைக் கொத்தாகக் கட்டினார்கள். மேஜை மேல் கண்ணாடித் தட்டுக்களில் ஆரஞ்சுப் பழங்களை பிளேட்டைச் சுற்றிலும் மூன்று மூன்று வரிசைகளாகவும், பிறகு ஆப்பிள் துண்டுகளையும் அவற்றிற்கு நடுவே கோபுரத்தைப் போல திராட்சைப் பழங்களையும் வைத்தார்கள். பிஸ்கெட்டுகளையும் கேக்குகளையும் தாராளமாய் எடுத்து வைத்தார்கள். நாற்காலிகளை சீராய் போட்டார்கள். அந்த ஹாலுக்குள் அடியெடுத்து வைத்ததுமே விருந்தினர்களை மிக அழகாய் சிரத்தையோடு தயாரித்திருந்த இந்த ஏற்பாடுகள் கவராமலிருக்காது.

ராஜேஷ் அங்குமிங்கும் சுறுசுறுப்பாய் அலைந்து இந்த ஏற்பாடுகள் எல்லாம் தன் ஒருத்தன் தலைமேல்தான் இருப்பது போல பரபரப்பாய் வேலைகள் பண்ணி மிதிலாவுக்கு உதவி பண்ணிக் கொண்டிருந்தான்.

வாசுவுக்கு இந்த வேலைகளையெல்லாம் செய்வதற்கு மிக வெறுப்பாயிருந்தது. ஆனால் ராஜேஷிற்காக வேறு

வழியில்லாமல் இந்த வேலைகளைப் பண்ண வேண்டியிருந்தது. பண்ணுவது போல நடித்துக் கொண்டே எதையாவது கொண்டு வரச் சொல்லால் பல மணி நேரம் கழித்து கொண்டு வந்து கொடுத்தும், தன்னிடம் ராஜேஷ் சொன்ன வேலைகளை சீனுவுக்கும் ரங்கனுக்கும் உத்தரவிட்டுக் கொண்டும் காலம் கழித்துக் கொண்டிருந்தான்.

மஞ்சு தன்னை நன்றாய் அலங்கரித்துக் கொண்டு, கூந்தலை அழகாய் மடித்துக் கட்டிக் கொண்டு, மிக ஆடம்பரமாய் தயாராகி சரியான டயத்திற்கு கைப்பையை ஆட்டிக்கொண்டு ஒய்யாரமாய் நடந்து வந்தாள்.

ராஜேஷ் மஞ்சுவை கவனிக்கும் நிலையில் இல்லை.

மஞ்சு வந்த சமயத்தில் அங்கே ஒரு பெரிய காட்சி நடந்பட்டுக் கொண்டிருந்தது. மேஜை மேல் பிளேட்டுகளையும், ஸ்பூன்களையும் ஒழுங்காய் அடுக்கி வைத்துக் கொண்டிருந்த மிதிலாவின் கையிலிருந்து ஸ்பூன் ஒன்று கீழே விழுந்து விட்டது. மிதிலா குனிந்து அதை எடுத்துக் கொண்டு எழுந்திருக்கப் போனபொழுது, மேஜையின் விளிம்பு டக்கென்று நெற்றியில் பட்டுவிட்டது.

"ஐயோ!" என்று மிதிலா தலையைப் பிடித்துக் கொண்டாள்.

கேக்குகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த ராஜேஷ் சட்டென்று அவைகளை அப்படியே போட்டுவிட்டு சரேலென்று வந்து மிதிலாவின் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான்.

"அடி நன்றாய் பட்டுவிட்டதா?"

"இல்லை" என்றாளே தவிர அதற்குள் அந்த அடிக்கே மிதிலாவின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

"ஐயோ! ரத்தம் வருது!" ராஜேஷ் உடனே திரும்பி— "சீனு! வாசு" என்று கத்தினான்.

சீனு ஓடி வந்தான். அதற்குள் சாந்தியும் ஜெயந்தியும் கூட பண்ணிக் கொண்டிருந்த காரியத்தைப் போட்டுவிட்டு ஓடி வந்தார்கள்.

"இங்கே எங்கேயாவது பௌடர் கிடைக்குமா?" அப்பொழுதுதான் தொலைவிலிருந்து ஒய்யாரமாய் நடந்து வந்து கொண்டிருந்த மஞ்சு தென்பட்டாள்.

ராஜேஷ் மிதிலாவை விட்டுவிட்டு, சரேலென்று ஓடிப் போய் மஞ்சுவின் கையிலிருந்த பையைப் பிடுங்கி, அதன் நிப்பை சர்ரென்று இழுத்து, அதிலிருந்த பௌடரை கையில் நிரப்பிக்கொண்டு, பையை மஞ்சுவின் மேல் விட்டெறிந்து விட்டு, அதை எடுத்துக் கொண்டு ஓடி வந்தான்.

மிதிலா அதற்குள் எழுந்து அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். ராஜேஷ் கிட்டே வந்தான்.

"பரவாயில்லை ராஜேஷ். அதே சரியாயிடும்" என்றாள்.

ராஜேஷ் மிதிலாவின் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை. மிதிலாவின் தலையில் சிவந்த ரத்தத்தைப் பார்த்ததுமே அவன் இதயம் நடுங்கிற்று.

"இருங்க மேடம்! ரத்தம் வருது"— என்று மிதிலா தடுத்தபோதிலும் கேட்காமல் பௌடரை காயத்தின் மீது போட்டான். ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்து அதைப் பற்களுக்கிடையே அழுத்தி வைத்துக்கொண்டு சர்ரென்று கிழித்து அதை மிதிலாவின் தலைக்குக் கட்டினான். மிதிலா வேண்டாம் என்று நகரப் போன பொழுது இரு கைகளாலும் மிதிலாவின் தலையை மார்போடு அழுத்திக்கொண்டு அழுத்தமாய் நகர முடியாமல் செய்து கொண்டான். ஒரு நிமிஷம் மிதிலாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

வாயடைத்துப் போய் விட்டான்.

''என்ன? என்னவாச்சு? என்ன ரகளை?'' அதற்குள் அங்கே வந்த அர்ஜுனன் கேட்டான்.

''மிதிலா மேடத்திற்குத் தலையில் ஏதோ லேசாய் அடிப்பட்டு விட்டதற்கு வானமே இடிந்து விழுந்து விட்டாற் போல தாம் தூம் என்று தடபுடல் பண்ணுகிறான் ராஜேஷ்!''

எங்கோ பார்த்துக் கொண்டே சொன்ன வாசு, திரும்பவும் ஓரக்கண்ணால் மஞ்சுவைப் பார்த்தான். ஒரு நிமிஷத்திற்கு முன்னால் ஹை ஹீல்ஸ் ஷூ டக் டக்கென்று சப்தமிட, ஒய்யாரமாய் அங்கே வந்த மஞ்சுவுக்கு இக்காட்சியை பார்த்ததுமே முகம் களையிழந்து விட்டது.

''ராஜேஷுக்கு நன்றாய் பைத்தியம் பிடித்து விட்டது'' வாசு பக்கத்தில் வந்து நின்று கொண்டே சொன்னாள்.

''ஆமாம்! அந்தப் பைத்தியத்துக்குப் பேர் 'இஷ்டம்'— என்பாங்க. சில பேருக்கு சில பேர் மீது அப்படி வருவது வழக்கம். என்ன செய்வோம்?'' என்றான் சிலேடையாய். ஆனால் மஞ்சு அவன் வார்த்தைகளிலிருந்த சிலேடையைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. ராஜேஷை எள்ளும் கொள்ளும் வெடிக்கப் பார்த்துவிட்டு, அண்ணனிடம் போனாள்.

அர்ஜுனன் வந்து மிதிலாவுக்கு ஏற்பட்ட காயத்தைப் பார்த்தான். பிறகு ராஜேஷின் தோளில் தட்டிவிட்டு— ''ஓஹ்! இதற்கா நீ இவ்வளவு ஆர்பாட்டம் பண்ணினாய்? ஆனாலும் இவ்வளவு இரக்க சுபாவம் படைத்தவனாய் இருந்தால் எப்படி?'' என்றான்.

ராஜேஷ் இதொன்றையும் கேட்கும் நிலையில் இல்லை.

அதற்குள் விருந்தினர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். பார்ட்டி தொடங்கிவிட்டது. பிரின்ஸிபால்

18589
3513168

அந்த ஹாலில் பண்ணியிருந்த ஏற்பாடுகளைப் பார்த்து மகிழ்ந்தார்.

ராஜேஷிடம்— ''ரொம்ப நன்றாயிருக்கு! நீ இவ்வளவு நன்றாய் ஏற்பாடுகளைப் பண்ணுவாய் என்று எண்ணியிருக்கவில்லை'' என்று புகழ்ந்தார்.

''மிதிலா மேடம்தான் பண்ணினாங்க சார். நான் வெறுமே உதவி பண்ணினேன். அவ்வளவுதான்'' என்றான் ராஜேஷ் சங்கோஜத்துடன்.

''ராஜேஷ்! உன் இந்த சிரத்தையை படிப்பிலும் காட்டினால் உங்கப்பாவும் நானும் ரொம்ப சந்தோஷப் படுவோம்!''

''கண்டிப்பாய் சார்''— என்று ரஜேஷ் சொல்லிக் கொண்டிருக்கையில் வாசு யாரும் பார்க்காதவாறு அவன் முழங்கையில் கிள்ளினான். ராஜேஷ் வீலென்று அலறப் போனவன் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

பிரின்ஸிபால் தொலைவிற்கு போன பிறகு வாசு ராஜேஷை உலுக்கி எடுத்தான்.

''என்னடா, பெரிதாய் வாக்குறுதி தந்து விட்டாய், ரொம்ப நன்றாய் படிக்கிறதாய்!'' என்றான்.

''ராஜேஷ் ரொம்பவும் மாறிட்டான் இப்பல்லாம்'' என்றாள் மஞ்சு. ராஜேஷ் அவ்விருவருக்கும் எந்த பதிலும் சொல்லவில்லை. மௌனமாய் இருந்து கொண்டான்.

பார்ட்டிக்கிடையே ரங்கநாயகி மிதிலாவின் தலையிலிருந்த கட்டைப் பார்த்துவிட்டு— ''அப்பப்பா! ராஜேஷ் உனக்கு அடிப்பட்டு விட்டதுமே என்ன ஆர்பாட்டம் பண்ணிட்டான்? அவன் உனக்கு பண்ணுகிற சேவைகளைப் பார்த்தால் எனக்குக்கூட ஏதாவது அடிபட்டால் நன்றாயிருக்குமேன்னு தோணுது'' என்றாள்.

"ஆமாம். எனக்கு ரொம்ப சங்கோஜமாய் இருந்தது" என்றாள் மிதிலா. ராஜேஷ் அவ்வளவு ஆர்பாட்டமாய் காட்டிக் கொண்ட அந்த அன்பு மிதிலாவுக்கு மிகவும் தர்ம சங்கடத்தைத் தந்தது.

அதற்குள் ராஜேஷ் இரண்டு கப்புகளில் ஐஸ்கிரீமோடு வந்தான். மிதிலாவுக்கும் ரங்கநாயகிக்கும் அவற்றைத் தந்தான்.

"தாங்க்யூ" என்றார்கள் இருவரும்.

ராஜேஷ் உடனே போய் விடவில்லை. இருவர் நாற்காலிகளிலும் கைகளை ஊன்றிக் கொண்டு, சந்தோஷமாய்— "மேடம், பிரின்ஸிபால் ஏற்பாடுகள் எல்லாம் நன்றாயிருக்குன்னு என்னைப் புகழ்ந்தார். நான் அதற்கு காரணம் நீங்கள்தான்னு சொன்னேன்."

"இதென்னது? நான் என்ன செய்தேன்? எல்லாம் நீயேதானே செய்தாய்?"

ராஜேஷ் கொஞ்சம் பொறுத்து பதிலளித்தான்— "அப்படிப் பண்ணணுங்கிற உற்சாகத்தைத் தந்தது நீங்கதான்."

"நானா?"

"ஆமாம். ஏனோ நீங்கள் சொன்ன வேலையைச் செய்வது எனக்கு ரொம்பச் சந்தோஷமாயிருக்கு"— என்று சொல்லிவிட்டு சரேலென்று அங்கிருந்து ஓடிப் போய் விட்டான்.

ரங்கநாயகி மிதிலாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் மிதிலா அதொன்றையும் கவனிக்காமல் ஐஸ்கிரீம் சாப்பிடுவதில் முனைந்திருந்தாள்.

12

ஒரு வாரம் கழிந்தது.

மஞ்சு ராஜேஷின் அறைக்கு முன்னால் வந்தாள். வாசலிலிருந்து பார்த்த போதே ராஜேஷ் அறைக்குள் கட்டிலில் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தது தென்பட்டது. அறையில் மஞ்சு ஊகித்திருந்தாற் போலவே அந்தச் சமயத்தில் வாசு, சீனு, ரங்கன் வாரையும் காணோம். அந்தச் சமயம் தெரிந்துதான் மஞ்சு அங்கே வந்தாள்.

அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அச்சுற்றுப் பக்கத்தில் எந்த சந்தடியும் இல்லாமல் நிசப்தமாயிருந்தது.

மஞ்சுவிற்கு ஏதோ புரிபட்டாற் போலிருக்கவே, வாசலிலேயே நின்று கொண்டு ஒரு நிமிஷம் யோசித்தாள்.

"ராஜேஷ்" என்று கூப்பிட்டாள். பதில் இல்லை.

"ராஜேஷ். நான் வந்திருக்கேன்" அக்குரலில் பச்சாதாபம் இழையோடிற்று. பதிலில்லாததால், செருப்புகளைக் கழற்றிவிட்டு ஒய்யாரமாய் நடந்தபடி உள்ளே வந்தாள். கட்டிலுக்கருகில் வந்து நின்று கெஞ்சும் குரலில்— "ராஜேஷ், ஐயாம் சாரி! உன் மேல் அளவுகடமாய் கோபத்தை வரவழைத்துக் கொண்டு இந்த ஒரு வாரமாய் உன்னோடு பேசுவதை விட்டு விட்டேன். ரங்கன் என்னிடம் எல்லாம் சொன்னான். இத்தனைக்கும் காரணம் அந்த வாசுதான். அவன் பேச்சைக் கேட்டு நான் உன் மேல் கோபத்தை வரவழைத்துக் கொண்டு விட்டேன். தப்பு என்னோடதுதான். என்னை மன்னித்துவிடு."

ராஜேஷின் கோபம் இன்னும் தீரவில்லையோ அல்லது அவன் கோபம் தணிவதற்கு அந்தக் கெஞ்சல் போதவில்லையோ தெரியாது. ஆனால் அவன் மட்டும் போர்வைக்குள்ளிருந்து தலையைக் காட்டவில்லை.

ராஜேஷின் பிடிவாதத்தை மஞ்சு அறிவாள். அவனைக் கெஞ்சிக் கூத்தாடி இன்றைக்கு எப்படியாவது சரி, அவன் கோபத்தைத் தணித்து விட்டு, திரும்பவும் அவனோடு நேசம் பண்ணிக் கொண்டு விடவேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன்தான் வந்திருந்தாள். அதனால் அவன் கோபம் தணியாததைக் கண்டு அவளுக்கு ரோஷமோ வருத்தமோ ஏற்படவில்லை.

மஞ்சு தயங்காமல் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டு அவன் மேல் கையை வைத்தாள்.

அவன் அதைத் தட்டி விட்டாள். மஞ்சு அவன் மேல் சாய்ந்து கொண்டு அவன் மார்பில் தலையை வைத்துக் கொண்டாள்.

"ராஜேஷ்! என்னை மன்னித்து விடும்படிச் சொல்லவில்லையா? நீ மிதிலா மேடத்துக்கு அன்றைக்கு அப்படி சேவை பண்ணியதைப் பார்த்ததும் எனக்குப் பொறாமை ஏற்பட்டது. அதனால்தான் அண்ணாவிடம் அப்படி ரகளை செய்தேன். உன்னைத் திட்டினேன். உனக்குத்தான் தெரியுமே, எனக்குக் கோபம் வந்து விட்டால் வாய் சும்மா யிருக்காதுன்னு. மிதிலா மேடத்தை நான் திட்டியது நிஜந்தான். ஆனால் அது எதற்காகன்னு நீயே யோசித்துப் பார். எனக்கு உன்னைக் கண்டால் ரொம்பப் பிடிக்கும். அவன் வருவதற்கு முன்னால் நாமிருவரும் எவ்வளவு சந்தோஷமாய் இருந்தோம். உன்னோடு வாசு, ரங்கன் ரெண்டு பேரும் அதிகமாய் கழித்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அந்த வாசு இருக்காளே, அவன் திருட்டு கழுதை! அவன் மட்டும் உன்னோடு இல்லாமலிருந்தால் எல்லோரும் உன்னை கௌரவமாய்

பார்ப்பாங்க. நான் இதை எவ்வளவு தடவை சொன்னாலும் நீ கேட்க மாட்டாய். அந்த திருட்டு ராஸ்கல் என்ன சொன்னான் தெரியுமா? நீ... நீ மிதிலா மேடத்தைக் காதலிக்கிறாயாம்! உங்கப்பாவிடம் சொல்லி கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னாயாம். அவன் அப்படி சொன்னதால் எனக்கு ஆத்திரம் வந்து நான் ஏதேதோ சொல்லிட்டேன். அதுக்கெல்லாம் கூட எனக்குக் கோபம் இல்லை. அதெல்லாம் பொய் என்று ரங்கன் சொல்லிட்டான். ராஜேஷ்! உன்னைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்! என்னால் உன்னை விட்டுவிட்டு இருக்க முடியாது"— மஞ்சு அவன் மீது விழுந்து அவனைக் கட்டிக் கொண்டு விட்டாள்.

ராஜேஷ் அவளை உதறிவிடப் போனான். ஆனால் உதற உதற அவன் இன்னும் அழுத்தமாய் அவளை கட்டிக் கொள்ளத் தொடங்கினான்.

"ராஜேஷ்! ராஜேஷ்! என் மேல் கோபித்துக் கொள்ளாதே! நாமிருவரும் ஒன்று. அந்த வாசுவின் மூலமாய்தான் இதெல்லாம் நேர்ந்தது. அந்தக் குரங்கு உன்னைப் பற்றி என்னிடம் என்னென்னவோ சொல்லிற்று."— என்று அவன் மீது விழுந்து முகத்திலிருந்த துப்பட்டியை விலக்கினாள். சிவப்பாய், அகன்ற கண்களுடன் இல்லாமல் தூக்கிய முன்பற்களுடனும், குழிக் கண்களோடும் இருந்த முகம் தென்பட்டது. அந்த முகத்தைப் பார்த்ததுமே மஞ்சு விலென்று அலறி விட்டாள்.

முக்காடில் இருந்தது ராஜேஷ் இல்லை! வாசு!

இவ்வளவு நேரமாய் முக்காடிற்குள் இருந்து கொண்டு மஞ்சுவின் வேதனையையும், மன்னிப்புகளையும் கேட்டது ராஜேஷ் இல்லவே இல்லை! மஞ்சு ஒரு வினாடி நம்ப மாட்டாதவளாய் கண்கள் அகல விரிய பார்த்தாள். சரேலென்று எழுந்திருக்கப் போனாள். ஆனால் முடிய

வில்லை. அதற்குள் வாசுவின் கைகள் மஞ்சுவின் உடலைப் பாம்பைப் போல சுற்றிக்கொண்டு விட்டன.

அவன் கண்களில் அவமானம், வெறுப்பு, ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தன.

"நான்... நான் உன்னிடம் ராஜேஷ் மிதிலா மேடத்தை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னான்னு சொன்னேனா? எவ்வளவு பொய்! எவ்வளவுக்குத் துணிந்துட்டாய்!"

"ச ராஸ்கல்!" மஞ்சு கையைத் தூக்கி அவள் முகத்தின் மீது மாறி மாறி அடித்தாள்.

வாசு முகத்தை அப்பால் இழுத்துக் கொண்டு கையைத் தூக்கி மஞ்சுவின் முகத்தில் ஓங்கி அறைந்தான். அந்த அறையால் மஞ்சுவுக்கு கிர்ரென்று தலை சுற்றிற்று. விக்கித்துப் போய் சிலையாய் நின்று விட்டாள்.

"இதையெல்லாம் ராஜேஷ் நிஜம்னு நம்பிவிட மாட்டானா? எவ்வளவு பொய்க்காரி நீ! உன் நிஜ சொரூபம் தெரிந்து விட்டது!"

அதற்குள் மஞ்சு சட்டென்று அவன் கையில் கடித்து விட்டாள்.

"ஐயோ!" வீலிட்டான் அவன். அவன் பிடி கொஞ்சம் தளர்ந்ததுமே, மஞ்சு சரேலென்று கட்டிலிலிருந்து குதித்து வாசலை நோக்கி ஓடினாள். ஆனால் அடுத்த நிமிஷமே வாசு வேகமாய் மஞ்சுவின் பின்னாடியே வந்து அவளைப் பிடித்துக் கொண்டு தடுத்து விட்டான். வாசலைத் தாண்டி ஓடிப் போகவிருந்த மஞ்சுவின் தோளைப் பிடித்து இழுத்து நிறுத்தி சரேலென்று கதவுகள் இரண்டையும் சாத்தித் தாழிட்டு விட்டான்.

வாசு கதவைச் சாத்தாமலிருக்க வேண்டுமென்று விஸ்வ பிரயத்தனம் பண்ணினாள் மஞ்சு. ஆனால் பலிக்க வில்லை.

வாசு மஞ்சுவை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான்.

அந்த நேரத்தில் ஆசையாலும் ஆத்திரத்தாலும் துடித்துக் கொண்டிருந்த அவன் படமெடுத்தாடும் பாம்பாய் இருந்தான்.

மஞ்சுவால் அவன் கையை விடுவித்துக் கொள்ள முடிய வில்லை.

வாசு மஞ்சுவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு கட்டிலை நோக்கி வந்தான்.

"கொன்று போட்டு விடுகிறேன் பார் உன்னை" அவள் பலவந்தமாய் ஆக்கிரமித்துக் கொண்டபோது சத்தினாள் மஞ்சு.

"கொன்றுவிடு" கடகடவென்று சிரித்தான் அவன்.

மஞ்சு சட்டென்று கைகளைக் கூப்பி வணங்கினாள்.

"என்னை விட்டுவிடு"

"விடமாட்டேன். இப்படிக் கெஞ்சிக் கேட்கும்போது இன்னும் ஆசை அதிகமாகுது உன்மேல்"— அதற்கு பிறகு அவன் மஞ்சுவைப் பேச விடவில்லை.

சற்று முன்னால் துப்பட்டிக்குள் இருந்தது ராஜேஷ் என்றெண்ணிக் கொண்டு, அவன் உடலைத் தொட்டுத் தூண்டிவிட்ட மஞ்சு, தான் மூட்டிய தீக்குத் தானே சமித்தாகி விட்டாள்.

ஒரு மணி நேரம் கழிந்தது

கட்டில் மூலையில் முழங்கால்களுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தான் மஞ்சு. இப்பொழுது அந்த முகத்தில் மிடுக்கோ, உற்சாகமோ இல்லை. மனமொடிந்து போய்விட்ட பலவீனம் இருந்தது.

வாசு ஜன்னலுக்கருகில் நின்றபடி சிகரெட் குடித்துக் கொண்டிருந்தான். அவன் இடையிடையே ஓரக்கண்ணால் அழுது கொண்டிருந்த மஞ்சுவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அக்கண்களில் இருந்த ஆத்திரம் மட்டும் இன்னும் போகவில்லை. மஞ்சு ஏன் அழுது கொண்டிருந்தாள் என்று அவனுக்குத் தெரியும். இதுவே அவன் ஸ்தானத்தில் ராஜேஷ் இருந்திருந்தால் பரவசப்பட்டுப் போயிருப்பாள்! அவன் கழுத்தை பிடித்துக்கொண்டு தொங்கியிருப்பாள்! காதல் மொழிகளைக் கொஞ்சியிருப்பாள்! மஞ்சுவுக்குத் தன்மேல் எவ்வளவு அருவருப்பு உண்டு என்பதை சாட்டுமாட்டாய் அறிவான் அவன். ஆனால் சற்று முன்னால் போர்வைக்குள் ராஜேஷ் இருந்ததாய் நினைத்துக் கொண்டு, 'அந்த திருட்டுக் கழுதை, குரங்கு' என்று தன்னைத் திட்டியது அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. தன்னிடம் அல்லவளவு நல்லவளைப் போல நடித்துவந்த மஞ்சுவின் மனதில் இவ்வளவு நீச்சமான உதாசினம் இருந்தது இப்பொழுதுதான் தெரிந்தது அவனுக்கு! அந்த சமயத்தில் அப்படிச் செய்ல தறியாமல் அழுது கொண்டிருந்த மஞ்சுவைப் பார்த்த பொழுது, அந்த திமிரை அடக்கிவிட்டோம் என்று கொஞ்சம் திருப்தி ஏற்பட்டது அவனுக்கு.

அவன் ஓரடி முன்னுக்கு வந்து மஞ்சுவைப் பார்த்துச் சொன்னான்—

"நீ எவ்வளவு அழுதாலும் பிரயோஜனமில்லை. நடக்க வேண்டியது நடந்து முடிந்துவிட்டது. நம்மிருவருக்கும் சம்பந்தம் ஏற்பட்டு விட்டது!" என்றான்.

"ஓ" என்றாள் மஞ்சு நிமிர்ந்து பார்த்து! அக்கண்களில் இப்படைப்பில் உள்ள அருவருப்பு, ஏமாற்றம் அத்தனையும் ஒன்று சேர்ந்து கொண்டிருந்தாற் போல தோன்றிற்று.

அழுது கொண்டே கையைக் காட்டி, குரல் அடைக்கச் சொன்னாள்—

"நான்... நான் உன்னை விடமாட்டேன். அண்ணாவிடம் சொல்லி உன்னைக் கொன்று குழி தோண்டி விடுகிறேன் பார்."

"உன்னிஷ்டப்படி என்ன வேணும்னாலும் பண்ணிக்கொள். நான் உன்னுடையவன்" அவன் கைகளை நீட்டிக் கொண்டே மஞ்சுவின் மீது குனிந்தான்.

மஞ்சு புலியைக் கண்ட ஆட்டுக்குட்டியைப் போல கலரோடு ஒட்டிக் கொண்டாள் இன்னும்.

அவன் கட்டிலின் மேல் கைகளை ஊன்றிக் கொண்டே சொன்னான்— "இதப்பார்! உனக்கு ராஜேஷை கண்டால் பிடிக்கும். அந்த விஷயம் எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு உன்னைக் கண்டால் பிடிக்கும். அந்த விஷயத்தை நீ தெரிந்து கொள்.

"அண்ணா உன் காலை முறிக்காவிட்டால் பார்."

"என் மேல் கையை வைத்தால் மொதல்ல உங்கண்ணாவின் கைதான் முறியும். என்னைக் கொல்ல முயன்றால் உங்கண்ணாவின் உயிர்தான் போகும். உங்கண்ணா செத்த பிறகு உனக்கு திக்கில்லை. அப்ப நான் உன்னை என்ன வேணும்னாலும் பண்ண முடியும். நான் என்ன பண்ணினாலும் நட்டிக் கேட்கிறவங்க யாருமே இருக்க மாட்டாங்க."

அந்தச் சமயத்தில் குரூரமாய் இருந்த வாசுவின் முகத்தைப் பார்த்த பொழுது மஞ்சுவின் உடல் சிலிர்த்தது பயங்கரமாய், மிக விகாரமாய் இருந்தான். ஆவேசத்தில் உன்மத்தம் பிடித்தவனாய் இருந்தான்.

"உனக்கு ராஜேஷைக் கண்டால் ஏன் இஷ்டம்?" அவன் திடீரென்று நிமிர்ந்து கேட்டான்.

"ஏ! அவன் பெயரைக் கூட எடுப்பதற்கு அருகதை இல்லாத நீ அவன் காலடியில் கிடக்கிற நாய்" என்றாள் மஞ்சு.

அவன் சிரித்தான்— ''நிஜந்தான்! ஆனால் நாய்க்கு ரொம்ப நன்றி உண்டு. திருடர்களை வரவிடாது! எஜமானரைக் காப்பாற்றும். நானும் அதே போலவே ராஜேஷைக் காப்பாற்றியிருக்கேன்னு வை! நீ பலே கைகாரி! உனக்கு ராஜேஷை ஏன் பிடிக்கும்னு எனக்கா தெரியாது? அவன் வெள்ளை நிறம்! அவன் ஜேபியில் இருக்கிற பணம்! அவன் சொத்து! அந்தச் சொத்து மட்டும் எனக்கு இருந்திருந்தால் உன் கண்ணுக்கு நான் மன்மதனாய் தென்பட்டிருப்பேன்! நீ மட்டுமில்லை, உங்கண்ணா, அண்ணி ரெண்டு பேருமே உன்னை ராஜேஷின் மேல் இரையாய் வீசிக்கிட்டிருக்காங்க. மறுக்க முடியுமா உன்னால்? உங்க அண்ணி இருக்காளே, அவள் யாருக்காலது ஒரு சுப் காபி தன் கையால் தந்திருக்காளா? ஆனால் ராஜேஷுக்காக ஆயிரம் நடனை பாயசம் பண்ணுவாள்! ஏன்? உன் மூலமாய் வரப்போற சொத்துக்காக! உங்கண்ணாவுக்குக் கூட இதே புத்திதான்! நீங்கள மனிதர்கள் இல்லை! சுழுகுகள்! எங்கே பணம் இருக்கோ அங்கே வட்டமிட்டுக்கிட்டிருப்பீங்க. உங்களுக்குப் பணத்தில் தவிர வேறெதிலுமே அழகு தென்படாது ''

வாசு மஞ்சுவின் தோள்களை அழுத்தமாய் பிடித்து உலுக்கிக் கொண்டே சொன்னான்:

''உனக்கு வேண்டியது பணம்! அதானே? அந்தப் பணத்தை நான் நிறைய சம்பாதிக்கிறேன். அப்ப என்னைக் கல்யாணம் பண்ணிப்பாயா?''

''சட்'' மஞ்சு அவன் முகத்தின் மீது அறைந்தாள். ஒரு விநாடி வாசு கண்களில் நீப்பொறி பறக்க, முறைத்துப் பார்த்தபடி அப்படியே நின்று விட்டான். பிறகு தோள்களைக் குலுக்கிக் கொண்டே சொன்னான்:

''கல்யாணமா? உனக்கா? மொதல்ல கல்யாணம் பண்ணிக்கிற லட்சணமாவது உன்னிடம் இருக்காங் கிறேன்?''— என்றான் அலட்சியமாய்.

மஞ்சு கட்டிலை விட்டு இறங்கினாள். உடம்பில் கடுகளவும் சக்தியில்லாதபடி பண்ணி விட்டிருந்தான் வாசு. தூள்ளி விழுந்து தெரிந்தாள்.

வாசு ''ஆ'' என்று பிடித்துக் கொண்டான். மஞ்சு அவன் கையை உதறி அறைந்தான்.

''என் ஸ்பரிசம் அருவருப்பாய் இருக்கா?'' சிரித்தான்.

மஞ்சு புடவையை சரி பண்ணிக் கொண்டு அங்கிருந்து போய் விட்டாள்.

அந்த நடையில் வரும்போது இருந்த மிடுக்கு இல்லை. அல்வுடல் அனை இழந்து விட்டாற் போல இருந்தது. வாசு சிரித்தான். அவனுக்கு இப்பொழுது மிகத் திருப்தியாய் இருந்தது!

மஞ்சு போய் விட்டாள்.

கொஞ்ச நேரம் கழித்து ராஜேஷ் வந்தான்.

வாசு அறையை சீராக்கிக் கொண்டிருந்தான்.

ராஜேஷ் தாறுமாறாய் கிடந்த சாமான்களை யெல்லாம் பார்த்துவிட்டு— ''என்னடா வாசு? இங்கே ஏதாலது ரகளை நடந்ததா? யாராலது சண்டை போட்டுக் கிட்டீங்களா?'' என்று கேட்டான்.

''இங்கேயா? ஆமாம்'' தலையாட்டினான் வாசு.

''என்னவாச்சு?''

''என்னவாச்சா?'' வாசு ஒரு விநாடி பொறுத்து— ''வயசுக்கு அனை போடப்பட்டதுடா'' என்றான

''என்னது?'' ராஜேஷ் புருவங்களை சுறுக்கிக்கொண்டு கேட்டான்

''ஒன்றுமில்லை. ஆமாம், நீ என்ன இப்படி இருக் கிறாய்?'' என்றான் கிட்டே வந்து.

ராஜேஷ் நாற்காலியில் உட்கார்ந்து கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டே முழங்கால்களுக்கிடையே தலையைப் புதைத்துக் கொண்டான்.

''சொல்லு ராஜேஷ், என்னவாச்சு?''— கேட்டாள் வாசு.

''மிதிலா மேடத்துக்கு ஜுரம் வந்துவிட்டது.''

''அப்படியா? ஐயோ பாவம்!''

''நூற்றி ரெண்டு டிகிரி.''

''அடடா''

''டாக்டரிடம் காட்டவில்லையாம். அதுவே குறைந்து விடும் சும்மாயிருக்காங்களாம்.''

''போகட்டும், நாம்ப டாக்டரைக் கூட்டிட்டுப் போனால் என்ன?''

''நானும் அந்த காரியத்தை பண்ணினேன். ஆனால்—''

''ஆனால் என்னவாச்சுடா?''

''மேடம் என்னைத் திட்டினாங்க! இப்படிப்பட்ட பைத்தியக்கார வேலைகளை இனி ஒருநாளும் பண்ணாதேன்னு திட்டினாங்க. அங்கே ரங்கநாயகி மேடம்கூட இருந்தாங்க. ஜெயந்தி, சாந்திகூட இருந்தாங்க''— தலையை முழுவதுமாய் முழங்கால்களுக்குள் புதைத்துக் கொண்டு விட்டான் அவன்.

13

மிதிலா ஜுரவேகத்தில் முனகிக் கொண்டே கட்டிலில் புரண்டுப் படுத்தாள்.

''மேடம்'' சாந்தி கூப்பிட்டாள்.

''உம்'' தூக்கமோ மயக்கமோ இரண்டுமில்லாத குரலில் பாரமாய் வந்தது.

''இந்த மருந்தைச் சாப்பிடுங்க''

''அப்பப்பா! உடம்பு வலி! தலை வெடித்து விடும் போல விண்விண்ணென்று தெரிக்கிறது!''

அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்த ஜெயந்தி மிதிலாவின் நெற்றியில் தொட்டுப் பார்த்துவிட்டு— ''ஐயோ ஜுரம் அனலாய் கொதிக்கிறது'' என்றாள்.

''மருந்து சாப்பிடுங்க மேடம்''— சாந்தி கட்டிலில் உட்கார்ந்து மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டே சொன்னாள்.

''வேண்டாம். எனக்கொன்னும் வேண்டாம்! ஐயோ! அம்மா!'' மிதிலா ஜுர திவிரத்தில் முனகிக் கொண்டிருந்தாள்.

சாந்தி நேரத்தைப் பார்த்தாள்.

மணி இரவு பதினொன்று.

கட்டிலில் மிதிலா அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டிருந்தாள்.

'உங்க பாட்டியைக் கூட்டிட்டு வரலாமா?'' என்றாள் சாந்தி.

''இப்பவா? எங்க பாட்டி படுத்துட்டால் எழுப்ப யாராலும் முடியாது. ராத்திரி வேளையில் யார் எவ்வளவு பெரிதாய் கத்தினாலும் எழுந்திருக்க மாட்டாங்க. கும்ப கர்ணனைப் போல தூங்குவாங்க'' என்றாள் ஜெயந்தி.

''இப்ப என்ன பண்றது?'' சாந்தி செய்வதறியாது பார்த்தாள். மிதிலா முனகாமல் நிம்மதியாய் தூங்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை.

மிதிலாவுக்கு நாலைந்து நாட்களாகவே ஜுரமாய் இருந்தது. ஆனாலும் பொருட்படுத்தாமல், அதுவே குறைந்து விடும் என்றெண்ணி சாதம் சாப்பிட்டுக் கொண்டும், காலேஜுக்குப் போய்க்கொண்டும் இருந்தாள்.

ஆனால் மூன்றாம் நாள் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை.

அன்று காலேஜுக்குப் போகவில்லை.

அன்றுதான் காலேஜிலிருந்து சாரதா, ரமா மேடம்கள் ரங்கநாயகியோடு சேர்ந்து மிதிலாவைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் வந்து உட்கார்ந்து விசாரித்துக் கொண்டிருந்த போதே ராஜேஷ் வந்தான்.

"மேடம்! ராஜேஷ் வந்திருக்கான்" என்றாள் ஜெயந்தி.

"என்னவென்று கேள்" என்றாள் மிதிலா.

அதற்குள் ராஜேஷ் உள்ளே வந்தான். அவன் கையில் மெடிகல் கிட் இருந்தது. கூடவே டாக்டரும் வந்தார்.

"டாக்டர்! இவங்கதான் எங்க மேடம்! இவங்களுக்கு தான் ஜுரமாய் இருக்கு" என்றான். மிதிலாவிடம்— "மேடம்! உங்களுக்கு ஜுரமாய் இருக்கு இல்லையா! அதனால் டாக்டரைக் கூட்டிட்டு வந்தேன்" என்றான்.

அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த எல்லோரும் ஒரு நிமிஷம் அவன் காட்டிய சுவாதினத்திற்கும், தைரியத்திற்கும் வியப்படைந்து போனார்கள். மிதிலாவின் முகம் சிவந்தது.

நாற்காலியை விட்டு எழுந்து நின்று— "ராஜேஷ்" என்று கூப்பிட்டாள்.

டாக்டரிடம் பேசைத் தந்து கொண்டிருந்த ராஜேஷ் திரும்பிப் பார்த்தான்.

"உன்னை டாக்டரைக் கூட்டிட்டு வரச் சொல்லி யார் சொன்னாங்க?"

ஏற்கனவே ஜுர வேகத்தால் சிவந்திருந்த மிதிலாவின் கண்கள் இன்னும் சிவந்து விட்டன.

"மேடம்" ராஜேஷ் தடுமாறினான்.

"சொல்லு! நான் உன்னை டாக்டரைக் கூட்டிட்டு வரச் சொன்னேனா?"

அவன் இல்லை என்று தலையாட்டினான்.

"பின்னே எதற்காகக் கூட்டிட்டு வந்தாய்? இப்படிப் பட்ட பைத்தியக்கார வேலைகளை இனி ஒருபோதும் பண்ணாதே. போ." என்ற மிதிலா டாக்டரை நோக்கித் திரும்பினாள்— "மன்னிச்சுக்குங்க. அவன் எனக்குத் தெரியாமல் உங்களைக் கூப்பிட்டு விட்டான். எனக் கொண்ணும் ஜுரம் இல்லை."

"தட்ஸால் ரைட்"— அதற்குள் விஷயம் கொஞ்சம் புரிபட்டுவிட்ட டாக்டர் சொன்னார்:

ராஜேஷின் முகம் வெலவெலத்துப் போய்விட்டது.

ஆசையாய் ஓடிவந்த சிறு குழந்தையைப் பெற்ற தாய் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாற் போலிருந்தது அவனுக்கு.

"ராஜேஷ், போகலாம் வா"

ராஜேஷின் தோளைச் சுற்றிலும் கைகளைப் போட்டு அவனை வெளியே அழைத்துச் சென்றார்.

ராஜேஷ் தலை குனிந்து கொண்டே போய் விட்டான்.

"என்ன மிதிலா? பாலம் அவனை அப்படி எரிந்து விழுந்தாயே! ஏன்?" என்றாள் ரமா.

"பிரியமான சிடன்! உன் உடம்பு நன்றாய் இல்லையென்று டாக்டரை கூட்டிட்டு வந்திருக்கிறான். மொதல்ல இப்படிப்பட்ட சிடர்கள் இருப்பதே பெருமை அல்லவா?"

''ரங்கம்!'' மிதிலா கோபமாய் பார்த்தாள்.

''ஓகே. ஓகே!'' ரங்கநாயகி ஆறுதலாய் சொன்னாள்.

மிதிலா கட்டிலில் சரிந்தாள்.

அதற்குப் பிறகு அங்கே கொஞ்ச நேரம் ராஜேஷைப் போன்ற பக்தர்களினால் உபாத்தியாயர்களுக்கு வரும் தொல்லைகளைப் பற்றிய சர்ச்சை நடந்தது. அவர் களுடைய அன்பும் வெறுப்பும் துன்பகரமான விஷயங்கள் தாம் என்று ரமா முடிவெடுத்தாள்.

அன்றிரவு ரங்கநாயகி ஊருக்குப் புறப்பட்டாள். ரங்க நாயகியின் அத்தை பெண்ணிற்குத் தஞ்சாவூரில் கல்யாணம் நடக்கவிருந்தது. ஜுரமாய் இருந்த மிதிலாவை விட்டு விட்டுப் போக ரங்கத்திற்குக் கஷ்டமாய்தான் இருந்தது. ஆனால் கண்டிப்பாய் போக வேண்டிய நிருமணம். அதனால் மிதிலாவை ஜெயந்தி சாந்தி இருவரிடமும் ஒப்படைத்து விட்டுப் போனாள். தான் திரும்பி வரும் வரை அவ்விருவரும் மிதிலாவைப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு ஆயிற்று.

சாந்தி மிதிலாவின் வீட்டில் படுத்துக் கொள்வதாய் சொன்னபொழுது சூர்யகிரண் ஒப்புக் கொண்டான். மேடத்திற்கு ஜுரமாய் இருந்ததால் ராத்திரி வேளையில் ஏதாவது அவசியம் ஏற்பட்டால் துணையாய் இருக்கும் என்று வேலைக்காரப் பையன் பாலாஜியையும் கூட அங்கேயே படுத்துக் கொள்ளும்படிச் சொன்னான்

நள்ளிரவு நேரத்தில் மிதிலா ஜுர தீவிரத்தில் ஏதேதோ புலம்பியதைப் பார்த்து பயந்து போன சாந்தி வாசலுக்கு வந்து அங்கே படுத்துக் கொண்டிருந்த பாலாஜியை எழுப்பினாள்.

''டேய் பாலாஜி! எழுந்திரு! போய் அண்ணாவைக் கூட்டிட்டு வா'' என்றாள்.

அவன் ஓட்டமாய் ஓடிப் போய் விட்டு அரை மணியில் திரும்பி வந்தான். அவனோடு கூடவே வந்த சூர்ய கிரணைப் பார்த்த பிறகுதான் சாந்திக்கும் ஜெயந்திக்கும் நிம்மதி ஏற்பட்டது.

''என்ன சாந்தி? என்னவாச்சு?'' என்று கேட்டான் சூர்யகிரண் வந்ததுமே.

''மேடத்திற்கு ஜுரம் அதிகமாய் இருக்கு. வா! வந்து பார்.'' சாந்தி அண்ணனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

கட்டிலில் மிதிலா அப்படியும் இப்படியும் புரண்டு தொண்டே முனகிக் கொண்டிருந்தாள்!

''அம்மா! அண்ணா!'' என்று தாக்குத்திலேயே புலம்பி கொண்டிருந்தாள்.

சூர்யகிரண் கட்டிலுக்கருகில் வந்து ஒரு வினாடி கூர்ந்து பார்த்தான் நெற்றியில் கை வைத்துப் பார்த்து விட்டு— ''ஐயோ அனலாய் கொதிக்கிறதே!'' என்றான்

''நான் இதோ வரேன்'' என்று போய் விட்டான்.

கால் மணி நேரத்தில் அவன் தன் குடும்ப டாக்டரான ரங்கநாதனைக் கூட்டி வந்தான்.

அவர் மிதிலாவைப் பரிசோதித்து விட்டு உடனடியாய் இரண்டு இஞ்ஜெக்ஷன்களைத் தந்தார். மருந்துகளைத் தந்தார்.

சூர்யகிரணோடு அப்பால் வந்து கொண்டே— ''நிமோனியா! ஜாக்கிரதையாய் இருக்கணும்'' என்று எச்சரித்து விட்டு போனார்.

சூர்யகிரண் டாக்டரை அனுப்பி விட்டு உள்ளே வந்தான். இஞ்ஜெக்ஷன் தந்த பிறகு மிதிலாவின் உடம்பில் கவிப்பு கொஞ்சம் அடங்கிற்று. தன்னை மறந்து

தூங்கினாள். சாந்தியும் ஜெயந்தியும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் உட்கார்த்திருக்கேன்" என்றான். அவ்விருவரும் போய் கட்டிலில் படுத்துக் கொண்டார்கள்.

சூர்யகிரண் வராந்தாவிலிருந்த பிரம்பு நாற்காலிகள் இரண்டைக் கொண்டு வந்து கட்டிலுக்கருகில் போட்டுக் கொண்டான். ஒன்றில் உட்கார்ந்துகொண்டு, இன்னொன்றில் கால்களை நீட்டிக் கொண்டான்.

சூர்யகிரண் கைக்கடியாரத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். மணி இரண்டு. இரண்டரை மணிக்கு மிதிலாவுக்குத் திரும்பவும் மருந்து கொடுக்க வேண்டும். அவன் கண்களின் மீது பாரமாய் தூக்கத் திரைகள் வந்து அழுத்திக் கொண்டிருந்தன. பலவந்தமாய் அவற்றை உதறிக் கொண்டு விழித்துக் கொண்டிருக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தான். இந்தப் பெண்ணிற்கு நிமோனியாவா! அவன் வரத் தாமதமாகியிருந்தால்? டாக்டர் வந்து மருந்து தராமலிருந்திருந்தால்? ஜெயந்தியும் சாந்தியும் சின்னப் பெண்கள்! அவர்களால் என்ன செய்ய முடியும்? அவன் வீட்டிலேயே இருந்தது நல்லதாய் போயிற்று! யோசித்துக் கொண்டிருந்த பொழுதே அவன் கண்கள் மயக்கத்தோடு மூடிக் கொண்டன.

சூர்யகிரணுக்கு எங்கிருந்தோ ஏதோ விநோதமான சப்தம் கேட்டது. சுகமான தூக்கத்தில் ஆழ்ந்து போய்க் கொண்டிருந்த அவன் அதைக் கேட்டதுமே திடுக்கிட்டு எழுந்து சரியாய் உட்கார்ந்து கொண்டான். மிதிலா கட்டிலில் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். அந்த அழுகை இதயத்தைப் பிளக்கும்படியாய் இருந்தது.

அவன் கலக்கமடைந்தான்.

"மிதிலா" கூப்பிட்டான்.

மிதிலா பதில் பேசவில்லை.

"என்னவாச்சு? ஏதாவது வருத்தமாய் இருக்கா?"— பரிவாய் கேட்டான். மிதிலா பதில் சொல்லவில்லை. அழுது கொண்டேயிருந்தாள். அந்த அழுகை கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாகி வெள்ளத்தைப் போல பொங்கிக் கொண்டிருந்தது. அவன் நெகிழ்ந்து போனான். ஒரு நிமிஷம் என்ன செய்வதென்று தெரியவில்லை. வெறுமே பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை அவனால் பிறகு சங்கோஜத்தை விட்டுவிட்டு எழுந்து வந்து மிதிலாவின் தோளில் மென்மையாய் தட்டினான்.

மிதிலா இன்னும் அழுது கொண்டேயிருந்தாள்.

அந்த அழுகை அவன் இதயத்தை விநோதமாய் தாக்கிற்று. அவனை நெக்குறுகச் செய்தது. அந்த அழுகை சாதாரணமாய் இல்லை. இதயத்தைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தது. தனிமை என்ற அதள பாதாளத்திற்குள் குறுகிப் போய்க் கொண்டிருக்கும் ஒருத்தரின் ஆதரவில்லாத ஓலமாய் இருந்தது. பிரியமான ஒருவரைக் கண் முன்னாடியே இழந்துவிட்ட தினமான குரலாய் இருந்தது.

அந்த அழுகை சூர்யகிரணின் மனதை நெகிழ்த்து விட்டது. அந்தச் சமயத்தில் தான் அவனுக்கு வேற்று மனிதன் என்ற நினைவைக்கூட மறக்கச் செய்துவிட்டது. அவள் மனதைக் கசக்கிப் பிழியும்படியான வருத்தத்தில் இருக்கிறாள்! தான் அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று தோன்றி விட்டது.

அவன் தயக்கத்தை விட்டு மிதிலாவின் தோளில் கையை வைத்து— "மிதிலா! மிதிலா!" என்று தட்டிக் கூப்பிட்டான்.

அழுது கொண்டிருந்த மிதிலா அந்த அழைப்பைக் கேட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தாள். அக்கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது.

அவளை பார்த்ததுமே சரேலென்று எழுந்திருந்து— ''வந்துட்டீங்களா நீங்கள்? இவ்வளவு நாளாய் என்னை விட்டுட்டு எங்கே போனீங்க? என் ஞாபகம் இப்பத்தான் வந்ததா?''— என்று சட்டென்று அவன் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கொண்டு அவன் வயிற்றில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவன் மிதிலாவின் பேச்சின் வேகத்தையும், அவ்வாறு செய்த செயலுக்கும் வாயடைத்துப் போய் நின்று விட்டான்.

''என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடித்திருக்கா? உண்மையைச் சொல்லுங்கள்! உண்மையைச் சொல்லுங்கள்'' என்றாள்.

சூர்யகிரணால் பதில் பேச முடியவில்லை.

''சொல்லுங்கள்! சொல்லுங்கள்'' மிதிலா கைகளை நீட்டி அவனைத் தன்மீது இழுத்துக் கொண்டாள். சூர்ய கிரண் துள்ளி கட்டில் மேல் சரிந்தான். மிதிலா அவன் மேல் சாய்ந்து அவன் கழுத்து வளைவில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். ''நான் எவ்வளவு நரக வேதனையை அனுபவிச்சிட்டிருக்கேன்னு உங்களுக்குத் தெரியுமா? எப்படித் தெரியப் போறது உங்களுக்கு?'' என்றாள்.

மிதிலா அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளைக் கட்டிக்கொண்டு, அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். ''நீங்கள் என்னிடமே இருக்கேன்னு சொல்லுங்கள். என்னை விட்டு விட்டுப் போக மாட்டேன்னு சொல்லுங்கள். என்னால் உங்களை விட்டு விட்டு இருக்க முடியாது,'' என்று சொல்லிக் கொண்டிருந்த

பொழுதே திரும்பவும் அழுகை அலைகள் தீவிரமாய் வந்து விட்டதால் அந்த வார்த்தைகளை விழுங்கி விட்டது.

சூர்யகிரண், ஜ்வர தீவிரத்தால் அழுது தவித்துக் கொண்டிருந்த அவளைக் கைகளால் அணைத்துப் பிடித்துக் கொண்டான். சிறு குழந்தையை சமாதானப் படுத்துவது போல தேற்றினான்.

வெதுவெதுப்பான கூட்டைப் போலிருந்த அவன் உடலும், சந்தனக் காப்பிட்டாற் போலிருந்த அவன் வார்த்தைகளும், நிம்மதியை ஏற்படுத்திய அவன் ஸ்பரிசமும் மிதிலாவைக் கொஞ்ச நேரத்தில் விநோதமாய் அமைதியுறச் செய்தன.

''அண்ணாவுக்குப் பிடிக்கா விட்டாலும் சரி, நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்'' என்றாள்.

அவன் விறைப்பாய் உட்கார்ந்து கொண்டான்.

''தெரிஞ்சுதா? நாம்ப... நாம்ப... நாளைக்கே கல்யாணம் பண்ணிக்கொண்டு விடலாம். சரிதானே?''

அவன் பதில் பேசவில்லை.

''சரின்னு சொல்லுங்க''

''சரி, சரி'' என்றான் அவன் மெல்லிய குரலில்.

''நாளைக்கு வேறு விதமாய் சொல்லிட மாட்டீங்களே?''

''ஊஹூம்! மாட்டேன்''

''நாமிருவரும் கல்யாணம் பண்ணிக்கப் போறோம் இல்லையா?''

''ஆமாம்.''

''பாருங்கள்! நீங்கள் திரும்பவும் அம்மா பேச்சைக் கேட்டு ஒத்திப் போடக் கூடாது. என் தலை மேல் கையை வைத்து சத்தியம் போடுங்கள்.''

"மிதிலா"

"நீங்க போடுங்க. என் மேல் இஷ்டமிருந்தால் போடுங்க."

மிதிலா கேட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை. அவன் மிதிலாவின் தலை மேல் கையை வைத்தான்.

மிதிலா அவன் மடியில் ஒதுங்கி, அவன் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டு கீரையாய் துவண்டு போனாள்.

கொஞ்ச நேரத்தில் மிதிலா உறங்கி விட்டாள். அவள் நன்றாய் தூங்கி விட்டதை உணர்ந்த சூர்யகிரண் மிதிலாவை மெதுவாய் நகர்த்தி தலைக்குத் தேய் தலையணையை வைத்துப் படுக்க வைத்தான். அவள் கட்டிலைவிட்டு எழுந்திருக்கப் போன பொழுது மிதிலாவின் கை அவன் சட்டையை மார்பிற்கருகில் உள்ளங்கையால் அழுத்தமாய் பற்றிக் கொண்டது. அவள் மெதுவாய் அதை விடுவித்துக் கொள்ளப் போனான். தூக்கத்தில் நகர்ந்த மிதிலா கையை விடவில்லை. இன்னும் அழுத்தமாய் எங்கே அந்த சட்டை நழுவிப் போய் விடுமோ என்பது போல பற்றிக் கொண்டாள். அவன் கட்டிலில் மிதிலாவிற்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டான்.

14

மறுநாள் மிதிலாவுக்கு ஜுரம் கொஞ்சம் தணிந்தது. ஜெயந்தியும் சாந்தியும் காலேஜுக்குப் போகாமல் அங்கேயே இருந்து விட்டார்கள். பிற்பகலில் ரமா வந்து பார்த்து விட்டுப் போனாள்.

மாலையில் மிதிலாவுக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று. எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

ஜெயந்தி ஃபேனைப் போட்டாள். மிதிலா கூந்தலை அவிழ்த்துக் கொண்டாள். இரண்டு நாட்களாய் தலை வாரிக் கொள்ளவில்லை. கேசங்கள் சிக்காகி விட்டிருந்தன. சாந்தி சீப்பைக் கொண்டு வந்து தந்தாள்.

அதற்குள் சூர்யகிரண் வந்தான். கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்த மிதிலாவைப் பார்த்துவிட்டு— "வெரிகுட் ஜுரம் கொஞ்சம் விட்டு விட்டது இல்லையா?" என்றான்.

மிதிலா அவனை வணங்கினாள். "உட்காருங்கள். ராத்திரி நான் ரொம்ப ரகளைப் பண்ணிட்டேனாமே? சாந்தி சொன்னாள். நீங்கள் வந்து டாக்டரைக் கூட்டிட்டு வந்திங்களாம். யார் யாரோ வந்தாங்க. ஏதோ ரகளை வந்தது. என்னால் உட்கார முடியலை. என் உடம்பு எங்கேயோ உருண்டுப் போயிட்டிருந்தாற் போல தோன்றிற்று" என்றாள்.

சூர்யகிரண் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு மிதிலாவுக்கெதிராய் உட்கார்ந்து கொண்டான்.

"இப்ப எப்படி இருக்கு?"

"பரவாயில்லை."

"ராத்திரி எங்களை ரொம்பவும் கலங்கடிச்சுட்டீங்க" —முறுவலுடன் சொன்னான்.

மிதிலா தலை குனிந்தாள். "நான் எப்போதுமே அப்படித்தான். எனக்குச் சாதாரணமாய் ஜுரம் வராது— எப்பவாவது வந்து விட்டாலோ வீட்டில் இருக்கிறவங்களையெல்லாம் கலங்கடித்து விடுவேனாம். அம்மா எப்பொழுதும் சொல்லிட்டிருப்பாங்க. எனக்கு எது வந்தாலும் நிமிஷத்தில் வந்துவிடும்."

சூர்யகிரண் தலை குனிந்தவாறு சொல்லிக் கொண்டிருந்த மிதிலாவின் முகத்தைப் பரவசத்துடன் பார்த்துக்

கொண்டிருந்தான். ஜுரத்தில் இளைத்துவிட்ட அம்முகம் அந்த சந்தியா வேளையில் அவன் இதுவரை எந்தப் பெண்ணிடமும் பார்த்திராத அளவுக்கு மிக அழகாய் தோன்றிற்று. வழுவழுப்பான அந்தக் கன்னங்களும், அகலமான கண்களும், நீண்ட மூக்கும், விரிந்த அதரங்களும் அம்முகத்தில் அழகைக் காட்டிலும் ஏதோ கவர்ச்சியைத் தந்து கொண்டிருந்தன! மிதிலாவின் பண்பிற்கு அம்முகம் எடுத்துக் காட்டாய் இருந்தாற் போலிருந்தது.

ராத்திரி மிதிலா செய்த ரகளையும், அந்த அழுகையும் அவளுக்குக் கொஞ்சமும் நினைவில் இல்லை என்பது அவளைப் பார்த்தாலே புரிந்தது. சூர்யகிரண் கூட அதை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அது ஒரு மறக்க முடியாத அனுபவம்! அது தன் இதயத்தோடேயே இருந்து கொள்ள வேண்டியது என்று தோன்றிற்று.

''மருந்து சாப்பிட்டீங்களா?'' கேட்டான் அவன்.

''சாப்பிட்டேன்'' மிதிலா நிமிர்ந்து சாந்தியைப் பார்த்துச் சிரித்தாள்.

''நான் மறந்துட்டாலும் சாந்தி மறந்து போக விட மாட்டாள்.''

''நான் இப்போது இங்கே ஏன் வந்தேன் தெரியுமா?''

''நான் ராத்திரி பண்ணிய ரகளையைப் பற்றிச் சொல்றதுக்கு.''

அவன் ஏமாற்றமடைந்தவனாய் பார்த்தான்.

''இல்லை.''

நான் மருந்து சாப்பிட்டேனா இல்லையா, ராத்திரி எங்கே திரும்பவும் உங்களுக்குத் தொல்லை ஏற்பட்டு விடுமோன்னு...''

மிதிலா வார்த்தைகளை முடிப்பதற்குள்ளாகவே அவன் ''இல்லை'' என்றான்.

''பின்னே?''

''உங்கம்மாவின் அட்ரஸைக் கேட்டு வாங்கிக்கொண்டு அவங்களுக்கு அர்ஜென்ட்டாய் புறப்பட்டு வரச் சொல்லி டெலிகிராம் தருவதற்கு''

''மைகாட்'' மிதிலா மார்பின் மீது கையை வைத்துக் கொண்டாள்.

''தல்லவேளை! அந்தக் காரியத்தை என்னிடம் சொல்லாமல் பண்ணாமல் போனீங்களே! அம்மா இதைக் கேட்டால் அடுத்த ரயிலிலேயே ஓடி வந்து விடுவாங்க.''

''வரட்டும்''

''வந்து உடனே என்னைப் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்படச் சொல்லுவாங்க! ஜெயந்தி! கொஞ்சம் தேநீர் போட்டுக் கொண்டு வருகிறாயா?''

ஜெயந்தி தலையாட்டி விட்டுப் போனாள்.

மிதிலா கூந்தலை இரண்டாய் பிரித்துக் கொண்டு தலையிலிருந்த சிக்கை எடுத்துக் கொண்டிருந்தாள். அதற்குள் கையில் ஏதோ தட்டுப்பட்டது.

'என்ன இது?' என்று யோசித்தபடியே அதை எடுக்க முயன்றாள். வரவில்லை.

''சாந்தி! ஜடையில் அதென்னது? சிக்கிக் கொண்டிருக்கிறது. வரவில்லை'' என்றாள்.

''நான் எடுக்கிறேன். இருங்க மேடம்'' என்று சாந்தி மிதிலாவிடம் போய் விரல்களால் மிதிலாவின் கூந்தலோடு சிக்கிக் கொண்டிருந்த அந்தப் பொருளை ஜாக்கிரதையாய் எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டாள்.

''என்ன அது?'' என்றாள் மிதிலா.

''பட்டன்'' என்றாள் சாந்தி.

''எங்கே காட்டு?'' மிதிலா வாங்கிப் பார்த்தாள். அதை வியப்போடு பார்த்துக் கொண்டே— ''இந்த பட்டன் தலையில் எப்படி வந்தது?'' என்றாள்.

"எங்கே? அடடா! இது அண்ணாவின் ஷர்ட் பட்டன்."

சட்டென்று அதை அடையாளம் தெரிந்து கொண்டு இரைந்து சொன்னாள் சாந்தி.

"ஷர்ட் பட்டனா?" மிதிலா திடுக்கிட்டாள். "உங்க அண்ணாவுடையதா?"

"ஆமாம் மேடம்! இது அண்ணாவுடையதுதான்! ராத்திரி போட்டுக் கொண்டிருந்தாரே அந்த சட்டையோடது."

மிதிலா கையிலிருந்த அந்த பட்டனையும், எதிரே நாற்காலியில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த சூர்யகிரணையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அவன் மிதிலாவின் கையிலிருந்த பட்டனைப் பார்த்ததுமே ஒரு நிமிஷம் தடுமாறினான்.

அதற்குள் ஜெயந்தி சமையலறையிலிருந்து, "சாந்தி, சர்க்கரை டப்பா எங்கே இருக்குன்னு தெரியலை எனக்கு" என்று கத்தினாள்.

"இதோ வரேன்" என்று சாந்தி ஓடினாள்.

மிதிலா சூர்யகிரணையே பார்த்துக்கொண்டிருந்தாள். அக்கண்களில் ஆயிரம் கேள்விகளும் கோடி அர்த்தங்களும் தென்பட்டுக் கொண்டிருந்தன.

சூர்யகிரண் நாற்காலியில் முன்னுக்குக் குனிந்து உட்கார்ந்து கொண்டே சொன்னான்:

"பாருங்கள்! ராத்திரி ஜுர தீவிரத்தில் நீங்கள் அழுதீர்கள்."

"நான்..." இதைக் கேட்டதும் வாயடைத்துப் போய் விட்டாள் அவள்.

"அந்த அழுகை எப்படி இருந்ததுன்னு என்னால் சொல்ல முடியாது! நீங்க ஏதோ வெளியே சொல்ல முடியாத வருத்தத்திற்கு ஆளாகி, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் வலைவலைத்துப் போயிட்டிருப்பதாய் தோணுது! நான் அப்ப உங்களைத் தேற்றினேன். நீங்க என்னிடம் நெருக்கமாய் வந்திங்க. நீங்க... நீங்க... என் கைகளில் அப்படியே தூங்கிப் போயிட்டீங்க."

மிதிலா பதில் பேசவில்லை.

அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனும் மிதிலாவின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவருக்குமிடையே இரண்டு நிமிஷம், இந்த சகல உலகமும் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டாற் போலவும், இந்த இயற்கை முழுவதுமே தாமிருவருமே ஆகி விட்டாற் போலவும் தோன்றிற்று. அங்கே நிலவியிருந்த நிசப்தம் அவ்விருவரையும் ஒன்று சேர்த்துக் கொண்டிருந்த ஏகாந்தம்! அவர்களின் மனங்கள் ஓய்வில்லாத ஒரு மகா சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருந்தன. இருவரும் வாயடைத்துப் போனவர்களாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் பரிச்சயமில்லாதவர்கள்தான். ஆனால் எவ்வளவோ நாட்களாய் ஒருவரையொருவர் தெரிந்தவர்களைப் போன்ற ஒரு உணர்ச்சி இருவரையும் ஒன்று சேர்த்துக் கொண்டிருந்தது.

அதற்குள் சாந்தி ட்ரேயில் தேநீருடன் வந்தாள்.

சூர்யகிரண் சாந்தி வரும் ஓசையைக் கேட்டதுமே நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து சரியாய் உட்கார்ந்து கொண்டான்.

சாந்தி அவ்விருவருக்கும் தேநீர் தந்தாள். தனக்கு எடுத்து வருவதற்காக சமையலறைக்குள் போனாள்.

"நான்... நான்— ஏதாவது பேசினேனா?" என்றாள் மிதிலா மெல்லிய குரலில்.

அவன் தலையாட்டினான்.

''என்னவென்று?''

அவன் பதில் சொல்லவில்லை.

''சொல்லுங்கள். என்ன சொன்னேன்?''

''ஒன்றும் சொல்லலை.'' அவன் தேநீரைக் குடித்துக் கொண்டே ஜன்னல் வழியாய் எங்கோ பார்த்துக் கொண்டே சொன்னான்.

''ப்ளீஸ் சொல்லுங்க''

சூர்யகிரண் சட்டென்று மிதிலாவை நோக்கித் திரும்பினான்.

நேராய் அவள் கண்களையே பார்த்தபடி கேட்டான்: ''ஒரு விஷயம் கேட்கட்டுமா? ஒளிவு மறைவில்லாமல் பதில் சொல்லுவீங்களா?''

''கேளுங்கள், சொல்றேன்''

''நீங்கள்... நீங்கள் யாரையாவது கல்யாணம் பண்ணிக்கணும்னு இருந்தீங்களா? அந்தக் கல்யாணம் நடக்கவில்லையா? அந்த நபரை உங்கம்மா முதலியவர்கள் விரும்பவில்லையா?''

மிதிலா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நீங்கள் அதைத்தான் சொன்னீங்க. ஜுர தீவிரத்தில் அந்த ஆள் நான்தான்னு எண்ணிட்டீங்க. அதனால்தான் என்னிடம் நெருங்கி வந்தீங்க.''— அவன் குரல் எவ்வளவு மந்திர ஸ்தாயியில் இருந்ததோ அத்தனைக்கத்தனை கம்பீரமாகவும், தெளிவாகவும் இருந்தது. ஜெயந்தியும் சாந்தியும் தேநீர் கோப்பைகளை எடுத்துக் கொண்டு அங்கே வந்தார்கள். சூர்யகிரண் எங்கோ பார்த்தபடி தேநீர் குடித்துக் கொண்டிருந்தான். மிதிலா மௌனமாய் கம்பீரமாய் இருந்தாள்.

15

ஜுரம் தணிந்த பிறகு மிதிலா காலேஜுக்கு வந்தாள். எப்பொழுதும் போல மேஜை மேல் மிதிலாவுக்காகக் காத்திருந்தாற் போல ரோஜாப்பூ இல்லை. எதிரே ராஜேஷ் உட்காரும் சீட் காலியாய் இருந்தது. அவன் சிநேகிதர்களையும் காணோம்.

நாலைந்து நாட்கள் கழிந்தன. ராஜேஷ் காலேஜுக்கு வருவதில்லை. நிறுத்திக் கொண்டான். மிதிலா ராஜேஷைப் பற்றி விசாரித்தாள். அவன் உடம்பிற்கு எதுவும் இல்லை. அடிக்கடி தெருவில் சிநேகிதர்களோடு சேர்ந்து சுற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்ததாய் ஜெயந்தியும் சாந்தியும், இன்னும் சக லெக்சரர்களும் கூட சொன்னார்கள். மிதிலா யோசனையில் ஆழ்ந்தாள். அன்றைக்கு அலுலுக்கு ஜுரமாய் இருந்தபொழுது ராஜேஷ் டாக்டரை அழைத்துக்கொண்டு வந்ததைப் பார்த்துவிட்டு அவள் திட்டித் துரத்திவிட்ட பிறகு அவன் அவள கண்களில் படவேயில்லை. ராஜேஷ் தன்னால்தான் காலேஜை விட்டு விட்டான் என்று புரிந்ததும் அவள் மனது வருத்தப் பட்டது.

அன்றைக்கு மிதிலா, சாந்தி ஜெயந்தி இருவரோடும் சேர்ந்து கடைவீதிக்குப் போய் துணிகளை வாங்கிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தாள். அவர்கள் கடையிலிருந்து வெளியே வந்த பொழுது ராஜேஷ் உள்ளே வந்து கொண்டிருந்தான். அவன் மிதிலாவைப் பார்த்ததுமே விருட்டென்று திரும்பிப் போய்விட்டான்.

''ராஜேஷ்''— மிதிலா கூப்பிட்டாள் பின்னாலிருந்து

ராஜேஷ் பதில் பேசவில்லை.

மிதிலாவின் குரலைக் கேட்டதும் அவன் நடை வேகம் அதிகரித்தது.

''ராஜேஷ்'' மற்றொரு முறை கூப்பிட்டாள்.

திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை அவன் அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டான். எதிரே வந்து கொண்டிருந்த ஒருவர் ராஜேஷிற்கு அந்த அழைப்பு காதில் விழவில்லை என்றெண்ணிக் கொண்டு— ''இந்தா பையா! அந்தம்மா உன்னைக் கூப்பிடறாங்க பார்'' என்று சொன்னார்.

ராஜேஷ் காருக்கருகில் வந்து விட்டான்.

அவன் கார் கதவைத் திறந்து கொண்டிருந்த பொழுது மிதிலா தானே அவ்விடத்திற்கு வந்து விட்டாள்.

''ராஜேஷ்! ஏன் இப்படி ஓடுகிறாய்?''

உலுக்கி எடுத்தாற் போல கேட்டாள்.

அவன் பதில் பேசவில்லை. தலை குனிந்தபடி நின்றான்.

''இதப்பார் ராஜேஷ்! நான் உன்னோடு ஒரு நிமிஷம் பேசணும்.''

அவன் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. கார் கதவின் மேல் விரல்களால் தேய்த்துக் கொண்டே நின்றிருந்தான்.

''என்னை எங்க வீட்டில் கொண்டு போய் விடுகிறாயா?'' கேட்டாள்.

ராஜேஷ் மௌனமாய் பின் கதவைத் திறந்தான். சாந்தியும் ஜெயந்தியும் உட்கார்ந்து கொண்டார்கள். மிதிலா உட்காரப் போன பொழுது அந்த கதவைச் சாத்தி விட்டு, முன் பக்கத்து கதவைத் திறந்தான்.

மிதிலா உட்கார்ந்து கொண்டாள்.

ராஜேஷ் வந்து உட்கார்ந்து கொண்டு காரை ஸ்டார்ட் பண்ணினான்.

கார் போய்க் கொண்டிருந்தது.

''நீ காலேஜுக்கு ஏன் வருவதில்லை?'' கேட்டாள் மிதிலா.

ராஜேஷின் பார்வை சாலையின் மீதே நிலைத் திருந்தது.

''பதில் சொல்லு'' என்றாள்.

அவன் பேசவில்லை.

''நீ காலேஜை விட்டு விட்டது எனக்குப் பிடிக்கலை.'' அதற்குள் விர்ரென்று வந்த காற்றிற்கு மிதிலாவின் புடவைத் தலைப்பு பறந்து வந்து ராஜேஷின் முகத்தை மறைத்து விட்டது.

''அடடா!'' மிதிலா சட்டென்று புடவைத் தலைப்பை இழுத்து சரியாய் போட்டுக்கொண்டு கார்க் கண்ணாடியைத் தூக்கிவிட்டாள்.

ராஜேஷ் முகம் சிவந்துவிட்டது.

அவன் உடம்பிலிருந்த ஒவ்வொரு அணுவும் இன்ப மான மயக்கத்தில் தோய்ந்து போனாற் போல ஆயிற்று.

மிதிலா சாதாரணமாய் கேட்டாள்.

''உன் ஃபிரெண்ட்ஸ் எப்படி இருக்காங்க?''

''நன்றாய்தான் இருக்காங்க.''

''நீங்கள் அத்தனை பேரும் சேர்ந்து வகுப்பிற்கு வரக் கூடாதுன்னு முடிவு கட்டிட்டீங்க போலிருக்கு?'' என்றாள் பழித்தாற் போல.

''மேடம்! நாங்க இங்கே டைலர் ஷாப் கிட்டே இறங்கிக் கொள்கிறோம்'' என்றாள் சாந்தி.

ராஜேஷ் காரை நிறுத்தினான்.

ஜெயத்தியும் சாந்தியும் காரிலிருந்து இறங்கிக் கொண்டார்கள்.

"தாணும் வரட்டுமா?"— கேட்டான் மிதிலா.

"ஊஹூம். எங்களுக்கு இங்கே கொஞ்சம் நேரமாகும். எங்க பாட்டி, சித்தி வீட்டில் இருக்காங்க. அதனால இங்கிருந்து நேராய் அங்கே போகணும்" என்றாள் ஜெயந்தி.

"சரி" என்றாள் மிதிலா.

கார் திரும்பவும் புறப்பட்டது.

கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாய் இருந்தார்கள்.

"நீ இப்படி காலேஜுக்கு வருவதை விட்டுவிட்டது எனக்குப் பிடிக்கவில்லை. என்னால்தான் நீ வருவதில்லைன்னு புரிந்தது எனக்கு" என்றான் மிதிலா.

ராஜேஷ் கவனமாய் டிரைவ் பண்ணுவது போல சாலையையே பார்த்துக் கொண்டிருந்தான். மிதிலா சொன்னாள்— "ராஜேஷ்! நமக்கு யார் மேலாவது அன்பு இருக்குன்னு வெச்சுக்கோ! அந்த அன்பு அவங்களைத் தொந்தரவிற்குள்ளாக்கக் கூடாது. நாம்ப காட்டும் அன்பைப் பார்த்து மற்றவங்க சிரிக்கும்படியாய் நடந்து கொள்ளக் கூடாது. தெரிஞ்சுதா?"

அவன் கவனமாய் கேட்டான். தெரிந்தது என்று தலையாட்டினான்.

"நீ அன்றைக்கு டாக்டரைக் கூட்டிட்டு வந்தாய். அந்தச் சமயத்தில்தான் நீ என்பால் காட்டுகிற அன்பைப் பற்றி அவங்க சர்ச்சைப் பண்ணிக் கொண்டிருந்தாங்க. எனக்கோ உடம்பே சரியாயில்லை. அதே சமயத்தில் நீ டாக்டரை நேராய் கூட்டி வந்து விட்டாய். எனக்கு ஏதோ போல் இருந்தது. அதனால்தான் நான் உன்னைக் கண்டித்தேன். அது உன் மனதைப் புண்படுத்தும் என்று எனக்குத் தெரியும். தெரிந்தும் கடினமாய் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை நீ வரவழைத்து விட்டாய். நான் திட்டி விட்டேன்னு மனம் வருந்தினாயே தவிர, மேடம் எதுக்குத் திட்டினாங்கன்னு யோசித்துப் பார்க்கலை. அதோடு காலேஜுக்கு வருவதையும் விட்டு விட்டாய்! அது இன்னும் தப்பு. நீ அப்படிப் பண்ணக்கூடாது."

மிதிலா சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளையும் அவன் கவனமாய் கேட்டான்.

கார் போய்க் கொண்டிருக்கையில் பஸ் ஸ்டாண்டிற் கருகில் அர்ஜுன், மதுமதி, மஞ்சு தென்பட்டார்கள்.

"ராஜேஷ்"— காரைப் பார்த்ததுமே அர்ஜுன் கையைத் தூக்கி ஆட்டியபடியே கூப்பிட்டான். ராஜேஷ் பார்த்தான். அர்ஜுனன் காரை நிறுத்தச் சொல்லி சைகைக் காட்டினான். ஆனால் ராஜேஷ் காரை நிறுத்தவில்லை. பார்க்காதது போலவே காரை ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.

"அவங்க கூப்பிடறாங்க" என்றாள் மிதிலா.

"பார்த்தேன்" என்றான் அவன். எதிரே தென்பட்ட குழியைப் பார்த்து ஜாக்கிரதையாய் காரைத் திருப்பிக் கொண்டே. மிதிலா முதல் முதலாய் தன் காரில் ஏறியிருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சமும் குலுங்கல் ஏற்பட்டு விடக் கூடாது என்று கவனமாய் இருந்தான் அவன். வழக்கம் போல அவன் காரை வேகமாக ஓட்டவில்லை. மிக ஜாக்கிரதையாய், சடன் பிரேக்குகள் எதுவும் போடாமல் ஓட்டினான். அவன் எவ்வளவு மெதுவாய் ஓட்டிய போதிலும் வீடு வந்து சேர்ந்து விட்டது.

கார் நேராய் மிதிலாவின் விட்டிற்கு முன்னால் வந்து நின்றது. மிதிலா காரை விட்டு இறங்கினான்.

''ராஜேஷ்! இறங்கி வீட்டிற்குள் வா'' கூப்பிட்டாள்.

''ஊஹூம்'' முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''ஏன்?''

அவன் சக்கிரத்தைத் திருப்பிக்கொண்டே மௌனமாய் உட்கார்ந்திருந்தான்.

''நான் சொல்றேன், நீ இறங்கி வீட்டிற்குள் வர வேண்டியது!'' என்றாள் அதிகாரத்தோடு.

ராஜேஷ் உடனே காரிலிருந்து இறங்கினான். மிதிலா பேட்டிலிருந்து எடுத்துக் கொண்ட பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்து வந்தாள்.

ரங்கதாயகி இன்னும் ஊரிலிருந்து திரும்பவில்லை. அங்கே போன பிறகு ஜுரம் வந்து விட்டதாம். அது காமாலையாய் மாறி விட்டதாம். பதினைந்து நாட்களுக்கு லீவு லெட்டர் அனுப்பியிருந்தாள்.

மிதிலா கேட்டைத் திறந்து கொண்டு வராந்தா படியேறி வந்து பூட்டைத் திறந்தாள்.

''உள்ளே வா'' என்றாள்.

ராஜேஷ் உள்ளே வந்தான். மிதிலா ஜன்னல் கதவுகளைத் திறந்து திரைச்சீலைகளை ஒதுக்கி விட்டாள்.

''உட்கார்'' என்றாள்.

ராஜேஷ் உட்கார்ந்து கொண்டான்.

''இந்த புத்தகத்தைப் பார்த்துட்டிரு. நான் இதோ வரேன்''— என்று அங்கிருந்த மேகலின் ஒன்றை தந்தாள். மிதிலா காபி போடுவதற்காக உள்ளே போனாள். ராஜேஷ் அவ்வறையையும், மிதிலாவின் புத்தகங்களையும், அங்கே கட்டிலின் மேல் போடப்பட்டிருந்த புடவைகளையும், கொடிக் கயிற்றில் உலர்த்தியிருந்த ஜாக்கெட், அதன் கொக்கிகளையும், அலமாரியில் இருந்த டேப்

திசார்டர், புத்தர் சிலை, கீழேயிருந்த மிதிலாவின் செருப்பு முதலியவைகளையும் பரிசீலிப்பது போல பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். அந்த அறை மிகச் சாதாரணமாய் இருந்தது! ஆனால் அந்த அறையை ராஜேஷின் மொழியில் வருணிக்க வேண்டுமானால் சொல்ல முடியாத அழகாய் தோன்றிற்று. மிதிலா இருக்குமிடத்திலேயே அழகு வந்துவிடும் போலும்!

மிதிலா காபியைக் கலந்து கொண்டு வந்தாள். ஒன்றை ராஜேஷிடம் தந்துவிட்டு, இன்னொன்றைத் தான் எடுத்துக் கொண்டு அவனுக்கெதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

ராஜேஷ் காபியைக் குடிக்கத் தொடங்கினான்.

''ராஜேஷ்! நான் உன்னை ஒன்று கேட்கட்டுமா?'' என்றாள்.

ராஜேஷ் நிமிர்ந்து பார்த்தான்.

மிதிலா நேராய் அவன் கண்களைப் பார்த்தாள். அவன் கண்கள் மிதிலாவின் பார்வையை நேருக்கு நேராய் பார்க்க முடியாமல் சங்கோஜமடைந்தன. வெட்கத்தை விட்டுவிட்டு தைரியமாய் நிற்க பலவந்தமாய் முயன்று கொண்டிருந்தான்.

''என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கும். இல்லையா?''

அவன் அங்கீகரிப்பது போல தலையாட்டினான்.

''உன்னைக் கண்டாலும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். எப்பொழுது தெரியுமா?''

''எப்பொழுது?''

''நீ நன்றாய் படிக்கும்போது! வகுப்பில் எல்லோரைக் காட்டிலும் நீ நிறைய மார்க் வாங்கும்போது! அப்ப உன்னைப் பார்த்தால் ''இதோ! இவன் என்னால் நன்றாய்

படிக்கிறான். இந்த நல்ல காரியத்திற்குக் காரணம் நான்தான்''— என்று பெருமையும் சந்தோஷமும் ஏற்படும். உன்னைக் கண்டால் எனக்குப் பிடிக்கத் தொடங்கிவிடும். நீ காட்டும் அன்பை நானும் பொறுமையாய் தாங்கிப்பேன். அந்தக் காரியத்தை உன்னால் பண்ண முடியுமா?''

அவன் ஒரு வினாடி ஆழ்ந்து யோசித்தான்.

உடனே அவன் கண்களில் உறுதி வந்தது.

மிதிலாவைப் பார்த்து ஒப்புக் கொள்வது போல தலை யாட்டினான்.

'பிராமிஸ்?'' என்றாள்.

''பிராமிஸ்!''

''தன்றாய் யோசித்து சொல்.''

''நான் ஏதாவது செய்யணும்னு நினைத்துட்டால் செய்தே திருவேன். செய்ய முடியாத காரியம் எதுவும் இல்லை.''

''நீ எனக்குக் கொடுத்த வாக்கை சீரியஸாகவே எடுத்துக்கப் போகிறேன். அதை நீ நிறைவேற்றா விட்டால் என்ன பண்ணுவேன் தெரியுமா?''

என்ன என்பது போல பார்த்தான்.

''நான் இந்த ஊரை விட்டே போய் விடுவேன்.''

''நான் படிக்கிறேன்'' அவன் முகத்தில் ஆவேசம் தென்பட்டது.

அக்கண்களில் அந்த நிமிஷத்திலேயே மிதிலா போய் விடுவாளோ என்ற பயமும் கலக்கமும் தெரிந்தன.

''வெரிகுட்! நீ சொன்ன சொல்லை காப்பாற்றிக் கொள் உனக்கும் எனக்கும் ரெண்டு பேருக்குமே சந்தோஷமாய் இருக்கும்.''

மிதிலா குனிந்து அவன் கீழே வைத்த காலியான கோப்பையை எடுக்கப் போனாள். அவன் சட்டென்று தடுத்தான்.

அந்த முயற்சியில் அவன் கைகள் மிதிலாவின் விரல்களின் மீது பட்டன.

''வேண்டாம், நான் கழுவி விடுகிறேன்'' என்றான்.

''பரவாயில்லை. அப்படிப்பட்ட பேதங்கள் எல்லாம் என்னிடம் இல்லை. விடு'' என்றாள் மிதிலா நயந்து. ராஜேஷ் விடவில்லை.

''பரவாயில்லை ராஜேஷ், விடு'' இம்முறை அக்குரல் அதிகாரமாய் இருந்தது.

ராஜேஷ் விருப்பமின்றியே விட்டான்.

மிதிலா கோப்பைகளை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

ராஜேஷ் ஒருமுறை தன் விரல்களைப் பார்த்துக் கொண்டான்.

அவை மிதிலாவின் விரல் நுனிப்பட்டு பரவசமடைந்து போய்க் கொண்டிருந்தன. அந்த ஸ்பரிசம் அவன் ரத்தத்தி துள்ள ஒவ்வொரு அணுவிலும் நிரம்பி வழிந்தாற் போலிருந்தது ஒரு வினாடி. தன் கையையே கூர்ந்து பார்த்துக் கொண்ட ராஜேஷ், கையைத் தூக்கி உதட்டில் வைத்துக் கொண்டான். அவனுக்கு அவ்வளவு ஒரு சுவர்க்கமாய் இருந்தது. மதுபானம் குடித்தவனைப்போல மயக்கத்தில் இருந்தான் அவன்.

மிதிலா துவாலையில் கைகளைத் துடைத்துக் கொண்டே வந்தாள்.

''தாங்க்யூ ராஜேஷ்! என்னை வீட்டில் கொண்டு வந்து இறக்கி விட்டாய். நான் சொன்னதைக் கேட்டு உள்ளே

வந்தாய். காபி குடித்தாய். எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாய் எனக்கு நீ நன்றாய் படிக்கிறதாய் வாக்குக் கொடுத்தாய்'' என்றாள். இம்முறை அக்குரல் ஒரு உபாத்தியாயினி மாணவனுடன் பேசுவது போல தொழில் ரீதியில் இருந்தது! அதில் வேறெந்த உணர்ச்சியும் இல்லை. ராஜேஷ் எழுந்திருந்தான்.

''வரேன் மேடம்''

மிதிலா தலையாட்டினாள்.

அவன் வராந்தா படியில் இறங்கப் போனவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

''மேடம்'' கூப்பிட்டான்.

''உம்''

''நான்... நான் படித்தால் உங்களுக்கு என்னைப் பிடிக்கும்னு சொன்னீங்களோனோ?''

''ஆமாம். ரொம்பப் பிடிக்...கும்''

''நான் படிக்கிறேன்''

''தாங்க்யூ''

''நான் எப்பவாவது இங்கே வரலாமா?'' கேட்டான்.

''வரலாம்.''

''போயிட்டு வரேன்'' வேகமாய் படிகளைக் கடந்து துள்ளிக் குதித்துக் கொண்டே காரிடம் போனான்.

காரில் உட்கார்ந்து ஸ்டார்ட் பண்ணப் போனவன் மிதிலாவைப் பார்த்தான்.

மிதிலா கையை ஆட்டினாள். அவனும் கையை ஆட்டினான். கார் வேகமாய் போய் விட்டது.

மிதிலா ஆழ்ந்து பெருமூச்சு விட்டபடி உள்ளே திரும்பி வந்தாள். இப்பொழுது மிதிலாவுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது.

அத்தச் சந்தோஷம் ஒரு நல்ல காரியம் பண்ணினோம் என்ற திருப்தியோடு கூடிய சந்தோஷம்.

ராஜேஷ் விருப்பமில்லாமல், வேண்டா வெறுப்பாய், பலவந்தமாய் அவளோடு இந்த வீட்டிற்கு வந்தான்.

திரித்துக் கொண்டே சந்தோஷமாய் பாரத்தை நீக்கிக் கொண்டு இலேசாகி விட்ட மனதோடு திரும்பிப் போனான்.

இப்பொழுது இருவருக்குமிடையே அபிப்பிராய பேதம் இல்லை. மிதிலாவுக்கு அது திருப்தியாய் இருந்தது.

16

காலம் வேகமாய் பறந்து கொண்டிருந்தது.

மிதிலாவுக்கு நாளடைவில் காலேஜில் செல்வாக்கு ஏற்பட்டு விட்டது. இப்பொழுது பிரின்ஸிபால் லெக்சரர் களிடம் என்ன சொல்ல வேண்டுமென்றாலும் மிதிலாவையே கூப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ராஜேஷ் கும்பலும் காலேஜுக்குத் தவறாமல் வந்து கொண்டிருந்தது.

காலேஜ் சார்பில் எக்ஸ்கர்ஷன் போவதற்கு நிச்சய மாயிற்று. அந்த ஊருக்கு முப்பது மைல் தூரத்திலிருந்த மலைகளின் குகை ஒன்று பிரபலமாகியிருந்தது. அதைப் பார்க்க முடிவெடுத்துக் கொண்டார்கள்.

எக்ஸ்கர்ஷனுக்குப் போவதற்கு ஒப்புக்கொண்டவர்கள் சுமார் முப்பது பேர். காலேஜ் சார்பில் பஸ் ஒன்றைப் பேசிக் கொண்டார்கள். மாணவ மாணவிகளோடு

சேர்ந்து லெக்சரர்களில் அர்ஜுனன், சுப்பிரமணியன், ரமா வந்தார்கள். மிதிலாவும் போய்த் தீர வேண்டியிருந்தது.

ராஜேஷ் கும்பல்கூட வரவிருந்தார்கள்.

காலையில் பத்து மணிக்கு பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள் எல்லோரும். வழியெல்லாம் காட்டுப் பகுதிகளாய், மேடும் பள்ளமுமாய் இருந்ததால், பிரயாணம் பசுமைப் பள்ளத்தாக்கு வழியாய் சென்றது கண்களுக்கு விருந்தாய் இருந்தது.

பஸ்ஸிற்குள் மாணவர்கள் மிதிலாவைப் பாட்டு பாடச் சொன்னார்கள். மிதிலா மறுத்து விட்டாள். சாத்தாவைப் பாடச் சொன்னார்கள். அவளும் பாடவில்லை. "நாம்ப பாடச் சொன்னால் அவங்க பாடுவாங்களா? அவங்களுக்கு ஸ்பெஷல் அகாசங்கள் வேணும்" என்றான் அர்ஜுனன். பஸ்ஸிற்குள் ஏறியதிலிருந்தே அவன் பார்வை மிதிலாவின் மீதே இருந்தது. மிதிலாவின் முகம் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாததாய் இருந்தது. மிதிலாவின் நல்ல குணம், ஆடம்பரம் இல்லாத தன்மை, புத்திசாலித்தனம் எல்லாம் முதல் பார்வையிலேயே அவனைக் கவர்ந்திருந்தன. அவளோடு நெருக்கமாய் இருக்க வேண்டும், அவள் சிநேகத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்று முயன்று தோற்றுப் போனான் அவன் தாய் தந்தையரின் நச்சரிப்பினால் அவர்கள் பார்த்துத் தேர்ந்தெடுத்த மதுமதியை மணந்து கொண்டான். மதுமதி வரதட்சணை, சீர்களை நிறையவே கொண்டு வந்தாள். அர்ஜுனனின் லாக்கு சாதுரியத்தின் பால் மதுமதிக்கு வெறுப்பு. ஒரே பார்வையில் தன் எதிர்ப்பை எடுத்துக் காட்டி அவன் வாயை மூடி விடுவாள். அவனுக்குத் திருமணமான முதல் நாளே மாமனார் எச்சரித்தார் அவனை.

"என் பெண் கொஞ்சம் முன் கோபக்காரியப்பா! கோபம் வந்து விட்டால் கண்ணுமுன்னு தெரியாது. நீ

கொஞ்சம் ஜாக்கிரதையாய் பொறுமையாய் நடுகட்டிக் கொண்டு போ!"

"சரி" என்றான் அவன். மதுமதியின் அழகு அவனைக் கவர்ந்தது. மதுமதிக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றெண்ணிக் கொண்டான்.

கல்யாணத்தின்போதே மதுமதிக்குக் கோபம் வந்து விட்டது. கல்யாணத்திற்கு வந்திருந்தயாரோ 'பெண்ணின் குரல் ஆம்பிள்ளை குரலைப் போல கட்டைத் தொண்டையாய் இருக்கிறது'— என்று சொல்லி விட்டார்கள். அது மதுமதியின் காதில் விழுந்து விட்டது. அவ்வளவுதான்! ரிஸப்ஷன் நடந்து கொண்டிருந்த போழுதே பந்தலை விட்டு எழுந்து போய் விட்டாள். யார் எவ்வளவு கூப்பிட்டபொழுதும் வரவேயில்லை. தாய் தந்தையர் கெஞ்சினார்கள். கேட்டுக் கொள்ளவில்லை. அர்ஜுனனுக்கு, மதுமதிக்கு ஏன் கோபம் வந்தது என்று புரியவில்லை. போய் ஆவேசமாய்— "என்னதான் காரணம், அதைச் சொல்லு! உன்னை யாராவது ஏதாவது சொன்னாங்களா? அப்படிச் சொன்னவங்க நாக்கை அறுத்து விடுகிறேன் நான்" என்றான்.

"அப்படியுன்னால் உங்கள் சித்தியின் நாக்கை அறுங்கள்" என்றாள்.

"எங்க சித்தியா?" அவன் ஆச்சரியமடைந்தான்.

"ஆமாம். அவங்கதான்! என் குரல் கட்டைக் குரலாய் இருக்குன்னு கேலி பண்ணினாங்க."

"எங்க சித்தியா?" அவன் ஆவேசம் சப்பென்றாகி விட்டது. அவன் சித்தி பெரிய சண்டைக்காரி. அவள் வாய்த் துடுக்கிற்கு முன்னால் யாராலும் நிற்க முடியாது. அதுவும் அவள்தான் அர்ஜுனனின் படிப்பிற்கு உதவி பண்ணியவள்!

''அவங்களை மணப்பந்தலிலிருந்து துரத்தியடித்தால் தான் என்னால் அங்கே வர முடியும்'' கச்சிதமாய் சொல்லி விட்டாள் மதுமதி.

அர்ஜுனன் அப்பால் வந்தான். சித்தியை ஏதாவது சாக்கில் வெளியே அனுப்பி வைத்து விடலாம் என்று முயன்றான். ஆனால் முடியவில்லை. அவள் விழியால் விழிக்கொண்டே நாலைந்து பேர்களுடன் சூழ்ந்து கொண்டு வம்பளந்து கொண்டிருந்தாள்! அர்ஜுனன் குட்டிப் போட்ட பூனையாய் அங்குமிங்கும் அலைந்தான். வந்த விருந்தினர்கள் எல்லோரும் ''மணமகள் எங்கே?'' என்று கேட்டபொழுது ''தலைவலியாய் இருக்காம்''— என்று சாக்குச் சொல்லி விட்டுத் தானே பரிசுகளை யெல்லாம் பெற்றுக் கொண்டான்.

அன்றிரவு சோபன அறையில் மதுமதி கேட்ட முதல் கேள்வி— ''உங்க சித்தியைத் துரத்தியடிச்சாச்சா?''

''இல்லை.''

''ஏன்?'' உலுக்கி எடுத்தாள்.

அவன் தலை குனிந்தான்.

''இனி ஒருபோதும் கையாலாகாத வார்த்தைகளை ஜம்பம் அடிச்சுக்காதீங்க. சொன்ன வார்த்தைப்படி நடந்துக்க முடியாத ஆம்பிள்ளையைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது'' என்றாள்.

அவன் மனது பகீரென்றது! முதலிரவு! பிரியமான மனைவியின் வாயிலிருந்து கேட்ட இனிய வார்த்தை 'கையாலாகாதவன்!' அன்றிரவு அவன் நினைத்தாற் போல சந்தோஷமாகவும் சுகமாகவும் கழிக்க முடிய வில்லை.

அவன் வாழ்க்கைக்கு அது அப்படிப்பட்ட முதலிரவாகி விட்டது. அதற்குப் பிறகு மதுமதியோடு அவன் விவாக

வாழ்க்கை கையாலாகாதவனின் வாழ்க்கையாகவே ஆகி விட்டது. அணுவணுவிலும் அவனுடைய கையாலாகாத் தனம் வெளிப்பட்டது. மதுமதிக்கு அவன் தாலைக் கண்டால் பிடிக்கவில்லை. அவளோடு ஒத்து வரவில்லை, தாயை தொலைவிற்கு அனுப்பி வைக்கும் வரை அவள் அவளை விட்டு வைக்கவில்லை. தாய் தொலைவிற்குப் போய் விட்டாள்.

திருமணமான முதல் நாளிலிருந்தே அவன் கவன மெல்லாம் ஒவ்வொரு நிமிஷமும் எந்தக் காரியத்தைப் பண்ணினாலும் மதுமதிக்குக் கோபம் வந்து விடுமோ என்று எண்ணிப் பார்ப்பதிலேயே கழிந்து கொண் டிருந்தது. அவன் என்னதான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் ஏதாவது ஒரு இடத்தில் ஒன்று கிடக்க ஒன்றாகிக் கொண்டேயிருந்தது. மணமான சில நாட்களிலேயே அழகு என்ற முக்காட்டிற்குள் மறைந் திருந்த ஒரு பிரம்ம ராட்சசியை மணந்து கொண்டு விட்டதாய் நன்றாய் புரிந்து விட்டது அவனுக்கு. பலமுறை அவன் மதுமதியை உதறிக் கொண்டு விடவேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொள்வான். அந்த யோசனையை புரிந்து கொண்ட மதுமதி— ''என்னை உதறி விடலாம்னு பார்க்கிறீங்களா? அது உம்மால் முடியாது'' என்பாள். அவன் வாயடைத்துப் போய் அப்படியே பார்த்துக் கொண்டிருப்பான் அவளை. அவனுக்கு மதுமதி என்றால் தூக்கத்தில் கூட பயந்து போய் எழுந்து உட்கார்ந்து கொள்ளக் கூடிய அளவிற்கு வெறுப்பு ஏற்பட்டது.

அவனுக்கு சாந்தமாய் இருக்கும் பெண்களைக் கண்டால் மிகவும் பிடிக்கும். பெண்களிடம் நிதானம் என்பது விலை மதிப்பிட முடியாத ஆபரணம் என்பது அவன் உத்தேசம். மிதிலாவைப் பார்க்கும் பொழுது அவனுக்குத் தான் விரும்பிய பெண் கண்ணெதிரே வந்து நின்றாற்போல இருந்தது! மிதிலாவுக்குத் திருமணமாக வில்லை. இந்த காலத்தில் மணமாகிக் குடும்பம் உள்ள

ஆண்கள் எத்தனையோ பேர் திருமணமாகாதப் பெண்களோடு சம்பந்தங்கள் வைத்துக் கொண்டு அவர்களை மணந்து கொள்ளாமல் தனி வீடுகளை வைத்துக் கொண்டு தாலிக் கட்டிய மனைவி மூலமாய் பெற முடியாத சந்தோஷங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தான் மட்டும் அந்தக் காரியத்தை ஏன் பண்ணக் கூடாது? மிதிலாவோடு கூட வேலைப் பண்ணிக் கொண்டிருக்கும் சக லெக்சரர் அவன். அவளை எப்படியாவது சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். கொஞ்சம் பொறுமையோடு நடந்து கொள்ள வேண்டும். மதுமதியின் கொட்டத்தை அடக்க வேண்டுமானால் மிதிலாவைத் தான் நெருக்கமாகக் கொள்ள வேண்டும். மிதிலாவைப் போன்ற அழகான, படித்த, பண்புள்ள பெண்ணை சொந்தமாக்கிக் கொண்டாலேயொழிய மதுமதிக்கு அவன் அருமை புரியாது. மதுமதி ரகளைப் பண்ணுவாள் என்று தெரியும். மிதிலாவுக்கு மட்டும் அவளைப் பிடித்துப் போய் விட்டால் போதும், மதுமதி என்ன அவள் தாத்தாவே சொர்க்கத்திலிருந்து இறங்கி வந்தாலும் ஒன்றும் பண்ணிவிட முடியாது என்பது அவன் வீம்பு! அதனால்தான் அவன் எப்பொழுதும் மிதிலாவை நிழலாய் தொடர்ந்து கொண்டேயிருந்தான்.

அதனால் அடிக்கடி அவள் வீட்டிற்குப் போய் நலம் விசாரித்துக் கொண்டிருந்தான்! காலேஜில் யாரோடு எந்தச் சம்பாஷணை வந்தாலும் மிதிலாவைப் பற்றிய பேச்சை எடுத்து— 'அவள் பொறுப்பு என்னைச் சேர்ந்தது' என்பது போல பேசினான். மிதிலா தனக்கு மிகவும் நெருங்கியவள் என்றும், தான் இந்த ஊரில் இருப்பதால் தான் மிதிலா இங்கே வேலை செய்கிறாள் என்றும் எல்லோரிடமும் பரப்பி வந்தான்.

இன்றைக்குக் காலேஜில் எக்ஸ்கர்ஷன் போகப் போகிறார்கள் என்றதுமே, மஞ்சு மூலமாய் யார் யார் போகப் போகிறார்கள் என்று துப்புத் துலக்கினாள் மதுமதி. மிதிலா போகப் போகிறாள் என்று தெரிந்ததும்

அர்ஜுனனைப் போகக்கூடாது என்றும், தனக்கு உடம்பு சரியில்லை என்றும் தடை விதித்தாள்.

அர்ஜுனன் இந்த 'உடம்புச் சரியாயில்லை'— என்ற சாக்குகளுக்கெல்லாம் தன்றாய் பழக்கப்பட்டவன்தான். மதுமதிக்குப் பிடிக்காத இடத்திற்கு எங்கேயாவது அவன் போக முயன்றால் 'உடம்பு சரியில்லை' என்று கட்டிலில் ஏறி போர்த்திக் கொண்டு படுத்து விடுவாள். அவன் பொருட்படுத்தாமல் போய் விட்டானானால் திரும்பி வந்த பிறகு பெரிய யுத்தம் ஏற்பட்டு அந்த வீடு நரகமாய் மாறிவிடும். அர்ஜுனன் இப்பொழுதெல்லாம் மதுமதியின் லெறுப்பைப் பொருட்படுத்துவதை விட்டு விட்டான். மதுமதி என்னதான் ரகளைப் பண்ணினாலும் அவளை விட்டு விட்டுப் போய்விட மாட்டாள் என்ற விஷயம் அவனுக்குப் புரிந்து விட்டது. அதுதான் அவனுக்குக் கவசமாய் ஆகிவிட்டது.

இன்றைக்கு அவன் மிதிலாவோடு தனிமையை ஏற்படுத்திக் கொண்டு, தன் மனதிலுள்ளதை வெளிப் படுத்திவிட வேண்டும் என்றுதான் இந்த எக்ஸ்கர்ஷனுக்குப் புறப்பட்டு வந்தான்.

பஸ் ஜைனா குகைக்கு வந்து சேர்ந்தது

மாணவர்கள் எல்லோரும் சிரித்துக் கும்மாளமிட்டுக் கொண்டு பஸ்ஸிலிருந்து ஒருத்தரையொருத்தர் தள்ளிக் கொண்டு கீழே இறங்கினார்கள்.

மிதிலா பஸ்ஸிலிருந்து இறங்கினாள். அர்ஜுனன் மிதிலாவைப் பின்தொடர்ந்து அவள் முதுகில் உராசிக் கொண்டே இறங்கினான்.

மிதிலா எரிச்சலுடன் புருவங்களை நெளித்தாள்!

ஆனால் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கி அந்தச் சுற்றுப் புறங்களைக் கண்டதுமே மிதிலாவின் எரிச்சலெலலாம் பறந்து போய் விட்டது.

சுற்றிலும் அடர்த்தியாய் வானளாவியபடி நின்று கொண்டிருந்த மரங்கள்! அவற்றோடு பின்னிப் பிணைந்து போயிருந்த காட்டுக் கொடிகளின் பூக்கள்! அங்கு தென்பட்ட காட்டுப் பூஞ்செடிகளும் மரங்களுமே அந்தக் காட்டிற்கு ஆபரணங்களாய் அழகை வெளிப் படுத்திக் கொண்டிருந்தன.

அங்கிருந்து இறக்கத்தில் தென்பட்ட படிகளில் இறங்கிப் போனால் குகைகள் தென்பட்டன. மாணவ மாணவிகள் அவற்றை நோக்கி ஓட்டம் பிடித்துக் கொண் டிருந்தார்கள்.

17

ரமாவும் மிதிலாவும் சேர்ந்து குகைகளுக்கருகில் வந்தார்கள். சாந்தி, ஜெயந்தி, மேலும் சில பெண்களும் மாணவர்களுமாய் சேர்ந்து கும்பலாய் போய்க் கொண் டிருந்தார்கள்.

அக்குகைகள் வழியாகவே பல மைல் தூரம் போனால் காவேரி தீரத்திற்கருகில் கொண்டு போய் விட்டுவிடும் என்று கதைகள் பரவியிருந்தன. ஆனால் அவை கட்டுக் கதைகளா உண்மைக் கதையா என்று யாருக்கும் தெரியாது. உள்ளே போனதுமே அவற்றின் கதவுகள் பாழடைந்து மூடிக் கிடந்தன. உள்ளே போன பிறகு அவ்வழிகள் அநேகமாய் சுருங்கி சுரங்கத்தைப் போல இருந்தன. அவற்றிற்குள் கும்பலாகத் தவிர தனியாய் யாரும் போகக்கூடாது என்று எச்சரிக்கைகளை போர்டில் எழுதப்பட்டிருந்தன. கொஞ்சந் தூரம் வரைக்குந்தான் மின்சார விளக்குகள் இருந்தன. சில இடங்களில் இல்லை. அந்தப் பக்கமாய் போகத் தடை விதிக்கப்பட்டது.

மாணவ மாணவிகளுடன் சேர்ந்து நடந்து கொண் டிருந்தாள் மிதிலா.

கூடவே அர்ஜுனனும் வந்து கொண்டிருந்தான்.

மாணவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். ஓடிக் கொண்டிருந்தார்கள். 'கூ' என்று கத்தி எதிர்த்து வரும் எதிரொலி சப்தத்தைக் கேட்டுவிட்டு கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தார்கள். கைதட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

அர்ஜுனன் ஓரிடத்தில் குகைச் சுவரின் மேல் வரையப்பட்டிருந்த சித்திரத்தைக் காட்டி அக்குகைகள் தோன்றிய சரித்திரத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந் தான். மிதிலா சரித்திரம் சம்பந்தப்பட்ட எந்த விசேஷத்தைச் சொன்னாலும் சகலத்தையும் மறந்து போய் கவனமாய் கேட்பாள். இப்பொழுதும் அப்படியே கேட்டுக் கொண்டிருந்தாள்.

மாணவர்களும், ரமாவும் போரடித்துப் போய் அங்கிருந்து போய் விட்டார்கள்.

அர்ஜுனன் சொன்ன சரித்திரத்தைப் பொறுமையாய் கேட்டுவிட்டு— "இந்தக் கதையை நான் இதுவரை எங்கேயுமே கேட்டதில்லை" என்றாள்.

"என்னவோ! இது கட்டுக்கதையாகவும் இருக்கலாம். யாராவது புனைந்து சொன்னதாகவும் இருக்கலாம். ஆனால் நெடு நாளாய் இதுதான் வழி வழியாய் பரவிக் கொண்டிருக்கிறது" என்றான்.

மிதிலா சட்டென்று தன்னைச் சுற்றிலும் பார்த்தாள். அங்கே யாருமே இல்லை.

"அட! எல்லோரும் போயிட்டாங்க. நாம்ப பின்தங்கி விட்டோம்" என்றாள்.

"வாங்க, போகலாம். அவங்க பின்னப் பசங்க! அப்படி ஒட்டம் பிடிக்கிறதில்தான் அவங்களுக்குச் சந்தோஷமே இருக்கும். நாம்ப அந்த வயதைத் தாண்டி விட்டோம். நமக்குச் சந்தோஷத்தைத் தரக்கூடிய சங்கதிகள் வேறாய் தான் இருக்கும்" என்றான்.

மிதிலா பதில் பேசவில்லை.

சில ஆண்கள் பேசும்பொழுது பேச்சிற்கிடையே சிலேடைகளை எடுத்தாண்டு கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களின் பேச்சைப் பொருட்படுத்தாமல் சும்மாயிருந்து விடுவதுதான் உத்தமம் என்பது மிதிலாவின் அபிப்பிராயம்.

அர்ஜுனனும் மிதிலாவும் நடந்து கொண்டிருந்தார்கள்.

தொலைவில் மாணவர்களின் ஆரவார சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

அவ்விடத்தில் இரண்டு வழிகள் பிரிந்தன.

"இந்தப் பக்கம்" என்றான் அர்ஜுனன் வழி காட்டியபடி.

மிதிலா பின் தொடர்ந்தாள். போகப் போக விளக்குகள் குறைந்து கொண்டே வந்தன.

அந்த வழி குறுகலாகி வந்தது. 'அவ்விடத்தில் 'இங்கே வழி இல்லை'— என்ற போர்டு தென்பட்டது. அதற்குக் கீழே அந்தப் பக்கமாய் தென்பட்ட குகைக்கு வழியை மூடிவிட்டு முள் கம்பிகளைக் கட்டியிருந்தார்கள்.

"அடடா! நாம்ப வழித் தவறிட்டோம் போலிருக்கு" என்றாள் மிதிலா.

"ஆமாம்" என்றான் அர்ஜுனன்.

மிதிலா திரும்பினாள்.

அர்ஜுனன் குறுக்காய் நின்று, மிதிலா போவதற்கு வழி இல்லாமல் பண்ணி, சுவரின் இரு பக்கங்களிலும் கைகளை நீட்டிக் கொண்டான்.

"மிதிலா! நாம்ப வழி தவறி விட்டோம். என் மனதில் உள்ளதை உன்னிடம் சொல்லுவதற்காகவே தானே உன்னை இங்கே கூட்டிட்டு வந்தேன்" என்றான் அவன்.

"என்ன இது?" கோபத்தை அடக்கிக் கொண்டே கேட்டாள்.

அங்கு எங்கேயுமே மாணவர்களின் கத்தலோ பேச்சுக் குரலோ காதில் விழவேயில்லை.

மிதிலாவுக்குத் தான் செய்த தப்பு புரிந்தது.

மாணவர்களின் கூத்தல் சப்தம் எதிரொலியாய் கேட்டுக் கொண்டிருந்த பக்கம் அவள் வந்து விட்டாள். அங்கே பசங்கள் இல்லை என்ற விஷயம் இங்கே வந்த பிறகுதான் தெரிந்தது. அர்ஜுனன் மனதில் ஏதோ கெட்ட எண்ணம் வைத்துக்கொண்டு தன்னை இப்படி தப்பு வழியே கூட்டிக்கொண்டு வந்திருக்கிறான் என்று மிதிலா புரிந்து கொண்டாள்.

ஆனாலும் மிதிலா பயப்படவில்லை.

அவள் தன் குரலில் கடுகளவும் பரபரப்பைக் காட்ட வில்லை.

அக்கணங்களில் தான் அஜாக்கிரதையாய் நடந்து கொண்டு விட்டோமே என்ற எரிச்சலைத் தவிர, அவன் என்ன பண்ணி விடுவானோ என்ற பயம் மட்டும் இல்லை!

"உன்னை... உன்னைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்"— என்றான் அவன்.

மிதிலா பதில் பேசவில்லை, ஆனால் கண்களில் மறுப்பு உணர்ச்சியை மட்டும் அவளால் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

அர்ஜுனன் மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டான்.

மிதிலா அக்கைகளைத் தட்டி விட்டாள்.

அவன் உடனே இரு கைகளாலும் மிதிலாவின் இரு தோள்களையும் அழுத்தமாய் பிடித்துக் கொண்டான்.

இம்முறை மிதிலா அவனை உதறவில்லை. தான் உதற உதற அவன் பிடி இன்னும் இறுகும் என்று புரிந்து கொண்டாள்.

அர்ஜுனனின் முகம் மிதிலாவை நெருங்கிற்று.

"மிதிலா உன்னைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். எனக்கு முதல் மனைவி இருக்கிறாளேன்னு பயப்பட வேண்டாம். அவள் வாயைத் திறக்காமல் பண்ணி விடுவேன் நான். அந்தப் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. நான் உன்னைப் பூவில் வைத்துப் பாதுகாப்பேன். உனக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டேன். என் மனைவியால் எனக்கு சுகமில்லை. நாமிருவரும் கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகு நான் அவள் முகத்தைக்கூட கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன்." இவ்வார்த்தைகளைச் சொன்னபொழுது அவன் குரல் பித்துப் பிடித்தவனின் குரலைப் போல இருந்தது.

ஒரு பைத்தியக்காரனைப் பார்ப்பது போல அவனைப் பார்த்தாள் மிதிலா.

அவன் கையிலிருந்து தனக்கு அபாயம் நேரிடாதபடி தப்பித்துக் கொள்ள வேண்டும். மிதிலாவின் மனம் வேகமாய் அந்த உபாயத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கிற்று.

வெள்ளை ரோஜா 18529 351368

அவன் இன்னும் சொல்லிக் கொண்டிருந்தான்.

"உங்கம்மா, அண்ணா உனக்குக் கல்யாணம் பண்ணணும்னால் வரதட்சணை, கல்யாணச் செலவு என்று குறைந்தது ஐம்பதாயிரமாவது செலவு பண்ணணும். நான் உனக்கு அந்தச் செலவு இல்லாமல் பண்றேன். நாமிருவரும் சுகமாய் இருப்போம். நமக்கு எதற்குமே குறை இருக்காது. என்னை ரெண்டாந்தாரமாய் நினைக்காதே. எனக்கு அந்தக் கல்யாணம் ஆனது பெயருக்குத்தான்! என் மனைவி ஒரு ராட்சசி. கல்யாணமாகி இவ்வளவு வருஷம் ஆகியும் ஒருநாள்கூட மனைவியிடம் அன்பையோ பரிவையோ அனுபவித்ததில்லை நான். நான் சொல்ற ஒவ்வொரு வார்த்தையும் நிஜம்! என்னை நம்பு! மிதிலா! என்னால் உன்னை அடையாமல் இருக்க முடியாது. உன்னைப் பார்த்த முதல் பார்வையிலேயே எனக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது."— அவன் சட்டென்று மிதிலாவை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டு முகத்தைக் கிட்டே இழுத்துக் கொண்டான். முத்தமிடப் போனான்.

மிதிலா சட்டென்று இரு கைகளாலும் அவனை மாறி மாறி அடித்தாள். நகங்களால் அவன் கன்னங்களைக் கீறினாள்.

கொஞ்சம் அவன் பிடி நழுவத் தொடங்கியதுமே, அவனை பலமாய் பிடித்துத் தள்ளிவிட்டு, அங்கிருந்து ஓடி அப்பால் வந்துவிட்டாள்.

அங்கே வழி இன்னும் குறுகலாயின.

மிதிலாவுக்கு எந்தப் பக்கமாய் போவது என்று தெரியவில்லை.

ஒரு முறை "சாந்தி, ஜெயந்தி, ராஜேஷ்" என்று பெரிதாய் கத்தினாள். மிதிலா வாய்விட்டுக் கத்திய அக்கத்தல் அக்குகைகளே அதிருமாறு எதிரொலித்தன.

"சாந்தி, ஜெயந்தி, ராஜேஷ்"— என்று அலைகூட மிதிலாவோடு கூட தானும் கூப்பிட்டாற் போல எதிரொலித்துக் கத்தினை. மிதிலா ஓடி வந்து கொண் டிருந்த வழி எதிரே முடிந்து விட்டது. அவ்விடமெல்லாம் சிலந்தி வலைகளாலும், வௌவால்களாலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. பயந்து போன மிதிலாவுக்குத் தும்மல் வந்துவிட்டது. அத்தும்மல்களின் சப்தத்தைக் கேட்டு வௌவால்கள் பறந்தன. ஒன்று பறந்து வந்து மிதிலாவின் தலையைக் கால்களால் அழுத்தித் தள்ளி விட்டுப் போயிற்று!

மிதிலா வீலென்று அலறினாள்.

அந்த அலறலுக்குக் குகைகள் திரும்பவும் அதிர்ந்தன!

மிதிலா பின்னுக்குத் திரும்பி மறுபடியும் ஓடத் தொடங்கினாள்.

எங்குமே மனித சந்தடியைக் காணோம்.

மாணவ மாணவிகள் எல்லோரும் திரும்பிப் போய் விட்டார்?

மிதிலாவின் தைரியம் நசிந்து போய்விட்டது.

உண்மையாகவே பயம் ஏற்பட்டது.

தான் அங்கே அர்ஜுனனோடு தனியாய் எஞ்சி விடுவாளோ என்ற யோசனையும் அந்த செய்வதறியாத தன்மையும் மார்பைப் படபடக்கச் செய்தன.

மிதிலாவுக்கு ஓடிப் பழக்கமில்லை.

ஆயாசம் வந்துவிட்டது. மூச்சுத் திணறிற்று. வாய் உலர்ந்து போயிற்று. இப்பொழுது யாரையாவது கூப்பிடவோ கத்தவோ கூட சக்தி இல்லாமல் போய் விட்டது.

பின்னாலிருந்து அர்ஜுனன் வந்து கொண்டே யிருந்தான்.

அவன் அந்தச் சமயத்தில் மிதிலாவுக்கு எமதூதனாய் தோன்றினான்.

மிதிலா ஓடி வந்து கொண்டிருந்தாள்!

எதிரே, தொலைவிலிருந்து யாரோ வந்து கொண் டிருந்தார்கள்! ஆயாசத்தோடு ஓட முடியாமல் ஓடி வந்து கொண்டிருந்த மிதிலாவுக்கு அவர்களைப் பார்த்ததுமே ஆயிரம் யானை பலம் வந்து சேர்ந்து விட்டது.

தலைச் சுற்றிக் கொண்டிருந்தது! உடம்பு தள்ளாடிக் கொண்டிருந்தது.

மங்கலாய் இருந்த அந்த வெளிச்சத்தில் அந்த நபர்கூட மிதிலாவை நோக்கித்தான் ஓடி வந்து கொண் டிருந்தான்.

அவன் கிட்டே வந்தான்.

"நான்... நான் வழி தவறிட்டேன்" ஆயாசத்துடன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, அந்த நபர் "மேடம்" என்று கூப்பிட்டான்.

அதற்குள் மிதிலா அவனை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாள்.

அவன் யாரோ இல்லை! ராஜேஷ்!

அவன் மிதிலாவின் கலைந்து போன கேசங்களையும், தலையில் படிந்திருந்த ஒட்டடைகளையும் விநோதமாய் பார்த்தான்.

"மேடம்! இதென்ன?" குழப்பத்தோடு பார்த்துக் கேட்டான்.

"ராஜேஷ்!" மிதிலா சட்டென்று அவனைச் சிறு குழந்தையைப் போல ஓடிப் போய்க் கட்டிக் கொண்டு விட்டாள். உடனே அழுகை மடை திறந்தாற் போல பொங்கிக்கொண்டு வந்து விட்டது.

ராஜேஷ் தன்னையறியாமல் மிதிலாவை மார்போடு அணைத்துக் கொண்டான்.

''என்னவாச்சு? என்னவாச்சு?'' சிறு குழந்தையைக் கிட்டே அணைத்துக் கொண்டு கெஞ்சிக் கேட்டது போல் கேட்டான்.

மிதிலாவின் அழுகையைப் பார்த்தால் அவனுக்கு உயிரே துடித்தாற் போலிருந்தது!

ஒரு நிமிஷம் இருவரும் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்!

ராஜேஷ் மிதிலாவை அப்படியே அணைத்துக் கொண்டே தலைமீது படிந்திருந்த ஒட்டடைகளைத் தள்ளி விட்டான். முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணைத் தட்டி விட்டான்.

மிதிலாவுக்கு அவன் ஸ்பரிசம் மிக தைரியத்தை உண்டாக்கிற்று! மனம் மெதுவாய் ஒரு நிலைக்கு வரத் தொடங்கிற்று!

அதற்குள் சாந்தி, ஜெயந்தி, ரமா, எஞ்சிய மாணவ மாணவிகள் எல்லோரும் அங்கே வந்து விட்டார்கள்.

''என்னவாச்சு? என்னவாச்சு?'' என்று அவ்விருவரையும் சூழ்ந்து கொண்டார்கள்.

''ஒன்றுமில்லை. மேடம் வழி தவறிப் போயிட்டாங்க. நம் யாரையும் காணவில்லை. அதனால் பயந்து கலங்கிப் போயிட்டாங்க'' என்றான் மிதிலாவின் தலையைத் தடவிக் கொண்டே.

''அடடா! மேடம்! நாங்க உங்களைத்தான் தேடிட்டிருக்கோம்'' என்றாள் சாந்தி.

''நீங்கள் எங்கள் கும்பலோடு இல்லைங்கிறதை சற்று முன்னால்தான் தெரிந்து கொண்டோம்'' என்றாள் ஜெயந்தி.

''அதிலிருந்து நாங்கள் தேடிட்டேயிருக்கோம்... பயத்தட்டீங்களா என்ன? ஆமாமாம். இந்தக் குகைங்க தளியாய் இருந்தால் நம்மை விழுங்கி விடக்கூடிய ராட்சசர் களைப் போலதான் இருக்கின்றன'' என்றாள் ரமா.

மிதிலா தன் நிலைக்கு வரத் தொடங்கினாள். மெதுவாய் ராஜேஷின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். மிதிலா கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தபோது ராஜேஷ் கைக்குட்டையை எடுத்துத் தந்தான். தொலைவில் பேண்ட் ஜேபியில் கைகளை நுழைத்துக் கொண்டு வாசு இதையெல்லாம் ஒரு வேடிக்கையாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

ராஜேஷ் சாந்தியின் கையிலிருந்த வாட்டர் பாட்டிலைக் கேட்டு வாங்கிக் கொண்டு கிளாஸ் தம்ளரில் தண்ணீரை நிரப்பி மிதிலாவுக்குத் தானே குடிக்கத் தந்தான்.

மிதிலாவின் கை நடுக்கம் கொஞ்சம் தணிந்தது!

''தாங்க்யூ'' என்றாள் மெல்லிய குரலில்.

அவளுக்கு ஒரு பெரிய ஆபத்திலிருந்து மயிரிழையில் தப்பினாற் போல இருந்தது. ரயிலடியில் விழப் போனவள் தப்பித்துக் கொண்டாற் போல இருந்தது. அந்த ஆபத்து நீங்கி விட்டாலும், அதன் பீதி இன்னும் இதயத்தை நடுங்கச் செய்து கொண்டேயிருந்தது.

மிதிலா நடந்த பொழுது உடம்பு தள்ளாடிற்று.

''ஆங்! ஜாக்கிரதை!'' ராஜேஷ் சட்டென்று பிடித்துக் கொண்டான்.

அவனும் மிதிலாவும் படியேறி மேலே இருந்த பஸ்நிற்கருகில் வந்து கொண்டிருந்தபோது, அவன் பிடித்துக் கொள்வதற்கு வாகாய் அவளோடு கூடவே வந்தான்.

அர்ஜுனன் பஸ்நிற்கருகில் நின்று கொண்டிருந்தான்.

அவன் கன்னத்தில் காயம் தென்பட்டது! ரத்தம் வந்து கொண்டிருந்தது. யாரோ "என்னவாச்சு?" என்று கேட்டார்கள்.

"முள் வேலியின் மேல் விழுந்து விட்டேன்" என்று பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

மிதிலா சாந்திக்கும் ஜெயந்திக்கும் நடுவே உட்கார்ந்து கொண்டாள்.

பின் சீட்டில் ராஜேஷ் உட்கார்ந்திருந்தான்.

பஸ் புறப்பட்டது. வழியில் அடிக்கடி ராஜேஷ் மிதிலா பக்கமாய் குனிந்து— "மேடம்! எப்படி இருக்கு தலை இன்னும் சுற்றுகிறதா?"— என்று கேட்டுத் தெரிந்து கொண்டான்.

தொலைவில் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த அர்ஜுனன் மிதிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் ஆத்திரம், ஏமாற்றம் தெளிவாய் தென்பட்டன.

"இப்ப தப்பித்துக்கிட்டாயே தவிர, என்னிடமிருந்து உன்னால் தப்பித்துக் கொண்டு விடமுடியாது"— என்பது போலிருந்தன அந்தப் பார்வை!

ராஜேஷிற்கு நடந்த விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால், அப்பொழுதே அர்ஜுனனைக் கொன்று போட்டிருப்பான்.

ராஜேஷ் எவ்வளவு கேட்ட போதிலும் நடந்த விஷயத்தை சரியாய் சொல்லவில்லை மிதிலா. அந்த நேரமாய் அர்ஜுனனை ராஜேஷின் பிடியிலிருந்து காப்பாற்றி விட்டாள் அவள்!

அவ்வாறு காப்பாற்றியதே அவள் வாழ்க்கைக்குப் பெரிய அபாயமாகி விட்டது என்ற சங்கதி அந்தச் சமயத்தில் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

18

காலை வேளை!

மிக விசாலமாய் இருந்த அந்த வீட்டுத் தோட்டத்தில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் கணபதி. பக்கத்திலேயே அவர் நாய்க்குட்டி புல் தரையில் விளையாடிக் கொண்டிருந்தது.

காலடிச் சப்தம் கேட்டது.

வேலைக்காரன் காபியை எடுத்து வந்தான்.

அவர் நிமிர்ந்து பார்க்காமலேயே— "அடேய்! கோபி! வரதராஜன் சாரைக் கூப்பிடு" என்றார்.

காபி ட்ரேயை டீபாயின் மேல் வைத்துவிட்டு, கெட்டிலிலிருந்து கோப்பையில் காபியை ஊற்றித் தந்தான் கோபி.

காபியை வாங்கிக் கொண்டே எதேச்சையாய் நிமிர்ந்து பார்த்த அவர் வியப்படைந்து விட்டார்.

காபியைத் தந்தது வேலைக்காரன் அல்ல! ராஜேஷ்!

தந்தை நிமிர்ந்து பார்த்ததுமே ராஜேஷ் எப்படிப்பட்ட மனதையும் லகப்படுத்தி விடக் கூடிய முறுவல் ஒன்றைப் பூத்துவிட்டு— "குட்மார்னிங் டாடி!" என்றான். கணபதிக்கு ஒரு வினாடி வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. வாயடைத்துப் போனவராய் நடக்க முடியாதது நடந்து விட்டாற் போல பார்க்கத் தொடங்கினார்.

"டாடி! உங்களுக்கு காபியில் சர்க்கரை போட வில்லை. எனக்குத் தெரியும் நீங்கள் சர்க்கரை இல்லாமல் சாப்பிடுவீங்கன்னு" என்றான்.

"ராஜேஷ்... நீ... நீ..." அவரால் முடிக்க முடியவில்லை.

"நேற்று ராத்திரியே வீட்டுக்கு வந்துட்டேன்" — என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே ராஜேஷின் கண்கள் தாழ்ந்தன. அவன் முகம் பச்சாதாபத்திற்கு மறு உருவாய் இருந்தது.

தலை குனிந்தபடி மிக மெல்லிய குரலில் — "டாடி! நீயாம் சாரி! நான் உங்களை ரொம்ப வருத்தப்படுத்திட்டேன். இனிமேல் என் நடத்தை வேறு விதமாய் இருக்கும். நான் இவ்வளவு நாளாய் பைத்தியக்காரனாய் நடந்துட்டிருந்தேன் டாடி. இனிமேல் நான் சிரத்தையாய் படிக்கிறேன்" என்றான். அவன் வாயிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு வார்த்தையிலும் உண்மை பிரதிபலித்தது.

கணபதியின் கண்களில் சட்டென்று கண்ணீர் பொங்கி வெளி வந்தது. அவரால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

"டாடி! நான் என் சிநேகிதர்களுடன் சேர்ந்து இருந்த அறையை காலி பண்ணிட்டேன்" என்று சொன்னான்.

அவர் முகத்தில் சந்தோஷம் இரு மடங்காய் பெருகிற்று. ராஜேஷிடம் திடீரென்று வந்த இந்த மாறுபாட்டிற்குக் காரணம் என்ன? அவர் வியப்படைந்தார். சரி, காரணம் எதுவாய் இருந்தால் என்ன? அவன் நல்ல வழிக்கு வந்து விட்டான். தன்னிடம் திரும்பி வந்து விட்டான். தன் மனதை வருத்தப்படுத்தி விட்டதாய் புரிந்து கொண்டு விட்டான். அதுவே போதும். அவருக்கு வியாபாரத்தில் எவ்வளவோ சிக்கல்கள் இருந்தன. அவை எல்லாவற்றையும் அவர் எப்படியோ சமாளித்து விடுவார். ஆனால் உயிருக்குயிரான ஒரே மகன் சொன்ன பேச்சை கேட்காமல் ஒரு பிரச்னையாய் மாறி விட்டதுதான் அவரால் தாங்க முடியாமலிருந்தது. ராஜேஷை அவர் எந்த விஷயத்திலும்

கட்டுப்படுத்த மாட்டார். விரும்பியதையெல்லாம் வாங்கித் தருவார். கேட்டதுமே எவ்வளவு பணம் வேண்டுமானாலும் சரி ஏன் என்று கேட்காமல் எடுத்துத் தந்து விடுவார். அவர் ராஜேஷிடமிருந்து எதிர்பார்த்தது ஒன்றே ஒன்றுதான். நல்ல நடத்தை! தறுதலையாய் திரியவேண்டாம் என்பார். படிப்பை அலட்சியப்படுத்த வேண்டாம் என்று கண்டிப்பார். ராஜேஷ் கேட்கா விட்டால் அவர் அவனை தண்டிக்க வேண்டும் என்றெண்ணை மாட்டார். உள்ளூர தானே வருந்துவார். ராஜேஷிற்கு சிநேகிதர்களுடன் சுற்றுவதைத் தவிர வேறெந்த கெட்டப் பழக்கங்களும் இல்லை. அவன் வாசுவைப் போன்ற மனர்ச் சுற்றியுடன் இவ்வளவு நாளாய் சகவாசம் பண்ணிக் கொண்டிருந்த போதிலும் வாசுவிடமிருந்து சிகரெட் குடிப்பதைக்கூட கற்றுக் கொள்ளவில்லை. என்றாவது ஒருநாள் ராஜேஷ் தானே புத்தி வந்து திருந்தி விடுவான் என்ற நம்பிக்கை இருந்தது அவரிடம். அந்த நம்பிக்கை இன்று பலித்தது. அதனால்தான் அவருக்குத் தாங்க முடியாத சந்தோஷமாய் இருந்தது.

"ராஜேஷ், உட்காரு, காபி குடி" என்று அவர் தானே சுயமாய் காபியைக் கோப்பையில் ஊற்றி மகனிடம் தந்தார்.

ராஜேஷ் வாங்கிக் கொண்டான். அவரோடு சேர்ந்து காபி குடித்தான் அங்கிருந்த நாய்க் குட்டியோடு கொஞ்ச நேரம் விளையாடினான்.

"நான் குளிக்கணும் டாடி. காலேஜுக்கு டயமாயிடுத்து" என்று போய் விட்டான்.

சரியாய் ஒன்பதரை மணிக்கு ராஜேஷ் தந்தையிடம் சொல்லிவிட்டுப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு காலேஜுக்குப் போய் விட்டான்.

கணபதி மேனேஜரைக் கூப்பிட்டு ராஜேஷைப் பற்றிச் சொல்லிவிட்டு— ''இவனிடம் ஏற்பட்டிருக்கிற மாறுதல் உண்மையானதுதானா?'' என்று கேட்டார்.

''ராஜேஷ் தம்பி மாறிட்டாற் போல தான் தெரியுது சார்'' என்றான் அவனும் நம்பிக்கையோடு.

பிற்பகல் ஒரு மணிக்கு ராஜேஷ் காலேஜிலிருந்து திரும்பி வந்தான். தந்தையோடு உட்கார்ந்து சாப்பிட்டான். சாப்பிட்ட பிறகு எழுந்து போய் தந்தை சாப்பிட வேண்டிய மருந்துகளைத் தானே எடுத்து வந்து அவருக்குத் தந்தான். திரும்பவும் காலேஜுக்குப் போய் விட்டான்.

மாலையில் நேராய் வீட்டிற்கே வந்து விட்டான். மேனேஜரிடம் தனக்குத் தேவையான புத்தகங்களின் லிஸ்ட்டைத் தந்தான். அன்று மாலையில் அவன் எங்கேயும் போகவில்லை. வீட்டிலேயேதான் இருந்தான்.

இரவு சாப்பாடு ஆயிற்று. ராஜேஷ் கொஞ்ச நேரம் தந்தையின் அறையில் உட்கார்ந்திருந்தான். அவர் படுத்ததும் அவருக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு, பெரிய விளக்கை அணைத்து விட்டு விடி விளக்கைப் போட்டு விட்டு ஜன்னல் திரைச் சீலைகளை இழுத்துவிட்டு விட்டு, தந்தையிடம் வந்து நெற்றியில் முத்தமிட்டுவிட்டு— ''குட்நைட் டாடி'' என்றான்.

''குட்நைட் டியர்'' என்றார் அவர்.

அவன் போகத் திரும்பியபோது அவர் கையைப் பிடித்துத் தடுத்தார். ''ராஜேஷ்! ஒன்று கேட்கட்டுமா?'' என்றார்.

''கேளுங்கள் டாடி'' என்றான்.

''உனக்கு இப்படி மாறணும்னு திடீரென்று எப்படித் தோன்றிற்று? அவ்வளவு நல்ல சம்பவம் எப்படி நேர்ந்தது?'' என்றார் அவர்.

''நல்ல சம்பவமா?'' ராஜேஷ் யோசனையுடன் பார்த்தான்.

''நல்ல சம்பவம் இல்லை டாடி! ஒரு நல்ல மனுஷி தான் எனக்கு இதையெல்லாம் தெரியப்படுத்தினாங்க. அவங்க மூலமாய் தான் நான் உங்களிடம் நடந்து கொள்கிற விதம் ரொம்பத் தப்புன்னு தெரிந்து விட்டேன்.''

''யார் அவள்?'' அவர் ஆசையாய் கேட்டார்.

''அவங்க பெயர் மிதிலா மேடம்!'' அந்தப் பெயரை ஒரு பக்தன் எப்படி புனிதமாய் ஜபம் பண்ணுவானோ அது போல உச்சரித்தான்.

''மிதிலா மேடம்! ஓ! லெக்சரர்னு சொன்னே!'' என்றார் அவர் தலையாட்டிக் கொண்டே. ராஜேஷ் போய் விட்டான்.

''அந்த லெக்சரர் யாரோ தெரியவில்லை, ரொம்ப நல்லவளாய் இருக்கிறாள் நாளைக்கு அவளைச் சந்தித்து என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளணும்'' — என்றெண்ணிக் கொண்டார் கணபதி.

ராஜேஷ் தன் அறைக்கு வந்தான். டிராயரிடம் போய் அதிலிருந்த டைரி ஒன்றை எடுத்து வந்து, கட்டிலில் உட்கார்ந்து கொண்டு மிக சிரத்தையாய் எழுதத் தொடங்கினான்— ''மேடம்! அன்று நீங்கள் என்னோடு சேர்ந்து காலேஜிலிருந்து நடந்து வந்த பொழுது சொன்ன வார்த்தைகளைப் பற்றி நான் நன்றாய் யோசித்துப் பார்த்தேன். நீங்கள் டாடியைப் பற்றி என்னிடம் சொன்னீர்கள். நான் உண்மையில் இதுவரை அதைப் பற்றியே யோசித்துப் பார்க்கவில்லை மேடம். நான் நேற்றிரவு நண்பர்களோடு இருந்த அறையை காலி பண்ணிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். நீங்கள் சொன்னது போலவே அப்படியே செய்தேன். தந்தைக்கு

அருகாமையில் உள்ளேன். அவர் கண்களில் சந்தோஷத்தைப் பார்க்கும் பொழுது எனக்கு மிக மகிழ்ச்சியாய் இருக்கிறது. இவ்வளவு நாளாய் நான் மூட்டாள்தனத்தில் எதை இழந்து விட்டிருந்தேன் என்று தெரிந்து கொண்டேன். மேடம், உங்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களைப் போன்ற நபர் என் வாழ்க்கையில் நுழைந்தது என் அதிர்ஷ்டம் என்று நம்புகிறேன்.

குட் நைட் மேடம்! இப்படி நினைக்கும் படுக்கப் போவதற்கு முன்னால் உங்களுக்கு விஷயங்களைச் சொல்கிறேன். நீங்கள் ஒன்றும் நினைத்துக் கொள்ளாதீர்கள். இந்த டைரியில் இப்படி 'மேடம்' என்று போட்டு எழுதிக் கொண்டிருக்கும் பொழுது உங்களோடு நேரிடையாய் பேசுவது போலவே இருக்கிறது. குட் நைட்!''— அவன் எழுதி முடித்து விட்டு, எழுந்து போய் டைரியை பத்திரமாய் டிராயரில் வைத்து மூடினான். கடியாரம் இரவு பத்து மணி அடித்தது.

அவன் கட்டிலை நோக்கி வரப் போனவன், ஜன்னலுக் கருகில் ஒரு நிமிஷம் நின்று வெளியே பார்த்தான்.

ராத்திரிப் பொழுது நிசப்தமாய் இருந்தது.

இவ்வளவு நாட்களாய் அவனுக்குத் தனியாய் இருக்கவே பயமாய் இருக்கும். சுற்றுப் பக்கத்தில் யாராவது ஒருத்தர் இருந்தால்தான் பிடிக்கும் அவனுக்கு இப்பொழுது அந்த சுபாவமே மாறிப் போய் விட்டது யாருமேயில்லாத இந்த தனிமை மிக நன்றாய் இருந்தது. இந்தச் சமயமெல்லாம் தன் ஒருத்தனுடையதே— இதில் யாருக்கும் பங்கு இல்லை என்று சந்தோஷமாய் இருந்தது அவன் தனியாய் இருந்தான். ஆனாலும் தனிமையாய் தோன்றவில்லை. இவ்வளவு நாளாய் அவனைச் சுற்றிலும் வாசு, ரங்கன், சினு, எல்லோரும் சேர்ந்திருந்தாலும் மனமெல்லாம் ஏதோ தான் தனியன் என்பது போல

ஏக்கமாய் இருக்கும். இந்த மாறுதலுக்கு என்ன அர்த்தம்? யோசித்தான் தான் தனியாய் இருந்தால் மிதிலா மேடத்தின் ஞாபகம் வந்தது. அதென்ன வேடிக்கையோ? அவளைப் பற்றி யோசித்தால் அவள் தன்னோடு கூடவே துணையாய் இருப்பது போலவே இருந்தது. கட்டிலில் வந்து உட்கார்ந்தான் ராஜேஷ். நாளைக்குப் பரீட்சை என்று நினைவிற்கு வந்தது. பக்கத்திலிருந்த சரித்திரப் புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். அது இம் முறை அவனை பயமுறுத்தவில்லை. புரியாமல் குழப்பமாகவும் இல்லை. அதைப் படித்தபோது மிதிலா மேடத்தின் வாயிலிருந்து பாடத்தைக் கேட்பது போலவே இருந்தது. அவன் சுவாரஸ்யமாய் புத்தகத்தில் ஆழ்ந்து போய் படிக்கத் தொடங்கினான்.

19

மிதிலா காலேஜுக்குப் புறப்படும் பரபரப்பில் இருந்தாள்.

வீட்டு வாசலில் கார் வந்து நின்றது.

''யாரோ வந்திருக்காங்க'' என்றாள் ரங்கநாயகி.

மிதிலா பார்த்தாள்.

காரிலிருந்து டிரைவர் இறங்கி வந்து கொண்டிருந்தான். அவன் கையில் மாம்பழக் கூடை இருந்தது.

''ஐயா தரச் சொன்னார்'' அங்கே கொண்டு வந்து வைத்தான். மிதிலாவின் புருவங்கள் நெளிந்தன.

''எந்த ஐயா?'' என்றாள்.

''கணபதி ஐயா''

''அப்படீன்னால்?''

''ராஜேஷின் தந்தை''

அந்தப் பெயரைக் கேட்டதுமே மிதிலா அந்தக் கூடையை திருப்பி எடுத்துக்கொண்டு போய்விடு என்று உத்தரவிடப் போனவள் நின்று விட்டாள்.

''இந்தாங்க! இந்த சீட்டை உங்கவிடம் தரச் சொன்னாங்க''— என்று ஜேபியிலிருந்து எடுத்துத் தந்தாள்.

மிதிலா அந்த சீட்டை வாங்கிப் படித்தாள். அதில் இவ்வாறு இருந்தது:

''நல்ல உபாத்தியாயினி மாணவனுக்கு எப்பொழுதும் நல்வழியைக் காட்டுகிறாள். என் மகன் ராஜேஷிடம் நான் சற்றும் ஊகித்திராத மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அந்த மாறுதலுக்குக் காரணம் நீங்கள்தான் என்று தெரிந்தது. உங்களுக்கு என் நன்றி. கடவுள் உங்களுக்கு ஆயுள் ஆரோக்கியத்தை வழங்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
கணபதி—''

மிதிலாவின் உதட்டில் மகிழ்ச்சியோடு கூடிய புன்னகை நெளிந்தது.

''ஆஹா! கணபதியே உன்னை நேரடியாய் பாராட்டுகிறார் என்று சொல்! என்ன பாக்கியம்!'' அதற்குள் மிதிலாவின் தோள் வழியாய் அக்கடிதத்தைப் படித்து விட்ட ரங்கநாயகி சொன்னாள்.

''ரங்கம்! ராஜேஷ் தற்சமயம் நல்ல பையன். புத்திசாலி கூட. அந்த வாசுவின் சகவாசம் இல்லாமலிருந்தால் அவன் திருந்தி விடுவான் என்பது என் நம்பிக்கை. அன்று காலேஜ் காம்பவுண்டிற்குள் நடந்து கொண்டிருந்த

போது தந்தையைப் புரிந்து கொள்ளும்படியும், வருத்தப் படத்த வேண்டாம் என்றும் சொன்னேன். ராஜேஷ் இவ்வளவு சமர்த்தாய் என் பேச்சைக் கேட்பான் என்றும், இவ்வளவு தூரம் மாறிப் போய், எனக்குப் பாராட்டுகளை வாங்கித் தருவான் என்றும் நான் நினைத்திருக்கவில்லை'' என்றாள் மிதிலா.

மிதிலா காலேஜுக்கு வந்தாள். ராஜேஷ் எதிர்ப் பட்டான்.

''ராஜேஷ்'' கூப்பிட்டாள்.

அவன் நெருங்கினான்.

மிதிலா கைப் பையிலிருந்து ராஜேஷின் தந்தை எழுதி அனுப்பியிருந்த சீட்டை எடுத்து அவனிடம் தந்தாள். ''எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கு ராஜேஷ்! தாங்க்யூ'' என்றாள்.

அவன் நிமிர்ந்தான். அக்கண்களில் அப்புகழ்ச்சிக்குப் பரவசம் ஏற்பட்டது தெரிந்தது.

''நீங்கள் என்ன சொன்னாலும் அப்படியே பண்ணுவேன் மேடம்'' என்றான். மிதிலா சிரித்தாள்.

''பரீட்சை கிட்டே வருகிறது இல்லையா? நன்றாய் படி. வகுப்பில் நீதான் ஃபஸ்ட் வரணும்'' என்றாள்.

அதற்குள் ராஜஸ்ரீ லெச்சரர் வந்தாள். மிதிலா அவனோடு சேர்ந்து போய் விட்டாள்.

''என்ன மிதிலா? எப்பப் பார்த்தாலும் அவனோடு பேசிட்டிருக்கீங்களே?'' என்றாள் ராஜஸ்ரீ.

''அவனோடேயா? எப்பொழுது பேசினேன்? எங்கே?''

''நான் நிறைய தடவை பார்த்திருக்கிறேன். ரமா லெக்சரர் கூட சொன்னாள்.''

"அப்படியா?"— மிதிலா புதிய விஷயத்தைக் கேட்பது போல கேட்டாள்.

அவனோடு ராஜேஷ் அதிகமாய் பேசுகிறானா?

எல்லோருக்கும் அவ்வாறு தோன்றுகிறதா?

அதற்குள் எதிரே அர்ஜுனன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள். மிதிலா முகத்தைத் திருப்பிக்கொண்டு அவனைப் பாராதது போலவே போய்விட்டாள். அர்ஜுனன் மிதிலாவை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

மிதிலாவுக்கு இந்த காலேஜில் அர்ஜுனன் விஷயம் ஒன்றைத் தவிர மீதியெல்லாம் நன்றாகவே இருந்தது. நல்ல சங்கீதத்திற்கிடையே ஒரு அபசுருதியைப் போல இருந்தான் அவன்.

20

பரீட்சைகள் தொடங்கி விட்டன.

மாணவர்கள் எல்லோரும் விளையாட்டுக்களை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு படிப்பதில் மூழ்கிப் போனார்கள். வெயில் தீவிரமாய் கொளுத்தத் தொடங்கிற்று.

பரீட்சைகள் முடிவடைந்தன. காலேஜுக்கு லீவுவிட்டு விட்டார்கள்.

மிதிலா அன்றைக்கே ஊருக்குப் புறப்படவிருந்தாள்!

நேற்றிலிருந்து சாந்தியும் ஜெயந்தியும் அங்கேயே இருந்தார்கள்.

"மேடம்! நான் கடிதம் எழுதுகிறேன். பதில் போடுவீங்களா?" என்று கேட்டான் சாந்தி.

"பதில் போடுவதென்றாலே எனக்கு சோம்பேறித்தனம். எங்கம்மா என் மேல் சொல்லும் புகார் இதுதான்! நீ கடிதம் போட்டுக் கொண்டிரு நான் பதில் போட முயற்சி பண்றேன்" என்றாள் மிதிலா, பெட்டியில் எல்லாவற்றையும் அடுக்கிக் கொண்டே.

இரவு எட்டு மணி ரயிலுக்கு மிதிலா புறப்படத் தயாரானாள். ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தவள் ஒரு வினாடி அப்படியே நின்று விட்டாள். அங்கே ஜன்னலுக்கெதிரே அவள் இந்த ஊருக்கு புதிதில் நட்ட செம்பருத்திச் செடி, நன்றாய் இலைகள் துளிர்த்து, மொக்குகள் கட்டி பூக்கள் மலர்ந்திருந்தன. ஆளுயரத்திற்கு வளர்ந்து விட்டிருந்தது.

அவள் இந்த ஊருக்கு வந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. இந்த ஒரு வருடமும் நிமிஷத்தில் ஓடி மறைந்து விட்டது. சாந்தி, ஜெயந்தி, ரங்கநாயகி, ராஜேஷ், இவர்கள் எல்லோரும் அவள் வாழ்க்கையில் நுழைந்து கலகலப்பாக்கினார்கள்.

இவர்கள் அத்தனை பேரும் ஒரு பக்கம் என்றால் சூர்யகிரண் ஒருத்தன் மட்டும் ஒரு பக்கம்!

அவனோடு பரிச்சயம் அவளுக்கே தெரியாமல் நன்றாய் பெருகிப் போய்விட்டது. அவன் அவள் வாழ்க்கைக்கு முக்கிய ஒளியாகி விட்டான். நினைவில் வாழ்க்கையில் அவன் அதிக நேரம் அவளைச் சந்தித்து அவளோடு அளவளாமல் போனாலும் அவன் பண்ணி வந்த காரியங்கள் தினமும் ஏதாவது ஒன்று இருந்து கொண்டேதான் இருந்தன.

மிதிலாவுக்கு இந்த ஊர் நெய் ஒத்துக் கொள்ளாமல் இருமல் வரத் தொடங்கிற்று. சாந்தி மூலமாய் இது

தெரிந்த அவன் நல்ல நெய்யை அனுப்பி வைத்தான். ஊரில் நல்ல சினிமா ஏதாவது வந்தால் சாந்தியோடு கூட மிதிலாவுக்கும் டிக்கெட் வாங்குவான். அவன், வேலைவால் நகரத்திற்குப் போனால் மிதிலாவுக்காகப் புத்தகங்களை வாங்கி வருவான்.

'எனக்கு இவைகள் பிடிக்கும் என்று அவனுக்கு எப்படி தெரியும்?'— என்று மிதிலா வியப்படைந்து போவாள்.

அவன் தன் டேப் ரிகார்டரை மிதிலாவிடமே விட்டு வைத்திருந்தான்.

அதை அவள் முதல் முதலாக கொடுத்த நிகழ்ச்சி மிதிலாவுக்கு நினைவிற்கு வந்தது.

ஒருமுறை சாந்தியோடு அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தபொழுது அங்கிருந்த டேப் ரிகார்டரை ஆன் பண்ணினாள்.

அதிலிருந்து சட்டென்று— ''சா விரஹே தவதீனா'' என்ற மிதிலாவின் குரல் பாடிக்கொண்டிருந்தது கேட்டது.

மிதிலா வியப்படைந்து விட்டாள்!

''இதை எப்பொழுது டேப் பண்ணினீங்க?'' என்றாள் ஆச்சரியத்தோடு.

''எங்கே என் காதுகளில் இனிமையான சங்கீதத்தைக் கேட்டாலும் அவற்றை இதில் டேப் பண்ணி விடுவது என் வழக்கம். நான் எப்பொழுதாவது தனியாய் இருக்கும் போது போட்டுக் கேட்டு மகிழ்ந்து போவேன். உங்க ளுடைய இந்தப் பாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். தினமும் படுக்கப் போவதற்கு முன்னால் கேட்பேன். உங்கள் குரலில் மனதை மகிழ்விக்கக்கூடிய தன்மை இருக்கிறது'' என்றான் அவன்.

அந்தப் புகழ்ச்சி அவளுக்கு சந்தோஷத்தை தந்தது.

மிதிலா கதவை சாத்திவிட்டு வந்தாள்.

ரங்கநாயகியும் அன்றுதான் ஊருக்குப் புறப்பட்டாள்.

அவள் புறப்படும் பஸ் மிதிலா புறப்படவிருந்த ரயிலுக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகக் கிளம்பு கிறது. அதனால் ரங்கநாயகி மிதிலா, சாந்தி ஜெயந்தி நால்வரும் முதலில் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து ரங்க நாயகியை பஸ்ஸில் ஏற்றிவிட்டு பிறகு மூவரும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார்கள். ரயில்வே ஸ்டேஷன் பஸ் ஸ்டாண்டிற்கு அருகில்தான் இருந்தது.

மூவரும் ஸ்டேஷனுக்குள் வந்து கொண்டிருந்தபோது அங்கே சூர்யகிரண் எதிர்ப்பட்டான்.

''இன்னும் வரக் காணோமே, ரயில் டயத்தை மறந்து போயிட்டீங்களோன்னு நினைச்சேன்'' என்றான் அவன் முறுவலுடன்.

''ஊஹூம்! ரங்கநாயகியின் பஸ் புறப்படுவதற்குத் தாமதமாயிடுத்து'' என்றாள் சாந்தி.

மிதிலாவின் கையிலிருந்த பெட்டியை அவன் வாங்கிக் கொள்ளப் போனான்.

''பரவாயில்லை'' என்றாள் மிதிலா தராமல்.

''சங்கோஜப் படாதீங்க'' என்று சொல்லிக்கொண்டே வாங்கிக் கொண்டான் அதை.

ரயில் அதற்குள் பிளாட்பாரத்தில் வந்து நின் றிருந்தது.

சூர்யகிரண் தானே மளமளவென்று போய் மிதிலா வின் சீட் எங்கே ரிஸர்வ் ஆகியிருந்தது என்று தேடிப் பார்த்தான்.

''வாங்க'' என்று கம்பார்ட்மெண்டிற்குள் அழைத்து சென்று பெட்டியை வைத்தான்.

ஜெயந்தியும் சாந்தியும் கூட மிதிலாவோடு உள்ளே வந்தார்கள். மிதிலா சீட்டில் உட்கார்ந்து கொண்டாள்.

"மேடம்! கடிதம் எழுதுங்கள்" என்றாள் சாந்தி.

"கண்டிப்பாய்"

"நீங்களும் போய் விடறீங்க. அண்ணா வேலையால் எங்கெங்கேயோ அலைத்து கொண்டிருப்பான். எனக்குப் பொழுதே போகாது" என்றாள் சாந்தி. அவ்வாறு சொல்லிக் கொண்டிருந்த பொழுதே அவள் கண்களிலிருந்து நீர் வழியத் தொடங்கிற்று.

மிதிலாவிற்குக்கூட தொண்டையை ஏதோ அடைத்தது.

"சாந்தி! நான் கட்டாயம் லெட்டர் போடுகிறேன்" என்றாள்.

அதற்குள் ரயில் புறப்படுவதற்கு சித்தமாய் மணியடித்தது.

"இப்பவாவது இறங்கி வருவீங்களா நீங்களிருவரும்?" — பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த சூர்யகிரண் சிரித்துக் கொண்டே கேட்டான்.

ஜெயந்தியும் சாந்தியும் இறங்கத் தொடங்கினார்கள். சட்டென்று நினைவிற்கு வந்தவளாய் மிதிலா சாந்தியின் கையைப் பிடித்து— "சாந்தி! ராஜேஷைப் பார்த்தால் நான் கேட்டதாய் சொல்லு" என்றாள்.

"சரி மேடம்" என்றாள் சாந்தி.

ரயில் கூவிற்று.

சாந்தியும் ஜெயந்தியும் கைகளை ஆட்டினார்கள்.

மிதிலா கையைத் தூக்கி ஆட்டினாள்.

மிதிலாவின் பார்வை சூர்யகிரண் மீது நிலைத்தது.

அவன் கண்கள் ஒரு வினாடி மிதிலாவின் பார்வையைச் சந்தித்து இழுத்தாற் போல தோன்றிற்று.

அவன் கையைத் தூக்கி மெதுவாய் ஆட்டினான்!

மிதிலாவின் மனது வேண்டியவர்களை விட்டுவிட்டுத் தனியாய் போவது போல உணர்ந்தது.

மிதிலா ஜன்னல் வழியாய் கைகளை நீட்டி அவர்கள் பார்வையிலிருந்து மறையும் வரை ஆட்டிக் கொண்டேயிருந்தாள்.

மெல்ல மெல்ல அவர்கள் தேய்ந்து மறைந்தார்கள்.

மிதிலா சரியாய் உட்கார்ந்து கொண்டாள்.

மடியில் ஏதோ பாரமாய் தோன்றிற்று.

குனிந்து பார்த்தாள்! மிதிலாவின் மடியில் டேப் ரிகார்டர் இருந்தது. அது சூர்யகிரணுடையது! அதை யார் எப்பொழுது அவளிடம் கொண்டு வந்து வைத்தார்களோ அவளுக்கே தெரியாது.

அதே சமயத்தில்—

ஸ்டேஷனுக்கு வெளியே ஒரு கார் விர்ரென்று வந்து நின்றது! அதிலிருந்து கதவைத் திறந்து கொண்டு ராஜேஷ் லேசுமாய் பாய்ந்து இறங்கி டென்ஷனோடு ஓடி வந்தான்! அவன் வருவதற்குள் ரயில் தொலைவில் முனையில் திரும்பி கண் மறைவாகிக் கொண்டிருந்தது. அதன் கூவல் தொலைவிலிருந்து கேட்டது.

பிளாட்பாரத்திலிருந்த ஜனங்கள் சிதறிப் போய்க் கொண்டிருந்தார்கள். ராஜேஷின் உதடுகள் பிரிந்தன.

அவன் கண்களில் ஏமாற்றம் வந்து சூழ்ந்து கொண்டது. அவன் கையில் நீண்ட பூங்கொத்து இருந்தது. அவன் ஒருமுறை கையிலிருந்த பூங்கொத்தை உற்றுப் பார்த்தான் உதட்டைக் கடித்துக் கொண்டே சிலையாய் அப்படியே நின்று விட்டான்.

ரயில் போய் விட்டது!

மிதிலா மேடத்தை அவனால் வழியனுப்பி வைக்க முடியாமல் போய் விட்டதே!

அவள் இன்றைக்கு ஊருக்குப் போவதாய் அவனுக்குத் தெரியவே தெரியாது.

நேற்றே பரீட்சைகள் முடிந்து விட்டன.

இன்றைக்குத் தந்தையைத் தேடிக் கொண்டு விருந்தினர்கள் வந்து விட்டார்கள். அவர்களுக்கு ஊரைச் சுற்றிக் காட்டுவதற்காகப் போக வேண்டியிருந்தது. திரும்பி வந்ததும் ஜீனு தென்பட்டு மிதிலா மேடமும் ரங்கநாயகி மேடமும் ஊருக்குப் போவதாய் தெரிவித்தான்.

அவன் உடனே காரை எடுத்துக் கொண்டு மிதிலா மேடத்தின் வீட்டிற்கு வந்தான். வீடு பூட்டியிருந்தது. ஜெயந்தியின் பாட்டி "அவர்கள் போய் வெகு நேரமாயிற்று" என்று சொன்னாள்.

அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான்!

சென்னை ரயிலின் டயம் தெரியும். பத்து நிமிஷம் டயம் இருந்தது. காரைக் கிளப்பிக் கொண்டு வேகமாய் வந்தான்.

அவன் எவ்வளவு வேகமாய் வந்தும் ரயில் போயே விட்டது.

அவன் ஏமாற்றத்துடன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான்.

காரில் வந்து உட்கார்ந்து கொண்டான் அவனுக்கு மனதில் தாங்க முடியாத வருத்தம் ஏற்பட்டது.

அவனுக்கு விவரம் தெரிந்ததிலிருந்தே எது வேண்டுமென்றாலும், தந்தை நிமிஷத்தில் அதை நிறைவேற்றி வைத்து விடுவார். அதனால் வேண்டும் என்று கேட்பதற்கு

கூட எதுவும் இல்லை. இப்பொழுதுதான் வாழ்க்கையில் முதல் முதலாய் அவன் வேண்டும் என்று இஷ்டப்பட்டு— அவனுக்கு ஆர்வத்தை உண்டாக்கிய நபர் மிதிலா மேடம்!

அவன் காரை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருக்கையில் அவனுக்கு அந்த ஊரே மிகவும் போரடிக்கத் தொடங்கிற்று.

அவனுக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை. தினமும் மறுநாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நாளைக்கு மேடத்தோடு பேசப் போகும் வார்த்தைகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பான்.

அவன் பரீட்சை நன்றாக எழுதினான். தான் எப்படி எழுதினோம் என்பதைப் பற்றி மேடத்திடம் உட்கார்ந்து விளக்கிச் சொல்லவேண்டும் என்று அவன் மனது நினைத்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது அந்த அவகாசமே இல்லாமல் போய் விட்டது.

அவனுக்கு சமுத்திரத்தின் அலைகளைப் போல பொங்கி வந்து கொண்டிருந்த உற்சாகம், கரையை அடைந்ததும் அவ்வலைகள் தானே தணிந்து போய் விடுவது போல வடிந்து விட்டது. அவன் மனம் பாரமாகி விட்டது.

அவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அன்றிரவெல்லாம் அவன் கூண்டிற்குள் அகப்பட்டுக் கொண்ட புலியைப் போல, அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டே தூக்கமில்லாமலும்— அமைதியின்றியும் கழித்தான். வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். கேசங்களில் கைகளை அளைய விட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான். இரண்டு மாதங்கள்! எப்படிக் கழிப்பதென்றே தெரியவில்லை அவனுக்கு. இந்த ஜென்மத்தில் அவன் மிதிலா மேடத்தைத் திரும்பவும்

பார்ப்பானோ இல்லையோ என்ற திகில் ஏற்படத் தொடங்கிற்று.

21

மிதிலா கட்டிலில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். தாய் அவள் கூந்தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்தாள்.

"அந்த ஊருக்குப் போனதும் அங்கேயே தங்கி விட்டாய். ஒரு தடவை கூட வீட்டுக்கு வரவில்லை. என்னையும் வரவிடவில்லை. எப்படி இருக்கிறாயோன்னு எப்படித் தத்தளித்துப் போயிட்டேன் தெரியுமா?" என்றாள் ஜானகி.

"நான்தான் அந்த ஊருக்குப் போவதற்கு முன்னால் இப்போதைக்குத் திரும்பி வரமாட்டேன்னு சொன்னேனேம்மா?" என்றாள் மிதிலா.

"நீ சொன்னாய்தான்! ஆனால் என்னால் எப்படி உயிரோடிருக்க முடியும்? யோசித்துப் பார்! தன்னந் தனியாய் இருக்கிறாய்!"— அவள் திரும்பவும் தொடங்கி விட்டாள்.

"நான் ஏதாவது ஃபாரினுக்குப் போயிருந்தால் என்ன பண்ணுவாய்? நான்தான் என் சௌகியத்தைத் தெரியப் படுத்தி லெட்டர் போட்டுக் கொண்டேயிருந்தேனே?" என்றாள் மிதிலா.

தாய் ஜடைப் பின்னி முடித்ததும், மிதிலா தாயை நோக்கித் திரும்பினாள். அவள் முகத்தை இரு கைகளாலும் ஏந்திக் கொண்டே— "அம்மா! நான் ரொம்ப

கெட்டவள் இல்லை? நான்... நான் உன்னை ரொம்பவும் தஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறேன்னு எனக்குத் தெரியும்."

"பைத்தியமே! இதென்ன பேச்சு? உன் வாழ்க்கை இப்படி ஆயிடுத்தேன்னுதான் வருத்தமே தவிர வேறெந்த வருத்தமும் இல்லை எனக்கு."

அவள் மிதிலாவின் முதுகை நீவி விட்டாள்.

மிதிலாவுக்கு நன்றாய் தெரியும், தான் அவளை மிகவும் வருத்தத்திற்குள்ளாக்கிக் கொண்டிருந்தாள் என்று! தாயின் விருப்பப்படி நடக்க வேண்டும் என்றால் அவள் திருமணம் பண்ணிக் கொண்டு இதற்குள் இரண்டு குழந்தைகளைப் பெற்றிருக்க வேண்டும். திருமணமா மிதிலாவுக்கு அந்த வார்த்தைகளே வேதனையாயி ருந்தது! இந்த ஜென்மத்தில் இனி அந்தப் பேச்சே வேண்டாம் என்று முடிவெடுத்துக் கொண்டு விட்டிருந் தாள்.

சிலபேருக்குச் சில அதிர்ஷ்டம் இல்லை.

அவளுக்கு வாழ்க்கையில் திருமணம் என்பது கானல் நீராகி விட்டது!

அதற்குள் "அத்தை" என்று கண்ணன் ஓடி வந்தான்.

அவன் கையில் ஒரு கடிதம் இருந்தது.

"இது உனக்கு வந்தது" என்று தந்தான்.

மிதிலா கடிதத்தைக் கிழித்துப் படிக்கத் தொடங் கினாள்.

"யார் எழுதினாங்க?" கேட்டாள் தாய்.

"சாந்தி" என்றாள் மிதிலா.

சாந்தி எழுதிய அக்கடிதத்தில் வழக்கமான சங்கதி களோடு கூட கடைசியாய்— "ராஜேஷ் இன்றைக்கு வந்து

உங்கள் விலாசத்தை வாங்கிக் கொண்டு போனான். நீங்கள் அன்று ஊருக்குப் போவதற்கு முன்னால் ராஜேஷைப் பற்றி விசாரித்திர்கள் என்று சொன்னேன். ''நிஜமாகவா?'' ''நிஜமாகவா?'' என்று இரண்டு தடவை திரும்பத் திரும்ப கேட்டான். நான் ''நிஜமாய்தான்'' என்று சொன்னேன். மிகவும் சந்தோஷப்பட்டான். அன்றைக்கு ஸ்டேஷனுக்கு வந்தான். ஆனால் நீங்கள் அதற்குள் போய் விட்டீர்களாம். பார்த்திர்களா மேடம்? உங்களைக் கண்டாலே எல்லோருமே எவ்வளவு விரும்பு கிறார்கள் பாருங்கள்! எங்களுக்கு எப்பொழுதும் உங்களைப் பற்றிய ஞாபகந்தான். என்னைப் பற்றிய ஞாபகம் உங்களுக்கு வருமா என்று சந்தேகம் ஏற்படுகிறது எனக்கு''— என்று எழுதியிருந்தான் சாந்தி.

மிதிலா சாந்திக்குப் பதில் எழுத உட்கார்ந்து கொண்டாள். விநோதமாய் அரை பக்கம் எழுதலே கஷ்டப்படும் மிதிலா நான்கு பக்கங்களுக்கு மேலாய் எழுதினாள்!

கடிதத்தின் மேல் விலாசத்தை எழுதிக் கொண்டிருந்த பொழுது பிரதிப் வந்தான்.

''மிதிலா! என்ன பண்ணிட்டிருக்கிறாய்?'' என்றான்.

''ஒன்றுமில்லை அண்ணா'' என்றாள்.

பிரதீப் வந்து மிதிலாவுக்கெதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''மிதிலா!'' அவன் தயக்கத்தோடு நிறுத்திக் கொண்டான்.

''சொல்லு அண்ணா''

''சங்கரன் சிற்றப்பாவைச் சந்தித்தேன். அவனுக்குத் தெரிந்த பையன் ஒருத்தன் இருக்கானாம். அமெரிக்காவில் இஞ்ஜினியராய் இருக்கானாம். அவன் இந்தியாவுக்கு

வந்திருக்கிறான்.''— மிதிலாவுக்கு இந்த பூர்வாங்கம் எல்லாம் எதற்கு என்று புரிந்தது. ''வந்தால்?'' புரியாதது போலவே பார்த்தாள்.

''சித்தப்பா உன்னைப் பற்றிச் சொன்னாராம். அந்தப் பையனுக்கு உன்னைத் தெரியுமாம். அவன் சித்தப்பாவின் மகள் உன்னோடு சேர்ந்து படித்தாளாம். நீ சரி என்றால் அவனுக்குத் திருமணம் பண்ணிக் கொள்ள நாட்சேபணை இல்லையாம். ரெண்டு வாரத்தில் கல்யாணம் நடக்கணுமாம். அடுத்த மாதம் பத்தாம் தேதிக்குள் திரும்பி அமெரிக்காவுக்குப் போய்விட வேணுமாம்.''

மிதிலாவின் முகத்தில் அதுவரை இருந்து வந்த மலர்ச்சி மாயமாய் விட்டது. தலை குனிந்தபடி மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். அறையில் நிசப்தம் ஏற்பட்டது.

''சொல்லும்மா'' என்றான் பிரதீப்.

மிதிலா நிமிர்ந்தாள். எப்பொழுது வந்தாளோ தெரியாது, தாய் கதவிற்கருகில் வந்து நின்றாள். அவளிடம் அவ்விடத்திலேயே ஏதோ வேலை இருப்பது போலக் காட்டிக் கொண்டிருந்தாள். அவ்விருவரும் மிதிலா சொல்லப் போகும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று புரிந்தது.

மிதிலா கொஞ்சம் பொறுத்து மெல்லிய குரலில் சொன்னாள்— ''அண்ணா! எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியபோது உன்னிடம் கண்டிப்பாய் சொல்றேன். இப்ப எனக்கு அந்த விஷயத்தில் ஆர்வம் இல்லை. உங்களைக் கஷ்டப்படுத்தி இருந்தால் மன்னியுங்கள்'' என்றாள்

''அதில்லைம்மா''— ஜானகி ஏதோ சொல்லப் போனாள்.

மிதிலா முறுவலை வரவழைத்துக் கொண்டே தாயைப் பார்த்து— ''அம்மா! நீ சொல்ல நினைத்ததெல்லாம் அண்ணாவிடம் சொல்லு. அண்ணா என் சார்பில் பதில் சொல்லுவான். டேய் கண்ணா, உன் பட்டம் எங்கே? நாம்ப மொட்டை மாடிக்குப் போய் பட்டம் விடலாம் வா'' என்று கூப்பிட்டாள்.

''இதோ வரேன் அத்தை''— கண்ணன் பட்டத்தை எடுத்துக்கொண்டு வந்தான். இருவரும் மாடிக்குப் போய் விட்டார்கள்.

மிதிலா போனதுமே தாய் அழத் தொடங்கினாள்.

''அவள் கல்யாணத்தைப் பார்க்கிற அதிர்ஷ்டம் எனக்கு இல்லை. நான் இந்த நிலையிலேயே அமுங்கி செத்துப் போக வேண்டியதுதான்! தெய்வம் என்னை இப்படிக் கஷ்டப்படணும்னுதான் எழுதி வைத்திருக்கார்.''

ப்ரதீப் தாயிடம் வந்து சமாதானப்படுத்தினான்.

''அம்மா! நீ ரொம்பவும் நிலைடைந்து போகாதே. மிதிலா இப்பத்தான் கொஞ்சம் நாலு பேரோடு கலந்து பழகத் தொடங்கியிருக்கிறாள்! இன்னும் கொஞ்ச நாள் போனால் கண்டிப்பாய் கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டு விடுவாள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது! நாம்ப இப்ப அந்த விஷயத்தில் பலவந்தப்படுத்தினால் இன்னும் பிடிவாதம் பிடிக்கத் தொடங்கி விடுவாள். நாம்ப கல்யாணப் பேச்சை எடுத்தோமானால் விஜய் விஷயத்தை அவளுக்கு ஞாபகமூட்டினாற் போலதான்னு நினைத்துக் கொள்.''

ஜானகி அழுது கொண்டிருந்தவள் ஆவேசத்தோடு அல்மிடத்தில் சுவரில் மாட்டியிருந்த ஒரு இளைஞனின் போட்டோவைப் பார்த்து— ''மொதல்ல அந்த போட்டோவை எடுத்துட்டுப் போய் உடைத்தெறிந்து விட்டு வா! அப்பத்தான் அவன் மாறுவாள்'' என்றாள்.

ப்ரதீப் சிரித்தான். ''அம்மா! நீ ஒரு பைத்தியம்! அந்த போட்டோவை உடைத்தெறிந்து விட்டால் மிதிலாவின் மனதிலிருந்து விஜய் ஞாபகம் போய் விடும் என்கிறாயா? இன்னும் அதிகமாகி விடும். அம்மா! நாம்ப மிதிலாவைப் பற்றி யோசிக்கணும். அவளுக்கு எப்படிப் பண்ணினால் சந்தோஷமாய் இருக்குமோ அப்படியே பண்ணினால் அவளால் அந்த வருத்தத்தையெல்லாம் கொஞ்சமாவது மறந்து போக முடியும். நாம்ப மிதிலாவை அந்த வருத்தத்தை மறந்து போகும்படி உதவி பண்ணனுமே தவிர, அது இரு மடங்காகும்படியாய் பண்ணக் கூடாது.'' —தாயிடம் நயமாய் எடுத்துச் சொன்னான்.

ஜானகி அவன் மேல் பாய்ந்தாள்.

''நீ எப்பொழுதுமே இப்படித்தான்! அவளுக்கு பரிந்து கொண்டு வருவாய். அப்படித்தான் அவளை அல்வளவு தூரம் உத்யோகத்திற்கும் அனுப்பி வைத்தாய். ஒரு வருஷமாய் அவள் வராமல் போனாலும் நீ வாயை திறக்கவில்லை. என்னையும் போக வேண்டாம் என்று சொல்லி விட்டாய். ஆமாம்! தங்கைக்குக் கல்யாணத்தை பண்ணனுங்கிற ரெத்தை உனக்கு இருந்தால் தானே?'' என்றாள்.

''சரி போகட்டும்மா, அப்படியே வைத்துக் கொள்''— என்றான் அவன்.

அவன் மனைவி குறுக்கிட்டாள். கணவனை மாமியார் அல்வாறு முகத்திலடித்தாற் போல பேசியதைக் கேட்டு அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. ''நன்றாயிருக்கு, நீங்கள் சொல்றது! நடுவில் அவர் என்ன பண்ணுவார்? கல்யாணம் பண்ணிக்கொள் என்றால் அவளுக்குக் கோபம்! வேண்டாம் என்றால் உங்களுக்குக் கோபம்! நடுவில் இவர் தான் பேச்சுக் கேட்க வேண்டியிருக்கு.''

''நீ சும்மாயிரு''— ப்ரதீப் அதட்டினான்.

22

காலை எட்டு மணி வேளை.

மிதிலா எழுந்து காபி குடித்துவிட்டு சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தாள். கண்ணன் கிட்டே வந்து— "அத்தை! சூப்பர்மேன் சினிமா வந்திருக்காம். எந்த தியேட்டரில் வந்திருக்கு? நாம்ப போகலாம்" என்று ரகளை பண்ணிக் கொண்டிருந்தான். ப்ரதீப் ஷேவிங் பண்ணிக் கொண்டே குளிக்க நீரை அனாலி வைக்கச் சொல்லி மனைவியை அவசரப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஜானகி சமையலறையில் இருந்தாள்.

அதற்குள் காலிங்பெல் அடித்தது.

"போய் பாரு யாரென்று" என்றாள் மிதிலா கண்ணனிடம்.

"நான் போக மாட்டேன், நீயே போ" என்றான்.

"அப்படீன்னால் நான் சினிமாவுக்கு வரமாட்டேன்" பயமுறுத்தினாள் மிதிலா.

"டேய் கண்ணா! இங்கே வா சிக்கிரமாய்—" ப்ரதீப் மனைவி கூப்பிட்டாள்.

"வரேம்மா" கண்ணன் உள்ளே ஓடிவிட்டான். அதற்குள் திரும்பவும் காலிங்பெல் அடித்தது. மிதிலா பேப்பரைக் கீழே போட்டுவிட்டுத் தானே எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

"யார் வேணும்?" கேட்கப் போன மிதிலா நின்று விட்டாள்.

"மிதிலா இருக்...." வந்தவனும் அப்படியே நின்று விட்டான்.

"நீங்களா?" மிதிலா வியப்படைந்தவளாய் பார்த்தாள். எதிரே சூர்யகிரண் நின்று கொண்டிருந்தான்.

"அம்மாடா! நீங்கள் வீட்டில் இருக்கீங்களே!" என்றான் அவன். "இப்பத்தான் நேராய் வரேன்" கையிலிருந்த ஏர்பேகையும் சூட்கேஸையும் காட்டினான் அவன்.

"வாங்க" மிதிலா உள்ளே நடந்தாள்.

"மிதிலா, யார்?" அண்ணன் உள்ளேயிருந்து கத்தினான்.

"சூர்யகிரண் அண்ணா" மிதிலா அந்தப் பெயர் நன்றாய் பரிச்சியமானது போலவே கத்திச் சொன்னாள்.

சூர்யகிரண் உள்ளே வந்தான்.

"இந்தா! சாந்தி உங்களிடம் இந்த லக்கேஜை ஒப்படைக்கச் சொன்னாள்—" கையிலிருந்த ஏர்பேகை மிதிலாவிடம் தந்தான்.

"எனக்கா? என்ன இருக்கு இதில்?" மிதிலா வியப்போடு அதை வாங்கிக் கொண்டாள்.

"எனக்குத் தெரியாது. நான் அமருக்குப் புறப்படுவதற்கு முன்னால் இதைத் தந்து நான் மெட்ராஸில் காலெடுத்து வைத்ததுமே மொதல்ல இதை உங்களிடம் போய் கொடுத்துவிட்டு பிறகுதான் என் வேலையைப் பார்த்துக்கணும்னு உத்தரவிட்டு விட்டான்."

அதற்குள் புதுக் குரலைக் கேட்டுவிட்டு, குளிக்கப் போய்க் கொண்டிருந்த ப்ரதீப் வெளியே வந்தான்.

"யார் வந்திருக்காங்க?" என்று ஜானகிகூட கைக் காரியத்தைப் போட்டுவிட்டுப் பார்க்க வந்தாள்.

''அண்ணா! இவர் சூர்யகிரண்! சாந்தி என்று சொன்னேனே என் மாணவி! அவளுடைய அண்ணா'' என்று பரிச்சியம் பண்ணினான்.

''கிளாட் டு மீட் யூ'' ப்ரதீப் சட்டென்று கையை நீட்டி சூர்யகிரணின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''உட்காருங்கள். உங்களைப் பற்றியும் சாந்தியைப் பற்றியும் எங்க மிதிலா சொல்லிக் கொண்டிருப்பாள்' என்றான்.

''எங்கம்மா'' மிதிலா காட்டினாள்.

சூர்யகிரண் வணங்கினான்.

''உட்காருங்கள்'' என்றான் ப்ரதீப்.

''இல்லை, நான் போகணும், எனக்கு வேலை இருக்கு'' என்றான் சூர்யகிரண், தான் வந்த காரியம் முடிந்து விட்டாற் போல.

''பலே ஆள்தான்! வந்துட்டு வாசலிலிருந்தே போய் விடப் போறீங்களா? உட்காருங்கள். மிதிலா, காபி கொண்டா'' ப்ரதீப் உத்தரவிட்டான்.

சூர்யகிரண் உட்கார்ந்து கொண்டான்.

மிதிலா காபி கலந்து கொண்டு வருவதற்குள் அவ்விருவரும் தம் உத்யோக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மிதிலா காபியைத் தந்தாள்.

வந்து அண்ணனுக்கருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''மிதிலா! இவர் யூனியன் பாங்கில் ஏதோ வேலையாய் வந்திருக்காராம். நான் அபீசுக்குப் போற வழிதானே? நான் போகும்போது என் ஸ்கூட்டரில் அங்கே இறக்கி விட்டு விடுகிறேன்னு சொன்னேன்'' என்றான்

''பரவாயில்லை, நான் போய்க் கொள்கிறேன்'' என்றான் அவன் சங்கோஜத்தோடு.

''ஒரு அரை மணிக்குள் நானும் வந்து விடுகிறேன். சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' என்றான் ப்ரதீப்.

ப்ரதீப் குளிப்பதற்காகப் போனான்.

''சாந்தி எப்படி இருக்கிறாள்?'' கேட்டாள் மிதிலா.

''நன்றாய் இருக்கிறாள். எனக்கு இங்கே ஒரே நாள் தான் வேலை. இல்லாவிட்டால் அவளையும் கூட்டிட்டு வந்திருப்பேன்.''

''கூட்டி வந்திருக்க வேண்டியதுதானே! நாலுநாள் என்னிடம் இருந்துட்டுப் போகலாமே!''

''நான் ராத்திரி போய் விடுவேன்'' என்றான் அவன்.

ப்ரதீப் குளித்து முடித்தான். சூர்யகிரணைக் குளிக்கும் படிச் சொன்னான். சூர்யகிரண் மிகவும் சங்கோஜமடைந்து விட்டான். சாந்தி தந்த பட்சணங்களை மிதிலாவிடம் தந்துவிட்டுப் போய் விடலாம் என்றுதான் வந்தான் அவன்! ஆனால் ப்ரதீப் அவனை அவ்வாறு போய் விடும்படி விடவில்லை.

மிதிலா பார்வதிபுரத்தில் தனியாய் இருக்கும்போது சாந்தி எவ்வளவு துணையாய் இருப்பாள் என்று மிதிலா மூலமாய் அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள். அவனுக்கு மரியாதைகள் பண்ணாமலிருக்க முடியவில்லை அவனால். மிதிலா அவன் குளிப்பதற்குத் தண்ணீர் சித்தமாய் எடுத்து வைத்தாள். அவன் குளித்துவிட்டு வந்தான்.

சாப்பாட்டு மேஜையில் ப்ரதீப் மனைவி அதற்குள் எல்லாவற்றையும் தயாராய் வைத்திருந்தாள்.

ப்ரதீப்பும் சூர்யகிரணும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் மிதிலா கிட்டே உட்கார்ந்து கொண்டு இருவருக்கும் பரிமாறினாள்.

ப்ரதீப்போடு சூர்யகிரண் பாங்கிற்குப் புறப்பட்டான்.

"ராத்திரி ரயிலுக்குப் புறப்படுகிறேன். நான் சாந்திக்கு ஏதாவது விஷயம் சொல்லணுமா?" கேட்டான் சூர்யகிரண். ப்ரதீப் இடை மறித்து—

"ராத்திரி உங்கள் ரயில் பத்து மணிக்குன்னு தெரியும். நீங்கள் அப்படியே புறப்பட்டுப் போய்விடக்கூடாது. உங்கள் வேலை பாங்கில் ஐந்து மணிக்கெல்லாம் முடிந்து விடும். அங்கிருந்து நேராய் நீங்கள் இங்கே வந்து, இங்கே ராத்திரி சாப்பிட்டுவிட்டு ரயிலுக்குப் புறப்படுங்க. மிதிலா! இந்த ப்ரீப்கேசை உள்ளே வை. அதில் உங்களுக்கு முக்கியமான காகிதங்கள் இருந்தால் மட்டும் எடுத்துக்குங்க" உத்தரவிட்டான் ப்ரதீப்.

"ஆமாம்ப்பா! நீ வந்தாற் போலவும் இல்லை, இருந்தாற் போலவும் இல்லை. சாயந்திரம் இருந்துட்டுப் போ!" என்றாள் ஜானகியும்.

சூர்யகிரணால் அவர்கள் அன்பை தட்ட முடிய வில்லை.

மிதிலா அதற்குள் உரிமையோடு ப்ரீப்கேசை அவன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு உள்ளே போய் தன் அறையில் வைத்துவிட்டு வந்தாள்.

"நீங்கள் அம்மா பேச்சையும் அண்ணா பேச்சையும் மறுக்க வழியில்லை" என்றாள் சிரித்துக்கொண்டே.

"வாங்க! என் ஸ்கூட்டரில் உங்களை பாங்கில் இறக்கி விட்டு விடுகிறேன். என் ஆபீசுக்குப் போகிற வழியில்தான் இருக்கு! உங்கள் வேலை ஆனதுமே அங்கிருந்து என் பாங்கிற்கு வந்து விடுங்கள். திரும்பவும் இருவரும் சேர்ந்து வரலாம்" என்றான் ப்ரதீப்.

சூர்யகிரண் மறுப்பதற்கு அவர்கள் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. ப்ரதீப்பின் ஸ்கூட்டருக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு சூர்யகிரண் போய்விட்டான்.

"அந்தப் பையனுக்குக் கல்யாணம் ஆயிடுத்தா மிதிலா?" என்றாள் ஜானகி.

"ஆங்! ரெண்டு குழந்தைகள்கூட!" என்றாள் மிதிலா. திருமணம் ஆகவில்லை என்றால் அவளுக்கு ஆசை தோன்றிவிடும். சம்பந்தம் பார்க்க வேண்டும் என்று ஆரம்பித்து விடுவாள். வீணாய் துப்புத் துலக்கி அலன் உயிரை எடுப்பாள்!

"அப்படியா? யார் அந்த அதிர்ஷ்டசாலி? பையன் நன்றாய் லட்சணமாய் இருக்கான். அதோடு நல்ல குணமும், பணிவும் அமரிக்கையும் கூட இருக்கு. மனைவியை நன்றாய் பார்த்துப்பான்."

"நன்றாய் பார்த்துப்பதா? அவனுக்கு அந்தப் பெண்ணைக் கண்டால் உயிர்! நீதான் கேட்டாயே, இன்றிரவே திரும்பிப் போய் விடணும்னு எல்லாவு ரகளை செய்தான்னு! ஒருநாள்கூட மனைவியைப் பிரிந்து இருக்க முடியலை அவனுக்கு."

"அப்படீயா? அப்படீன்னால் அந்தப் பொண்ணு பகவானைப் பொன் மலர்களால் பூஜித்திருப்பாள்."

"ஆமாம். அப்படித்தான் இருக்கும்" என்றாள் மிதிலா தலையாட்டிக் கொண்டே.

23

மாலையில் மிதிலா கண்ணனோடு சேர்ந்து ஷட்டில் காக் விளையாடிக் கொண்டிருந்தபோது ப்ரதீப்பும் சூர்யகிரணும் ஸ்கூட்டரில் வந்து இறங்கினார்கள்.

மிதிலா சூர்யாகிரணைப் பார்த்ததுமே விளையாட்டை நிறுத்திவிட்டு, எதிரே வந்து— "வேலை ஆயிடுத்தா?" என்று முறுவலுடன் விசாரித்தாள்.

"இல்லை" என்றான்.

"பாங்க் மேனேஜர் லீவில் இருக்காராம். நாளன்றைக்குக் காலையில் வருகிறாராம்"— என்றான் ப்ரதீப்.

மூவரும் உள்ளே வந்தார்கள்.

மிதிலா அவர்களுக்கு காபி கொண்டு வந்து தந்தாள். ப்ரதீப்— "பாரும்மா மிதிலா! சூர்யகிரண் இன்றிரவு போய்விட்டு திரும்பவும் நாளன்றைக்கு வரேன் என்கிறான். நான், ஒரு நாளைக்காகப் போய்விட்டுத் திரும்பி வரணுமா வீண் சிரமம் எதுக்குங்கறேன்? நாளைக்கு ஒரு நாள்தானே? நமக்கு விருந்தாளியாய் இருக்கச் சொல்கிறேன்."

"ஆமாம்! அண்ணா சொன்னது நிஜந்தான்"— என்றாள் மிதிலா.

"ஊஹூம். நான் இன்றிரவே போயிடணும்" என்றான் சூர்யகிரண்.

மிதிலா ஆள்காட்டி விரலைக் காட்டிக்கொண்டே— "பாருங்கள்! நீங்கள் எங்கள் பேச்சைக் கேட்காமல் எங்களை வேற்று மனிதர்களாய் பார்த்தால் நாங்களும் வேற்று மனிதர்களாகவே நடந்துகொள்ள வேண்டியிருக்கும். நான் பார்வதிபுரத்திற்கு வந்த பிறகு வேற்று மனுஷியாய் நடந்து கொண்டால் நீங்கள் ஒன்றும் நினைத்துக் கொள்ளக்கூடாது. புரிந்ததா?" என்றாள். அவ்வாறு சொன்ன விதத்தில், அக்கண்களில் பயமுறுத்தல் தெரிந்தது.

காபி குடித்துவிட்டு தம்ளரைக் கீழே வைத்து விட்டு, எழுந்து போய் ப்ரீப்கேசை எடுத்துக் கொள்ளப் போன சூர்யகிரண் ஒரு நிமிஷம் மிதிலாவையே கூர்ந்து பார்த்தான்! அந்தச் சமயத்தில் மிதிலாவின் கண்களில் அவனுக்கு என்ன தென்பட்டதோ தெரியாது, அவள் உத்தரவிற்குக் கட்டுப்பட்டவனாய், ப்ரீப்கேசை எடுத்துக் கொள்ளும் முயற்சியை விட்டுவிட்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன? என் பேச்சை ஒத்துக் கொண்டீர்களா?" என்றாள் மிதிலா.

"ஆல் ரைட்"— தோளைக் குலுக்கிக் கொண்டே சொன்னான் அவன்.

"குட்! தாங்க்யூ" என்றாள் மிதிலா. அவள் கண்களில் அவன் தன் வார்த்தைகளை ஒத்துக் கொண்டதற்குச் சந்தோஷமும் திருப்தியும் தென்பட்டன.

சூர்யகிரணுக்கு மிதிலாவை இங்கே இந்த விதமாய் பார்த்தபோது மிகச் சந்தோஷமாய் இருந்தது பார்வதிபுரத்தில் இருக்கும்போது எப்பொழுதும் கம்பீரமாகவும் அளந்து பேசுபவளாகவும் இருந்த மிதிலா இங்கே அவ்வாறு இல்லை. சிரித்துக் கொண்டும் துள்ளிக் கொண்டும் இருந்தாள். இந்த மிதிலா அவனுக்கு மிகப் புதுமையாய், பார்க்கக் கலர்ச்சியாய் தோன்றினாள். பார்வதிபுரத்தில் இருந்தபோது பொறுப்பான ஒரு லெக்சரராய், தானே வரவழைத்துக் கொண்டிருந்த ஒரு மிடுக்கு குறைந்து இப்பொழுது உண்மையான மிதிலாவாய் சுவாதீனத்துடன் வளைய வந்து கொண்டிருந்தாள்.

"மிதிலா! வீட்டில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்வோம்? ஏதாவது சினிமாவுக்குப் போகலாமா?" என்றான் ப்ரதீப்.

"நான் வரத் தயார் அண்ணா" என்றாள் மிதிலா.

"உங்க அண்ணி வராளா கேள்"

"டாடி! சூப்பர்மேனுக்குப் போகலாம்" என்றான் கண்ணன்.

"நீங்கள் எல்லோரும் சேர்ந்து எதைச் சொல்றீங்களோ அதற்கு ஓ கே! எனக்கு சினிமாவுக்குப் போவதால்

முக்கியம். எந்த சினிமாவாயிருந்தாலும் பரவாயில்லை" என்றான் பிரதீப்.

"அண்ணா! நான் இதோ ரெண்டு நிமிஷத்தில் வரேன்" என்று உள்ளே போனாள் மிதிலா.

"சூப்பர்மேன் உங்களுக்குப் பிடிக்குமா?" கேட்டாள் பிரதீப் சூர்யகிரணை.

"எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை" என்றான் அவன் முறுவலுடன்.

"ஓ.கே அப்படீன்னால் நாம்ப அந்த சினிமாவுக்கே போலோம். அந்த தியேட்டரும் வீட்டிற்குக் கிட்டத்தில் தான் இருக்கு. சினிமா முடிந்ததும் நடந்தே கூட வந்து விடலாம். டேய் கண்ணா! உங்கம்மாவை சிக்கிரமா ரெடியாகச் சொல்லுடா! பத்து நிமிஷந்தான் டயம் இருக்குன்னு சொல்லு" என்றான்.

கண்ணன் உள்ளே ஓடினான்.

ஐந்து நிமிஷங் கழித்து ஜானகி விடுவிடென்று அங்கே வந்தாள். அவள் முகம் கோபமாய் திடுதிடுத்துக் கொண்டிருந்தது. வரும் போதே பிரதிப்பைப் பார்த்து "என்னடா, நீயும் மிதிலாவும் சினிமாவுக்குப் போறீங்களா?" என்றாள்.

"ஆமாம்மா, ஏன்?"

"உனக்கு புத்தி இருக்கா? அந்த ஜெயம், தங்கை மகனை அழைத்துக் கொண்டு வரப் போவதாய் சொன்னாள் மிதிலாவைப் பார்ப்பதற்காக"

"அடடா! அப்படியா? எனக்குத் தெரியாதே! யாருமே சொல்லவில்லையே எனக்கு?"

"மருமகனைச் சொல்லச் சொன்னேனே! சொல்லவில்லையா?"

"சொல்லவில்லை! அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பவில்லைன்னு கோபமாய் இருக்கிறான். எங்க ரெண்டு பேருக்குமிடையே கோல்ட் வார் நடந்துட்டிருக்கு! அது சரி அவங்க எத்தனை மணிக்கு வரேன்னாங்க?"

"இன்றைக்கு ஆறரை மணி வரைக்கும் நல்ல டயம் இல்லையாம். சரியாய் ஏழு மணிக்கு வருவதாய் மத்தியானம் மைத்துனன் மூலமாய் செய்தி சொல்லி அனுப்பினாள். உனக்கு அப்பொழுதே போன் பண்ணி சொல்லி பக்கத்து வீட்டுக்குப் போனால் அவங்க இல்லை, பிஸி பூட்டியிருந்தது."

"அம்மா! மிதிலாவிடம் சொன்னாயா?"

"ஐயோ ராமா! மொதல்லேயே சொல்லிட்டால் அவள் பேசாமலிருப்பாளா? விட்டிலேயே இருக்க மாட்டாளே! அந்தப் பேச்சை எடுத்தாலே என்னை வெட்டிப் போட்டு விடுவாளே! என்னால் அவளிடம் சொல்ல முடியாது. அவங்க வரட்டும். மொதல்ல பையனுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டால்..."

"அம்மா! மிதிலாவிடம் நாம்ப முன்கூட்டியே சொல்லி வைத்துவிட்டு அவங்களைக் கூப்பிடுவதுதான் நல்லது. இல்லாவிட்டால் அவங்களுக்கு முன்னால் ஏதாவது ரசாபாசமாய் நடந்துட்டால்..."

"அந்த பயம எனக்கும் இருக்கு. இந்தக் காரியம் அனுகூலமாய் நடக்கணும் என்றால் அதெல்லாம் உன் கையில் தான் இருக்கு. நீ இம்முறை கண்டிப்பாய், கோபமாய் பேசினால் ஒப்புக் கொள்வானோ என்னவோ?"— அவள் அங்கே சுவரில் மாட்டியிருந்த இளைஞனின் போட்டோவைக் காட்டி— "மொதல்ல நீ அந்த போட்டோவை இங்கேயிருந்து கழற்றி தூர எறி. அவன் உயிரோடிருந்தபோது மட்டுமில்லை, செத்த பிறகும் நம்மை அழ வெச்சிட்டிருக்கிறான். மிதிலாவை சனியனைப் போல பிடித்துக் கொண்டிருக்கிறான். அவன்

மட்டும் இல்லாமலிருந்தால் இந்நேரத்தில் மிதிலாவுக்கு கல்யாணமாகிக் குழந்தை குட்டிகளோடு குடும்பத்தில் கலகலப்பாய் இருந்துட்டிருப்பாள்! பாழும் போட்டோ இது இங்கே இருக்கிற வரைக்கும் அவளால் அவனை மறக்க முடியாது," என்று அவள் ஆத்திரத்துடன் சுவரில் மாட்டியிருந்த அந்த போட்டோவைக் கழற்ற எரியப் போனாள்.

ப்ரதீப் சரேலென்று பாய்ந்து வந்து தாயின் கைகளைப் பிடித்துத் தடுத்துவிட்டு— "அம்மா! கம்மாயிருப்பா! மிதிலா இதையெல்லாம் கேட்டால் இங்கே ஒரு பெரிய ரணகளமாகி விடும். இம்முறை அவள் வீட்டை விட்டுப் போய் விட்டாளானால் அப்புறமாய் அவளை திருப்பியும் கூட்டிட்டு வருவது என்பது தெய்வத்தால் கூட முடியாத காரியம்"— என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு தாயிடம் முறையிட்டுக் கொண்டான். தாயின் கையிலிருந்து போட்டோவைப் பிடித்து இழுத்ததால் சுவரில் இருந்த ஆணி ஒன்று ஏசாகி போட்டோ ஆடிக்கொண்டிருந்தது. அவள் அதை சரிப் பண்ணுவதில் ஆழ்ந்திருந்தாள்.

தாய் மறுபடியும் ஆவேசமாய் சொன்னாள்—

"உனக்கு என் வருத்தம் புரியாதுடா! வயது வந்த பெண். உத்யோகம் என்று எங்கேயோ மாறுமூலை ஊருக்குப் போய் தங்கியிருக்கிறாள். அவளுக்கென்ன தலையெழுத்து. சொல்லு? அவளை யொத்தவங்களை யெல்லாம் பார். கல்யாணமாகி எவ்வளவு சுகமாய் இருக்காங்க? இதெல்லாம் அவள் தலையெழுத்தில்லைடா! என்னோட தலையெழுத்துதான்"— தலையில் அடித்துக் கொண்டாள்.

ப்ரதீப் வந்து அவள் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான். கெஞ்சும் குரலில், குரலைத் தாழ்த்திக் கொண்டு, "அம்மா! இப்ப ஏதாவது ஒரு ரகளை ஏற்படுகிற வரைக்கும் நீ விட மாட்டாய் போலிருக்கு மிதிலா வந்து விடப் போகிறாள்! நீ உள்ளே போ—"

என்று பலவந்தமாய் அவளை சமையலறைப் பக்கமாய் தள்ளிவிட்டுத் திரும்பி வந்தான்.

அவன் திரும்பி வந்தபோது சூர்யகிரண் ஜன்னலுக் கருகில் நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்த பிறகுதான் ப்ரதீப்பிற்கு அங்கே தன்னை மறந்து மனிதன் இருந்ததும், அவனுக்கு முன்னால் தாயும் தாயும் வாதாடிக் கொண்டதும் நினைவிற்கு வந்தது. அவனுக்கு அந்தச் சமயத்தில் தாயின் மேல் அளவுக்கு மீறிய கோபம் வந்தது. ஆவேசம் வந்து விட்டால் அங்கே யார் இருக்கிறார்கள் என்றுகூட பார்த்துக் கொள்ளாமல் வாதாடத் தொடங்கிவிடுவாள்.

"சாரி! எந்த விஷயமாயிருந்தாலும் பொறுமையாய் சண்டைப் போட்டுக் கொள்வது போல பேசிக்கொள்வது எங்கள் வீட்டில் பழக்கப்பட்டுப் போய் விட்டது. நாங்கள் இலங்கைப் பிரச்சனைப் பற்றி சர்ச்சைப் பண்ணிக் கொண்டால்கூட எங்கள் பக்கத்து வீட்டுக்காரங்க நாங்க சண்டை போட்டுக் கொள்கிறோமோன்னு பயந்து போய் எட்டிப் பார்ப்பாங்க. எங்கம்மாவுக்கு வயதாயிடுத்து. அவங்களுக்கு மிதிலாவுக்குக் கல்யாணம் ஆகலையென்ற வருத்தம்" என்றான்.

சூர்யகிரணுக்கு இன்னும் அங்கேயே இருப்பதா அல்லது போய்விட வேண்டுமா என்று தெரியவில்லை. அவன் தத்தளித்துக் கொண்டிருந்தான். அவர்கள் ஏதோ சச்சரவு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தான் மெதுவாய் எந்தச் சாக்கிலாவது வெளியேறி விடுவதுதான் நல்லதோ? ஆனால் சொல்லாமல் கொள்ளாமல் போவது மட்டும் நன்றாயிருக்குமா? என்றெண்ணிக் கொண்டான்.

ப்ரதீப் வந்து சால்ஜாப்புச் சொல்வது போல சொன்னதைக் கேட்டு அவன் பழையபடியே ஆகி, சுவரில் மாட்டியிருந்த போட்டோவில் இருந்த இளைஞனைச் சுட்டிக் காட்டி "அவர் யார்?" என்று கேட்டான்

"இவனா? இவன் விஜயன்! எங்க மிதிலாவும் இவனும் கல்யாணம் பண்ணிக்கணும்னு உத்தேசித்திருந்தார்கள். எங்கம்மாவுக்கு அது பிடிக்கலை. ஏன்னால் அவன் ஸ்டேட்டஸ் ரொம்பத் தாழ்ந்தது. ரொம்பப் படிக்கவும் இல்லை. பெரிய உத்யோகமும் இல்லை. மிதிலாவுக்கு எதாவது பெரிய டாக்டரையோ, இன்ஜினியரையோ அல்லது ஐ.ஏ.எஸ். ஆபீசரையோ பார்த்துப் பண்ணனும்னு எங்கம்மாவின் தவிப்பு."

"மிதிலாவுக்கு அவனைப் பிடித்திருந்ததா?" அவன் குரலில் ஆர்வத்தை வெளிக் காட்டாதவாறு மூடி மறைத்துக் கொண்டான்.

"ரொம்ப! அவங்க ரெண்டு பேரும் சிறு வயதிலிருந்தே சிநேகிதர்கள். நாங்கள் இந்த வீட்டை வாங்குவதற்கு முன்னால் வாடகை வீட்டில் குடியிருந்தோம். அங்கே பக்கத்து போர்ஷனில் அவங்க இருந்தாங்க.

நாங்கள் வீடு மாறிப் பத்து வருஷமாயிடுத்து. ஆனாலும் அவங்க சிநேகம் மட்டும் குறைந்து விடவில்லை. அவனுக்குப் பெரிய படிப்பு இல்லாதது மிதிலாவுக்கு ஆட்சேபணை இல்லை. ஏனெனில் விஜயன் புத்திசாலி. ஆனால் பொருளாதார நிலைமை படிப்பிற்கு அனுகூலமாயில்லை. அந்த விஷயம் மிதிலாவுக்குத் தெரியும்."

"பின்னே ஏன் கல்யாணம் பண்ணிக்கலை?"

"அதான் ட்ராஜிக்! கல்யாணம் நிச்சியமாயிடுத்து. கல்யாணத்துக்கு ரெண்டு நாளைக்கு முன்னால் அவள் ஆக்ஸிடென்ட்டில் செத்துட்டான்."

"அடடா!" மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டிருந்தாற் போலிருந்த அவன் இதயம் மூச்சை பலமாய் விடத் தொடங்கியதால் பழையபடி ஆயிற்று.

"மிதிலாவால் அவனை மறக்க முடியவில்லை. எனக்கும் அம்மாவுக்கும் எப்படியாவது சரி மிதிலாவுக்கு வேறு ஒருத்தனைப் பார்த்துக் கல்யாணத்தைப் பண்ணி

வைத்து விடணும்னு இருக்கு. கல்யாணமாகிக் கணவன் குழந்தைகள், குடும்பம் என்று ஆகிவிட்டால் அந்த வேதனையை மறந்து போவாள் இல்லையா! எனக் தென்னவோ, மிதிலாவின் மனதைப் புரிந்துகொண்ட ஒருவ னாயிருந்தால் அவள் சுகப்படுவாளென்று ஆசை! அப்படிப் பட்ட நபரைத்தான் நான் தேடிட்டிருக்கேன். ஆனால் அம்மா என் பேச்சைக் கேட்க மாட்டாங்க. அவங்களுக்கு ஒரே அவசரம். மிதிலாவுக்குச் சாதாரண ஒரு பெண் ணிற்குக் கல்யாணம் பண்ணுவது போல பண்ணி விடணும்னு தவிக்கிறாங்க. மிதிலாவுக்குக் கல்யாணப் பேச்சை எடுத்தாலே கோபம் வந்து விடுகிறது."

அதற்குள் விஜய் போட்டோ ஆணியிலிருந்து நழுவிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு— "அட! இந்த ஆணி லூசாகி விட்டது. போட்டோ கீழே விழுந்து வடு போலிருக்கு. இது கீழே விழுந்து விட்டால் மிதி வீட்டில் எல்லோரையும் கொன்று போட்டு விடுவாள் சுத்தியை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என் அங்கிருந்து உள்ளே போனான் ப்ரதீப்.

சூர்யகிரண் அந்த போட்டோவை கையெடுத்து கொண்டு அதிலிருந்த விஜயனைக் கூர்ந்து பார்த்தாள் அம்முகமும், புருவங்களின் அமைப்பும் மிகச் சாதாரண மாய் இருந்தன இந்த இளைஞன் மிதிலாவைக் கவர்ந்த தற்குக் காரணம் அவன் குணமா அல்லது பால்ய சிநேகமா?

அவன் போட்டோவை வைத்துக் கொண்டே யோசித்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் மிதிலா அங்கே வந்தாள். குளித்துவிட்டு நீலநிறப் புடவை உடுத்தியிருந்தாள். கழுத்தில் இரட்டை வடத்தில் முத்துமாலை தொங்கிக் கொண்டிருந்தது. கூந்தலில் மலரத் தொடங்கியிருந்த ஜாதி மல்லிகைப்பூ இருந்தது.

''அண்ணா! நான் ரெடி!'' என்று வந்துகொண்டிருந்த மிதிலா அறைக்கு நடுவே நின்று கொண்டிருந்த சூர்ய கிரணையும் அவன் கையிலிருந்த அந்த போட்டோவையும் பார்த்துவிட்டு டக்கென்று நின்று விட்டாள்.

சூர்யகிரண் மிதிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். மெல்லியதாய் மைத் தீட்டப்பட்ட அகன்ற கண்கள். அந்த அழகிய கண்களில் நல்ல பண்பும் சுறுசுறுப்புத் தனமும் அகண்ட காவேரியாய் பொங்கிக் கொண்டிருந்தன. இதழ் விரிந்த ரோஜா மலரைப் போல இருந்தாள்.

''இதென்ன? நீங்கள்—'' சூர்யகிரணையும் அவன் கையிலிருந்த போட்டோவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

அவள் அந்த போட்டோவைப் பார்த்த விதத்தைக் கொண்டே அவளுக்கு அது எவ்வளவு அருமையான பொருள் என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

அதற்குள் ப்ரதீப் சுத்தியை எடுத்துக் கொண்டு அங்கே வந்தான் ''மிதிலா! ஆணி ஆடுகிறது. போட்டோ விழுந்துடுமோ என்னவோன்னு...'' என்று போய் சுவரிலிருந்த ஆணியைச் சுத்தியால் அடிக்கத் தொடங்கினான் மிதிலா அண்ணன் காட்டிய இந்த சிரத்தைக்கு நன்றியோடு பார்த்தாள். பிறகு ஓரடி முன்னுக்கு வந்து சூர்யகிரணின் கையிலிருந்த போட்டோவுக்காகக் கையை நீட்டினாள்.

சூர்யகிரண் அதை மிதிலாவிடம் தந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் கண்கள் மிதிலாவையே பார்த்துக் கொண்டிருந்தன.

அவன் கண்களுக்கு மிதிலா புதிதாய் தென்பட்டாள்.

மிதிலா திருமணம் பண்ணிக் கொள்ளாமல் இருப்பதற்குப் பின்னால் இவ்வளவு கதைகள் உள்ளனவா? இந்தப் பெண்ணின் மனதைக் கவர்ந்து விட்ட அவன்தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! அவனை இன்னும் எவ்வளவு தேடித்து வருகிறாள்! சூர்யகிரணின் இதயத்தில் எங்கேயோ, எந்த மூலையிலோ, ஏதோ புஸ்ஸென்று நீயைப் போல எழும்பிற்று. அவன் செத்துப் போய் விட்டதால் பிழைத்தான்! இல்லாவிட்டால் இந்த நிமிஷத்தில் தானே அவனைக் கொன்றிருப்பானோ என்னவோ? இதென்னது? தன்னிடம் இல்லாத மோசமான யோசனை எப்படி வந்தது? தனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? இந்தப் பெண் யாரை விரும்பினால் என்ன? அவனுக்கேன் இவ்வளவு கோபம் வருகிறது? அவன் மனம் என்றுமே இது போல யோசித்ததில்லையே!

மிதிலா கூட அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்! மிதிலா ஒரு நிமிஷம் அந்தச் சூழ்நிலையையும் தான் இருந்த இடத்தையும் மறந்து போய் விட்டாள். இதென்ன, இவன் பார்வை தன்னைத் துளைத்தெடுத்துக் கொண்டிருக்கிறதே? தன் மனதை ஊடுருவிச் சென்று அந்தரங்கத்தைத் தொட வேண்டும் என்று முயற்சி பண்ணுகின்றன. அப்பார்வையில் கோபம் போன்ற உணர்ச்சி இருந்தது! ஆனால் மிக நெருக்கம் கூட இருந்தது! எப்பொழுதும் முறுவலுடன், அன்பையும், தைரியத்தையும் தெம்பையும் அளித்துக் கொண்டிருப்பது போல தோற்றமளிக்கும் அக்கண்கள் இந்த நேரத்தில் தப்புப் பண்ணிவிட்ட குற்றவாளியைப் பார்ப்பது போல சிறு கோபத்துடன் பார்க்கின்றனவே! அவள் என்ன தப்புப் பண்ணி விட்டாள்? இவனுக்குக் கோபம் வருவானேன்?

மிதிலாவின் மனதை அவன் இரண்டு கைகளுக்கு இடையேயும் சிறைப்படுத்தி, அதன் நாணயத்தைப் பரிசிலிப்பது போல உள்ளதே! அவன் மிதிலாவைத் தொடவில்லை. குறைந்தபட்சம் நெருக்கமாய் கூட வரவில்லை. ஆனால்— ஆனால்— மிதிலாவுக்கு அவன் தன்னை மூச்சும் விட முடியாதபடி கட்டியணைத்துக் கொண்டு விட்டாற் போல தோன்றிற்று.

"மிதிலா! போட்டோ எங்கேம்மா?"— சுவரிற்கருகிலிருந்து ப்ரதீப் கூப்பிட்டான்.

அவன் அந்த போட்டோவைத் தந்து கொண்டிருந்தான். அவள் தன் கைகளில் வாங்கிக் கொண்டிருந்தாள்.

ஆனால் அவன் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அவனையே விநோதமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் அந்த போட்டோவை அவளிடம் தந்து விட்டான்.

ஆனால் அவள் கை விரல்கள் அதை சரியாய் பிடித்துக் கொள்ளவில்லை. அது அவன் தந்ததில்தான் ஏதாவது குறையா? அல்லது அவள் பிடித்துக் கொள்ளாதது தப்பா?

இருவருக்குமே தெரியவில்லை.

போட்டோ இருவர் கைகளிலிருந்தும் நழுவிக் கீழே விழுந்தது. கலகலவென்று உடைந்தது. அந்த சப்தத்திற்கு இருவரும் திடுக்கிட்டு இந்த உலகத்திற்குத் திரும்பி வந்தார்கள்.

இருவரும் இரு மடங்கு திடுக்கிட்டுப் போய் கீழே பார்த்தார்கள். அங்கே கண்ணாடி உடைந்து சுக்கல் நூறாகி விட்டிருந்தது.

"ஐயோ!" சுவரிற்கருகில் ஆணியை அடித்துவிட்டுத் திரும்பிப் பார்த்த ப்ரதீப் கத்தி விட்டான்.

மிதிலா குனிந்து, உடைந்த அப்போட்டோவைக் கையில் எடுத்துக் கொண்டாள். எழுந்து நின்று சூர்யகிரணைப் பார்த்தாள். நிமிட நாழிகையில் அக்கண்களின் பார்வையே மாறிப் போய் விட்டது. அம்முகம் வினாடி நேரம் வெளுத்துப் போயிற்று. அடுத்த நிமிஷமே கண்டினால் ரத்தம் வரும் போல சிவந்து விட்டது! ஜந்தி

நிமிஷத்திற்கு முன்னால் சிரிப்பும் சந்தோஷமுமாய் அழகாய் இருந்த அம்முகம் இப்பொழுது கோபத்தால் பளபளத்துக் கொண்டிருந்தது.

"சாரி"— தன்னையறியாமல் மெல்லிய குரலில் சொன்னான் அவன்.

மிதிலா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இருவரும் அவ்வறையின் நடுவே, உடைந்த கண்ணாடித் துண்டுகளுக்கிடையே ஒருவரையொருவர் கூர்ந்து பார்த்துக் கொண்டே சிலையாய் நின்று கொண்டிருந்தார்கள்.

மிதிலாவின் உதடுகள் இறுகின. வேகமாய் மூச்சு விட்டதால் மூக்கு அதிர்ந்தது. போட்டோவை அழுத்தமாய் பிடித்துக் கொண்டாள்.

அடுத்த நிமிஷம் இடது கையை நீட்டி அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

அவன் கை சரேலென்று மிதிலாவின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டது.

"மிதிலா! மிதிலா! இதென்னது? என்ன காரியம் பண்ணிட்டாய்?" ப்ரதீப் கத்திக் கொண்டே ஓடிவந்தான். அவன் தங்கையின் தோள்களைப் பற்றி அழுத்தமாய் குலுக்கி விட்டு— "உனக்கு ஏதாவது பைத்தியம் பிடித்து விட்டதா? நீ என்ன பண்ணுகிறாய் என்று உனக்கே தெரிகிறதா? அவர் யாருன்னு நினைச்சுட்டாய்? கொஞ்சம் உடம்பில் சொரணையை வரவழைத்துக் கொண்டு பார்" என்று கத்தி விட்டான்.

சூர்யகிரண் இன்னும் சிலையாய் அப்படியே நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் நம்ப முடியாத அக்கிரமத்தைக் காண நேர்ந்தாற் போல நிலைகுத்தி நின்று விட்டன. அவன் கை மட்டும் மிதிலாவின் கையை

உள்ளங்கையில் அழுத்திக் கொண்டு விடவில்லை! அந்தச் சமயத்தில் அவன் முகத்தைப் பார்த்தபோது ப்ரதீப்பிற்கு பயமாயிருந்தது. அவன் சட்டென்று சூர்யகிரணின் தோளில் கையை வைத்து— ''இவள் ஒரு பைத்தியம்! அவளுக்கு ஒன்றுமே தெரியாது! உடம்பில் சொரணை இல்லை! பைத்தியம்! நீங்கள் ஒன்றும் நினைச்சுக் காதீங்க, ப்ளீஸ்'' என்றான்.

சூர்யகிரண், மெதுவாய் உடம்பில் சொரணை வந்து விட்டவனைப் போல, இவ்வுலகிற்குத் திரும்பி வந்து மிதிலாவின் கையை விட்டுவிட்டு— ''தட்ஸ் ஆல் ரைட்'' என்றான்.

மிதிலா அங்கிருந்த சோபாவில் சரிந்து, முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டே சட்டென்று அழத் தொடங்கினாள்.

''மிதிலா! ப்ளீஸ்!''— ப்ரதீப் தங்கையிடம் வந்து கெஞ்சினாற் போல சமாதானப்படுத்தத் தொடங்கினான்.

மிதிலா அழுது கொண்டிருந்தாள்! அங்கிருந்து வெளியே போகப் போன சூர்யகிரண் நின்று விட்டான். மிதிலாவைத் திரும்பிப் பார்த்தான்.

மிதிலா அழுது கொண்டிருந்தாள்!

அந்த அழுகை இதயத்தைக் கசக்கிப் பிழியும்படியாய் இருந்தது! அந்த அழுகை பயங்கரமான தனிமை அரக்கனிடம் சிக்கிக் கொண்டு, தப்பித்துக் கொள்ள முடியாமல் போய் பரிதவித்துக் கொண்டிருந்த ஆத்ம ரோதனையாய் இருந்தது. இந்த மாதிரி அழுகையை அவன் இதற்கு முன்பே கேட்டிருக்கிறான். எப்பொழுது? அவனுக்கு உடனேயே ஞாபகம் வந்து விட்டது! மிதிலாவுக்கு ஜ்வரம் வந்தபொழுது, அவன் அன்றிரவு மிதிலாவுக் கருகில் விடியும் வரையிலும் விழித்துக் கொண்டே உட்கார்ந்திருந்த பொழுது! மிதிலா அந்த ஜ்வர வேகத்தில்

அவனை 'யாரோ' என்றெண்ணிக் கொண்டு, கிட்டே அணைத்துக் கொண்டு, வாக்குறுதிகளை வாங்கிக் கொண்ட பொழுது! சூர்யகிரணுக்குச் சட்டென்று சந்தேகத் திரைகள் அகன்று விட்டாற் போலாயிற்று. அத்த 'யாரோ' இப்பொழுது யார் என்று புரிந்துவிட்டது. அவன் இந்த 'விஜயன்!'

வாசலைத் தாண்டப் போன அவன் கால்கள் நின்று விட்டன. அவன் மெதுவாய் திரும்பி மறுபடியும் உள்ளே வந்தான்.

அதற்குள் ப்ரதீப் மிதிலாவை பலவந்தமாய் கையைப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்து, தோள்களைச் சுற்றிலும் கைகளைப் போட்டு உள்ளே அழைத்துச் சென்றான். உள்ளே அறையில் இருந்த மனைவியிடம் மிதிலாவை ஒப்படைத்து விட்டு வந்தான். ப்ரதீப்பின் மனைவி மிதிலாவை தேற்றிக் கொண்டிருந்தது கேட்டது.

ப்ரதீப் வெளியே வந்தான்.

அவன் நேராய் கதவிற்கருகில் நின்று கொண்டிருந்த சூர்யகிரணிடம் வந்து அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டான். ''நீங்கள் மிதிலாவை மன்னிக்கணும். அவள் நல்ல நினைவோடு பண்ணிய காரியமில்லை இது. மிதிலாவின் சார்பில் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்''—அவன் கைகளைக் கூப்பினான். ப்ரதீப்பைப் பார்த்தால் நடந்ததற்கு அவன் எவ்வளவு துடித்துப் போய் விட்டான் என்றும் எவ்வளவு வெட்கமடைந்து கொண்டிருந்தான் என்றும் புரிந்தது.

சூர்யகிரணுக்கு அவன் மீது இரக்கம் ஏற்பட்டது. ப்ரதீப்பின் தோளில் தட்டிவிட்டு— ''பரவாயில்லை. நான் ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லை. நீங்கள் ஒன்றும் வருத்தப் படாதீங்க'' என்றான். நேரத்தைப் பார்த்துக் கொண்டு— ''நான் போகிறேன். எனக்கு இன்னும்

ரயிலுக்கு நேரம் இருக்கு'' என்று பேகை எடுத்துக் கொண்டு போக முற்பட்டான்.

ப்ரதீப் அவன் கையிலிருந்த பையைப் பிடுங்கிக் கொண்டான்.

''நோ! நீங்க இப்ப இந்த மாதிரி போய்விட்டால் வேறு வினைதான் உண்டா? எங்கள் குடும்பமே வெட்கத்தால் கூனிக் குறுகிப் போய்விடும். நீங்கள் ஊருக்குப்போக வழியில்லை. இன்றைக்கு இருந்து தீர வேண்டியதுதான். உங்களுக்கு எவ்வளவு வருத்தமாயிருந்தாலும் சரி எங்களுக்காக இருந்துதான் தீரணும்,'' என்று பேகை எடுத்துக் கொண்டு போய் அலமாரியில் வைத்துப் பூட்டி விட்டு வந்தான்.

ப்ரதீப் வந்து திரும்பவும் சூர்யகிரணின் கைகளைப் பிடித்துக் கொண்டான். ''நீங்கள் எங்களைக் கெட்டவர்களாக்கிவிட்டுப் போய் விடாதீங்க, ப்ளீஸ்'' என்றான்.

அதற்குள் தாய் அங்கே வந்தாள். அவளுக்கு நடந்த தெல்லாம் தெரியாது. அவ்வளவு நேரமாய் பக்கத்து வீட்டிற்குப்போய் ஜெயத்திற்குப் போன்பண்ணி ஏழு மணிக்கெல்லாம் புறப்பட்டுவரச் சொல்லிவிட்டு வந்தாள். வீட்டிற்குள் நுழைந்ததுமே கண்ணாடித் துண்டுகள் கண்ணில் பட்டன.

ப்ரதீப் நடந்ததைச் சுருக்கமாய் சொன்னான்.

அவளுக்கு மிதிலா அழுது கொண்டிருந்த சப்தம் அறைக்குள்ளிருந்து கேட்டது. அங்கே நாற்காலியில் கண்ணாடி உடைந்து தென்பட்ட போட்டோ கண்ணில் பட்டது! உடனே ஒரே பாய்ச்சலாய் அந்த போட்டோவை எடுத்து வந்து சூர்யகிரணின் கையில் வைத்து ''நீ இதை உடைத்தெறிந்து நல்ல காரியத்தைப் பண்ணிட்டாயப்பா! நான் நினைத்தேன் பண்ணணும் பண்ணணும்னு நினைத்துக் கொண்டு கோழைத்தனத்தால் பண்ண முடியாமல்

போனதை நீ பண்ணி புண்ணியத்தைக் கட்டிக்கொண்டு விட்டாய்! எனக்கு நல்லதைப் பண்ணிட்டாய். உனக்கு வாழ்நாளெல்லாம் நன்றியோடிருப்பேன். இந்தா இதை எடுத்துட்டுப் போய் ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்துக் கொளுத்தியெறி. எனக்கு இன்னும் நல்லது பண்ணியவனாவாய்'' என்றாள்.

''அம்மா! என்னம்மா இது? உனக்குப் பைத்தியமா?'' —கத்தினான் ப்ரதீப்.

''பைத்தியம் இல்லைடா! வயிற்றெரிச்சல்! இந்த கனியன் கண்ணெதிரேயிருந்து போனாலேயொழிய அவள் துன்பம் போகாது. எனக்கும் இந்த சோகம் தீராது''— அவள் அழத் தொடங்கினாள். ப்ரதீப் சூர்யகிரணின் கையிலிருந்த போட்டோவை வாங்கிக்கொள்ள கையை நீட்டினான். சூர்யகிரண் தரவில்லை. தடுத்து விட்டு— ''இருக்கட்டும். போட்டோ ஃபிரேமை உடைத்து விட்டவன் நான்தானே? அதனால் திரும்பவும் ஃபிரேம் போட்டுத் தந்துவிடுகிறேன்'' என்றான். ப்ரதீப்பால் அவனை மறுக்க முடியவில்லை.

''பையன் விட்டார் வராங்களே, இப்ப என்ன பண்றது?'' என்றாள் ஜானகி.

''வேண்டாம்னு போன் பண்ணிடறேன்''— பக்கத்து வீட்டிற்கு ஓடினான் ப்ரதீப்.

சாப்பிட்ட பிறகு ப்ரதீப்பும் சூர்யகிரணும் மொட்டை மாடியில் எதிரெதிரே படுக்கைகளைப் போட்டுக் கொண்டு படுத்தார்கள்.

சூர்யகிரணுக்குத் தூக்கம் வரவில்லை.

அவன் மனம் யோசித்துக் கொண்டிருந்தது. தலைக்குக் கீழே இரு கைகளையும் வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்துக் கொண்டிருந்த அவன், ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

3513168

விஜயனைப் பற்றி கேட்ட பிறகு சூர்யகிரணுக்கு இதுவரை மிதிலா பால் இருந்து வந்த சுர்ப்பு இன்னும் இருமடங்காய் பெருகிவிட்டது. இதுவரை இருந்து வந்த கௌரவத்தோடு கூட இப்பொழுது இன்னும் விருப்பம்கூட ஏற்படத் தொடங்கிவிட்டது.

மிதிலாவை தம் வாழ்க்கைத் துணைவியாய் பெறுபவன் அதிர்ஷ்டசாலி! அவன் பெருமூச்செறிந்தான். கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். மணி ஒன்றைக் காட்டிக் கொண்டிருந்தது. அவன் கண்கள் மெதுவாய் தூக்கத்தில் ஆழ்ந்தன.

விடிந்தது!

பறவைகளின் கிச்சுக் கிச்சு சப்தத்தால் அவனுக்கு விழிப்பு வந்தது! அவன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டான். ப்ரதீப் படுக்கையில் இல்லை. எப்பொழுது எழுந்து போனானோ?

சூர்யகிரண் எழுந்து கீழே இறங்கி வந்தான்.

''குட்மார்னிங். ராத்திரி தூக்கம் வந்ததா?'' பேப்பர் படித்துக் கொண்டிருந்த ப்ரதீப் கேட்டான்.

''பரவாயில்லை'' என்றான்.

''கண்ணா டூத்பேஸ்ட் ப்ரெஷ் எடுத்துட்டு வா''—கத்தினான்.

சூர்யகிரண் அரைமணி நேரங்கழித்து குளித்து முடித்துவிட்டு வந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். அவன் எழுந்து கீழே வந்ததிலிருந்தே மிதிலா கண்ணில் படவில்லை. அவள் பேச்சுக்குரலே கேட்கவில்லை. அவனுக்கு இருப்பதா போய்விடுவதா என்று தெரிய வில்லை.

ப்ரதீப் குளிக்கப் போனான்.

கண்ணன் ஓடிவந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சூர்யகிரணிடம் ''அத்தை உங்களிடம் தரச் சொன்னான்''— என்று சொல்லிவிட்டு அவன் மடியில் ஒரு ஓட்டை வைத்துவிட்டு வந்த வேகத்தில் ஓடிப்போய் விட்டான்.

சூர்யகிரண் அக்காகிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் முத்து முத்தாய் மிதிலாவின் கையெழுத்தில் இவ்வாறு இருந்தது—

''நேற்று நடந்த விஷயத்திற்கு நான் மிகவும் விசாரப் படுகிறேன். அது ஆவேசத்தில் யோசிக்காமல் பண்ணி விட்ட காரியம். நீங்கள் அவமானமாய் பாவித்து போய் விட்டிருந்தால், நான்— நான் திரும்பவும் பார்வதிபுரத்தில் கால் வைக்க முடியாமல் போயிருக்கும். அண்ணா சொன்னான், நீங்கள் என்னைப் புரிந்துகொண்டு விட்டீர்கள் என்று! உங்களுக்கு என் மனப்பூர்வமான நன்றி! நீங்கள் ஊருக்குப் போய்விடாமல், என் தன்மானத்தையும் வெட்கத்தையும் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு என்றும் நன்றிக்கடன்பட்டிருப்பேன்!

இப்படிக்கு
மிதிலா''

அந்தக் கடிதத்தைப் படித்த பிறகு அவனுக்கு ஏதோ சக்தி பிறந்து விட்டாற் போலிருந்தது. மிதிலா பழையபடி ஆகிவிட்டாள்! தன்னைத்தான் சுதாரித்துக் கொண்டு விட்டாள். அதனால்தான் இந்தக் கடிதத்தை அவளால் எழுத முடிந்தது! தாங்க் காட்! அவனுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. அவன் இதயத்தில் நேற்று மாலையிலிருந்து அழுத்திக் கொண்டிருந்த பெரிய பாரம் இச்சின்ன கடிதத்தால் மாயமாகிவிட்டது. அவன் மனம் இப்பொழுது இலேசாகி விட்டது. அவனுக்கு இப்பொழுது தானும் மிதிலாவும் மிகவும் நெருக்கமானவர் களாகி விட்டாற்போல தோன்றிற்று. அதுமட்டுமில்லை.

அலலுக்கு இல்லாலு நாளாய் மிதிலாவிடம் புரிபடாமலிருந்த ஏதோ ஒன்று இப்பொழுது நன்றாய் புரிந்து போய் விட்டாற்போல இருந்தது. அந்தக் காதிதத்தை அருமையானதாய் பாவித்த அவன் ஜாக்கிரதையாய் மடித்து ஜேபியில் வைத்துக் கொண்டான்.

24

ராஜேஷ் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். சுற்றிலும் வாசுவும், ரங்கனும் சீனுவும் உட்கார்ந்திருந்தார்கள்.

''ராஜேஷ்! சினிமாவுக்குப் போகலாமா?'' என்றான் சீனு.

''ஊஹூம்! எனக்குப் பிடிக்கலை'' என்றான் ராஜேஷ்.

''சரி விடு! சீட்டாடுவோமா?'' என்றான் வாசு.

சீட்டாட்டத்தில் பெரும்பாலும் அவன்தான் அதிகமாய் ஜெயிப்பான். எல்லோரைக் காட்டிலும் வாசுவுக்குதான் பணம் நிறைய வரும்.

''ஊஹூம்! எனக்கு மூட் இல்லை'' என்றான் ராஜேஷ்.

''சரி! இப்படியே போய் காரில் சுற்றி விட்டு வரலாமா?''— ரங்கன் ஆலோசனை தந்தான்.

''ரொம்ப போர்! அதே ரோடுகள்! அதே மனுஷங்க! அலுத்துவிட்டது'' என்றான் ராஜேஷ்.

''பின்னே என்ன செய்யலாம், நீயே சொல்லு''

''அதான் எனக்கும் புரியலை'' என்றான் ராஜேஷ். அவன் காலேஜுக்கு லீவு விட்டதும் ஒரு வாரமாய் வீட்டில் தனியாய் இருந்து வந்தான். அதற்கப்புறம் ஒரு நாள் இரண்டு வாசுவிடம் வந்துவிட்டான். ''எனக்குப் பொழுதே போகலை. போரடிக்கிறது'' என்றான்.

ராஜேஷ் திரும்பி தம்மிடம் வந்துவிட்டதற்கு நண்பர்களுக்குச் சந்தோஷமாய் இருந்தது. ஒருமாத காலமாய் வீட்டிலேயே இருந்து வந்த அவன் அவர்கள் யாரையும் சந்திக்கவில்லை.

ஒருமுறை சீனு போன் பண்ணி கேட்டுவிட்டான்:

''ராஜேஷ்! எதுக்கு எங்களை இப்படி உதறிவிட்டாய்? நாங்க என்ன தப்புப் பண்ணிட்டோம்?'' என்றான்.

ராஜேஷ் பதில் பேசவில்லை.

''குறைந்தபட்சம் காரணத்தையாவது சொல்லு. நீ தேவையில்லைன்னு சொல்லிட்டால் உன்னைப்பற்றிப் பேச்சையே எடுக்கமாட்டோம்னு வாசு சொல்லச் சொன்னான்.''

''நான்... நான்— டாடி வீட்டிலேயே இருன்னு சொல்லிட்டார். அதனால்...''— ராஜேஷ் மென்று விழுங்கினான்.

''டாடி இருன்னு சொன்னதால் நீ இருந்துவிட்டேன் என்கிறாய்! வாட் எ பிக் ஜோக்! அப்படீன்னால் ராஜேஷ் சமர்த்துப்பிள்ளையாய் தந்தையின் வார்த்தைகளைக் கேட்கிறான்னு சொல்லு!''

''ஷட்அப்!''

''நீயே வாசுவுக்கு என்ன பதில் சொல்றதுன்னு சொல்லிவிடு.''

''நான்— அப்புறமாய் வரேன்னு சொல்லு.''

''சரி''— சீனு போனை வைத்துவிட்டான்.

ராஜேஷ் போனை வைத்துவிட்டு வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்துபோய் உட்கார்ந்துவிட்டான். அவனுக்கு நண்பர்களிடம் போக கொஞ்சமும் விருப்பம் இல்லை. ஆனால் தனியாய் உட்கார்ந்து கொண்டு எப்படிப் பொழுதைப் போக்குவது என்றும் தெரியவில்லை. காலேஜ் எப்பொழுது திறப்பார்களோ என்று கேலெண்டரில் தேதியை தினமும் கணக்கிட்டுக் கொண்டிருந்தான். அவன் எழுந்து அறைக்குள் கூண்டிலடைப்பட்டுக் கொண்ட புலியைப் போல அங்குமிங்கும் நடந்தான்.

மறுநாள் அதற்குமேல் அவனால் இருக்க முடியவில்லை. காரை எடுத்துக் கொண்டு கடைவீதிக்குப் போனான். அங்கே அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள், சீனு, ரங்கன், வாசு மூவரும். காருக்கருகில் வந்தார்கள் அவர்கள்— ''நீ எங்களோடு பேசாமல் போனால் உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவோம் தெரியுமா?'' என்றார்கள்.

''தூக்கிக் கொண்டு போய் என்ன பண்ணுவீங்களாம்?'' என்றான் ராஜேஷ் சற்றும் பயமின்றி.

''உன்னைக் கடத்திக் கொண்டுபோய், ஒளித்து வைத்துக் கொண்டு உங்கப்பாவைப் பணத்துக்காக வதைப்போம். உங்கப்பா பணம் தருவார். அப்பொழுது எவ்வளவு நன்றாக— அந்த பணத்தை வைத்துக் கொண்டு சந்தோஷமாய் சினிமா எல்லாம் பார்த்துட்டு சுகமாய் இருப்போம் தெரியுமா?''

''கிழிச்சீங்க! எங்கப்பா பணம் தராவிட்டால்?''

''உன்னைக் கொன்றுவிடுவோம்.''

ராஜேஷ் அப்படியா என்பது போல பார்த்தான். கையை மடக்கிக் கொண்டு ''அப்படீன்னால் தூக்கிட்டுப் போங்க பார்க்கலாம்'' என்றான். சீனு வந்து அவன் மேல் கையை வைத்தான். ராஜேஷ் அவனை ஒங்கி அறைந்தான். சீனு போய் தொலைவில் விழுந்தான்.

''இடியட்ஸ்!''— ராஜேஷ் கிட்டினான்.

வாசு கும்பிடு போட்டான். ''ஏதோ விளையாட்டிற்குச் சொன்னால் இவ்வளவு கோபம் எதுக்குடா அப்பனே? நீ எங்கள் உயிர்த் தோழன். உன்னை நம்பிட்டுருக்கோம் நாங்க. எங்களை நிஜமா என்று நட்டாற்றில் முழுகிப் போகும்படிச் செய்துவிட்டு நீ எங்கள் முகத்தைக் கூட பார்க்காமல் விட்டோடு இருந்துவிட்டால் எங்கள் கதி என்னவாறது?'' வாசு இவ்வாறு செஞ்சியதால் ராஜேஷ் கொஞ்சம் சாந்தமடைந்தான்.

அன்றைக்கு அவர்களோடு சேர்ந்து சினிமாவுக்குப் போனான். அதற்கு மறுநாளிலிருந்து நண்பர்களோடு சேர்ந்தே இருக்கத் தொடங்கினான் ஆனால் முன்புபோல் மனப்பூர்வமாய் அவர்களோடு பழக முடியவில்லை அவனால். அவர்களுடைய ஜோக்குகள் எல்லாம் முன் போல சந்தோஷப்படுத்தவில்லை. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் அவர்கள் சூழ்நிலையே போர் அடித்தது. அவர்கள் பேசிக்கொள்ளும், அசிங்கமான வர்ணனைகளும் இதற்கு முன்னால் எரிச்சலைத் தந்துகொண்டிருந்தன. இப்பொழுதோ அருவருப்பாய் இருந்தது.

சீனு விதியில் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்து— ''ஆஹா! ஜாக்கெட்டெல்லாம் சுந்தரி போகிறான்!'' என்று விசில் அடித்தான். கண் அடித்தான்.

''அடப் பாவிப்பயலே! உன் வாய் புழுக்க'' என்று அவள் அவனைத் திட்டிவிட்டு புடவைத் தலைப்பை நன்றாய் இழுத்துப் போர்த்திக் கொண்டு போனாள். இன்னொரு நாலு வயது சிறு பெண் கொள் இல்லாமல் தாயின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டே எதற்கோ அழுது கொண்டே போய்க் கொண்டிருந்தது.

''அந்த ஆடையில்லாத மொக்கைப் பாருடா, அந்த யில்லை?'' கேட்டான் வாசு.

''ஆஹா! அந்தப் பொண்ணு பெரிசானால் எப்படி இருக்கும்னு என்னால் ஊகிக்க முடிகிறது'' என்றான் ரங்கன்.

''டர்ட்டி ஜோக்ஸ்! எவ்வளவு நடவை திட்டினாலும் நீங்கள் மாறமாட்டீங்க'' ராஜேஷ் அலுத்துக் கொண்டே வெறுப்போடு அங்கிருந்து போக எழுந்திருந்தான். வாசு, சீனா முதலியவர்களுக்கு கிழவியிலிருந்து குழந்தைவரை பெண்கள் எல்லோரும் ஒன்றுதான்! அவர்கள் மீது அருவருப்பான ஜோக்குகளை அள்ளி வீசி, வாய்விட்டுச் சிரிப்பார்கள்.

''ராஜேஷ்! என்ன பண்ணலாம் சொல்லு'' என்றான் வாசு.

''எனக்கு ஒன்றையும் பண்ணணும்னு இல்லை!' என்று சொல்லிக் கொண்டே ராஜேஷ் போய் விட்டான்.

''அட! ராஜேஷ்! உண்மைத்தான்''— வாசு கூப்பிட்டான். ராஜேஷுக்கு அந்த அழைப்பு கேட்டது. ஆனாலும் காதில் விழாதது போலவே பேசாமலிருந்தான். திரும்பியும் பார்க்கவில்லை. காரைக் கிளப்பிக் கொண்டு விரைன்று போய் விட்டான்.

''ஏண்டா! ராஜேஷ் ஏன் இப்படி இருக்கிறான்? அவனுக்கு என்னவாயிடுத்து இப்பல்லாம்?''— சீனு கேட்டான்.

''அவனுக்கு என்னவாயிடுத்துன்னு எனக்குத் தெரியும்'' என்றான் வாசு.

''என்னவாச்சு?'' மற்ற இருவரும் பரபரப்புடன் கேட்டார்கள்.

''ராஜேஷுக்கு மிதிலா மேடத்தின் மேல் விரகதாபம் ஏற்பட்டு விட்டது! தற்சமயம் அந்த வியாதியால் கஷ்டப் படுகிறான்'' என்றான்.

எஞ்சியவர்கள் ஏககாலத்தில் ''ஒஹோ ஹோ!'' என்று பெரிதாய் சிரித்தார்கள்.

ராஜேஷ் ஓட்டிக் கொண்டிருந்த கார் அவனுக்குத் தெரியாமலேயே மிதிலா விட்டிற்கு முன்னால் வந்து நின்றது. அவன் ஒரு வினாடி கலக்கத்துடன் பார்த்தான். எதிரே மிதிலாவின் வீடு தென்பட்டது. தன்னையே அறியாமல் அங்கே வந்து விட்ட தற்குத் தனக்குள் சிரித்துக்கொண்டான் அவன். ஸ்டீரிங்கின் மேல் முழங்கையை ஊன்றிக்கொண்டு உள்ளங்கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டு ஐந்து நிமிஷங்கள் பூட்டியிருந்த அந்த வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். அங்கே மிதிலா நடந்து கொண்டிருந்தாற் போலவே இருந்தது. கேட்டிற்கருகில் வந்து— ''வா ராஜேஷ்'' என்று கூப்பிட்டாற் போலவே இருந்தது. ராஜேஷ் இறங்கிப் போனான்.

மிதிலா ராஜேஷின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு போய் உட்காரவைத்து காபி கொண்டு வந்து தந்தாள்.

''ராஜேஷ்! ஏன் இப்படி இருக்காய்?'' என்று கேட்டாள்.

அவன் பதில் சொல்ல முடியாதவனாய் தலை குனிந்து கொண்டான்.

''பைத்தியம்! உன் மனது எனக்குத் தெரியும். நான் ஊரில் இல்லைன்னு தானே இப்படி இருக்கிறாய்? எனக்குக் கூட அங்கே பொழுதே போகவில்லை. எந்த வேலையைச் செய்தாலும் உன் ஞாபகமேதான் வந்துட்டிருந்தது. எப்பொழுது இங்கே வருவேனோன்னு இருந்தது வந்து விட்டேன். இப்ப உன்னை இப்படிப் பார்க்கும்போது ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு.''

ராஜேஷ் நிமிர்ந்து பார்த்தான். சந்தோஷத்தால் அவன் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது.

மிதிலா அவனைப் பார்த்து அழகாய் சிரித்துவிட்டு "பைத்தியமே! உன் மனசு எனக்குத் தெரியும்! என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கும். அதானே?" என்றாள்.

ராஜேஷ் தலையாட்டினான்.

அடுத்த நிமிஷம் எழுந்து மிதிலா உட்கார்ந்து கொண்டிருந்த நாற்காலிக்கெதிரே போய் முழங்காலிட்டு சரித்தபடி அவள் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டான்!

மிதிலா அவன் தலை மேல் கையை வைத்துத் தடவினாள். அவன் தோளைப் பிடித்துத் தூக்கி நிறுத்திப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள். அவனை மார்போடணைத்துக் கொண்டாள்.

அவள் ஸ்பரிசம் அவனைப் புளகாங்கிதம் அடையச் செய்தது.

அதற்குள் பின்னாலிருந்து காதைப் பிளக்கும் படியாய் 'பாம் பாம்' என்று ஹாரன் சப்தம் கேட்டது.

காரில் ஸ்டீரிங்கின் மேல் ஒரு கையை வைத்து, கன்னத்தில் இன்னொரு கையை வைத்துக் கொண்டு பூட்டியிருந்த மிதிலாவின் வீட்டையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த ராஜேஷ் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பின்னால் கார் ஒன்று நின்றிருந்தது. தன் காரை ஸ்டார்ட் பண்ணி ஓதுக்குப்புறமாய் கொண்டு வந்தான்.

பின்னாலிருந்த கார் ஆசாமி ராஜேஷ் பக்கமாய் காரை நிறுத்தி— "என்னய்யா? நடுரோட்டில் காரை நிறுத்திட்டுத் தூங்கத் தொடங்கிட்டாயா? புத்தி இல்லையா?" என்று திட்டிவிட்டுப் போய் விட்டான்

ராஜேஷ் காரை நிறுத்தினான். கார் திரும்பி மிதிலா வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. அவன் காரை நிறுத்தி

விட்டு இறங்கினான். கேட் பூட்டியிருக்கவில்லை. அவன் கேட்டைத் திறந்து கொண்டு போனான். வராந்தா படியில் ஏறி ஒரு நிமிஷம் நின்றான். கைக்குட்டையைக் தீழே போட்டுக் கொண்டு உட்கார்ந்தான் எவ்வளவு நேரந்தான் ஆயிற்றோ அவனுக்கே தெரியாது. ஆனால் அவனுக்கு அல்வாறு தளியாய் உட்கார்ந்திருக்க போரடிக்கவில்லை. மிகச் சந்தோஷமாய் கூட இருந்தது.

25

மிதிலாவும் சூர்யகிரணும் கடற்கரை ஓரமாய் நடந்து கொண்டிருந்தார்கள். கோடை காலமாயிருந்ததால் தண்ணீரிலிருந்து வந்து வீசிய குளிர்ந்த காற்று இதமாய் இருந்தது. சூர்யகிரண் இந்த ஊருக்கு வந்து ஆறு நாட்களாகி விட்டன. அவள் பாங்க்கில் இருபது லட்சம் ரூபாய்களுக்குக் கடன் உதவி கேட்டிருந்தான். இந்த லோன் விஷயமாய் அவன் இதுவரை இரண்டு மூன்று தடவை சென்னைக்கு வந்தான். அடிக்கடி இங்கே வருவதற்கு அவனுக்கு நேரம் கிடைக்காது.

இம்முறை ப்ரதீப் தலையிட்டு அந்த பாங்க்கில் தெரிந்தவர்கள் மூலமாய் அந்த ஃபைல் சீக்கிரமாய் நகரும் படியாய் பார்த்துக் கொண்டான். ப்ரதீப்பிற்கு அந்த பாங்க்கில் இருந்தவர்கள் நன்றாய் பரிச்சியமானவர்களாய் இருந்ததால் சீக்கிரமாய் வேலை ஆகிவிட்டது. வேலை இன்றைக்கு முடிந்து விடும் நாளைக்கு முடிந்து விடும் என்று ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொண்டே ப்ரதீப்பின் பலவந்தத்தின் பேரில் ஆறு நாட்களாய் இருந்துவிட்டான் அவன். கடைசியில் லோன் சாங்ஷன் ஆயிற்று. அவனுக்கு முதல் தவணையாய் ஐந்து லட்சத் திற்கு செக்கைத் தந்தார்கள் பாங்க்கில்.

நேற்றைக்கு சூர்யகிரண் வீட்டிற்கு வரும்பொழுதே ஸ்வீட் பாக்கெட்டுகளை வாங்கி வந்தான். ப்ரதீப் அவனுக்கு லோன் சாங்ஷன் ஆன சுபச் செய்தியைச் சொன்னான். அன்றைக்கு எல்லோருமாய் சேர்ந்து சினிமாவுக்குப் போனார்கள். இந்த ஐந்தாறு நாட்களில் சூர்யகிரண் அந்த வீட்டில் ஒரு நபராய் மாறி விட்டான். ஜானகியோடு சேர்ந்து எல்லோரும் அன்பாய் பேசி, அவன் சங்கோஜத்தைப் போக்கடித்து விட்டார்கள். சூர்யகிரண் இந்த ஐந்தாறு நாட்களும் காலையில் ப்ரதீப்போடு பாங்க்கிற்குப் போவதும், மாலையில் திரும்பி வந்ததுமே மிதிலாவோடு சேர்ந்து ஒருநாள் மியூஸியம், ஒருநாள் பீச் என்று போய் காலங்கழித்தும் வந்தான். மிதிலா கூட பகலெல்லாம் வீட்டில் தனியாய் உட்கார்ந்து போரடித்துப் போயிருந்ததால், மாலையில் அவனோடு வெளியே சென்று கழிப்பதை விரும்பினாள்.

அவன் பேச்சிற்கிடையே அடிக்கடி விஜய்யைப் பற்றிப் பேச்செடுப்பான். முதல் முதலில் மிதிலாவுக்கு அந்தப் பேச்சு பிடிக்காதது போல பேச்சை மாற்றுவாள். ஆனால் சூர்யகிரண் சும்மாயிருக்க மாட்டான். திரும்பவும் அந்த பேச்சையே எடுப்பான். பிறகு போகப் போக மிதிலா விஜய்யைப் பற்றி தாராளமாய் பேசத் தொடங்கினாள். சூர்யகிரண் ஒரு நெருங்கிய மனிதனைப் போல இரக்கம் ததும்பக் கேட்பான். அவனுக்கு மிதிலாவின் மனதில் இவ்வளவு அன்பை சம்பாதித்துக் கொண்ட விஜய் மீது ஆர்வம் ஏற்படத் தொடங்கிற்று. விஜய்யைப் பற்றி மிதிலா சங்கோஜமில்லாமல் பேசப் பேச அவன் ஆர்வம் மேலும் பெருகிற்று.

அன்று பார்க்கில் உட்கார்ந்திருந்த பொழுது மிதிலாவின் திருமணத்தைப் பற்றிய பேச்சு வந்தது. ''நீங்கள் கல்யாணம் பண்ணிப்பது தான் நியாயம்'' என்றான் அவன்.

''எனக்குக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது என்று நியமம் எதுவும் இல்லை. ஆனால் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட ஆள் என்னோடு சுகப்படுவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை'' என்றாள் உறுதியாய்.

''ஏன்?''

''நான் விஜய்யை எவ்வளவு விரும்பினேன்னு தெரிந்தால் அந்த ஆள் என் மீது கண்டிப்பாய் சந்தேகப்படுவார். என்னோடு அவருக்கு அப்புறமாய் சுகம் இருக்காது.''

''அதுவும் பாயிண்ட்தான்! ஆனால் உங்களைக் கொஞ்சம் புரிந்து கொண்டு விட்டால் அப்படிப்பட்ட யோசனை வராது. உங்களிடமிருந்து நிறைய அன்பைப் பெற முடியும் என்று நான் நம்புகிறேன்.''

''நீங்கள் சொல்கிற அப்படிப்பட்ட ஆள் கிடைப்பது அசம்பவம்.''

''இந்த உலகத்தில் நடக்கக் கூடாதது என்று எதுவுமே இல்லை. நாம்ப முயற்சி பண்ணணுமே தவிர—'' என்றான் அவன்.

''அத்தை! வீட்டுக்குப் போகலாம்''— தொலைவில் விளையாடிக் கொண்டிருந்த கண்ணன் வந்தான். அதனால் அந்தப் பேச்சு அத்துடன் நின்று விட்டது.

அந்த விதமாய் இந்த ஐந்தாறு நாட்களில் அவ்விருவருக்குமிடையே நல்ல சிநேகம் ஏற்பட்டு விட்டது.

இன்று இரவுதான் சூர்யகிரண் ஊருக்குப் போகிறான். மாலையில் இருவரும் பீச்சிற்கு வந்தார்கள். ஒருவருக்குப் பக்கத்தில் இன்னொருத்தர் மௌனமாய் நடந்து கொண்டிருந்தார்கள். இருவருக்குமிடையே சம்பாஷணை நடக்காவிட்டாலும், அவ்வாறு சேர்ந்து நடந்ததில் ஏதோ சந்தோஷம் இருந்தது.

''சாந்திக்கு என்ன சங்கதி சொல்றீங்க?'' கேட்டான் அவன்.

''சௌக்கியமாய் இருக்கேன்னு சொல்லுங்கள்'' என்றாள் மிதிலா.

''இந்த ஐந்தாறு நாட்களும் ஐந்து நிமிஷத்தில் பறந்தோடிப் போய் விட்டன. நான் வேறு உலகத்தில் இருந்தாற் போல இருக்கிறது. உங்கள் விட்டில் எல்லோருக்கும் என் நன்றியை எப்படித் தெரிவிப்பதென்று தெரியலை,'' என்றான் அவன்.

மிதிலா சிரித்தாள். அச்சிரிப்பில் நிறைவு தெரித்தது. இருவரும் வீட்டிற்குத் திரும்பினார்கள். ஜானகி சிக்கிரமாய் சமையல் பண்ணினாள். சூர்யகிரணை சாப்பிட்டு விட்டுப் புறப்படும்படி பலவந்தப்படுத்தினாள். ப்ரதீப் வீட்டில் இல்லை. ஆபீசில் ஏதோ பார்ட்டி இருந்ததால் வீடு திரும்ப தாமதமாகும் என்று சொல்லியிருந்தான்.

மிதிலா மேஜைக்கருகில் உட்கார்ந்து தானே சூர்யகிரணுக்குப் பரிமாறினாள். அவனுக்கு இந்த அனுபவம் மிகப் புதுமையாய் இருந்தது. மிதிலா அவனுக்குத் தயிர் ஊற்றினாள். விஜய் கூட இதே போல ஊருக்குப் போகும் பொழுது அவசரம் அலசரமாய் சாப்பிடுவான். சரியாய் சாப்பிடச் சொல்லி அவள் மிரட்டுவாள். யோசித்தபடியே பரிமாறிக் கொண்டிருந்தாள் மிதிலா!

''அடடா! இதென்ன தயிர் ஊற்றுகிறீங்களே?''— மிதிலாவின் கையைப் பிடித்துத் தடுத்து விட்டான் அவன். மிதிலா இந்த உலகத்திற்குத் திரும்பினாள்.

அவள் கண்கள் எங்கோ தொலை தூரத்தில் ஏதோ அழகான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாற் போல இருந்தன.

''உங்களுக்கு விஜய் பற்றி ஞாபகம் வந்து விட்டது. அதானே?'' என்றாள் சூர்யகிரண்.

மிதிலாவின் கண்களில் ஈரம் பளபளத்தது. ஆம் என்பது போல பார்த்தாள்.

விஜய் விஷயத்தை சங்கோஜமில்லாமல் இன்னொருத்தருடன் பேசிக் கொள்வதால் எல்லாவு சந்தோஷமாய் இருக்கிறது என்று தோன்றிற்று. அவன் சாப்பிட்டு விட்டு எழுந்தான். மிதிலா கண்ணத்தில் கை வைத்துக் கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சூர்யகிரண் புறப்படுவதற்கு முன்னால் எல்லோரிடமும் சொல்லிவிட்டு மிதிலாவிடம் வந்து ''போயிட்டு வரேன்'' என்றான். மிதிலா தலையாட்டினாள்.

போக முற்பட்ட அவன் ஒரு வினாடி நின்று திரும்பிப் பார்த்து— ''மிதிலா! நீங்கள் சீக்கிரமாய் வந்துடுங்க'' என்றான்.

அவன் மிதிலாவைப் பெயரிட்டு அழைத்தது அதுதான் முதல் தடவை.

ஆனாலும் அந்தப் பெயர் மிக சகஜமாய், பல நாட்களாய் பழக்கப்பட்டிருந்தாற் போல அவன் வாயிலிருந்து வெளி வந்தது. மிதிலா அவனை கேட் வரைக்கும் வந்து வழியனுப்பினாள். அவன் ஆட்டோவில் ஏறப் போனவன் திரும்பிப் பார்த்து ''ஓ.கே. குட் நைட், பை'' என்றான். மிதிலா கையை ஆட்டினாள். ஆட்டோ போய் விட்டது. மிதிலா ஒரு நிமிஷம் அப்படியே நின்று விட்டாள்.

விஜய் கூட அசல் இது போலவே 'ஓ.கே. பை' என்பான். மிதிலாவுக்கு அது நினைவிற்கு வந்ததுமே மனம் ஏதோ போலாகி விட்டது. சூர்யகிரணை முதல் முதலாகப் பார்த்த பொழுதே அவளுக்குப் பிடித்து விட்டது. ஏன்? அவன் உட்காருவதிலும், பேசிக்கொண்டே நடுவில் இடது கையால் கிராப்பைத் தள்ளிவிட்டுக் கொண்டதிலும், காபி சோப்பையை வாங்கிக் கொண்டு இடது கையால் குடித்த நிலும் விஜய்யின் பழக்கங்கள் தெளிவாய் தென்பட்டன. மிதிலாவுக்கு அவனைப் பார்க்கப் பார்க்க விஜய் நினைவிற்கு வரத் தொடங்கினான்.

இப்பொழுது அவனோடு விஜய்யைப் பற்றி பேசுவது மிகச் சந்தோஷமாய் இருந்தது. இவ்வளவு நாட்களாய் அவள் மனதில் இருள் மழையைப் பெய்து கொண்டிருந்த தனிமைக்குள் சூர்யகிரண் ஒளிக் கற்றையாய் ஊடுருவிக் கொண்டு வரத் தொடங்கினான் போல இருந்தது. எந்தப் பெண்ணாவது, மனதில் ஒருவனை விரும்புகிறாள் என்றும், அவன் நினைவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்றும் தெரிந்தால் இன்னொரு ஆணால் அவளுக்கு நெருக்கமாய் இருக்க முடியாது. ஆனால் சூர்யகிரண் மற்ற ஆண்களை விட வித்தியாசமாய் நடந்து கொண்டு வருகிறான். விஜய் விஷயத்தை மிதிலாவின் ஒரு பாகமாய் அவன் ஏற்றுக் கொண்டு விட்டான்.

26

பிற்பகல் வேளை.

மிதிலா கட்டிலில் சாய்ந்தாற் போல உட்கார்ந்து கொண்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். பக்கத்திலிருந்த டிரான்ஸிஸ்டரிலிருந்து மெல்லிய குரலில் பாட்டு வெளி வந்து கொண்டிருந்தது.

"அத்தை, இந்தா, உனக்கு லெட்டர் வந்திருக்கு"– கண்ணன் ஓடி வந்து தந்தான்.

மிதிலா கவரைப் பார்த்தாள். அட்ரஸில் இருந்த கையெழுத்து பரிச்சயமில்லாதது. ஃப்ரம் அட்ரஸ் இல்லை.

மிதிலா கவரைக் கிழித்தாள். ரோஸ் நிறக் காகிதங்கள் இருந்தன. பின்னாலிருந்த கையெழுத்தைப் பார்த்தாள். 'ராஜேஷ்' என்றிருந்தது.

மிதிலா அக்கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்:

"மேடம்!

நான் ராஜேஷ். நீங்கள் இந்த லீவில் என்னை மறந்து போய் விடவில்லையே? மறந்து போய் விடமாட்டீர்கள் என்ற தைரியத்தில்தான் இக்கடிதத்தை எழுதுகிறேன். உங்கள் விலாசத்தை நான் தெரிந்து கொள்வதற்கு இவ்வளவு நாட்களாகி விட்டது. எனக்கு உங்களைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. இந்த விலாசம் தெரிந்ததுமே இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்து வந்து விடவேண்டும் போலிருக்கிறது. எனக்கு ஒவ்வொரு திமிஷமும் உங்களைப் பற்றிய நினைவுதான். நீங்கள் போய் விட்ட பிறகு ஏனோ இந்த ஊரே எனக்குப் பிடிக்க வில்லை நீங்கள் சொன்னது போல நன்றாகப் படிக்க வேண்டும் என்பது என் தவிப்பு. அதனால்தான் வாசு முதலியவர்களை விட்டுத் தனியே வந்து விட்டேன். அப்பா லிடமே இருக்கிறேன். ஆனால் எனக்கு போரடிக்கிறது. காலேஜ் இல்லாததால் பொழுதே போகவில்லை. அப்படியும் திரும்பவும் வாசு முதலியவர்களிடம் போய் பழைய படியே சுழிப்போம் என்று போனேன். ஆனால் சாத்தியப் படவில்லை. அதனால் திரும்பி வந்து விட்டேன். என் மனது பைத்தியக்காரனைப் போல ஏதேதோ யோசிக் கிறது. நான் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? தினமும் சாயந்திர வேளையில் உங்கள் வீட்டிற்கு முன்னால் காரை நிறுத்தி விட்டு, அதில் உட்கார்ந்து உங்கள் வீட்டு பக்கமாகவே பார்த்துக் கொண்டிருப்பேன். உங்களோடு கழித்த சம்பவங்களும், உங்களோடு பேசிய பேச்சுக்களும் ஞாபகத்திற்கு வந்து கொண்டிருக்கும். அவ்வாறு எவ்வளவு நேரந்தான் உட்கார்ந்திருப்பேனோ எனக்கே தெரியாது. என்ன விநோதம் தெரியுமா? எனக்கு அப்படி உட்கார்ந்திருப்பதும், உங்கள் வீட்டையே பார்த்துக் கொண்டிருப்பதும் போரடிக்காது. சில சமயம் காரைவிட்டு இறங்கிப் போய் அந்த வீட்டின் வராந்தாப்

படிகளின் மீது உட்கார்ந்து கொள்வேன். அங்கே செம்பருத்திச் செடியில் பூத்திருக்கும் பூக்களும், கொய்யா மரக்கிளைகளில் தாவிக் கொண்டிருக்கும் குருவிகளும் கூட நான்தோறும் என்னைப் போலவே உங்கள் வரவிற்காகக் காத்திருக்கின்றனவோ என்று தோன்றும். அவ்விடங்களில் எல்லாம் காய்ந்த சருகுகள் உதிர்ந்து விழுந்திருக்கும். அவைகளின் மீது நடப்பேன் நான். அவற்றில் சப்தம் எனக்கு மிக ஆனந்தத்தைக் கொடுக்கும். நாங்கள் கூட உங்கள் மேடத்திற்காக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும் அவை என்னிடம்.

ஒருமுறை உங்கள் வீட்டுக்காரி என்னைப் பார்த்து— "எம்ப்பா இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"சும்மாத்தான்" என்றேன். அவள் என்னைச் சந்தேகத்தோடு ஏறயிறங்கப் பார்த்தாள்.

மறுநாள் நான் போன பொழுது கேட் பூட்டப்பட்டிருந்தது. வீட்டுக் கதவில் நீங்கள் பூட்டிய பூட்டோடு கூட இன்னொரு பூட்டும் பூட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது. என்னைத் திருடன் என்று எண்ணி விட்டாள் போலிருக்கிறது. அதற்குப் பிறகு காரில் உட்கார்ந்து கொண்டே அந்த வீட்டைப் பார்க்கத் தொடங்கினேன்.

மேடம் நீங்கள் எப்பொழுது இந்த ஊருக்குத் திரும்பி வரப் போகிறீர்கள்? எப்பொழுது லீவு முடிய போகிறதோ என்று நான் நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன். மேடம் உங்கள் மீது எனக்கு அளவுக்கடங்காத விருப்பம்! இப்படி எழுதியதற்குத் தவறாய் எண்ணிக் கொண்டு விடாதீர்கள். உங்களிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்றும், உங்களுக்கு அண்மையில் இருக்க வேண்டும் என்றும் என் மனது தவிதவித்துக் கொண்டிருக்கிறது. அதற்குள் பயமும் வந்து விடுகிறது. உங்களை

நான் விரும்புவது தப்பில்லையே மேடம்! ஒருக்கால் யாராவது என்னிடம் அது தப்புதான் என்று சொன்னால் அந்த தப்பு என்னுடையது இல்லை என்பேன். மிதிலா மேடத்துடையதுதான் என்பேன். ஏன் தெரியுமா? 'அவங்கதான் அவ்வளவு கலரக்கூடிய விதத்தில், நல்லவர் எனாய் ஏன் இருக்கணும்?' என்று கேட்பேன். அதனால் உங்கள் மீது எனக்கு விருப்பம் ஏற்பட்டால் அது என் தப்பு இல்லை. உங்களுடையது! மேடம் நான் அத்துமீறி ஏதாவது எழுதியிருந்தால் மன்னித்து விடுங்கள். இந்தக் கடிதம் கிடைத்ததும் எனக்கு பதில் போடுவீர்கள் அல்லவா? ப்ளீஸ் பதில் போடுங்கள். எழுதாவிட்டால் என் கடிதம் உங்களுக்கு கோபத்தை வரவழைத்து விட்டது போலிருக்கிறது என்று நினைத்து பயந்து கொண்டிருப்பேன. சரியாய் தூங்க முடியாது. சாப்பிட முடியாது. இளைத்து நோயில் விழுந்து விடுவேன். எந்த டாக்டராலும் எனக்கு என்ன வியாதி என்று கண்டு பிடித்துவிட முடியாது. என் நிலைமையைப் பார்த்து அப்பாவுக்கு பி.பி. வந்து விடும். அவர் பிஸினஸ் எல்லாம் நஷ்டமாகி விடும். நான் செத்தாலும் செத்துப் போகலாம். இந்த ஆபத்தெல்லாம் எனக்கு வர விடமாட்டீர்கள் அல்லவா? நீங்கள் கண்டிப்பாய் கடிதம் எழுதுவீர்கள் எனக்கு. என் கடிதம் உங்களுக்கு வெறுப்பைத் தந்தால் நீங்கள் நல்ல மூடில் இல்லை என்று அர்த்தம். திரும்பவும் ஒருமுறை படியுங்கள். அப்படியாவது இன்னொரு தடவை படிக்க மாட்டீர்களா என்ற ஆசை எனக்கு—

—இப்படிக்கு,
உங்களை எப்பொழுது பார்ப்பேனோ என்று
தவித்துக் கொண்டிருக்கும்,
உங்கள் ராஜேஷ்"

கடிதத்தைப் படிக்கப் படிக்க மிதிலாவின் உதடுகளில் முறுவல் நெளிந்தது! ஒருமுறை புருவங்கள் நெளிந்தன!

அதற்குள் அலை விடுபட்டு திரும்பவும் மூடி மலர்ந்தது.

மிதிலா கடிதத்தை மடித்து உறையில் வைத்தாள். ராஜேஷ் நல்ல பையன்தான்! துஷ்ட சிநேகிதர்கள் மூலமாய் அவனிடமுள்ள அறிவும் பண்பும் நாசமாகிக் கொண்டிருக்கின்றன!

மிதிலா எழுந்து போய் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து ராஜேஷுக்கு பதில் எழுதத் தொடங்கினாள்:

"ராஜேஷ்!

உன் கடிதம் கிடைத்தது. நீ என்னைப் பற்றி அவ்வளவு தூரம் யோசிப்பதற்கு மிக சந்தோஷமாய் இருக்கிறது. எந்த மனிதருக்குமே, தம்மைப் பற்றி யாராவது யோசிக்கிறார்கள் என்றால் மிகச் சந்தோஷமாய்தானே இருக்கும்? காலேஜ் லிவு முடியப் போகிறது அல்லவா? நான் சீக்கிரத்திலேயே பார்வதிபுரத்திற்கு வந்து விடுவேன். வரப் போகும் வருடம் இரண்டாவது ஆண்டு படிப்பு. நீ முதலிலிருந்தே நன்றாய் படிக்க வேண்டியிருக்கும். நீயும் உன் சிநேகிதர்களும் நலந்தானே?

உன் தந்தைக்கு என் வணக்கங்கள்.

இப்படிக்கு
ஆசிகளுடன்
மேடம்"

கடிதத்தை எழுதி முடித்து விட்டு, கவரின் மீது விலாசத்தை எழுதி, அதற்குள் வைத்து ஒட்டினாள்.

பிறகு, ராஜேஷ் எழுதிய கடிதத்தை எடுத்து டிராயரை இழுத்து அதற்குள் வைத்தாள். அங்கே அதற்கு முன்பே சாந்தி, ஜெயந்தி, ரங்கநாயகி எழுதிய கடிதங்கள் இருந்தன. ராஜேஷின் கடிதமும் அவைகளோடு சேர்ந்து கொண்டது.

மிதிலாவுக்குத் தெரியும்! ராஜேஷ் தான் எழுதிய கடிதத்தைப் பார்த்து உற்சாகம் இழந்து விடுவான் என்று! முதலில் உற்சாகமிழந்தாலும் அதற்குப் பிறகு கடிதமாவது எழுதியதற்கு சந்தோஷமடைவான். டெக்சரர்களுக்கும் ஸ்டூடென்ட்ஸுகளுக்குமிடையே இந்த இஷ்டங்களும், விருப்புக்களும், பக்தி உணர்ச்சிகளும் சகஜமே! இவை ஒரு நாளுக்கான பந்தம்! அதை ஸ்டூடென்ட்ஸைக் காட்டிலும் டெக்சரர்களே அதிகமாய் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தெரிந்தும் தெரியாததுமான வயது உடையவர்கள். டெக்சரர்கள் அனுபவம் உடையவர்கள். டெக்சரர்களாயிருக்கட்டும், டாக்டராயிருக்கட்டும், நடிகனாயிருக்கட்டும், எந்தத் தொழிலில் இருப்பவர்களாயிருந்தாலும் சரி, அவரவர்கள் தம் தொழிலில் நிலைத்து இருக்க வேண்டுமானால் நபர்களைவிட தொழிலுக்கே முக்கியத்துவம் தரவேண்டும்.

மிதிலாவுக்குத் தான் படித்த காலத்தில் நடந்த சம்பவம் நினைவிற்கு வந்தது. ஷீலா என்ற டெக்சரர் இருந்தாள். அவள் கணவனுக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆகி விட்டதால் அவள் வேலையை விட்டுவிட்டுப் போய் விட்டாள்.

அவள் போகும் பொழுதுதான் எவ்வளவு அழுதாள்! அந்த வருத்தம் இன்னும் நினைவில் இருந்தது மிதிலாவுக்கு. அவள் ஊருக்குப் போன பிறகு கூட கடிதங்கள் எழுதிக் கொண்டேயிருந்தாள்! அவளைப் பார்க்க வேண்டும் என்று மனம் தவிதவித்துக் கொண்டிருக்கும்.

மிதிலாவுக்கு ராஜேஷ் எழுதிய இக்கடிதத்தைப் படித்த பொழுது, தான் மாணவியாக இருந்த பொழுது நடந்த அந்தச் சம்பவந்தான் நினைவிற்கு வந்தது! ராஜேஷின் வருத்தம் மிதிலாவுக்கு நன்றாகவே புரிந்தது! சிறு வயதில் அப்பாவித்தனத்தோடு கூடிய ஆவேசம் அது!

விரும்பியது கிடைக்க வேண்டும் என்று கவிக்கும் வயது அது.

சில ஆண்டுகள் கழிந்த பிறகு, ராஜேஷ் கூட அவளைப் போலவே இந்த ஞாபகத்தை நினைவுப்படுத்திக் கொண்டு, தனக்குள் சிரித்துக் கொள்வான். அதுதான் உண்மை என்றெண்ணிக் கொண்டாள். மிதிலா சுவரில் மாட்டியிருந்த கேலெண்டரைப் பார்த்தாள். காலேஜ் திறக்கப் போவது அடுத்த திங்கட்கிழமையன்று!

27

மிதிலா ரயிலிலிருந்து பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்கினாள். எதிரே சூர்யகிரண் தென்பட்டான். மிதிலா அவனைப் பார்த்து ஆச்சரியமடைந்து விட்டாள்.

"அட! நான் வருவதாய் உங்களுக்கு எப்படி தெரியும்?" என்றாள்.

"நான் தேற்று மாலை ரயிலில் வருவீங்களோன்னு உங்களுக்காக இங்கே வந்தேன். நீங்க வரலை. நாளைக்கு காலேஜ் திறக்கிறாங்க. இந்த ஊருக்கு இதுதான் கடைசி ரயில். நீங்க இதில் கண்டிப்பாய் வருவீங்கன்னு எனக்குத் தெரியும்" என்றான் மிதிலாவின் கையிலிருந்த சூட்கேசை வாங்கிக் கொண்டே.

மிதிலாவுக்கு ஏனோ தெரியவில்லை, சூர்யகிரணைப் பார்த்ததும் சந்தோஷம் ஏற்பட்டது. அவன் தனக்காக— நான் கடிதம் போடாத போதிலும் ஸ்டேஷனுக்கு வந்தது மிகப் பிடித்திருந்தது.

இருவரும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்தார்கள். அங்கே இருந்த ஜட்கா வண்டிக்காரர்கள் அத்தனைப்

பேரும் சூர்யகிரணுக்குத் தெரிந்தவர்கள்தான். "என் வண்டியில் ஏறிக்குங்க", "என் வண்டியில் ஏறுங்க" என்று தூற்றிக் கொண்டார்கள். அவர்களுள் கொஞ்சம் வயது முதிர்ந்தவனாய் இருந்தவன் மற்றவர்களையெல்லாம் தள்ளிவிட்டு, "போங்கடா! நான் இந்த தம்பியை என் வண்டியில்தான் எப்ப ரயில்லேருந்து இறங்கினாலும் ஏத்திக்கிட்டுப் போவேன்," என்று ஒடுவிடுத்து விட்டு, சாமர்த்தியமாய் அவன் கையிலிருந்த பெட்டியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிப் போய் தன் வண்டியில் வைத்துக் கொண்டான்.

மிதிலா சூர்யகிரண் இருவரும் ஏறிக் கொண்டார்கள். மிதிலா வண்டிக்குள்ளே உட்கார்ந்து கொண்டாள். சூர்யகிரண் அப்பால் உட்கார்ந்து கொண்டான். ஆனால் வண்டியின் குலுங்கலுக்குத் தூக்கித் தூக்கிப் போட்டதால் இருவரும் ஒருவர் மீது இன்னொருவர் மோதிக் கொள்ளும் படி நேர்ந்தது.

"சாந்தி எப்படி இருக்கிறாள்?"— மிதிலா கேட்டாள்.

"ரெண்டு நாளாய் ஜுரம். இன்றைக்குதான் கொஞ்சம் குறைந்தது. இல்லாவிட்டால் அவளும் ஸ்டேஷனுக்கு வந்திருப்பாள்" என்றான் அவன்.

"ஐயோ! அப்படியா?"

இருவருக்குமிடையே திரும்பவும் கொஞ்ச நேரம் நிசப்தம் ஏற்பட்டது.

மிதிலா அச்சூழ்நிலைகளைப் பார்த்துக் கொண்டே— "இந்த ஊருக்கு வந்ததுமே எனக்கென்னவோ ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு. லீவில் நாட்கள் ரொம்ப பாரமாய் கழிந்தன. காலையில் எழுந்ததுமே பண்ண வேண்டிய காரியங்களைதான் எதிர்பார்த்துட்டிருப்பேன். இல்லாவிட்டால் அன்றெல்லாம் வீணாகி விட்டாற் போலவே தோன்றும் எனக்கு" என்றாள்.

''எனக்கும் அப்படித்தான்'' என்றான் அவன்.

ஜட்கா வண்டி உள்ளுக்குள் நுழைந்தது. வண்டி மிதிலா வீட்டுப் பக்கமாய் போகாமல் சூர்யகிரண் வீட்டுப் பக்கமாய் போயிற்று.

''இதென்ன? இப்படி எதுக்கு?'' என்றாள் மிதிலா.

''சாந்தி உங்களைக் கூட்டிட்டு வரச் சொன்னாள். மொதல்ல எங்க வீட்டுக்கு வந்து, குளிச்சுட்டு, சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொண்டு, மாலையில் உங்கள் வீட்டிற்குப் போய்க்கலாம். அதற்குள் நீங்கள் உங்கள் வீட்டு சாவியைத் தந்திங்கன்னால் வேலைக்காரியைக் கூப்பிட்டு அந்த வீட்டை ஒட்டடை அடித்துப் பெருக்கி சுத்தம் பண்ணச் சொல்லிடறேன். சாயந்திரம் நீங்கள் அங்கே போய்க்கலாம்.''

''ஆனால்...'' மிதிலா ஏதோ சொல்ல வந்தாள்.

''வேறொன்றும் சொல்ல வேண்டாம் என்னிடம்'' என்றான் அவன் தடுத்துவிட்டு. அவன் குரலில் உரிமையோடு கூடிய அதிகாரம் தொனித்தது.

மிதிலாவால் அதற்குமேல் பேச முடியவில்லை.

வண்டி வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

சாந்தி வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள்.

''மேடம்! சௌக்கியமா?'' வண்டிக்கருகில் வந்து மிதிலாவின் கையைப் பிடித்து இறக்கினாள்.

''சௌக்கியந்தான். நீ என்ன இப்படி இளைத்து விட்டாய்!'' என்றாள் மிதிலா.

''ரெண்டு நாளாய் ஜுரம். பார்த்திங்களா? நீங்க வரீங்கன்னுச் சொன்னதுமே தணிந்து போயிடுத்து'' என்றாள் கலகலவென்று சிரித்துக் கொண்டே— மிதிலாவின் கையைப் பிடித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றபடி.

''நீங்கள் பேசிட்டிருங்க. நான் இதோ வந்து விடுகிறேன். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு''— என்று சூர்யகிரண் வெளியே போய் விட்டான்.

மிதிலா குளித்தாள். சாந்தி, சூர்யகிரண் சென்னையிலிருந்து வந்த பிறகு மிதிலா வீட்டார் தன்னை எவ்வளவு நன்றாய் பார்த்துக் கொண்டார்கள் என்றும், ஓட்டலுக்குக் கூட போக விடாமல், அவர்கள் வீட்டிலேயே எப்படி தங்கும்படி செய்திருந்தார்கள் என்றும் தெரிவித்தாளாம். சாந்தி சொன்ன விஷயங்களையெல்லாம் மிதிலா முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். ஒரு மணி நேரங்கழித்து சூர்யகிரண் போன் பண்ணினான். தான் வீட்டிற்கு வரமுடியாது என்றும், அவர்கள் இருவரையும் சாப்பிட்டு விடும்படியும் சொன்னான்.

மிதிலாவும் சாந்தியும் சாப்பிட்டார்கள்.

சாந்தி மிதிலாவிடமிருந்து சாவியை வாங்கிக்கொண்டு வேலைக்காரியைக் கொண்டு அவள் வீட்டை துப்புறவாக்கும்படிச் செய்தாள்.

சாப்பிட்ட பிறகு மிதிலா படுக்கையில் சாய்ந்தாள்.

அவளுக்குத் தூக்கம் வந்து விட்டது. அப்போது எவ்வளவு நேரம் தூங்கினாளோ தெரியாது.

விழிப்பு வந்தபோது மாலையாகி விட்டது. திடுக்கிட்டு எழுந்திருந்தாள்.

சாந்தி பக்கத்திலேயே நாற்காலியில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

''சாந்தி, இதென்ன? என்னை ஏன் எழுப்பவில்லை? இவ்வளவு நேரமாகி விட்டதே!'' என்றாள் மிதிலா.

''நீங்கள் நல்ல தூக்கத்தில் இருந்ததைப் பார்த்து விட்டு எழுப்பப் பிடிக்கலை. இப்பத்தான் அண்ணா வந்து விட்டுப் போனான். உங்களை எழுப்பலாம்னு வந்தேன்.

நீங்கள் நல்ல தூக்கத்தில் இருந்தீங்க. ஏதோ காகிதங்களைத் தேடுவதற்காக இந்த அறைக்கு வந்து அலமாரியைத் திறந்த அண்ணா உங்களைப் பார்த்து விட்டு— ''எழுப்பாதே'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

''அடடா'' என்றாள் நொந்து கொண்டாற் போல.

இதென்ன, இவ்வளவு தூக்கம் வந்து விட்டதே என்றெண்ணிக் கொண்டாள்.

சாந்தி காபி கொண்டு வந்தாள். மிதிலா காபியைக் குடித்ததும் ''இனி நான் போயிட்டு வரேன்'' என்றாள்.

சாந்தியும் அவளோடு புறப்பட்டாள்.

''நீ வேண்டாம் சாந்தி, பலவீனமாய் இருக்கிறாய்''

''பரவாயில்லை மேடம். அண்ணா உங்களை விட்டுக் கொண்டு போய் விட்டுவிட்டு வரச் சொன்னான்'' என்றாள்.

இருவரும் ஜட்கா வண்டியில் ஏறி மிதிலா வீட்டிற்கு வந்தார்கள்.

அதற்குள் இருட்டி விட்டது. விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன.

மிதிலாவும் சாந்தியும் வருவதற்குள் வேலைக்காரப் பையன் வீட்டையெல்லாம் ஒழுங்குபடுத்தி விட்டு. இவர்கள் வருவதற்காகக் காத்திருந்தான்.

மிதிலா உள்ளே வந்தாள்.

வேலைக்காரப் பையன்— ''தண்ணீர் பிடிச்சு வைத்திருக்கேம்மா. பால் வாங்கி காச்சி வெச்சிருக்கேன். காய்கறி, சாமான்கள் வாங்கிட்டு வந்திருக்கேன்'' என்றான்.

''இதையெல்லாம் பண்ணச் சொல்லி உன்னிடம் யார் சொன்னாங்க?'' வியப்படைந்து போய் கேட்டாள்.

''ஐயா சொன்னார்'' என்றான்.

மிதிலாவால் பதில் பேச முடியவில்லை.

கட்டில் மீது இஸ்திரி போட்ட துப்பட்டியைப் பரப்பி பார்க்க நீட்டாய் வைக்கப்பட்டிருந்தது. வீடு, வாசல் எல்லாம் சுத்தமாய் பெருக்கி வைக்கப்பட்டிருந்தன. சமையலறையில் இருந்த பாத்திரங்கள் கழுவி குப்புற வைக்கப்பட்டிருந்தன.

மிதிலாவிடம் சாந்தி— ''மேடம்! இன்றைக்கு மட்டும் நான் உங்களுக்குச் சாப்பாட்டை கேரியரில் அனுப்பி விடுகிறேன். நீங்கள் சமைக்க வேண்டாம்,'' என்றாள்.

''போதும், போதும், இவ்வளவு தூரம் பண்ணிய சேவைகளே போதும்'' என்றாள் மிதிலா.

அதற்குள் ஜெயந்தியும் பாட்டியும் வந்தார்கள். எல்லோரும் குசலப் பிரச்னைகளில் ஆழ்ந்து போனார்கள். கொஞ்ச நேரங்கழித்து சாந்தி— ''போயிட்டு வரேன் மேடம்'' என்று எழுந்தாள்.

''ஓ.கே. குட் நைட். நாளைக்குக் காலேஜில் சந்தித்துக் கொள்வோம்'' என்றாள் மிதிலா.

சாந்தி போய் விட்டாள்.

ஜெயந்தியும் பாட்டியும் கூட போய் விட்டார்கள்.

மிதிலா கதவைச் சாத்தி விட்டு உள்ளே வந்தாள்.

வீடெல்லாம் மிகத் துப்புரவாய் அந்தந்த சாமான்கள் அதனதன் இடத்தில் இருந்தன. 'தாங்க்ஸ்டு சூர்யகிரண்' என்றெண்ணிக் கொண்டாள்! சுத்தமான அந்தச் சூழ்நிலை மிக மகிழ்ச்சியைத் தந்தது. அத்நேரத்தில் காலிங்பெல் அடித்தது.

மிதிலா எழுந்தாள்.

சூர்யகிரண் வந்திருப்பான். நான் வரும்போது அவன் வீட்டில் இல்லையே!

மிதிலா அறையிலிருந்து வந்து கொண்டிருந்த போதே காலிங்பெல் மற்றொரு முறை 'கிர்'ரென்று ஒலித்தது. அவ்வாறு ஒலித்ததைக் கொண்டு, வந்த ஆள் கதவைத் தீக்கிரமாய் திறக்கச் சொல்லி மிதிலாவை அவசரப்படுத்தி னாற் போலிருந்தது. இது சூர்யகிரணின் சுபாவத்திற்கு மாறுபட்டிருந்தது.

மிதிலா வந்து கதவைத் திறந்தாள்.

எதிரே நின்று கொண்டிருந்தது சூர்யகிரண் அல்ல ராஜேஷ்.

"மேடம்!" அவன் கண்களில் வியப்பும் ஆனந்தமும் பொங்கிக் கொண்டிருந்தன.

"நீங்க எப்ப வந்தீங்க? நான் மத்யானம் கூட வந்து பார்த்தேனே! கதவு பூட்டியிருந்தது. தினமும் சாயந்திரம் ஆனதுமே வந்து பார்ப்பேன். இன்றைக்கு அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லை. அதனால் அப்பாவுக்கு மருந்து வாங்கிட்டுப் போக வந்தேன். வந்து கொண்டிருக்கும் போது உங்கள் வீட்டு ஜன்னல்கள் திறந்திருந்ததையும், உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்ததையும் பார்த்ததும் என் இதயத்தில் சுர்ரென்றது. மை காட்! லைட்டுகள் எரிகின்றன! மேடம் வந்துட்டாங்க என்றெண்ணினேன். காரை நிறுத்தி விட்டு ஓடோடி வந்துட்டேன்." உணர்ச்சி வசத்தாலும், ஆவேசத்தாலும் ராஜேஷின் வார்த்தைகள் தடுமாறின. மூச்சுவாங்கிக் கொண்டிருந்தது.

ராஜேஷ் சட்டென்று மிதிலாவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டான். அவற்றைக் குனிந்து கண்களில் ஒற்றிக் கொண்டே— "மேடம்! உங்களை இப்படிப் பார்க்கும்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமா? இந்த ரெண்டு மாதமும் நான் எப்படி கழித்தேன்னு கடவுளுக்குதான் தெரியும். சில சமயம் இறக்கைக் கட்டிக் கொண்டு உங்களிடம் ஓடி வந்து

விடலாம் போலிருக்கும். வேறு சமயம் இந்த துன்பம் தாங்க முடியாமல் போய் செத்துப் போய் விடலாம் போலிருக்கும். அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான காரியங்களையெல்லாம் பண்ணிவிடாமல் என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு நான் எவ்வளவு பாடு பட்டேன் தெரியுமா? மேடம் ஐ மிஸ்ட் யூ! ஐ மிஸ்ட் யூ லெரிமச்" கடைசி வார்த்தைகளை உச்சரிக்கும் பொழுது அவன் குரல் கம்மிற்று. நடுங்கிற்று.

மிதிலா சிலையாய் நின்று விட்டாள்.

ராஜேஷ் இவ்வளவு ஆவேசப்படுவான் என்றோ, சங்கோஜத்தை விட்டுவிட்டுத் தன்னிடம் இவ்வாறு மனதிலிருப்பதைக் கக்கி விடுவான் என்றோ மிதிலா எண்ணியும் பார்க்கவில்லை. அந்தச் சமயத்தில் உணர்ச்சித் துடிப்பில் இருந்த அந்த இளைஞனை எப்படி சமாதானப் படுத்துவது என்று புரியவில்லை.

மெதுவாய் அவன் கைகளிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்டே— "ராஜேஷ், உள்ளே வா! உட்காரு" என்றாள். தானும் திரும்பி உள்ளே வந்தாள். ராஜேஷ் கனவில் நடப்பவனைப் போல உள்ளே வந்தான்.

"உட்கார்" நாற்காலியைக் காட்டினாள்.

அவள் உத்தரவிற்குக் கட்டுப்பட்ட வளர்ப்பு நாயைப் போல அவன் உட்கார்ந்து கொண்டான்.

"அப்பா எப்படி இருக்கிறார்?" கேட்டாள்.

"நன்றாய்தான் இருக்கிறார். நேற்றுதான் கொஞ்சம் உடம்பு சரியாயில்லை."

"நீ அவரை சிரமப்படுத்துகிறாயா?"

"இல்லை மேடம். இல்லவே இல்லை. வேணும்னால் நீங்களே அவரைக் கேட்டுக்குங்க. அவர் என் நடத்தையில்

ஏதாவது குறையை உங்களுக்குச் சுட்டிக் காட்டினாலும் என் கழுத்தை அறுத்துக்கொன்கிறேன் உங்கள் முன்னால்''

''அடடா! இதென்ன பேச்சு? நீ சொன்னால் நான் நம்பமாட்டேனா? உம், சொல்லு, இந்த ரெண்டு மாதமும் என்ன பண்ணினாய்?''— சாதாரணை பேச்சில் இழுப்பதற்காகக் கேட்டாள்.

ராஜேஷ் இன்னும் கனவில் ஆழ்ந்தவனைப் போல அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்களைப் பற்றி யோசித்துக் கொண்டும், உங்களை எதிர்பார்த்துக் கொண்டும், உங்கள் இந்த வீட்டைச் சுற்றிலும் பிரதட்சணம் பண்ணிக் கொண்டும் காலம் கழித்தேன்.''

மிதிலா சங்கோஜமில்லாமல் பார்த்தாள்.

''உன் ஃபிரெண்ட்ஸ் எப்படி இருக்காங்க?'' பேச்சை மாற்ற எண்ணி கேட்டாள்.

''அவங்க எப்படி இருக்காங்கன்னே எனக்குத் தெரியாது. தெரிஞ்சுக்கணுங்கிற ஆர்வமும் எனக்கு இல்லை.''

''இதென்னது?''

''அது அப்படித்தான்! இதற்கு முன்னால் அவங்க சிநேகம் எனக்குச் சந்தோஷமாய், ரொம்ப உயர்வாய் தோன்றிற்று. அதுதான் உலகம்னு நினைச்சுட்டிருந்தேன். உங்கள் பரிச்சியம் ஏற்பட்ட பிறகு அவங்க பேச்சும் நடத்தையும் எனக்குப் பிடிக்காமல் போய் விட்டது.''

''ராஜேஷ்! காபி குடிக்கிறாயா?'' எழுந்திருக்கப் போனாள்.

''ஊஹூம்! நீங்கள் உட்காருங்க. உங்களோடு பேசிட்டிருக்கத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு.'' தடுத்தான் அவன். அதில் உத்தரவு போன்ற உணர்ச்சி இருந்தது.

மிதிலா செய்வதறியாமல் விழித்தான். அது உள்ளூரதானே தவிர மேலுக்குக் காட்டிக் கொள்ளவில்லை. அவனிடம் சதா தென்பட்டுக் கொண்டிருக்கும் கம்பீரமும் மிடுக்கும் சற்றும் சிதறிப் போய் விடவில்லை.

''நீங்க எப்ப வந்தீங்க?''

''காலை ரயிலில்''

காலையிலா? காலையிலேயே வந்துட்டீங்களா?''— அவன் திடுக்கிட்டபடி பார்த்தான்.

''ஆமாம்''

''காலையில் நான் இந்த பக்கமாய் வந்தபோது உங்கள் வீடு பூட்டியிருந்ததே?''

''நான் நேராய் இங்கே வரவில்லை. ஸ்டேஷனுக்கு சூர்யகிரண் வந்தார். அவர் நேராய் என்னை அவர் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனார்.''

''சூர்யகிரணா? அவரை உங்களுக்கு எப்படி தெரியும்?'' விறைப்பானான் அவன்.

''சாந்தியின் அண்ணன் அல்லவா?''

''ஓஹோ?'' ராஜேஷ் சாதாரணமாய் ஆனான்.

''இன்று முழுவதும் சாந்தி அவங்க வீட்டிலேயே இருக்கச் சொல்லி ரகளைப் பண்ணினாள். அங்கேயே இருந்தேன். இப்பத்தான் சாந்தி என்னை இங்கே கொண்டு விட்டுவிட்டுப் போனாள்.''

''அப்படியா? நீங்கள் வந்தது எனக்குத் தெரியவே தெரியாது மேடம்'' வருத்தத்தோடு சொன்னான்.

"இப்ப என்னவாயிடுத்து?" என்றான் சிரித்துக் கொண்டே.

"என்னவாச்சா? உங்களுக்காக ஒவ்வொரு நிமிஷத்தையும் கணக்கிட்டுக்கிட்டே கழிச்சுட்டிருந்தேன் நான். நீங்க இந்த ஊருக்கு எப்ப வருவீங்களோன்னு இருந்தேன். அப்படி இருக்கும்போது நீங்கள் இந்த ஊருக்கு வந்து இல்லலவு நேரமாகியும் எனக்குத் தெரியாமல் போய்டுத்துன்னால் அது எனக்கு என்னவோ போல இருக்கு."

மிதிலா முறுவலுடன் பார்த்தாள்.

"ராஜேஷ்! நீ ரொம்பவும் விபரீதமாய் யோசனை பண்ணுகிறாய். ஓ.கே. குட் நைட்! நாளைக்குக் காலேஜ் இருக்கோனோ? காலேஜுக்கு நீ வருவாயோனோ?" என்றாள்.

ராஜேஷ் வேண்டாவெறுப்பாய், வேறு வழியில்லாமல் எழுந்திருந்தான். அவனுக்கு அங்கிருந்து அப்பொழுதே போய் விடக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனால் மிதிலா குட் நைட் சொல்லி விட்டதால் எழுந்து தர வேண்டியிருந்தது.

அதற்குள் வாசலில் காலடி சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

சூர்யகிரண் உள்ளே வந்தான்.

"இவனைத் தெரியுமா? ராஜேஷ்" என்று பரிச்சயம் செய்தாள்.

"தெரியும்! கணபதியின் மகன்!" என்றான் சூர்யகிரண்.

"ராஜேஷ், இவரைத் தெரியுமா?" கேட்டாள் மிதிலா.

"பார்த்திருக்கேன். அப்பாவிடம் அடிக்கடி வருவார். பெயர் தெரியாது" என்றான் ராஜேஷ்.

"சூர்யகிரண்! சாந்தியின் அண்ணன்"— சொன்னாள் மிதிலா.

"க்ளாட் டு மீட் யூ"— கையை நீட்டிக் குலுக்கினான் ராஜேஷ்.

"ஓ.கே. ராஜேஷ் குட்நைட்" என்றாள் மிதிலா.

"குட்நைட்"— அங்கிருந்து வெளியேறினான் ராஜேஷ்.

சூர்யகிரண் உட்காரவில்லை. "சாந்தி போய் விட்டாளா?" என்று கேட்டான்.

"இப்பத்தான் போனாள். சாரி, நீங்கள் மத்தியானம் வீட்டிற்கு வந்திருக்கலாம். நான் நன்றாய் தூங்கிவிட்டேன்" என்றாள் மிதிலா.

"இங்கே எல்லாம் சரியாய் இருக்கா? வேலைக்காரன் எல்லாவற்றையும் வாங்கித் தந்தானா?"— சூர்யகிரண் கேட்டான்.

"ஆங்! தாங்க்யூ"

"நீங்கள் தாங்க்ஸ் சொல்றதை விட்டுவிடணும். அது மட்டுமில்லை, உங்களுக்காக இனி நான் என்ன பண்ணினாலும் வேண்டாம்னு சொல்லக்கூடாது."

திடீரென்று அவன் உதடுகளில் மனோகரமான புன்னகையொன்று மின்னிற்று. எப்பொழுது நீங்கள் நான் மெட்றாசுக்கு வந்தபோது என்னை ஓட்டலில் தங்க விடாமல் உங்கள் வீட்டிலேயே பிடிச்சு வெச்சுக்கிட்டீங்களோ அப்பொழுதே எனக்கு உங்கள்மீது இந்த அதிகாரம் வந்துவிட்டது இல்லையா?" என்றான்.

மிதிலா அங்கீகரிக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. அவள் உதட்டில் நெளிந்த புன்முறுவலே அவனுக்கு பதிலாகிவிட்டது.

"நாளைக்கு காலேஜ் இருக்குன்னு நினைக்கிறேன். உங்களை நான் அதிக நேரம் தொந்தரவு படுத்திட

மாட்டேன். சாப்பிட்டுவிட்டு நன்றாய் தூங்குங்க. ஆமாம், ரங்கநாயகி வரவில்லை போலிருக்கே! உங்களுக்குத் துணையாய் யார் படுத்துப்பாங்க?'' என்று கேட்டான்.

''ஜெயந்தி வரேன்னு சொன்னாள்.''

''ஓ.கே. அப்ப நான் வரேன்'' அவன் திரும்பிப் போய் விட்டான்.

சூர்யகிரண் வாசலுக்கு வந்தபோது ராஜேஷ் இன்னும் போய் விடவில்லை.

அவன் கார் ஸ்டார்ட் ஆகவில்லை போலிருந்தது. பேனெட்டைத் தூக்கிப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

சூர்யகிரண் வெளியே வந்ததுமே அது ஸ்டார்ட் ஆயிற்று.

சூர்யகிரண் போகும்பொழுது ''லிஃப்ட் வேணுமா சார்?'' என்றான்.

''வேண்டாம்'' என்றான்.

''வாங்க, பரவாயில்லை, உங்க வீட்டண்டை இறக்கி விட்டு விடுகிறேன்''

''நடப்பது எனக்கு நன்றாய் பழக்கப்பட்டது''– மறுத்து விட்டான்.

''ஒரே ஒரு தடவை என்னோடு காரில் வருவதால் உங்கள் பழக்கம் போய்விடாதுங்க, வாங்க'' என்றான். வராந்தாவில் இருந்தபடி மிதிலா இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சூர்யகிரண் மறுக்க முடியாதவனாய் ஏறிக்கொண்டான். கார் ஸ்டார்ட் ஆயிற்று. இருவரும் மிதிலாவுக்குக் கையாட்டினார்கள்.

28

காலேஜ் திறந்து விட்டார்கள். வழக்கம் போலவே காலையில் காலேஜுக்குப் போய்விட்டு மாலையில் திரும்பி வருவது மிதிலாவின் தினசரி கடமைகளுள் ஒன்றாகி விட்டது. அர்ஜுனனும் காலேஜுக்கு வந்து கொண்டிருந்தான். மிதிலா அவனோடு பேசமாட்டாள். ஆனால் அவன் பார்வை பசியோடு மிதிலாவை வேட்டையாடிக் கொண்டேதான் இருந்தன. மிதிலாவின் மேலிருந்த ஆசை அவன் இதயத்தில் பக்பக்கென்று கொழுந்துவிட்டு எரிந்து கொண்டேதான் இருந்தது.

ஆனால் லீவிற்கு முன்னால் மிதிலாவிடமிருந்து அவனுக்கு சிதறும் படியானச் சூழ்நிலை வந்து சேர்ந்து விட்டது. அவன் அருமைத் தங்கை மஞ்சுவுக்கு மாதம் தவறிவிட்டது. ஒரு சுபமுகூர்த்தத்தில் மனைவி மதுமதி ஓச்செய்தியைக் காதில் போட்டதுமே அவன் அதிர்ந்து விட்டான். ராஜேஷ் இவ்வளவு அக்கிரமம் பண்ணுவான் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. சரி, இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். சாதாரணமாய் இருந்தால் கணபதி மஞ்சுவோடு ராஜேஷின் திருமணத்தை நடத்தி வைக்க சுமுகம் காட்டாமல் போகலாம். இப்பொழுது ராஜேஷ் தம் கையில் சிக்கிக்கொண்டு விட்டான். இனி இத்திருமணத்தை நடத்திவைக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி என்றெண்ணிக் கொண்டான்.

தங்கையைக் கூப்பிட்டான். மஞ்சு கூனிக் குறுகிப் போயிருந்தாள். அந்த வாயாடித்தனமும், துடிப்பும் எங்கேதான் போய் மறைந்தனவோ? மௌனமாய் இருந்தாள். அர்ஜுனனுக்கு மஞ்சுவைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. தலைமேல் கையை வைத்து தைரியம்

சொல்லியபடி— ''மஞ்சு! உன் அண்ணி என்னிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டாள். நீ ஒன்றும் அதைரியம் படாதே. உன்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த அவனை நான் சும்மா விட்டுவிடுவேன்னு நினைச்சுட்டாயா? என் உடம்பில் உயிருள்ளவரை விடமாட்டேன். அவனோடு உன் கல்யாணம் நடக்கும்படி பண்றேன்,'' என்றான் சபதமிடுவது போல.

அதைக் கேட்டதுமே மஞ்சுவின் முகம் விகாரமாயிற்று.

''கல்யாணமா? அந்த ராஸ்கலோடா?''

''மஞ்சு! ராஜேஷை நீ இப்படிச் சொல்றது நன்றாயில்லை.''

''ராஜேஷா? ராஜேஷை யார் என்ன சொன்னாங்க?''

''இப்ப நாம்ப பேசுவது ராஜேஷைப் பற்றிதானே? அவன்தானே உன் இந்த நிலைமைக்குக் காரணம்?''

''ராஜேஷாயிருந்தால் எனக்கும் சந்தோஷமாய்தான் இருக்கும். ராஜேஷ் இல்லை''

''என்னது? ராஜேஷ் இல்லையா?''

''இல்லை'' மஞ்சு மறுத்துத் தலையை ஆட்டினாள்.

''பின்னே யார்?''

''அந்த திருட்டு ராஸ்கல்! அந்த கோரைப்பல் ராட்சசன் வாசு'' மஞ்சு முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு கதறினாள்.

அர்ஜுனன் விக்கித்துப் போய்விட்டான். அவன் கண்களில் செம்பொறி பறந்தன. ''அவன்...அவன்...அந்த ராஸ்கலா? என்ன தைரியம்? நீ அவனைப் போய் எப்படி விரும்பினாய்?''

''நான் விரும்பலை. ராஜேஷுக்காகப் போனேன். ராஜேஷ் இல்லை. அந்த குரங்கு மட்டும்தான் இருந்தான். அவன் கையிலேருந்து தப்பித்துக்க முடியாமல் போயிடுத்து.

இன்னொரு தடவை ராஜேஷ் வரச்சொன்னாற்போலே ரங்கனிடம் சொல்லியனுப்பினான். நான் நிஜந்தான்னு நினைச்சுக்கிட்டுப் போனேன். அவன் மட்டுந்தான் அங்கே இருந்தான். அப்பக்கூட தப்பிச்சுக்க முடியாமல் போயிடுத்து.'' மஞ்சு அழுதாள். அம்முகம் ஆதரவில்லாமல் இருந்தது. எப்பொழுதும் தென்படும் மகிழ்ச்சியும் தேஜஸும் இல்லை!

அர்ஜுனனின் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன.

''நீ அப்பொழுதே ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

''அவள் ரகளைப் பண்ணிடுவானோன்னு பயந்தேன். அப்படிப் பண்ணிடுவேன்னு சொல்லி பயமுறுத்தியிருந்தான். ஆனால் இப்படி ஆகும்னு நினைக்கலேயில்லை.''

மஞ்சுவுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

அர்ஜுனன் கைகளைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டு அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடக்கத் தொடங்கினான். அவனுக்குப் பைத்தியமே பிடிக்கும் போலிருந்தது. என்ன செய்வதென்றே புரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து தங்கையிடம்— ''சரி, நீ உள்ளே போ'' என்றான். மஞ்சு எழுந்து போய் விட்டாள்.

''என்ன தீர்மானிச்சிருக்கீங்க?'' கேட்டாள் மதுமதி.

''அதான் எனக்கும் புரியலை'' என்றான் அவன்.

''இப்பவே நாலாவது மாதம். அவசரமாய் ஏதாவது பண்ணாமல் போனால் நாம்ப நாது பேர் வாயில் விழுந்து புரள வேண்டியிருக்கும்.''

அர்ஜுனன் மதுமதியிடம் வந்தான். மனைவியின் இருகைகளையும் பிடித்துக்கொண்டே— ''மது! எனக்கொண்ணுமே புரியலை, என்ன பண்றதுன்னும் தெரியலை. நீதான் ஏதாவது உபாயம் சொல்லணும்'' என்றான்.

''உபாயம் என்ன? மெட்றாசுக்குக் கூட்டிட்டுப்போய் ஏதாவது ஆஸ்பத்திரியில் ரகசியமாய் அபார்ஷன் பண்ணிடறதுதான் வழி''

''யாருக்காவது தெரிஞ்சுட்டால்?'' பயந்தான்.

''எப்படி தெரியும்? ஏதாவது வயிற்றுவலி, அப்பண்டிசைடில்ஸ் என்றுச் சொல்றது!''

அர்ஜுனன் பெருமூச்சு விட்டான். ''உன் புத்தி அபாரம் மது''

மதுமதி அவன் புகழுரைக்குப் பொங்கிப் போய்விடவில்லை. ''மனைவிகள் பின்னே எதுக்காக இருக்காங்க? கணவன்களுக்கு இப்படிப்பட்ட ஆபத்துங்க வந்தால் காப்பாற்றுவதற்காகத்தானே?'' என்றாள் இடித்துக் காட்டியபடி.

''மது! ப்ளீஸ்! இப்ப என்னை ஒன்றும் சொல்லாதே'' என்றான்.

மிதிலாவின்பால் அவனுக்கு இருந்துவந்த ஈடுபாட்டை மதுமதி உணராமலில்லை.

மதுமதி பயந்தாங்கொள்ளி அல்ல. சாமர்த்தியம் இல்லாதவளும் அல்ல! சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தாள். மதுமதிக்கு தெய்வம் இந்த விதமாய்-மிகச் சிக்கிரத்திலேயே அவகாசத்தை அருளிவிட்டார்.

''அப்படீன்னால் நாம்ப சிக்கிரமாய் மெட்றாசுக்குப் போகலாம்''— என்றான் அர்ஜுனன்.

''நாம்ப என்று என்னையும் சேர்த்காதிங்க. நான் வரப்போறதில்லை'' என்றாள் மதுமதி.

''மது! ப்ளீஸ்! நீ இப்படிச் சொன்னால் மஞ்சுவின் வாழ்க்கைப் பாழாகிவிடும்.''

''ஆகட்டும்! எனக்கென்ன? என் வாழ்க்கை நாசமாகத் தயாராயிருக்கும்போது என்னை யார் காப்பாற்றுகிறாங்க?'' என்றாள் கடுமையான குரலில்.

''இப்ப உனக்கென்னவாயிடுத்து மதுமதி!''

''என்னவாச்சா? எனக்குக் குழந்தைங்க பிறக்கவில்லையென்றும், உங்களுக்குக் குழந்தைங்க வேண்டும் என்றும், குழந்தைங்களுக்காக நீங்கள் வேறு கல்யாணம் பண்ணிக்கப் போறீங்கள்ளும் உங்கள் சித்தியிடம் நீங்கள் சொல்லவில்லையா?''

''ராம ராம! யார் சொன்னாங்க உன்னிடம் இந்த பொய்யை?'' வரவழைத்துக் கொண்ட வருத்தத்துடன் அவளைப் பார்த்தான்.

''உங்க சித்தியின் வாயில் எது தான் தங்கும்?''

''மது! நீ என்னைப் புரிந்துகொண்டது இவ்வளவுதானா? எங்க சித்தி வேலை வெட்டி இல்லாமல் ஆயிரம் அவதூறுகளைச் சொல்லுவாள். அதற்காக எனக்கு தண்டனை விதிக்கப் போகிறாயா? விதித்துக் கொள். என்ன பண்ணுவேன்? மௌனமாய் தாங்கிக்கொண்டு உன் மேல் எனக்கு இருக்கிற அன்பை நிருபிக்கிறேன். ஆனால் உன்னிஷ்டப்படி நடந்துகொள்.

நீ ஒண்ணும் மஞ்சுவுக்கு உதவி பண்ணவேண்டாம். அவள் வாழ்க்கை நடுத்தெருவுக்கு வந்துக்கட்டும்! நான் என்ன பண்ணுவேன்? அவள் தலையெழுத்து! என் தலையெழுத்து!''—அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

மாலை ஆனதும் மதுமதி பழையபடி ஆனாள்.

''நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். நான் மஞ்சுவைக் கூட்டிட்டு மெட்றாசுக்குப் போறேன்'' என்றாள்.

அந்த வாரமே அர்ஜுனனும் மதுமதியும் மஞ்சுவை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போனார்கள். அங்கே, தெரிந்த ஒரு லேடி டாக்டர் மூலமாய் நர்சிங் ஹோம் ஒன்றில் சேர்த்து, ரகசியமாய் ஆபரேஷன் பண்ணச் செய்தார்கள்.

ஒரு வாரம் கழித்து திரும்பி பார்வதிபுரத்திற்கு வந்து விட்டார்கள். மஞ்சுவுக்கு உடம்புச் சரியாயில்லை என்று சொன்னார்கள்.

ஒரிரண்டு வாரங்களில் மஞ்சு தேறிக் கொண்டாள். காலேஜுக்குப் போகத் தொடங்கினாள். அதற்குள் பரீட்சைகள் வந்துவிட்டன.

மஞ்சுவுக்கு வந்த ஆபத்தைப் பற்றி யாருக்குமே தெரியாது. மிக ரகசியமாய், கப்சிப்பென்று அந்த விதமாய் பெரியவர்கள் அடக்கி விட்டார்கள். மஞ்சு பழையபடியே ஆனாள். பழைய உற்சாகம் வந்து சேர்ந்தது. வாய்த் துடுக்கு அதிகரித்தது. ஆனால் முன்னைவிட அதிக ஜாக்கிரதைகள் வந்து சேர்ந்து கொண்டன. ராஜேஷ் முன் போல வாசுவைச் சந்திப்பதில்லை. அதனால் மஞ்சுவுக்கு ராஜேஷோடு உட்கார்ந்து வம்புப் பேசிக்களிக்க அதிக நேரம் கிடைத்தது. மெதுவாய் கணபதியிடம் மஞ்சுவுக்கு ராஜேஷைப் பண்ணிக்கச் சொல்லி கேட்பதற்காக அர்ஜுனன் முயற்சிப் பண்ணினான். ஆனால் இந்த விஷயம் எப்படியோ வாசுவுக்குத் தெரிந்துவிட்டது. வாசு அர்ஜுனனுக்கும் மஞ்சுவுக்கும் கடிதம் எழுதினான். அதில் இவ்வாறு இருந்தது.

"மஞ்சு—

உன் அண்ணன் உனக்கும் ராஜேஷுக்கும் திருமணம் பண்ணி வைப்பதற்காகப் பண்ணிக் கொண்டிருக்கும் முயற்சிகளைத் தெரிந்து கொண்டேன். நீ என்னிடம் ஏகாந்தமாய் இருந்தபொழுது நான் ஆட்டோமேட்டிக் கேமிராவைக்கொண்டு எடுத்த போட்டோக்கள் என்னிடம் உள்ளன. நீ சென்னைக்குப் போய் பண்ணிக்கொண்ட ஆபரேஷன் 'அப்பண்டிஸைடிஸ்' இல்லை என்றும் 'அபார்ஷன்' என்றும் நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கூட என்னிடம் உள்ளது. நீ ராஜேஷைத் திருமணம் பண்ணி கொள்வது என்பது கனவு என்று தெரிந்து கொள். நான்

ஒருத்தன் இங்கே இருக்கும்வரை அது நடக்காது என்று எச்சரிக்கிறேன். நீ என்னைத் தூண்டிவிட்டாய். என்னுள் வெறிப்பிடித்த ஆசைகளைத் தூண்டிவிட்டாய்! எனக்கு பெண் பலியை உண்டாக்கினாய். நீ எனக்கு வேண்டும். என்னை உனக்கு பிடித்திருந்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, நான் உன்னைத் திருமணம் பண்ணிக் கொண்டு திருவேன். என்னை நீ மறந்தாலானால் உன் வாழ்க்கையை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்துவிடுவேன். நான் நினைத்தால் என்னவேண்டுமானாலும் பண்ண முடியும் என்று தெரிந்துகொள்.

— இப்படிக்கு
நீ பைத்தியமடித்து விட்ட
வாசு"

மஞ்சு அக்கடிதத்தை நேராய் எடுத்துக் கொண்டு போய் அண்ணனிடம் காட்டினாள்.

"அப்பப்பா! ரொம்ப விவகாரத்தான் இருக்கு" என்றாள் அர்ஜுனன் அவன் ஒன்றிற்குப் பத்து தடவை களாய் அந்த கடிதத்தைப் படித்தான். வாசு சொன்னபடியே செய்து விடுவான் என்று ஊகித்துக் கொண்டான். அர்ஜுனன் தற்போதைக்கு மஞ்சுவின் திருமணப் பேச்சை தள்ளிப் போட்டுக் கொண்டான். மஞ்சுவிடம் வாசுவோடு தனியாய் அகப்பட்டுக் கொண்டு விடாமல் ஜாக்கிரதை யாய் இருக்கச் சொல்லி எச்சரிக்கை பண்ணினான்.

அர்ஜுனன் தனக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாதது போல வாசுவோடும், ராஜேஷோடும் வழக்கம் போலவே நடந்து கொள்ளத் தொடங்கினான்

வாசு அர்ஜுனன் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து, மஞ்சு தன் கடிதத்தைப் பற்றி அண்ணனிடம் சொல்லியிருக்க மாட்டாள் என்று நினைத்துக் கொண்டான். வாசுவுக்கு மஞ்சுவின்பால் தாபம் பெருகிற்று. அவன் எவ்வளவு முயன்ற போதிலும்,

எல்லாவிதமாய் வலை வீசிய போதிலும் மஞ்சு திரும்பவும் தனியாய் சிக்கவே இல்லை. அவன் தவிப்பு அதிகமாயிற்று. சில சமயம் அர்ஜுனன் வீட்டிற்கே நேராய் போய், மஞ்சுவைக் கையைப் பிடித்து இழுத்து வென்று இழுத்துக் கொண்டு எங்கேயாவது ஓடிப் போய் விடவேண்டும் என்று தோன்றும். அவனுக்குப் படிப்பில் மேல் கவனம் போய் விட்டது. இந்த படிப்பைப் படித்து விட்டு என்ன பண்ணப் போகிறேன் என்று தோன்றத் தொடங்கிற்று. அவன் அதற்கும் முன்பே மனதில் ரகசிய உறவுகள் உள்ள ஒரு சிலரை பிளாக் மெயில் பண்ணி பணம் சம்பாதிக்கத் தொடங்கி விட்டிருந்தான். அவன் ஏதோ பொழுது போகாமல்தான் காலேஜுக்கு வந்து கொண்டிருந்தானே தவிர, படிப்பதற்காக வருவதை விட்டு விட்டான்.

29

மிதிலா காலேஜிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள். கணபதியின் டிரைவர் எதிரே வந்தான். அவன் மிதிலாவை வணங்கி விட்டு, கடிதம் ஒன்றைத் தந்தான். மிதிலா பிரித்துப் படித்தாள். அதில் கணபதி இவ்வாறு எழுதியிருந்தார்—

"மிதிலா அவர்களுக்கு,

என் மகன் ராஜேஷ் உங்களிடம் டியூஷன் சொல்லிக் கொள்ள விரும்புகிறான். நான் கார் அனுப்புகிறேன். நீங்கள் ஒருமுறை வந்தால் அந்த விவரங்களையெல்லாம் பேசிக் கொள்ளலாம்— உங்கள் சங்காத்தியத்தில் என் மகன் ராஜேஷ் படிப்பிலும் கட்டுப்பாட்டிலும் மிக உன்னதமாகிக் கொண்டிருப்பதை நினைத்தால் எனக்கு

மிகச் சந்தோஷமாய் இருக்கிறது. உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
கணபதி"

மிதிலா அக்கடிதத்தை மற்றொரு முறை கூர்ந்து பார்த்தாள்.

'கணபதி' என்ற கையெழுத்தில் பெயர் சரியாய் தேர்ந்த அளவிற்கு வளைந்து அழகாய் மிடுக்காய் இருந்தது. மிதிலா ஒரு நிமிஷம் யோசித்தாள். அதற்குப் பிறகு உறுதியான முடிவிற்கு வந்தவளாய் கைவிரித்து பேனாவை வெளியே எடுத்து அதே கடிதத்தில் கீழே— "மன்னியுங்கள். எனக்கு வர ஒழியாது. மிதிலா"— என்று எழுதி டிரைவரிடம் தந்தாள்.

"ஐயா உங்களைக் கூட்டிட்டு வரச் சொன்னாரு" என்றான் டிரைவர்.

"என் பதில் அதில் இருக்கிறது"— என்று சொல்லி விட்டு மறுபேச்சிற்கு இடமில்லாமல் மிதிலா போய் விட்டாள்.

டிரைவர் ஒரு விநாடி மிக ஆச்சரியமடைந்தவனாய் நடந்து போய்க் கொண்டிருந்த அவளையே பார்த்தான். ஐயா சொல்லியனுப்பிகூட வரமாட்டேன் என்று சொல்லும் ஒருத்தியை இப்பொழுதுதான் முதல் முதலாய் பார்க்கிறான் அவன். தோளைக் குலுக்கிக் கொண்டே அங்கிருந்து போய் விட்டான்.

மிதிலா வீட்டிற்கு வந்தாள். ரங்கதாயி எழுதியிருந்த கடிதம் வந்திருந்தது. மிதிலா சோபாவில் உட்கார்ந்து கொண்டு கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

அதில் இவ்வாறு இருந்தது:

"அன்புள்ள மிதிலாவுக்கு,

உனக்கு ஒரு சுபச்செய்தியைத் தெரியப்படுத்த போகிறேன். என் திருமணம் நிச்சயமாகி விட்டது.

எங்களுக்குத் தெரிந்த சொந்தக்காரரேதான். இரண்டாந்தாரம். பெயருக்குதான் இரண்டாந்தாரமே தவிர வயது பின்னதுதான். திருமணமான மூன்று ஆண்டுகளிலேயே மனைவி போய் விட்டாளாம். இரண்டு குழந்தைகள் இருக்கிறார்களாம். அவர் என்னை மணந்து கொள்ளச் சம்மதித்து விட்டார். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தார். நான் உத்யோகத்தை ராஜினாமா பண்ணி விடவேண்டுமாம். நிம்மதியாய் வீட்டைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதை விட சந்தோஷமான விஷயம் வேறில்லை என்று தோன்றுகிறது எனக்கு. காலையிலேயே எழுந்திருந்து பத்து மணி வரைக்கும் சிரமப்பட்டு கணவனையும் குழந்தைகளையும் ஆபீசுக்கும் ஸ்கூலுக்கும் அனுப்பி வைத்துவிட்டால், மாலை வரைக்கும் நானெல்லாம் இல்லாளின் ராஜியந்தானே! உத்யோகம் பண்ண வேண்டும் என்றால் சிரமப்பட வேண்டியதே மட்டுமே இல்லை, வெளியே பல பேரிடமிருந்தும் பல விதமான தொந்தரவுகளையும் அனுபவிக்க வேண்டும். அந்த கஷ்டங்களையெல்லாம் ஆனால் பட முடியும். மென்மையான இயல்புடைய பெண் மனதிற்கு அது மிகத் துன்பகரமானதாய்தான் இருக்கும் என்றெண்ணுகிறேன் நான். அதனால் நான் சந்தோஷமாய் இத்திருமணத்திற்கு ஒப்புக் கொண்டு விட்டேன். அடுத்த மாதமே திருமணம். திருமணமான மறுநாளே நான் பம்பாய்க்குப் போய் விடுவேன். அங்கே அவருக்கு ஃபிளாட் இருக்கிறது. கார் கூட இருக்கிறது. மாதம் ஏழாயிரம் சம்பளம். அவர் என்னைப் போன்ற கொஞ்சம் வயது கூடிய பெண்ணை ஏன் தேர்ந்தெடுத்துக் கொண்டார் தெரியுமா? அவர் குழந்தைகளின் நலனுக்காக. மனம் விட்டுச் சொல்லி விட்டார். எங்கள் இருவரின் யோசனைகளும் ஒன்றுபட்டு விட்டன. நான் இன்றைக்கு என் ராஜினாமா கடிதத்தை அனுப்புகிறேன். இந்த திருமணம் நிச்சயமானது எனக்கு எல்லா விதத்திலும் சந்தோஷமாய் இருக்கிறது, ஒரு விஷயத்தைத் தவிர. அது, உன்னைப் பிரிய வேண்டுமே

என்பதுதான். என்னை ஞாபகம் வைத்திருப்பாய் அல்லவா? திருமணத்திற்கு அழைப்பிதழ் அனுப்புகிறேன். வந்திப்பாய் வருவாய் அல்லவா?

மிதிலா! சொல்ல மறந்து விட்டேன்! நான் லீவில் மெட்ராசுக்குப் போயிருந்தேன். அங்கே எங்கள் சித்தியின் மகனுக்கு டெலிவரி ஆனதால் பார்ப்பதற்காகப் போனேன். அந்த நர்சிங்ஹோமில் வேலை பண்ணுகிற லேடி டாக்டர் என் சிநேகிதிதான்! அங்கே ஒரு சம்பவம் நடந்தது. நம் மேச்சரர் அர்ஜுனனின் தங்கை மஞ்சு அங்கே படுக்கையில் படுத்திருந்தாள்! பக்கத்தில் அர்ஜுனனின் மனைவி உட்கார்ந்திருந்தாள். அந்தப் பெண்ணிற்கு அபார்ஷன் பண்ணினார்களாம். பார்வதிபுரமாயிருந்தால் யாருக்காவது தெரிந்து விடும் என்று இங்கே வந்தார்களாம். நான் இதொன்றும் தெரியாமல் 'அந்தப் பெண் என் பாணிதான், நான் போய் பார்க்கிறேன்'— என்றதற்கு லேடி டாக்டர் என் கையைப் பிடித்துத் தடுத்து விட்டு இந்த ரகசியத்தைச் சொன்னாள். 'அவர்கள் யாரையும் பார்க்க விரும்ப மாட்டார்கள். அவர்கள் வந்தது ரகசியமாய் இருக்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னாள். நீ இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லி விடாதே, குடி முழுகிப் போய் விடும். காந்தியையும் ஜெயந்தியையும் கேட்டதாய் சொல். ரமா, சரதா முதலியவர்களையும் கேட்டதாய் சொல். அவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்புகிறேன்.

இப்படிக்கு
ரங்கநாயகி"

மிதிலா கடிதத்தைப் படித்து முடித்து விட்டு கவரில் வைத்தாள். அந்தக் கடிதத்தின் மூலமாய் இரண்டு புது விஷயங்கள் தெரிய வந்தன. ஒன்று, ரங்கநாயகியின் திருமணம் நிச்சயமானது. இன்னொன்று, மஞ்சுவுக்கு அபார்ஷன் ஆனது. மிதிலா பெருமூச்செறிந்தாள்.

கடிதத்தை வைத்து விட்டு எழுந்திருந்த பொழுது வாசலில் கார் ஹாரன் சப்தம் கேட்டது—

மிதிலா நிமிர்ந்து பார்த்தாள்.

வாசலில் வந்து நின்ற கருப்பு அம்பாஸிடர் காரின் கதவை டிரைவர் வினயமாய் திறந்து பிடித்துக் கொண்டிருக்க, அதிலிருந்து கணபதி இறங்கிக் கொண்டிருந்தார்.

மிதிலா அவரைப் பார்த்ததுமே ஒரு வினாடி சிலையாய் அப்படியே நின்று விட்டாள்.

கதர் சில்க் வேட்டியும் சட்டையும் உடுத்திக் கொண்டு கழுத்தில் ஜிங்கைப் போட்ட அங்கவஸ்திரம் தொங்க, கைத்தடியை ஊன்றிக் கொண்டு அவர் நடந்து வந்து கொண்டிருந்தார். அவரிடம் பெரிய வியாபாரப் புள்ளிகளிடம் இருக்கும் மிடுக்கு இருந்தது.

மிதிலாவுக்கு அவர் வரவு ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை.

அந்த ஆச்சரியத்தை மனதின் அடிவாரத்தில் போட்டு மறைத்து விட்டு, முறுவலுடன் வரவேற்றாள்.

"நமஸ்காரம்" என்றாள் கைகளைக் கூப்பி.

அவர் உள்ளே வந்தார்.

"உட்காருங்கள்" என்றாள் நாற்காலியைக் காட்டி.

உட்காரப் போனவர் நின்று, "பாரும்மா! நான் உன் விஷயத்தில் ஒரு தப்புப் பண்ணிட்டேன். நீ என்னை மன்னிக்கணும். மன்னிக்கிறேன்னு சொன்னாத்தான் நான் உட்கார்ந்து பேசுவேன்" என்றார்.

மிதிலா வியப்படைந்தாள். "மன்னிக்கிறதா? நானா? உங்களையா?" என்றாள்.

"ஆமாம்மா. பாரு, நான் பணக்காரனாய் இருக்கலாம். இந்த ஊருக்கே பெரியவனாய் இருக்கலாம். ஆனால்

உனக்கு முன்னால் மட்டும் நான் வியாபாரப் புள்ளி கணபதி இல்லை. ராஜேஷின் தந்தை. அவ்வளவுதான்."

"இதென்ன இப்படிச் சொல்றீங்க?"

"என் பணத்தால் உனக்கு வேலை இல்லை. என் செல்வாக்கு உனக்குத் தேவையில்லை. நீ பாடம் சொல்லித் தருகிற ஸ்டுடென்ட்ஸின் தாய் தந்தையரை எப்படி மதிப்பாயோ அதே போல்தான் நானும்! நான் என்ன தப்புப் பண்ணினேன்? ராஜேஷின் தந்தையாய் வந்து உன்னைக் கேட்டிருக்க வேண்டியது. கணபதியார் காரை அனுப்பினேன். நீ வராததால் எனக்கு வருத்தம் ஏற்படவில்லை. நான் செய்த தப்பு எனக்குப் புரிந்தது."

மிதிலாவுக்குப் புரிந்தது. தலை குனிந்தபடி, "மன்னியுங்கள். ஆனால்—" என்று ஏதோ சொல்லப் போனாள்.

ஆனால் இடையிலேயே தடுத்து விட்டு "அதான் சொன்னேனே! மன்னிப்பு கேட்க வேண்டியவன் நான்தான்னு."

"அப்படிச் சொல்லாதீங்க. உட்காருங்க" என்றாள் மிதிலா.

அவர் உட்கார்ந்து கொண்டார்.

"காபி குடிக்கிறீங்களா?" என்று கேட்டாள் மிதிலா. அவ்வளவு பெரியவர் இவ்வாறு நேராய் தன் வீட்டிற்கு வந்ததைப் பார்த்து மிதிலாவுக்குத் தடுமாற்றமாய் இருந்தது.

"அதெல்லாம் தேவையில்லைம்மா. நீ உட்காரு. உன்னோடு ஒரு விஷயம் பேசத்தான் வந்தேம்மா" என்றார் அவர்.

"சொல்லுங்கள்"

''ராஜேஷ் எனக்கு ஒரே மகன். தாயில்லாக் குழந்தை. சென்னு நான் அவனை மிகச் செல்லமாய் வளர்த்தேன். நான் எப்பொழுதும் வியாபார விஷயமாய் வெளியே சுற்றிட்டிருப்பேன். அவன் தனிமையில் துன்பப்படக் கூடாதென்னு நண்பர்களோடு சேர்த்து இருக்கச் சொல்லி உற்சாகப்படுத்தி வந்தேன். ஆனால் அந்த ஒற்றுமையே என்னை அவனிடமிருந்து பிரித்து விட்டது. அவன் நடத்தை மாறிவிட்டது. அவன் ஒற்றைதர்கள்தான் உலகமென்னு ஆயிட்டான். படிப்பின் மேல் கவனம் போயிடுத்து. அவன் இனி வழிக்கு வரமாட்டான்னே நினைச்சுட்டிருந்தேன். அவனை எந்த சக்தியாலும் மாற்ற முடியாதுன்னு நினைத்தேன். அவன் மேல் இருந்த நம்பிக்கையைக் கூட கைவிட்டு விட்டேன். அப்படியிருந்த சமயத்தில் அவன் திடீரென்று மாறத் தொடங்கிட்டான். ஒற்றைதர்களை விட்டு விட்டான். வீட்டிற்குத் திரும்ப வந்துட்டான். வீட்டிலேயே இருக்கத் தொடங்கினான். என்னை கௌரவமாய் அன்பாய் நடத்தினான். இவ்வளவு உயர்ந்த நல்ல மாறுபாடு தோன்றுவதற்குக் காரணம் நீதான்னு தெரிஞ்சதும் உனக்கு நன்றி சொல்லாமலிருக்க முடியலை என்னால்.''

''நீங்கள்... நீங்கள் அப்படி சொல்லாதீங்க'' என்றாள் மிதிலா சட்டென்று.

''நீங்கள் கொஞ்சம் ஹார்லிக்ஸ் குடியுங்கள். பெரியவர் வந்திருக்கீங்க. வெறுமே அனுப்ப எனக்குப் பிடிக்கலை'' என்று சொல்லிக் கொண்டே அவர் பதிலுக்காக எதிர் பார்க்காமல் உள்ளே ஓடினாள் மிதிலா. ஹார்லிக்ஸ் கலந்து கொண்டிருக்கையில் மிதிலாவின் மனதிற்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. அது ஒரு விவரிக்க முடியாத சந்தோஷம். நாம் பிரதிபலனை எதிர்பார்க்காமல் ஒருவருக்கு ஒரு நல்லதைப் பண்ணினால் அவர்கள் அதை மதிக்கும்போது ஏற்படும் சந்தோஷம், இந்தச் சந்தோஷத்திற்கு ஈடு எதுவும் இல்லை என்று தோன்றிற்று.

முன் அறையில் உட்கார்ந்திருந்த கணபதி கூட அவ்வறையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். மிதிலாவைப் போலவே எளிமையாய் இருந்தது அது. மிதிலாவைப் பார்த்துப் பேசிய இந்த பத்து நிமிஷத்தில் அவருக்கு அவள்பால் ஏற்பட்டிருந்த கௌரவம் இரு மடங்காகி விட்டது. மிதிலாவிடமிருந்த அடக்கம், நல்ல பண்பு இரண்டும் அவரைக் கவர்ந்தன.

மிதிலா ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வந்தாள். அவர் வாங்கிக் கொண்டார்.

''அம்மா அப்பா இருக்காங்களாம்மா?'' கேட்டார்.

''அம்மா இருக்காங்க. அப்பா இல்லை''

''அண்ணன் தம்பிங்க?''

''அண்ணா ஒருத்தன் இருக்கான்.''

''என்ன பண்றான்?''

''பாங்கில் வேலை பண்ணிட்டிருக்கான்.''

''கல்யாணம் ஆயிடுத்தா?''

''ஆங்! ஒரு மகன்கூட!''

அவர் பார்வை மிதிலாவின் கழுத்தில் பட்டது.

மிதிலாவின் கழுத்தில் தாலி இல்லை.

அவர் ஹார்லிக்ஸைக் குடித்துவிட்டு, கோப்பையைக் கீழே வைத்துவிட்டு— ''நான் இங்கே வந்தது உன்னைப் பார்த்து நன்றி சொல்றத்துக்கு மாத்திரமேயில்லை. இன்னொரு வேலையாய்கூட வந்தேன்.''

''சொல்லுங்கள்'' என்றாள் மிதிலா.

''ராஜேஷ் உன்னிடம் டியூஷன் சொல்லிக்கிறேன் என்கிறான்''

மிதிலா பதில் பேசவில்லை.

''நீ எந்தச் சமயத்துக்கு வரமுடியும்னு சொன்னால் நான் தினமும் அந்தச் சமயத்துக்குக் காரை அனுப்புவேன்.''

மிதிலாவுக்கு அவர் வருகையின் நோக்கம் உடனே புரிந்துவிட்டது.

"என்னால்...என் னா ல் முடியாதுங்க" நீட்டி முழக்காமல் சொல்லிவிட்டாள்.

"முடியாதா? ஏன்?" அவர் முகத்தில் ஏமாற்றம் கரு மேகமாய் வந்து படிந்தது.

"இப்பவே ரெண்டு பேருக்கு சொல்லித்தந்துட்டிருக் கேன்"

"யார் அவங்க?"

"சாந்தி, ஜெயந்தி என்று இரண்டு பேர். ஜெயந்தி இந்த வீட்டுக்காரியின் மகள், சாந்தி ஜெயந்தியின் சிநேகிதி."

"ஓஹோ?" அவர் பின்னுக்கு சாய்ந்து உட்கார்ந்த கொண்டே— "அவங்க எவ்வளவு தராங்க?" என்றார்.

மிதிலாவின் கன்னங்களில் செம்மை படிந்தது! பணத்தைக் கொண்டு எடை போடுகிறார் போலும்! முறுவலுடன்— "அவங்க பணம் தரமாட்டாங்க" என்றாள்.

"தரமாட்டாங்களா?" அவர் வியப்படைந்தார்.

மிதிலா புன்னகை மாறாமல்—பிசிறில்லாத குரலில்— "அவங்சு ஃபீசு தரமாட்டாங்க. நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். ஃபீசுக்காக டியூஷன் சொல்லித்தர வேண்டிய தேவையோ, பழக்கமோ கிடையாது எனக்கு. நான் இந்த வீட்டில் தனியாய் இருக்கிறேன். அவங்களிரு வரும் எனக்கு ஒத்தாசையாய் இருப்பாங்க. நானும் அவங் களுக்குப் படிப்பில் உதவி பண்ணிட்டிருப்பேன். அவ்வளவு தான்"

அவர் ஒரு நிமிஷம் நிசப்தமாய், பதில் சொல்ல முடியாதவராய் உட்கார்ந்திருந்தார். பிறகு, "ஆனால் ராஜேஷ்!" என்றார்.

3513163

"ராஜேஷுக்கு டியூஷன் தேவையில்லை" என்றாள் மிதிலா.

"இதென்னம்மா இப்படி சொல்கிறாய்?"

"நீங்களே யோசித்துப் பாருங்கள். இந்த வருஷம் அவன் பரீட்சை எழுதினான். ஃபஸ்ட்டில் பாஸ் பண்ணி னான். அவனுக்கு டியூஷன் யார் சொல்லித் தந்தாங்க?"

"ஆமாமாம். அதுவும் நிஜந்தான். ஆனால் இந்த வருஷம் படிப்பு கஷ்டம் என்கிறான்."

"ஒன்றுமில்லை. கிளாஸில் நாங்க சொல்லித் தருவோம். சிரத்தையாய் கேட்டுக் கொள்கிற மாணவர்கள் வீட்டில் படித்தாலே போதும். ஆனாலும் நீங்கள் ராஜேஷுக்கு டியூஷனைப் பழக்குவது நல்லதில்லை என்பது என் உத்தேசம். ராஜேஷ் புத்திசாலி பையன். அவனுக்கு டியூஷன் மீது இல்லாமல் தன் சொந்த உழைப்பின் மீது ஆதாரப்படுவதை நாம்ப பழக்கப்படுத்தினால் அவன் எதிர்காலத்திற்கு ரொம்ப நல்லது என்பது என் உத்தேசம். இன்றைக்கு நான் இருப்பேன். நாளைக்கு எனக்கு இங்கே ஏதாவது பிடிக்காமல் போய்விட்டால் போய்விடுவேன். டியூஷனுக்காக என்மீது ஆதாரப்பட்டுக் கொண்டிருந்தால் ராஜேஷின் படிப்பு அப்பொழுது என்னவாகும், சொல் லுங்கள்? எனக்கு ராஜேஷ் தானாகவே படிப்பதற்கு அதி சிரத்தையை ஏற்படுத்தித் தருவதுதான் நல்லதாய் தோணு கிறது. அதன் மூலமாய் படிப்பின் மீது கவனம் ஒன்றும் சாமர்த்தியமும் வளரும். ராஜேஷின் நல்லதற்காகத்தான் இதைச் சொல்றேனே தவிர வேறொன்றுமில்லை. நீங்கள் வேறு விதமாய் நினைத்துக்காதீங்க."

"சே! சே! அதெல்லாம் இல்லை! நீ சொன்னது நிஜந்தான். யோசிக்கத் தகுந்ததுதான்" என்றார் அவர்.

மிதிலா தான் கேட்டுக்கொண்டதுமே டியூஷன் சொல்லித் தருவதற்கு ஒப்புக்கொண்டு விடாமல், ராஜேஷ்

சார்பில் இருந்து யோசித்துப் பார்த்துத் தனக்கு ஆலோசனை சொன்னது அவருக்குப் பிடித்திருந்தது! அவள் நல்ல குணத்திற்கும் சௌஜன்னியத்திற்கும் அசந்து போனார் அவர்.

''சரி! போயிட்டு வரேம்மா''— அவர் எழுந்தார்.

''நமஸ்காரங்க. இந்தச் சாக்கிலாவது நீங்கள் எங்க வீட்டுக்கு வந்திங்க. ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு'' என்றாள்.

''உன்னை இப்படிச் சந்தித்ததும் சந்தோஷமாய்தான் இருக்கு'' என்றார் அவரும். அவருக்கு ஒரு நல்ல மனுஷியைப் பார்த்துப் பேசிய திருப்தி ஏற்பட்டது. மிதிலா சொன்னதும் உண்மைதான். ராஜேஷ் படிப்பில் தன் சொந்த முயற்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த யோசனை அவருக்கு மிகவும் பிடித் திருந்தது!

கார் போனதுமே மிதிலா கணபதியை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள். 'ராஜேஷுக்கு டியூஷன் சொல்லித்தர முடியாது என்று பதில் சொன்னது நான் எடுத்துக் கொண்ட சரியான முடிவுதான்'— என்று தனக்குள் எண்ணிக் கொள்ளத் தொடங்கினாள்.

மிதிலா உள்ளே வந்து சுட்டிலில் உட்கார்ந்துகொண் டாள். ராஜேஷை மிதிலாவுக்குப் பிடிக்குந்தான். அவனுக்குப் படிப்பில் உதவி பண்ணுவதும் அவளுக்குப் பிடித்த விஷயந்தான்.

ஆனால் அவள் மறுத்துவிட்டாள்!

ஏன்? மிதிலாவுக்கு அன்றைக்குத்தான்— ஊரிலிருந்து வந்த அன்றைக்கு, ராஜேஷ் நடந்து கொண்ட விதமும் அந்த சுவாதீனமும் அடிக்கடி நினைவிற்கு வந்து கொண் டிருந்தது. ஏனோ அந்த விஷயத்தை அவளால் மறக்க முடியவில்லை. ராஜேஷ் தன் கைகளைப் பிடித்துக் கொண்டதும், அந்த ஸ்பரிசத்தால் பரவசமடைந்ததும்,

மிதிலாவின் மனம் நன்றாகவே உணர்ந்து கொண்டு விட்டது. ராஜேஷிடம் அவள் எதிர்பார்த்ததும் விரும்பியதும் படிப்பையும் நல்ல நடத்தையையுந்தானே தவிர, அவனோடு சிருங்காரம் இல்லை. அத்துமீறிய அனுபவம் இல்லை! மிதிலா, ராஜேஷ் எல்லை மீறிக் கொண்டிருந்ததை உணர்ந்தாள். அதனால்தான் அவனுக்கு கொஞ்சம் தொலைவிலேயே இருக்கத் தீர்மானித்துக் கொண்டாள். அதனால்தான் பெரியவரான கணபதியே நேரில் வந்து கேட்டபோதும் மறுத்துவிட்டாள்.

தான் எடுத்துக் கொண்ட இந்த முடிவு சரியானது தான் என்றுதோன்றிற்று. கணபதி கோபப்படவில்லை. அவளைப் புரிந்துகொண்டு விட்டார். அதுவே போதும் என்று தோன்றிற்று.

ராஜேஷுக்குத் தெரிந்தும் தெரியாததுமாள பருவம்! அவன் இளமை, அவிழ்த்துவிட்ட காளையாய் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நல்லது கெட்டது தெரியாமல் போனது சகஜந்தான். ராஜேஷை அவளுக்குப் பிடிக்குந்தான். ஆனால் அந்த விருப்பத்தால் அவனுக்கு நல்லது நிகழவேண்டுமே தவிர கெட்டது ஏற்படக்கூடாது! மிதிலா விரும்பியதும் அதுதான்!

30

மிதிலா தலைக்கு குளித்துவிட்டு கேசத்தை ஆற்றி கொண்டிருந்தாள்.

சாந்தியும் ஜெயந்தியும் வந்தார்கள்.

சாந்தி ட்ரேயில் புதுப்புடவை, ஜாக்கெட் துணி, பூ வைத்து நெற்றியில் பொட்டு வைத்துவிட்டு மிதிலாவிடம் நீட்டினாள். ''விஷ் யூ எ ஹாப்பி பர்த் டே'' என்றாள்.

''மேடம்! பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' என்றாள் ஜெயந்தியும், அழகான வேலைப்பாடுகள் அமைந்த டேபிள் விளக்கைத் தந்துவிட்டு.

''சாந்தி! ஜெயந்தி! இதெல்லாம் என்ன?'' என்றாள் மிதிலா.

இன்றைக்கு மிதிலாவுக்குப் பிறந்த நாள். பத்து நாட்களுக்கு முன்னால் போஸ்டில் மிதிலாவின் பெயருக்கு பெரிய ரிஜிஸ்தர் பாக்கெட் வந்தது. அப்பொழுது ஜெயந்தியும் சாந்தியும்கூட அங்கேயேதான் இருந்தார்கள்.

போஸ்ட் மேன் தந்த பாக்கெட்டை அவ்விருவரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். அதில் பச்சை நிறத்தில் கார்டன் சில்க் புடவையும் அதற்கு மேட்ச் ஆன ஜாக்கெட்டும் இருந்தன.

''—பிறந்த நாள் அன்றைக்குக் கட்டிக் கொண்டு எங்களை நினைவுபடுத்திக் கொள்— அம்மா, அண்ணி, அண்ணன்''— என்றிருந்தது.

''உங்க பிறந்தநாள் எப்பொழுது மேடம்?'' என்றாள் ஜெயந்தி.

''வரும் பன்னிரெண்டாம் தேதி'' என்றாள் மிதிலா.

''பன்னிரெண்டாம் தேதியா? அப்படீன்னால் வெள்ளிக்கிழமை'' என்றாள் சாந்தி, கேலண்டரைப் பார்த்துவிட்டு.

''அப்படீன்னால் நாம்ப பெரிதாய் பார்ட்டி வைத்து விடலாம் ரமா, சாரதா மேடம் எல்லோரையும் கூப்பிட்டு விமரிசையாய் டீ பார்ட்டி தந்துடலாம்'' என்றாள் ஜெயந்தி மிக உற்சாகமாய்.

''நான் வீடெல்லாம் கலர் காகிதங்களைத் தொங்க விட்டு பலூன்களைக் கட்டி விடுகிறேன்'' என்றாள் சாந்தி.

''ஒன்றும் வேண்டாம். எனக்குப் பிடிக்கலை,'' என்றாள் மிதிலா கடுமையாய். என்றுமில்லாதவாறு

அவள் கண்களில் தெரிந்த கோபத்தைப் பார்த்ததும் அவ்விருவருக்கும் சுருக்கென்றது.

''இதென்ன மேடம்? பிறந்தநாள் என்றாலே எல்லோருக்குமே பிடிக்கத்தானே செய்யும்? அதை நாம்ப கிராண்டாய் நடத்திக் கொள்ளணும்...'' என்றாள் ஜெயந்தி.

மிதிலாவின் கண்கள் எங்கோ சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. மெல்லிய குரலில் சொன்னாள் —''ஆமாம் ஜெயந்தி ஒரு காலத்தில் நானும் அப்படித் தான் நினைச்சிட்டிருந்தேன். ஒரு வருஷம் முழுவதும் வருகிற அத்தனைப் பண்டிகைகளையும் விட பிறந்தநாள் ஒன்றுதான் ரொம்ப ஸ்பெஷலான நாளாய் பாவித்து வந்தேன் அப்படிப்பட்ட உணர்ச்சியைத் துடைத் தெறிந்து விட்டார் ஒரு ஆள். அவரோடேயே என் எல்லா கொண்டாட்டங்களும் போய் விட்டன.''— மிதிலாவின் கண்களில் ஈரம் பளபளத்ததை சாந்தியும் ஜெயந்தியும் திகைப்படைந்து போய் பார்த்தார்கள். மிதிலா மேடத்தை இவ்வளவு பேதையாய் பார்ப்பது அவர்களுக்கு இதுதான் முதல் தடவை. அவர்களுக்கு என்னவோ போல இருந்தது.

''அந்த ஆள் இப்ப இல்லையா மேடம்?'' கேட்டாள் சாந்தி.

இல்லை என்று தலையாட்டினாள் மிதிலா.

''என்னவானார்?''

''ஆக்ஸிடென்ட்டில் போயிட்டார்.''

''ஐயோ''— சாந்தியும் ஜெயந்தியும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அதிலிருந்தே பிறந்தநாள் விஷயத்தையே மறந்து போயிட்டேன் நான் அந்த நாளுக்கும் மற்ற நாளுக்கும் வித்தியாசமே தெரியாமல் போயிடுத்து எனக்கு'' என்றாள் மிதிலா.

''அப்படீன்னால் நாங்க உங்க பிறந்தநாளை கொண்டாட வழியில்லையா?'' என்றாள் சாந்தி.

மிதிலா யோசனையிலிருந்து மீண்டு திடுக்கிட்டு இவ்வுலகிற்கு திரும்பி வந்தாள். ஒரு நிமிஷம் சாந்தியையே உற்றுப் பார்த்தாள். பிறகு சாந்தியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு பாசத்தோடு பார்த்தபடி, ''ஊஹூம், இல்லை'' என்றாள்.

சாந்திக்கும் ஜெயந்திக்கும் அதைக் கேட்டு ஏமாற்றம் ஏற்பட்டது. அந்தப் பேச்சு அதோடு நின்று விட்டது. மிதிலா அப்பொழுதே அதை மறந்து விட்டாள்.

ஆனாலும் இன்று காலையிலேயே சாந்தியும் ஜெயந்தியும் வந்து இந்த பரிசுகளைத் தந்து விட்டார்கள்.

மிதிலா விருப்பமில்லாத போதிலும் அவர்கள் முகங்களைப் பார்த்தபோது கோபித்துக் கொள்ள மனம் வரவில்லை. அவைகளை வாங்கி பக்கத்தில் வைத்தாள். மூவரும் காலேஜுக்குப் போனார்கள்.

மூவரும் காலேஜ் கேட்டைத் தாண்டி உள்ளே அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது, வாசு, ரங்கன், சீனு மூவரும் அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். சீனு மிதிலாவோடு சேர்ந்தாற்போல வந்து கொண்டிருந்த ஜெயந்தியையும் சாந்தியையும் பார்த்து கேலியாய்— ''அடேய்! ஃபஸ்ட் மார்க்குகள் எப்படி வரும்டா?'' என்றான்.

''லெக்சரர்களின் வாலைப் போல சுற்றிக் கொண்டே அவங்க வீட்டில் பத்துப் பாத்திரங்களையெல்லாம் தேய்த்துக் கொடுத்துக் கொண்டிருந்தால் சுலபமாய் வரும்'' என்றான் வாசு.

சாந்தி, ஜெயந்தி, மிதிலா மூவரும் இப்பேச்சைக் கேட்டார்கள்.

சாந்தியின் முகம் சிவந்து விட்டது. திரும்பிப் பார்த்து ஆவேசமாய் ஏதோ சொல்லப் போனாள். மிதிலா சாந்தியின் கையைத் தட்டி எச்சரித்தாள்— ''வேலை வெட்டி இல்லாதவங்க எதையாவது உளறிக் கொண்டிருப்பாங்க. அதுக்கு நாம்ப ஏன் கோபித்துக்கணும் சொல்லு?'' என்றாள்.

சாந்தி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

மிதிலா இப்படிப்பட்ட விமர்சனங்களைத் தன் சக லெக்சரர்களின் வாயாலும் கூட கேவியாய் கேட்டிருக்கிறாள். உண்மையில் ஒரு லெக்சரர் எந்த மாணவியோடும் அவ்வளவு நெருக்கமாய் இருக்கக் கூடாது. ஆனால் அவளுக்கு வேறு வழியில்லை. சாந்தியும் ஜெயந்தியும் அவளுக்குத் துணையாய் இருந்ததை சாக்கிட்டு அவள் ஒருநாளும் அவர்களுக்கு மார்க்குகளை அதிகமாய் போட்டு விடவில்லை. சொல்லப் போனால் அவர்கள் பேப்பர்களை இன்னும் கவனமாய் திருத்தினாள்.

மிதிலா ஸ்டாஃப் ரூமில் இருந்த பொழுது பிரின்ஸிபால் கூப்பிடுவதாய் செய்தி வந்தது.

மிதிலா போனாள். அவர் மிதிலாவை உட்காரச் சொல்லிவிட்டு மேஜை டிராயரைத் திறந்து அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துத் தந்தார். அதில் மிதிலா சாந்தி ஜெயந்தி ராஜேஷ் மூவர்பாலும் ஓரவஞ்சனையுடன் நடந்து கொள்கிறாள் என்றும் அவர்களுக்கு மட்டும் முதல் மார்க்குகளை நிறைய தந்துவிட்டு, மற்ற மாணவர்களுக்கு அநியாயம் பண்ணுவதாகவும் சொல்லி திட்டியிருந்தது. பிரின்ஸிபாலுக்குப் பத்து மாணவர்கள் புகார் தந்திருந்தார்கள்.

''இதற்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீங்க?'' கேட்டார் பிரின்ஸிபால்.

மிதிலாவின் முகத்தில் ரத்தம் குபீரென்று பாய்ந்தது. ஏற்கனவே சிவந்த அம்முகம் இன்னும் செக்கச் செவ்வானம் என்றாயிற்று.

மிதிலா அக்கடிதத்தை அவருக்கெதிராக வைத்து விட்டு— ''சரி! நான் திருத்திய பேப்பர்களை வரவழைத்து நீங்களே ஒரு தடவை பரிசோதித்து விடுங்கள். அப்படி மார்க்குகள் போட்டது நியாயமா அநியாயமான்னு உங்களுக்கே தெரிந்துவிடும். நீங்கள் கேட்டதற்கு என் பதில் இதுதான்'' என்று சொல்லி விட்டு நாற்காலியை விட்டு எழுந்திருந்தாள்.

''இது கோ எஜுகேஷன் காலேஜ் என்கிறதை மறந்து போயிடாதீங்க. ஸ்டூடென்ட்ஸ் மனதில் துவேஷம், அசூயை இதையெல்லாம் உண்டாக்குவது எந்த லெக்சரர்க்கும் நல்லதில்லை'' என்றார்.

போகத் திரும்பிய மிதிலா நின்றாள்.

ஒரு வினாடி அவரையே பார்த்து விட்டு'' எனக்குத் தெரியும் சர்'' என்றாள்.

''இந்தக் கடிதத்தைக் காட்டி, உங்கள் தப்பைச் சுட்டிக் காட்டி பதில் கேட்கணுங்கிறதில்லை என் உத்தேசம். உங்களை எச்சரிப்பதற்காகவே சொன்னேன்.''

''தாங்க்யூ சர்'' என்றாள் மிதிலா.

மிதிலா பிரின்ஸிபாலின் அறையை விட்டு வெளியே வந்தாள்.

அங்கிருந்து வகுப்பிற்கு வந்து கொண்டிருக்கையில் வழியில் ராஜேஷ் எதிர்ப்பட்டான்.

''குட் மார்னிங் மேடம்'' என்றான்.

''குட் மார்னிங்'' என்று சொல்லி விட்டு மிதிலா போய்க் கொண்டேயிருந்தாள். நினைமும் போல அவனைப் பார்த்துவிட்டு நிற்கவில்லை. அன்பாய் சிரிக்கவில்லை.

மிதிலா போனைதைப் பார்த்து அவன் சரேலென்று பின்னாடியே வந்தான்.

''மேடம்! ராத்திரி டாடி வந்தாரமே?''

மிதிலா திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வை கூர்மையாய் இருந்தது. ''உங்க டாடிகிட்டே சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லிட்டேன். இனிமேல் என்னோடு அனாவசியமாய் பேசாதே!''— என்று சொல்லி விட்டு மறுபேச்சிற்கு இடமில்லாமல் அங்கிருந்து போய் விட்டாள்.

என்றுமில்லாதவாறு இன்றைக்கு மிதிலா காட்டிய ஒதுக்க மறுப்பிற்கு வாயடைத்துப் போனவனாய் நின்று விட்டான் ராஜேஷ். அவன் முகத்தில் சதா இருந்து வரும் புன்னகையை யாரோ துடைத்தெறிந்து விட்டாற் போல மாயமாகி விட்டது. கிட்டே வந்த கைக்குழந்தையைத் தாய் அடித்துத் தள்ளி விட்டால் பார்க்கும் பார்வை!

அதற்குள் பின்னாலிருந்து யாரோ க்ளுக்கென்று சிரித்தார்கள்.

ராஜேஷ் திரும்பிப் பார்த்தான்.

ரமணன் இடி இடியென்று சிரித்துக் கொண்டிருந்தான்.

ராஜேஷின் கண்கள் சிவந்து விட்டன.

மிதிலா உதாசீனமாய் பேசி விட்டுப் போனதைக் காட்டிலும் ரமணனின் கேலி சிரிப்புதான் அவனுக்கு அவமானத்தை புஸ்ஸென்று தூண்டி விட்டது.

அவன் நேராய் ரமணனிடம் வந்தான். ''என்ன சிரித்தாய்?'' என்றான்.

''சிரிப்பு வந்தது. சிரித்தேன். தப்பா?'' பயமில்லாமல் பதில் சொன்னான் ரமணன்.

''ஏன் சிரித்தாய், அதைச் சொல்லு மொதல்ல!''

ரமணன் சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு மரமரத்தின் மேலிருந்த குரங்கைக் காட்டி— ''அதைப் பார்த்துச் சிரித்தேன்'' என்றான்.

ராஜேஷுக்கு அவன் தன்னை குரங்கோடு ஒப்பிட்டது புரிந்து விட்டது.

உடனே கையை நீட்டி அவன் கன்னத்தில் ஒன்று அறைந்தான்.

ரமணன் விக்கித்துப் போய் விட்டான். கன்னத்தைப் பிடித்துக் கொண்டே ''என்னை ஏன் அடித்தாய்?'' என்றான்.

ராஜேஷ் மரத்தின் மேலிருந்த குரங்கைக் காட்டி, ''அது என்னை அடிக்கச் சொல்லிற்று''— என்று சொல்லி விட்டு போய் விட்டான்.

ரமணன் பிரின்ஸிபால் அறையை நோக்கிப் போனான்.

ராஜேஷ் வகுப்பிற்கு வந்தான்.

மிதிலா அதற்குள் பாடத்தைத் தொடங்கியிருந்தாள்.

ராஜேஷ்— ''மே ஐ கமின் மேடம்?'' என்றான்.

மிதிலா கையால் 'உள்ளே வந்து உட்கார்ந்து கொள்' என்பது போல சைகை பண்ணினாள்.

ராஜேஷ் வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவன் பக்கத்து நாற்காலிகள் காலியாய் இருந்தன.

வாசு, சீனு, ரங்கன், மஞ்சு, ரமணன் யாருமே வரவில்லை.

மிதிலா பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தவள் ஒரு வினாடி நின்றாள். வகுப்பிலிருந்த எல்லோரையும் ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, கச்சிதமான குரலில்— ''நாளையிலிருந்து முன்னாடியே வகுப்புக்கு வரமுடியாதவங்க யாரும் என் வகுப்பிற்கு வர வேண்டாம். நடுவில் வந்து நான் சொல்லித் தந்துட்டிருக்கும் பாடத்திற்கு டிஸ்டர்ப் பண்றவங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது'' என்றாள்.

முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்த ராஜேஷின் முகம் இவ்வார்த்தைகளைக் கேட்டு வெலவெலத்து போய் விட்டது. வகுப்பில் எஞ்சியவர்கள் கூட இந்த வார்த்தையை அவளை உத்தேசித்துதான் சொன்னதாய் புரிந்து கொண்டு அவன் பக்கமாய் ஓரக்கண்ணால் பார்க்கத் தொடங்கினார்கள். ராஜேஷ் இந்த அவமானத்தை மென்று விழுங்கிக் கொண்டே மிடுக்காய் உட்கார்ந்திருந்தான்.

மிதிலாவின் மேஜைமீது சிவப்பு ரோஜா வைக்கப்பட்டிருந்தது. ஆனால் மிதிலா அதைத் தொடவில்லை. அதன் பக்கமாய்கூட பார்க்கவில்லை. பாடம் சொல்லித் தந்து கொண்டிருக்கையில் மறந்தும் ராஜேஷ் பக்கமாய் பார்க்கவில்லை. வகுப்பு முடிந்தது!

மிதிலா வெளியே போய்க் கொண்டிருந்தாள்.

எதிரே ரமா வந்து கொண்டிருந்தாள்.

''விஷ் யூ எ ஹாப்பி பர்த் டே டியர்'' என்றாள்.

''தாங்க்யூ! உங்களுக்கு எப்படி தெரியும்?''

''ஜெயந்தி சொன்னாள். பார்ட்டி ஒன்றுமில்லையா?''

''இல்லை'' என்று சொல்லிவிட்டு மிதிலா அங்கிருந்து போய்விட்டாள்.

இந்த சம்பாஷணை ராஜேஷின் காதில் விழுந்தது.

இதென்ன! இன்றைக்கு மேடத்தின் பிறந்தநாளா?

ஐயோ! எனக்குத் தெரியவே தெரியாதே! அவன் நிறைந்தபட்சம் விஷ்கூட பண்ணவில்லை.

அவன் சிலையாய் உட்கார்ந்திருந்தான்.

பிறகு சரேலென்று எழுந்திருந்தான்.

மிதிலாவுக்காக ஸ்டாஃப்ரூம் பக்கமாய் போக முயன்றபோழுது ப்யூன் வந்து ''பிரின்ஸிபால் வரச்சொன்னார்'' என்றான்.

ராஜேஷ் அந்த பக்கமாய் போய் திரவேண்டியிருந்தது: அங்கே ரமணனோடு, தந்தைகூட உட்கார்ந்திருந்தார். பிரின்ஸிபால் ராஜேஷிடம் ''ரமணனை ஏன் அடித்தாய்?'' என்று கேட்டார் கடுமையாய்.

ரமணன் மிதிலாவுக்கும் ராஜேஷுக்குமிடையே நடந்த சம்பாஷணையைக் கிளிப்பிள்ளையைப்போல ஒப்பித்தான்.

பிரின்ஸிபாலிடம் ராஜேஷ், இனி ஒரு போதும் சக மாணவனிடம் அதுபோல துடுக்குத்தனமாய் நடந்து கொள்ளமாட்டேன் என்று மன்னிப்பு எழுதித் தந்துவிட்டு வெளியே வந்தான்.

அவன் ஸ்டாஃப் ரூமிற்கு வந்து பார்த்தான். மிதிலா அப்பொழுதுதான் வீட்டிற்குப் போய் விட்டதாய் சொன்னான் ப்யூன.

31

இருட்டிவிட்டது! விளக்குகள் எரியத் தொடங்கின: மிதிலா மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து தாய்க்கு கடிதம் எழுதி முடித்துவிட்டு உறையின்மீது விலாசத்தை எழுதி, ஓட்டி பக்கத்தில் வைத்தாள். தான் சுகமாய் இருப்பதாகவும், புதுப்புடவையைக் கட்டிக்கொண்டேன் என்றும், பிறந்தநாளை நன்றாய் கொண்டாடினேன் என்றும் எழுதினாள்! இல்லாவிட்டால் தாய் வருத்தப்படுவாள்.

கடிதத்தை எழுதி முடித்த பிறகு மிதிலா நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்துகொண்டு யோசிக்கத் தொடங்கினாள். இன்று காலையில் பிரின்ஸிபால் கூப்பிட்டுக் கண்டித்ததிலிருந்தே அவள் மனம் கசப்பை விழுங்கினாற் போலாகி விட்டது. பிற்பகல் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்

டிருந்தபோது சாரதா சந்தித்து அவர்கள் வீட்டிற்கு இழுத்து சென்றுவிட்டாள்.

மாலையில் அவள் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் சாந்தியும் ஜெயந்தியும் வந்துவிட்டார்கள். அவர்கள் எதாவது சினிமாவுக்குப் போகலாம் என்றார்கள். ஆனால் மிதிலா ஒப்புக்கொள்ளவில்லை. சாந்தி ஜெயந்தியோடு சேர்ந்து இனி அதிகமாய் சினிமாவுக்கும் கடை கண்ணிகளுக்கும் போகக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள். இன்று மனம் சரியாயில்லை என்றும் அவர்கள் இருவரையும் வீட்டிற்குப் போய்விட சொல்லியும் உத்தரவிட்டுவிட்டாள். தான் நோட்ஸ் ப்ரிப்பேர் பண்ண வேண்டும் என்று சொன்னாள்.

சாந்தியும் ஜெயந்தியும் போய்விட்டார்கள். அல்லிராணி வரும் எப்பொழுதுமே மிதிலாவின் வார்த்தைகளை எதிர்த்து பேசமாட்டார்கள். மிதிலா வேலை இருப்பதாய் சொன்னதுமே போய்விட்டார்கள்.

மிதிலா கொஞ்ச நேரம் வீட்டில் அங்குமிங்கும் சுற்றி யலைந்தாள். கொல்லையில் போய் செம்பருத்தி செடிக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டு வந்தாள். ஜாதிமல்லிகைப் பூக்களைப் பறித்து தொடுத்தாள். ஆனாலும் பொழுது போகவில்லை. அப்பொழுதுதான் உட்கார்ந்து தாய்க்கு கடிதம் எழுதினாள். மிதிலா நிமிர்ந்து நேரத்தைப் பார்த்தாள். இன்னும் ஏழு மணிகூட ஆகவில்லை. வீடெல்லாம் நிசப்தமாய் இருந்தது. அந்த நிசப்தத்திலிருந்து தனிமையானது பூதமாய் தோன்றத் தொடங்கிற்று.

இன்றைக்கு அவள் பிறந்தநாள்!

விஜய் போனபிறகு இந்தப் பிறந்தநாள் கொண்டாடும் வழக்கத்தை அவளே உதறியெறிந்து விட்டாள். அவன் இருந்தபொழுதுதான் எவ்வளவு நன்றாயிருந்தது! அவன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அன்றைய தினம் விடியும்! சினிமாவுக்குக் கண்டிப்பாய் போவார்கள்.

இருவரும் அதிகமாய் பேசிக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அல்வாறு சேர்ந்து இருந்ததிலேயே ஏதோ நெருக்கம்! பண்டிகை வந்தால் வாசலில் மாவிலைத் தோரணங்களை இருவருமாய் சேர்ந்து கட்டுவார்கள். செடிகளுக்குப் பாத்தி கட்டி இருவருமாய் சேர்ந்து தண்ணீர் ஊற்றுவார்கள்.

மிதிலா எங்கே இருப்பாளோ அங்கேதான் அவனும் இருப்பான். பிறந்தநாளன்றைக்கு வீணையில் அவனுக்கு ஸ்பெஷலாய் பாட்டுப் பாடிக் காட்டவேண்டும் அவள்... இந்த விஷயம் நினைவிற்கு வந்ததுமே அவள் கண்களில் நீர் வழியத் தொடங்கிற்று.

விஜய் போன அந்த வருஷத்தில் வந்த அவள் பிறந்த நாளன்றைக்கு வீணையை அண்ணியின் தங்கைக்குத் தந்து விட்டாள்.

"ஐயோ! இதென்னது? அவ்வளவு விலை கொடுத்து வாங்கிக்கொண்ட வீணையாச்சே?" என்றாள் தாய்.

"இனிமேல் அது எனக்கு தேவையில்லைம்மா" என்றாள் மிதிலா.

மிதிலாவுக்கு இந்த நினைவு வந்ததுமே கண்களிலிருந்து பொலபொலவென்று நீர் வழியத் தொடங்கிற்று.

இதென்னது! அவள் தனக்குள் எவ்வளவு தைரியம் சொல்லிக் கொண்டாலும் இந்த தனிமை அவளை விட்டுப் போகமாட்டேன் என்கிறதே! இன்றைக்கு மனம் ஏன் இவ்வளவு தினமாய் இருக்கிறது?

மிதிலாவுக்கு திடீரென்று இந்த உளரைவிட்டே ஓடிப் போய் விடவேண்டும் போலிருந்தது. நிசப்தமாயிருந்த அந்த வீடு, அந்த தனிமை, இரண்டையும் அவளால் தாங்கிக்கொள்ள முடியாது போலிருந்தது. எங்கேபோக முடியும் அவளால்? இந்த தனிமை என்ற அரக்கன் வெளியே எங்கேயும் இல்லையே, அவள் மனதிற்குள்தானே

இருக்கிறான்! அங்கிருந்து அவனைப் பிடித்துத் தள்ளிவிட முடிந்தால், அவள் எங்கே இருந்தாலும் சுகமாய் இருக்க முடியும். அதுதான் அவளுக்கு முடியவில்லை. மிதிலாவுக்கு அழுகை வரத் தொடங்கிற்று. அல்வாறு அழுகையில் ஏதோ தடுதல் ஏற்பட்டது.

அதற்குள் கதவிற்கருகில் சத்தடி கேட்டது.

மிதிலா நிமிர்ந்து பார்த்தாள்.

எதிரே வாசலில் சூர்யகிரண் நின்றுகொண்டிருந்தான். தவன் உள்ளே வந்துகொண்டே— "சாரி, நான் ரொம்ப லேட்டாய் வந்துட்டேன். விஷ் யூ எ வெரி வெரி ஹாப்பி பர்த்டே!" என்றான்.

அவளை பார்த்ததுமே மிதிலா சட்டென்று எழுந்து நின்றாள். மிதிலாவின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அழுதாற்போல முகம் வெந்து வீங்கி யிருந்தது.

அல்வாறு தென்பட்ட மிதிலாவைப் பார்த்ததுமே அவன் சலனமில்லாமல் நின்று விட்டான்.

மிதிலா சட்டென்று புடவைத் தலைப்பை இழுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"சாரி, நான் வரக்கூடாத சமயத்தில் வந்து விட்டேனா?"— மெல்லிய குரலில் கேட்டான் அவன்.

"இல்லை, இல்லை, வாங்க" என்றாள்.

அவன் உள்ளே வந்தான்.

அவன் முகத்தில் அங்கே நுழைந்தபோது தென்பட்ட மலர்ச்சி மாயமாகி விட்டது. அவன் கண்கள் மிதிலாவையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தன. மிதிலா சோபாவை வரவழைத்துக்கொண்டே— "எனக்குத் தனியாய் இருந்தால் ரொம்ப பயங்கரமாய் தோன்றுகிறது. யாராவது வரமாட்டாங்களான்னு எதிர்பார்த்துட்டிருந்

தேன். நீங்கள் தெய்வமாய் வந்து சேர்ந்திங்க" என்றாள் மனமனலென்று.

அதைக் கேட்டதுமே சூர்யகிரணின் புருவங்கள் நெளித்தன.

"உட்காருங்கள்"— உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டாள்.

அதற்குள் சூர்யகிரணின் வேலைக்காரன் பட்டுத் துணி போர்த்திய நீண்ட சாமான் ஒன்றை எடுத்து வந்து உள்ளே வைத்துவிட்டுப் போனான்.

மிதிலா அதைப் பார்த்ததுமே நின்று விட்டாள்.

"இதென்னது?" என்றாள்.

"வீணை" என்றான் சூர்யகிரண்.

"வீணையா?"

"ஆமாம்... இது எங்கம்மாவுடையது," என்ற சொல்லிக் கொண்டே போய் அந்த பட்டுத் துணியைப் பிரித்து அதிலிருந்து வீணையை வெளியே எடுத்து, அதை மிக அபூர்வமான பொருளைப் போல பார்த்துக் கொண்டே— "இந்த உலகத்திலேயே எனக்குப் பிடித்த பொருள் இதுதான்! இன்று நான் ஊரில் இல்லை. சாயந்திரந்தான் வந்தேன். சாந்தி உங்கள் பிறந்ததால் என்ற சொன்னாள். உடனே வந்து உங்களை விஷ் பண்ணனும் போலிருந்தது. ஆனால் என்னிடம் எதுவும் இல்லை. வெறும் கையோடு எப்படி வருவது? ஒரு நிமிஷம் யோசித்தேன். என் அறையில் இந்த வீணை தென்பட்டது. இனிய குரலையுடைய உங்களுக்கு இதைக் காட்டிலும் சிறந்த பரிசு வேறில்லைன்னு தோன்றிற்று. உடனே இதை எடுத்துக் கொண்டு வந்துட்டேன். விஷ் யூ எ ஹெவி ஹெவி ஹாப்பி பர்த்டே! மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆப் தி டே!" என்று சொல்லிக்கொண்டே சூர்யகிரண் வீணையை எடுத்து வந்து மிதிலாவின் கையில் வைத்தான்.

மிதிலா அவனையே சிலையாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள். சூர்யகிரண் சொன்னான். "பாருங்கள் நீங்கள் அன்றைக்கு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தபோது இதை எடுத்து வாசித்த பொழுதே எனக்குத் தோன்றி விட்டது, இந்த வீணை உங்களிடம் இருக்க வேண்டிய சாமான் என்று! எங்க சாந்தி இருக்காளே, அவள் ஒரு சோம்பேறி. எங்கம்மாவின் தொந்தரவு தாங்காமல் போய் சங்கீதம் கற்றுக் கொண்டாளே தவிர சங்கீதத்தின் மேல அவ்வளவு ஆசை இல்லை. நல்ல குரல் இருக்கு. ஆனால் என்ன லாபம்? வீணை வாசிக்கவே சோம்பேறித்தனம்! இதை நான் சாந்திக்குக் கொடுக்காமல் உங்களுக்கு எப்படி தரேன்னு நீங்கள் ஆச்சரியப்படலாம். அம்மா எனக்குப் பரிசாய் விட்டுவிட்டுப் போயிருக்கும் இந்த வீணையை அவளுக்குத் தந்தால் கல்யாணமான பிறகு அவள் இதை எடுத்துக் கொண்டு போய் எந்த மூலையிலாவது எறிந்து விடுவாள் என்பது என் நம்பிக்கை. இன்றைக்கு உங்கள் பிறந்தநாள் என்று சாந்தி சொன்னதுமே உங்களுக்கு விலை மதிப்பு வாய்ந்த— வாழ்நாளெல்லாம் நினைவில் வைத்திருக்கும்படியான பொருள் எதையாவது தரணும்னு நினைத்தேன். இதைவிட சிறந்த பொருள் வேறில்லைன்னு தோன்றி விட்டது."— அவன் வீணையை மிதிலாவின் கையில் வைத்தான்.

மிதிலா வீணையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"மிதிலா! நீங்கள் இதில் ஏதாவது ஒரு பாட்டுப் பாடினால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்! உங்கள் பிறந்தநாளன்றைக்கு நீங்கள் எனக்குத் தரக்கூடிய இனிமையான பொருள் வேறில்லைன்னு நினைச்சுப்பேன். நீங்கள் கண்டிப்பாய் வாசிக்கணும்" என்றான்.

மிதிலா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் கண்கள் அவள் கண்களை ஒரு வினாடி சிறைப் படுத்தி விட்டன. அந்தச் சமயத்தில் அவன் கண்களில்

அவளுக்கு தென்பட்ட மகத்துவம் என்னவோ தெரியாது— மிதிலாவால் அவன் வார்த்தைகளைத் தட்ட முடியவில்லை.

சூர்யகிரண் அங்கிருந்த நாற்காலிகளை ஓரமாய் தள்ளிப் போட்டான். நாற்காலிகளுக்கு நடுவே போட்ட பாயில் மிதிலா வீணையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

சூர்யகிரண் செருப்புகளைக் கழற்றி விட்டு வந்து மிதிலாவுக்கெதிரே உட்கார்ந்து கொண்டான்.

மிதிலா வீணையை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் வேதனையும் சங்கோஜமும் நன்றாய் தென்பட்டன.

ஒரு காலத்தில் இதே போல பிறந்தநாளன்று அவள் வீணை வாசித்தால் விஜய் எதிரே உட்கார்ந்து கொள்வான்.

இதே போன்ற ஒரு பிறந்தநாளன்றைக்கு விஜய் தன் வாழ்க்கையில் இல்லை என்று, தனக்கு மிகப் பிடித்தமான வீணையை வேறு யாருக்கோ தந்து விட்டாள்! இன்றைக்கு சூர்யகிரண் கைகளால் திரும்பவும் தனக்கு மறுக்க முடியாத பரிசாய் வாழ்க்கைக்கு வந்து சேர்ந்து விட்டது. இதென்ன விசித்திரமோ! என்று தோன்றிற்று.

சூர்யகிரண் வீணைத் தந்திகளை மீட்டியபடியே தாழ்ந்த குரலில் சொன்னான்—

"மிதிலா! சங்கீதம் சிலரைத்தான் வசிக்கும். ஆனால் இதயகானம் எல்லா மனங்களையும் நெகிழ வைத்துவிடும். இந்த கானத்திற்கு எத்தனையோ ராகங்கள்! காதல், துவேஷம், அன்பு, வேதனை, இன்னும் மனித மனதிற்கு எத்தனை உணர்ச்சிகள் உண்டோ அத்தனை ராகங்கள்! இந்த இதயகானம் எல்லோருக்கும் புரியாது. மனம் என்று ஒன்று இருந்து அது நெகிழக் கூடிய பண்புடையவர்களுக்கு மட்டுமே புரியும்!"— அவன் தாழ்ந்த குரலில்

சொல்லிக் கொண்டிருந்த இந்த வார்த்தைகள் நிராசையால் தவித்துக் கொண்டிருந்த மிதிலாவின் மனதிற்கு ஆறுதல் அளிக்கத் தொடங்கின. தனிமை என்ற அரக்கன் கையில் கைதியாய் சிறைப்பட்டிருந்த மிதிலாவுக்கு சிறை யிலிருந்து விடுதலை பண்ணி விட்டாற் போலிருந்தது.

அரை மணி நேரத்திற்கு முன்னால் மிதிலாவின் மனதை இரும்புச் சங்கிலியால் கட்டி அதலபாதாளத்திற்கு இழுத்து சென்று கொண்டிருந்தாற் போலிருந்த பாரத்தை அவன் நெருக்கமும், அவன் குரலும் எங்கோ காரிருளில் புதைச் சேற்றிற்குள் புதைந்து போய்க் கொண்டிருந்த மனதைக் கைத்தாங்கலாய் மேலே பிடித்துத் தூக்கி, அந்த ஆபத்திலிருந்து மீட்டுக் கொண்டிருந்தாற் போலிருந்தது.

மிதிலாவின் மனது இலேசாயிற்று.

கை விரல்கள் வீணையின் தந்திகளை மிக அன்பாக வரை பரிவோடு விசாரிப்பது போல மீட்டத் தொடங்கின. "வைஷ்ணவ ஜனதோ" என்று மிதிலா வீணை வாசிக்கத் தொடங்கினாள்.

சூர்யகிரண் அற்புதமான நாதத்தை மீட்டிக் கொண்டிருந்த அந்த அழகிய விரல்களை அசந்து போய் பார்த்துக் கொண்டிருந்தான்.

மிதிலா வீணை வாசித்துக் கொண்டிருந்தாள்.

எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த சூர்யகிரணின் முகம் ஒரு வினாடி விஜய் முகமாய் தென்பட்டது ஆனால் அதற்குள் சூர்யகிரணாகத் தோற்றமளித்தான். இந்த மாறுபாடெல்லாம் அவள் மனதிற்குள் இருப்பவை! அவன் மனது பட்டுக் கொண்டிருந்த போராட்டம் அது!

விஜய் இனி இல்லை! இந்த வாழ்க்கை முழுவதையும் அவள் இனி தனிமையாய் தான் கழிக்க வேண்டும். இது எல்லையில்லாத சூனியம்! மிதிலாவுக்கு அழுகை வந்து

விட்டது. வாசித்துக் கொண்டிருந்தவள் திடீரென்று வீணையின் மீது சாய்ந்து அழத் தொடங்கினாள்.

சூர்யகிரண் ஒரு வினாடி நிசப்தமாய் இருந்தான்.

அதற்குப் பிறகு எழுந்து மிதிலாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ''மிதிலா, அழுகிறீங்களா? ஏன்?'' என்றான்.

மிதிலா பதில் பேசவில்லை. அழுகை இன்னும் இரு மடங்காயிற்று.

''பிறந்த நாளன்றைக்கு இப்படி அழுவது நன்றாயில்லை. ப்ளீஸ்''

அவன் பரிவோடு சொல்லச் சொல்ல மிதிலாவின் துக்கம் அதிகமாயிற்று.

அவன் ஒரு நிமிஷம் செய்வதறியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவனால் மிதிலாவின் அழுகையைக் காண சகிக்கவில்லை. அவன் மனதில் பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டிருந்தான் என்பது தாடை எலும்புகளின் இறுக்கத்திலிருந்தே புரிந்தது

அதற்குப் பிறகு உறுதியான முடிவிற்கு வந்தவனாய் வீணையின் மேல் கவிழ்ந்தபடி இருந்த மிதிலாவின் தலையைத் தூக்கி, மிதிலாவின் கையிலிருந்து வீணையை வாங்கி அதை ஒரு பக்கமாய் வைத்தான்.

''மிதிலா'' கூப்பிட்டான்.

''மிதிலா முழங்காலில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழத் தொடங்கினாள். அந்த அழுகையில் ஆதரவில்லாத தனமை இருந்தது.

சூர்யகிரண் அழுது கொண்டிருந்த மிதிலாவை கொஞ்ச நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவள் இரு தோள்களையும் தன் இரு கைகளாலும் பற்றி அணைத்துக் கொண்டான். அடுத்த நிமிஷம் எப்படி

நேர்ந்ததோ இருவருக்குமே தெரியாது— அவன் தான் மிதிலாவை மார்போடு அழுத்திக் கொண்டானோ அல்லது மிதிலாதான் அவன் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டாளோ தெரியாத வேகத்தில் துரிதமாய் நடந்தேறி விட்டது.

மிதிலா அவன் அணைப்பில் கட்டுண்டிருந்தாள்.

''மிதிலா... மிதிலா'' என்றான் தெளிவின்றி.

''விஜய்...'' மிதிலா எதோ சொல்லப் போனாள்.

''விஜய் இல்லை. சூர்யா... சூர்யகிரண்!'' அடுத்த நிமிஷம் அவன் கைகள் மிதிலாவை ஆவேசமாய் சுற்றிக் கொண்டுவிட்டன. ''மிதிலா! நீ தனிமையில் எப்படி குமுறி போய்க் கொண்டிருக்கிறாய் என்று புரிகிறது எனக்கு! நீ தனியள் அல்ல! வா! என்னிடம் வா! என் இதயத்திற்குள் உன்னைப் புதைத்துக் கொள்கிறேன். மிதிலா! உன்னால் விஜய்யை மறந்து போக முடியாது. விஜய்யை மறக்கக்கூடிய ஆள் உன் வாழ்க்கையில் வரவேண்டும். அது எனக்குத் தெரியும் எனக்கு அன்பைப் பகிர்ந்தளிக்கக்கூடிய நபர் வேண்டும். உனக்கோ அன்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நபர் வேண்டும். நாமிருவரும் ஒருத்தர்க்கொருத்தர் துணையாகி விட்டால் வாழ்க்கை மிக நன்றாய் இருக்கும். எனக்குச் சந்தர்ப்பம் கொடு மிதிலா! நீ தனியாய் இருக்க வேண்டாம். தனியள் என்ற பாவனையை இந்த நிமிஷத்தி லிருந்து மறந்து போய்விடு. எனக்கு நீ வேணும். நீ வேணும்!''— அவன் உதடுகள் மிதிலாவின் நெற்றியையும், கண்களையும், கன்னங்களையும் கழுத்தையும் ஒற்றிக் கொண்டேயிருக்க, மெல்லிய குரலில் இல்லாறு சொன் னான் அவன் அவன் சூடான மூச்சுக் காற்றால் மிதிலாவின் தனிமைத் துன்பம் கால்டி தூசியாகிக் கொண்டிருந்தது. அவன் உதடுகள் மிதிலாவின் உதடுகளைத் தாக்கின. அவன் பரிசமும், அணைப்பும்— ''நீ மட்டும் என்னிடம் வந்து விட்டாயானால் போதும், உன்னை விட்டு ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது என்னால்''— என்று சொல்வது

போலிருந்தது. மிதிலாவின் மனதையும் உடலையும் ஏதோ மயக்கம் ஆட்கொண்டது. மனம் மிதக்கத் தொடங்கிற்று. தன்னையே மறந்து போகத் தொடங்கினாள். இந்த உலகமே சூர்யகிரணின் அணைப்பிற்குள் கட்டுண்டு போய் விட்டாற் போல இருந்தது. அவன் மூச்சுக் காற்றின் வெப்பத்தால் அவள் கண்ணீர் ஆவியாகி கொண்டிருந்தாற் போல இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து, மெதுவாய், மிக மெதுவாய் அவளுக்கு உடம்பில் சொரணை வந்தது. சூர்யகிரணின் கையிலிருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொண்டாள். இருவரும் ஒருவரையொருவர் திலையாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நான்... நான்..." மிதிலா பயந்து போய் உளறினாள்.

சூர்யகிரண் சட்டென்று மிதிலாவின் உதட்டின் மீது ஆள்காட்டி விரலை வைத்துத் தடுத்து— "வேண்டாம். தயவு செய்து உன்னை அவமானப்படுத்திட்டதாய் மட்டும் சொல்லிடாதே" என்றான்.

"அவமானமா?" குழப்பத்துடன் பார்த்தாள்.

"ஆமாம். உனக்குப் பிடிக்காத காரியத்தை நான் பண்ணியிருந்தால் இந்த உலகத்தில் எப்படிப்பட்ட தண்டனையை விதித்தாலும் எனக்குப் போதாது என்றே நினைத்துப்பேன். அப்படித் தானே?"— அவன் மிதிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான்

மிதிலா அவன் கண்களைக் கூர்ந்து பார்த்தாள். பிறகு மெதுவாய்— "இல்லை" எனபது போல தலையாட்டினாள்— அவன் நிம்மதியாய் மூச்சை விட்டுக் கொண்டான். "எனக்கு... எனக்கு என்னவாயிற்றுன்னே தெரியலை எனக்கு" என்றாள் மிதிலா.

சூர்யகிரண் கைகளை நீட்டி மிதிலாவை இழுத்து அணைத்துக் கொண்டான். மிதிலாவின் தலையை

மார்போடு சேர்த்துக் கொண்டான். இம்முறை அவன் ஸ்பரிசத்தில் ஆவேசம் இல்லை. அந்த அணைப்பு அன்பிற்கு எடுத்துக்காட்டாய் இருந்தது.

"மிதிலா! இப்படி என்னோடு நெருக்கமாய் இருப்பது உனக்கு வருத்தத்தைத் தருகிறதா?"

"இல்லை"

"இப்படி என்னோடு இருப்பது பிடித்திருக்கிறதா?"

"பிடித்திருக்கிறது"

அவன் மிதிலாவின் முகத்தை இரு கைகளாலும் ஏந்திக் கொண்டே. அக்கண்களில் தேடுவதுபோல பார்த்தான். மிதிலாவின் உதடுகள் காய்ந்த சருகைப்போல நடுங்கிக் கொண்டிருந்தன. அக்கண்கள் அகலமாய் அழகிய குளத்தைப்போல இருந்தன.

"மிதிலா! நீ எனக்கு வேண்டும் என்று தோன்றிற்று. உன் மனத்தில் விஜய் என்பவன் இருப்பதாய் உன்னுடைய மூலமாய் தெரிந்ததும் மிகவும் பொறாமைப் பட்டேன். அதற்கப்புறம் அனைத்தும் தாங்கிக்கொண்டேன். உன் மேல் எனக்கு உண்மையான விருப்பம் இருந்தால் இதை நான் பொருட்படுத்தக்கூடாது என்று தோன்றிற்று. நீ ஒரு மன வேதனையில் ஆழ்ந்திருக்கிறாய். அந்த வேதனையிலிருந்து உன்னை மீட்டால்தான் உன்மீது எனக்கு உண்மையான அன்பு இருப்பதாய் அர்த்தம் என்றெண்ணிக் கொண்டேன். நீ விஜய் மரணத்தால் தனிமை என்ற பாலைவனத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறாய். நான் உன் வாழ்க்கையில் நீர் ஊற்றாய் இருக்கவேண்டும் என்று விரும்பினேன். பிற்பாடு எனக்கு விஜய் விஷயம் பொறாமையாய் தோன்றவில்லை. அவனை மறந்துபோகும்படி செய்யக்கூடிய நபர் எனக்கு வேண்டும்! அந்த விஷயம் எனக்கு தெரிந்தது. மிதிலா! உன்னிடம் அன்பு குறைவில்லாமல் இருக்கிறது. அதைப் பெறுவதைக் காட்டிலும் வேறு அதிர்ஷ்டம் இல்லை. உன்னை விஜய்யை மறந்துவிடு என்று சொல்ல

வில்லை நான். அவனை மறக்கக்கூடிய சக்தி என்னிடம் இருக்க வேண்டும் என்றெண்ணுகிறேன்! மிதிலா! என் வாழ்க்கைக்குள் வா! உன் கடந்த காலத்தோடு உனக்கு சம்பந்தம் இல்லை. நான் உன்னை இவ்வளவு தூரம் ஏன் விரும்புகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னைப் புரிந்துகொள்—'' அவன் முகவாய் மிதிலாவின் வகிட்டின்மீது அமைதியின்றி அப்படியும் இப்படியுமாய் உராய்ந்து கொண்டிருந்தது. அவன் குரல் எந்த உலகத்தி லிருந்தோ வந்தாற்போலிருந்தது! அவனுக்கு அந்தச் சமயம் மிக நிம்மதியாய் இருந்தது! மயக்கத்தில் ஆழ்ந்தவனைப் போல கண்களை மூடிக்கொண்டான்.

அந்த சமயத்தில் ராஜேஷ் அங்கே வந்தான். அவன் விடுவிடென்று வந்து கொண்டிருந்தான். அவன் கார் பாதியில் கெட்டுப்போய்விட்டது. அதனால் நடந்து வந்து விட்டான். அவன் கையில் பெரிய பூங்கொத்து இருந்தது!

மிக விருப்பத்தோடு, பரபரப்பாய் அந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்த அவன், அங்கே அறையில் தென்பட்ட காட்சியைப் பார்த்து விக்கித்துப்போய் நின்றுவிட்டான்.

அறையில் மிதிலா சூர்யகிரணின் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டிருந்தாள். அவன் மிதிலாவின் தலையைக் கன்னங்களால் உரசிக்கொண்டே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவ்விருவரும் இவ்வுலகத்தி லேயே இல்லை என்று தோன்றிற்று.

ராஜேஷ் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாயிற்று. அவன் விருட்டென்று திரும்பி அங்கிருந்து ஒரே பாய்ச்சலாய் வெளியே ஓடிவிட்டான்.

32

இரவு வெகு நேரமாகிவிட்டது! ஊரெல்லாம் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டதற்கு அடையாளமாய் சத்தமி ல்லாமல் இருந்தது. சுவர்க் கோழிகளின் ரோதனை கேட்டுக் கொண்டிருந்தது. ஊர்க் கோடியிலிருந்த பாழடைந்த சிவன் கோவில் மண்டபத்தில் ராஜேஷ் முழங் கால்களை சுற்றிக் கைகளைக் கட்டிக்கொண்டு, முகவாயை அவற்றில் புதைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மிதிலாவின் வீட்டைவிட்டு ஓடிவந்தவன் நேராய் அங்கேதான் வந்தான். அவன் மனமெல்லாம் ஆலகால விஷத்தை உண்டுவிட்டாற்போல கசப்பாய் இருந்தது. வெறுப்பாய் இருந்தது. அவனுக்கு வீட்டிற்குப் போக பிடிக்கவில்லை. அவன் கால்கள் அவனையே அறியாமல் இவ்விடத்திற்கு இழுத்துக்கொண்டு வந்து விட்டன. அவ னுக்கு இந்தப் பாழடைந்த சிவன்கோவில் பரிச்சயமான இடந்தான். பட்டம் விடும் சமயங்களில் அவன் நண்பர் களோடு சேர்ந்து பகலெல்லாம் இங்கேயே வந்து நின்று பட்டங்களைப் பறக்க விடுவான். அவன் மிதிலாவின் வீட்டிலிருந்து யாரோ துரத்திக்கொண்டு வந்தாற்போல ஓடிவந்தான். ஆயாசத்துடன் மூச்சிரைக்க அங்கிருந்த மண்டபப்படியின் மீது சரிந்தான். கையிலிருந்த பூங் கொத்தைப் பிய்த்துக் கீழே எறிந்தான்.

அவன் கண்களிலிருந்து அந்த காட்சி அகல மறுத்தது. சூர்யகிரணும் மிதிலாவும் மிக நெருக்கமாய் இருந்த அக்காட்சி சலனமில்லாமல் அப்படியே நின்றுவிட்டது. அவன் உள்ளங்கைகள் மேலும் பலமாய் முறுக்கேறிக்

கொண்டன. ஆவேசத்தால் அவன் மூக்கு அதிர்ந்தது. அவனுக்கு ஏனோ மிக வெறுப்பாய் இருந்தது.

மிதிலா மேடம்— சூர்யகிரண்!

அவனால் அதை ஊகித்துப் பார்த்தாலே தாங்க முடியாமல் இருந்தது. மிதிலாவோடு தினமும் கொஞ்ச நேரமாவது கழிக்கவேண்டும் என்ற தவிப்பில்தான் அவன் மிதிலாவை டியூஷனுக்கு வரச்சொல்லி கேட்கும்படியாய் தந்தையை அனுப்பினான். அதுவும் தோல்வியடைந்து விட்டது. மிதிலா டியூஷன் சொல்லித்தர மறுத்ததாக தந்தை வந்து சொன்னதைக் கேட்டு அவனால் தன் செவிகளையே தான் நம்பமுடியவில்லை. இது போதாதென்று மிதிலா இன்று வகுப்பில் நடந்துகொண்ட விதம் அவனை லெகுவாய் பாதித்துவிட்டது. மாலையில் ரமா மூலமாய் மிதிலாவின் பிறந்தநாள் என்று தெரிந்ததும் அவளுக்காக ஸ்பெஷலாய் பெரிய பூங்கொத்தை வாங்கிக் கொண்டு விஷ் பண்ணுவதற்காகப் போனான். ராஜேஷ் வேண்டுமென்றே லெகு நேரங்கழித்து தாமதமாய் போனான். அல்வாறு போனால் மேடம் கண்டிப்பாய் இருப்பாள். வந்தவர்கள் எல்லோரும் போய் விட்டிருப் பார்கள் என்ற உத்தேசத்தில்! ஆனால் போய் பார்த்த பொழுது அங்கு தென்பட்ட காட்சி அவன் மனத்தைப் பெரிய நெருப்புக் கோளமாய் மாற்றிவிட்டது. அந்த சமயத்தில் தான் அருமையாய் பாதுகாத்து வந்த பொருளை யாரோ களவாடிவிட்டாற்போல தோன்றிற்று. சூர்யகிரணின் கழுத்தைப் பிடித்துத் திருகிக் கொன்று போட்டுவிட வேண்டும் போலிருந்தது. தன் கழுத்தை இருகைகளாலும் நெறித்துக்கொண்டு தான் செத்துப் போய்விட்டால் தேவலை. இந்த துன்பமாவது போகும் என்று தோன்றிற்று.

அவன் மிதிலா மேடத்தின்பால் வைத்திருந்த எண்ண மெல்லாம் தலைகீழாகிவிட்டன. அவளை ஒரு தெய்வமாய் பாவித்து அவளை மதித்துப் போற்றி அவளுக்குப்

பிடித்ததையே செய்து வந்தான். நேசிதர்களைத் துறந்தான். அவளுக்காகவே வந்தான்! தினமும் காலேஜுக்குப் போகிறான். வீட்டிற்குத் திரும்பி திறான் தன் வாழ்க்கையே அவளுக்கு அர்ப்பணம் பண்ணி விட்டான். அவன் இவ்வளவு பண்ணியும் அவளுக்குத் தெரியவில்லையே!

அவள் ஒரு மனுஷிதானா? மனுஷியாய் இருந்தால் அல்வாறு சூர்யகிரணுக்கு நெருக்கமாய் போவாளா? ராஜேஷ் பற்களை நறநறத்தான்.

அந்த சூர்யகிரணை கொன்று போட்டுவிட வேண்டும். ஊஹூம்! இல்லை! தன்னையே தான் கொன்று கொள்ள வேண்டும்.

இல்லை— இல்லை. அவனைக் கொன்றுவிட்டு தானும் செத்துவிட வேண்டும். ராஜேஷுக்கு அழுகை வந்து விட்டது. அவனுக்கு தீராத அநியாயம் நிகழ்ந்து விட்டதாய் தோன்றிற்று.

ராஜேஷ் அங்கே எவ்வளவு நேரந்தான் உட்கார்ந் திருந்தானோ தெரியாது. அவனுக்கு வீட்டிற்குப் போகக் கூட பிடிக்கவில்லை. அந்தச் சமயத்தில் அவனுக்கு தந்தையின் மீதுகூட கோபம் வந்தது. மிதிலா மேடம் டியூஷன் சொல்லித் தரமுடியாது என்று சொன்னதுமே சரி என்று பதில் பேசாமல் வந்துவிட்டார்— 'உங்கள் மகன் நன்றாகவே படிக்கிறான்'— என்று சொன்னானாம் அவள். இவர் மகிழ்ந்து போய்விட்டார். அவனுக்கு வேண்டியதை அவரால் தரமுடியவில்லை. இனி அவர் என்ன தந்தை? ராஜேஷுக்கு மேடம் தன்னை ஏன் தொலைவில் ஒதுக்கி வைத்துவிட்டாள் என்று புரிந்துவிட்டது. இத்தனைக்கும் காரணம் சூரியகிரண்! அவன் மோகத்தில் நன்றாய் விழுத்துவிட்டாள். இல்லாவிட்டால் தன்னிடம் எவ்வளவு நன்றாய் பேசியிருப்பாள்! இப்பொழுது எப்படி உதறி விட்டாள்! டியூஷன் சொல்லித்தர முடியாது என்று சொல்லிவிட்டாள்.

காலேஜில் பேசினால்கூட எரிந்து விழுகிறான்! அவன் அவளுக்கு யாரோவாகி விட்டான்! ராஜேஷின் இதயம் பொறாமையால் வெந்து போயிற்று. பிரிவால் உதாசீனம் அவன் மனதை ரம்பத்தால் பிளந்து கொண்டிருந்தது. அந்த வருத்தத்தை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

உடம்பிலிருந்த நரம்பெல்லாம் தெறித்து ரத்தம் வெளியே வந்துவிடும்போல ஆவேசம் ஏற்பட்டது.

அவனுக்கு அன்றிரவே அந்த ஊர் முழுவதையும் எரித்து சாம்பலாக்கிவிடவேண்டும் போலிருந்தது. இந்த ஊரில் பெரிய பூகம்பம் வந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று. ஏதாவது பிரளயம் வந்து எல்லோரும் 'ஹா, ஹா' என்று அல்லோகலம் பண்ணினால்தான் அவனுக்கு நிம்மதி ஏற்படும் போலிருந்தது.

இந்த உலகத்திலிருக்கும் அத்தனைப் பேரும் அவனைப் போல நரக வேதனையை அனுபவிக்க வேண்டும் என்று தோன்றிற்று.

ராஜேஷ் எழுந்திருந்தான். மெதுவாய் கால்கள் தரை நடக்கத் தொடங்கினான். அவன் பாதங்கள் எங்கே போகிறோம் என்று தெரியாத இடத்திற்கு அவனை இட்டு செல்லத் தொடங்கின.

அவன் பைத்தியம் பிடித்தவனைப் போல அந்த நள்ளிரவு வேளையில் அந்த ஊர் முழுவதையும் சுற்றித் திரிந்தான். நடந்து நடந்து இனி சக்தியில்லாதவனாய் தள்ளாடத் தொடங்கினான்.

அவன் நேராய் வாசுவின் அறைக்கருகில் வந்து கதவைத் தட்டினான். கதவை தடதடவென்று தட்டிய பிறகுதான் வாசு எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

"யாரு?" கண்களைக் கசக்கிக்கொண்டே—அலுத்துக் கொண்டே வந்த வாசு, வாசல் சுவரில் சாய்ந்தபடி களர்ந்துபோய் நின்றபடி எங்கோ பார்த்துக்கொண்

டிருந்த ராஜேஷைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்து விட்டான். ராஜேஷைப் பார்த்ததுமே வாசுவின் தூக்கம் பறந்துபோய் விட்டது.

"ராஜேஷ் நீயா?" என்றால் ஆச்சரியமடைந்தவனாய்.

"நான்தான்! வாசு! எனக்குத் தூக்கம் வேணும்டா" என்றான்.

"என்னது? ஏன் இப்படி இருக்கிறாய்?" வாசு வந்து ராஜேஷின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"உடம்பு சரியாயில்லையா?"— பரபரப்புடன் கேட்டான்.

ராஜேஷ் அந்தக் கையை உதறித் தள்ளினான்.

"நன்றாய்தான் இருக்கு. நான் கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போறேன்."

"எல்லாம் போகலாம்! உள்ளே வா!"— வாசு ராஜேஷின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்.

ராஜேஷ் உள்ளே வந்து அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான். மேஜைமேல் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு தலையைக் குனிந்து கொண்டான். அவன் போக்கைப் பார்த்ததால், நடக்கக்கூடாத ஏதோ நடந்து அவன் மிகவும் நைந்துபோய் விட்டாற்போலிருந்தது.

"தந்தையோடு சண்டை போட்டாயா?"— வாசு தயங்கி தயங்கி கேட்டான்.

"இல்லை"

"பின்னே ஏன் இப்படி இருக்கிறாய்?"

"அது உனக்கு தேவையில்லை."— கத்தினான்.

"சரி சரி"— வாசு போய் அலமாரியைத் திறந்து பாட்டிலில் இருந்த திரவத்தை கிளாசில் ஊற்றி ராஜேஷுக்குத் தந்தான். இரண்டு மூன்று கிளாஸுகள் வாசு தந்ததை ராஜேஷ் காலி பண்ணினான். அவனுக்குத் தூக்கம் வந்துவிட்டது.

33

சூர்யகிரண் டிக்கெட்டை, பிளேடு வாங்கிக்கொண்டு கடையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். கடைக்கு வெளியே ராஜேஷ் எதிர்ப்பட்டான்.

சூர்யகிரண் போய்க் கொண்டிருந்தபோது பின்னாலிருந்து தோளில் கை பட்டது. நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கெதிரே ராஜேஷ் நின்றுகொண்டிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. கிராப் கலைந்திருந்தது.

"நான் யாருன்னு தெரியுமா?" என்றான்.

சூர்யகிரண் தன் தோளிலிருந்த வைரமோதிரம் அணிந்த அவன் கையையும், அவன் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

"உன்னைத்தான் கேட்டேன்" ராஜேஷ் குரலில் அவமரியாதையும் ஏளனமும் தென்பட்டன.

"தெரியும். கணபதியின் மகன்"— சூர்யகிரண் ராஜேஷின் கையை நுனிவிரலால் தள்ளிவிட்டுச் சொன்னான்.

"அதுமட்டுமில்லை. மிதிலா மேடத்தின் ஸ்டுடெண்ட் கூட"— கத்தினாற்போல சொன்னான் ராஜேஷ்.

அதைக் கேட்டதும் சூர்யகிரணின் புருவங்கள் லேசாய் நெளிந்தன. அவன் தெரியாத புது விஷயம் எதையோ கேட்பதுபோல 'அப்படியா?' என்பதுபோல பார்த்தான்.

"ஆமாம். மிதிலா மேடத்தைக் கண்டால் எனக்கு ரொம்பவும் மதிப்பு! அவங்க வீட்டுக்கு நீ போனாயானால்-

அவளை நீ தொட்டாயானால்..." ராஜேஷ் வாயிலிருந்து வார்த்தைகள் முடிவடையக்கூடவில்லை— அவன் கன்னம் தள்ளென்றது.

சூர்யகிரணின் கை பலம் வாய்ந்தது. அந்த பலத்தைத் தாங்கமுடியாதவனாய் ராஜேஷ் துள்ளி அப்பால் போய் விழுந்தான்.

தொலைவில் பெட்டிக்கடைக்காரன் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த வாசு இதைப் பார்த்தான். அதைப் பார்த்ததுமே, கடைக்காரன் தந்த சில்லறையை வாங்கிக் கொள்ளவும் மறந்துப்போய் இந்த பக்கமாய் ஓடி வந்தான். அவனைத் தொடர்ந்து ரங்கனும் சீனுவும்கூட வந்தார்கள். வாசு வந்து விழுந்துக் கிடந்த ராஜேஷின் தோளைப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்தான்.

ராஜேஷ் கன்னத்தில் பலமாய் விழுந்த அடியால் அவனுக்குத் தலைச் சுற்றினாற் போலிருந்தது. அவன் தலைசுற்றல் நின்று, சாதாரண நிலைக்கு வந்தபோது வாசு தோளைப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டான்.

சூரியகிரணின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தன.

"இன்னொரு முறை உன் வாயிலிருந்து இந்த மாதிரி வார்த்தை ஏதாவது வந்ததென்றால்..." என்றான் சுண்டாட்டி விரலைக் காட்டி பயமுறுத்தி.

ராஜேஷ் எழுந்து அவனுக்கெதிரே வந்து நின்றான்.

வாசு, ரங்கன், சீனு மூவரும் அவனுக்கு பக்கபலமாய் பக்கத்தில் வந்து நின்றார்கள்.

அந்த நால்வரையும் பார்த்து சூர்யகிரண் கொஞ்சமும் பயந்துவிடவில்லை. "நாக்கை அடக்கிக்கொண்டு பேசு! ஜாக்கிரதை!" என்றான். அவன் கண்களில் தென்பட்ட கோபத் தீயின் மகத்துவத்தால்தானோ என்னவோ ராஜேஷ் வாயடைத்துப் போய் நின்றுவிட்டான். அதற்குள்

அங்கே நாலைந்துபேர்— ''என்ன சார், என்ன?'' என்று கூடி விட்டார்கள்.

''வேலை வெட்டி இல்லாதவங்க! ரோடில் போறவங்க வரவங்களை நிறுத்தி வாயில் வந்தபடி உளறிக் கொட்டுவதும், வேடிக்கைப் பார்ப்பதும்தான் வேலை'' என்றான் சூர்யகிரண்.

அவன் ஒருமுறை அந்நால்வரையும் ஏறஇறங்கப் பார்த்தான். அப்பார்வையில் இளப்பமும் கோபமும் நன்றாய் தெரிந்தன. அவன் திரும்பி அங்கிருந்து போய் விட்டான். அவன் மிக மிடுக்காய், ஒன்றுமே நடக்காத்து போல நடந்து போனான்.

அவன் அவ்வாறு மிடுக்காய் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்த வாசு லபோதிபோ என்று அடித்துக்கொண்டான். ''ராஜேஷ்! அவனை இப்படி விட்டுவிட்டாயேடா! வா! எல்லோருமாய் சேர்ந்து செம்மையாய் உதைத்துப் போடுவோம். காலை உடைத்துப் போட்டு கட்டிலோடு விழுந்து கிடக்கும்படியாய் பண்ணிடுவோம்'' என்றான்.

ராஜேஷ் வாசுவைத் தடுத்தான்.

அங்கே கூடியிருந்தவர்கள்— ''இந்தப் பசங்களே எப்பொழுதும் இதுபோலதான். வேலை வெட்டி கிடையாது'' என்று சிடுசிடுத்துவிட்டு அங்கிருந்து போய் விட்டார்கள்.

ராஜேஷ் தலை குனிந்தபடி போய் காரில் உட்கார்ந்து கொண்டான்.

வாசு சொன்னான்— ''ராஜேஷ்! உனக்கு தோன்ற இந்த அவமானத்தை பார்த்தால் என் வயிறு பற்றி எரிகிறது. அவனுக்கு பாடம் கற்பித்தாலேயொழிய எனக்குத் தூக்கம் வராது.''

''என்ன பண்ணலாம் என்கிறாய்?'' என்றான் ராஜேஷ்.

''நாலு கொடுப்போம்.''

''அவன் திருப்பி அடிப்பான். ரிபோர்ட் தந்து விடுவான். போலீஸ்— கேஸ் ரகளை இதெல்லாம் எனக்கு தலைவலி! ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நாய்ப நாகய்யன் தகராறில் சிக்கிக்கொண்டதை ஞாபகப்படுத்திக் கொள்'' என்றாள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் வாசுவும் ராஜேஷும் சேர்ந்து ஒருத்தனின் மாந்தோப்பில் புகுந்து காய்களைத் திருட்டுத்தனமாய் பறித்துக் கொண்டிருந்தபொழுது காவல்காரன் பிடித்துகொண்டு விட்டான். அவன் சத்திய தால் இவர்கள் அவனை அடித்துவிட்டார்கள். அவன் நேராய் போய் கேஸ் போட்டுவிட்டான். கணபதி போலீஸ் ஸ்டேஷனிலிருந்து விடுதலை பண்ணி அழைத்து வந்து ''வீட்டில் ஃபிரிட்ஜில் அத்தனை மாம்பழங்கள் இருக்கும் போது நீ எதுக்காகடா திருடினாய்?'' என்று கண்டி விட்டார். தந்தை சொன்னதும் உண்மைதான். விட்டில் மாங்காய்களுக்குக் குறைவிராது. ஆனால் வாசுவோடு சேர்ந்து அவ்வாறு சுவரேறி குதித்து திருடித் தின்றால் அது ஒரு த்ரில்!

கணபதி, மகனின் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கொண்டு அன்பொழுகச் சொன்னார்— ''பாருப்பா! வாசுவுக்குதான் தரித்திரம்! அவனுக்கு மாங்காய்கள் கிடைக்காது! திருடுவான். உனக்கு அந்த தலையெழுத்து இல்லை. உனக்கு வேணுங்கிறதைச் சாப்பிடேன்,'' என்று ஃபிரிஜிற்கருகில் அழைத்துச் சென்றார். தந்தை ஆசையாய் கத்திவால் தோலை நறுக்கி, துண்டுகள் போட்டு கண்ணாடித் தட்டில் வைத்துத் தந்து 'வேண்டியதைச் சாப்பிடு' என்று சொன்னபோது ராஜேஷுக்கு ஏனோ ஒரு துண்டுகூட சாப்பிடப் பிடிக்க வில்லை. வாசுவின் கையிலிருந்து பிடுங்கித் தின்ற அந்தக் காயிலிருந்த ருசி இவற்றில் இல்லை என்று தோன்றிற்று.

ராஜேஷுக்கு ஏனோ தெரியாது போலீசார் என்றாலே பயம். அவர்கள் செம்மையாய் உதைப்பார்கள் என்று சமையல்காரன் கோவிந்தன் சொல்லிக் கேட்டிருக்கிறான். ராஜேஷ், வாசு முதலியவர்களுடன் சேர்ந்து எவ்வளவு ரகளைப் பண்ணினாலும் அதற்கப்புறம் போலீஸ் கேஸ் வரை போகக்கூடிய துடுக்குத்தனமான காரியம் எதையும் இதுவரை செய்யவில்லை.

அதனால்தான் இப்பொழுது வாசு முதலியவர்கள் தூண்டிவிட்டாலும் 'உம்' என்று சொல்லவில்லை அவன். சூர்யகிரணை பயமுறுத்தி வைக்கவேண்டும் என்றெண்ணியிருந்தான் அவன். ஆனால் சூர்யகிரணே அவனை பயமுறுத்தி மிரட்டிவிட்டுப் போய்விட்டான்.

ஏனோ, ராஜேஷ் மிதிலா மேடத்தின் மோகத்திலிருந்து மீண்டு, திரும்பவும் தன் நண்பர்கள் கும்பலோடு வந்து சேர்ந்துவிட்டான். ராஜேஷின் வரவு வாசுவுக்கு மிக சந்தோஷத்தைத் தந்தது. ராஜேஷ் பக்கத்தில் இருந்தால் அவனுக்குப் பணக்கஷ்டம் என்பதே இருக்காது! பட்டினி கிடக்கவேண்டியதில்லை! இஸ்திரி போட்ட உடைகளுக்குப் பஞ்சமிராது. சினிமா, டிராமா என்று பொழுது உல்லாசமாய் கழிந்து கொண்டிருக்கும்!

ராஜேஷ் தம்மோடு பிரியாமல் இருக்கவேண்டுமென்றால் மிதிலா மேடத்தை இந்த ஊரிலிருந்து துரத்தியடித்துவிட வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டு விட்டான். அவனுக்குள் பாம்பாய் நெளிந்து கொண்டிருந்த இந்த யோசனைக்கு தேற்று அர்ஜுனன் அவனைக் கூப்பிட்டுப் பேசிய பேச்சுக்கள் மேலும் உரமிட்டன.

அர்ஜுனன் கூப்பிட்டனுப்பியபோது ஏனோ எதற்கோ என்று புரியாமல் உள்ளூர ஆச்சரியமடைந்தவனாய், பயந்தவனாய் மேலுக்கு மட்டும் எதையும் பொருட்படுத்தாதவனைப் போல காட்டிக்கொண்டே அவன் வீட்டிற்குப் போனான்.

அர்ஜுனன் அவனை உட்காரச் சொல்லி மரியாதை காட்டினான்.

மஞ்சுவைப்பற்றித் தன்னிடம் பிரசங்கம் பண்ணுவான் என்றெண்ணிக் கொண்டிருந்த வாசு அர்ஜுனன் மஞ்சுவைப் பற்றிய பேச்சையே எடுக்காமல் மதுமதியைப் பற்றிப் பேசியது மிக ஆச்சரியமாயிருந்தது. அவன் தாபியைத் தந்துகொண்டே சொன்னான்—

"பாரு ஒய் வாசு! என்னவிருந்தாலும் நாம்ப ஒரே ஊர்க்காரர்கள். வேறு ஊரிலிருந்து வந்தவங்க. அதுவும் பொம்பிள்ளைங்க, நம்மிடையே சண்டைப் போட்டுக் கொண்டும், வேடிக்கைப் பார்த்துக் கொண்டும் இருந்தால் நாம்ப கையில் வளையல்களைப் போட்டுக்கிட்டு நாணிக் கோணிக்கொண்டு வெறுமே உட்கார்ந்திருக்க முடியுமா?" என்றான்.

வாசுவுக்கு அவன் யாரைப்பற்றிச் சொல்கிறான் என்று புரியவில்லை.

அவனிடமிருந்து திட்டுகளை வாங்கிக் கட்டிக் கொள்ள வந்த வாசு அவன் செய்த மரியாதைகளைக் கண்டு மகிழ்ந்து போனான். அவனோடு எப்படி பேசுவது என்று தெரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்தான்.

அர்ஜுனன் மனதில் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிவிட்டான்— "அந்த மிதிலா இருக்கிறாளே, அவள் மிகவும் ஆதுப் பெண்ணைப்போல அப்பாவியாய் தென்படுறோனே தவிர, காலை வாரிவிடக்கூடிய சாமர்த்தியசாலி! அவளுக்கு இங்கே உத்யோகம் கிடைக்கும்படி பண்ணியவன் நான்தான்! ஆனால் அவள் எனக்கே உலை வைக்கிறாள். பிரின்ஸிபாலிடம் என் மீதே புகார் சொல்கிறான். இதை நாக்கிக்க ரொம்ப கஷ்டமாயிருக்கு" என்றான்.

"என்ன சொன்னாள் சர்?"— வாசு ஆர்வத்தோடு கேட்டான்.

''ஆதெல்லாம் உனக்கெதுக்குப்பா? நீ சின்னப் பையன்! அது சரி, மிதிலாவுக்கு இவ்வளவு தைரியம் வாக் காரணம் யார் தெரியுமா?''

''யார் சார்?''

''அந்த சூர்யகிரண்! அவனைத் தெரியுமா?''

''தெரியும். சாந்தியின் அண்ணன்.''

''அவன் ஒரு கழுதை! அவனுக்கும் இந்தப் பொண்ணுக்குமிடையே அந்த சாந்தியை தூதாய் வைச்சுக்கிட்டு காரியம் நடந்து வருது. அதனால்தான் அவள் அந்த சாந்திக்கும் அதன் வால் ஜெயந்திக்கும் மட்டுமே டியூஷன் சொல்லித் தருகிறாளே தவிர வேறு ஒருத்தருக்கும் சொல்லித் தரமாட்டாள். எங்க மஞ்சுவுக்கு சொல்லித் தரச் சொன்னபோது மாட்டேன்னு சொல்லிட்டாள். ராஜேஷுக்குச் சொல்லித் தரச் சொல்லி பிரின்சிபால் கேட்டுக்கிட்ட போது கூட முடியாதுன்னுட்டாள். அவளுக்கு எவ்வளவு திமிர் பார்த்துக்கொள்.''

வாசுவுக்குப் புரிந்தது.

''அவள் திமிரை அடக்கணும்! நீ எப்படிப் பண்ணுவாயோ எனக்குத் தெரியாது. அவளை சந்தி சிரிக்க செய்து இந்த வீட்டைவிட்டுத் துரத்திவிட்டால் நான் உன்னை 'சபாஷ்' என்று மெச்சுவேன். வெறுமே மெச்சிட்டுப் போயிடுவேன்னு நினைக்காதே! உனக்குத் தகுந்த பரிசு தருவேன்.''

''அதென்ன?''— பரபரக்கக் கேட்டான்.

''எங்க மஞ்சுவைத் தந்து கல்யாணம் பண்ணி வைப்பேன்.''

வாசு நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்தாற்போல எழுந்து நின்றான்.

அர்ஜுனன் சிரித்தான்! பரிவு நிரம்பி வழியும் குரலில் ''வாசு! மொதல்ல உன்னை இங்கே கூப்பிட்டது எதற்கு

தெரியுமா? இதைச் சொல்றத்துக்குதான். மஞ்சுவுக்குக் கல்யாண சம்பந்தம் ஒன்று வந்தது. பையன் டாக்டராய் இருக்கிறான். எங்கள் குடும்பத்திற்கும் அவங்க குடும்பத்திற்கும் நல்ல பரிச்சியம் உண்டு. மஞ்சுவைப் பார்த்தாங்க. ஆனால் மஞ்சுவுக்கு அந்தச் சம்பந்தம் பிடிக்கவில்லை. பின்னே யாரைப் பிடித்திருக்கிறது என்று அவள் அண்ணி அவளை வற்புறுத்திக் கேட்டபோது உன் பெயரைச் சொன்னாள். எங்களுக்கென்ன வந்தது? கல்யாணம் பண்ணிக்கொண்டு குடித்தனம் பண்ணப் போகிறவள் அவள். அதனால்தான் தானும் மதுமதியும் உன்னைக் கூப்பிட்டுப் பேச முடிவெடுத்துக் கொண்டோம். மஞ்சு! இப்படி வா'' என்று கூப்பிட்டான். மஞ்சு வெளியே வந்தாள். அண்ணனின் நாற்காலிக்குப் பின்பக்கமாய் வந்து, தலை குனிந்தபடி தரையைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

''நான் உன்னோடு சரியாய் பேசுகிறேனா இல்லையான்னு கதவு மறைவில் நின்னு கேட்டுட்டிருந்தான்'' என்றான் அர்ஜுனன் அன்போடு தங்கையின் கையைத் தடவித் தந்துகொண்டே.

வாசு பொங்கிப்போய் விட்டான்.

''இந்த பரீட்சைகள் ஆனதுமே உங்கள் கல்யாணத்தைப் பண்ணி வைத்து விடுகிறேன். உனக்கொண்ணும் ஆட்சேபணை இல்லையே?'' என்றான் அர்ஜுனன்

''ஆட்சேபணையா? எனக்கா?'' வாசுவால் இன்னும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

''உனக்கு மஞ்சுவைக் கண்டால் இஷ்டந்தான். அந்தப் பையன் மனசு எனக்கு கியாரண்டியாய் தெரியும் என்று மதுமதி அடித்து சொன்னாள் என்றே வைத்துக்கொள். ஆனாலும் உன்னைக் கேட்கவேண்டாமா?''

வாசு ''மதுமதி எங்கே?'' என்பதுபோல சுற்றுமுற்றும் பார்த்தான். அவள் மீது அவனுக்கு அந்தச் சமயத்தில்

அனிவிடமுடியாத கௌரவம் ஏற்பட்டது. அவன் மனதை அவள் எவ்வளவு நன்றாய் மனித்துக் கொண்டிருக்கிறாள் என்றெண்ணிக் கொண்டான்.

''இந்த விஷயத்தை சொல்றத்துக்குதான் கூப்பிட்டே? உனக்கு மஞ்சுவைப் பிடிக்குமோனோ?'' என்றான் அர்ஜுனன்.

"பிடிக்கிறதா? என் உயிராய் பாவிக்கிறேன்'' என்றான் வாசு.

''தாங்க்யூ! அதுதான் எனக்கு முக்கியமாய் தெரிய வேண்டியது. வரதட்சணை அது இது என்கிறாயா? அதிலெல்லாம் உனக்கு எந்த குறையும் இருக்காது நீ மனசுத்தும் பார்த்திராத அளவுக்கு நாங்களே தருவோம்.''

''எனக்கு அதெல்லாம் வேண்டாம்.''

''உனக்கா தரப்போகிறோம் நீ வேண்டாம்னு சொல்றத்துக்கு? என் தங்கைக்கு நான் தந்து கொள்கிறேன்.''

வாசு அன்பொழுக மஞ்சுவைப் பார்த்தான்.

மஞ்சு தலைகுனிந்தபடி, உதட்டை அழுத்திக் கொண்டே தரையில் கால் கட்டை விரலால் கோலமிட்ட படி நின்று கொண்டிருந்தாள்.

மஞ்சு தன்னை விரும்புகிறாளா?

வாசுவால் இன்னும் நம்பமுடியவில்லை.

மஞ்சு மாறிவிட்டாள் என்றால், அவனுக்கு அவநம்பிக்கையாய்தான் இருந்தது ஆனாலும் சந்தோஷம் வந்து நிறைபடித்தது. அதில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்த அவனுக்கு வேறொன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை.

கொஞ்ச நேரங்கழித்து வாசு புறப்பட்டான். அவனை வாசல் வரை சென்று வழியனுப்பிய அர்ஜுனன், இன்னொரு முறை ஞாபகப்படுத்தினான்— ''அந்த மிதிலா

விஷயந்தான் எனக்கு பெரிய தலைவலியாய் இருக்கு நெய்'' என்றான்.

''அந்த விஷயத்தை என்னிடம் விட்டுவிடுங்க சார். ஒரு மாதத்திற்குள் அவளை இந்த மனையிட்டு விரட்டி விடுகிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. போதுமா?'' என்றான் வாசு.

''தாங்க்யூ மை பாய்! தாங்க்யூ!'' என்றான் அர்ஜுனன் அவன் தோளில் தட்டிவிட்டு.

அர்ஜுனன் வாசுவை அனுப்பிவிட்டு திரும்பி உள்ளே வந்தபோது மஞ்சு கட்டிலில் விழுந்து அழுதுகொண்டிருந்தாள் மதுமதி பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

''அந்தக் குரங்கு அதையெல்லாம் நிஜப்படுத்திவிடும். நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்! பண்ணிக்க மாட்டேன். அதைவிட கிணற்றில் விழுந்து செத்துப் போறதே மேல்—'' என்றாள் தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு

''உன்னை யார் பண்ணிக்க சொன்னாங்க?'' என்றான் அர்ஜுனன்.

''நீதானே சொன்னாய்?'' என்றான் மஞ்சு.

''நான் சொன்னதால் அது ஆயிடுமா? வானுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் இருக்கும்.''

''அப்படியென்றால் அவனிடம் வீணாய் ஏன் சொல்லனும்?''

''உனக்காகத்தான்! உன் நலனுக்காகவே! மிதிலாவின் மேல் அப்படி ஏவிவிட்டு விட்டால் அவள் ஏதாவது ஒரு அசம்பாவிதமான காரியத்தைப் பண்ணி விடுவாள் அதை மறைத்து வைக்க முடியாது. வெளியே வந்து விடும். கும்பி எண்ணப் போய் விடுவான். ஜெயிலுக்குப் போன ஒருத்தனுக்கு எந்த அண்ணனாவது தன் தங்கையைத் தருவான், சொல்லு?''

மஞ்சு இவ்வார்த்தைகளை கவனமாய் கேட்டான். அழுகையை நிறுத்திவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"இது நிஜத்தானா அண்ணா?" என்றாள்.

"நடக்கப் போறது அதுதான். நீயே பார்க்கப் போறாயே"

அவ்விடத்திலேயே இருந்த மதுமதி எழுந்து போய்க் கொண்டே— "உபாயங்களைத் தீட்டுவதில் உங்கண்ணாவுக்குச் சளைத்தவங்க யாருமில்லை! போன ஜென்மத்தில் குள்ள நரியாய் இருந்திருப்பார்" என்று சொன்னாள்.

"நீ எப்பத்தான் என்னைப் பாராட்டியிருக்கிறாய், சொல்லு! அவ்வளவு சாமர்த்தியம் இல்லாமலிருந்திருந்தால் உன்னோடு இவ்வளவு நாளாய் எப்படி குடும்பத்தை ஈடுகட்டிக் கொண்டு வந்திருப்பேன்?" என்றான் அர்ஜுனன்.

வாசுவுக்கும் தனக்கும் திருமணம் ஆகப் போவதில்லை என்றும் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குதான் இந்த நாடகம் என்றும் தெரிந்த பிறகு மஞ்சுவின் மனம் இலேசாயிற்று.

34

சூர்யகிரண் உள்ளே வந்தான்.

மிதிலா அவனுக்கெதிரே வந்தாள். மிதிலாவைப் பார்த்ததுமே அவன்— "சாரி! நேற்றெல்லாம் வர முடியாமல் போயிடுத்து. ஒன்றும் நினைத்துக்கவில்லையே?" என்றான்.

"ஊஹூம்! சாயந்திரம் லெட்டர் எழுதி அனுப்பினீங்களோனோ? அதைப் படித்துட்டே நேரத்தைக் கழித்தேன்" என்றாள் முறுவலுடன்.

"அந்தக் கடிதமா? அதில் பத்து வரி கூட இல்லையே?" என்றான் அவன்.

"அதனால் என்ன? பத்தாயிரம் தடவை படித்தாலும் திரும்பத் திரும்ப படிக்கணும்னு தோணும். எங்கேயோ படித்த ஞாபகம்— மனங்கள் நெருங்கியிருந்தால் மனிதர்கள் எங்கேயோ தொலைவில் இருந்த போதிலும் இட்டே இருப்பது போலவே இருக்குமாம். அந்த உணர்ச்சியை இப்பொழுது நானே அனுபவிச்சிட்டிருக்கேன். உட்காருங்கள். காபி தரட்டுமா?" என்றாள்.

"உம்! உன் கையால் தந்து சாப்பிடணும்னுதான் மத்தியானத்திலிருந்து ஒன்றுமே குடிக்கவில்லை."

"நிஜமாகவா? இதோ கொண்டு வரேன்"— நடினாள். சூர்யகிரண் சோபாவில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். இந்த பத்து நாட்களில் மிதிலா நன்றாய் தேறி விட்டாள். கண்களில் வேதனை நிழல்கள் மறைந்து விட்டன. அக்கண்கள் மலிழ்ச்சியால் மின்னத் தொடங்கியதைப் பார்த்த பொழுது மிதிலா இன்னும் இன்னப் பெண்ணாய் தோன்றினாள். மிதிலா இவ்வாறு சந்தோஷமாய் இருந்தது அவனுக்கு ஆனந்தமாய் இருந்தது. மிதிலாவின் பிறந்தநாளன்றைக்கு இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டு நெருக்கமானதிலிருந்து இருவரும் தினமும் ஒரு மணி நேரமாவது சந்தித்து மழிக்கத் தொடங்கினார்கள். திருமணப் பேச்சு வந்தது. மிதிலா தன் வீட்டாருக்குக் கடிதம் எழுதுவதாய் சொன்னாள்.

சூர்யகிரண் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். மிதிலா காபியைக் கொண்டு வந்தாள்.

அவன் கோப்பையோடு சேர்த்து அவள் கையையும் பிடித்துக் கொண்டு, புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு, மிதிலாவை நாற்காலியின் காலில் உட்கார வைத்துக் கொண்டான்.

''அம்மாவுக்கும் அண்ணாவுக்கும் நம் விஷயமாய் கடிதம் போட்டாயா?''— கேட்டான்.

''ஊஹூம். எழுதவில்லை''

''எழுதலையா? முந்தாநாளே எழுதுவதாய் சொன்னாயே?''— கேட்டான்.

''இன்றைக்கு எழுதுகிறேன்''

காபியைக் குடித்துக் கொண்டிருந்த அவன் நிமிர்ந்து மிதிலாவின் கண்களைப் பார்த்தான்.

''ஏன் தாமதம் பண்ணுகிறாய்? நேராய் சொல்லி விடு''

''ஒன்றுமில்லை. வேண்டுமென்றே பண்ணியது இல்லை.''

ஒரு வினாடி அவள் கண்களில் எதையோ தேடுவது போல பார்த்தான்.

''கடிதம் எழுத ஏதாவது தடை இருக்கிறதா?''

''ஊஹூம்''— மறுத்துத் தலையசைத்தாள்.

அவன் கண்களில் குழப்பம் நீங்கி அமைதி ஏற்பட்டது.

காலியான காபி கோப்பையைப் பக்கத்தில் வைத்து விட்டு, மிதிலாவின் கையைப் பிடித்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான்.

''பெண்ணான நீ கல்யாண விஷயத்தைப் பற்றி என்ன எழுதுவாய்? நான் எழுதட்டுமா?''

''என்னவென்று எழுதுவீங்க?''

''உங்கண்ணாவுக்கு எழுதுகிறேன். உங்கள் தங்கையை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். அவள் சம்மதித்து விட்டாள் என்று''— அவள் சம்மதித்து

''அம்மா இந்த விஷயத்தைக் கேட்டால் சிரிப்பாங்க?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''ஏன்?''

''தான் தேர்ந்தெடுத்த சம்பந்தத்தைத் தவிர நானே தேர்ந்தெடுத்துக் கொண்ட சம்பந்தத்தைப் பண்ணிக் கொண்டால் சுகப்பட மாட்டேன் என்பது அவங்களோ வரனுக்குச் சொத்து எல்லாம் அவங்க பயம். மாமனார் மாமியார் இருக்காங்களா? நாத்திகள் எத்தனை பேர்? சொந்த வீடு இருக்கா? உத்யோகத்தில் பிரமோஷன் சீக்கிரமாய் கிடைக்குமா? என்று இவைகளைத்தான் மொதல்ல பார்ப்பாங்க. அதற்கப்புறந்தான் வரனைப் பிடித்திருப்பது எல்லாம்.''

— மிதிலா சொன்ன விதத்தைக் கேட்டு அவன் பக்கென்று சிரித்தான்.

''பெரியவங்க அப்படி யோசிப்பது சகஜந்தான். பெரியவங்க ஸ்டேட்டஸ்ஸுக்கு மொதல்ல முக்கியத்துவம் தந்தால் சின்னவங்க ஆளுக்குத் தருவாங்க. அதிர்ஷ்டசாலிகளுக்கு இந்த இரண்டுமே கிடைத்து விடும்.''

மிதிலா அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். ''எனக்கு ஸ்டேட்டஸ்ஸை விட ஆள்தான் முக்கியம்'' என்றாள்.

''அந்த விஷயம் எனக்கு நன்றாய் தெரியும்!''— அவன் கைகள் மிதிலாவின் தோள்களைச் சுற்றிக் கொண்டு அவளை மார்போடு அணைத்துக் கொண்டன.

இருவரும் ஒரு நிமிஷம் சகலத்தையும் மறந்து போனவர்களாய் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள்.

அவன் கைகளுக்கிடையே அவள்!

அவள் தலை அவன் மார்பின் மீது!

வெளியே எங்கும் நிசப்தம்! அந்த நிசப்தத்தில், அந்த நெருக்கத்தில் ஏதோ பரவசம்! இந்தப் படைப்பில் எந்தச் சம்பவத்தாலும், எந்தப் பேரும் புகழாலும் கூட கிடைக்காத விவரிக்க முடியாத ஆத்ம திருப்தி! அவனுக்காக அவன்! அவனுக்காக அவள்! இருவரும் ஒருவர்க்காக இன்னொருவர் பிறந்தாற் போன்ற அற்புதமான உணர்ச்சி! வெளியே மரக்கிளைகள் காற்றில் அசைந்து சப்தம் மிக இனிமையாய் கேட்டுக் கொண்டிருந்தது.

''மிதிலா!''— அவன் கூப்பிட்டான். அக்குரலில் இந்த படைப்பில் உள்ள அன்பையெல்லாம் குழைத்தாற் போன்ற உணர்ச்சி இருந்தது.

''உம்''— அவள் மயக்கத்துடன் பதிலளித்தாள்.

''என்ன யோசிக்கிறாய்?''

''இக்கைகளில் இவ்வளவு மகத்துவம் இருப்பது தெரியாமல் போயிடுத்தேன்னு—''

''அப்படின்னால்?''

''இக்கைகளுக்கிடையே இப்படியே இருந்தால் எவ்வளவு நிம்மதியாய் இருக்கிறது! இப்படிப்பட்ட நிம்மதியை நான் இதுவரை எப்பொழுதுமே உணர்ந்ததில்லை.''

அவன் தன்னையறியாமல் மிதிலாவின் தலையை மார்போடு இன்னும் பலமாய் அழுத்திக் கொண்டான்.

''அசடு'' என்றான்.

''நான்... நான் ஒருமுறை எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்டேன்.''

''என்னவென்று?''

''எனக்கென்று ஒரு சிறிய வீடு, நான் காதலித்து என் அன்பைப் பெற்ற கணவர்! எங்கள் அன்பிற்கு அடையாளமாய் இரண்டு குழந்தைகள்... என்று ஒரு கனவுக் கூட்டைக் கட்டிக் கொண்டிருந்தேன். ஆனால்...''

''ஆனால்?''

''ஆனால் விதி அரக்கன் தன் பயங்கரமான பாதங்களால் அதை மிதித்து விட்டான். அந்தக் கூடு சிதைந்து விட்டது. என் வாழ்க்கை பாலைவனமாகி விட்டது''— சொல்லிக் கொண்டிருந்த மிதிலாவின் குரல் நடுங்கிற்று.

''மிதிலா! இதென்ன பைத்தியக்காரத்தனம்?'' அவன் அன்பாய் சொன்னான்.

''அப்பொழுது ஒரு மகா உத்தமமான ஆள் என் வாழ்க்கையில் நுழைந்தார். அவர் பாலைவனமாயிருந்த என் வாழ்க்கையைச் சோலைவனமாக்கி விட்டார். என் தனவுக் கூட்டை எடுத்து, நான் கட்டியதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அழகாய் கட்டி, அந்தக் கூட்டிற்குள் என் கையைப் பிடித்து வரவேற்கிறார். அவருக்கு நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேனா? அவர் எனக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறாரா?''

''மிதிலா!''— அவன் மிதிலாவின் முகத்தைத் தன் இருகைகளாலும் ஏந்திக் கொண்டு, கண்களில் எதையோ தேடுவது போல பார்த்துக் கொண்டே— ''ஒன்று சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

''சொல்லுங்கள்.''

''நீ... நீ... என்றுமே விஜய்யுடையவள் அல்ல! என்னுடையவள்! என்னுடையவள்தான்!''— அவன் குரல் ஆவேசத்தை அடக்கிக் கொண்டிருந்தது.

''எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது'' என்றான் மிதிலா.

அவன், மிதிலா இப்படி அங்கீகரிப்பாள் என்று எதிர் பார்த்திருக்கவில்லை. கண்களில் ஆனந்தம் சமுத்திரமாய் பொங்கிற்று.

"நிஜமாய் சொல்கிறாயா?"

"நிஜமாய்தான்."

அவன் கைகள் மிதிலாவை இறுக்கமாய் தன்னோடு ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும் என்பது போன்ற தவிப்புடன் இழுத்துக் கிட்டே அணைத்துக் கொண்டன.

"நான் அதிர்ஷ்டக்காரன்" என்றான் அவன்.

மிதிலாவுக்குத் தோன்றிற்று உண்மைதான்! விஜய்யை அவள் விரும்பினாள்தான்! ஆனால் சூர்யகிரண் அவனினும் வேறுபட்டிருந்தான். சூர்யகிரணின் ஸ்பரிசமும் நெருக்கமும் மிதிலாவின் நவநாடிகளிலும் நெகிழ்ச்சியைத் தோற்றுவித்தாற் போல விஜய்யிடம் என்றுமே ஏற்பட்ட தில்லை. மிதிலாவுக்கு இப்பொழுதுதான் 'விருப்பம்' 'காதல்' இவ்விரண்டும் வெவ்வேறு வார்த்தைகள் என்றும், இவற்றின் அர்த்தங்களும், உணர்ச்சிகளும் வேறு பட்டவை என்றும் தெரியத் தொடங்கிற்று. விஜய் மீது அவனுக்கு விருப்பம் மட்டுமே. சூர்யகிரண் மீது காதல்! இது என்னென்னவோ விரும்பும்! வழங்கவும் கூடியது என்று தெரியத் தொடங்கிற்று.

35

ராஜேஷின் அறை.

ராஜேஷும், நண்பர்களும் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜேஷ், திடீரென்று பாட்டிலை தரையில் விசியெறிந்தான்.

"சட்! இதில் எனக்கு த்ரில் போயிடுத்து" என்றான்.

"அதனாலென்ன? புதுசாய் த்ரில்லிங்கிற்காக ஏதாவது முயற்சி பண்ணுவோம்" என்றான் சீனு.

"என்ன பண்ணினால் நன்றாயிருக்கும்?" என்றான் ரங்கன் யோசனையுடன்.

"நான் சொல்லட்டுமா? யாரையாவது கிட்னாப் பண்ணினால் ரொம்ப த்ரில்லிங்காய் இருக்கும். எக்ஸ்ட்ரா பணம்கூட வரும்" என்றான் வாசு. அவன் சொரூபம் ஏற்கனவே நீட்டிக் கொண்டிருக்கும் பற்களோடும், சுருக்கு உடலோடும் குழி விழுந்த கண்களோடும் பார்க்க பயங்கர மாய் இருக்கும். அவன் குடித்து விட்டானோ அலலது ரக்தமே புகுந்துகொண்டு விட்டானோ என்று சொல்லும் படியாய் இருக்கும்.

சீனு வாசுவை அப்பால் பிடித்துத் தள்ளினான்.

"போடா! உனக்கு எப்பப் பார்த்தாலும் பணத்தைப் பற்றியேதான் யோசனை."

"ஆமாம். பணத்தான் முக்கியம்! பணம் இல்லா விட்டால் உலகம் எங்கே? பணத்தின் மகிமை உனக் கென்னடா தெரியும்?"

"பணம் இருந்தால் என்ன நடக்கும் என்கிறாய்?"

"என்னதான் நடக்காது? அழகான பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கலாம்."

"பண்ணிண்டால்?"— கேட்டான் சீனு.

"அழகான குழந்தைங்க பிறப்பாங்க."

"பிறந்தால்?"

"நன்றாயிருக்கும். சமூகத்தில் எல்லோரும் என்னை ரொம்பவும் மதிப்பாய் பார்ப்பாங்க. பணம் இருந்தால்

என்ன வேணும்னாலும் பண்ணலாம். கார் வாங்கிக்கலாம். பெரிய வீடு இருக்கும். வேலைக்காரங்களை வைத்துக்கலாம்.''

''இதெல்லாம் இருந்துட்டால் என்ன வந்துடப் போகுது?''

''என்ன வருமா? நானும் ஒரு மனிதனாய் வாழ்ந்துட்டிருக்கேன்னு பெருமைப்படலாம். சந்தோஷமாய் இருக்கும். நிம்மதியாய் இருக்கும்.''

சீனு சிரித்தான். அலை அலையாய் வெளி வந்தது அவன் சிரிப்பு.

''ஏன் சிரிக்கிறாய்?''— வாசு கத்தினான்.

''அடேய் பைத்தியக்காரா! நீ சொல்ற அந்தச் சந்தோஷமும், சுகமும் எனக்கு இதைக் குடித்தால்தான் வரும்! இன்னும் அந்தக் கஷ்டத்தையெல்லாம் ஏன் படணுங்கிறேன்?''

வாசு பதில் சொல்ல முடியாதவனாய் பார்த்தான்.

''இருங்கடா இடியட்ஸ்! மனுஷங்களைக் கெட்ட வழியில் இழுத்துட்டுப் போறதில் உங்களுக்கு நிகர் யாருமில்லைடா! மொதல்ல நாம்ப இப்பப் பேசுவது எதைப்பற்றி?'' என்றான் ரங்கன்.

''த்ரில்லைப்பற்றி''— சொன்னான் வாசு.

''அப்ப நாம்ப என்ன பண்ணினால் அந்த த்ரில் வரும்?''

''நாம்ப நம்மையே தற்கொலைப் பண்ணிக்கிட்டால் பலே ஜோராயிருக்கும்! எப்படிச் செத்துப் போவோம்னு தெரிஞ்சுக்கலாம்'' என்றான் வாசு.

''சட்! அதெல்லாம் ஒன்றும் நன்றாயிருக்காது! வீட்டில் இருக்கிறவங்க யாருக்குமே தெரியாமல் திருட்டுத்தனமாய் நகைங்களை எடுத்துக்கிட்டுப் போயிடணும்.

அதுவும் நள்ளிரவு நேரத்தில்! வீடு மிக நிசப்தமாய் இருக்கிற சமயத்தில்''— சீனு வருணிக்கத் தொடங்கினான்.

''வீட்டில் மின்சாரத்தை எடுத்துட்டு, பேட்டரி லைட்டுங்களைப் போட்டுட்டு, நிருடங்களைப் பத்திப் பேசி வீட்டிலிருக்கிறவங்களை நடுநடுங்க வைத்தால் அப்ப எங்கப்பா எப்படி இருப்பாரோ?''— சீனு அக்காட்சியைக் கண் முன்னாடி பார்ப்பது போலவே சொல்லத் தொடங்கினான்.

''ஏ! நகைங்க மீதும், பணத்தின் மீதும் எனக்கு எந்த மோகமும் இல்லை''— ராஜேஷ் கத்தினான்.

சீனு மென்று விழுங்கியபடி உட்கார்ந்திருந்தான்!

''யாரையாவது கொன்றுவிடலாம்! அது ரொம்ப நன்றாயிருக்கும்'' என்றான் ரங்கன். அவன் மனதில் அலனை எப்பொழுது பார்த்தாலும் 'உதவாக்கரை' என்று நிட்டும் மாமன் மிதந்தான்!

''கொன்றால் நமக்கு என்ன வரும்?''— ராஜேஷ் அலுத்துக் கொண்டான்.

''சரி போகட்டும், யாரையாவது ரேப் பண்ணினால்?'' என்றான் வாசு.

''ரேப் பண்ணினாலா?'' ராஜேஷ் கண் முன்னாடி மிதிலாவும் சூர்யகிரணும் நெருக்கமாய் இருந்த காட்சி தென்பட்டது. ஏனோ அந்தக் காட்சி சலனமில்லாத நிரைப்படக் காட்சியைப்போல அவன் கண் முன்னாடி அப்படியே நின்றுவிட்டது. அதை அவன் எவ்வளவு முயன்ற போதிலும் மனதிலிருந்து அகற்ற முடியவில்லை. அந்தக் காட்சி அவனை ஆவேசப்படுத்தியதோடுகூட வெறிப்பிடிக்கவும் செய்து கொண்டிருந்தது. அவனுக்கு சூர்யகிரணைக் கொன்று போட்டுவிட வேண்டும் போலிருந்தது. மிதிலாவை அவன் பிடியிலிருந்து மீட்கவேண்டும் போலிருந்தது.

''ரொம்ப நன்றாய் இருக்கும். ஆனால் நமக்கு யார் கிடைப்பாங்க?'' என்றான் சீனு.

''தாம்பதான் முயற்சி பண்ணணுமே தவிர, யார் வேண்டுமானாலும் கிடைப்பாங்க. இந்த நாடு முழுவதும் பெண்கள்தான்'' என்றான் ரங்கன்.

''அதோ பார், அந்த பாட்டியை ரேப் பண்ணலாமா?'' —வீதியில் போய்க்கொண்டிருந்த ஒரு கிழவியைக் காட்டிக் கேட்டான் சீனு.

''பாட்டியையா?'' எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்.

சீனு காகிதம் ஒன்றை உருட்டி விரியெறிந்தான். அது போய் பாட்டியின் தலையில் பட்டென்று விழுந்தது.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

சீனு அவனைப் பார்த்து விசிலடித்துவிட்டு, கண்ணை கொட்டினான்.

''அடேய் அயோக்கியா! நாசமாய்ப் போவாய்!'' அவள் தலையிலிருந்த முக்காட்டை சரிப்பண்ணிக்கொண்டே, திட்டித் தீர்த்துவிட்டு, கையை நெட்டி முறித்துவிட்டு விடுவிடென்று போய்விட்டாள்.

அதற்குள் ''ஐயா! பசிக்கிறது! தர்மம்'' என்று ஒரு சின்னப் பெண் பிச்சையெடுக்க வந்தாள்.

''இந்தப் பெண்ணை உள்ளே கூப்பிடலாமா?''— ஆர்வம் ததும்பக் கேட்டான் ரங்கன்.

''சட்! இது நம்ப பசியை எப்படித் தீர்க்கும்?'' என்றான் சீனு.

''வாயை மூடுங்கடா!'' மேஜைமேல் தூக்க மயக்கத்தில் ஆழ்ந்து போயிருந்த ராஜேஷ் கண்டிப்பதுபோல சொன்னான். ''பைத்தியக்கார வேலைங்களைப் பண்ணினீங்

களோ! நரகத்துக்குப் போவீங்க, ஜாக்கிரதை.'' குழறலாய் சொன்னான்.

''உனக்குத் தூக்கம் வருகிறது, தூங்கடா பையா!'' என்றான் ரங்கன், ராஜேஷைத் தட்டிக் கொடுத்துவிட்டு. ராஜேஷ் தூக்கத்தில் ஆழ்ந்து போனான்.

அதற்குள் ''விறகு வாங்கலையோ, விறகு'' என்று கூவிக்கொண்டே ஒரு லம்பாடிப் பெண் அந்தப் பக்கமாய் போய்க் கொண்டிருந்தாள். இளம்பெண். கண்ணாடி வேலைப்பாடுகள் பண்ணப்பட்ட காலணியும் தூக்கெட்டும் போட்டுக் கொண்டிருந்தாள். அந்த உடைக்குள்ளிருந்து அவள் உடம்பு பலமாய் ஆரோக்கியமாய் தென்பட்டுக் கொண்டிருந்தது.

''இந்தப் பொண்ணு எப்படிடா இருக்காள்?''— கேட்டான் வாசு.

''ரொம்ப நன்றாயிருக்கா...''

''உள்ளே கூப்பிடலாமா?''

''ஹும்! இந்தப் பொண்ணைக் கூப்பிட்டால் வருந்து சாப்பிட்டாற் போலதான் இருக்கும்'' என்றான் வாசு.

சீனு வாசலுக்குப் போய்— ''ஏய் பொண்ணு! அந்த விறகுக் கட்டைங்க என்ன விலை?'' என்றான்.

''பத்து ரூபாய்''

''மலிவுதான். எங்களுக்கு வேணும். உள்ளே எடுத்துட்டு வா'' என்றான்.

லம்பாடிப் பெண் உள்ளே வந்தாள். அவள் கை வளையல்களும் கால் சதங்கைகளும் ஜல்ஜல்லென்று சப்தம் செய்தன.

''இங்கே! இப்படி வா! பாத்தும் பக்கத்திலே போடு அந்தச் சுமையை'' என்றான் சீனு வழிகாட்டிக்கொண்டே.

அந்த அறைக்குள் அடியெடுத்து வைத்ததுமே அந்தப் பெண் அங்கே மேஜைமேல் ஒதுங்கிப் படுத்துக் கொண்

18589
3513168

டிருந்த ராஜேஷைப் பார்த்தாள். நிலே உடைந்து கிடந்த பாட்டில் துண்டுகளும், காலியான சோக்களும், செல்வாச் நிதறிக் கிடந்த கண்ணாடித் தம்ளர்களும் கண்ணில் பட்டன. ஒரே பார்வையில் இது குடிகாரர்களின் அறை என்று தெரிந்து கொண்டு விட்டாள்.

அந்தப் பெண் பாத்ரூமிற்குப் பக்கத்தில் விறகு கமையைப் போட்டுவிட்டுத் திரும்புவதற்குள் சீனு வாசல் கதவைத் தாழிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

அதற்குள் ரங்கன் அப்பெண்ணிடம் வந்தான்.

''ஏய் பொண்ணு! பணம் எவ்வளவு வேணும்?'' என்றான். அந்தப் பெண்ணிற்குக் கண்மூடி திறப்பதற்குள் தனக்கு வரவிருக்கும் ஆபத்து புரிந்துவிட்டது.

ஆனால் இம்மியும் பயப்படவில்லை.

ஆரோக்கியத்தோடு வழுவழுப்பாய் இருந்த அம் முகத்தில் கொஞ்சங்கூட கலக்கம் தென்படவில்லை. இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நின்றாள்.

''நீ எங்கள் விருந்தாளி!'' என்றான் சீனு அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டே.

''மரியாதையாய் கதவைத் திறக்கிறாயா இல்லையா?'' என்றாள்.

''உன்னை நாங்கள் சன்மானம் பண்ணி கௌரவிக்க விடு ''— சீனு அப்பெண்ணின் தோளில் கையை வைத்தான்.

''என்னடா உளறுகிறாய்?''— அந்தப் பெண் இழுத்து அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்தாள். அந்த அறையால் அவனுக்குத் தலை சுற்றிற்று. துள்ளி பின்னால் விழுந்தான். வாசு வந்து அப்பெண்ணின் மேல் விழப்போனான் ரங்கனும் வந்தான். ஆனால் அப்பெண் அல்லிருவரையும் மாறி மாறி அடித்தாள். கால்களால் உதைத்துத் தள்ளினாள். அவர்கள் பிடியிலிருந்து

தப்பித்துக்கொண்டு அங்கே கிடந்த விறகு கமையிலிருந்து ஒரு பருமனான விறகைக் கையிலெடுத்துக் கொண்டு ரங்கனின் இடுப்பில் ஓங்கி அடித்தாள்.

''ஐயோ! செத்தேன்டா!''— ரங்கன் நரையில் விழுந்தான். அந்தப் பெண் விறகைக் கத்தியைப்போலச் சுழற்றி அடித்துக் கொண்டிருக்கையில் அவளை நெருங்குவதற்கே அஞ்சினார்கள் எஞ்சியவர்களும்.

கோபம் தலைக்கேறிவிட்ட அந்தப் பெண் வாகவின் மேல் பாய்ந்து அவன் காலரைப் பிடித்துக் கொண்டான்.

அவள் கேசங்கள் கழன்று வந்துவிடுமளவிற்கு அழுத்த மாய் பற்றிச் சுவரோடு போய் மோதிக்கொள்ளும் படியாய் தள்ளினாள். விறகால் கால்களில் அடித்தாள். பிறகு போய் கதவைத் திறந்துகொண்டு திரும்பிப் பார்த்து— ''உங்களைப் போன்ற சனியன்களை நிறைய பார்த்திருக்கேண்டா, நாய்களே! தூ!'' என்று காறித் துப்பி விட்டுப் போய்விட்டாள்.

வாசு, ரங்கன், சீனு மயக்கம் விடுபட்டுப் போய் விடவே திருதிருவென்று பார்த்துக் கொண்டார்கள் ஒருவரையொருவர். அங்கே அல்லலை அமர்க்களம் நடந்த போதும் ராஜேஷுக்கு விழிப்பு வரவில்லை. அவன் இந்த உலகத்திலேயே இல்லாதவனைப் போல படுத்துக் கிடந்தான்.

36

மாலை ஆயிற்று.

இருட்டிவிட்டது. விளக்குகள் எரியத் தொடங்கின!

அப்பொழுதுதான் குளிர் காலம் தொடங்கியிருந்ததால் லேசாய் குளிரத் தொடங்கியிருந்தது.

கடை வீதிகளில் ஜனங்கள் பரபரப்புடன் வேலைகளை முடித்துக்கொண்டு வீடுகளுக்குப் போகும் அவசரத்தில் இருந்தார்கள். வாசு, ரங்கன், சீனு மூவரும் அவரது வெளியே இருந்த ராஜேஷின் காரில் உட்கார்ந்திருந்தார்கள். ராஜேஷ் குடித்துவிட்டு விழுந்து கிடந்தான். அவனைப் புரட்டி எழுப்ப யாராலும் முடியவில்லை. ராஜேஷ் அதிகமாய் குடிக்கமாட்டான். வாசு முதலியவர்கள் குடிப்பதில் கெட்டிக்காரர்கள். ராஜேஷ் இன்று லிற்றுமுட்டக் குடித்துவிட்டான். அதனால்தான் நினைவில்லாமல் படுத்துக் கிடந்தான்.

வாசு முதலியவர்களுக்கு அறைக்குள் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப் போய்விட்டது. நால்வரும் வெளியே வந்து அங்கிருந்த ராஜேஷின் காரில் உட்கார்ந்து கொண்டார்கள்.

ராஜேஷைக் கேட்காமல் அவன் காரையும், உடைகளையும், பணத்தையும் இஷ்டப்படி பயன்படுத்திக் கொள்வது அவர்கள் எல்லோருக்கும் பழக்கப்பட்டதுதான்.

மாலையில் லம்பாடிப் பெண்ணை அறைக்குள் இழுத்து ரேப் பண்ணப்போய் தோல்வியடைந்த அவர்களுக்கெல்லாம் மனதில் அவமானத்தைவிட இச்சை தீரவில்லையே என்ற ஏமாற்றந்தான் அதிகமாய் இருந்தது. அவர்களுக்குத் தன்மானம் ரோஷம் எதுவுமே இல்லை. அதோடுகூட அவர்கள் உடம்பில் ஆசை கொழுந்துவிட்டெரிந்து தகித்துக் கொண்டிருந்தது.

அந்த ஆசையை தீர்த்துக்கொள்ள முடியாவிட்டால் செத்துப்போய்விடலாம் என்று தோன்றிற்று யாராவது ரேப் பண்ணித் தீரவேண்டும் என்ற மோகம் அவர்களை வதைத்துக் கொண்டிருந்தது. ஏற்கனவே

குரங்கு புத்தி! அந்தக் குரங்கின் வாலில் நெருப்பும் பிடித்துக்கொண்டு விட்டால் பிறகு என்னவாகும்? ஏற்கனவே குடிகாரர்கள். அவர்கள் மனதை அவர்களால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அது எப்படி ஆட்டி வைத்ததோ அப்படியே இவர்களும் ஆடினார்கள்.

வாசு ஸ்டீரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்தான். ராஜேஷ் இல்லாதபோது அவன்தான் காரை ஓட்டுவான். தானே அந்தக் காரின் சொந்தக்காரன் என்பதுபோல மிடுக்காய், கர்வமாய் உட்கார்ந்திருப்பான்.

"இங்கே உட்கார்ந்து உட்கார்ந்து போரடிக்கிறது கொஞ்சம் இப்படியே போய் எங்கேயாவது சுற்றிவிட்டு வரலாம்" என்றான் சீனு.

வாசு காரைக் கிளப்பினான்.

"அடேய்! ராஜேஷுக்கு விழிப்பு வந்து பார்த்தால் அவனைத் தனியாய் விட்டுவிட்டுப் போயிட்டோம்னு நம்மை உதைப்பானோ என்னவோ?" என்றான் ரங்கன்.

"திமிர்தான்! அவனுக்கு நாளைக் காலையில் விழிப்பு வந்தாலே பெரிசு! ரொம்ப சீக்கிரமாய் விழித்துக் கொள்கிறவனைப்போல சொல்கிறாயே! இன்னும் ரெண்டு நாளைக்கு அவனால் எழுந்து நடக்க முடியாது அது மட்டும் நிச்சயம்," என்றான் வாசு டேப்பைப் போட்டுவிட்டு. ரங்கன் சும்மாயிருக்காமல் 'ஆஹ்ஹாஹ்ஹா' என்று சிரித்தான். ஆங்கில பாட்டு தொடங்கிறது.

"ஏண்டா சிரித்தாய்?"— கேட்டான் வாசு.

"சிரிக்கணும்போல இருக்குடா! சிரிப்பு நிற்கமாட்டேங்கிறது"—வாயைக் கையால் பொத்திக்கொண்டு திரும்பவும் சிரித்தான்.

"எனக்கென்னவோ இந்தக் கார் டாப்பின் மேல் ஏறி நின்று டான்ஸ் ஆடணும்போல இருக்கு"

''இதே விழுந்து செத்துப் போவாய். செத்ததும் செத்துப்போய் எங்களையும் பத்து நாள் குடிக்கவோ சுத்தவோ முடியாமல் பண்ணிப்பிடுவாய்.''

''டேய்! வாசு, ஜாக்கிரதைடா! காரை எதன் மேலாவது கொண்டு போய் மோதிவிடப் போகிறாய்'' கத்தினான் ரங்கன்.

''பயப்படாதீங்க'' என்றான் வாசு. உண்மையில் அவர்கள் நால்வருள் அதிகமாய் குடித்திருந்தது வாசுதான். ஆனாலும் அவன்தான் கொஞ்சம் தெளிவாய் இருந்தான். காரிலிருந்து மியூஸிக் பெரிதாய் கேட்டுக் கொண்டிருந்தது. நால்வரும் தொண்டைக் கிழியக் கத்திப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்குள் வீதியில் எதிரே சாந்தி வந்துகொண்டிருந்தாள்.

சாந்தியின் கையில் புத்தகங்கள் இருந்தன. மிதிலா விடம் டியூஷன் சொல்லிக் கொண்டு, வீட்டிற்குத் திரும்பிப் போய் கொண்டிருந்தாள்.

''அந்தப் பொண்ணு சாந்தியைப்போல இருக்காளே?'' என்றான் ரங்கன்.

''சாந்தியைப் போல என்ன? சாந்தியேதான்,'' என்றான் சீனு.

வாசு சாந்தியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களுக்கு சாந்தி இதற்கு முன்னால் என்றுமே இல்லாத அழகோடு தென்பட்டாள். ஆரோக்கியமாய், தளதளவென்று அப்பாவியாய் தென்பட்டாள்.

''டேய்! சாந்தியை நாம்ப காரில் ஏற்றிக்கலாமா?'' என்றான் வாசு.

''சாந்தியையா? ஓ!'' வாசுவின் வார்த்தையிலிருந்த உள்ளர்த்தம் புரிந்ததுமே எல்லோரும் ஆமோதிக்கத் தொடங்கினார்கள். எல்லோர் நரம்புகளிலும் உத்வேகம் திரவமாயிற்று. வாசு காரை சாந்திக்குப் பக்கத்தில் கொண்டு போய் நிறுத்தினான்.

சாந்தி திரும்பிப் பார்த்தாள்.

வாசு சிநேகபூர்வமாய் சிரித்தான்.

''இவ்வளவு இருட்டில் தனியாய் எங்கே போயிட்டிருக் கிறாய் சாந்தி?'' என்றான்.

''வீட்டிற்கு'' என்றாள் சாந்தி.

''வா, காரில் உட்கார்ந்து கொள். வீட்டில் கொண்டு போய் இறக்கி விட்டுவிடுகிறோம்.''

சாந்தி சங்கோஜப்பட்டாள்.

''பரவாயில்லை. எனக்கு பழக்கந்தான். தினமும் வேலைக்காரப் பையன் எனக்காக வருவான். இன்னிக்கு அவனுக்கு ஜுரம். அதான் வரலை.''

சீனு பெரிய மனிதனைப்போல சொன்னான்: ''அதுக் காகத்தான் சொல்றோம். நாங்கள் கொண்டுபோய் விட்டு விடுகிறோம். பெண்கள் தனியாய் போகிற காலமா இது? வா, காரில் ஏறிக்கொள்.''

சாந்தி சங்கோஜப்பட்டாள். அவர்கள் பலவந்தப்படுத் தினார்கள். அதற்குமேல் அவளால் தட்ட முடியவில்லை.

எல்லோருமே தெரிந்தவர்கள்தாம். சாந்திக்கு பயம் ஏற்படவில்லை. சந்தேகம்கூட தோன்றவில்லை.

சீனு பின்கதவைத் திறந்தான். ரங்கன் மிகவும் ஒழுங்கானவனைப் போல பார்த்துக்கொண்டே சாந்தியின் மேல் பட்டுவிடாமலிருக்க வேண்டி தொலைவிற்கு ஒதுங்கிக் கொண்டு இடம் விட்டான்.

சாந்தி காரில் ஏறிக்கொண்டாள்.

கார் புறப்பட்டது.

அவர்கள் சிரித்தார்கள். சாந்தியும் சிரித்தான்.

திடீரென்று ரங்கன் சாந்தியின்மேல் பாய்ந்து வாயைப் பொத்தி சாந்தியின் தலையை மடியில் இழுத்துக் கொண்டான்.

காரின் வேகம் அதிகரித்தது!

எதிர்பாராத இந்த ஆபத்திற்கு பயந்து போய்விட்ட சாந்தி அவர்கள் கைகளை விடுவித்துக் கொள்வதற்காகத் திமிறினாள். ரங்கன் சாந்தியின் கன்னத்தில் ஓங்கி அடித்தான்! சாந்திக்கு பயத்தால் உயிரே போய்விட்டாற் போலிருந்தது. தைரியமில்லாத சாந்தியால் அவர்களை அதிகமாய் எதிர்த்து நிற்க முடியவில்லை.

கார் அசுர வேகத்தில் பறந்து ஊர்க்கோடிக்கு வந்து சேர்ந்தது. பாழடைந்த சிவன் கோவிலுக்கருகில் வந்து நின்றது.

காரிலிருந்து நால்வரும் இறங்கினார்கள்!

ரங்கன் சாந்தியின் கழுத்தைச் சுற்றிக் கையைப் போட்டு வாயை அழுத்தமாய் பொத்திக் காரிலிருந்து இழுத்தான். வாசு வந்து சாந்தியின் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டுப் பிடித்துக் கொண்டான்.

இருவரும் சாந்தியைப் பாழடைந்த சிவன் கோவிலுக்குள் இழுத்துச் சென்றார்கள்.

''டேய்! மொதல் ஷேர் என்னோடதுடா'' என்றான் ரங்கன்.

''ஷட்அப்'' கத்தினான் வாசு.

''ஓ.கே. ஓ.கே.'' என்றான் ரங்கன், அப்பால் வந்த படி.

வாசு சாந்தியை சிவன் கோவிலுக்குள் இழுத்துக் கொண்டு போனான். சிநேகிதர்கள் இருவரும் வெளியே காத்திருந்தார்கள்.

உள்ளேயிருந்து சாந்தியின் கதறல் கேட்கக் கேட்க அவர்களின் ஆவேசம் பெருகத் தொடங்கிற்று! தமக்கு அந்த அவகாசம் எப்பொழுது வருமோ என்று அவர்கள் உடம்பு தவித்துக் கொண்டிருந்தது.

அந்த விதமாய் சாந்தியை வாசு, ரங்கன், சீனு மூவரும் ஒருவர்க்குப் பின் மற்றொருவராய், அரக்கத்தனமாய், அவளை ஆதரவில்லாதவளாக்கி தம் திருப்தியைத் தீர்த்துக் கொண்டார்கள். தாம் விரும்பிய தீர்வை அனுபவித்தார்கள்.

சாந்திக்கு நினைவுத் தப்பி விட்டது.

வேரற்ற மரமாய் விழுந்து கிடந்தாள்.

அதற்குள் இரவு வெகு நேரமாகி விட்டது.

அவர்களுக்கு சாந்தியை என்ன பண்ணுவது என்று தெரியவில்லை!

''இங்கேயே விட்டுவிட்டுப் போவிடலாம்'' என்றான் சீனு.

''நினைவு திருப்பினால் நம் எல்லோருடைய பேரையும் சொல்லி விடுவாள். அப்ப நாம்ப போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கும்'' என்றான் வாசு.

''அப்ப என்னதான் பண்றது?'' என்றான் சீனு.

''எங்கேயாவது எடுத்துட்டுப் போய் வயல்களில் எறிந்து விடுவோம்'' என்றான் ரங்கன்.

''ஊஹூம். அது சரியான காரியமில்லை'' என்றான் வாசு.

''எங்கேயாவது குழித்தோண்டி புதைத்து விடுவோம்'' என்றான் ரங்கன்.

''மண் வெட்டி, கடப்பாரைக்கு எங்கே போறது?'' கேட்டான் வாசு.

எல்லோருக்குமே பயமாய் இருந்தது! அவர்கள் ஆவேசம் தணிந்ததுமே, தாம் செய்த காரியம் எவ்வளவு கொடுமையானதென்று புரிந்தது. ரங்கனும் சீனுவும்

நடுங்கத் தொடங்கினார்கள். வாசு மட்டும் பயப்பட வில்லை.

"அதோ, எதிரே கிணறு தென்படுதே, அதில் தூக்கிப் போட்டு விடலாம்" என்றான்.

எதிரே வயலில் பாழடைந்த பெரிய கிணறு இருந்தது. அது அவர்களுக்குப் பழக்கமான இடந்தான்.

எல்லோருக்கும் அந்த யோசனை பிடித்து விட்டது. சாந்தியைக் கிணற்றிற்குள் போட்டு விட்டால் செத்து விடுவாள். செத்துப் போன சாந்தியால் தன்னை யார், எதற்காகக் கொன்றார்கள் என்று யாரிடமும் சொல்லி விடமுடியாது.

"சரி வாங்க, இன்னும் ஏன் தாமதம்" என்றான் ரங்கன்.

சீனு சாந்தியைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

"ஐயோ! என்னால் சுமக்க முடியலை. என் கால்கள் நடுங்குகின்றன" பாதி வழியில் கீழே வைத்து விட்டான்.

வாசு தூக்கிக் கொண்டான் நடுவில் சாலை குறுக்காய் இருந்தது! வாசுவுக்கும் கால்கள் நடுங்கின. உடம்பு நடுங்கிற்று. தூக்க முடியாமல் சாந்தியை நழுவ விட்டு விட்டான்.

அங்கிருந்து வாசுவும் சீனுவும் சாந்தியின் கைகளைப் பிடித்து மண்ணில் இழுத்துக் கொண்டே போனார்கள். சாலையைக் கடந்து போய்க் கொண்டிருந்தபோது லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது விளக்கு வெளிச்சத்தைக் கொண்டு தெரிந்தது. சாந்தியோ சாலைக்குக் குறுக்காய் இருந்தாள்.

"ஐயோ! ஏதோ கார் வருகிறது போலிருக்கு" சீனு ஓடத் தொடங்கினான்.

வாசு கூட திரும்பிப் பார்த்தான்.

விளக்கு வெளிச்சம் வேகமாய் கிட்டே வந்து கொண்டிருந்தது.

"வாசு, சீக்கிரமாய் வந்துவிடு. கார் வெளிச்சத்தில் பார்த்து விடுவாங்க. சீக்கிரமாய் வா! கமான்" கத்தினான் ரங்கன்.

சீனு அதற்குள் ஓடிப் போய் விட்டான். வெளிச்சம் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

வாசுவும் வேறு வழியில்லாதவனாய் ஓட்டமாய் வந்து விட்டான். எல்லோரும் காரில் வந்து விழுந்தார் கார் வேகமாய் பறந்தது.

சுமையை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்த நடுசாலையில் குலைந்த ஆடையுடன் விழுந்து கி பெண்ணைப் பார்த்ததும் நின்று விட்டது.

"அடடா! யாரோ பொண்ணு" என்றான் க்ளீ பையன்.

லாரி டிரைவர் வயதானவன். லாரியை நிறுத்தினான்.

"சலம் போலிருக்கு. நமக்கெதுக்கு வீண் வம்பு? போயிடலாம்" என்றான் லாரி க்ளீனர்.

"இரு பார்க்கலாம்" லாரி டிரைவர் இறங்கி வந்தான். அவனுக்கு சாந்தியைப் பார்த்ததுமே இரக்கம் பிறந்தது.

அவள் உயிரோடுதான் இருந்தாள். அவளுடைய குலைந்த ஆடைகளையும், காயமான உதடுகளையும், கன்னங்களையும் பார்த்தபோது அவளுக்கு நேர்ந்த விபத்து என்னவென்று புரிந்தது.

"உயிர் இருக்கா?" கேட்டான் க்ளீனர்.

டிரைவர் தலையாட்டினான்.

"இப்படிவா! கொஞ்சம் கைக் கொடு" என்றான்.

"உனக்கு புத்தி கித்தி பிசகிடுத்தா? நம்ப லோடில் இருக்கிற சாமானைப் பற்றி மறந்துட்டாயா? கேசு.

போலீஸ் ஸ்டேஷன் என்று வந்தால் மொதல்ல நம்ப சேட் யாருன்னு வெளிப்பட்டு ஜெயிலில் உட்கார வேண்டி யிருக்கும். பரோபகாரம் பண்ணப் போய் வாங்கிக் கட்டிக் கொள்வாய். ஜாக்கிரதை''— எச்சரித்தான்.

''ஆங்! அவ்வளவு தூரத்துக்கு வர விட்டு விடுவேனா? ஊரில் சர்மா டாக்டரை எனக்கு நன்றாய் தெரியும். அவரிடம் ஒப்படைத்து விட்டு நம்ப வழியில் நாம்ப போயிடலாம். பாவம் யாரோ பொண்ணு! நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணாய்தான் தெரியுது. இந்த துரதிர்ஷ்டம் ஏன் வந்ததோ?'' என்றான்.

''இந்த மாதிரி நாம்ப தினமும் எவ்வளவோ தான் பார்க்கிறோம்'' என்றான் பையன். இருவரும் சாந்தியை லாரியில் ஏற்றிக் கொண்டார்கள்.

37

சூர்யகிரண் அப்பொழுதுதான் ஊரெல்லாம் சுற்றிச் சுற்றி அலைந்து விட்டுத் திரும்பியிருந்தான். அவனுக்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. மாலையில் டியூஷனுக்காக மிதிலாவின் வீட்டிற்குப் போன சாந்தி இன்னும் வீட்டிற்கு வரவில்லை. மிதிலாவின் வீட்டிலிருந்து சாதாரணமாய் ஏழு மணிக்கே வீட்டிற்குத் திரும்பி வந்து விடுவாள். என்றைக்காவது ஒரு நாள் எந்த காரணத்தி னாலாவது ஒரு அரை மணி நேரம் தாமதமாகலாம். இன்றைக்கு வேலைக்காரப் பையன் சாந்தியோடு கூட போகவில்லை. அவனுக்கு ஜுரம் வந்து விட்டது. பெரிய வேலைக்காரனும் ஊருக்குப் போயிருந்தான் ஏதோ திருமணத்திற்காக.

சூர்யகிரண் வீட்டிற்கு வந்தபோது ஒன்பது மணி ஆகி விட்டது. சாந்தி இன்னும் வரவில்லை என்று தெரிந்ததுமே சட்டையைக் கழற்றியவன் திரும்பவும் போட்டுக்கொண்டு மிதிலாவின் வீட்டிற்குப் போனான்.

அவன் போன பொழுது மிதிலா படுக்க ஏற்பாடு செய்துக் கொண்டிருந்தாள். சூர்யகிரண் சாந்தியைத் தேடிக் கொண்டு வந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்தவளாய்— ''ஏழு மணிக்கே போய் விட்டானே!'' என்றாள்.

''வீட்டுக்கு வரலை. எங்கேயோ போயிருப்பாள்,'' என்றான் அவன்.

''சுகுணா ஊரிலிருந்து வந்திருக்கிறாள். போய் பார்க்கப் போகிறேன் என்று சொல்லியிருந்தாள்'' என்றாள்.

''ஓஹோ! அப்படீன்னால் அங்கே பேசிக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். சுகுணாவும் சாந்தியும் சிறு வயதி லிருந்தே நல்ல சிநேகிதிகள். ஒருக்கால் இன்றைக்கு அவங்க வீட்டிலேயே இருந்துட சொல்லி பலவந்தம் பண்ணி யிருப்பாள். அசட்டுப் பொண்ணு! எனக்குத் தெரியப் படுத்த வேண்டாமா?'' என்று எழுந்திருந்தான் அவன்.

அவன் போக முற்பட்டவன் ஏதோ ஞாபகம் வந்த வனாய் நின்று திரும்பினான்.

''மிதிலா! மணமகன் வீட்டாருக்கு சாந்தியைப் பிடித்து விட்டதாம். நாளன்றைக்கு நிச்சயதார்த்தம் பண்ணிக்க வருவதாய் தந்தி கொடுத்திருக்காங்க— அதான் வந்தது'' என்றான்

''நிஜமாகவா?'' என்றாள் மிதிலா.

''ஆமாம். சாந்தி அவங்களுக்குப் பிடித்திருப்பது என் அதிர்ஷ்டந்தான். ஏன்னால் படிப்பு, அந்தஸ்து, பணம், எல்லா விதத்திலும் மனதுக்குப் பிடித்திருந்த சம்பந்தம் அது.''

"நான் அப்பொழுதே சொல்லவில்லை? பையனுக்கு நம்ப சாந்தியை ரொம்பவும் பிடித்து விட்டது என்று அவன் நடவடிக்கையிலிருந்தே தெரிந்து விட்டது" என்றாள் மிதிலா முறுவலுடன்.

ஒரு வாரத்திற்கு முன்னால் சாந்தியைப் பெண் பார்க்க வந்திருந்தார்கள் அவர்கள். அன்றைக்கு மிதிலா அங்கேயேதான் இருந்தாள். மிதிலாவைத் தன் வருங்கால மனைவியாய் மனவீட்டாருக்குப் பரிச்சயம் பண்ணினான் சூர்யகிரண்.

"அப்படின்னால் மொதல்ல உங்கள் கல்யாணம் ஆகட்டும். நீங்களே கன்யாதானம் பண்ணிடலாம்" என்றார் மணமகனின் தந்தை.

சூர்யகிரண் முறுவலுடன் பேசாமலிருந்தான்.

மணவீட்டார் போன பிறகு அவன் மிதிலாவிடம் "மணமகனின் தந்தை சொன்னதைக் கேட்டாயா மிதிலா?" என்றான்.

"உம்" என்றாள் மிதிலா.

"நீ உங்கண்ணா, அம்மாவின் பர்மிஷன்களை வாங்கிக் கொள்வதுதான் பாக்கியிருக்கு" என்றான் அவன்.

மிதிலா சிரித்தாள்.

"நாமிருவரும் சேர்ந்து சாந்திக்குக் கன்யாதானம் பண்ணனும் மிதிலா. அதுதான் என் ஆசை. சாந்திக்காகவாவது நாம்ப கல்யாணத்தை மொதல்ல பண்ணிக்கணும்" என்றான் அவன்.

"சரி" என்றாள் மிதிலா.

மிதிலா அன்றைக்கே தாய்க்கும் அண்ணனுக்கும் தான் சூர்யகிரணைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் அது கூட ரிஜிஸ்தர் மேரேஜ் என்றும் தெரியப்படுத்தி கடிதம் எழுதினாள்.

மிதிலா அவர்கள் பதிலுக்காகக் காத்திருந்தாள். இந்த திருமண விஷயத்தில் தன் முடிவை அவர்களுக்குத் தெரியப் படுத்தினாள். அவர்கள் நிர்மானத்திற்காக அவள் அனுமதி கேட்கவில்லை.

இருவரும் நல்ல நாளுக்காகக் காத்திருந்தார்கள்.

சூர்யகிரண் ஒரடி முன் நோக்கி வந்து மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டே— "மிதிலா! உன்னை இப்படி விட்டுவிட்டுப் போகவே நரகமாய் இருக்கு எனக்கு! தூங்குவதற்கு முன்னாலும் தூங்கி எழுந்ததும் உன் முகத்தைப் பார்க்கிற நான் எப்பொழுது வரப் போகிறதோன்னு இருக்கு. இன்னும் எவ்வளவு யுகங்கள் தான் இப்படிக் காத்திருக்கணுமோ" என்றான்.

"ஒரு வாரம் பொறுத்திருங்கள்" என்றாள் மிதிலா.

அவன் போய் விட்டான். மிதிலா அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

தாய்க்கும் அண்ணனுக்கும் விருப்பம் இல்லா விட்டாலும் சரி, அவன் அவளை மணந்து கொள்வான். அது உறுதி!

சூர்யகிரண் மிதிலாவின் வீட்டிலிருந்து நேராய் சுகுணாவின் வீட்டிற்குப் போனான். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சுகுணா சூர்யகிரணைப் பார்த்ததுமே எழுந்து வந்தாள்.

"சாந்தியா? அவள் இன்றைக்கு வரவேயில்லையே? வரேன்னு சொல்லியனுப்பியிருந்தாள். சாயந்திரம் வெகு நேரமாய் எதிர்பார்த்துட்டிருந்தேன் கூட" என்றாள்.

"வரலையா?"— சூர்யகிரண் அங்கிருந்து வந்து விட்டான். ஒருக்கால் எந்த சிநேகிதியுடனாவது சேர்ந்து சினிமாவுக்குப் போயிருப்பாளோ? சினிமாவிலிருந்து திரும்பி வரும் நேரம் கூட ஆகிவிட்டது. அவன் வீட்டிற்கு வந்து விட்டான்.

வேலைக்காரப் பையன் காத்துக் கொண்டு உட்கார்த் திருத்தான். சாந்தி வரவில்லை என்று சொன்னான்.

சூர்யகிரண் தளர்ந்து போய் விட்டான். எங்கே போய் இருப்பாள். அவன் மனதிற்குள் எங்கோ கலக்கம் போன்ற உணர்ச்சி எவ்வளவு கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாலும் முடியாமல் வெளியே பொங்கிக் கொண் டிருந்தது.

போலீஸ் ரிபோர்ட் தரலாமா?

அல்லது இன்னும் வேறு யார் வீட்டிலாவது இருப் பாளோ? என்னவானாள்? இவ்வளவு நேரமாய் வீட்டிற்கு வராமல் போவானேன்? அவன் யோசனைகள் பலவிதங் களில் தாவின.

அதற்குள் வாசலில் கார் வந்து நின்றது.

சூர்யகிரண் ஜன்னல் வழியாய் பார்த்தான்.

காரிலிருந்து டாக்டர் சர்மா மளமளவென்று படியேறி வந்து கொண்டிருந்தார்.

சூர்யகிரண் எதிரே போனான்.

"சூர்யா"— சர்மா சூர்யகிரணைப் பார்த்து ஏதோ சொல்ல வந்து நின்று விட்டார்.

"என்ன?"— சூர்யகிரண் கேட்டான்.

"சாந்தி என்னிடம் இருக்கிறாள்."

"உங்களிடம் வந்தாளா? அம்மாடா! எங்கே போயிட் டாளோன்னு தவிதவித்துப் போயிட்டேன். நான் அப்பொழுதே நினைத்தேன், எங்கேயாவது தெரிஞ்சவங்க வீட்டில்தான் இருப்பாள் என்று. அசட்டுப் பொண்ணு! எனக்குத் தெரியப்படுத்த வேண்டாமா? உங்களோடு ஏன் வரலை? உங்கள் மிஸஸ் பலவந்தப்படுத்தியதால் அங்கேயே படுத்துக் கொண்டு விட்டாளா?" என்றான் சூர்யகிரண். சாந்தியைப் பற்றிய சங்கதி தெரிந்ததுமே அவன் மனதிலிருந்த பாரம் நீங்கி விட்டது.

"என்னோடு வா, போகலாம்" என்றார் சர்மா.

"இப்பவா? எதுக்கு? சாந்தி என்னை வரச் சொன்னானா? நானை காலையில் வந்துக்கட்டுமே! உட்காருங்கள். என்ன விசேஷம்? இப்பல்லாம் கண்ணில் படுவதே இல்லையே?"

டாக்டர் சர்மா உட்காரவில்லை. சூர்யகிரணின் கையைப் பிடித்துக் கொண்டே— "என்னோடு வா. போகலாம்" என்றார்.

"எதுக்கு இப்போ?"

"சாந்தியைப் பார்க்க"

"சாந்தியையா? என்னவாச்சு?"— சூர்யகிரண் கொஞ்சம் பதற்றமடைந்தான்.

"சூர்யா! சாந்திக்கு... ஆபத்து நேர்ந்து விட்டது."

"என்னது?" சூர்யகிரண் ஒரே பாய்ச்சலாய் வந்து அவர் தோளை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான்.

"ஆபத்தா? ஆக்ஸிடென்ட் ஆயிடுத்தா? உயிரோடு இருக்கிறாளா?" அவன் பதற்றத்தைப் பார்த்து சர்மா துணுக்குற்றார்.

"உயிரோடுதான் இருக்கிறாள்."

"உயிருக்கு பயமில்லையே?"

"இல்லை"

"அம்மாடா! அதற்குள் என்னைக் கலக்கடித்து விட்டாயே? என்னதான் ஆச்சு? கீழே விழுந்து விட்டாளா? விபத்து நேர்ந்து விட்டதா? அல்லது ஏதாவது விஷ உணவை உட்கொண்டு விட்டாளா?" பதைப்பதைப்புடன் கேட்டான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை"

"பின்னே என்னவாச்சு?"

''சூர்யா! நீ ஆவேசப்படாதே''

''சாந்திக்கு என்னவாச்சுன்னு சொல்லு''

''சாந்தியை!...''

''சாந்தியை?''— சூர்யகிரணின் கண்கள் அகல விரித்தன.

''யாரோ ரேப் பண்ணிட்டாங்க. உயிர்க் கோடியில் போட்டிருந்தாங்க. எனக்குத் தெரிந்த லாரி டிரைவர் ஒருத்தன் கொண்டு வந்து என்னிடம் இறக்கி விட்டு விட்டுப் போனான்.

''நோ...''— சூர்யகிரண் கத்தினான். அவன் உள்ளங் கைகள் முறுக்கேறிக் கொண்டன. பார்த்துக் கொண்டிருந்த போதே நெற்றி நரம்புகள் புடைத்தெழுந்தன. உடம்பெல் லாம் வியர்த்துக் கொட்டிற்று.

சர்மா சூர்யகிரணின் தோளில் தட்டினார். தேற்றுவது போல சொன்னார்—

''சூர்யா! இப்படிப்பட்ட அக்கிரமங்களை நாம்ப காலையில் எழுந்ததிலிருந்து நிறைய கேள்விப்படுகிறோம். நம்ப தூரதிர்ஷ்டம் இப்பொழுது நாமே சுயமாய் இதைப் பார்க்கிறோம். நீ எல்வளவு ஆவேசப்படுவாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் நீ ஆவேசப்படும் தருணம் இல்லை இது. மிகப் பொறுமையோடு தைரியமாய் இருக்க வேண்டிய சமயம் இது. நாம்ப க்ளினிக்கிற்குப் போகலாம். நீ ஒன்றுமே நடக்காதது போல இருந்தால் தான் சாந்தியால் பழையபடி ஆக முடியும். புரிஞ்சுதா?'' என்றார் அவர்.

சூர்யகிரண் மீது அந்த வார்த்தைகள் நன்றாகவே வேலை செய்தன. அவன் கசப்பை உண்டாற் போல அந்த பயங்கரமான செய்தியை விழுங்கிக் கொள்ள முயன்று கொண்டிருந்தான்.

டாக்டர் சர்மா சூர்யகிரணைத் தன்னோடு காரில் க்ளினிக்கிற்கு அழைத்து வந்தார்.

அல்லிருவரும் போன பொழுது சாந்தி கட்டிலில் உயிரில்லாதவளைப் போல பலவீனமாய் படுத்துக் கிடந்தாள். முகம் வெளுத்துப் போய், கண்கள் கனை விழுந்து தென்பட்டன. டாக்டர் சர்மா கட்டிலுக்கருகில் போய் குனிந்து ''சாந்தி'' என்று கூப்பிட்டார். சாந்தி மெதுவாய் கண்களைத் திறந்தாள்.

டாக்டர் சர்மாவைப் பார்த்ததுமே பெரிதாய் கத்தினாள். கட்டிலை விட்டு எழுந்திருக்கப் போனாள். சர்மா சட்டென்று தடுத்தார். அங்கிருந்து அப்பால் வந்து சூர்யகிரணிடம்— ''சூர்யா! நீ கிட்டே போ. நீ அன்பாய் கூப்பிடு. உன்னைப் பார்த்தாலேயொழிய சாந்தி பழைய படி ஆகமாட்டாள். பயந்து போயிருக்கும் அந்த மனதிற்கு தைரியம் வராது'' என்றார்.

சூர்யகிரண் கட்டிலுக்கருகில் போனான். சாந்தியை அந்த நிலையில் பார்த்த அவனுக்கு இதயத்திலிருந்து துக்க அலைகள் பொங்கி வந்து தொண்டையை அடைத்தது. அவள் அரும்பாடுபட்டு அதை அடக்கிக் கொண்டு, ''சாந்தி'' என்று கூப்பிட்டாள் குழைவாய். சாந்தி கண் களைத் திறந்தாள். அப்பார்வை கண்ணுக்கபடமில்லாமல் இருந்தது.

''சாந்தி'' என்றான் திரும்பவும்.

சாந்தி அலனை வெறி பிடித்தாற் போல பார்த்தாள்.

அடுத்த நிமிஷம் அந்த அறையே அதிர்ந்து போகும் படியாய் கத்தினாள்— ''வேண்டாம், வேண்டாம். உனக்கு தும்பிடு போடுகிறேன்.''— கைகளைக் கூப்பிக் கொண்டே எழுந்து கட்டிலை விட்டிறங்கி ஓட முயன்றாள்.

சூர்யகிரண் பிடித்துக் கொண்டான்.

சாந்தி மூர்ச்சையடைந்து விட்டாள்.

டாக்டர் சர்மா வந்து சாந்திக்கு இஞ்ஜெக்ஷன் தந்து கட்டிலில் படுக்க வைத்தார்.

சூர்யகிரணும் சர்மாவும் அந்த அறையை விட்டு அப்பால் வந்தார்கள்.

"சாந்தி மிகவும் பயந்து போயிருக்கிறாள். ஆண்களைக் கண்டாலே நடுநடுங்கிப் போகிறாள். உன்னைப் பார்த்து கூட அவளால் அமைதியடைய முடியவில்லை. சாந்தி குணமாகும் வரை யாராவது ஒரு பெண் அவளுக்கருகில் இருப்பது நல்லது. சாந்தியிடம் இந்த விஷயத்தை யாரும் மறந்தும் எடுக்க வேண்டாம். சாந்திக்கு எதுவுமே ஏற்பட்டு விடவில்லை என்றும், அதெல்லாம் அவள் பிரம்மை என்றும் நாம்ப புனைந்து சொல்லனும்" என்றார்.

சூர்யகிரண் தலையாட்டினான்.

"நாம்ப கொஞ்சம் ஜாக்கிரதையாய் விசாரணை பண்ணினால சாந்தியை இந்த அக்கிரமத்திற்கு ஆளாக்கின வங்க யார் என்று தெரிந்து விடும்."

சூர்யகிரண் பற்களைக் கடித்தான் "அந்த அரக்கனை நான் விட்டு விடுவேனா? அவனைக் கொன்று குழித் தோண்டினால்தான் என் மனம் நிம்மதியுறும்" என்றான். அவன் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன. அவன் அங்கிருந்து அகன்றான்.

38

நள்ளிரவு வேளை.

கதவைத் தட்டிய ஓசை கேட்டு ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மிதிலா எழுந்து வந்து கதவைத் திறந்தாள். எதிரே சூர்யகிரண் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே மிதிலா திகைத்துப் போய் விட்டாள்

"நீங்களா?" என்றாள்.

கதவைத் திறந்ததுமே அவன் எதுவுமே பேசவில்லை. உள்ளே வந்து அங்கிருந்த நாற்காலியில் சரிந்தான்.

"சாந்தி வீட்டுக்கு வந்தாளா?" கேட்டாள் மிதிலா.

அவன் நடந்ததைச் சுருக்கமாய் சொன்னான்.

மிதிலா அதைக் கேட்டதும் வெலவெலத்துப் போய் விட்டாள்.

"சாந்தி ஆண்களைக் கண்டாலே கத்திக் கூச்சலிடுகிறாள் கடைசியில்... கடைசியில் என்னைப் பார்த்தால் கூட திம்மதியடையவில்லை. டாக்டர் சர்மா சாந்தியிடம் யாராவது ஒரு பெண் இருந்தால் நல்லதுன்னு சொன்னார். எனக்குத் தெரிந்தவரை....." தலையைக் குனிந்து கொண்டே சொல்லிக் கொண்டிருந்த அவன் நிறுத்தினான்.

மிதிலாவுக்குப் புரிந்து விட்டது. மறுபேச்சு பேசாமல் போய் கதவுகளைச் சாத்தித் தாழிட்டு விட்டு வந்து— "வாங்க" என்று அவனோடு புறப்பட்டாள்.

சூர்யகிரணின் ஸ்கூட்டரில் உட்கார்ந்து மிதிலா போய் கொண்டிருந்தாள். செகண்ட ஷோ சினிமா பார்த்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த அர்ஜுனன் இவர்களைப் பார்த்தான். ஸ்கூட்டரில் சூர்யகிரணின் தோளில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து போய்க் கொண்டிருந்த மிதிலா அவன் கண்களுக்கு மிகச் சந்தோஷமாய் உல்லாசமாய் போய்க் கொண்டிருந்தாற் போல இருந்தது. சூர்யகிரணோடு மிதிலா நெருக்கமாய் இருந்து வந்த விஷயத்தை அவன் நிறைய பேர் சொல்லிக் கேட்டிருக்கிறான் ஆனால் அந்த நெருக்கம் இப்படி நள்ளிரவு வேளையில் ஸ்கூட்டரில் ஏறி அவனோடு ஊர்ச் சுற்றும் வரைக்கும் வந்து விடும் என்று அவன் ஊகித்திருக்கவில்லை. அவன் மனதில் பொறாமைத் தீ புஸ்ஸென்று கொழுந்து விட்டெரியத்

தொடங்கிற்று. எங்கே அழைத்துப் போகிறான்? வேறெங்கே? அவன் வீட்டிற்குதான் இருக்கும். அர்ஜுனனின் பற்கள் நறநறத்தன.

அன்றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. தன்னை மறுத்துவிட்டு சூர்யகிரணோடு சுற்றிக் கொண்டிருக்கும் மிதிலாவை எப்படி மட்டந்தட்டுவது என்று யோசித்துக் கொண்டிருந்தான் மிதிலா க்ளினிக்கிற்கு வந்தாள். சூர்யகிரண் மிதிலாவை டாக்டர் சர்மாவுக்குப் பரிச்சியம் செய்தான். மிதிலா சாந்தியின் கட்டிலுக்கருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். சூர்யகிரண் தொலைவில் இருந்த நாற்காலியில் கைகளுக்கிடையே தலையைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். மிதிலா சாந்தியின் நெற்றியில் கையை வைத்தாள். உடம்பு ஜுரத்தால் கொதித்துக் கொண்டிருந்தது.

சாந்தி திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள்.

மிதிலா சிநேகபூர்வமாய், அன்பாய், பெற்ற தாயைப் போல பரிவோடு பார்த்துச் சிரித்தாள்.

சாந்தியின் பார்வையிலிருந்த குழப்பம் மெல்ல மெல்ல குறைந்தது. அந்தப் பார்வையில் கொஞ்சம் தெளிவு ஏற்பட்டது.

''சாந்தி, ஜுரம் எப்படி இருக்கு?'' என்றாள்.

சாந்தியின் உதடுகள் அதிர்ந்தன. ஏதோ சொல்ல வந்தாள். கண்கள் பயத்தால் அகல விரிந்தன.

அழுகை வந்து விட்டது. ''மேடம்'' அவ்வுதடுகள் நடுங்கின. மிதிலா சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து வந்து சாந்திக்கு பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். சாந்தி அதற்குள் எழுந்திருக்கப் போனாள். மிதிலா சாந்தியின் தோள்களைப் பிடித்து கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டாள். மார்போடு சேர்த்துக் கொண்டாள். சாந்தி அழத் தொடங்கினாள்.

''பாரு சாந்தி, ஜுரம் வந்ததற்காக இவ்வளவு பயப்படலாமா? ஏதாவது தீயக்கனவு வந்ததா?''— கேட்டாள்.

''தீயக்கனவா?'' கிணற்றிற்குள்ளிருந்து பேசுவது போல கேட்டது சாந்தியின் குரல்.

''ஆமாம். தூக்கத்தில் புலம்பினாய். நேற்றிலிருந்து உனக்கு ஒரே ஜுரம். நினைவு கூட இல்லாமல் படுத்துக் கிடந்தாய். டாக்டரிடம் அழைத்து வந்தோம். நானும் உன் அண்ணாவும் இங்கேயேதான் உட்கார்ந்திருந்தோம்.'' அழுது கொண்டிருந்த சாந்தி கொஞ்சம் சாந்தமடைந்தாள்.

''கனவா?'' என்றாள் ஹீனஸ்வரத்தில்.

''ஆமாம் கனவுதான். ஒரே புலம்பல். ஆஸ்பத்திரிலே அதிர்ந்து போயிடுத்துன்னால் பார் உன் கத்தலால்.''

சாந்தி மௌனமாய் இருந்தாள்.

''ரொம்ப பயங்கரமான கனவு வந்ததா?''

''ஆமாம். யாரோ... என்னை...'' நடுங்கிக் கொண்டே மிதிலாவின் மார்பில் பல்லியைப் போல ஒட்டிக் கொண்டாள்.

சூர்யகிரண் அந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டுத் தாங்க முடியாதவனாய் சட்டென்று அங்கிருந்து எழுந்து போய் விட்டான்.

''பயங்கரமான கனவுகள் சில சமயம் அப்படித்தான் அசல் நிஜமாய் நடப்பது போலவே இருக்கும். அம்மா! ரொம்ப நாளாகும் அதை நாம்ப மறந்து போக! நீ தூங்க முயற்சி பண்ணு. வீணாய் கலங்காதே. அண்ணா உன் ஜுரத்தைப் பார்த்து பயந்துட்டார்''— ஆறுதலாய் சொல்லிக் கொண்டே தலையைக் கோதி விட்டாள்.

சாந்தி நிமிர்ந்து பார்த்தாள். ''அண்ணா எங்கே?''— கேட்டாள்.

''இங்கேதான் இருக்கார்''— மிதிலா கூப்பிட்டாள். சூர்யகிரண் உள்ளே வந்தான்.

''அண்ணா'' என்றாள் சாந்தி. அவள் கண்களில் சோர்வும், திக்பிரமையும் தென்பட்டன.

''சாந்தி'' அரும்பாடுபட்டு அவன் குரல் துக்கத்தை அடக்கிக் கொண்டு வெளி வந்தது.

''மேடம் சொன்னாங்க. நான் ரொம்ப கத்தினேனா? எனக்கு... எனக்கு பயமாய் இருந்தது.''

சூர்யகிரணுக்கு அந்தச் சமயத்தில் சாந்தியை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டு ''பயம் இல்லைம்மா'' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான். ஒன்றுமே நடக்காதது போலவே இருக்க முயன்றான்.

''வீட்டுக்குப் போகலாம் அண்ணா'' என்றாள் சாந்தி.

''சரிம்மா'' என்றான் அவன்.

அடுத்த அரை மணியில் சர்மா அம்மூவரையும் காரில் அழைத்து வந்து வீட்டில் இறக்கி விட்டார்.

சாந்தி படுத்துக் கொண்டாள். சர்மா தந்த இஞ்ஜெக்ஷன் வேலை செய்ததால் சீக்கிரத்தில் உறங்கி விட்டாள். மிதிலா அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். சூர்யகிரண் கைகளைக் கட்டிக் கொண்டே ஜன்னலுக்கருகில் நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனமெல்லாம் இருள் திரைக்குள் போர்த்திக் கொண்டிருந்தாற் போலிருந்தது. சாந்திக்கு நேர்ந்த இந்தக் கொடுமையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சாந்தி தூங்கி விட்டதையறிந்த மிதிலா எழுந்து சூர்யகிரணிடம் வந்தாள்.

''நீங்கள் கொஞ்ச நேரம் தூங்குங்க'' என்றாள்.

''தூக்கமா? நானா? எனக்கு இந்த ஜென்மத்தில் இனி தூக்கந்தான் வருமா மிதிலா?''

மிதிலாவுக்கு அவன் மனம் புரிந்தது.

பரிவோடு சொன்னாள்— ''பாருங்கள். வாழ்க்கையில் நடந்துவிட்ட ஒரு காரியத்தை நம்மால் எதிர்த்துப் போராட முடியாது. ஏதாலது நடக்கக் கூடாதது நடக்கும்போதுதான் ஒருவரிடம் எவ்வளவு தன்னம்பிக்கை இருக்கிறதுன்னு தெரிஞ்சுக்க முடியும். சாந்தியின் வாழ்க்கையில் நடக்கக் கூடாதது நடந்து விட்டது. நாம் வருத்தப்பட்டு, மனம் ஒடிந்து போய் உட்கார்ந்து விட்டால் அது போய் விடுமா? மேலும் சாந்திக்கு இன்னும் ஞாபகப்படுத்தினாற் போல ஆகிவிடும். நாம் ஒன்றுமே நடக்காதது போல நடந்து கொண்டால், சாந்தி சீக்கிரமாய் மறந்து போய் விடுவாள். அதற்காக நாம் முயற்சிக்கணும்.''

''எனக்குத் தெரியும் மிதிலா. ஆனால்...'' அவன் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டான். ''என் முதுகெலும்பே உடைந்து போயிட்டாற் போல இருக்கு. கல்யாணப் பையனின் வீட்டார் நாளைக்கு வந்தால் என்னவென்று சொல்லுவேன்?''

''நாம்ப மொதல்ல சாந்தியைப் பற்றி யோசிக்கணும்.''

''ஆமாம்! நிஜந்தான்'' என்றான் அவன். அலனுக்குக் கை நழுவிப் போய்க் கொண்டிருந்த தைரியம் ஏதோ திரும்ப வந்து சேர்ந்தாற் போல இருந்தது! இந்தச் சமயத்தில் மிதிலா இப்படி பக்கத்தில் இல்லாமலிருந்தால் என்னவாகியிருப்பான் அவன்!

39

காலை பத்து மணி.

சூர்யகிரண் காபியைக் குடித்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். கடியாரத்தைப் பார்த்து விட்டு, அங்குமிங்கும் சுற்றி வளைய வந்து கொண்டிருந்த மிதிலாவிடம்— "மிதிலா! உன் காலேஜுக்கு டயமாயிடுத்து" என்று எச்சரித்தான். மிதிலா இன்னும் குளிக்கவில்லை. தலை பின்னிக் கொள்ளவில்லை.

"நான் காலேஜுக்குப் போகலை. இந்தாங்க லீவு லெட்டர். நீங்கள் கொஞ்சம் காலேஜில் கொண்டு போய் கொடுத்துடுங்க" என்றாள் லீவு லெட்டரைத் தந்து.

"லீவ் லெட்டரா?"

"ஆமாம். தற்போதைக்கு ஒரு நாலு நாள் லீவு போட்டு விட்டேன். அப்புறமாய் சாந்தியின் நிலைமையைப் பார்த்துக் கொண்டு பண்றேன்" என்றாள்.

அவன் கண்களில் நன்றி தென்பட்டது. மிதிலா சாந்தியின் அறைக்குள் போகத் திரும்பியவள் நின்றாள்— "பாருங்கள்! நீங்கள் இப்படி ஷேவ் கூட பண்ணிக்காமல் திகிலடைஞ்சுப் போய் உட்கார்ந்துட்டால், உங்களைப் பார்க்கிறவங்களுக்கு இந்த வீட்டில் ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்கிறது என்று தெரிஞ்சு விடும். நீங்கள் எப்பொழுதும் போலவே இருந்து கொண்டு உங்கள் வேலையை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தால் அக்கம் பக்கத்தார் யாருக்கும் எந்தச் சந்தேகமும் வராது" என்றாள்.

ஆம்! மிதிலா சொன்னதும் நிஜந்தான். இந்த இதயத்தில் பற்றி எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைப்

பற்றி யாருக்கும் தெரிந்து விடக்கூடாது. தான் எதுவுமே நடக்காதது போல நடந்து கொள்ள வேண்டும். சாந்திக்கு இந்தக் கொடுமையை இழைத்த அரக்கன் யார் என்று துப்புத் துலக்கி, அவர்களைக் கொன்று குழித்தோண்டிப் போட வேண்டும் என்றெண்ணிக் கொண்டான்.

சாந்திக்கு விழிப்பு வந்தது. மிதிலா, முகம் கழுவச் செய்து காபியைக் கொடுத்தாள். தர்மா மீட்டரை வைத்துப் பார்த்தாள் ஜுரம் இருக்கிறதா என்று.

"நார்மலாய் இருக்கு" என்றாள் மிதிலா.

'நார்மலாய் இருக்கா? அப்படின்னால் ஜுரம் குறைந்து விட்டதுன்னு அர்த்தம்! ஆனாலும் இதென்ன என் உடம்பு இப்படி ரணமாய் இருக்கிறதே'— என்றெண்ணிக் கொண்டாள் சாந்தி.

"என்ன யோசிக்கிறாய்?" என்று கேட்டாள் மிதிலா

"ஒன்றுமில்லை மேடம்"

"பின்னி விடட்டுமா?" மிதிலா சாந்தியின் கூந்தலைப் பிரித்து சிக்குகளை எடுத்தாள்.

"கண்ணாடி கொண்டாங்க மேடம்" என்றாள் சாந்தி.

"வேண்டாம்மா. ஜுரம் வந்தவங்க இளைத்த முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளக் கூடாது. நீ உடை மாற்றிக் கொள்" என்று ஜடைப் பின்னத் தொடங்கினாள்.

சூர்யகிரண் குளித்து விட்டு வெளியே போகத் தயாரானவன்— "மிதிலா, லீவ் லெட்டர் எங்கே?" என்றான்.

"இதோ வரேன்" என்று சாந்தியை விட்டுவிட்டு உள்ளே போனாள் மிதிலா.

சாந்தி கட்டிலை விட்டு இறங்கினாள். புடவை, சட்டைகளை மாற்றிக் கொள்வதற்காக ஜாக்கெட்டை

அலிழ்த்து விட்டுப் போட்டுக் கொள்ளப் போன சாந்திக்கு மார்பிலும் தோள்களிலும் காயங்கள் தென்பட்டன. முதலில் புரியவில்லை. அவற்றை சரியாய் பார்ப்பதற்காக அங்கே சற்று தொலைவில் இருந்த டிரெஸ்ஸிங் மேஜைக் கருகில் வந்தாள்.

எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்ட சாந்தி சிலையாகி விட்டான். முகமெல்லாம் காயங்கள், மார்பிலும் தோள்களிலும் ஒரே காயங்கள்தாம்— தனக்கு இவ்வளவு காயங்கள் எப்படி ஏற்பட்டன? ஜுரமாய் இருந்தால் இது எப்படி வந்திருக்கும்? சாந்தியின் கண்கள் மெல்ல மெல்ல ஏதோ நினைவிற்கு வரத் தொடங்கினாற் போல அகல விரிந்தன. அக்கண்கள் அந்தச் சமயத்தில் பீதிக் குளமாகி விட்டன. சாந்திக்குத் தன் உருவத்தைப் பார்க்கவே பயமாயிருந்தது.

அங்கிருந்த பித்தளை பூஞ்ஜாடியை எடுத்து கண்ணாடியை நோக்கி வேகமாய் விசியெறிந்தாள். டிரெஸ்ஸிங் டேபிளின் கண்ணாடி கலகலவென்று உடைந்து ஆயிரம் சுக்கல்களாகித் தரையில் உதிர்ந்தது.

வெளியே போக முயன்ற சூர்யகிரண் இந்த சப்தத்தை கேட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தான். அதற்குள் மிதிலா அங்கிருந்து சாந்தியின் அறைக்குள் ஓடிக் கொண்டிருந்தாள். அவனும் ஓடி வந்தான்.

இருவரும் வருவதற்குள் சாந்தி அறைக்கு நடுவே நின்று கொண்டு பூஞ்ஜாடியால் தலையில் ஓங்கி அடித்துக் கொண்டிருந்தாள்.

''சாந்தி! சாந்தி'' மிதிலா கூப்பிட்டாள்.

''சாந்தி'' சூர்யகிரண் ஒரே பாய்ச்சலாய் ஓடி வந்து சாந்தியைப் பிடித்துக் கொண்டு அந்த பூஞ்ஜாடியைப் பிடுங்கி அப்பால் வீசியெறிந்தான்.

அவர்கள் வருவது இன்னும் இரண்டு நிமிஷம் தாமதமாகியிருந்தால் சாந்தியின் தலை பிளந்து போயிருக்கும்.

''சீக்கிரமாய் டாக்டர் சர்மாவைக் கூப்பிடுங்கள்''— நெற்றியில் பட்டு ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்த சாந்தியின் தலையைப் பிடித்துக் கொண்டே கத்தினாள் மிதிலா.

சூர்யகிரண் ஓடினான். ''எனக்கு ஜுரம் இல்லை. பொய் சொல்லீங்க. என்னை— என்னை அந்த ராட்சசர்கள்...''

''அவங்க யார் சாந்தி?'' கேட்டாள் மிதிலா.

சாந்தி பதில் சொல்லவில்லை. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு துக்கம் தாங்க முடியாதவளாய் அழத் தொடங்கினாள்.

சர்மா வந்தார். சாந்தி தூங்குவதற்கு இஞ்ஜெக்ஷன் தந்தார்— ''சாந்தியை நீங்கள் ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளும்'' என்றார்.

மறுநாள் மணிமகள் வீட்டார் வந்தார்கள்.

சூர்யகிரண் அவர்களை வீட்டிற்குக் கூட்டி வராமல் நேராய் ஓட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

சூர்யகிரண் சாந்திக்கு மிகவும் ஜுரமாய் இருப்பதாகவும், வெற்றிலைப் பாக்கு மாற்றிக் கொள்ள இயலாது என்றும் சொன்னான்.

''ஐயோ! எவ்வளவு தூரத்திலேருந்து வந்திருக்கோம். ஒரு ஐந்து நிமிஷம் வந்து பொண்ணு உட்கார்ந்து கொண்டால் வேலை ஆயிடுமே'' என்றார் தந்தை.

''ரொம்ப ஜுரமாய் இருக்குங்க. மூடின கண்ணைத் திறக்கவில்லை. டெலிகிராம் கொடுத்தாலும் நீங்கள் புறப்பட்டிருப்பீங்கன்னுதான் தகவல்'' என்றான் சூர்யகிரண்.

''சரி போகட்டும், நாளைக்கு வைத்துப்போம்.''

''முடியாதுங்க. அதற்கப்புறமாய் நான் கடிதம் எழுதுகிறேன்.''

"சரி, என்ன பண்றது? நாங்க புறப்பட்ட வேளை சரியாய் இல்லை. அவ்வளவுதான். சரி வா. பொண்ணை ஒரு தடவை பார்த்துட்டு மத்யானம் ரயிலுக்குப் போயிடறோம்."

"சாந்திக்கு ரொம்ப ஜுரமாய் இருக்கு சார்."

"ஜுரமாய் இருந்தால் என்னப்பா? நாங்க வரது பொண்ணைச் சும்மா பார்க்கிறதுக்குதான். தாம்பூலம் மாற்றிக்க இல்லை."

சூர்யகிரணுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை.

"சாந்தியைப் பார்க்க முடியாதுங்க" என்றான்.

"முடியாதா? ஏன்?"

"முடியாது"

"இதென்னப்பா!" அவர் ஏதோ சொல்ல வந்தார்.

"உங்களுக்கு வெட்கமில்லை? அவள் முடியாதுன்னு சொல்லும்போது கெஞ்சுகிறீங்களே ஏன்? இப்பப் பார்க்காவிட்டால் என்னவாயிடுத்து?"— பையனின் தாய் கத்தினாள். அவளுக்கு இது மிக அவமானமாய் இருந்தது. கோபமும் வந்து விட்டது.

"என்னவோ! ஒரு தடவை வந்தோம்! முடியலை. திரும்பவும் நாங்கள் வருவோமோ மாட்டோமோ எங்களுக்கே தெரியாது" என்று சொல்லி விட்டாள்.

சூர்யகிரண் 'அம்மாடா' என்று நிம்மதியாய் பார்த்தான்.

"வரேன்"— அவன் போய் விட்டான்.

"இதென்ன அப்படிப் போயிட்டானே? கொஞ்சமாவது கெஞ்சி கேட்டுக்காமல்," என்றாள் அவள் இன்னும் கோபமாய்.

"அதான் எனக்கும் புரியலை," என்றார் அவர் ஆச்சரியமாய்.

சாந்திக்கு நிச்சயதார்த்தம் பண்ணுவதற்காக ஊரிலிருந்து மணமகன் வீட்டார் வந்து திரும்பிப் போய் விட்டார்கள் என்று அக்கம்பக்கத்தாருக்குத் தெரிந்து விட்டது. சாந்திக்கு என்னவாகி விட்டது? வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. அந்த மிதிலா காலேஜைக் கூட விட்டுவிட்டு அவர்கள் வீட்டிலேயே இருக்கிறாளே, ஏன்? சாந்தியின் சிநேகிதி ஜெயந்தியைக் கூட வீட்டிற்குள் வர விடுவதில்லை. ஜெயந்தி இரண்டு முறை வந்து சாந்தியைப் பார்க்காமலேயே போய் விட்டாள். சாந்திக்கு என்னதான் ஆகிவிட்டது? தங்கைக்கு உடம்பு அவ்வளவு மோசமாய் இருக்கும்போது அந்த சூர்யகிரண் அப்படி வெளியே எப்படிச் சுற்றிக் கொண்டிருக்கிறான்? இதெல்லாம் ஏதோ மர்மமாய் இருக்கிறதே என்று குசுகுசுத்துக் கொள்ளத் தொடங்கினார்கள்.

காலேஜ் ஸ்டாஃப் ரூமில் கூட இது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாகி விட்டது.

அர்ஜுனன், மிதிலாவின் வீட்டுக்காரியான ஜெயந்தியின் பாட்டியிடம் வந்து— சாந்தியின் ஜுரமெல்லாம் பெரும் கண் துடைப்பு என்றும், சாந்தி நன்றாய்தான் இருக்கிறாள் என்றும், அந்தச் சாக்கில் மிதிலா அவர்கள் வீட்டில் இருந்து கொண்டு சூர்யகிரணோடு சிருங்காரம் நடத்திக் கொண்டிருக்கிறாள் என்றும் சொன்னாள்.

அவள் "ஐயோ, ஐயோ" என்று கன்னத்தில் இடித்துக் கொண்டாள். அவள் வீட்டில் இல்லாவிட்டால் வீட்டை உடனே காலி பண்ணிவிட வேண்டியதாய் மிதிலாவுக்குச் செய்தியைச் சொல்லியனுப்பினாள்.

40

மிதிலா அறைக்குள் வந்தாள். சாந்தி தலையணையில் முகத்தைப் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். மிதிலா கட்டிலுக்கருகில் வந்து உட்கார்ந்து கொண்டு சாந்தியை பலவந்தமாய் எழுப்பி மடியில் இழுத்து வைத்துக் கொண்டாள்.

"சாந்தி! இதென்ன கோலம்?"

"மேடம்... மேடம் எனக்கு செத்துப் போயிடலாம் போல இருக்கு" என்றாள்.

"ச்சீ! இதென்ன பேச்சு?" கண்டித்தாள்.

"எனக்கு...எனக்கு அந்த பயங்கரமான கனவை மறக்க முடியலை."

"சாந்தி! என்னதான் ஆச்சு, சொல்லேன்?"— மிதிலா கேட்டாள்.

"அன்றைக்கு உங்களிடமிருந்து திரும்பி வந்துட்டுருந்தேன். கருணாவின் வீட்டுக்குப் போகலாம்னுதான் நினைச்சேன். ஆனால் நேரமாயிடும் என்றும் வீட்டுக்குத் தாமதமாய் வந்தால் அண்ணா வருத்தப்படுவான் என்றும் நினைத்து வீட்டுக்கே வந்துட்டிருந்தேன்."

"அப்ப என்னவாச்சு?"

"வழியில்... வழியில்"

"உம்... வழியில்?"

"ராஜேஷின் கார் வந்துட்டிருந்தது."

"ராஜேஷா?" மிதிலா நிமிர்ந்து உட்கார்ந்தாள். அடுத்த அறையில் பேப்பர் படித்துக்கொண்டிருந்த சூர்ய

ரன் இந்த சம்பாஷணையைக் கேட்டுவிட்டு சட்டென்று பேப்பரைக் கீழே போட்டுவிட்டு எழுந்து வந்தான்.

கதவின் மேல் கையை வைத்துக்கொண்டு நின்றான் அவன்.

மிதிலா அவனைப் பார்த்ததுமே சப்தமிட வேண்டாம் என்பதுபோல உதட்டின் மேல் ஆள்காட்டி விரலை வைத்துக் காட்டினாள். சூர்யகிரண் செவிகளைத் தீட்டிக் கொண்டே சாந்தியின் வார்த்தைகளைக் கேட்கத் தொடங்கினான்.

"'என்னைக் காரில் வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறோம் வா' என்றார்கள். நான் வேண்டாம் என்றேன். ரொம்ப நல்ல படியாய் பேசினாங்க. எனக்குச் சந்தேகம் வரலை. நான் ஏறிக்கொண்டேன். என் வாயைப் பொத்திட்டாங்க. அப்புறம்..." சாந்தி திடீரென்று ஓவென்று அலறினாள். அவள் உடம்பு வெட வெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று.

"சாந்தி! சாந்தி! அழாதே!"— மிதிலா அழுது கொண்டிருந்த சாந்தியை எழுப்பி மார்போடு அணைத்துக் கொண்டாள். சாந்தியின் தலையைத் தோளில் சாய்த்துக் கொண்டு, பரிவோடு— "பாரும்மா! நீ ரொம்பச் சின்னப் பெண்ணாய் இருக்கிறதால ரொம்பவும் பீதியடைந்து போய்க் கொண்டிருக்கிறாய். கொஞ்சம் பெரியவளானால், வாழ்க்கையில் ஒவ்வொருத்தருக்குமே ஏதாவது ஒரு துன்பம் நேர்ந்துகொண்டேதான் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்வாய். சிலருக்குப் பணம் போய் பிச்சைக் காரங்களாகி விடுவாங்க. வேறு சிலரோ ஆத்மார்த்தமான உறவுகளை இழந்து தவிப்பாங்க. இன்னும் சிலர் வாழ்க்கை முழுதும் பயங்கரமாய் இருக்கும். கணவனை இழந்த பெண்— கணவன் கைவிட்ட பெண்— தாய் தந்தையரை இழந்து அனாதையாய் வேறிடங்களில் சிக்கிக்கொண்டிருக்கும்

குழந்தைகள்— வேண்டியவர்கள் இல்லாத நோயாளியான வயோதிகர்கள்— இப்படிச் சொல்லப் போனால் அநேக விதமாய் ஏதோ ஒரு விதத்தில் வருந்திக்கொண்டேதான் இருக்காங்க எல்லோருமே. சிலருக்குப் பணம் போனால் வேறு சிலருக்கு பெயர் போய் விடுகிறது. வேறு சிலருக்குக் கற்பு போய் விடுகிறது. வாழ்க்கை என்றால் வருத்தமும் வேதனையும் எதிர்ப்படாமல் இருக்காது. சாந்தி! எந்த வருத்தத்திற்குமே மருந்து காலந்தான்! அதுதான் விநோதமாய் மனிதனை வருத்தங்களிலிருந்து மீட்கிறது. உனக்கு செத்துப் போகணும் போல தோன்றுகிற இந்த விஷயம் சில ஆண்டுகளுக்குப் பிறகு எதுவுமே தோன்றாமல் போகலாம். உண்மையில் வாழ்க்கையில் இது ஒரு தியக் கனவுதான். தியக்கனவு ஒரு நடவை வந்துவிட்டதேன்னு பிறகு தூங்காமல் இருந்துவிடுவோமா? அதே போலதான் ஒரு துன்பகரமானச் சம்பவம் நிகழ்ந்துவிட்டதேன்னு உன் வாழ்க்கையையே போக்கடித்துக் கொள்ளக்கூடாது. காலில் அடிபட்டு விட்டால் காலையே எடுத்துவிடுவோமா? சொல்லு சாந்தி! நடக்கக்கூடாததுதான் நடந்து விட்டது. ஒப்புக்கிறேன். ஆனால் நீ தைரியத்தை உண்டாக்கிக் கொள்ளணும். இதில் நீ எந்த தப்பும் பண்ணலை. நீ எதற்கும் பொறுப்பாளி அல்ல. உன் முயற்சி இல்லாமல் உன் மேல் வந்து தெளித்துவிட்ட சேறு இது! சேறு பட்டால், குளித்துவிட்டால் அந்த உடம்பு அழுக்கு போய்விடும். இப்படிப்பட்ட சம்பவம் நடந்தால், மன உறுதியோடு எதிர்த்து நின்றால் இந்த தியக்கனவு மறுகி போய்விடும். சாந்தி! நீ தைரியமாய் இருக்கவேண்டும். நீ எதற்காக வருந்தணும், சொல்லு? உன் நூறாண்டு வாழ்க்கையை ஏன் பாழடித்துக் கொள்ளணும்? நீயாகவே செய்த தப்பு எதுவும் இல்லையே? உன் மனதிற்கு நீ இதைத்தான் எடுத்துச் சொல்லிக் கொள்ளணும். இப்படி நினைத்துக்கொண்டு உன் மனதை உறுதியாய் வைத்துக் கொள்ளணும் நீ. ஏதோ நடந்துவிட்டதேன்னு மனம் தளர்ந்து போய்விடக்கூடாது. என் பேச்சைக் கேட்பா

யோனோ? என் கண்ணில்லையா? நீ உங்கண்ணாவுக்காக வாவது பழையபடி ஆகணும். நீ எழுந்து நடமாடினாலே யோழிய அவருக்கு தைரியம் வராது. அண்ணாவுக்காக வாவது நீ பலத்தை வரவழைத்துக்கணும். என்ன சொல் நிறாய்?" என்றாள்.

சாந்தி அழுவதை நிறுத்தினாள். மனம் யோசிக்கத் தொடங்கிற்று. மிதிலாவின் வார்த்தைகள் பாதிக்கப்பட்ட அவள் மனதிற்கு இதமாய் இருந்தது. தான் எந்த தப்பும் பண்ணவில்லை என்ற யோசனையை ஏற்படுத்திற்று.

"சொல்லும்மா, நான் சொன்னதெல்லாம் நிஜந் தானே?" என்றாள் மிதிலா.

"நிஜந்தான் மேடம். நிஜந்தான்" என்றாள் சாந்தி.

மிதிலாவுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. சாந்தியின் தூலில் இருந்த அழுகை குறைந்தது. பேச்சில் இருந்த பாரம்கூட போய்விட்டது.

ஒரு மணி நேரங்கழித்து சாந்தி எழுந்து முகம் கழுவிக் கொண்டு புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு புரட்டிக்கொண்டிருந்தாள். அதைப் பார்த்ததுமே மிதிலா சந்தோஷமடைந்தவளாய் சூர்யகிரணுக்காக அவன் அறைக்கு ஓடிவந்தாள். அங்கே அவன் இல்லை. விடெல் லாம் தேடிப் பார்த்தாள். காணவில்லை.

வேலைக்காரப் பையனிடம் "ஐயா எங்கே?" என்று கேட்டாள்.

"என்னவோ தெரியாதும்மா. இப்பத்தான் ஸ்கூட்டரில் போனார்" என்றான்.

மிதிலா யோசனையில் ஆழ்ந்தபடி நின்றுவிட்டாள். சாதாரணமாய் அவன் வீட்டைவிட்டு எந்த வேலையாய் போனாலும் எங்கே போகிறான், எப்பொழுது திரும்பி வருவான் என்று சொல்லிவிட்டுதான் போவான். அப்படி இன்றென்று சொல்லாமல் எங்கே போயிருப்பான்? அவளுக்குப் புரிபடவில்லை.

ஒரு மணி நேரங்கழித்து கார் சப்தம் கேட்டது. டாக்டர் சர்மா வந்தார். அவரோடு கூடவே சூர்யகிரணும் இருந்தான். அவன் தலையில் காயத்திற்குக் கட்டுப் போடப்பட்டிருந்தது.

"என்னவாச்சு? அதென்ன கட்டு?" மிதிலா பரபரப் போடு கேட்டாள்.

"பாரும்மா இவன் ஆவேசத்தை, சாந்தியைக் காரில் அழைச்சுட்டுப் போனவங்க ராஜேஷ் முதலியவர்கள்தான் என்று தெரிந்ததாம். நேராய் போய் ராஜேஷை செம்மையாய் அடித்துக் கொண்டிருந்த சமயத்தில் நான் அந்த பக்கமாய் போனதால் குறுக்கிட்டுத் தடுத்து இழுத்துக் கொண்டு வந்தேன். இல்லாவிட்டால் இதற்குள் ராஜேஷைக் கொன்றிருப்பான். போலீஸ் கேஸ் தந்து ராஜேஷை அரெஸ்ட் பண்ணுவதாய் இழுத்துட்டுப் போன போது நான் தடுத்துவிட்டேன். ரிபோர்ட் தருவதால் சாந்தியின் வாழ்க்கை கேலிக்குரியதாய் ஆகுமே தவிர வேறெந்த லாபமும் இருக்காது"

"ஆமாம். நானும் அப்படித்தான் நினைச்சேன். நாம்ப சாந்தி இதை மறக்கும்படிச் செய்யணுமே தவிர, மேலும் ஞாபகப்படுத்தக்கூடாது" என்றாள் மிதிலா.

மிதிலாவும் சர்மாவும் சூர்யகிரணுக்கு நயமாய் எடுத்துச் சொல்லி சாந்தப்படுத்துவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

"என்ன பண்றது சொல்லு? சில சமயம் மனிதர்கள் இப்படி ராஜியாக வேண்டியிருக்கு. அது நம்ப நல்லதுக் காகத்தான்னு நினைச்சுக்கணும்" என்றார் சர்மா.

41

"என்ன அநியாயம்! ராஜேஷை ஒரு ஆள் பட்டப் பகலில் பிடித்து இப்படிச் செய்யுமையாய் உதைப்பதா? நீங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டே சும்மாயிருந்தீர்களா? நீங்களும் மனிதர்கள்தானா? உங்களுக்கு வெட்கம் இருக்கா? நீங்கள ராஜேஷின் நண்பர்கள் என்று சொல்லிக்க வெட்கப்படணும்.

சூர்யகிரணுக்கு என்ன தைரியம்! ராஜேஷ் செய்த தப்பு தான் என்ன? நீங்கள் வாயை மூடிக்கொண்டு பெண்களைப் போல அவங்களை அப்படி பார்த்துட்டிருந்தீங்களோ?" -அர்ஜுனன் கோபமாய் கத்தினான்.

ராஜேஷ் ஓட்டலில் நண்பர்களோடு சேர்ந்து காபி குடித்துக் கொண்டிருக்கையில் சூர்யகிரண் நேராய் வந்து அவன் ஷர்ட்டைப் பிடித்து, கன்னங்களில் மாறி மாறி அடித்தான். உள்ளங்கைகளை மடக்கிக்கொண்டு தோள் மீது குத்தினான் ஓட்டல் முதலாளி ஓடி வந்தார்.

அங்கே காபி குடித்து கொண்டிருந்த சர்மா இங்கே நடந்த கலாட்டாவைப் பார்க்க வந்தவர் அங்கே சூர்ய கிரணைப் பார்த்துவிட்டுச் சட்டென்று வந்து அவன் பிடியிலிருந்து ராஜேஷை விடுவித்தார். அங்கிருந்து இழுத்துக்கொண்டு போய்விட்டார்.

வாசுவும் சீனுவும் ரங்கனும் வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ராஜேஷை வீட்டிற்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கே அர்ஜுனன் உட்கார்ந்து ஸ்ரீபதியோடு பேசிக் கொண்டிருந்தான்.

நடந்ததையெல்லாம் கேட்ட அர்ஜுனன் லெகுண் ஆனான்.

வாசுவைப் பார்த்து— ''உங்களுக்கு ரோஷம் இருந்தால்— ராஜேஷின் பணத்தில் இவ்வளவு நாளாய் சொந்தப் பணத்தைப்போல சாப்பிட்டுக் கொண்டிருந்தோம் என்கிற நன்றி இருந்தால் போங்கள். போய் அவன் வீட்டைக் கொளுத்திச் சாம்பலாக்கிவிட்டு வாங்க. பார்த்துக் கொண்டே பெண் பிள்ளைங்களைப் போல உட்கார்ந்திருக்காதீங்க'' என்றான்.

மகனை அவ்வளவு காயங்களுடன் பார்த்த கணபதிக்கு கண்ணீர் வரத் தொடங்கிற்று. அவர் பெற்ற மனம் பரிதவித்தது. உடனே டாக்டரை வரவழைத்து காயங்களுக்கு மருந்து போட்டு கட்டுக் கட்டச் செய்தார்.

அர்ஜுனன், வாசு முதலியவர்களைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்ததை கவனித்த கணபதி அவனை சாந்தப் படுத்திவிட்டு— ''அர்ஜுனா! அவசரப்படாதே! மொதல்ல என்ன நடந்ததுன்னு தெரியணும். சூர்யகிரண் அப்படி அவசரப்பட்டு கையை ஓங்குகிற ஆள் இல்லை. மொதல்ல விஷயம் என்னன்னு தெரிஞ்சுக்கணும் என் மகனை அடித்தவனை நான் விடுவேனா? நாமும் ஆவேசப்பட்டால் விஷயம் இன்னும் விஷமயமாகிவிடும்'' என்றார்.

அவர் பெரியவர். சூர்யகிரண் காரணமில்லாமல் ராஜேஷை அவ்வாறு அடித்திருக்க மாட்டான். அப்படி ஆவேசமாய் அடித்திருக்கிறான் என்றால் ராஜேஷ் மூலமாய் ஏதோ நடக்கக்கூடாதது தான் நடந்திருக்க வேண்டும். எதுவாய் இருந்தாலும் சூர்யகிரண் வந்து அவரிடம் புகாரிட்டிருந்தால் நன்றாயிருக்கும். சின்னப் பையனைப் போட்டு அடிப்பது அழகில்லையே, என் றெண்ணிக் கொண்டார்.

அர்ஜுனனும், வாசுவும், ரங்கனும் சீனுவும் வெளியே வந்தார்கள். அர்ஜுனன் கேலியாய்— ''அந்தக் கிழவர் அப்படித்தான் சொல்லுவார். உங்களுக்கு ரோஷம் இருந்தால் உங்கள் நண்பனுக்கு நேர்ந்த அவமானத்திற்குப் பழி வாங்குங்கள்'' என்றான்.

''இத்தனைக்கும் காரணம் அந்த மிதிலாதான். அவளால்தான் இவ்வளவு தொல்லைகளும்'' என்றான்.

''நாங்கள் பழிவாங்கியே திருவோம்'' என்றான் வாசு.

அர்ஜுனன் அவன் தோளில் தட்டினான் பாராட்டுவது போல. ''அப்படீன்னால் நீ ராஜேஷுக்கு உண்மையான ஃப்ரெண்ட்தான்'' என்றான்.

அன்றிரவு சூர்யகிரணின் கோழிப் பண்ணையில் நீப்பிடித்துக் கொண்டுவிட்டது. நள்ளிரவில் ஏனோ விழிப்பு வந்து பார்த்த பொழுது எதிரே சிவப்பாய் நீ வெளிச்சம் தென்பட்டது. படபடவென்று வெடித்தச் சப்தம்கூட கேட்டது. மிதிலா கலவரமடைந்தவளாய் எழுந்தாள். எங்கும் நீ. கோழிப் பண்ணையில் நீப்பற்றிக் கொண்டு எரிந்து கொண்டிருந்தது.

மிதிலா ஓடிப்போய் சூர்யகிரணை எழுப்பினாள். அவன் எழுந்திருந்தான். மிதிலா சொல்லிக் கொண்டிருந்த பொழுதே அவனுக்கு அந்த நீ வெளிச்சம் என்னவென்று புரிந்துவிட்டது. அவனும், வேலையாட்களும் மிதிலாவும் ஓடினார்கள்.

கோழிப் பண்ணை முழுவதுமே நீப்பிடித்துக்கொண்டு விட்டது. கோழிகள் கத்திக் கொண்டிருந்தன. அந்த நீக்கு தடுவே சிக்குண்டு உயிரோடு தகனமாகிக் கொண்டிருந்தன. சூர்யகிரண் பைத்தியம் பிடித்தவனைப் போல ஓடிக்கொண் டிருந்தான். தீயணைக்கும் இஞ்ஜின்கள் கணகணவென்று சப்தமிட்டுக் கொண்டே வருவதற்குள் நடக்கவேண்டிய நஷ்டம் நடந்தேறியே விட்டது. நீலை மேலும் இரு பக்கங் களிலும் பரவாமல் தடுக்கத்தான் அவர்களால் முடிந்தது.

எல்லாம் முடிவடைவதற்குள் பொழுது விடிந்து விட்டது. கிழக்கே ஒளிக்கற்றைகள் தென்படத் தொடங் கின.

அந்தக் கோழிப் பண்ணைக்கெதிரே சூர்யகிரண் வாயடைத்துப் போய் சிலையாய் சமைந்து போய்

உட்கார்ந்திருந்தான். நேற்றிரவு வரை அவனுடைய சுந்தரக் கனவாய் இருந்த அந்தப் பண்ணை, விடிவதற்குள் புழுதியாகி விட்டது! அவன் சலனமில்லாமல் உட்கார்ந் திருந்தான். யார் செய்தார்கள் இந்தக் காரியத்தை? யாரோ வேண்டுமென்றேதான் செய்திருக்கிறார்கள்!

மறுநாள் இச்செய்தி ஊரெல்லாம் குப்பென்று பரவி விட்டது. எல்லோரும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். அந்த தகனக்காண்டத்தைப் பற்றிப் பலவிதமாய் கதைக் கதையாய் பிரசாரமாயின.

42

பத்து நாட்கள் கழிந்தன.

இந்த பத்து நாட்களும் மிதிலா சாந்தியுடனேயே அவளுக்கு நிழலாய் இருந்துவந்தாள். சூர்யகிரண் உள்ளூர வேதனையை மென்று விழுங்கிக் கொண்டிருந்தாலும் மேலுக்கு உறுதியோடு இருக்க முயற்சி பண்ணிக் கொண் டிருந்தான். சாந்தியைப் பற்றிய வேதனையும், கோழிப் பண்ணை தீக்கிரையானதால் ஏற்பட்ட நஷ்டமும் சூர்யகிரணை மிகவும் மனத்தளர்ச்சியடையும்படி செய்த போதிலும், மேலுக்கு மட்டும் அவன் முகத்தில் முறுவல் சிதறவில்லை. இவ்வளவு வேதனையும் ஒரே சமயத்தில் வந்து தாக்கியபோது அதை மென்று விழுங்கிக் கொண்டு எப்பொழுதும் போல இருக்க வேண்டுமானால் அதற்கு இமயமலைக்கு ஒப்பான மனஉறுதி தேவை! மிதிலாவுக்கு அவன் மீது இருந்து வந்த அன்பு இரு மடங்காகி விட்டது.

சாந்தி இந்த பத்து நாட்களில் மிதிலாவின் பரிவான வார்த்தைகளாலும், தாயாகவும், அக்காவாகவும், சிநேகிதி

யாகவும், மிக அன்பிற்குரியவளாகவும் இருந்த மிதிலாவின் நெருக்கத்தாலும், சூர்யகிரணின் அன்பின் பலத்தாலும் மெதுவாய் தேறிக் கொள்ளத் தொடங்கினாள். அந்த பயங்கரமான அனுபவத்தை மறக்கமுடியா விட்டாலும் அதிலிருந்து தேறிக் கொள்ள முயன்றாள். உடம்பு கொஞ்சம் நலமாயிற்று. கண்களில் இருந்த பீதி குறைந்தது. மூலையில் போய் கூனிக்குறுகி உட்கார்ந்து கொண்டிருந்த பழக்கம் குறைந்தது. சாந்தி மிதிலாவின் யோசனைப்படி நிங்கட்கிழமையிலிருந்து காலேஜுக்குப் போகச் சம்மதித் தாள். சாந்தி சொன்ன இம்முடிவைக் கேட்டதுமே மிதிலாவும் சூர்யகிரணும் தம் இதயத்திலிருந்த பெரிய பாரம் நீங்கினாற் போல ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அன்றைக்கு முதல் தேதி!

சூர்யகிரண் வீட்டில் இல்லை. வேலை இருந்ததால் வெளியே போயிருந்தான்.

மிதிலா சம்பளம் வாங்கிக் கொள்வதற்காக காலேஜுக்குப் புறப்பட்டாள். மிதிலா வீட்டை விட்டு வெளியே காலடி வைத்து பத்து நாட்களாகி விட்டது.

இந்தப் பத்து நாட்களும் வெளியே என்ன புயல் அடித்துக் கொண்டிருந்தது என்று மிதிலாவுக்குத் தெரியாது.

குதிரை வண்டியில் காலேஜுக்குப் புறப்பட்ட மிதிலா வெளியே சுவர்களில் எல்லாம் எழுதப்பட்டிருந்த வார்த்தை களைப் பார்த்து விக்கித்துப் போய் விட்டாள்.

சுவர்களில் எங்கே பார்த்தாலும் மிதிலா சூர்யகிரண் இருவரின் பெயர்களும் சேர்ந்து அருவருப்பான வார்த்தை களில் தென்பட்டன.

மிதிலாவின் குதிரை வண்டி காலேஜ் கேட்டிற்கு முன்னால் வந்து நின்றது! மிதிலா வண்டியை விட்டு இறங்கிக் கொண்டிருந்தபோது அங்கிருந்த மாணவர்கள்

விலடிக்கத் தொடங்கினார்கள். காலேஜ் சுவர்களில் எல்லாம் சூர்யகிரணோடு மிதிலா நடத்திக் கொண்டிருந்த காதல் லீலைகளையெல்லாம் படங்களாய் சித்திர ராமாயணத்தைப் போல வரைந்து தள்ளியிருந்தார்கள்.

''நள்ளிரவு வேளையில் ஸ்கூட்டரில் மிதிலா தேவியாரின் காதல் பயணம்.''

''மாணவிக்கு ஜுரம் என்று பாவம் மிதிலா தேவியார் அவர்கள் வீட்டிலேயே குடித்தனம்.''

''தங்கையின் ஜுரம் சாக்கு! அண்ணனின் அறையில் படுக்கை!''

''மேடம் சூர்யகிரணோடு ப்ளூம்பிலிமைத் தோற்கடிக்கக் கூடிய அளவிற்கு நடத்தும் ரோமன்ஸ்!''

''மேடம் காலேஜுக்கு ஏன் வருவதில்லை? சூர்யகிரணின் கையில் சிறைப்பட்டு விட்டாள். பாவம்! தடுப்பவர் கிடையாதா?''— அந்த வார்த்தைகள் மிக அசிங்கமாகவும் அருவருப்பைத் தோற்றுவிக்கும்படியாகவும் வருணிக்கப்பட்டிருந்தன.

மிதிலா காலேஜுக்குள் வந்து கொண்டிருக்கும் பொழுது மாணவர்கள் குசுகுசுக்கத் தொடங்கினார்கள். ரமாவும் சாரதாவும் மிதிலாவைப் பார்த்தும் பார்க்காதவர்களைப் போல தலையைத் திருப்பிக் கொண்டு போய் விட்டார்கள். அவர்கள் தோரணையைப் பார்த்து மிதிலாவின் மனம் சுருக்கென்றது. அவர்களும் மாணவர்களோடு சேர்ந்து அவளைத் தாழ்வாய் மதிக்கத் தொடங்கி விட்டார்கள் போலும். மிதிலாவின் உதடுகளில் விரக்திப் புன்னகை நெளிந்தது.

மிதிலா நேராய் பிரின்ஸிபாலின் அறைக்கு வந்தாள். அவர் மிதிலாவைப் பார்த்ததுமே முகத்தைச் சுளித்துக் கொண்டார். வேண்டாவெறுப்பாய் உட்காரும்படி சைகைக் காட்டினார். மிதிலா உட்கார்ந்தாள்.

அவர் சம்பளத்தைத் தந்து கொண்டே— ''மிதிலா தேவி! உங்களை உத்யோகத்திலிருந்து தள்ளிட்டோம். இதோ ஆர்டர்'' என்றார்.

மிதிலாவின் முகம் மலர்ந்து விட்டது. ஆனால் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

''உத்யோகத்திலிருந்து என்னைத் தள்ளி விடுவதற்குக் காரணம் என்ன சார்?''

''உங்க நடத்தை''

''நான் என்ன செய்தேன்?''

''கல்யாணமாகாமல் வேற்று மனுஷன் வீட்டில் போய் இருப்பது''

''அது என் பெர்சனல் விஷயம்''

''நீங்கள் காலேஜுக்கு வருவதில்லை''

''நான் லீவு போட்டிருந்தேன். எனக்கு இன்னும் ஒரு மாதம் லீவு இருக்கு...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன் நடத்தையைப் பற்றி போர்டு மெம்பர்களுக்கு நிறைய ஆட்சேபணைக்குரிய கடிதங்கள் வந்திருக்கின்றன. மாணவர்கள் ரகளைப் பண்றாங்க. நீங்கள் எந்த காலேஜுக்கு உத்யோகத்திற்காக வந்திருக்கிங்களோ அந்த காலேஜின் உரிமையாளரான கணபதியின் மகன் ராஜேஷை சூர்யகிரண் அடித்திருக்கிறான்.

''அது அவங்க சொந்த விஷயம். நான் எப்படி பொறுப்பாளியாக முடியும்?''

''அதற்கு நீதான் காரணம் என்கிறாங்க''

''ஒரு காகிதம் தரீங்களா?''— கேட்டாள் மிதிலா.

அவர் தந்தார். மிதிலா உட்கார்ந்து கொண்டு அக்காகிதத்தில் தன் நடத்தையைப் பற்றி நிர்வாகம் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிந்தனைகளுக்கெல்லாம் பதில்

எழுதினாள். அதை அவருக்கு முன்னால் தள்ளி விட்டு— ''இது என் பதில்! இந்த பதில் திருப்தியளிக்காவிட்டால், என் நடத்தையில் உள்ள குற்றத்தை நிரூபித்தால் நான் கண்டிப்பாய் போய் விடுகிறேன். சூர்யகிரண் என்னை மணக்கவிருக்கிறவர். நான் அவரோடு நீதி கேட்ட முறையில் தங்கியிருக்கவில்லை. இது உங்களுக்கு ஆட்சேபணையானால் என்னால் பதில் சொல்ல முடியாது. நீங்கள் என்னை உத்யோகத்திலிருந்து தள்ளி விடுவதற்கு என் பெர்சனல் லைஃப்தான் காரணமானால், இந்த காலேஜில் ஒரு லெக்சரர் கூட இருக்க முடியாது. அதை என்னால் நிரூபிக்க முடியும்'' என்றாள்.

அதற்குள் பிரின்ஸிபால் அறையின் ஜன்னலுக்கருகில் சத்தடி கேட்டது. அவர் ஜன்னல் திரைச்சீலையை ஒதுக்கி பார்த்தார். அங்கே காலேஜ் மாணவர்கள் எல்லோரும் கும்பலாய் வந்து கூடியிருந்தார்கள்.

''மிதிலா லெக்சரர் டௌன் டௌன்!''

''மிதிலா மேடத்தை காலேஜிலிருந்து தள்ளி விட வேண்டும்.''

''மிதிலா காலேஜுக்கு வந்தால் நாங்கள் வர மாட்டோம்.''

மிதிலா கூட அவர்களைப் பார்த்தாள். அவர்களில் வாசு, ரங்கன், சீனு இருந்தார்கள். அவர்கள்தான் பெரிதாய் கத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அருவருப்பான காமெண்ட்ஸ்களை எடுத்து வீசிக் கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அவ்விடத்திற்கு வெள்ளமாய் வந்து கூடத் தொடங்கி விட்டார்கள்.

''அவங்க ரொம்ப ரகளைப் பண்றாங்க. நீங்க சீக்கிரமாய் போய் விடுவது நல்லது''— பிரின்ஸிபால் எச்சரித்தார்.

மிதிலா கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

அங்கே வராந்தா முழுவதும், இறக்கத்திலும், புல்வெளியிலும் மாணவர்கள் எள் விழ இடமில்லாமல் கூடியிருந்தார்கள்.

மிதிலாவைப் பார்த்ததுமே ''டௌன், டௌன்'' என்று கத்தத் தொடங்கினார்கள்.

மிதிலா ஒரு வினாடி அவர்களையே பார்த்தாள்.

அந்தப் பார்வையில் எந்த தடுமாற்றமும் இல்லை.

அம்முகம் பயம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் இருந்தது. மிதிலா காரிடாரில் நடந்து போய்க் கொண்டிருக்கையில் ஒரு அழுகிய கோழி முட்டை படாரென்று மார்பின் மேல் வந்து விழுந்தது. அது உடைந்து புடவையெல்லாம் அசிங்கமாகி விட்டது.

அதைத் தொடர்ந்து ஒரு பழுத்த தக்காளிப்பழம் வந்து கன்னத்தைத் தாக்கிற்று. மிதிலா கன்னத்தைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

வாசு மாணவர்களோடு சேர்ந்து மிதிலாவுக்கெதிராய் 'கேரோ' பண்ணுவது போல வந்து நின்றான்.

''என்ன மேடம்! எப்படி இருக்கீங்க?''— கன்னைக் கொட்டிக் கொண்டே கேட்டான். எஞ்சியவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். மிதிலா அங்கிருந்து அப்பால் போக முயன்றாள். அவ்விடமெல்லாம் மாணவர்கள் இருந்தார்கள். எல்லோரும் மிதிலாவைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள்.

மிதிலா அவர்களுக்கு நடுவே சிக்கிக் கொண்டு விட்டாள்.

'என்ன பண்ணுவது? இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது?' என்று அவள் மனம் வேகமாய் யோசித்துக் கொண்டிருந்தது.

அதற்குள் வாசுவின் கழுத்திற்கருகில் ஷர்ட்டைப் பிடித்து பின்னுக்கு இழுத்தார்கள் யாரோ. அவன் திரும்பினான். சூர்யகிரண் அங்கே நின்றிருந்தான். எல்லோரும் மிதிலாவையே பார்த்துக் கொண்டு, எந்த விதத்தில் அவளை அழ வைக்கலாம் என்பதில் உற்சாகத் தோடு ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் சூர்யகிரண் வந்ததை கவனிக்கவில்லை. சிலருக்கு சூர்யகிரணை யார் என்று கூட தெரியாது.

சூர்யகிரண் மிதிலாவிடம் வந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டான். எல்லோரையும் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே, ''அவள் என் வருங்கால மனைவி! உங்களில் ஏறக்குறைய ஒவ்வொரு குடும்பமும் எனக்குத் தெரிந்ததுதான். இவளிடம் நீங்கள் யாராவது அசிங்கமாய் நடந்து கொண்டால் உங்களை ஒரு கை பார்த்து விடுவேன். அதற்குத் தகுந்த தண்டனையை நீங்கள் பெருமளவில் அனுபவிக்க வேண்டியிருக்கும்'' என்றான். அவன் கண்கள் கூர்மையாய் இருந்தன. அவன் அடியுண்ட புலி, பாயத் தயாராய் இருப்பது போல இருந்தான். அந்தச் சமயத்தில் அவன் கண்களில் தென்பட்ட சக்தி அவர்களைக் கொஞ்ச நேரம் வாயடைத்துப் போகச் செய்து விட்டது. கணீரென்ற அவன் குரல் அவர்களுக்கு சொரணையை வரவழைத்தாற் போலிருந்தது. அவன் சொன்னபடி செய்தே தீருவான் என்று தோன்றிற்று. அவனோடு மோதிக் கொள்ள யாருக்கும் பிடிக்கவில்லை. மிதிலாவை வேண்டுமானால் அழவைத்து விடலாம் என்று நினைத்தார்களே தவிர, சூர்யகிரண் அங்கே எதிர் பாராமல் வந்து விட்டதால் கொஞ்சம் தணிந்து போனார்கள். எல்லோரும் நிசப்தமாய் பார்த்துக் கொண் டிருந்தார்கள். சூர்யகிரணைப் பார்த்ததும் விநோதமாய் வாசு கூட கொஞ்சம் தணிந்தான். பின்னுக்குப் போய் விட்டான். வாசு தணிந்ததைப் பார்த்து எஞ்சியவர்களும் வாயடைத்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் மௌனமாய் பார்த்துக் கொண்டிருக்க, சூர்யகிரண் மிதிலாவின் கையைப் பிடித்துக் கொண்டு, பயமில்லாமல், மிடுக்காய், மகாராஜனைப்போல வெளியே வந்தான். ஒருத்தர் வாயைத் திறக்கவில்லை! ஒருத்தர் வாய்க்கு வந்தபடி கத்தவில்லை.

வெளியே வந்ததும் சூர்யகிரண் கைக்குட்டையை ஜேபியிலிருந்து எடுத்து மிதிலாவின் கன்னத்தில் படிந் திருந்த தக்காளிப்பழ விதைகளைத் துடைத்தான்.

''நான் வீட்டிற்கு வந்தபோது சாந்தி நீ காலேஜுக்குப் போயிருப்பதாய் சொன்னாள். தலியாய் போயிருக் கிறாய்னு சொன்னதுமே எனக்கு ஏனோ கலக்கமாய் இருந்தது. உடனே ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். நான் வந்ததே நல்லதாயிற்று'' என்றான்.

மிதிலா தலையசைத்தாள். அவனோடு ஸ்கூட்டரில் வந்து கொண்டிருக்கையில் மிதிலாவுக்கு காலேஜில் நடந்த சம்பவமே நினைவிற்கு வந்து கொண்டிருந்தது. எந்த இடத்தில் மாணவர்கள் எல்லோருமாய் தன்னை தெய்வமாய் ஆராதித்து வந்தார்களோ அதே இடத்தில் தான் இவ்வளவு அவமானத்தைப் பட்டிருக்கிறாள்.

சூர்யகிரண் வராமலிருந்திருந்தால் அவன் இந்நேரம் எதாவது ஆஸ்பத்திரியில் இருந்திருப்பானோ என்னவோ! மிதிலா ஒரு லெக்சரர்! அவளுக்கு மாணவர்களின் மனத் தத்துவம் நன்றாகவே தெரியும். அவர்களுக்கு அன்பு தோன்றி விட்டாலோ, அல்லது அவமானப்படுத்த வேண்டு மென்றாலோ மிகையாகவே நடந்து கொள்வார்கள். அது அவர்கள் சுபாவம்.

43

சூர்யகிரண் தன் கோழிப் பண்ணையைத் தீக்கிரை யாக்கியது வேண்டாதவர்கள் யாரோ செய்த காரியந்தான் என்று போலீசில் புகார் கொடுத்தான். போலீசார் விசாரணையைத் தொடங்கினார்கள். அந்த அக்கிரமச் செயலை செய்தவர்கள் வேறு யாரோ இல்லை என்றும், வாசு, ரங்கன், சீனு மூவருந்தான் என்றும் துப்பு வெளி யாயிற்று. வாசுவும் ரங்கனும் போலீஸ் என்றதுமே பயந்து விட்டார்கள். தாம் தப்பித்துக் கொண்டு விட முடியாது என்றும் நிலைமை மிக விஷமமாகி விட்டது என்றும் எண்ணினார்கள். ராஜேஷ் பண்ணச் சொன்ன தால் பண்ணினோம் என்றும், தமக்குப் பணம் தந்தான் என்றும் ராஜேஷின் மேல் தள்ளி விட்டார்கள். சூர்யகிரண் ராஜேஷை ஏன் அடித்தான் என்ற கேள்வி வந்தது. அதன் மூலம் தும்பை இழுத்தால் வால் வெளி வந்தது என்ற கதையாய் சாந்தியை ரேப் பண்ணிய கதையெல்லாம் வெளியே வந்தது.

வாசு, ரங்கன் இருவரும் சாந்தியை ரேப் பண்ணிய தம்மோடுகூட ராஜேஷும் இருந்தான் என்றும் அவன் தான் காரை ஓட்டி வந்தான் என்றும் அவன்தான் சாந்தியைக் கடத்திக் கொண்டு போய் விடலாம் என்று தூண்டி விட்டான் என்றும் சொன்னார்கள்.

"நான்சென்ஸ்! எனக்கு இதெல்லாம் தெரியவே தெரியாது. அவங்க பொய் சொல்றாங்க" என்றான் ராஜேஷ் கோபமாய் பற்களை நறநறத்தபடி. ஆனால் போலீசார் ராஜேஷ் வார்த்தைகளை நம்பவில்லை.

அவன் கார் சாந்தியைக் கடத்திச் சென்றிருக்கிறது.

அவன் காரில் இருந்தாய் வாசு சொல்கிறான். இல்லை என்று ராஜேஷ் சொல்கிறான். அல்விருவரில் யார் நிஜம் சொல்கிறார்கள், யார் பொய் சொல்கிறார்கள் என்று போலீசாருக்குப் புரிபடவில்லை. அவர்கள் ராஜேஷையும் அரெஸ்ட் பண்ணினார்கள்.

வாசு முதலியவர்கள் ஒரு புதைச்சேற்றிற்குள் அமுங்கிப் போய் விட்டார்கள். இதெல்லாம் இவ்வளவு தூரத்திற்கு வந்து விடும் என்று அவர்கள் யாருமே நினைத்திருக்க வில்லை. வாசுவுக்கு யாரும் இல்லை. ரங்கனை அவன் தந்தை ஜெயிலில் தள்ளினாலும் ரொம்ப சந்தோஷம் என்றும் போலீசுக்குத் தானே பணிகள் தருவதாகவும் சொல்லி விட்டார்.

சீனுவுக்கும் ரங்கனுக்கும் பொருளாதார வசதி இடையாது. அவர்களைத் தூண்டிவிட்ட அர்ஜுனனோ மௌனமாய் இருந்து விட்டான். அவன் கை கொடுக்க வரவில்லை.

ராஜேஷ் ஒருத்தன்தான் அவர்களுக்கு ஆதாரம்.

ராஜேஷையும் தம்மோடு கூட இந்தப் புதைச் சேற்றிற்குள் இழுத்து விட்டால் அவன் தந்தை சும்மா யிருக்க மாட்டார்.

ராஜேஷுக்காகவாவது தாம் எல்லோரையும் போலீசாரின் பிடியிலிருந்து மீட்டு விடுவார்.

அவர்கள் எண்ணியதே நிஜமாயிற்று!

கணபதி ஜாமீன் தந்து அந்நால்வரையும் போலீசாரிட மிருந்து விடுதலை செய்தார்.

வீட்டிற்கு வந்ததுமே அவர் மகனைக் கண்டித்தார்.

"ராஜேஷ்! நீ என்னவோ பொழுதுபோக்கிற்காக நேநெதர்களுடன் சுற்றுகிறாய் என்று எண்ணியிருந்தேனே தவிர இப்படிப்பட்ட மோசமான காரியங்களில் இறங்கு விடுவாய் என்று நினைத்திருக்கவில்லை. நீ படிக்கா

விட்டால்கூட இவ்வளவு வருத்தம் ஏற்பட்டலை எனக்கு. இப்பொழுது சொல்லு! உன்னைக் கொன்று அந்த பாவத்துக்குப் பிராயசித்தம் பண்ணிக்கச் சொல்கிறாயா?" என்றார். அவர் முகத்தில் என்றுமே தோன்றியிராத ஆவேசம் தென்பட்டது. "உனக்கென்னடா குறைச்சல் பண்ணிட்டேன் நான்? கேட்டபொழுதெல்லாம் பணம் தந்தேன். என்ன வேணுமானாலும் நிமிஷத்தில் வரவழைத்துத் தந்தேன். நான் உன்னை என்ன கேட்டுக் கொண்டேன்? படிக்கச் சொன்னேன். குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றச் சொன்னேன். அவ்வளவுதானே? இது கேட்கக் கூடாததாடா? சொல்லு. தந்தையாய் உனக்கு எல்லா வசதிகளையும் பண்ணித் தருவேன் நான். ஆனால் நீ மகனாய் ஒரு சின்ன பொறுப்பைக்கூட நிறைவேற்றமாட்டாய். நான் உனக்கு சந்தோஷத்தைத் தந்தால் நீயோ எனக்கு துக்கத்தை மூட்டைக் கட்டித் தருகிறாய். இவ்வளவு புத்திசாலியான உனக்கு இதுகூட தெரியாதாடா? அவ்வளவு தூரம்கூட யோசித்துப் பார்க்க முடியலையா?"

அவர் தொண்டை அடைத்துக் கொண்டது. வார்த்தைகள் வெளி வரவில்லை. அங்கிருந்த நாற்காலியில் சரிந்தார்.

ராஜேஷ் எதுவும் பேசவில்லை. முகம் சிறுத்துப்போய் உட்கார்ந்திருந்தான். அவன்மீது சுமத்தப்பட்ட தப்புக்கள் ஒன்றையும் அவன் பண்ணவில்லை. சாந்தியை ரேப் பண்ணவும் இல்லை. சூர்யகிரணின் கோழிப் பண்ணையைத் தீக்கிரையாக்கவும் இல்லை. அவனை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, அவன் பெயரை இதில் இழுத்துவிட்டு, வாசு முதலியவர்கள் இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கிறார்கள். இது வெளிப்பட்டுவிடவே, அவர்கள் நப்பித்துக்கொண்டு அவனை முன்னுக்குத் தள்ளி விட்டார்கள். அவன் வார்த்தைகளை யாருமே கேட்கவில்லை. தந்தையே நம்பவில்லை. அவன் "எனக்கு

ஒன்றுமே தெரியாது டாடி" என்று சொன்னபோது அவர் கோபத்தால் தடுமாறியபடி— "டே, மூடு வாயை! ராஸ்கல்! பல்லை உதிர்த்து விடுவேன்" என்றார்.

அவர் முகத்தில் தோன்றிய வெறுப்பையும், வார்த்தைகளில் தென்பட்ட உதாசீனத்தையும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் மனதைக் கசக்கிப் பிழிந்தாற்போலிருந்தது. தன் குற்றமற்ற தன்மையை அவனால் நிரூபித்துக் கொள்ள முடியவில்லை. காரில் யார் யார் இருந்தார்கள் என்றும் யார் தன்னை ரேப் பண்ணினார்கள் என்றும் சாந்தியால் சரியாய் சொல்ல முடியவில்லை. வாசு, ரங்கன் எல்லோரும் இருந்தார்கள், ராஜேஷும் இருந்தான் என்று சொன்னாள். ராஜேஷ் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தான்.

சாந்தியை ராஜேஷ் கும்பல் ரேப் பண்ணிவிட்டார்கள் என்றும் அதனால்தான் சூர்யகிரண் ராஜேஷை அடித்தான் என்றும் ஊரில் வதந்தி காட்டுத்தீயைப்போல பரவிவிட்டது. அதைப்பற்றி விதம் விதமான கற்பனைகள் பரவத் தொடங்கின!

சிலர் இந்த கலாட்டாவிற்கெல்லாம் காரணம் மிதிலா தான் என்றார்கள். மிதிலாவின் மூலமாய் ராஜேஷும் சூர்யகிரணும் மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் பரவிற்று. எது எப்படியிருந்தாலும் கடைசியில், இது மிதிலா மூலமாய் ஏற்பட்ட ரகளை என்று முடிவெடுத்துக் கொண்டார்கள்.

திங்கட்கிழமை வந்தது.

சாந்தி காலை ஒன்பது மணிக்கு காலேஜுக்குப் போகத் தயாரானாள்.

ஜெயந்தியை வரச்சொல்லி செய்தி அனுப்பினார்கள். மிதிலா சாந்தியிடம் டிபன் பாக்ஸைத் தந்துவிட்டு, முகவாயைப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

''சாந்தி! யாராவது என்னைப் பற்றியோ உங்கண்ணாவைப் பற்றியோ பேசினால் பொருட்படுத்த மாட்டாயே?'' என்றாள்.

''மாட்டேன்'' என்று தலையாட்டினாள் சாந்தி.

ஜெயந்தியும் சாந்தியும் காலேஜுக்குப் போனார்கள்.

மிதிலாவுக்குப் பொழுது போகவில்லை வீணையை எடுத்து வைத்துக்கொண்டு சுருதி கூட்டத் தொடங்கினாள்.

அதற்குள் வீதியில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

மிதிலா வீணையைக் கீழே வைத்துவிட்டு எழுந்து வந்தாள். காரிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார் கணபதி.

மிதிலா அவரைப் பார்த்ததுமே வியப்படைந்து விட்டாள். அவரை எதிர்கொண்டு வரவேற்றபடி ''நமஸ்காரம்! வாங்க உட்காருங்க'' என்றாள்.

அவர் ஒரு வினாடி மிதிலாவையே பார்த்தார். அதே மரியாதை! அதே புன்முறுவல்! அவளிடம் எந்த மாறுதலும் இல்லை.

''சௌக்கியமாம்மா?''— கேட்டார் அவர்.

''சௌக்கியந்தான்'' என்றாள்.

அவர் ஜேபியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து மிதிலாவிடம் தந்தார்.

மிதிலா வாங்கிப் பார்த்தாள். அது மிதிலாவைத் திரும்பவும் வேலையில் எடுத்துக் கொள்வதாய் வந்த அப்பாயின்ட்மென்ட் கடிதம்.

மிதிலா எழுதித் தந்த காரணங்கள் தமக்குப் பிடித்து விட்டதென்றும் அவசரப்பட்டு சந்தேகப்பட்டதற்கு

வருந்துகிறோம் என்றும் மிதிலாவைக் காலேஜுக்கு வந்து வேலையில் ஜாயின் ஆகும்படியும் வரவேற்றிருந்த காலேஜ் நிர்வாகக் கமிட்டியினர் எழுதியிருந்த கடிதம் அது.

மிதிலா நிகைப்படைந்தவளாய் நிமிர்ந்தாள்.

''தாங்க்யூ'' என்றாள்.

பதிலுக்கு அவர் சொன்னார்— ''பாரும்மா! போன தடவை உன்னை என் மகனைக் காப்பாற்றிய தெய்வமாய் போற்றினேன் நான். உன்னால் நான் உபகாரத்தை அடைந்தேன். ஆனால் என் மனமெல்லாம் தலைகீழாகி விட்டது நடந்த இந்த ரகளைக்கெல்லாம் நீதான் காரணம் என்று இந்த ஊர் முழுவதும் நிந்திக்கிறது''

''நீங்கள் நம்புகிறீர்களா சார்?'' மிதிலா கேட்டாள்.

''நம்பலைம்மா! அந்த தெய்வமே இறங்கி வந்து சொன்னாலும் நம்புவேனோ என்னவோ? ஸிலரை பார்த்ததுமே அப்படிப்பட்ட கௌரவம் ஏற்பட்டு விடுகிறது நடந்ததெல்லாம் எங்கள் துரதிர்ஷ்டம். நடந்த அக்கிரமங்களில் எங்கள் ராஜேஷின் கை மட்டுமே இருந்தால் நான் மறுபேச்சுப் பேசாமல் சாந்தியை என் மகனுக்கே தந்து கல்யாணத்தைப்பண்ணி வைத்திருப்பேன். ஆனால்—''

''எனக்குத் தெரியும். நீங்கள் வருத்தப்படாதீங்க. இதெல்லாம் சாந்தியின் துரதிர்ஷ்டம் என்று நினைச்சுப் போம்''

''இதில் என் மகளின் துரதிர்ஷ்டம்கூட சமபாகம் இருக்கிறது. அவன் எதிர்காலம் நன்றாய் அமையும் என்கிற நம்பிக்கை என்னுள் போய்விட்டது. அவன் என் கைக்கு அடக்கமாய் இருக்க மாட்டான்''— அவர் குரல் கும்மிற்று.

''பெற்ற மகனை வெறுத்து ஒதுக்கும் நிலை எந்த தந்தைக்குமே வரக்கூடாது. அப்படிப்பட்ட நிலைமை

வந்திருக்கிற துரதிர்ஷ்டக்காரன் நான். நான் என் கையாலேயே அவனைக் கொன்று போட்டு விடணும்போல வெறுப்பாய் இருக்கிறது. இந்தச் சம்பவத்தால் எங்கள் வாழ்க்கையே தாறுமாறாகிவிட்டது. இது நான் பண்ணிய பாவத்தால் வந்த கர்மம்தான்''

''அப்படிச் சொல்லாதிங்க. சில சமயம் அப்படித்தான் துரதிர்ஷ்டம் நம்மைத் துரத்தி வந்துட்டிருக்கும்.''

''லரேம்மா! சூர்யகிரண் எங்கே?''

''வீட்டில் இல்லை. வேலையாய் வெளியே போயிருக்கார்.''

''அவனிடமும் நான் இதையேதான் சொல்ல வந்தேன். ஆனால் நான் ராஜேஷை இந்த ஊரைவிட்டு அனுப்பிடலாம்னு இருக்கேன்.''

மிதிலா அவர் சொன்னதையெல்லாம் மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவர் எழுந்தார். போக முற்பட்டவர் நின்று ''பாரும்மா! நான் உனக்கு ஒரு ஆலோசனையைச் சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன் ''

''சொல்லுங்க. என்ன ஆலோசனை?'' என்றாள் மிதிலா.

''நீ இந்த ஊரை விட்டுப் போய் விடுவது நல்லது என்பது என் உத்தேசம். காலேஜ் கமிட்டியில் யாருமே உன் மீது சுமுகமாய் இல்லை. முக்கியமாய் பெண் மெம்பர்கள் உன்னை திரும்பி உத்யோகத்தில் எடுத்துக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்தாங்க. நான் அவங்களை எதிர்த்து நின்று ஒரு ஓட்டு வித்தியாசத்தில் இந்த தீர்மானத்தை சாதித்தேன். பாரும்மா! இந்த ஊர் ரொம்ப கின்னது. இங்கிருக்கும் ஜனங்களுக்கு நல்லது கெட்டது அவ்வளவாய் தெரியாது. எருமைப்போத்துங்க. யார் எதைச் சொன்னாலும் அதையே நம்பிடுவாங்க. ஆவேசப்படுவாங்க.

என்ன வேணுமானாலும் பண்ணிடுவாங்க. அவங்களோடு மோதிக் கொள்வது பெரிய தலைவலி!'' என்றார்.

''எல்லா ஜனங்களுமே அப்படித்தானா? இந்த ஊர்க்காரங்க மட்டுந்தானா?'' என்றாள் மிதிலா.

''நீ தனியாய் போய்விட்டு வருகிறாய். நீ க்ஷேமமாய் இருக்கணுங்கிறதுதான் என் உத்தேசம். நீ இந்த ஊரை விட்டுப் போய் விடுவதுதான் நல்லதுன்னு எனக்குத் தோணுகிறது. முக்கியமாய் இதைச் சொல்றத்துக்குதான் வந்தேன்,'' என்றார் அவர்.

அவர் போய்விட்டார். மிதிலா அவர் போன திசையையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். 'அவள் மீது நமக்கு எந்த கோபமும் இல்லை, நான் உன்னை புரிந்துகொண்டு விட்டேன்' என்று எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அவர் இந்த ஆர்டரைத் தரச் செய்திருப்பார். எது எள்ளவானாலும் அவர் நடந்த ரகளைக்கெல்லாம் மிகவும் மனந்தளர்ந்து போய்விட்டார் என்பது உண்மை. அவர் அவளுக்கு உத்யோகத்தைத் திரும்பி வாங்கித் தந்து மனதிலுள்ள கௌரவத்தையும் அன்பையும் காட்டிக் கொண்டிருக்கிறார். அவள் நலனைக் கருதிதான் அவளை இந்த ஊரை விட்டுப் போய்விடும்படி எச்சரித்திருக்கிறார் என்றும் புரிந்தது அவளுக்கு. அதற்குள் அங்கே அர்ஜுனன் வீட்டு வேலைக்காரன் வந்தான்.

''ஐயா உங்களண்டை இந்தக் கடிதாசியைத் தரச் சொன்னார்'' என்று சொன்னான்.

மிதிலா வாங்கிப் பார்த்தாள். அது மிதிலாவின் அண்ணன் ப்ரதிப் எழுதியிருந்த கடிதம். அதில் இல்வாறு இருந்தது:

''மிதிலா—

நான் இன்று இல்லூருக்கு வந்தேன். அர்ஜுனன் வீட்டில் தங்கியிருக்கிறேன். எனக்கு அங்கே வர பிடிக்கவில்லை. நீ இந்தக் கடிதம் கண்டதுமே வரவேண்டியது.

நீ வராவிட்டால் நான் அங்கே வரவேண்டியிருக்கும். நான் வந்தால் அதன் விளைவை யோசித்துப் பார்த்துக் கொள். எனக்குக் கோபமே வராது. வந்துவிட்டாலோ கண் முன் தெரியாது என்று நீ அறிவாய். எது வேணுமோ, தேவையில்லையோ வந்து சொல்லிவிட்டுப் போ!

இப்படிக்கு
உன் அண்ணன்
ப்ரதீப்—''

மிதிலா அக்கடிதத்தைப் படித்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தபடி அப்படியே நின்றுவிட்டாள். பிறகு செருப்பை மாட்டிக்கொண்டு ''வா'' என்று வந்த பையனோடு புறப்பட்டாள்.

மிதிலா போனபொழுது அர்ஜுனனும் ப்ரதீப்பும் வெளியே வராந்தாவில்தான் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

மிதிலாவைப் பார்த்த ப்ரதீப் எழுந்து வரவில்லை. குசலம் விசாரிக்கவும் இல்லை. மிதிலா தானே படியேறிப் போய் அண்ணனைப் பார்த்து முறுவலுடன் விசாரித்தாள்.

''சௌக்கியமா அண்ணா?''

''ஆங்! ரொம்ப சௌக்கியமாய், சந்தோஷமாய் இருக்கேன்!''

''அம்மா ஏன் வரலை? எப்படி இருக்காங்க?''

''நான்தான் வந்து பார்த்துட்டு இந்தச் சந்தோஷத்தையெல்லாம் ஜீரணித்துக்கொண்டிருக்கேனே? நீ இந்த ஊரில் பண்ணிட்டிருக்கிற காரியத்தைப்பற்றி இன்னும் அம்மாவுக்குத் தெரியாது. தெரிந்தால் சமுத்திரத்தில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டிருப்பாங்க. அர்ஜுனன் கடிதம் போட்டபோது நான் நம்பவில்லை. சுடுகளை மலையத்தனை பண்றாங்கன்னு நினைச்சேன் ரயிலை விட்டு இறங்கி வந்துட்டிருந்தபோது சுவர்களிலெல்லாம்

எழுதியிருந்ததைப் பார்த்துட்டு 'ஓ' என்று தோன்றிற்று. நம்ப குடும்ப மானத்தை இப்படி நடுச்சந்திக்குக் கொண்டு வந்து விடுவாய்னு நினைத்திருக்கவேயில்லை,'' என்றான் ஆவேசமாய். ப்ரதீப் முகத்தில் நங்கையைப் பற்றி கேட்ட அவதூறால் ஏற்பட்டிருந்த வருத்தம் நன்றாகவே தெரிந்தது.

அர்ஜுனன், ப்ரதீப் கடுகடுப்பாய் பேசியதைப் பார்த்து விட்டு மெதுவாய் அங்கிருந்து நழுவி உள்ளே போய் விட்டான். மதுமதி காபியைக் கொண்டு வந்து அங்கே வைத்து விட்டு, மிதிலாவைப் புழுவைப் பார்ப்பதுபோல அருவருப்பாய் பார்த்துவிட்டு அங்கிருந்து போய்விட்டாள். உள்ளேயிருந்து மஞ்சு வந்து அவ்விடத்திலேயே உட்கார்ந்துகொண்டு அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று சி.ஐ.டியைப் போல கவனித்தபடியே முகத்தைப் பேப்பரால் மூடிக்கொண்டாள்.

மிதிலா அண்ணனின் உதாசீனத்தைப் பார்த்து ஆவேசப்பட்டு விடவில்லை. முறுவலுடன் பரிவாய்— ''அண்ணா! ஸ்கூலிலும் காலேஜிலும் படிக்கும்போது தாங்கிய பரிசுகளையும், புகழ்ச்சிகளையும், மதிப்பையும் ஞாபகப்படுத்திக்கொள். நீ கூட உலகத்தோடு ஒருத்தனாய் பேசலாமா, சொல்லு?''

ப்ரதீப் சுர்ரென்று பார்த்தான். அவன் இல்லனவு அவமானத்தால் துடிதுடித்துக் கொண்டிருக்கும்பொழுது இப்படி முறுவல் பூத்துக் கொண்டிருக்கிறாள்!

''வேறெப்படிப் பேசணும் சொல்லு? இந்த விஷயத்தைக் கேட்டபோது இங்கேயே தலை வெடிச்சு செத்துட்டா தேவலைன்னு தோணிற்று. அதுசரி, நீ அந்த ஹரிஜன் வீட்டில் எதற்காக இருக்கணும்?''— உறுக்கி கேட்டான்.

''அவர் வேறு யாரோ இல்லையே? அவரை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு உங்களுக்கு லெட்டர் எழுதலையா?''

''எழுதிட்டால் போறுமா? அம்மாவும் நானும் சம்மதிக்க வேண்டாமா? ஆனாலும் அங்கே மெட்றாஸில் இஞ்ஜினீயர்கள் டாக்டர்கள் என்று சம்பந்தம் வந்த போதெல்லாம் உனக்குப் பிடிக்கலை. இவன் மேல் அவ்வளவு அன்பு வழியத் தொடங்கி விட்டது போலிருக்கு.''

மிதிலாவுக்கு இனி அவனோடு வாதாடுவது வீண் என்று தோன்றிற்று. அவன் மேல் தப்பில்லை. ஏற்கனவே அர்ஜுனனின் கடிதத்தால் எரிச்சலோடு புறப்பட்டு ரயிலை விட்டு இறங்கி வந்த அவனுக்கு ஊர்ச் சுவர்களிலெல்லாம் எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் ஆத்திரத்தைத் தந்திருக்கும். அதனால்தான் அவளுக்குப் பிரியமான அண்ணனால் அவள் மனதைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. அவள் ஏன் இவ்வாறு செய்தாள் என்று புரிந்து கொள்வதை விட்டுவிட்டு, உலகம் சார்பில் நின்று அவளை இடித்துரைக்கிறான். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரைந்து விடும் என்பது எவ்வளவு உண்மை! அண்ணனை இவ்வாறே பார்க்கும் பொழுதே தெரிந்து விட்டதே! அண்ணனா இவ்வாறு பேசுகிறான்! என்று தோன்றிற்று மிதிலாவுக்கு.

''போயிட்டு வரேன் அண்ணா'' என்றாள்.

''நீ என்னோடு மெட்றாசுக்கு வருகிறாய்''— அவன் உத்தரவிடுவது போல சொன்னான். மிதிலா தான் ஒன்றும் சின்னப் பெண் இல்லை என்பது போல சிரித்தாள்.

''இங்கே எனக்கு உத்யோகம் இருக்கே?'' என்றாள்.

''அதான் போயிடுத்தே! இன்னும் இங்கே எதுக்காக இருக்கணும்? காலேஜில் அவங்க வேலையிலிருந்து தள்ளிட்டாங்களே! அந்தச் சுப செய்தியை அர்ஜுனன் டெலிகிராம் கொடுத்துத் தெரிவித்ததால் ஓடோடியும் வந்தேன். இங்கே வரும் வரை நீ இவ்வளவு மோசமாய்

விளையாட்டுத் தனமாய், லெட்கமில்லாமல் வாழ்ந்துட் டிருக்கிறாய்னு தெரியாது.''

மிதிலாவின் முகம் அண்ணன் எடுத்து விசிய இந்த அவமான பாணங்களால் சிவந்து விட்டது.

''வேலை ஒண்ணும் போகலை அண்ணா'' என்று கையிலிருந்த கணபதி தந்துவிட்டுப் போன உத்யோக ஆர்டரைக் காட்டினாள்.

ப்ரதீப் அதைப் படித்து விட்டு விறுவெறித்தான்.

''வேறென்ன? அந்த சூர்யரிண்ட அவங்க காலிலுமாய் விழுந்து இங்க காலிலும் திரும்பவும் வேலையில் எடுத்துக்கச் சொல்லியிருப்பான்.''

''இங்கே இல்லாத ஒருத்தரைப் பற்றி ஏன் தூஷணையாய் பேசணும்?''

''அப்படீன்னால் அவன் பெயரைக் கூட நான் எடுக்கக் கூடாதா? அது சரி, நீ என்னோடு வரப் போகிறாயா இல்லையா?''

''வரப் போறதில்லை''

''வரமாட்டாயா?''

''ஊஹூம்''

''அவ்வளவு நெஞ்சழுத்தம் வந்துடுத்தா?''

மிதிலா ஆம் என்று தலையாட்டி விட்டு அங்கிருந்து வந்து விட்டாள்.

பின்னாலிருந்து ப்ரதீப் கத்தினாற் போல சொன்னான்—

''இதப்பார்! மரியாதையாய் சொல்றேன். நீ என்னோடு வராமல் போனால் இனி ஜென்மத்திலும் என் முஞ்சியில் முழிக்காதே! அம்மாவும் நானும் நீ செத்துப் போயிட்டாய்னே நினைச்சுப்போம். தெரிஞ்சுதா?''

"சரி" திரும்பிப் பாராமலேயே மிதிலாவும் அழுத்தி பதில் சொன்னாள்.

"எவ்வளவு சாகஸம் உனக்கு!" ப்ரதீப் கையை ஓங்கிக் கொண்டு வந்த பொழுது பின்னாலிருந்து அர்ஜுனன் வந்து பிடித்துக் கொண்டான்.

"நீ ஜுலேசப்படாதே ப்ரதீப்! உன் தங்கை எவ்வளவு தாரத்திற்குத் துணிந்து விட்டாள் என்று இப்பொழுதாவது கண்ணாரக் கண்டாயா? நான் பொய் சொல்லவில்லையே?" என்றான்.

மிதிலா கேட்டை திறந்து கொண்டு வந்து விட்டான்.

மிதிலாவின் கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது. அண்ணனிடம் காட்டிக் கொண்ட துணிச்சல் போய் விட்டது. உடன் பிறந்தவன். அவளைக் காப்பாற்ற வேண்டியவன். அவளை சிறுவயதிலிருந்தே அறிந்தவன். இப்படியா பேசுவான்! ஆம், அவன் தப்பு எதுவுமில்லை! அர்ஜுனன் உருவேற்றிய வார்த்தைகளால் அவன் மனம் விஷமயமாகிவிட்டது. நேராய் அவள் எப்படி இருக்கிறாள் என்று பார்ப்பதற்கு அவளிடம் வராமல், அங்கே போய் இறங்கிக் கொண்டு, அவளை வரவழைத்த பொழுதே மிதிலாவுக்கு இப்படி ஏதோ நடக்கும் என்று புரிந்து விட்டது. நடக்கட்டும்! அண்ணன் அவசரப்பட்டு விட்டதாய் வெட்கப்படக் கூடிய நாள் என்றைக்காவது வராமல் போய் விடுமா? அதுவரை அவள் பொறுமையாய் காத்திருக்க வேண்டியதுதான்.

"அம்மா! எங்கே போறீங்க?" பின்னாலிருந்து கேட்டது. வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த மிதிலா பரிச்சயமான அக்குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள். காவில் சதங்கைகள் ஜல்ஜல்லென்று சப்தமிட்டபடி, கண்ணாடி வேலைப்பாடுகள் அமைந்த பாவாடையும் தாவணியும் அணிந்து கொண்டிருந்த லம்பாடிப் பெண்

தலையில் விறகைச் சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

"வீட்டுக்குப் போறேன். நீ என்ன இப்படி வந்துட்டிருக்காய் சிம்மி? விறகு இன்னும் விற்றபாடில்லையா?"— கேட்டாள் மிதிலா.

சிம்மி லம்பாடிப் பெண், மிதிலாவுக்கு சோஃபா உறைகளில் கண்ணாடி வேலைப்பாடுகளுடன் எம்பிராய்டரி செய்து கொடுத்தவள். ஸ்பெஷலாய் ஆர்டர் தந்து தைத்துத் தரச் சொல்லி அண்ணனுக்குக் கொண்டு போய் கொடுத்தாள். தம் தையல் வேலைகளுக்கு அளவுக்கு மீறியே தாராளமாய் பணம் தந்த மிதிலாவைக் கண்டால் சிம்மிக்கு மிகவும் மதிப்பு. லீவு நாட்களில் பிற்பகல் வேளைகளில் எப்பொழுதாவது மிதிலாவிடம் வந்து உட்கார்ந்து தைத்துக் கொண்டிருப்பாள்.

மிதிலாவும் சிம்மியும் பேசிக் கொண்டே சேர்ந்தாற் போல நடந்து கொண்டிருந்த பொழுது, வழியில் ரங்கன் சைக்கிளில் எதிர்பட்டான். அவன் சிம்மியைப் பார்த்ததுமே வேகமாய் விசிலடித்து விட்டு, கண்ணைக் கொட்டி விட்டுப் போனான்.

"நாசமாய்ப் போறவன்! ஏய்! விறகுக் கட்டையில் திரும்பவும் உதைக் கேட்குதோ?" கையைத் தூக்கி சுமையிலிருந்த ஒரு விறகை உருவி எடுத்துக் கொண்டு மிரட்டினாள். ரங்கன் சைக்கிளில் வேகமாய் பறந்து போய் விட்டான்.

"அந்தப் பையனை உனக்குத் தெரியுமா சிம்மி?"— கேட்டாள் மிதிலா.

"ஆமாம்மா! ஒரு தடலை என்னவாச்சுன்னால்... நான் இப்படியே விறகு விற்றுக்கிட்டுப் போயிட்டிருந்தேன். விறகு வேணும்னு கூப்பிட்டான். இவனோடு சேர்ந்து இன்னும் கூட நிறைய பேர் இருந்தாங்க. மூன்

பல் ரெண்டும் நீட்டிக்கிட்டிருந்தது ஒரு பையனுக்கு. அவன் கூட இருந்தான். அப்பொழுது..."

"உம்! அப்ப என்னவாச்சு?" என்றாள் மிதிலா.

சிம்மி நடந்ததையெல்லாம் சொன்னாள். "நன்றாய் உதைத்துட்டேன்" என்றாள் சிரித்துக் கொண்டே.

மிதிலாவுக்கு சிம்மியின் தைரியம் பிடித்திருந்தது. "அப்படித்தான் இருக்கணும் சிம்மீ" என்றாள்.

சிம்மி மிதிலாவை வீடு வரைக்கும் கொண்டு வந்து விட்டுவிட்டு, "வரேம்மா"— என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

45

சாந்தி ஜெயந்தியோடு சேர்ந்து காலேஜுக்கு வந்தாள். எல்லோரும் சாந்தியை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஏறயிறங்கப் பார்த்தார்கள் விநோதமாய். ஓரிருவர் சிலேடையாய் "உடம்பு சரியாயில்லையாமே? இப்ப எப்படி இருக்கு?" என்று கேட்டார்கள்.

"நன்றாய்தான் இருக்கு" என்றாள்.

சாந்தி காலேஜ் எல்லைக்குள் அடியெடுத்து வைத்தாள். அங்கே சுவர்களிலெல்லாம் சாந்தியின் உருவத்தை விதம் விதமாய் படம் வரைந்திருந்தார்கள். அவற்றிற்குக் கீழே இவ்வாறு எழுதியிருந்தது—

"சாந்தியை ரேப் பண்ணி விட்டார்கள்."

"சாந்தி ரேப் பண்ணப்பட்டாள்."

"சாந்தி மானபங்கம் பண்ணப்பட்டாள்." கடைசி படம் ஆடை குலைந்து, தலைவிரி கோலமாய் வரையப்

பட்டிருந்தது. அந்த வார்த்தைகளையும், படங்களையும் பார்த்ததுமே சாந்தியின் கண்கள் அகல விரிந்தன. அவை மெல்ல மெல்ல அகன்று கொண்டே போய், அந்த எழுத்துக்களைத் தன்னை விழுங்க வரும் பூதத்தைப் பார்ப்பது போல பார்த்தாள்.

அந்த ஆபாசமான வாக்கியங்களைப் பார்த்து ஜெயந்தி கூட துணுக்குற்றாள். அதற்குள் மஞ்சு காலேஜுக்குள் வந்தாள். ஜெயந்தியை ஏனமாய் பார்த்துக் கொண்டே மிக மதிப்பிற்குரியவளைப் போல ஹைஹீல்ஸ் ஷூ டக்டக்கென்று சப்தமிட, கைப்பையை ஆட்டிக் கொண்டே காலேஜ் காரிடாரை நோக்கிப் போனாள். அங்கே இரண்டு ஆண்கள் எதிர்ப்பட்டார்கள். அவர்கள் மஞ்சுவைப் பார்த்ததுமே 'ஹாய்' என்று விஷ் பண்ணினார்கள். "ஹாய், மோகன், ரவி" என்றாள். அம்மூவரும் சேர்ந்து சந்தோஷமாய் பேசிக் கொண்டே போனார்கள்.

"சாந்தி! உள்ளே போவோம் வா" என்றாள் ஜெயந்தி.

"ஊஹூம்" சாந்தி வரமாட்டேன் என்பது போல் தலையாட்டினாள். விருட்டென்று திரும்பி வீட்டை நோக்கி ஓடினாள்.

நேராய் வீட்டிற்கு ஓடி வந்த சாந்தி, ஆயாசமடைந்தவளாய் அழுது கொண்டே முச்சிரைக்க, அறையில் அங்குமிங்கும் கிடந்த தன் புத்தகங்களையெல்லாம் எடுத்து வந்து கொல்லையில் போட்டு விட்டு அவற்றின் மீது கெரசினாயிலைத் தெளித்து, நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பற்ற வைத்தாள். புஸ்ஸென்று பற்றியெறிந்த அந்த நிக்கு முன்னால் நின்றபடி பற்களைக் கடித்துக் கொண்டே பழித் தீர்த்துக் கொள்வது போல பார்க்கத் தொடங்கினாள்.

அதற்குள் சூர்யகிரண் வீட்டிற்கு வந்தான்.

அவன் தங்கையை எதுவும் சொல்லவில்லை. மௌனமாய் இருந்து விட்டான். அவனுக்குத் தங்கையின் மனது புரிந்தது. தாம் எவ்வளவு முயன்றாலும் சாந்தியால் அந்த பயங்கரச் சம்பவத்தை மறக்க முடியவில்லை. சாந்தி திடீரென்று வாய் விட்டுச் சிரிக்கத் தொடங்கினாள். சூர்யகிரண் வந்து சாந்தியைக் கிட்டே இழுத்துக் கொள்ளப் போனான். சாந்தி தொலைவிற்குப் போய் நின்று கொண்டாள்.

மிதிலா உள்ளே வந்தபோது சாந்தி பைத்தியம் பிடித்தவளைப் போல சிரித்துக் கொண்டிருந்தாள். மிதிலா சாந்தியை இழுத்து அணைத்துக் கொண்டு ஆறுதல் சொல்லத் தொடங்கினாள். திரும்பவும் முன் போலவே அவளுக்கு மனஉறுதியைப் போதிக்கத் தொடங்கினாள். "சாந்தியை இனி காலேஜுக்கு அனுப்பக் கூடாது. பிரின்ஸிபாலிடம் சொல்லி நான் அவள் அடெண்டென்ஸிற்கு வழி பண்ணச் சொல்கிறேன். அவள் பரீட்சை மட்டும் எழுதினால் போதும்" என்றாள் மிதிலா. சூர்ய கிரணுக்கும் இது பிடித்திருந்தது. மிதிலா சாந்திக்குப் பாடங்களைத் தானே வீட்டில் சொல்லித் தரத் தொடங்கினாள்.

சாந்தியின் மனம் மெல்ல மெல்ல பழைய சம்பவங்களை மறக்கத் தொடங்கிற்று.

46

போலீசார் ராஜேஷ், வாசு, ரங்கன், சேது முதலியவர்களைப் பற்றிய கேசை விசாரணை பண்ணிக் கொண்டிருந்தார்கள். கணபதி ஜாமீன் தந்து விடுதலைப் பண்ணிய அன்றே வாசு அந்த ஊரை விட்டு ஓடிப் போய் விட்டான். திரும்பவும் கண்ணில் படவேயில்லை. அவன்

இனி போலீஸ் கையில் பிடிபட மாட்டான் என்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

ராஜேஷ் போலீசுக்கு பயப்படவில்லை. ராஜேஷ் மிகக் கெட்டவன் என்றும், அவன்தான் சாந்தியை ரேப் பண்ணியிருப்பான் என்றும், ஆனாலும் பணக்காரரும், புகழ் பெற்றவருமான அவன் தந்தை முதுகெலும்பாய் இருந்து கொண்டு காப்பாற்றி வந்தால், நலை நிமிர்ந்து துணிச்சலாய் சுற்றுகிறான் என்றும் எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள்.

போலீசார் ராஜேஷைப் பற்றி விசாரணை பண்ணிய அத்தனைப் பேரும் ஒரே மாதிரியாய் இதையே சொன்னார்கள். கணபதி கூட ராஜேஷை குற்றவாளி என்றே நிர்மானித்துக் கொண்டுவிட்டார்.

"உன்னால் ஒரு பெண்ணின் வாழ்க்கையே பாழாகி விட்டது. உன்னைப் போன்ற கயவளை என் மகன் என்று சொல்லிக் கொள்வதற்குக்கூட வெட்கமாய் இருக்கிறது எனக்கு. நீ என் வீட்டில் இருக்க வேண்டாம். உன் வழியில் நீ போய்க்கொள்," என்று வெளியே துரத்திவிட்டார். ராஜேஷ் வெளியுலகத்திற்குத் தன்னந்தனியனாய் வந்து விட்டான். அவனை தந்தை துரத்திவிட்டார். சினேகிதர்களும் கைவிட்டு விட்டார்கள்.

'இப்பொழுது உன் தர்பாரைக் காட்டு பார்த்துடலாம்' என்பதுபோல எல்லோரும் ஏளனம் பண்ணத் தொடங்கினார்கள் அவனை. ராஜேஷால் பதில் பேச முடியவில்லை. தான் குற்றமற்றவன் என்று வாய்விட்டுக் கத்தினாலும் யாரும் நம்பமாட்டார்கள் என்று அவனுக்குப் புரிந்து விட்டது.

இந்த தருணத்தில் போலீசார் மிதிலாவிடம் ராஜேஷைப் பற்றி துப்புத் துலக்குவதற்காக வந்தார்கள்.

"அவன் உங்கள் மாணவன்தானே? அவன்மீது உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்றார்கள்.

மிதிலா தனக்கே உரிய கம்பீரமான குரலில் சொன்னாள்:

''ராஜேஷ் இந்தக் காரியத்தைப் பண்ணியிருப்பான் என்றால் என்னால் நம்பமுடியாது''

''ஏன்?''

''அவன் சுபாவம் எனக்கு நன்றாய் தெரியும். அவங்க அத்தனை பேர்களிலும் வாசுதான் ரௌடி. அவன்தான் லீடர். அவன் கோணல் புத்தியோடு காரியங்களைப் பண்ணிட்டு ராஜேஷ் மேல் தள்ளிவிடுவது சகஜந்தான்.''

''உதாரணம் காட்ட முடியுமா?''

''ஆங்! ஒரு தடவை காலேஜில் பெண்கள் பாத்ரூமிற்குப் போயிருந்தபோது வெளியே தாழிட்டுவிட்டான். ராஜேஷ் தான் என்று எல்லோரும் சொன்னார்கள். ராஜேஷாய் இருக்கமாட்டான் என்றும் வாசுவாய்தான் இருக்கும் என்றும் நான் சொன்னேன். அப்புறமாய் அதுதான் நிஜம் என்று தெரிந்தது.''

''அதைக் கொண்டு இதையும் உறுதியாய் சொல்றீங்களா?''

''ஆமாம். ஏன்னால் லெக்சரராய் சில ஆண்டுகள் அனுபவத்தில் எங்களுக்கு மாணவர்களைப் பார்த்ததுமே யார் யார் எப்படிப்பட்டவங்கன்னு கண்டுபிடித்துவிடக் கூடிய பயிற்சி வந்துவிடுகிறது. ராஜேஷ் நல்ல பையன். வாசுவின் சகவாசம் அவனைக் கெட்ட வழியில் போகச் செய்துவிட்டது. இதையே வாசுவைப்பற்றி கேட்டால் அவன் ஒரு பெரிய குண்டர் தலைவனாய் இருக்கக் கூடியவன் என்று சொல்லுவேன். வாசு பெரியவனானதும் ஸ்மக்லராகவோ, கொலையாளியாகவோ ஆகித் திருவான். அந்த லட்சணங்கள் அவனிடம் நிறைய இருக்கின்றன. அடுத்தவங்களைக் காக்காய் பிடித்துத் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்கிற சாமர்த்தியமும், பணத்தின் மீது பேராசையும் நிறைய உண்டு அவனிடம்.''

''அப்படின்னால் ராஜேஷ் குற்றமற்றவன் என்று சொல்றீங்களா நீங்கள்?''

''நான் ராஜேஷைப் புரிந்து கொண்ட வரைக்கும் அப்படித்தான் தோணுகிறது'' என்றாள் மிதிலா.

''மேடம்! விநோதமாய் இருக்கிறதே! நான் விசாரணை பண்ணிய அத்தனைப் பேர்களிலும் நீங்கள் ஒருத்தர்தான் ராஜேஷைப் பற்றி இல்லாவது நம்பிக்கையோடு, அவன் குற்றமற்றவனாய் இருப்பான் என்று சொல்றீங்க''

''என் ஒருத்திக்குதான் அவனைப் பற்றி நன்றாய் தெரியும்,'' என்று சொல்லிக் கொண்டான் மிதிலா மனதிற்குள்.

போலீஸ் அதிகாரி போய்விட்டார்.

நான்கு நாட்களுக்குப் பிறகு—

போலீஸ் அதிகாரி திரும்பவும் வந்தார்.

மிதிலாவைப் பார்த்து மதிப்போடு— ''மேடம்! நீங்கள் சொன்னதே நிஜமாயிற்று. சாந்தியின் ரேப் கேஸில் ராஜேஷ் குற்றமற்றவன் என்பது நிரூபணமாகி விட்டது.

அன்றைக்கு ராத்திரி வாசுவும் அவன் நண்பர்கள் இருவரும் காரில் உட்கார்ந்திருந்தார்களாம். அவங்க காரை நிறுத்தியிருந்த இடத்திற்கு எதிரே இருந்த கடை முதலாளி சொன்னார். சாந்தி வந்து கொண்டிருந்த போது நிறுத்தி காரில் ஏறிக்கொள்ளச் சொன்னார்களாம். சாந்தி பின் சீட்டில் ஏறிக்கொண்டாளாம். ஸ்டீரிங்கிற்கு முன்னால் வாசு உட்கார்ந்திருந்தானாம். அந்தக் காரில் ராஜேஷ் இல்லையாம். அதற்குப் பிறகு அரைமணிக்குப் புறம் ராஜேஷ் அறையிலிருந்து வெளியே வந்து சோடா வாங்கிக்கொண்டு அறைக்குப் போனானாம். சோடாக் கடைக்காரனும் சொன்னான். ராஜேஷ் அந்த கும்பலில்

இல்லை என்று நிரூபணமாகிவிட்டது. நீங்கள் ராஜேஷை சரியாய் எடை போட்டிருக்கீங்க. ஐ கங்கிராஜுலேட் யூ'' என்றார்.

''நிஜமாகவா?''— சந்தோஷமடைந்தாள் மிதிலா.

ராஜேஷ் இந்த அக்கிரமத்தில் பங்கெடுத்துக் கொள்ள வில்லை என்று தெரிந்ததும் மிதிலாவின் மனதிலிருந்த பெரிய பாரம் நீங்கினாற் போலிருந்தது.

''அதுமட்டுமில்லை. நாங்கள் வாசுவின் அறையைச் சோதனை போட்டபோது இன்னும் நிறைய விஷயங்கள் வெளிவந்தன. நிஜத்தைச் சொல்லணுமானால் இத்தனைக்கும் காரணம் நீங்கள்தான்'' என்றார்.

''நானா?'' மிதிலா வியப்படைந்தாள்.

''ஆமாம். இந்தக் கடிதத்தைப் படியுங்கள். எல்லாம் குட்டும் வெளிப்பட்டு விடும்,'' என்று ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துத் தந்தார். அது தபாலில் சேர்ப்பதற்காக விலாசம் எழுதப்பட்டு, எந்த காரணத்தினாலோ, அல்லது எந்த அவசர வேலை குறுக்கிட்டோ தபாலில் போடாத கடிதம் அது. உறையின் மேல் விலாசம் இருந்தது அது வாசு அர்ஜுனனுக்கு எழுதிய கடிதம். அதில் இவ்வாறு இருந்தது:

''அர்ஜுனன் அவர்களுக்கு,

வாசு வணக்கத்துடன் எழுதிக்கொண்டது. நீங்கள் சொன்னபடியே நான் மிதிலா மேடத்தை சூர்யகிரண் பெயரோடு சேர்த்து அவதூறுகளைப் பரப்பிவிட்டேன். அவள் இனி இந்த ஊரில் தலை காட்ட முடியாதபடி செய்துவிட்டேன். அவள் உத்யோகமும் போய்விட்டதி என்று தெரிந்தது. இன்றோ நாளையோ அவள் இந்த ஊரைவிட்டுப் போய்விடப் போவது உறுதி இப்பொழுது நீங்கள் எனக்கு பிராமிஸ் பண்ணிய சங்கதியை நிறை வேற்றித் தர வேண்டிய தருணம் வந்துவிட்டது.

மிதிலாவை இந்த ஊரைவிட்டுப் போய்விடும் படியாய் ரகளைப் பண்ணினால் மஞ்சுவை எனக்குத் திருமணம் பண்ணி வைப்பதாய் சொன்னீர்கள். நான் உங்களுக்குத் தந்த வாக்கை நிறைவேற்றி விட்டேன் நீங்கள் உங்கள் தங்கையை எனக்கு மணமுடித்து வைத்து உங்கள் வாக்கைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியதுதான் பாக்கி யிருக்கிறது. நீங்கள் சொன்னது போலவே அன்றைக்கு நாங்கள் சாந்தியைக் கடத்திக்கொண்டு போன சமயத்தில் ராஜேஷ் எங்களோடு இல்லாவிட்டாலும் அவன் இருந்தான் என்று டபாய்த்து விட்டோம். அதெல்லாம் ராஜேஷ் மேல் விழுந்துவிட்டது. நீங்கள் மஞ்சுவோடு என் விவாகத்தை எப்பொழுது நடத்தி வைக்கப்போகிறீர்கள் என்று சொல்லி விடவும் இல்லாவிட்டால் இதையெல்லாம் வெளிப்படுத்தி விட்டு, இத்தனைக்கும் நீங்கள்தான் காரணம் என்று சொல்லிவிடுவேன். நீங்கள் உடனுக்குடன் என்னைச் சந்தித்து இதைப் பற்றிப் பேசவேண்டும். மஞ்சுவுக்கு நீங்கள் வேறு சம்பந்தம் பார்ப்பதாய் தெரிந்தது. நான் ஹாஸ்பிடலிலிருக்கும்போது மஞ்சுவுக்கு வேறு நபரோடு திருமணத்தை நடக்க விடமாட்டேன் என் சம்பந்தத்தால் மஞ்சு கர்ப்பம் தரித்தாள். அவளை நீங்கள் ரகசியமாய் அபார்ட்மெண்டுக்குக் கூட்டிச் சென்று அதைக் கலைத்துவிட்ட விஷயமும் எனக்குத் தெரியும். தேவையானால் அதை போலீஸ்காரர்களிடமும் வெளிப்படுத்திவிடப் பின்வாங்கமாட்டேன்.

இப்படிக்கு
வாசு—''

மிதிலா கடிதத்தைப் படித்துவிட்டு வியப்போடு நிமிர்ந்தாள்.

''பார்த்தீங்களா மேடம்! இத்தனைக்கும் மூலகாரணம் அர்ஜுனனுக்கு உங்கள் மேல் உள்ள துவேஷந்தான். அவன் வாசுவைத் தூண்டிவிட்டிருக்கிறான் அது ராஜேஷ் மேல் விழுந்துவிட்டது. இப்பொழுதாவது இதெல்லாம்

வெளிப்பட்டதே! வாசு இந்தக் கடிதத்தை எழுதி வைத்து விட்டு போஸ்ட் பண்ணாமல் இருந்திருக்கிறான். அதற்குள் இந்த ரகளை ஏற்பட்டுவிட்டது. அவன் ஓடிப்போனதால் இந்தக் கடிதம் மூலமாய் அர்ஜுனனின் உண்மை சொரூபம் வெளிப்பட்டுவிட்டது. இந்த மாதிரி விஷமதங்களையெல்லாம் பார்ப்பது எங்களுக்குப் பழக்கப்பட்டதுதான். தப்புப் பண்ணினங்கவதான் போலீஸ் கையில் சிக்கிப்பாங்க. பண்ண வைத்தவங்க சிக்கமாட்டாங்க. அது எங்க டிபார்ட்மெண்ட்டின் பெரியட்ராஜடி. வரேன். அன்றைக்கு நீங்கள் மிக நம்பிக்கையோடு ராஜேஷைப் பற்றிச் சொன்னீங்க. அதுதான் எனக்கு அடிக்கடி ஞாபகம் வந்துட்டேயிருந்தது. அதனால்தான் நானே வந்து சொல்லணும்னு தோணிற்று'' என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

மிதிலா அப்படியே உட்கார்ந்திருந்தாள். அர்ஜுனன் என்ன காரியம் பண்ணிவிட்டான்! அவன்மீது பழி வாங்கிக் கொண்டிருக்கிறான் என்று நினைத்துக் கொண்டாள்.

மிதிலா அவ்வாறு எவ்வளவு நேரந்தான் உட்கார்ந் திருந்தாளோ அவளுக்கே தெரியாது.

அதற்குள் காலிங்பெல் ஒலித்தது!

மிதிலா போய் கதவைத் திறந்தாள்.

வாசலில் நின்று கொண்டிருந்த ராஜேஷைப் பார்த்து விட்டு, ''நீயா?'' என்றாள்.

''மேடம்! நான்... நான் ஒரு நிமிஷம் உள்ளே வரலாமா?''

''வா'' என்றாள் உள்ளே நடந்தபடி.

ராஜேஷ் உள்ளே வந்தான்.

''உட்கார்'' என்றாள்.

ராஜேஷ் உட்காரவில்லை.

''மேடம்!'' ஏதோ சொல்ல வந்து, உதட்டைக் கடித்துக்கொண்டே நிறுத்திக்கொண்டான்.

மிதிலா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தக் குறுகிய காலத்தில் அவனிடந்தான் எவ்வளவு மாறுதல்கள்! ஆள் இளைத்துப் போயிருந்தான். கண்களில் ஏதோ வேதனை! அமைதியின்மை! கொஞ்ச நாட்களுக்கு முன்னால்வரை நீட்டாய் வெள்ளைவெளேரென்ற இஸ்திரி போட்ட துணியுடன், சிரித்துக்கொண்டும், பணக்காரர் வீட்டுச் செல்லப்பிள்ளை என்பது போல தோற்றமளித்துக் கொண்டிருந்தவன் இவன்தான் என்று சொன்னால் யாராலும் நம்பமுடியாது.

''மேடம்! உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் வந்தேன்'' என்றான்.

''எனக்கா? எதுக்கு? உட்காரு, மொதல்ல'' என்றாள் மிதிலா.

இன்னும் ஒரு நிமிஷம் இருந்திருந்தால் அவன் உட்கார்ந்திருப்பானோ என்னவோ?

ஆனால் அதற்குள் கதவிற்கருகில் சத்தடி கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். சூர்யகிரண் வெளியே யிருந்து உள்ளே வந்து கொண்டிருந்தான். அவன் முதலில் மிதிலாவோடு பேசிக் கொண்டிருந்த ராஜேஷை கவனிக்க வில்லை. தலைகுனிந்தபடி உள்ளே போக முயன்றவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். ராஜேஷை அவன் கண்கள் பார்த்துவிட்டன!

அவன் ஒரே பாய்ச்சலாய் திரும்பி வந்தான். அவனிடம் ''நீயா?'' என்றான். அவன் உறுமலுக்கு வாயடைத்துப் போய்விட்டான் ராஜேஷ். ''நீ, நீ இங்கே எதுக்காக வந்தாய்? யார் உன்னை உள்ளே விட்டது?'' என்றான்.

மிதிலா இடைமறித்து— ''நான்தான் இவனை உள்ளே வரச் சொன்னேன்'' என்றாள்.

''நீயா? நீ இந்த மிருகத்தோடு பேசுகிறாயா? நீயா னை உள்ளே வரலிட்டாய்? உனக்கு ஏன் புத்தி ாமல் போய்விட்டது?'' அவன் சரேலென்று ராஜேஷ் மாய் திரும்பி அவன் கழுத்தில் கையை வைத்து. ஸ்கல்! கெட்அவுட்'' என்று கத்தினான். மிதிலா ஓடி ு சூர்யகிரணின் கையைப் பிடித்து அப்பால் இழுத்து டான்.

''நீங்கள் அவசரப்பட்டு ராஜேஷை ஒன்றும் சொல்ல ிடாம். என் மேல் ஆணை,'' என்று ராஜேஷ் மாய் திரும்பி, ''ராஜேஷ், நாமப அப்புறமாய் பேசிக் ம். தயவுசெய்து இப்பொழுது போய்விடு'' என்றாள்.

ராஜேஷ் ஒரு நிமிஷம் கோபமாய் பார்த்துக் கொண் ந்த சூர்யகிரணையும், செய்வதறியாது மன்றாடிக் ண்டிருந்த மிதிலாவையும் மாறி மாறிப் பார்த்தான். கே மேடம்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி வெளியே ய்விட்டான்.

சூர்யகிரணின் உள்ளங்கைகள் முறுக்கேறிக் ண்டன. மிதிலாவைப் பார்த்து பற்களை நறநறத்துக் ண்டே— ''நீ... நீ... சாந்தியைக் கெடுத்த அந்த நீச்ச டு பேசுகிறாயா? நீயும் அவங்களோடு ஒருத்திதான் லிருக்கிறது! இவ்வளவு நாளாய் என்னிடம் இப்படி ந்து வந்தாயா? இப்ப நிஜ சொரூபம் வெளிப்பட்டு ்து. போ! இந்த நிமிஷமே இங்கிருந்து போய்விடு! ... இவ்வளவு மோசம் பண்ணுகிறாய் என்று கனவிலும் வில்லை. ஆமாமாம்! அவன் உன் செல்ல மாணவன் லையா? நான்தான் மறந்து போய்விட்டேன். அதனால் போலீஸ் ஆபீஸரிடம் கூட அவனுக்கு சார்பாய் ் நல்லவன் என்றே சொன்னாய்.''— அவன் டென்று கைகளைக் கூப்பினான். ''போதும் தாயே! த நாடகம் போதும்! என் வாழ்க்கையை விட்டுப் ப்விடு'' என்றான்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு மிதிலாவின் கண் வேதனையைத் தாங்கமாட்டாமல் படபடத்தன.

''நான் போய் விடுகிறேன். இனி ஒரு நிமிஷம் இங்கே இருக்கமாட்டேன். ஆனால் இந்தக் கடிதத்தை தடவை படியுங்கள்.''— மிதிலா வாக எழுதிய கடிதத் அவளிடம் தந்துவிட்டு அங்கிருந்து விருட்டென்று பே விட்டாள்.

மிதிலா உள்ளே வந்து விட்டாள். சூர்யகிர வார்த்தைகள் மிதிலாவின் மனதை என்றுமில்லாத புண்படுத்தி விட்டன. இதுதானா அவள் நண்ப புரிந்து கொண்டது என்று தோன்றிற்று. இந்த அவமான அவள் மனதைப் பிளந்து கொண்டிருந்தது. சூ கிரணுக்காக அவள் தாயையும் அண்ணனையு உலகத்தையும் எதிர்த்து நின்றாள். ஆனால் அவளே அவள் மீது அபவாதத்தைச் சுமத்தி விட்டாள். இ இவனோடு எப்படி இருக்க முடியும் அவளால்?

மிதிலா பெட்டியில் தன் உடைமைகளையெல்லா அடுக்கிக் கொண்டிருக்கையில் அவள் கண்களிலிருந் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. கடைசியில் அவ இவ்வாறு இந்த வீட்டை விட்டுப் போய் விடவேண்டு என்றுதான் எழுதி வைத்திருக்கிறதா? சாந்தியிடம் கூ சொல்லிக் கொள்ளாமலேயே போய் விடவேண்டுமே ஜெயந்தியின் பிறந்தநாள் என்று காலையிலேயே வந் சாந்தியை அலன் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டா ஜெயந்தி. மாலையில்தான் வருவாள்.

பெட்டியை மூடிக் கொண்டிருந்த மிதிலா கண்களை துடைத்துக் கொண்டாள். அதற்குள் அவள் தோளி மீது கை படிந்தது. அலை வேகமாய், பலமா மிதிலாவைத் தன் பக்கமாய் திருப்பிக் கொண்டன. எதி சூர்யகிரண் நின்று கொண்டிருந்தான்.

அவன் கண்களில் பச்சாதாபம் தென்பட்டது. வெட்கப்பட்டாற் போல இருந்தன அலை.

''மிதிலா! என்னை மன்னித்துவிடு''— என்று சொல்லிக் கொண்டே சட்டென்று மிதிலாவின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டன் அவன்.

''நான் அவசரப்பட்டுப் பேசி விட்டேன். மிதிலா, நான் உன்னை அவமானப்படுத்தி விட்டேன். வருத்தப் படுத்தி விட்டேன். என் நிலைமையைப் புரிந்து கொண்டு என்னை மன்னிப்பாயோ அல்லது என் மேல் கோபித்துக் கொண்டு போய் விடுவாயோ, அது உன் இஷ்டம். உன்னைக் கேட்கும் அதிகாரமோ, தடுக்கும் உரிமையோ எனக்கில்லை. அவற்றை நான் இழந்து விட்டேன்னு தோணுது.''— அவன் இதயம் அக்குரலில் நன்றாய் எதிரொலித்தது.

மிதிலா ஒரு நிமிஷம் அப்படியே நின்று கொண் டிருந்தாள். மெல்ல மெல்ல அவள் உறுதி தளர்ந்தது. முகம் பழையபடி ஆயிற்று. அவன் தோள்களைச் சுற்றிக் கைகளைப் போட்டாள். அவன் தலையை மார்போடு அழுத்திக் கொண்டாள்.

''ஒரு நிபந்தனையின் மேல் இருக்கேன்.''

''சொல்லு! அதென்ன?''

''நீங்கள் நான் சொன்னதைக் கேட்கணும்.''

''வாழ்நாளெல்லாம் கேட்கத் தயாராயிருக்கேன்.''

''நாம் இந்த ஊரைவிட்டு கொஞ்ச நாள் எங்கே யாவது போகலாம்.''

''எங்கே போகலாம்?''

''ஐதராபாத்திலிருந்து உங்க ஃப்ரெண்ட் தன் வியாபாரத்தை பார்க்க வரச் சொல்லி எழுதிட்டிருக்காரே?

அவரிடம் போய் கொஞ்ச நாள் இருந்து விட்டு வருவோம். அந்த ஊருக்குப் போனால் நீங்கள் மன ஆறுதல் அடைய லாம் என்று நம்புகிறேன். சாந்திக்கும் புதிய உற்சாகமும் பழைய தென்பும் வரும். என்ன சொல்றீங்க?''— அவன் தலையை வருடிக் கொண்டே கேட்டாள்.

அவன் மிதிலாவின் கழுத்தைச் சுற்றிக் கைகளைப் பின்னிக் கொண்டான். ''மிதிலா! நீ எனக்காக உங்கம்மா வையும் அண்ணனையும், உலகத்தையும் கூட எதிர்த்து நின்றாய். உனக்காக என்னால் எதைத் தரமுடியும்?''

''உங்களால் தர முடிந்ததை நீங்கள் எனக்கு முன்பே தந்து விட்டீங்க. ஒரு காலத்தில் நான் இந்த மனுக்கு தனிமையோடும், அமைதியின்மையோடும் மனம் தளர்ந்து போய் வந்தேன். நீங்கள் அவற்றை விரட்டியடித்து விட்டுப் புதிய வாழ்க்கையை ஏற்படுத்தித் தந்திங்க. உங்களுக்கு நான்தான் கடமைப்பட்டிருக்கேன்'' என்றாள்.

மிதிலா அன்றைக்கே அம்மூவர் பிரயாணத்திற்கும் ஏற்பாடுகளைப் பண்ணத் தொடங்கி விட்டாள்.

அவர்கள் ஐதராபாத்திற்குப் புறப்படவிருந்தது அன்றுதான்! பிரயாணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் பண்ணியாகி விட்டது. சூர்யகிரண் சிநேகிதர்களிடம் சொல்லிவிட்டு வருவதற்காகப் போயிருந்தான். மிதிலா அவனுக்காகக் காத்திருந்தாள்.

அதற்குள் கணபதி வீட்டு வேலைக்காரன் வந்தான். ''சின்னய்யா உங்களிடம் இந்தக் கடிதத்தைத் தரச் சொன்னார்'' என்று ஒரு கடிதத்தைத் தந்தான். மிதிலா அக்கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அதில் இவ்வாறு இருந்தது—

"மேடம்!

உங்களுக்கு என் வணக்கங்கள். நீங்கள் ஊருக்குப் போகப் போவதாய் தெரிந்தது! அன்றைக்கு உங்களைச் சந்திக்க வந்தேன். ஆனால் சூர்யகிரண் கோபித்துக் கொண்டதால் என் மனதிலிருந்ததைச் சொல்ல முடியவில்லை. நீங்கள் ஊருக்குப் போகப் போகிறீர்களா? திரும்பவும் இந்த ஜென்மத்தில் உங்களைப் பார்க்க முடியுமோ முடியாதோ? என் மனதிலிருப்பதையெல்லாம் உங்களிடம் தெரிவிக்காமல் போனால் என்னால் உயிரோடிருக்க முடியாது என்று தோன்றிற்று. அதனால்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

மேடம்! உங்களை நான் முதல் முதலாய் பார்த்த போது ஒரு தெய்வமாய் தென்பட்டீர்கள். என் மனம் ஏனோ மிகப் பரவசமடைந்தது. அந்த நிமிஷத்திலிருந்தே நீங்கள் என் யோசனைகளில் ஒரு பாகமாகி விட்டீர்கள். என் வாழ்க்கையில் யாருமே ஊகித்தும் பார்த்திராத மாறுதல்களை உங்களையே அறியாமல் வரவழைத்து விட்டீர்கள்— நான் உங்களைப் பற்றியே எப்பொழுதும் யோசித்துக் கொண்டிருப்பேன். உங்களுக்காகவே காலேஜுக்கு வருவேன். என் மனதில் உங்கள்பால் பக்தி இருந்தது. நீங்கள் சாதாரணமானவர் இல்லை, ஒரு தெய்வம் என்ற உணர்ச்சி என்னுள் பலமாய் ஏற்பட்டு விட்டது.

உங்கள் வரவு என் வாழ்க்கைப் போக்கையே முற்றிலுமாய் மாற்றியமைத்து விட்டது. உங்கள் மேலிருந்த பரவசமும், உங்கள் நல்ல குணமும், மென்மையான உள்ளமும் என்னைக் கவர்ந்து விட்டன. உங்களைக் கண்டால் பிடிக்காதவர்கள் இந்த உலகத்தில் யார்தான் இருப்பார்கள் என்றும் தோன்றும் எனக்கு.

என் யோசனைகள் எல்லாம் உங்களைச் சுற்றியே இருந்ததால் நீங்கள் எனக்கே சொந்தம் என்றெண்ணிக்

கொள்வேன். அதனால்தான் அன்றைக்கு உங்கள் பிறந்த நாளுக்காக பூங்கொத்தைத் தருவதற்காக வந்த பொழுது நீங்கள் சூர்யகிரணோடு நெருக்கமாய் இருந்த காட்சி என் கண்களில் பட்டு விடவே அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமல் போய் விட்டது. என்னுள் பொறாமைத் தீ கொழுந்து விட்டது. அது என் தலையில் ஏறி உட்கார்ந்து சவாரி செய்யத் தொடங்கியதால் என்னை நான் மறந்து விட்டேன்.

பிறகு மெல்ல மெல்ல எனக்கு புத்தி வரத் தொடங்கிற்று. எனக்கு உங்களை மிகவும் பிடிக்கும். அது போலவே உங்களுக்கு சூர்யகிரணைப் பிடித்திருக்கலாம். அதைத் தடுக்க நான் யார்? எனக்கென்ன அதிகாரம் இருந்தது? நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போற ஆளா என்ன? இல்லையே? நீங்கள் எனக்கு குரு. உங்கள் மீது எனக்கு அன்பும் மதிப்பும் உண்டு. அவ்வளவு தானே! இவ்வாறு யோசிக்கத் தொடங்கியதும் என் மனம் சாந்தமடையத் தொடங்கி விட்டது. நான் செய்த தப்பு என்னவென்று தெரியத் தொடங்கிற்று. உங்கள் மீது எனக்கு அன்பு இருந்தது என்றால் நீங்கள் விரும்பும் சூர்யகிரண் மீது கூட எனக்கு அன்பு இருந்து தீரவேண்டும். அதுதான் உண்மையான அன்பு என்று எண்ணினேன்

சாந்தியை நான் ரேப் பண்ணவில்லை. இதைச் சொன்னபோது என்னை யாரும் நம்பவில்லை. கடைசியில் தந்தையே கூட என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார். ஆனால் நீங்கள் மட்டும் என்னைப் புரிந்து கொண்டிருந்தீர்கள். என்னைப் பற்றி போலீஸ் அதிகாரியிடம் உயர்வாய் சொன்னதாய் போலீஸ் அதிகாரி தெரிவித்தபோது நான் எவ்வளவு சந்தோஷமடைந்தேன் தெரியுமா? இந்த உலகத்தில் என்னைப் புரிந்து கொண்டது நீங்கள் ஒருவர்தான் என்று தோன்றிற்று. அப்பொழுதே ஓடி வந்தேன் உங்களுக்கு நன்றியைச் சொல்வதற்காக. ஆனால் சூர்யகிரண் கோபித்துக்

கொண்டதால் எனக்கு அந்த அவகாசம் கிடைக்கவில்லை. பிறகு உங்களை என்னால் பார்க்க முடியவில்லை. வீட்டிற்கு வந்தால் சூர்யகிரணுக்குக் கோபத்தை வரவழைத்து விடுவேனோ என்ற பயம்! அவரையும் நான் மதிக்கிறேன். என் என்கிறீர்களா? அவர் உங்களுக்கு வரப் போகும் கணவராதலால்! அவர்பால் எனக்கு என்றுமே அன்பு உண்டு!

மேடம்! நீங்கள் என் வாழ்க்கையில் வராமலிருந்திருந்தால் நான் எப்படி இருந்திருப்பேனோ? வாசு முதலியவர்களுடன் சுற்றிக் கொண்டு இந்த ஜென்மத்தையே வீணாக்கிக் கொண்டிருந்திருப்பேன்! வாழ்க்கை என்றால் குறும்பும் சேஷ்டைகளும் பண்ணிக் கொண்டு சுற்றிக் கொண்டிருப்பதல்ல! ஒரு மனிதனாய் நல்ல பண்போடு இருப்பது! இது உங்களைப் பார்த்த பிறகு தான் எனக்குப் புரிந்தது.

மேடம்! என்னைப் பற்றி ஊரில் இன்னும் சாந்தியை ரேப் பண்ணிவிட்டதாய் பிரசாரங்கள் இருந்து கொண்டேயிருக்கின்றன. நான் வெளியே வந்தால் வினோதமான ஒரு ஜந்துவைப் பார்ப்பது போல பார்க்கிறார்கள். என்னையே இப்படிச் செய்கிறார்கள் என்றால் பெண்ணான சாந்தியின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை என்னால் ஊகித்துக் கொள்ள முடிகிறது. என்னால் வந்த வினைதான் இது என்று என் மனம் இடித்துரைக்கிறது. ஆம், வாசு முதலியவர்களோடு நான் சிநேகமாய் இருந்ததால் தானே அவர்களுக்கு அத்தனை பணபலமும், தர்பாரான வாழ்க்கையும், துணிச்சலும் ஏற்பட்டு விட்டிருந்தன! நான் அவர்களோடு சேராமலிருந்திருந்தால் அவர்கள் பிசுபிசுத்துப் போயிருப்பார்கள். ஒருத்தரோடு ஒருத்தர் சண்டைப் போட்டுக் கொண்டு என்றோ பிரிந்து போயிருப்பார்கள். அவ்வாறு இருந்திருந்தால் இது போல துணிச்சலோடு ரேப் பண்ணியிருக்க

மாட்டார்கள். என்னுடைய பக்க பலத்தால்தான் அவர்கள் திமிராய், நட்டிக் கேட்க ஆள் இல்லாதவர்களாய் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் நூறுமுகமாய் இந்த தப்பு என்னால் ஏற்பட்டு விட்டதாகவே என் மனம் இடித்துரைக்கிறது. அதனால் சாந்திக்கு என்னால் வாழ்வு கொடுக்க முடிந்தால்தான் என் மனம் நிம்மதியடையும் போலிருக்கிறது மேடம்! சாந்தியை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். அதனால் எனக்கும் சாந்திக்கும் ஏற்பட்டிருக்கும் இந்த அபவாதம் நீங்கவும் வழியுண்டு. சூர்யகிரணின் சம்மதத்தையும் பெற்று சாந்தி என் மனைவியானால் என் வாழ்க்கையும் சாந்தியின் வாழ்க்கையும் சீராகி நாங்கள் மனநிம்மதியடைய முடியும் என்று தோன்றுகிறது.

மேடம்! உங்கள் ஒத்துழைப்பு எனக்குக் கிடைத்தால் என்னைக் காட்டிலும் அதிர்ஷ்டக்காரன் இருக்க முடியாது என்று நினைத்துக் கொள்வேன். உங்கள் பதிலை எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு
ராஜேஷ்—"

கடிதத்தைப் படித்து முடித்ததும் மிதிலாவின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தது.

ராஜேஷ்தான் எவ்வளவு உயர்ந்து விட்டான்! எவ்வளவு பெருந்தன்மையோடு இக்கடிதத்தை எழுதியிருக்கிறான். சாந்திக்குத் தன்னால்தான் இவ்வாறு ஏற்பட்டு விட்டதாய் மனம் நொந்து, அவளுக்கு வாழ்வு கொடுக்கவும் முன் வந்திருக்கிறான் என்றால் அவன் எவ்வளவு தூரம் உயர்ந்து விட்டான் என்பது புரிந்தது. உடனே உட்கார்ந்து பதில் எழுதினாள்—

"ராஜேஷ்!

உன் கடிதம் கிடைத்தது. மிக சந்தோஷப்பட்டது. உன் கடிதத்தைப் படிக்காமல் போயிருந்தால் என் வாழ்க்கையிலும், சூர்யகிரணின் வாழ்க்கையிலும் சாந்தியின் வாழ்க்கையிலும் ஒரு மிக முக்கியமான சம்பவம் நழுவிப் போயிருக்கும்!

ராஜேஷ்! நீ மனத்தளவில் மிகவும் உயர்ந்துவிட்டாய். பண்பான மனிதனாய் பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறாய். சூர்யகிரணின் சம்மதத்தையும் பெற்று சாந்திக்கும் உனக்கும் திருமணத்தை நடத்தி வைக்கும் பொறுப்பு இனி என்னைச் சேர்ந்தது. அந்தக் கவலையை விடு. சாந்தியை மனைவியாய் அடைந்தால் உன் வாழ்க்கை மேலும் சிறப்படையும்.

ராஜேஷ்! உன் கடிதத்தைக் கொண்டு எனக்கு புரிந்த இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் உன்னை நீ புரிந்து கொண்டதுதான். அது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது.

இந்த உலகத்தில் காதல் வேறு, பக்தி வேறு, கல்யாணம் வேறு, சிநேகம் வேறு. அன்பு வேறு, பாசம் வேறு. இவற்றின் தன்மைகளோ, எல்லைகளோ நீறைப் பேருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஒன்றை இன்னொன்றாய் எண்ணிக் கொண்டு அதில் அமிழ்ந்து போய் வாழ்க்கையைக் குழப்பமாக்கிக் கொள்கிறார்கள். ராஜேஷ்! கல்யாணத்திற்குக் காதல் தேவை! சிநேகத்திற்கு அன்பு! புரிந்து கொள்ளும் தன்மையும் மிக அவசியம்.

காதல் எதிராளியிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறது. சிநேகம் எதிராளிக்குப் பகிர்ந்தளிக்கிறது. நம்முடையது சிநேகம்! அதனால்தான் ஒருத்தர்பால் இன்னொருத்தருக்கு அன்பு! முதலில் நீ அதை சரியாய்

கொள்ளாமல் ஆவேசப்பட்டாய். அது உனக்குப் விட்டதும் உன் மனம் உறுதியாகி விட்டது ற்றம் நீங்கி விட்டது. உனக்குப் புரிந்தது என் டமாய் பாவிக்கிறேன்.

ராஜேஷ்! நான் உன்னை முதல் முதலாய் பார்த்த போட்ட எடைதான் சரியாயிருக்கிறது. நீ ன். ஆனால் உன் நல்ல குணத்தை உன்னைச் சுற்றி தும் சிநேகிதர்கள் சாமர்த்தியமாய் பயன்படுத்திக் கிறார்கள் என்பதை உணராத அப்பாவி நீ! யிருந்தாலும் காக்கைகளோடு சேர்ந்து சுற்றினால் க' என்றுதான் சொல்லுவார்கள். நாம் யாரோடு மாய் இருக்கிறோமோ அவர்கள் சுபாவந்தான் நம் இருக்கும். அதனால்தான் நல்ல சகவாசம் வேண்டும்; விட்டால் தனியாய் இருப்பதே மேல் என்பார்கள் வர்கள்.

ன்று மாலை நான்கு மணி ரயிலுக்கு நாங்கள் டுகிறோம். நீயும் எங்களோடு வந்து கொஞ்ச ஐதராபாத்தில் இருந்து விட்டுப் போனால் உன் ம் சாந்தியின் மனமும் கூட கொஞ்சம் புதிய சுகத்தை அடைய முடியும். வருவதாயிருந்தால் மணிக்குள் எங்களோடு வந்து சேர்ந்து கொள். எல் ஆசிகள்.

இப்படிக்கு,
மிதிலா மேடம்"—

திலா கடிதத்தைப் பையனிடம் கொடுத்து பினாள்.

47

ஸ்டேஷனில் ரயில் புகையைக் கக்கிக் கொண்டு புறப்படுவதற்குத் தயாராய் நின்று கொண்டிருந்தது.

மிதிலாவும் சூர்யகிரணும் ரயிலுக்குள் உட்கார்ந்திருந்தார்கள். ராஜேஷும் சாந்தியும் அவர்களுக்கெதிரேயிருந்த பெர்த்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

ராஜேஷ் நீட்டாய் ஷேவ் பண்ணிக் கொண்டிருந்தான். அவன் முகம் முன் போலவே கலகலப்பாய் இருந்தது. ஆனால் அதில் கம்பீரமும் தென்பட்டது. சாந்தியின் முகத்திலும் பழைய களை வந்து சேர்ந்து கொண்டது.

கணபதி பிளாட்பாரத்தில் நின்று கொண்டு ஜன்னல் வழியாய் பேசிக் கொண்டிருந்தார்.

"அம்மா மிதிலா! என் மகனை நல்வழியில் திருத்திக் கொண்டு வந்தாய். இப்பொழுது அவன் வாழ்க்கையையே நல்லபடியாய் மாற்றி விட்டாய். நீ தெய்வந்தானம்மா! உனக்கு எப்படி நன்றி சொல்லுவதென்றே தெரியலை"— என்றார் கண்கலங்கியபடி விடை கொடுத்துக் கொண்டே.

மிதிலா முறுவலுடன் சூர்யகிரணைப் பார்த்தாள்.

அவள் கை சூர்யகிரணின் கையில் சிறைப்பட்டிருந்தது. அவளுக்கு மிக நிம்மதியாய் இருந்தது. சூர்யகிரண் கோழிப் பண்ணையை இன்ஷ்யூரென்ஸ் பண்ணிக் கொண்டிருந்ததால் அந்த நஷ்ட ஈட்டுத் தொகை

அவனுக்குத் திரும்பிக் கிடைத்து விட்டது. திரும்பி வந்ததும் தங்கையின் திருமணத்தை ராஜேஷோடு பண்ணி முடித்து விட்டு, ராஜேஷும் அவனுமாய் சேர்ந்து வேறு ஒரு வியாபாரம் தொடங்க உத்தேசித்திருந்தார்கள். கணபதி அவர்களுக்குப் பக்கபலமாய் இருக்கிறார். சாந்தியின் வாழ்க்கையும் நல்லபடியாய் அமைந்து விட்டது. மிதிலாவின் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அவள் சூர்யகிரணை ஓர்வம் தும்பப் பார்த்தாள். சூர்யகிரண் அவள் தலையைத் தன் மார்போடு அழுத்திக் கொண்டான். பதிலுக்கு மிதிலா நிதரே சீட்டில் ராஜேஷ் ஏதோ மெல்லிய குரலில் கேட்க, வெட்கத்தோடு தலையை ஆட்டிக் கொண்டே முறுவலித்துக் கொண்டிருந்த சாந்தியைச் சுட்டிக் காட்டினாள் அவனுக்கு. தங்கையை அப்படி பார்த்த பொழுது சூர்யகிரணுக்குக் கூட சந்தோஷமும் நிம்மதியும் ஏற்பட்டது.

ரயில் அந்நால்வரையும் சுமந்து கொண்டு வேகமாய் போய்க் கொண்டேயிருந்தது.

முற்றிற்று

18589
3513168